மகிழ்ச்சிக்கான பாதை

The Path to Happiness

Dr. A. S. Bahammam

First Edition 1436 - 2015

மகிழ்ச்சிக்கான பாதை

Dr. A.S. Bahammam

الطريق إلى السعادة
The Path to Happiness
www.path-2-happiness.com

Dr. Abdullah bin
Salim Bahammam

*First Edition 1435
-2014*

بسم الله الرحمن الرحيم

الطريق إلى السعادة

The Path to Happiness

www.path-2-happiness.com

الطريق إلى السعادة
The Path to Happiness

பாதை எங்கே இருக்கின்றது ?!

பாதை எங்கே இருக்கின்றது ?!

ஒவ்வொரு மனிதனும் மகிழ்வைத் தான் தேடுகிறான். அப்படியானால் அதற்கான பாதை எங்கே இருக்கின்றது ?!

நாத்திகப் பாதையா அல்லது மார்க்கப் பாதையா?!

கேள்விகளுக்கான விடைகள்

அப்படியானால் விடைகள் எவ்வாறு இருக்குப் போகின்றன?!

அதற்கான ஆதாரம் என்ன?

அல்லாஹ்வின் இறைக்கோட்பாட்டிற்கான ஆதாரங்கள்

பாதை எங்கே இருக்கின்றது ?!

ஒவ்வொரு மனிதனும் மகிழ்வைத் தான் தேடுகிறான். அப்படியானால் அதற்கான பாதை எங்கே இருக்கின்றது ?!

ஒவ்வொரு மனிதனும் மிக இலகுவான முறையில் மகிழ்வைத் தேடி அலைகிறான். இன, மத, மொழி, கலாச்சார, அடிப்படையிலான வேற்றுமைகளைக் கடந்து ஒரு விடயத்தில் அவர்கள் ஒற்றுமையுடன் செயற்படுகின்றனர். அது தான் மகிழ்வும், அமைதியும்.

நீங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? எதற்காக செய்கிறீர்கள்? என எந்த மனிதரைக் கேட்டாலும் அவருடைய பதில் மகிழ்வை விரும்புவதாகத் தான் இருக்கின்றது. அவர் அதை வார்த்தைகளாலோ, செய்கையாலோ, அல்லது அதன் அர்த்தத்தினாலோ வெளிப்படுத்துகிறார்.

மகிழ்வு என்றால் என்ன, அதை நாம் எவ்வாறு அடைய முடியும்?!

மகிழ்வென்பது, களிப்பு, அமைதி, பெருந்தன்மை, அகப்பொழிவு போன்றவற்றாலான நிரந்தர உணர்வுகள். இவ் இனிய உணர்வுகள் மூன்று விடயங்கள் மூலம் நிறைவேறுகின்றது. 1. சுய நல்லரங்கள், 2. வாழ்வின் நல்லரங்கள், 3. மறுமைக்கான நல்லரங்கள்.

இம்மூன்று விடயங்களைச் சூழத் தான் ஒரு மனிதன் தன்னைத் தானே கேள்வி கேட்க ஆரம்பிக்கிறான். வயது ஆக ஆக கேள்வியின் தரமும் விரிவடைய ஆரம்பிக்கிறது. தன் உள்ளத்தில் உதிக்கும் கேள்விகளுக்கு விடை காணாத வரை அவனுக்கு சந்தோசமே ஏற்படாது. அக்கேள்விகள்:



சந்தோசம் உன் முன்னே

சில வேளை நீ மேற்கொள்ளும் விடயங்கள் உனக்கு மகிழ்வை ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் ஒரு விடயத்தை மேற்கொள்ளாமல் உனக்கு மகிழ்வு ஏற்படப்போவதில்லை.

பெஞ்சமின் டிஸ்ரேலி

முன்னால் பிரித்தானிய பிரதமர்

மகிழ்வு எமக்கு மிகவும் அருகாமையில் இருக்கின்றது

எமது கண்ணில் மாட்டியிருக்கம் மூக்குக் கண்ணாடியை, அது மூக்கின் மீது இருக்கிறத என்பதை அறியாமலே அதைத் தேடுவது போல் மகிழ்வை எமக்கு மிகவும் அருகாமையில் வைத்துக்கொண்டு அதைத் தேடியலைகிறோம்.

டால்ஸ்டாய்

ரஷ்ய இலக்கியவாதி

- இப்பிரபஞ்சத்தை இயக்குவது யார்?
- என்னையும், என்னைச் சூழ உள்ள அனைத்தையும் படைத்தது யார்?
- நான் யார்? எங்கிருந்து வந்தேன்? ஏன் படைக்கப்பட்டேன்? திரும்ப எங்கே செல்ல இருக்கின்றேன்?

தன்னைப் பற்றிய, தன் வாழ்வு பற்றிய உணர்வுகள் அவனிடம் அதிகரிக்கும் போது இக்கேள்விக் கனைகளும் அதிகரித்து, அவை தன் புத்தி, சிந்தனை, ஆத்மா முதலியவற்றை அழுத்துகின்றன. இவைகளுக்கு சரியான பதில் கிடைக்கும் வரை அமைதியை அவன் உணரவேமாட்டான்.

பாதைகள் அதிகரித்துக் காணப்பட்டாலும் அல்லாஹ் ஒருவன் தான்

நீ எங்கு செல்கிறாய் என்பதை உன்னால் அறியமுடியவில்லை என்றால், நீ செல்லும் அனைத்து வழிகளும் உன்னை அங்கு கொண்டு போய் சேர்த்து விடும்.



லூயிஸ் கரோல்

கணித மேதை

நாத்திகப் பாதையா அல்லது மார்க்கப் பாதையா?!

பொதுவாக மேலுள்ள வினாக்களுக்கு இரண்டு விதமாக பதிலைப் பெற்றுக்கொள்கிறான். ஒன்று இறைவன் என்று எவரும் கிடையாது. பிரபஞ்சம் என்பது விதியின் அடிப்படையில் அமைந்தது என்ற நாத்திகக் கொள்கையின் அடிப்படை. மற்றொன்று அல்லாஹ்வே அனைத்தையும் படைத்தான் என்ற மார்க்க அடிப்படை. இவ் அடிப்படையில் பல கேள்விகள் அவனுள் எழுகின்றன.

- பிரமாண்ட பெருவெடிப்பின் மூலம் உருவான இப்பிரபஞ்சம் நேரம் குறிக்கப்படாமல் நிரந்தரமாக இருக்க முடியுமா?

- தொடர்பற்ற முறையில் ஏற்பட்ட இப்பெருவெடிப்பு சீரான இவ்வுலகை உருவாக்கியுள்ளது என்பது கற்பனைக்கு எட்டுகின்றதா?

- படிப்படியான வளர்ச்சியின் அடிப்படையில் கண்டறியப்பட்ட, வரலாறு நெடுகிலும் காணக்கிடைக்கின்ற இவ்வுண்மையை மனிதன் இன்னும் தெரிந்துகொள்ளவில்லையே?!! நாம் இன்னும் குழப்பத்தாலும், தற்செயலாலும் உருவாகின்ற காற்றில் அகப்பட்ட இறகாகத் தானே இருக்கின்றோம்?!!





உன் இலக்கை வரையறை செய்துகொள்

தான் செல்லும் பாதையை அறிந்த ஒருவனுக்கு உலகம் இலகுவாக வழிகாட்டி விடுகின்றது.

ரால்ப் எமர்சன்

அமெரிக்க தத்துவமேதை



– ஆக்கத்திறனோடு அனைத்தையும் படைக்கின்றவன் மனிதனாக இருக்க முடியுமா? அவன் தான் அனைத்துமாக இருக்கின்றானா, அவனுக்குப் பின்னால் எதுவும் கிடையாதா?

– நாத்திகவாதிகளுக்கும், நடைமுறை உலகுக்கும் காணல் நீராய்த் தெரிகின்ற இவ் இயற்கைக்குப் பின்னால் மறைமுகமான ஏதாவது ஒன்று இருக்கின்றதா?

– மனிதன் எவ்விதக் கருதுகோலுமின்றி ஜடமாக இருப்பவனா அல்லது அவன் குரங்கிலிருந்து தோன்றியவனா? உயரிய குணங்களையும், சிறந்த பண்புகளையும், நுண்ணிய கட்டுக்கோப்பையும் கொண்ட இம்மனிதனை எவ்வாறு ஓர் ஹோர்மோன் படைத்திருக்க முடியும்? இழந்த ஒன்றை எவ்வாறு அதற்கு பெற்றுத் தர முடியும்?

– இவ்வுலகம் தான் மனிதனின் இறுதி இடமா, மறு வாழ்வு என்று ஒன்று அவனுக்குக் கிடையாதா?

இவ்வாறான சிந்தனைகளைப் பற்றி அல்லாஹ் கூறும் போது, *மேலும் (மறுமையை நம்பாத) அவர்கள்: "நமது இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு (வாழ்க்கை) கிடையாது; நாம் இறக்கிறோம்; ஜீவிக்கிறோம்; "காலம்" தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை" என்று கூறுகிறார்கள்; அவர்களுக்கு அது பற்றிய அறிவு கிடையாது – அவர்கள் (இது பற்றிக் கற்பனையாக) எண்ணுவதைத் தவிர வேறில்லை.* (அல்குர்ஆன் 45:24)

இவற்றை மறுக்கின்றவர்களைப் பற்றி அல்லாஹ் கூறும் போது, *அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மையென) உறுதி கொண்ட போதிலும், அநியாயமாகவும், பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள். ஆனால், இந்த விஷமிகளின் முடிவு என்ன வாயிற்று என்பதை நீர் கவனிப்பீராக.* (அல்குர்ஆன் 27:14)

இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு உயிரனத்தினதும், பொருளினதும் வாழ்வின் இரகசியத்தை அறிந்து கொள்வதில் நாத்திகர்கள் தோல்வி கண்டு கொண்டே செல்கிறார்கள். அவ்வாறே ஒருவரின்



ஐன்ஸ்டீன்

இயற்பியல் மேதை

அறிவும், மார்க்கமும்

மார்க்கத்தோடு முரண்படும் விடயத்தில் அறிவை நுழைவிப்பது அவசியமற்ற ஒன்றாக நான் கருதுகிறேன். உண்மையிலேயே இவை இரண்டிற்கும் மத்தியில் திடமாண ஓர் தொடர்பு இருக்கின்றது. அதனால் தான் மார்க்கத்தோடு தொடர்புபடாத அறிவியல் நொண்டியாகவும், அறிவியலோடு தொடர்புபடாத மார்க்கம் குருடானது எனவும் கூறிவருகிறேன். இது ஒரு முக்கியமான அம்சம். மார்க்கத்திலும், அறிவியலிலும் உள்ள யதார்த்த அம்சங்கள் யாரை திகைப்பூட்டவில்லையோ அவர் ஜடம் போன்றவர் என எனக்குத் தோன்றுகின்றது.

உயிர் தொண்டைக் குழியை அடையும் போது அதைத் திரும்ப அவரிடம் சேர்த்துவிடவும் அவர்களுக்கு ஏன் முடியாமல் இருக்கின்றது. அவர்களின் கூற்றுப்படி இப்பிரபஞ்சத்தில் உயிரினங்கள் உருவாகுவதற்குக் காரணமாக இருந்த அணுக்கரு கூட்டிணைவு எங்கே? உயிர்கள் உடலை விட்டுப் பிரியும் நேரத்தில் திரும்பவும் அவ்வுயிரை உடலினுள் செலுத்துமாறு ஏன் அவ் அணுக்கருக் கூட்டிணைவிடம் அவர்கள் வேண்டுவதில்லை.

மார்க்கம் என்பது கற்பனைக்கு எட்டாத அம்சம் என நாத்திகர்கள் கூறுவது சரியென்றால் மனிதர்கள் எவ்வாறு மார்க்கத்தை ஆதரிக்கின்றனர்? சிறந்த பேச்சாற்றல் உள்ள ஒரு மனிதனின் சிந்தனைகள் கூட காலப்போக்கில் மங்கிப்போய்விடுகின்றது. அப்படியிருக்க ஒவ்வொரு காலகட்டத்திலும் அனுப்பப்பட்ட நபிமார்களின் போதனைகளில் கொஞ்சமாவது ஏன் இன்னும் மக்கள் மனங்களில் குடிகொண்டிருக்கின்றது?!

மார்க்கம் என்று ஒன்று இல்லையெனில் நல்லறங்கள் செய்பவர்களையும், தீமை செய்பவர்களையும் எப்படி பிரித்தறிவது? குற்றமிழைக்கும் ஒருவரை அவரின் குற்றத்திலிருந்து எவ்வாறு தடுத்து நிறுத்துவது? ஓர் பணக்காரனை ஏழையின் மீது இரக்கம் காட்டவைப்பதற்கு துணைமையாக இருப்பது எது? திருடன், ஏமாற்றுப் பேர்வழி, மோசடிக்காரன், போதை பொருளுக்கு அடிமையானவன் என எத்தனையோ குற்றவாளிகளை அவர்களின் ஆசைகளை நிறைவேற்றுவதிலிருந்து எவ்வாறு தடுத்து நிறுத்துவது?

இந் நாத்திக சமூகம் ஏக்கம், சுயநலம், தீவிர ஆசைகளை நிறைவேற்றல் போன்ற கால்நடைகளுக்கு ஒப்பான வாழ்வையே தங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். எனவே தான் நாத்திகம் என்பது மூதேவித் தனம், ஏழ்மை, குரோதம், பயம், திண்டாட்டம் போன்றவற்றுக்கான முக்கிய காரணியாகத் திகழ்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், “எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும்; மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாகவே எழுப்புவோம்” என்று கூறினான். (அல்குர்ஆன் 20:124)

நியூட்டன்
ஆங்கில தத்துவ மேதை

நாத்திகம் முட்டாள் தனத்திற்கான உதாரணமாகும்.

நாத்திகம் முட்டாள் தனத்திற்கான உதாரணமாகும். சூரிய குடும்பத்தில் பூமியைப் பார்க்கின்ற போது, பூமியானது சூரியனிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவில் அமைந்துள்ளது. இது சூரியனிலிருந்து கிடைக்கப்பெறும் வெப்பம், ஒளி போன்றவைகளை தேவையான அளவு பூமி பெற்றுக்கொள்ள ஏதுவாக இருக்கின்றது. நிச்சயமாக இது இயற்கையாக நடைபெற்றிருக்க முடியாது.

பிளாட்டோ
கிரேக்க தத்துவமேதை

அழகிய ஒழுங்கமைப்பு

நிச்சயமாக இவ்வுலகம் அழகு மற்றும் ஒழுங்கமைப்பிற்கான அத்தாட்சியாக இருக்கின்றது. ஒன்றின் விளைவாக ஏற்பட்ட எதேச்சைச் செயற்பாடாக இதைக் கருத முடியாது. மாறாக இது பாரிய ஆற்றல் மிக்க ஒருவனால் மாத்திரமே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

நாத்திகம் என்பது புத்தி, தத்துவம், இயல்பு போன்றவற்றுக்குப் புறம்பான ஓர் சிந்தனைக் கோட்பாடு ஆகும். அதனால் தான் நிறைய அறிஞர்கள் இதனை மறுத்துவருகின்றனர். படைப்பாளன் ஒருவன் இல்லாமல் இப்பிரபஞ்சம் கிடையாது என்ற தத்துவத்தை மறுத்து, யாவும் தற்செயல் எனக்கூறும் இக்கோட்பாடு இயல்புக்கு முரணானது. எனவே தான் சாதாரண உள்ளுணர்வு கூட மார்க்கம் என்று ஒன்று இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ள முனைகின்றது. *அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மையென) உறுதி கொண்ட போதிலும், அநியாயமாகவும், பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள். ஆனால், இந்த விஷமிகளின் முடிவு என்ன வாயிற்று என்பதை நீர் கவனிப்பீராக.* *(அல்குர்ஆன் 27:14)*

கேள்விகளுக்கான விடைகள்

மனிதன் இவ்வாறான கேள்விகளுக்கு விடை காண வேண்டுமென்ற ஆதங்கத்தில் இருக்கின்றான். நவீன அறிவியல் மூலம் இக்கேள்விகளுக்கு பதில் கூற முடியாது. ஏனெனில் இவை அனைத்தும் மார்க்க அடிப்படையில் அமைந்துள்ளன. ஆனாலும் பல மார்க்கங்களில் அதிகமான கட்டுக்கதைகளும், நம்பகத் தன்மை அற்ற பல அறிவிப்புக்களும் இக்கேள்விகளுக்கான விடைகளாக கூறப்பட்டுள்ளன. இவை தான் மனிதனை தடுமாற்றத்தில் கொண்டுபோய் விடுகின்றன.

இக்கேள்விகளுக்கான தெளிவான விடைகளை ஒருவர் அறிந்துகொள்ள வேண்டுமெனில் மனம் திருப்தியடைகின்ற, நிம்மதியைத் தருகின்ற, சந்தோசத்தை ஏற்படுத்துகின்ற சரியான வழியை அவருக்கு அல்லாஹ்வால் மாத்திரமே காண்பிக்க முடியும்.

ஏனெனில் இவை மறைவான விடயங்களையும் உள்ளடக்கியிருக்கின்றன. இவ்வுலகில் அதிகமான மார்க்கங்கள் இருந்தாலும் இதைப் பற்றி உண்மையான, யதார்த்தமான ஒரு மார்க்கமே தெளிவாகக் கூற முடியும். அத்தனித்துவமான மார்க்கம் அல்லாஹ்வால் நபிமார்களுக்கு வஹி மூலம் வழங்கப்பட்டது. அல்லாஹ் கூறுகிறான், *(ஆகவே நபியே, அவர்களை நோக்கி) "நிச்சயமாக*

உண்மையான சந்தோசம்

தற்போது நான் நிதர்சன வாழ்வை வாழ்ந்து வருகின்றேன். தற்போதைய நடைமுறை வாழ்வில் பலர் உடல், நுகர்வு, பாலியல், போதைவஸ்துக்கள் போன்றவற்றோடு கலந்துவிட்ட ஏமாற்று வாழ்வை வாழ்ந்து வருகின்றனர். அவற்றில் தான் சந்தோசம், மகிழ்வு போன்றன இருப்பதாக எண்ணுகின்றனர். ஆனால் அது தவறு, தற்போது நான் சாந்தி, சமாதானம், அன்பு போன்றவற்றால் நிரம்பிய, உண்மையான மகிழ்வால் நிரம்பி வழிகின்ற ஓர் உலகைப் பார்த்துவிட்டேன்.

லாரன் பூத்

பிரிட்டிஷ் மனித உரிமைகள் அமைப்பு

அல்லாஹ்வின் வழி-(இஸ்லாம்) அதுவே நேர்வழி" என்று சொல்லும். (அல்குர்ஆன் 02:120)

மேலும் கூறுகிறான், நீர் கூறும்: நிச்சயமாக நேர்வழியென்பது அல்லாஹ்வின் வழியே ஆகும். (அல்குர்ஆன் 03:73)

எனவே தான் ஒரு மனிதன் தன் தடுமாற்றத்திலிருந்து விடுபடவும், சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளவும், நேரான பாதையில் பயணிக்கவும், சந்தோசம், மனஅமைதி போன்றவற்றை தன்னகத்தே தக்கவைத்துக்கொள்ளவும் இவ்வுண்மையான மார்க்கத்தைக் கற்று, அதனை முழுமையாக ஏற்றுக்கொள்வது அவசியமான ஒன்றாக இருக்கின்றது.

அப்படியானால் விடைகள் எவ்வாறு இருக்குப் போகின்றன?!

அல்லாஹ் கூறுகிறான், நிச்சயமாக நாம் (ஆதி) மனிதரைக் களி மண்ணிலிருந்துள்ள சத்தினால் படைத்தோம். பின்னர் நாம் (மனிதனைப் படைப்பதற்காக) அவனை ஒரு பாதுகாப்பான இடத்தில் இந்திரியத் துளியாக்கி வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத் துளியை அலக் என்ற நிலையில் ஆக்கினோம்; பின்னர் அந்த அலக்கை ஒரு தசைப் பிண்டமாக்கினோம்; பின்னர் அத்தசைப்பிண்டத்தை எலும்புகளாகவும் ஆக்கினோம்; பின்னர், அவ்வெலும்புகளுக்கு மாமிசத்தை அணிவித்தோம்; பின்னர் நாம் அதனை வேறு ஒரு படைப்பாக (மனிதனாகச்) செய்தோம். (இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன். பிறகு, நிச்சயமாக நீங்கள் மரணிப்பவர்களாக இருக்கிறீர்கள். பிறகு, கியாம நாளன்று, நிச்சயமாக நீங்கள் எழுப்பப்படுவீர்கள். (அல்குர்ஆன் 23:12-16)

என்னவானாலும் இறுதியில் அல்லாஹ்விடமே போய்ச்சேர வேண்டியுள்ள இந்த மாதிரியான படைப்பு வீணான ஒன்றல்ல. அதில் பாரிய நுட்பம் இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "நாம் உங்களைப் படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடத்தில் நிச்சயமாக மீட்டப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டீர்களா?" (என்றும் இறைவன் கேட்பான்.) (அல்குர்ஆன் 23:115)

அல்லாஹ் மனிதர்களையும், ஜின்களையும் வீணாகப் படைக்கவில்லை என்றால் அதனைப் படைத்ததன் நோக்கம் என்ன? ஆம் அவனை மாத்திரம் வணங்க வேண்டுமென்பதே அதன் நோக்கமாகும். வணக்கம் என்பது அல்லாஹ் விரும்பி, பொருந்திக்கொள்ளும்



மகிழ்வை உன் குறிக்கோலாக மாற்றிக்கொள்

நீ சந்தோசமாக வாழ நினைத்தால் சந்தோசத்தை மனிதர்களோடும், வேறு பொருட்களோடும் இணைத்து விடாமல் உன் இலக்கோடு இணைத்து விடு.

ஐன்ஸ்டீன்

இயற்பியல் மேதை

வகையில் இருக்க வேண்டும். தொழுகை, தியானம் போன்றவைகளையும், பூமியை ஆழ்தல், மக்களுக்கு நல்லவிடயங்களைச் செய்துகொடுத்தல் என்பவற்றையும் அவனுக்காக மாத்திரமே நிறைவேற்ற வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை. (அல்குர்ஆன் 51:56)

எல்லா மனிர்களும் அவனிடமே இறுதியாக சென்றடைய இருக்கிறோம். அல்லாஹ் கூறுகிறான், மேலும், அல்லாஹ்விடமே (நீங்கள்) மீள வேண்டியதிருக்கிறது. (அல்குர்ஆன் 03:28)

இவ்வாறு உறுதியாக ஏற்றுக்கொள்வதானது மனித வாழ்க்கை வீணானது என்ற நிலைப்பாடு நீங்கி, வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கிடைக்கும். உள்ளங்களும் சந்தோசத்தால் பூரிப்படையும். அல்லாஹ் கூறுகிறான், அல்லது, அவர்கள் எந்தப் பொருளின்றியும் (தாமாகவே) படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள் (எதையும்) படைக்கிற (சக்தியுடைய)வர்களா? அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா? அல்ல. அவர்கள் உறுதி கொள்ளமாட்டார்கள். (அல்குர்ஆன் 52:35-36)

இப்பிரபஞ்சத்தின் இரகசியத்தை அறிந்துகொள்ள முடியாமல் மனிதன் நிற்கின்ற போது தான், அல்லாஹ்வின் படைப்புக்களான வானம், பூமி, நட்ச்சத்திரங்கள், ஏனைய கோள்கள், ஒன்றன் பின் ஒன்றாக மாறிக்கொண்டே இருக்கும் இரவு பகல், வாழ்வு, சாவு, மற்றும் அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஏனைய அம்சங்கள் என அனைத்தைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பிக்கின்றான். இவ்வாறு சிந்திக்கின்ற போது, இப்பிரபஞ்சம் இயக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றது, அதை



தேச்கார்த்ஸ்
பிரான்ஸ் தத்துவ மேதை

படைப்பாளன் இருக்கின்றான்

நான் இங்கு இருக்கின்றேன். என்னைப் படைத்தவன் யார்? என்னை என்னால் படைத்துக் கொள்ள முடியாது. என்னைப் படைக்க நிச்சயம் ஓர் படைப்பாளன் இருக்கத்தான் வேண்டும். அவனை உருவாக்க எவராலும் முடியாது. அவனின் இருப்பையும் எவராலும் பாதுகாத்திடவும் முடியாது. அவன் அனைத்து வித பூரணமான பண்புகளாலும் வர்ணிக்கப்படுபவன். அவன் தான் அனைத்தையும் படைத்த இறைவன் அல்லாஹ்.

இயக்குவது ஒரு பாரிய, பலம்வாய்ந்த சக்தி, அது தான் இறைவனாக இருக்க முடியும், இப்படிப்பட்ட ஒருவன் தான் அடிபணிவதற்கும், வணங்குவதற்கும், கூலிகளை எதிர்பார்த்து, தண்டனைகளுக்குப் பயப்படவும் தகுதியானவன் என்ற சிந்தனைகளை இயல்பாகவே அவனுள் தோற்றுவிக்கின்றது. இவ்வாறான சிந்தனை தான் படைப்பாளன் ஒருவன் இருக்கின்றான் என்ற கோட்பாட்டை அவனுள் ஏற்படுத்துகின்றது. நாத்திகர்கள் நம்பிக்கொண்டிருக்கும் அனுகூலங்கள் கூட அல்லாஹ்வின் படைப்புகளில் ஒன்று தான்.

அனைத்து வல்லமையும் பொருந்திய, நீதம் செலுத்துகின்ற இறைவன் ஒருவன் இருக்கின்றான். அவன் தன் அடியார்களுக்கு பல அத்தாட்சிகளையும், ஆதாரங்களையும் காட்டி, தான் இறைவன் என்பதை நிரூபித்துள்ளான். வணங்கப்படுவதற்கும், பரிபாலணம் செய்வதற்கும் தகுதியானவன் அவன் தான் என்பதை அவனால் இறக்கப்பட்ட வேதங்களும், பகுத்தறிவும், இயல்பான படைகோளமும் தெளிவாகக் கூறுகின்றன. ஒவ்வொரு காலகட்டத்தில் வாழ்ந்த மனித சமுதாயமும் இதை ஏற்றிருக்கின்றன.

தெளிவான பதில்

பொதுவான அடிப்படையில் மார்க்கத்தின் வரலாறு, குறிப்பாக ஏகத்துவதின் வரலாறு, அல்லாஹ் ஒருவனை மாத்திரம் விசுவாசம் கொள்வதானது இப்பிரபஞ்சம், அதில் உள்ள அனைத்துப் படைப்பினங்கள் போன்றவற்றில் எழுகின்ற அனைத்து வித கேள்விகளுக்கும் தெளிவான விடையை எமக்கு தந்துவிடும். மனித வாழ்க்கையில் அல்லாஹ்வைத் தவிர வேறு குறிக்கோல்கள் இருக்க முடியாது. மார்க்கங்களைப் பின்பற்றும் ஒவ்வொரு மனிதனதும் முடிவு ஒரே இறைவன் பக்கமே இருக்கினறது.



காா்டினல் கோயினிக்
ஆஸ்திரியா உயா்மறைமாவட்ட பேராயா்

அதற்கான ஆதாரம் என்ன?



1- இப்பிரபஞ்சமும், முன்மாதிரி இன்றி உருவாக்கப்பட்ட படைப்புக்களும்:

- இப்பிரபஞ்சத்தில் உள்ள வானங்கள் மற்றும் பூமிகளை நீங்கள் பார்த்ததுண்டா?

- வானங்களும், அதில் தெண்படும் கோள்கள், பால்வெளிகள் போன்ற அனைத்தும் படைக்கப்பட்ட விதத்தைப் பற்றி ஒரு நாளாவது சிந்தித்ததுண்டா?

- இப்பூமியையும், அதில் நிறைந்து காணப்படும் ஆறுகள், கடல்கள், நீரோடைகள், மலைகள் போன்ற அனைத்தையும் ஆழ்ந்து கவனித்ததுண்டா?

- மிக நுட்பமான முறையில், எவ்வித முன்னுதாரணமுமின்றி உருவாக்கப்பட்டுள்ள இவ்வடிவங்கள் உங்களுக்குப் போதிய தெளிவைத் தரவில்லையா?!

வியப்பூட்டும் வகையில் அமைந்துள்ள இப்பிரபஞ்சம் ஓர் பூரணமான அத்தாட்சிதான் என்பதை இன்னும் ஏற்க மறுக்கின்றீர்களா?!

இவையனைத்தும் தானாக உருவாகியிருக்க முடியுமென கருதுகின்றீர்களா அல்லது ஆற்றலும், வல்லமையும் பொருந்திய ஒருவன் இதை உருவாக்கியிருக்க வேண்டும் என எண்ணுகிறீர்களா? அல்லாஹ் கூறுகிறான், நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும்; இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன. அத்தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும் தங்கள் விலாப் புறங்களில் (சாய்ந்து) இருக்கும் போதும் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள்; வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, "எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை; நீ மகா தூய்மையானவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!" (என்று பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்) (அல்குர்ஆன் 03:190-191)

ஒரு நாளாவது நீங்கள் படைக்கப்பட்ட விதத்தைப் பற்றி நீங்களே சிந்தித்ததுண்டா? அல்லாஹ் கூறுகிறான், உங்களுக்குள்ளேயும் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன; (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா? (அல்குர்ஆன் 51:21)

மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான்? அல்லாஹ் கூறுகிறான், அல்லது, அவர்கள் எந்தப் பொருளின்றியும் (தாமாகவே) படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள்



அல்லாஹ் உண்மையாளன்

நீ ஆழ்ந்து சிந்தித்தால் விஞ்ஞானம் உன்னை அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக்கொள்ளச் செய்துவிடும்

லோர்ட் கல்ஃபா

ஸ்கொட்லாந்தின் இயற்பியல் வல்லுனர்

(எதையும்) படைக்கிற (சக்தியுடைய)வர்களா? அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா? அல்ல. அவர்கள் உறுதி கொள்ளமாட்டார்கள். (அல்குரஆன் 52:35-36)

அவர்கள் தங்களைத் தாங்களே படைத்துக்கொள்ளவுமில்லை, வானங்கள் மற்றும் பூமியைப் படைக்கவுமில்லை. மாறாக இவர்களையும் தாண்டி ஓர் படைப்பாளன் இருக்கிறான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவன் தான் சர்வப் புகழும், வல்லமையும் பொருந்திய அல்லாஹ். இத்தனை அத்தாட்சிகளையும், ஆதாரங்களையும் அவன் காட்டிய பின்னும் அவனை மறுக்கும் சிலர் இருக்கின்றனர் என்பது ஆச்சரியமிக்க விடயம்தான்.

2- இயல்பு:

பொதுவாக படைப்பினங்கள் அனைத்தும் எவ்வாறு நன்மையை விரும்பி, தீமையை வெறுக்கும் இயல்பான உணர்வைக் கொண்டுள்ளதோ அதை விடவும் மேலாக படைப்பாளனை அவர்கள் இயல்பாக ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையைப் பெற்றிருக்கின்றனர். அதை அவர்களுக்கு ஆதாரத்துடன் தெளிவுபடுத்த எவ்விதத் தேவையும் ஏற்படாது. அல்லாஹ் கூறுகிறான், *ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும்; அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை; அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள். (அல்குர்ஆன் 30:30)*

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், ஒவ்வொரு குழந்தையும் இயற்கையான (இஸ்லாம்) மார்க்கத்தில் தான் பிறக்கின்றன. (புஹாரி, முஸ்லிம்)

இயல்பான உணர்வுகள்

இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற எமது எண்ணத்தை சடரீதியான உலகில் பரீட்சித்துப் பார்ப்பது பொருந்தாத ஒன்று. ஏனெனில் எமது ஐம்புலன்களால் உண்மையான இறைவனை கண்டுகொள்ள முடியாது. எனவே இயற்கையியலை வைத்து இதற்காக முயற்சிகள் மேற்கொள்வது நேரத்தை வீணடித்துவிடுகின்றது. அல்லாஹ்வின் இருப்பை விசுவாசம் கொள்வதானது மனிதனின் உணர்வுகளிலே தங்கியுள்ளது. அவனது ஆழுமை விருத்தியின் அடிப்படையில் அது வளர்ச்சியடைகின்றது.

றொபர்ட் மோரிஸ் பேஜ்
இயற்கையியலாளர்

3- ஒவ்வொரு சமுதாயத்தினரினதும் உடன்பாடு:

முன்னர் தோன்றிய அனைத்து சமுதாயத்தினரும் இப்பிரபஞ்சத்தைப் படைத்தது அல்லாஹ் தான் என்ற விடயத்தில் உடன்பாடாக இருந்துள்ளனர். அவன் தான் முதன் முதலாக எவ்வித முன்னுதாரணமுமின்றி இப்பிரபஞ்சத்தைப் படைத்தான் என்பதில் உறுதியாகவே இருந்துள்ளனர். அவர்களிடம் இதைப் பற்றி வினவினால் கூட -அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைவைப்பவர்களாக இருந்தும்- பரிபாலணக் கோட்பாட்டை ஏற்றிருந்தனர் என்பதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. மேலும், (நபியே!) "நீர் இவர்களிடத்தில் வானங்களையும், பூமியையும் படைத்துச் சூரியனையும் சந்திரனையும் (தன் அதிகாரத்தில்) வசப்படுத்திருப்பவன் யார்?" என்று கேட்டால், "அல்லாஹ்" என்றே இவர்கள் திட்டமாக கூறுவார்கள்; அவ்வாறாயின் அவர்கள் (உண்மையை விட்டு) எங்கே திருப்பப்படுகிறார்கள்? "அல்லாஹ் தன் அடியார்களில் தான் நாடியவர்களுக்கு உணவை விசாலமாக்குகிறான், தான் நாடியவருக்கு சுருக்கியும் விடுகிறான்; நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொன்றையும் அறிந்தவன்." இன்னும், அவர்களிடம்: "வானத்திலிருந்து நீரை இறக்கி, பிறகு அதனைக் கொண்டு இப்பூமியை - அது (காய்ந்து) மரித்தபின் உயிர்ப்பிப்பவன் யார்?" என்று நீர் கேட்பீராகில்: "அல்லாஹ்" என்றே இவர்கள் திட்டமாகக் கூறுவார்கள்; (அதற்கு நீர்) "அல்ஹம்து லில்லாஹ் - புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியது" என்று கூறுவீராக; எனினும் இவர்களில் பெரும்பாலோர் அறிந்துணர மாட்டார்கள். (அல்குர்ஆன் 29:61-63)

மேலும், (நபியே!) நீர் அவர்களிடம்: "வானங்களையும், பூமியையும் படைத்தவன் யார்?" என்று கேட்டால், "யாவரையும் மிகைத்தவனும், எல்லாவற்றையும் அறிந்தோனுமாகிய அவனே அவற்றை படைத்தான்" என்று நிச்சயமாக அவர்கள் கூறுவார்கள். (அல்குர்ஆன் 43:09)

ஆயினும் நாத்திகர்களும், அல்லாஹ்வை மறுப்பவர்களும் புத்திஜீவிகள் என தம்மால் கருதப்படுவோர் விட்டுச் சென்ற சுவடுகளை வைத்துக்கொண்டு, முரண்பாட்டுக்கு மத்தியில் வாழ்கின்றனர். அவை அனைத்தும் தற்போதுள்ள நடைமுறை உலகில் தோல்வியை சந்தித்துக்கொண்டிருக்கன்றன.

அல்லாஹ்வைக் கொண்டு விசுவாசம் கொள்வது இயல்பான ஒன்று

குழந்தைகளிடம் இயற்கையான முறையில் வளர்ச்சியடையும் சிந்தனைத் திறன் அவர்களை படைப்பாளனான அல்லாஹ் ஒருவனை விசுவாசம் கொள்வதை இயல்பாகத் தூண்டிவிடுகின்றது. இயற்கைக்குப் புறம்பான மனித சிந்தனைகளே அதை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டுகின்றன.

கேஸ்டன் பாரெட்

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் மனிதவியல் ஆய்வாளர்

4- பகுத்தறிவு:

அல்லாஹ்வையும், அவனது பரிபாலனத்தையும் உறுதிப்படுத்துவதற்கான அத்தாட்சிகள் மற்றும் ஆதாரங்களைத் தான் நாம் பார்த்துவருகிறோம். அந்த வரிசையில் அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும் இது போன்றதோர் பிரமிப்பான பிரபஞ்சத்தை உருவாக்க முடியாது என்பதற்கு பகுத்தறிவு ஓர் மிகப்பெரிய சான்றாகவும், ஆதாரமாகவும் இருக்கின்றது. படைப்பினங்கள் அனைத்தும் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரு பொருள் இயங்குவதாக இருந்தால் அதை இயக்கும் ஒருவர் அவசியம் இருந்தாக வேண்டும்.

இங்கே சில கேள்விகள் இருக்கின்றன. அவற்றை நீங்கள் உங்களிடமே கேட்டுப்பாருங்கள். உங்களுக்கு எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் வந்துபோய் இருக்கும், அந்நேரத்தில் யார் பக்கம் ஒதுங்குவீர்கள்? யாரிடம் வேண்டிக்கொள்வீர்கள்? உங்கள் கஷ்ட நஷ்டங்களையும், துன்ப துயரங்களையும் போக்குமாறு யாரிடம் மன்றாடுவீர்கள்?! அல்லாஹ் கூறுகிறான்,

இன்னும் மனிதனை ஏதேனும் ஒரு துன்பம் தீண்டுமானால், அவன் தன் இறைவன்பால் திரும்பி அவனை அழை(த்துப் பிரார்த்தி)க்கின்றான்; பின்னர் (இறைவன்) தன்னிடமிருந்து ஓர் அருட்கொடையை அவனுக்கு அளித்தானானால், முன்னர் அவன் எதற்காக அவனை அழைத்து(ப் பிரார்த்தித்து)க் கொண்டிருந்தானோ அதை மறந்து விடுகிறான். அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தி (மற்றவர்களை) அல்லாஹ்வுடைய



புத்திசாலியாய் இரு

பெருவெடிப்பு ஏற்படும் வேளையில் ஒவ்வொரு துகல்களும் தன்னைத் தானே உருவாக்கிக் கொண்டன என்ற கூற்றை புத்தியுள்ள ஒருவன் தன் சிந்தனையின் மூலம் சரிகாண்பானா??!

ஜோன் க்ளீவ்லன்ட் கோத்ரன்

இயற்கையியல் விஞ்ஞான ஆசிரியர், தவ்லத் பல்கலைக்கழகம்

பாதையிலிருந்து வழிகெடுக்கிறான். (நபியே!) நீர் கூறுவீராக: "உன் குஃப்ரை (நிராகரிப்பை)க் கொண்டு சிறிது காலம் சுகமனுபவி; நிச்சயமாக நீ நரகவாதிகளில் நின்றுமுள்ளவனே." (அல்குர்ஆன் 39:08)

மேலும், அவனே உங்களைத் தரையிலும், கடலிலும் பயணம் செய்யவைக்கிறான்; (சில சமயம்) நீங்கள் கப்பலில் இருக்கும்போது – சாதகமான நல்ல காற்றினால் (கப்பலிலுள்ள) அவர்களைக் கப்பல்கள் (சுமந்து) செல்லும்போது அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள்; பின்னர் புயல் காற்று வீசி எல்லாப்பக்கங்களிலிருந்தும் அலைகள் மோதும் போது, நிச்சயமாக (அலைகளால்) சூழப்பட்டோம் (தப்ப வழியில்லையே)" என்று எண்ணுகிறார்கள்; அச்சமயத்தில் தூய உள்ளத்துடன், "நீ எங்களை இதிலிருந்து காப்பாற்றி விட்டால், மெய்யாகவே நாங்கள் உனக்கு நன்றி செலுத்துபவர்களாக இருப்போம்" என்று அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றார்கள். அவன் அவர்களைக் காப்பாற்றி விட்டதும் அவர்கள் பூமியின் மேல் நியாயமில்லாது அழிச்சாட்டியம் செய்கிறார்கள்; மனிதர்களே! உங்கள் அழிச்சாட்டியங்களெல்லாம் உங்களுக்கே கேடாகமுடியும்; உலக வாழ்க்கையில் சிறிது சுகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள்; இதன் பின்னர் நம்மிடமே நீங்கள் திரும்ப வர வேண்டியதிருக்கிறது. அப்போது நீங்கள் செய்து கொண்டிருந்ததை உங்களுக்கு நாம் அறிவிப்போம். (அல்குர்ஆன் 10:22-23)

மேலும், (கப்பலில் செல்லும்) அவர்களை, மலைமுகடுகளைப் போன்ற அலை சூழ்ந்து கொள்ளுமானால், அல்லாஹ்வுக்கே வழிபட்டு அந்தரங்க சுத்தியுடன் அவனிடம் பிரார்த்திக்கின்றனர்; ஆனால் அவன் அவர்களைக் காப்பாற்றிக்கரைசேர்த்து விட்டால், அவர்களில் சிலர் நடுநிலையாக நடந்து கொள்கிறார்கள் – எனினும் மிகவும் நன்றி கெட்ட, பெருந்துரோகிகளைத் தவிர வேறு எவரும் நம் அத்தாட்சிகளை நிராகரிப்பதில்லை.(அல்குர்ஆன் 31:32)

மார்க்கமும், தத்துவவியலும்

குறைவான தத்துவவியல் மனிதனை நாத்திகத்தின் பக்கம் நெருக்கமடைய வைக்கின்றது. ஆழமான தத்துவவியல் மனிதனை ஓர் மார்க்கத்தின் பக்கம் நெருங்க வைக்கின்றது.

பிரான்சிஸ் பேகன்

ஆங்கில தத்துவமேதை

அல்லாஹ்வின் இறைக்கோட்பாட்டிற்கான ஆதாரங்கள்

இப்பிரபஞ்சத்திற்கு ஒரேயொரு இறைவன் தான் இருக்கிறான் என்றும், அவனே படைப்பாளன் என்றும் இயல்பும், பகுத்தறிவும் ஏற்றுக்கொண்டு விட்டால் பரிபாலணக் கோட்பாட்டை முழுமையாக ஏற்றுவிட்டதாகத் தான் அர்த்தம். இப்பிரபஞ்சத்தைப் பரிபாலணம் செய்வது ஒருவன் தான் என்றும் தெரிந்துவிடும். பரிபாலிப்பவன் ஒருவன் என்றால் அவன் தான் ஏக இறைவன். இறைத் தன்மையில் அவனுக்கு நிகராக எவரும் இருக்க முடியாது. இதை பின்வரும் தெளிவான சான்றுகள் நிரூபிக்கின்றன, அவை:

1- இப்பிரபஞ்சத்திற்கு இரண்டு, அல்லது அதற்கு மேற்பட்ட கடவுள்கள் இருக்க முடியுமா?

பிரமாண்டமான இப்பிரபஞ்சத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் தான் இருக்க முடியுமே தவிர ஒரு கடவுளால் எவ்வாறு இதை சமாளிக்க முடியும் என சிலர் சிந்திக்கலாம். ஒரு வாதத்திற்கு அவர்கள் கூறுவதை ஏற்றுக்கொண்டாலும் சில கேள்விகள் நம் மத்தியில் எழுகின்றது. ஒரு கடவுள் ஒரு விடயத்தை அமுல்படுத்த தயாராகும் போது, இன்னொருவர் குறுக்கிட்டு அதை அமுல்படுத்த வேண்டாமெனக் கூறினால் எவ்வாறு இருக்கும்?! ஒருவர் ஒன்றை செய்ய, மற்றவர் அதற்கு முரணாக செய்ய எத்தனிப்பார். இப்படி நிகழ்ந்தால் எப்படியும் ஒருவர் மற்றவரை விட உயர்ந்தவர், நாடியதைச் செய்ய முடிந்தவர் என்ற நிலை உருவாகும். ஒருவர் உயர்ந்துவிட்டால் மற்றவருக்கு அவர் நாடியதை அமுல்படுத்த இயலாமல் போய்விடும். இயலாமல் போய்விடுபவர் கடவுளாக முடியுமா?!! இதனாலேயே இறைவன் ஒருவனாகத்தான் இருக்க வேண்டுமென்ற கோட்பாடு உயர்ந்து நிற்கின்றது. அல்லாஹ் தனக்கென ஒரு மகனை எடுத்துக் கொள்ளவில்லை. அவனுடன் (வேறு) நாயனுமில்லை; அவ்வாறாயின் (அவர்கள் கற்பனை செய்யும்) ஒவ்வோர் நாயனும் தான் படைத்தவற்றை(த் தன்னுடன் சேர்த்து)க் கொண்டு போய் சிலர் சிலரைவிட மிகைப்பார்கள்.

அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள்கள் கிடையாது.

இஸ்ராயீல் மற்றும் அவரின் கூட்டத்தின் அரசனும், படைப் பட்டாளங்களின் இரட்சகனும் இவ்வாறு கூறுகிறார்கள், "நானே முதலாமவன், நானே இறுதியானவன், என்னைத் தவிர வேறு கடவுள் கிடையாது." (ஏசாயா 6:44)

பழைய ஏற்பாடு (பைபிள்

ஹெர்ச்செல்

பிரித்தானிய வானியல் மற்றும் தத்துவவியல் மேதை

அல்லாஹ்வின் ஏக நிலைப்பாடு

விஞ்ஞானத்தின் வளர்ச்சியுறும் ஒவ்வொரு தருணத்திலும் படைப்பாளன் ஒருவன் இருக்கின்றான், அவன் தான் இறைவன் என்பதற்கான ஆதாரங்கள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. புவியியல் அறிஞர்களும், இயற்பியல், கணிதவியல் அறிஞர்கள் போன்ற அனைவரும் தமது கண்டுபிடிப்புக்களால் அறிந்து கொண்ட இவ் உண்மையை வெளிக்கொணர மறுக்கின்றனர்.

(இவ்வாறெல்லாம்) இவர்கள் வர்ணிப்பதை விட்டும் அல்லாஹ் மிகவும் தூயவன்.

அவன் மறைவானதையும் பகிரங்கமானதையும் நன்கறிபவன்; எனவே அவர்கள் (அவனுக்கு) இணை வைப்பவற்றை விட்டும் அவன் மிகவும் உயர்ந்தவன். (அல்குர்ஆன் 23:91-92)

2- எவ்வித சக்தியுமற்ற, வானம் மற்றும் பூமியில் ஆட்சி புரிய முடியாத, எதையும் படைக்க இயலாத, தனக்கோ, பிறருக்கோ ஏற்படும் நன்மை, தீமைகளை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாத, வாழ்வு, சாவு, உயிர்த்தெழுதல் போன்ற எதையும் செய்ய இயலாதவர்களை கடவுளாக மக்கள் ஏற்று வணங்குவது தான் மிகவும் ஆச்சரியமிக்க ஒன்றாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், *உலகத்தார் யாவரையும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காக (சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெளிவாகப்) பிரித்தறிவிக்கும் இவ்வேதத்தைத் தன் அடியார் மீது இறக்கியவன் மிக்க பாக்கியமுடையவன்.*

(அந்த நாயன்) எத்தகையவன் என்றால் வானங்கள், பூமி (ஆகியவற்றின்) ஆட்சி அவனுக்கே உரியது; அவன் (தனக்கென) ஒரு மகனை எடுத்துக் கொள்ளவில்லை; அவனுடைய ஆட்சியில் அவனுக்கு கூட்டாளி எவருமில்லை; அவனே எல்லாப் பொருட்களையும் படைத்து, அவற்றை அதனதன் அளவுப் படி அமைத்தான்.

(எனினும் முஷ்ரிக்குகள்) அவனையன்றி (வேறு) தெய்வங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் - அவர்கள் எந்தப் பொருளையும் படைக்க மாட்டார்கள்; (ஏனெனில்) அவர்களே படைக்கப்பட்டவர்கள். இன்னும் அவர்கள்; தங்களுக்கு நன்மை செய்து கொள்ளவோ தீமையை தடுத்துக் கொள்ளவோ சக்திபெற மாட்டார்கள்; மேலும் அவர்கள் உயிர்ப்பிக்கவோ, மறிக்கச் செய்யவோ, மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பவோ, இயலாதவர்களாகவும் இருக்கின்றனர். (அல்குர்ஆன் 25:1-3)

எங்களை அல்லாஹ்விடம் நெருங்க வைப்பதற்கும், அவனிடம் எங்களுக்காக பரிந்துரை செய்வதற்கும் தான், பிற கடவுள்களை நாம் பயன்படுத்துகிறோம் என்று இணைவைப்பவர்கள் கூறி வருகின்றனர். இவர்கள் உண்மையில் அல்லாஹ்வை வணங்கவில்லை.





அல்லாஹ்வை வணங்குவதாகக் கூறிக்கொண்டு உதவிக்காக அழைத்த பிற கடவுள்களைத் தான் வணங்குகிறார்கள். அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய அனைத்து கடமைகளையும் பிற தெய்வங்களுக்கே செய்கின்றனர். அல்லாஹ் கூறுகிறான், *(நபியே!) நீர் சொல்வீராக: அவர்கள் கூறுவதுபோல் அவனுடன் வேறு தெய்வங்கள் இருந்தால், அப்போது அவை அர்ஷுடையவன் (அல்லாஹ் தஆலாவின்) அளவில் ஒரு வழியைத் தேடிக்கண்டு பிடித்துச் (சென்று) இருக்கும் என்று.*

அவன் மிகவும் பரிசுத்தமானவன்; இன்னும் அவர்கள் கூறும் கூற்றுக்களை விட்டு அப்பாற்பட்டவனாக இருக்கின்றான். (அல்குர்ஆன் 17:42-43)

கடவுள் என்பவன் அல்லாஹ் மாத்திரம் தான். அவனைத் தவிர வேறு கடவுள்களோ, தெய்வங்களோ கிடையாது. அவன் தனித்தன், எவரிடத்திலும் தேவையற்றவன், அவன் யாரையும் பெறவுமில்லை, யாராலும் பெறப்படவுமில்லை, அவனுக்கு நிகராக இவ்வுலகில் எவரும் இல்லை.

அவனைத் தவிர வணங்கப்படும் கடவுள்களும், தெய்வங்களும் எதையும் கட்டுப்படுத்த முடியாதவர்கள், எதைச் செய்யவும் சக்தி பெறாதவர்கள். அல்லாஹ் கூறுகிறான், *"அல்லாஹ்வையன்றி எவரை நீங்கள் (தெய்வங்களென) எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ அவர்களை அழையுங்கள்; வானங்களிலோ, இன்னும் பூமியிலோ அவர்களுக்கு ஓர் அணுவளவும் அதிகாரமில்லை - அவற்றில் இவர்களுக்கு எத்தகைய பங்கும் இல்லை - இன்னும் அவனுக்கு உதவியாளர்களும் அவர்களில் யாருமில்லை.*

அன்றியும், அவன் எவருக்கு அனுமதி கொடுக்கிறானோ அவருக்குத் தவிர, அவனிடத்தில் எந்த பரிந்துரையும் பயனளிக்காது. (அல்குர்ஆன் 34:22-23)

அதாவது, தனக்கோ, பிறருக்கோ எவ்வித நன்மையும் செய்ய முடியாத, தீமைகளை விட்டும் கப்பாற்றிடமுடியாத, எப்போதும் தனது இயலாமையை வெளிக்காட்டிக்கொண்டே இருக்கும் படைப்பினங்களை அல்லாஹ்வோடு சமத்துவப்படுத்துபவர்களிடம் நபியே நீங்கள் பின்வருமாறு கூறுங்கள்: அல்லாஹ்விற்கு சமமானவர்கள் என நீங்கள் யாரைக் கருதுகின்றீர்களோ அவர்களிடம் பிரார்த்தியுங்கள், உங்களுக்குப் பயனளிக்கும் ஓர் விடயத்தை அவர்களிடம் பிரார்த்தித்தால் நிச்சயமாக அவர்களிடம் இயலாமைக்கான காரணங்கள் தென்பட ஆரம்பிக்கும். உங்கள் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஏனெனில் இப்பிரபஞ்சத்திலுள்ள ஓர் அணுவையேனும் ஆழும் அதிகாரம் இவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அல்லாஹ்வுக்கு பணியாளர்களாக செயற்படும் அதிகாரங்கள் கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லை. "நாங்கள் உதவியாளர்களாக தேர்ந்தெடுத்திருப்பவர்கள் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கு உதவியாளர்களாகவும், அமைச்சர்களாகவும் செயற்படுகின்றனர், எனவே நமது பிரார்த்தனை

பயனுள்ளதாகத்தான் இருக்கும். ஏனெனில் அவர்களோடு சம்பந்தப்படுபவர்களின் தேவைகளை அல்லாஹ்விடம் கூறி அவர்கள் நிறைவேற்றித் தருவார்களே" என நீங்கள் கூறலாம். ஆனால் அல்லாஹ் தனக்கு இப்படி ஓர் தரம் இருக்க வாய்ப்பே இல்லையென்று கூறுகிறான். "எவ்வித உதவியாளர்களும்" அதாவது, தனது ஆட்சியதிகாரத்தில் அமைச்சர்களும், பணியாளர்களும். "அவர்களிலிருந்து" அதாவது, வணங்கப்படுபவர்களில், "அவனுக்குக் கிடையாது" அதாவது, அடக்கியாழும் வல்லமை பொருந்திய ஏக இறைவன் அல்லாஹ்வுக்குக் கிடையாது,

3- இப்பிரபஞ்சத்திலும், அதன் சுற்றோட்டத்திலும் வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ள அதன் ஒத்த வடிவமைப்பும், கட்டுப்பாடான நிலையும், சீரான ஒழுங்கமைப்பும், இவற்றின் இயக்கத்தைக் கண்காணிப்பது அனைத்தையும் அறிந்த, சர்வ வல்லமை மிக்க, ஏக இறைவன் தான் என்பதை மேலும் மேலும் பறைசாற்றுகின்றன. அல்லாஹ் கூறுகிறான்.

மேலும், உங்கள் நாயன் ஒரே நாயன்; அவனைத் தவிர வேறு நாயனில்லை அவன் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன். நிச்சயமாக வானங்களையும், பூமியையும் (அல்லாஹ்) படைத்திருப்பதிலும்; இரவும், பகலும் மாறி, மாறி வந்து கொண்டிருப்பதிலும்; மனிதர்களுக்குப் பயன் தருவதைக் கொண்டு கடலில் செல்லும் கப்பல்களிலும்; வானத்திலிருந்து அல்லாஹ் தண்ணீரை இறக்கி அதன் மூலமாக பூமியை இறந்த பின் அதை உயிர்ப்பிப்பதிலும்; அதன் மூலம் எல்லா விதமான பிராணிகளையும் பரவ விட்டிருப்பதிலும், காற்றுகளை மாறி, மாறி வீசச் செய்வதிலும்; வானத்திற்கும், பூமிக்குமிடையே கட்டுப்பட்டிருக்கும் மேகங்களிலும் - சிந்தித்துணரும் மக்களுக்கு (அல்லாஹ்வுடைய வல்லமையையும், கருணையையும் எடுத்துக் காட்டும்) சான்றுகள் உள்ளன. (அல்குர்ஆன் 02:163-164)

காலம் பூராகவும் இதே வடிவத்திலும், கட்டுப்பாட்டோடும், ஒழுங்கமைப்பிலும் இருக்கும் இப்பிரபஞ்சம் ஒரு விநாடியேனும் நின்று விட்டால்...? அப்படி நின்றுவிட்டால் இவ்வுலகமே அழிந்து சின்னாபின்னமாகிவிடும். இவற்றைக் கட்டுப்படுத்த அல்லாஹ்வைத் தவிர வேறு எவராலும் முடியாது. இவ்வாறு எவ்வித

உயர்ந்த நோக்கம்

முட்டிமோதி, வெடிப்புக்களுக்கு உள்ளாகாத வகையில் சென்றுகொண்டிருப்பதாகவே இவ்வுலகு எமக்கு தென்படுகின்றது, ஆனால் இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு பகுதிளும், பொருட்களும் ஓர் குறிக்கோலை நோக்கித்தான் சென்றுகொண்டிருக்கின்றன. அவை அனைத்தும் அதை விடப் பிரம்மாண்டமான ஒரு குறிக்கோலை நோக்கி பயணிக்கின்றன. இறுதியாக இவை அனைத்தும் ஒரே புள்ளியில் சந்திக்கவிருக்கின்றது.



பிளாட்டோ
கிரேக்க
தத்துவமேதை

முன்னுதாரணமுமின்றி படைப்பினங்களைப் படைத்து, அதைக் கண்காணித்து வரும் இறைவன் ஒருவன் தானா? என்ற சந்தேகம் இன்னும் சிலருக்கு இருக்கலாம். அப்படி ஒன்றுக்கு மேற்பட்ட கடவுள்கள் இருப்பது சாத்தியமற்றது என்பதற்கு இது மிகவும் தெளிவான சான்றாக அமைந்துள்ளது. (வான், பூமி ஆகிய) இவற்றில் அல்லாஹ்வையன்றி வேறு தெய்வங்கள் இருந்திருந்தால், நிச்சயமாக இவையிரண்டும் அழிந்தே போயிருக்கும், அர்ஷுடைய இறைவனாம் அல்லாஹ், அவர்கள் வர்ணிக்கும் (இத்தகைய) தன்மைகளிலிருந்து மிகவும் தூய்மையானவன். (அல்குர்ஆன் 21:22)

வானங்களையும், பூமியையும் பல கடவுள்கள் ஆள முற்பட்டால் நிச்சயம் இவ்வுலகம் அழிந்தே போயிருக்கும். அதிலுள்ள படைப்பினங்களும் சின்னாபின்னமாகியிருக்கும். இவ்வுலகம் எவ்விதக் குறைகளும், தடைகளும், முரண்பாடுகளும் இன்றி, சீராகவும், ஒருங்கிணைப்புடனும் இயங்கிக்கொண்டிருப்பதற்கு இதுவே மிக முக்கிய காரணமாகும். இதுவே, இறைவன் என்பவன் ஒருவனாகத்தான் இருக்க முடியும் என்பதை எமக்கு வலியுருத்திக்கொண்டே இருக்கின்றது. இதற்கு மாறாக பல கடவுள்கள் இவ்வுலகை நிர்வகித்தால் இதன் அனைத்து ஒழுங்கு விதிகளும் சீர்கெட்டுவிடும். ஒருவர் ஒன்றை நிறைவேற்ற, இன்னொருவர் அது இப்போதைக்கு வேண்டாம். பிறகு செய்யலாம் எனக் கூற, இன்னொருவர் இது தேவையே இல்லை என ஒதுக்கிவிட... இவ்வாறு அவர்களுக்கு மத்தியில் முரண்பாடுகளும், பிரச்சினைகளும் தோன்ற ஆரம்பிக்கும். பிரச்சினை உச்சநிலைக்கு வரும் போது எப்படியும் ஒருவர் ஜெயித்துவிட மற்றவர்கள் தோல்வியை சந்திக்க நேரிடும். தோற்றவர்கள் இயலாதவர்களாக மாறும் போது அவர்களிடம் கடவுள் தன்மை என்பதை எதிர்பார்க்க முடியாமல் போகின்றது. இவ்வுலகை சீராக இயக்கும் சக்தி அவர்களுக்குக் கிடைக்காமல் போகின்றது. எனவே இவையனைத்தையும்

இறைவன் ஒருவன் தான்

"இறைவன் ஒருவன் தான், அவனைத் தவிர வேறு இறைவன் கிடையாது" (உபாகமம் 4:35), "நான் தான் இறைவன், என்னைத் தவிர வேறு இறைவன் கிடையாது"

பழைய ஏற்பாடு (பைபில்)

தன் ஒரே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது எவராலும் எதிர்கொள்ள முடியாத ஏக இறைவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரம் தான்..

4- ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தொடக்கம் முஹம்மத் ﷺ அவர்கள் வரை அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களும், ரஸூல்மார்களும் ஏகத்துவத்தைத் தான் போதித்து வந்தார்கள். அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இருக்க முடியாது என்பதை தெளிவாக வலியுருத்தினார்கள். அவர்கள் அனைவரும் உள்ளத்தால் தவறிழைக்காதவர்களாகவும், புத்திக்கூர்மை உள்ளவர்களாகவும், உண்மை பேசுபவர்களாகவும், நம்பிக்கையான முறையில் நேர்வழியை போதிப்பவர்களாகவும் இருந்தார்கள். *(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை.* (அல்குர்ஆன் 21:25)

நூஹ் : அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறும் போது,\ *நிச்சயமாக நாம் நூஹை அவருடைய கூட்டத்தாரிடம் அனுப்பி வைத்தோம்; அவர்(தம் கூட்டத்தாரிடம்), "என் கூட்டத்தாரே! அல்லாஹ்வையே வணங்குங்கள், உங்களுக்கு அவனன்றி வேறு நாயனில்லை; நிச்சயமாக நான் உங்களுக்கு வர இருக்கும் மகத்தான ஒரு நாளின் வேதனைப்பற்றி அஞ்சுகிறேன் என்று கூறினார்.* (அல்குர்ஆன் 07:59)

ஈஸா : அவர்களைப் பற்றி குறிப்பிடும் போது, *ஆனால் மஸீஹ் கூறினார்: "இஸ்ராயீலின் சந்ததியினரே! என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனுமாகிய அல்லாஹ்வை வணங்குங்கள்" என்று. எனவே எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹராமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை.* (அல்குர்ஆன் 05:72)

முஹம்மத் ﷺ அவர்களைப் பற்றி குறிப்பிடும் போது, *"எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருப்பதெல்லாம்: "உங்கள் நாயன் ஒரே நாயன் தான்" என்பதுதான்; ஆகவே நீங்கள் அவனுக்கு வழிப்பட்டு நடப்பீர்களா?" (என்று நபியே!)*

ஒரே இறைவன்

"நீ சிரம் பணிய வேண்டியது இறைவனுக்கே, நீ வணங்கவேண்டியதும் அவனை மாத்திரமே" (மத்தேயு 4:10, லூக்கா 4:8) "இது உன்னை அறிந்துகொள்வதற்கான நிரந்தரமான வாழ்க்கை. நீ தான் உண்மையான இறைவன், இயேசு நீ அனுப்பிவைத்தவர்"

புதிய ஏற்பாடு (பைபிள்)

நீர் கேட்பீராக! (அல்குர்ஆன் 21:108)

தத்தமது நபிமார்களைப் பின்பற்றி, அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவன் தான் இறைவன் என்று விசுவாசம் கொள்ள வேண்டுமென்பதை சீரான சிந்தனையுள்ள ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்வார்கள். அது அவர்களுக்கு இவ்வுலகிலும், மறுமையிலும் சந்தோசத்தையும், நிம்மதியையும் ஈட்டித் தரும். அல்லாஹ் கூறுகிறான், ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற் செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம்; இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம். (அல்குர்ஆன் 16:97)



மகிழ்வுக்கான ஆதாரம்

இதற்கு முன் மகிழ்வைப் பற்றி எனக்குத் தெரியாது. நான் எப்போது அல்குர்ஆனைப் படிக்க ஆரம்பித்தேனோ அப்போதே எனக்குள் பலகேள்விகளைக் கேட்டு, வியந்துகொண்டேன்.: ஏன் மனிதர்கள் நேர்வழியை மறந்து, வழிகேட்டில் பயணிக்கின்றனர். தெளிவான ஆதாரம் அவர்கள் முன் தானே இருக்கின்றது??!

கேட் ஸ்டீவன்ஸ்

ஆங்கிலப் பாடகர்

இறை நம்பிக்கையோடு நற்செயல்கள் செய்தால் நிச்சயம் இவ்வுலகில் அழகான வாழ்வைப் பெறமுடியும். அது பணத்தால் நிறைந்த ஆடம்பரமாகத்தான் இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. அழகான வாழ்வென்பதை பணமின்றியும் அடைந்துகொள்ள முடியும். அல்லாஹ்வுடனான தொடர்பு, அவன் மீதான உறுதி, அவன் தன்னைப் பாதுகாப்பான் என்ற மன அமைதி, ஆரோக்கியம், நிம்மதி, திருப்தி, அமைதியான குடும்பம், நெருக்கமான உறவுகள், நல்லவைகளைச் செய்யும் போது ஏற்படும் ஆனந்தம் போன்ற அனைத்தும் அழகான வாழ்க்கையினுள் எம்மை இழுத்துச் செல்கின்றன. பணம் என்பது இவ்வாழ்க்கையின் ஓர் சிறு அங்கம் தான். அல்லாஹ் கூறுகிறான், செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களேயாகும்; என்றும் நிலைத்து நிற்கக் கூடிய நற்கருமங்களே உம்முடைய இறைவனிடத்தில் நன்மைப் பலனுடையவையாகவும், (அவனிடத்தில்) நம்பிக்கையுடன் ஆதரவு வைக்கத்தக்கவையாகவும் இருக்கின்றன. (அல்குர்ஆன் 18:46)

அல்லாஹ்விடமிருந்து மாத்திரம் கிடைக்கும் மிகப் பிமாண்டமான, பரிசுத்தமான,

என்றும் நிலையான ஒன்றோடு, நமது உள்ளம் தொடர்புபடும் போது அழகான இவ் வாழ்வின் அர்த்தமே மாறுகின்றது. சந்தோசத்திற்கு ஒரு புது அர்த்தம் கிடைக்கின்றது.

ஆனால் மனிதன் தான் இதனைப் புரக்கணித்து வாழ்கிறான். இந்நிலையில் அவனது உள்ளம் துயரமும், ஏமாற்றமும் நிறைந்த பாதையில் பயணிக்க ஆரம்பிக்கின்றது. கவலைகளும், வெறுப்புக்களும் கொட்டிக்கிடக்கும் புதர்களைக் கடக்கும் போது அவனது உள்ளமும், உடலும் அதிலுள்ள கஷ்டங்களில் அகப்பட்டு அழிந்து போகின்றன. அலாஹ் கூறுகிறான், அல்லாஹ் யாருக்கு நேர்வழி காட்ட நாடுகிறானோ அவருடைய நெஞ்சை இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்காக விசாலமாக்குகிறான் - யாரை அவன் வழி கெடுக்க நாடுகிறானோ, அவருடைய நெஞ்சை, வானத்தில் ஏறுபவன் நெஞ்சைப் போல் இறுகிச் சுருங்கும்படிச் செய்கிறான். (அல்குர்ஆன் 06:125)

யார் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவனுக்கு எவ்வித இணைகற்பிக்காமலும் இருக்கின்றாரோ, அவரின் உள்ளத்தை அமைதியும், நிம்மதியும் நிறைந்த ஓர் பூந்தொட்டியாக மாற்றிவிடுகின்றான். இவற்றை எவர் நிராகரிக்கின்றாரோ அவரது உள்ளத்தை நெருக்கடி நிறைந்த சாலையாகவும், கவலைகள், ஏக்கங்கள் போன்றன கொட்டிக்கிடக்கும் குப்பைத் தொட்டியாகவும் மாற்றிவிடுகின்றான். —இதிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக-. மேலும் அல்லாஹ் கூறுகிறான், அல்லாஹ் ஓர் உதாரணம் கூறுகிறான்: ஒருவருடன் ஒருவர் கருத்து வேற்றுமை கொண்டிருக்கும் பல எஜமானர்களுக்கு (ஊழியம் செய்யும்) ஒரு மனிதனும்; ஒரே மனிதனுக்கு (ஊழியம் செய்யும் பிறிதொரு) மனிதனும் இருக்கின்றனர். இவர்கள் இருவரும் சமமாவார்களா? அல்ஹம்து லில்லாஹ் - எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! எனினும், அவர்களில் பெரும்பாலோர் அறிய மாட்டார்கள். (அல்குர்ஆன் 39:29)

இணைவைப்பவனுக்கு ஓர் அழகான உதாரணத்தை அல்லாஹ் இங்கு குறிப்பிடுகின்றான். அவனை தீய குணமுள்ள, கல்நெஞ்சக்காரர்கள் சிலர் தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். அவர்களுள் ஒருவன் அவனை வரச்சொல்வான், இன்னொருவன் உட்காரச்சொல்வான், மற்றொருவன் எழும்பச்சொல்வான். இந்நிலையில் பாதிக்கப்படுபவனின் உடல் மட்டுமல்ல உள்ளமும் அமைதியிழந்து, பெரும் திண்டாட்டத்திற்கு மத்தியில் காணப்படும். அல்லாஹ்வை ஒருமைப்படுத்துபவனுக்கும் ஓர் அழகிய உதாரணம் குறிப்பிடப்பட்டுள்ளது. அவனை ஒரே ஒரு நல்ல மனிதர் தான் தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். அவனுக்கு ஓர் வேலையைச் செய்யச் சொல்வதும், அது அவனுக்கு கஷ்டத்தை ஏற்படுத்துமாக இருந்தால் வேண்டாமென அவனை தடுப்பதும் ஒருவர் மாத்திரம் தான். இவ்விரு மனிதர்களும் சமமானவர்களா?! அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும், அவன் தான் இறைவன். தனித்தவன். இணை துணை அற்றவன், அவனைத் தவிர வேறு இறைவன் கிடையாது. இதை அறியாமல் வாழ்பவர்கள் பெரும் கலக்கத்துடனும், கவலையிலும், நிம்மதியற்றும், சோர்வுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

தற்கொலைகளும், மார்க்கமும்

A global perspective in theepidemiology of suicide
உலக சுகாதார அமைப்பின் இரு பெரும் ஆய்வாளர்களான டாக்டர் ஜோஸ் மானுவல் மற்றும் அலெஸ்ஸண்ட்ரா ஃபௌலஷ்மன் ஆகியோர் தற்கொலைகளுக்கும், மார்க்கத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றி ஓர் ஆய்வை நடாத்தினர். அதன் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.



الطريق إلى السعادة
The Path to Happiness

இப்பிரபஞ்சமும், மனிதர்களும் படைக்கப்பட்ட விதமும், அதன் உயரிய நோக்கமும்

இப்பிரபஞ்சமும், மனிதர்களும் படைக்கப்பட்ட விதமும், அதன் உயரிய நோக்கமும்

இப்பிரபஞ்சம் படைக்கப்பட்ட விதத்தைப் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்திருக்கிறீர்களா?

உலகம் படைக்கப்பட்டதன் நோக்கம்.

மனிதன் கண்ணியம் பொருந்திய படைப்பாவான்.

ஆண்களுக்குக் கிடைக்கும் சமமான கௌரவம் தான் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும்.

மனிதனைப் படைத்ததன் நோக்கம்

மனிதா, இதற்குப் பிறகும் என்ன தாமதம்....

இப்பிரபஞ்சமும், மனிதர்களும் படைக்கப்பட்ட விதமும், அதன் உயரிய நோக்கமும்

இப்பிரபஞ்சம் படைக்கப்பட்ட விதத்தைப் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்திருக்கிறீர்களா?

அல்லாஹ்வின் படைப்புக்களைப் பற்றி சிந்திப்பதானது நிச்சயம் நம்மிடையே ஈமானை அதிகரிக்கச் செய்வதோடு, அவன் மீதான உறுதியை மேலும் வலுவடைய வைக்கின்றது. மேலும் அவனது அறிவாற்றலையும், படைப்பாற்றலையும் ஏற்றுக்கொள்ளச் செய்கின்றது. நிச்சயமாக அல்லாஹ் வானங்கள், பூமி மற்றும் அதிலுள்ள அனைத்தையும் வீணாகப் படைக்கவில்லை என்ற சிந்தனையையும் நம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது. இதைப் பற்றி அவனே கூறும் போது, வானங்களையும், பூமியையும் அல்லாஹ் உண்மையைக் கொண்டே படைத்துள்ளான் - நிச்சயமாக இதில் முஃமின்களுக்கு அத்தாட்சி இருக்கிறது. (அல்குர்ஆன் 29:44)

எண்ணிலடங்கா எத்தனையோ படைப்பினங்கள் இப்பிரபஞ்சத்தில் இருக்கின்றன. இவையனைத்தும் படைக்கப்பட்ட விதங்களைப் பார்த்தால் நிச்சயம் நாம் வியப்பில் ஆழ்ந்து விடுவோம்.!!

என் இறைவா!

தற்போதைய நவீன காலத்தில் எடுக்கப்பட்ட விண்வெளிப் படங்களை நான் பார்வையிட்ட போது, முதல் தடவையிலே எனது பதிலை மிகவும் சத்தமாக பின்வருமாறு கூறினேன், "என் இறைவா! இத்துப்போன பொருட்களிலிருந்து நீ என்னவெல்லாம் செய்துள்ளாய். சத்தியமாக இவை அனைத்தும் மிகவும் அழகான படைப்புக்களாக இருக்கின்றன."

பவ்ல் மார்டின்

வானவியல் ஆசிரியர், கேம்ரிஜ் பல்கலைக்கழகம்

அல்லாஹ்வின் வல்லமையை எடுத்துக்காட்டும் வகையில் பல ஆதாரங்கள் இப்பிரபஞ்சத்தில் காணக்கிடைக்கின்றன. நவீன அறிவியல் ஆராய்ச்சிகள் கூட மனிதனை மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் அல்லாஹ்வின் படைப்புக்களில் பல நுண்ணிய அம்சங்களை இன்னும் ஆய்வு செய்து கொண்டு தான் இருக்கினறன.

இவ்வுலகில் காணப்படும் அனைத்து படைப்பினங்களைப் பற்றியும் மனிதன் ஆழ்ந்து

சிந்தித்தால் அவை அனைத்தும் மிகவும் துள்ளியமான முறையில், அனைவரும் பிரமிப்படையும் வகையில் அமைந்துள்ளதைக் காணலாம். இவையனைத்தையும் ஏக இறைவனான அல்லாஹ்வே படைத்தான். அவனின் படைப்பு எவ்வளவு அழகாய், எத்தனை நுட்பமாய் இருக்கின்றது..

இவ்வுலகில் அல்லாஹ் எவ்வித முன்னுதாரணமுமின்றி படைத்திருக்கும் வானங்கள், நட்சத்திரங்கள், கோல்கள், அவற்றின் சுற்றோட்டம், அதே போல் நாம் வாழும் பூமி, அதில் இருக்கின்ற கடல்கள், ஆறுகள், நிலங்கள், மலைகள், மிருகங்கள், பறவைகள், ஊர்வனங்கள், தாவரங்கள் போன்ற அனைத்தையும் பற்றி சிந்தித்தாலே போதும். அல்லாஹ்வின் வல்லமை, நுட்பமான அறிவுத்திறன், ஆழ்ந்த ஆக்கத்திறன் போன்றவற்றை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். "நிச்சயமாக வானங்களும், பூமியும் (முதலில்) இணைந்திருந்தன என்பதையும், இவற்றை நாமே பிரித்(தமைத்)தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொன்றையும் நாம் தண்ணீரிலிருந்து படைத்தோம் என்பதையும் காஃபிர்கள் பார்க்கவில்லையா? (இவற்றைப் பார்த்தும்) அவர்கள் நம்பிக்கை கொள்ள வில்லையா?"

"இன்னும்: இப்பூமி (மனிதர்களுடன்) ஆடி சாயாமலிருக்கும் பொருட்டு, நாம் அதில் நிலையான மலைகளை அமைத்தோம்; அவர்கள் நேரான வழியில் செல்லும் பொருட்டு, நாம் விசாலமான பாதைகளையும் அமைத்தோம்."

"இன்னும் வானத்தை நாம் பாதுகாப்பான விதானமாக அமைத்தோம் -எனினும் அவர்கள் அவற்றிலுள்ள அத்தாட்சிகளைப் புறக்கணித்து விடுகிறார்கள்."

"இன்னும் அவனே இரவையும், பகலையும்; சூரியனையும், சந்திரனையும் படைத்தான்; (வானில் தத்தமக்குரிய) வட்டவரைக்குள் ஒவ்வொன்றும் நீந்துகின்றன". (அல்குர்ஆன் 21:30-33)

சிறந்த புத்தியுள்ள ஒருவர் இவற்றைப் பற்றி உண்ணிப்பாக சிந்திக்கும் போது பின்வரும் உண்மையை தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இவ்வுலகிலுள்ள அனைத்துப் படைப்பினங்களும் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றன. அவையனைத்தும் அவனை துதிக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான், "வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் தஸ்பீஹு (துதி) செய்துகொண்டிருக்கின்றன; (அவன்தான்) மெய்யான பேரரசன்; பரிசுத்தமானவன்; யாவரையும் மிகைத்தவன்; ஞானம் மிக்கவன். (அல்குர்ஆன் 62:01)

அவையனைத்தும் அவனுக்கு சிரம்பணிகின்றன. "வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும், மனிதர்களில் பெரும்பாலானவர்களும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்(து வணங்கு)கின்றன என்பதை நீர் பார்க்கவில்லையா? இன்னும் அநேகர் மீது வேதனை விதிக்கப்பட்டு விட்டது; அன்றியும், எவனை அல்லாஹ் இழிவுபடுத்துகின்றானோ அவனை கண்ணியப்படுத்துபவன் எவனுமில்லை; நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியதைச் செய்கிறான்". (அல்குர்ஆன் 22:18)

மேலும், "(நபியே!) நீர் பார்க்கவில்லையா? வானங்களிலும் பூமியிலும் உள்ளவையும், பறவைகள் (விண்ணில் தங்கள்) இறக்கைகளை விரித்(துப் பறந்)த வண்ணமாக நிச்சயமாக அல்லாஹ்வைத் தஸ்பீஹு செய்(து துதிக்)கின்றன; ஒவ்வொன்றும் தன் தொழுகையையும், (அல்லாஹ்வை) தஸ்பீஹு செய்யும் வழியையும் திட்டமாக அறிந்தே இருக்கிறது — அல்லாஹ்வும் அவை செய்பவற்றை நன்கறிந்திருக்கிறான்." (அல்குர்ஆன் 24:41)

ஒரு இறை விசுவாசி ஒரே திசையில் ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் வணிகக்கூட்டத்திற்கு ஒப்பானதாக இவ்வுலகைக் காண்கிறான். அவனும் அக்கூட்டம் செல்லும் திசையிலேயே பயணிக்க ஆரம்பிக்கிறான். அது அவனை சந்தோசப்படுத்துவதோடு, அவனின் இருப்பையும் உறுதிசெய்கின்றது. ஏனெனில் வணிகக் கூட்டத்தில் செல்பவர்கள் ஒருவர் இன்னொருவருக்கு உதவி செய்வர். போகும் இடமெல்லாம் இவரும் நம்முடன் தான் வருகிறாரா என அடிக்கடி

இறைக்கோட்பாட்டிற்கான ஆதாரம்

"எனது கணிப்பின் இறைத்தன்மையின் பிரதிபலிப்பு படி நாம் வாழும் இப்பூமியில்

எட்கர் மிட்செல்
சந்திரனில் ஆறாவது முறை கால்வைத்தவர்

இது அல்லாஹ்வின் படைப்பு

"இவ்விடயத்தில் நிச்சயம் மனிதர்களின் கருத்துக்கள் மாறவேண்டும். கட்டாயம் ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ்வின் வல்லமையையும், அவனின் அன்பைப் பெறும் விடயத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள

ஜேம்ஸ் இர்வின்
விண்வெளி வீரர்

மனிதனை அல்லாஹ் கண்ணியப்படுத்தியுள்ளமை.

இஸ்லாமிய மார்க்கம் என்பது அல்லாஹ்வின் சட்டக்கோர்வையாகும். எம்மைச் சூழ உள்ள இயற்கை அம்சங்களில் இதை நாம் கண்டுணர்ந்து கொள்ளலாம். அல்லாஹ்வின் ஏவல் காரணமாகத் தான் மலைகள், கடல்கள், கோள்கள், நட்சத்திரங்கள், இவ்வுலகிலுள்ள அணுக்கள் உட்பட அனைத்தும் ஓர் அமைப்பில் செல்கின்றன. இவை அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடப்பதனாலேயே இவ்வாறு செயல்படுகின்றன. ஆனால் மனிதன் இதற்கு விதிவிலக்காக இருக்கின்றான். அல்லாஹ் அவனுக்கு தேர்வுச் சுதந்திரத்தை வழங்கியதன் காரணமாக அவனுக்கு அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு செவிசாய்க்கும் அதே சமயம், அல்லாஹ்வுக்கு வழிபடாமல் தனக்கென ஓர் வழிமுறையை அமைத்துக்கொண்டு அதில் பயணிக்கவும் முடிகின்றது. ஆனால் —கவலைக்கிடமான அம்சம்- மனிதன் இரண்டாவது தேர்வையே அதிகமாக தன் வழியாக எடுத்துக்கொள்கிறான்.

டெபோரா பாட்டர்
அமெரிக்க பத்திரிகையாளர்

உலகம் படைக்கப்பட்டதன் நோக்கம்.

1- அல்லாஹ் ஒருவன் தான் என்பதற்கான ஆதாரம்.

விசாலமான இப்பிரபஞ்சமும், அதிலுள்ள அனைத்துப் படைப்பினங்களும் அல்லாஹ்வின் அபார ஆற்றலுக்கும், பரிபூரண படைப்புத் திறனுக்கும் பெரும் சான்றாகத் திகழ்கின்றன. அவை ஒவ்வொன்றினது போக்கும், அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்பதைத் தெளிவாக நினைவுபடுத்திக் கொண்டே இருக்கின்றன. அவனே இறைவன், அவனைத் தவிர வேறு இறைவன் கிடையாது. "மேலும், அவன் உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பதும், பின்பு நீங்கள் மனிதர்களாக (பூமியின் பல பாகங்களில்) பரவியதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்."

"இன்னும், நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும்; உங்களுக்கிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்; சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக, இதில் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன."

"மேலும் வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதும்; உங்களுடைய மொழிகளும் உங்களுடைய நிறங்களும் வேறுபட்டிருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் கற்றறிந்தோருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன."

"இன்னும், இரவிலும் பகலிலும், உங்களுடைய (ஓய்வும்) உறக்கமும்; அவன் அருளிலிருந்து நீங்கள் தேடுவதும் அவனுடைய அத்தாட்சிகளினின்றும் உள்ளன - செவியுறும் சமூகத்திற்கு நிச்சயமாக இதில் அத்தாட்சிகள் இருக்கின்றன."

"அச்சமும், ஆசையும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும்; பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து, அதைக் கொண்டு பூமியை - அது (வரண்டு) இறந்த பின்னர் உயிர்ப்பிப்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன; நிச்சயமாக அதில் சிந்தித்துணரும் சமூகத்திற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன."

"வானமும், பூமியும் அவனுடைய கட்டளையினால் நிலைபெற்று நிற்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன; பின்னர் ஓர் அழைப்பைக் கொண்டு உங்களை அழைத்த உடன் நீங்கள், பூமியிலிருந்து வெளிப்பட்டு வருவீர்கள்."

"வானங்களிலும் பூமியிலும் இருப்பவை எல்லாம் அவனுக்கே உரியவை - எல்லாம் அவனுக்கே கீழ்படிந்து நடக்கின்றன". (அல்குர்ஆன் 30:20-26)

மேலும், "(நபியே!) நீர் கூறுவீராக: "எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே உரியது; இன்னும் அவன் தேர்ந்தெடுத்துக் கொண்ட அவனுடைய அடியார்கள் மீது ஸலாம் உண்டாவதாக! அல்லாஹ் மேலானவனா? அல்லது அவர்கள் (அவனுக்கு) இணையாக்குபவை (மேலானவை)யா?"

"அன்றியும், வானங்களையும் பூமியையும் படைத்து, உங்களுக்கு வானத்திலிருந்து மழையை இறக்கி வைப்பவன் யார்? பின்னர் அதைக் கொண்டு செழிப்பான தோட்டங்களை நாம் முளைக்கச் செய்கிறோம். அதன் மரங்களை முளைக்கச் செய்வது உங்களால் முடியாது. (அவ்வாறிருக்க) அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! ஆயினும் அவர்கள் (தம் கற்பனை தெய்வங்களை அல்லாஹ்வுக்கு) சமமாக்கும் மக்களாகவே இருக்கிறார்கள்.

இந்தப் பூமியை வசிக்கத் தக்க இடமாக ஆக்கியவனும், அதனிடையே ஆறுகளை உண்டாக்கியவனும்; அதற்காக (அதன் மீது அசையா) மலைகளை உண்டாக்கியவனும் இரு கடல்களுக்கிடையே தடுப்பை உண்டாக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? இல்லை! (எனினும்) அவர்களில் பெரும்பாலோர் அறியாதவர்களாக இருக்கின்றனர்."

"கஷ்டத்திற்குள்ளானவன் அவனை அழைத்தால் அவனுக்கு பதில் கொடுத்து, அவன் துன்பத்தை நீக்குபவனும், உங்களை இப்பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கியவனும் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? (இல்லை) எனினும் (இவையெல்லாம் பற்றி) நீங்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகக் குறைவே யாகும்."

கரையிலும் கடலிலுமுள்ள இருள்களில் உங்களை நேரான வழியில் செலுத்துபவன் யார்? மேலும், தன்னுடைய "ரஹ்மத்" என்னும் அருள் மாரிக்கு முன்னே நன்மாராயம் (கூறுவன) ஆக காற்றுகளை அனுப்பி வைப்பவன் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா? - அவர்கள் இணை வைப்பவற்றைவிட அல்லாஹ் மிகவும் உயர்வானவன்."

"முதன் முதலில் படைப்பைத் துவங்குபவனும், பின்னர் அதனை மீண்டும் உண்டாக்கி வைப்பவனும் யார்? வானத்திலிருந்தும், பூமியிலிருந்தும் உங்களுக்கு ஆகாரம் அளிப்பவன் யார்? அல்லாஹ்வுடன் (வேறு) நாயன் இருக்கின்றானா?

2- இப்பிரபஞ்சத்தை மனிதனுக்கு வசப்படுத்திக் கொடுத்தல்.

உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும், உயிரினங்களும் மனிதனின் இசைவாக்கத்திற்கு அமைய படைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் மனிதனுக்கு அவற்றை தம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளான். ஏனெனில் அல்லாஹ்வின் படைப்புக்களில் உயர்ந்த, கண்ணியமிக்க படைப்பாக அல்லாஹ் மனிதனைத்தான் படைத்துள்ளான். அவனின் உயர்வும், கண்ணியமும் நிலையானதாய் இருப்பதற்காக அவனை பூரண படைப்பாகவும், பூமியை பரிபாலனம் செய்யும் திறனையும் வழங்கியுள்ளான். இவ் இசைவாக்கம், அல்லது வசப்படுத்தல் என்பதை இரு கருத்துக்கள் அடிப்படையில் நோக்கலாம். ஒன்று அல்லாஹ்வையும், அவனது உயர்வு, கண்ணியம், அந்தஸ்து என்பவற்றையும் மனிதன் அறிந்துகொள்ளல், மற்றொன்று தனக்கு இசைவாக்கமடையும் பொருள்களை விட தான் உயர்வானவன், ஆற்றல் மிக்கவன் என்பதை மனிதனே விளங்கிக்கொள்ளுதல். அல்லாஹ் கூறுகிறான், "அவனே வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும் தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான்; அதில் சிந்திக்கும் சமூகத்தாருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன". *(அல்குர்ஆன் 45:13)*

மேலும், "அல்லாஹ் எத்தகையவன் என்றால் அவன் தான் வானங்களையும், பூமியையும் படைத்து வானத்திலிருந்து மழையையும் பொழியச் செய்து அதைக் கொண்டு கனிவர்க்கங்களையும் உங்களுக்கு - ஆகாரமாக வெளிப்படுத்தித் தன் கட்டளையினால் கடலில் செல்லுமாறு கப்பலை உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்தும், ஆறுகளையும் உங்களுக்கு வசப்படுத்தித்தந்தான்."

"(தவறாமல்), தம் வழிகளில் ஒழுங்காகச் செல்லுமாறு சூரியனையும் சந்திரனையும் அவனே உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். மேலும், அவனே இரவையும் பகலையும் உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான்."

"(இவையன்றி) நீங்கள் அவனிடம் கேட்ட யாவற்றிலிருந்தும் அவன் உங்களுக்குக் கொடுத்தான்; அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணிப்பீர்களாயின் அவற்றை நீங்கள் எண்ணி முடிக்க முடியாது! நிச்சயமாக மனிதன் மிக்க அநியாயக்காரனாகவும்,

நபித்துவத்தின் அடையாளங்களில் ஒன்று

பாலைவனத்தில் எழுதப்படிக்கத் தெரியாமல் பிறந்த ஒருவரால் எப்படி இப்பிரபஞ்சத்தின் அற்புதங்களை அல்குர்ஆன் வாயிலாகக் கூற முடியும்? அவற்றில் பலவற்றை இன்றைய அறிவியல் உலகு இன்னமும் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொண்டு தான் வருகின்றன. நிச்சயமாக இது அல்லாஹ்வின் வார்த்தைகளாகத் தான் இருக்க முடியும்.

டெபோரா பாட்டர்
அமெரிக்க பத்திரிகையாளர்

3- அல்லாஹ்விடமே மீண்டுச் செல்லல்.

வானங்களிலும், பூமியிலும் உள்ள அனைத்துப் படைப்பினங்களும் (மனிதன் உருவாக்கியவைகளைத் தவிர) அழிந்து போனதன் பின்னர் திரும்பவும் உருவாக்கப்படும் என்பது இப்படைப்புக்களின் சுற்றோட்டத்திலிருந்தே அறிந்துகொள்ள முடிகின்றது. இவற்றை முதல் முதலாக உருவாக்கிய அல்லாஹ்விற்கு அழிந்த பின்னர் திரும்பவும் மீட்டெடுப்பது இயலாத காரியமா என்ன??! அல்லாஹ் கூறுகிறான், "அவனே படைப்பைத் துவங்குகின்றான்; பின்னர் அவனே அதை மீட்டுகிறான்; மேலும், இது அவனுக்கு மிகவும் எளிதேயாகும்". (அல்குர்ஆன் 30:27)

வானங்கள் மற்றும், பூமி ஆகியன மனிதனை விடவும் பிரம்மாண்டமான படைப்பாகும். அதையும் அழிந்த பின் அல்லாஹ் திரும்பவும் உருவாக்கிவிடுவான். அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக வானங்களையும், பூமியையும் படைப்பது, மனிதர்களைப் படைப்பதை விட மிகவும் பெரிதாகும் - எனினும் மனிதர்களில் பெரும்பாலோர் அறிய மாட்டார்கள்". (அல்குர்ஆன் 40:57)

மேலும், "(இவ்வேதத்தை அருளிய) அல்லாஹ் எத்தகையவனென்றால் அவன் வானங்களைத் தூணின்றியே உயர்த்தியுள்ளான்; நீங்கள் அவற்றைப் பார்க்கிறீர்கள்; பின்னர் அவன் அர்ஷின்மீது அமைந்தான்; இன்னும் அவனே சூரியனையும் சந்திரனையும் (தன்) அதிகாரத்திற்குள் வைத்திருக்கின்றான்; (இவை) அனைத்தும் குறிப்பிட்ட காலத்திட்டப்படியே நடந்து வருகின்றன; அவனே (எல்லாக்) காரியத்தையும் நிர்வகிக்கின்றான் - நீங்கள் உங்கள் இறைவனைச் சந்திப்பதை உறுதி கொள்ளும் பொருட்டு, அவன் (இவ்வாறு தன்) வசனங்களை விளக்குகின்றான்". (அல்குர்ஆன்

உண்மை ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

"இத்தகைய படைப்புக்களின் வகைகளைப் பார்த்தும் நீ அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளாமல் இருப்பது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. இப்படைப்புக்கள் எனது ஈமானை பலப்படுத்திவிட்டன. நிச்சயம் இது பற்றி தெளிவாக விபரிக்கும் வசனங்கள் இங்கு இருக்கத் தான்



ஜான் க்ளென்

அமெரிக்காவின் முதலாவது விண்வெளி வீரர்

இப்பிரபஞ்சத்தில் நீ எங்கு இருக்கின்றாய்?

இப்புகைப்படம் அண்டசராசரத்தின் மிகப்பெரிய பரப்பை எடுத்துக்காட்டுகின்றது. இதில் மிகவும் சிறிய அல்லது சிறு புள்ளிவடிவில் தென்படுவதே பால்வெளி. அதில் தான் எமது சூரியக் குடும்பம் அமையப் பெற்றுள்ளது. இது தவிர எமது பிரபஞ்சத்தில் 10,000,000,000 ஐயும் விட அதிகமான சூரியன்கள் காணப்படுகின்றன. ஒரு சூரியன் நாம் வாழும் பூமியை விட 1,300,000 மடங்கு பெரிதாகும். இப்பூமி உன் வீட்டை விட —வீட்டின் அளவு 500 மீ என வைத்துக்கொண்டால்- 1,020,144,000,000 மடங்கு பெரிதாகும். அப்படியாயின் உன் வீடு உன்னை விட எத்தனை மடங்கு பெரிதாக இருக்கும்??!





கடலின் ஒரு துளி.

இது வரை கண்டுபிடிக்கப்பட்ட நட்சத்திரங்களில் மிகவும் பெரியது VY கனிஸ் மஜோரிஸ் எனப்படும் நட்சத்திரமாகும். இது பூமியை விட்டும் 5000 ஒளியாண்டு தொலைவில் இருக்கின்றது. இது சூரியனை விட பருமனில் 9,261,000,000 மடங்கு பெரிதாகும். சூரியன் பூமியை விட 1,300,000 மடங்கு பெரிதாகும்.

மனிதன் கண்ணியம் பொருந்திய படைப்பாவான்.

இப்பிரபஞ்சம் எவ்வளவு தான் பிரம்மாண்டமாக இருந்தாலும் அதைவிட சிறிய படைப்பான மனிதனுக்கு அதை அல்லாஹ் வசப்படுத்திக் கொடுத்துள்ளான். மனிதனுக்கு ஏற்றவாறு அது இசைந்து கொடுக்கவும் செய்துள்ளான். "அவனே வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும் தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான்; அதில் சிந்திக்கும் சமூகத்தாருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன". (அல்குர்ஆன் 45:13)

இது ஏனைய படைப்பினங்களை விட மனிதனை கண்ணியப்படுத்துவதாக அமைந்துள்ளது. அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம்; இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம்". (அல்குர்ஆன் 17:70)

அல்லாஹ்வால் படைக்கப்பட்ட முதல் மனிதர், ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களாவர். அவர்களைப் படைத்த விதம் பற்றியும், ஷைத்தானின் தூண்டுதலால் அவர்கள் சுவனத்தை விட்டு வெளியேற்றப்பட்டது பற்றியும் தெளிவான சம்பவத்தை அல்லாஹ் எமக்கு சொல்லித் தருகின்றான். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தான் செய்த தவறுக்காக பின்னர் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடினார்கள். அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக நாமே உங்களைப் படைத்தோம்; பின்பு உங்களுக்கு உருக்கொடுத்தோம். அதன்பின், "ஆதமுக்கு ஸுஜூது செய்யுங்கள் (சிரம் பணியுங்கள்)" என்று மலக்குகளிடம் கூறினோம்; இப்லீஸைத் தவிர (மற்ற மலக்குகள்) யாவரும் (அவருக்குத்) தலைவணக்கம் செய்தார்கள்; அவன் (மட்டும்) தலைவணக்கம் செய்தவர்களில் ஒருவனாக இருக்கவில்லை."

"நான் உனக்குக் கட்டளையிட்ட போது, நீ ஸஜ்தா செய்யாதிருக்க உன்னைத் தடுத்தது யாது?" என்று அல்லாஹ் கேட்டான்; "நான் அவரை (ஆதமை)விட மேலானவன் - என்னை நீ நெருப்பினால் படைத்தாய், அவரை களிமண்ணால் படைத்தாய்" என்று (இப்லீஸ் பதில்) கூறினான்."

"இதிலிருந்து நீ இறங்கி விடு; நீ பெருமை கொள்வதற்கு இங்கு இடமில்லை; ஆதலால் (இங்கிருந்து) நீ வெளியேறு – நிச்சயமாக நீ சிறுமை அடைந்தோரில் ஒருவனாகி விட்டாய்" என்று அல்லாஹ் கூறினான்."

"(இறந்தவர்) எழுப்பப்படும் நாள் வரை எனக்கு அவகாசம் கொடுப்பாயாக" என அவன் (இப்லீஸ்) வேண்டினான்."

"(அதற்கு அல்லாஹ்) "நிச்சயமாக நீ அவகாசம் கொடுக்கப்பட்டவர்களில் ஒருவனாவாய்" என்று கூறினான்."

"(அதற்கு இப்லீஸ்) "நீ என்னை வழி கெட்டவனாக (வெளியேற்றி) விட்டதன் காரணத்தால், (ஆதமுடைய சந்ததியரான) அவர்கள் உன்னுடைய நேரான பாதையில் (செல்லாது தடுப்பதற்காக அவ்வழியில்) உட்கார்ந்து கொள்வேன்" என்று கூறினான்.

"பின் நிச்சயமாக நான் அவர்கள் முன்னும், அவர்கள் பின்னும், அவர்கள் வலப்பக்கத்திலும், அவர்கள் இடப்பக்கத்திலும் வந்து (அவர்களை வழி கெடுத்துக்) கொண்டிருப்பேன்; ஆதலால் நீ அவர்களில் பெரும்பாலோரை (உனக்கு) நன்றி செலுத்துவோர்களாகக் காண மாட்டாய்" (என்றும் கூறினான்)."

"அதற்கு இறைவன், "நீ நிந்திக்கப்பட்டவனாகவும், வெருட்டப்பட்டவனாகவும் இங்கிருந்து வெளியேறி விடு – அவர்களில் உன்னைப் பின்பற்றுவோரையும், உங்கள் யாவரையும் கொண்டு நிச்சயமாக நரகத்தை நிரப்புவேன்" என்று கூறினான்."

"(பின்பு இறைவன் ஆதமை நோக்கி:) "ஆதமே! நீரும், உம் மனைவியும் சுவர்க்கத்தில் குடியிருந்து, நீங்கள் இருவரும் உங்கள் விருப்பப்பிரகாரம் புசியுங்கள்; ஆனால் இந்த மரத்தை (மட்டும்) நெருங்காதீர்கள்; (அப்படிச் செய்தால்) நீங்கள் இருவரும் அநியாயம் செய்தவர்கள் ஆவீர்கள்" (என்று அல்லாஹ் கூறினான்)."

"எனினும் அவ்விருவருக்கும் மறைந்திருந்த அவர்களுடைய (உடலை) மானத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தும் பொருட்டு ஷைத்தான் அவ்விருவரின் உள்ளங்களில் (தவறான எண்ணங்களை) ஊசலாடச் செய்தான்; (அவர்களை நோக்கி, "அதன் கனியை நீங்கள் புசித்தால்) நீங்கள் இருவரும் மலக்குகளாய் விடுவீர்கள், அல்லது (இச்சுவனபதியில்) என்றென்னும் தங்கிவிடுவீர்கள் என்பதற்காகவேயன்றி (வேறெதற்கும்,) இந்த மரத்தை விட்டும் உங்களை உங்கள் இறைவன் தடுக்கவில்லை" என்று கூறினான்."

"நிச்சயமாக நான் உங்களிருவருக்கும் நற்போதனை செய்பவனாக இருக்கிறேன்" என்று சத்தியம் செய்து கூறினான்."

"இவ்வாறு, அவன் அவ்விருவரையும் ஏமாற்றி, அவர்கள் (தங்கள் நிலையிலிருந்து) கீழே இறங்கும்படிச் செய்தான் – அவர்களிருவரும் அம்மரத்தினை (அம்மரத்தின் கனியை)ச் சுவைத்தபோது – அவர்களுடைய வெட்கத்தலங்கள் அவர்களுக்கு வெளியாயிற்று; அவர்கள் சுவனபதியின் இலைகளால் தங்களை மூடிக்கொள்ள முயன்றனர்; (அப்போது) அவர்களை அவர்கள் இறைவன் கூப்பிட்டு: "உங்களிருவரையும்

மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள்

"அனைத்து மனிதர்களும் சமமான உரிமைகளைப் பெற்று, சுதந்திரமாகவே பிறக்கின்றனர். அவர்களுக்கு பகுத்தறிவும், உள்ளமும் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் அவர்களுக்கு பிறருடன் சகோதர

மனித உரிமைகள் பிரகடனத்தின் முதலாவது சரத்து- மனித உரிமைகள் அமைப்பு

அம்மரத்தை விட்டும் நான் தடுக்கவில்லையா? நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு பகிரங்கமான பகைவன் என்று நான் உங்களுக்கு சொல்லவில்லையா?" என்று கேட்டான்."

"அதற்கு அவர்கள்: "எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம் - நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்" என்று கூறினார்கள்."

"(அதற்கு இறைவன், "இதிலிருந்து) நீங்கள் இறங்குங்கள் - உங்களில் ஒருவர் மற்றவருக்குப் பகைவராயிருப்பீர்கள்; உங்களுக்கு பூமியில் தங்குமிடம் இருக்கிறது; அதில் ஒரு (குறிப்பிட்ட) காலம் வரை நீங்கள் சுகம் அனுபவித்தலும் உண்டு" என்று கூறினான்."

"அங்கேயே நீங்கள் வாழ்ந்திருப்பீர்கள்; அங்கேயே நீங்கள் மரணமடைவீர்கள்; (இறுதியாக) நீங்கள் அங்கிருந்தே எழுப்பப்படுவீர்கள்" என்றும் கூறினான். (அல்குர்ஆன் 07:11-25)

அல்லாஹ் மனிதனை அவனது தாயின் வயிற்றில் இருக்கும் போதே மிகவும் அழகானதோர் தோற்றத்தில் படைத்து, அவனுக்கு உயிரையும் கொடுத்தான். பின்னர் அவனை எதையும் கேட்க முடியுமான, எதையும் பார்க்க முடியுமான, பேசக்கூடிய, அசையக்கூடிய ஓர் பூரண படைப்பாக மாற்றினான். *"(இவ்வாறு படைத்தவனான) அல்லாஹ் பெரும் பாக்கியமுடையவன் - (படைப்பாளர்களில் எல்லாம்) மிக அழகான படைப்பாளன்"* (அல்குர்ஆன் 23:14)

இவ்வாறு படைக்கப்பட்ட மனிதனுக்கு, தான் எதையெல்லாம் கட்டாயமாக அறிந்து வைத்திருக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் பூரணமாகக் கற்றுக்கொடுத்துள்ளான். அவனுக்கு, ஏனைய படைப்பினங்களுக் கொடுத்திராத பல சிறப்பம்சங்களைக் கொடுத்துள்ளான். பகுத்தறிவு, சிந்திக்கும் திறன், தெளிவு, பேச்சாற்றல், சீரான கட்டமைப்பு, அழகான தோற்றம், கௌரவமான அந்தஸ்து, சமமான உடல்நிலை, தன் சிந்தனைத் திறனால் தன் சக்திக்கு உட்பட்ட எதையும் உருவாக்கும் ஆற்றல் போன்ற பல சிறப்பம்சங்களை அவனுக்கு வழங்கி, கௌரவித்துள்ளான். இதை ஆண், பெண் என இருபாலாருக்கும் சமமாகத் தான் வழங்கியுள்ளான். இவ்விருபாலாருக்கும்

மத்தியில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற வேற்றுமைக்க இடமில்லை.

- அல்லாஹ் முதல் மனிதரை தன் கரத்தினாலேயே படைத்தான். இதுவே மனிதனுக்கான மிகப் பெரிய கௌரவமாகும். அல்லாஹ் கூறுகிறான், "இப்லீஸே! நான் என்னுடைய கைகளால் படைத்தவருக்கு ஸுஜூது செய்வதை விட்டும் உன்னைத் தடுத்தது எது? பெருமையடிக்கிறாயா? அல்லது நீ உயர்ந்தவர்களில் (ஒருவனாக) ஆகிவிட்டாயா?" என்று (அல்லாஹ்) கேட்டான்". *(அல்குர்ஆன் 38:75)*
- அதுவும் அழகான தோற்றத்தில் படைத்துள்ளான். அதைப் பற்றி குறிப்பிடுகையில், "திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம்". *(அல்குர்ஆன் 95:04)*

மேலும், "அன்றியும் உங்களை உருவாக்கி, உங்கள் உருவங்களையும் அழகாக்கினான்; அவனிடம் தாம் (யாவருக்கும்) மீளுதல் இருக்கிறது". *(அல்குர்ஆன் 64:03)*

- அவ்வாறே மலக்குமார்கள் அனைவரையும் முதல் மனிதரான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு சிரம்பணிய வைத்தும் அல்லாஹ் மனித வர்க்கத்தை கௌரவப்படுத்தியுள்ளான்.

"இன்னும், (நினைவு கூர்வீராக!) நாம் மலக்குகளிடம் "ஆதமுக்கு நீங்கள் ஸுஜூது செய்யுங்கள்" என்று கூறிய போது, இப்லீஸை தவிர அவர்கள் ஸுஜூது செய்தார்கள்". *(அல்குர்ஆன் 17:61)*

- மனிதனுக்கு பகுத்தறிவு, சிந்திக்கும் ஆற்றல், கேட்கும் திறன், பார்க்கும் திறன், மேலும் இதர ஐம்புலன்களையும் கொடுத்து, அவனை கௌரவித்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான், "உங்கள் மாதாக்களின் வயிறுகளிலிருந்து நீங்கள் ஒன்றுமே அறியாதவர்களாக இருந்த நிலையில் உங்களை அல்லாஹ் வெளிப்படுத்துகிறான்; அன்றியும் உங்களுக்குச் செவிப்புலனையும், பார்வைகளையும், இதயங்களையும் - நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு - அவனே அமைத்தான்." *(அல்குர்ஆன் 16:78)*
- அல்லாஹ் மனிதனுக்கு தன்னிடமுள்ள உயிர்களில் ஒன்றைக் கொடுத்தான். இதன் மூலம் மனிதன் ஆண்மீகத்தை தன்னிடம் தக்கவைத்துக் கொண்டுள்ளான். அல்லாஹ் கூறுகிறான், "நான் அவரைச் செவ்வைப்படுத்தி, எனது ஆவியிலிருந்து அவருக்குள் ஊதிய பொழுது: அவருக்கு நீங்கள் விழுந்து ஸுஜூது செய்யுங்கள்" (எனக் கூறினான்)". *(அல்குர்ஆன் 38:72)*

இதுவே அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள மிகப்பெரிய கௌரவமாகும்.

எமது குறிக்கோல்

"அல்லாஹ் தன் அடியார்களில் தான் நாடியோரை அவனை வணங்குவதன் அழைப்பதற்காய் எம்மை அனுப்பியுள்ளான். உலக நெருக்கடியிலிருந்து விசாலமான வாழ்வின் பக்கமும், பல வகையான மத வழிபாடுகளிலிருந்து நீதமான இஸ்லாமிய மார்க்கத்தின் பக்கமும் நாம்

ரபீஃ இப்னு ஆமிர்

நபியவர்களின் தோழர்களில் ஒருவர்

இதனால் தான் ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு மிகவும் வாஞ்சையுடனும், கண்ணியத்துடனும் நடந்துகொள்ள வேண்டும். இது இப்படியிருக்க, அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப் பெற்ற ஓர் உயிர் மீது இன்னொருவர் எப்படி அத்து மீறி நடந்துகொள்ள முடியும்??!!

இத்தகைய கௌரவம் பொருந்திய மனிதனைத் தான், -மலக்குகளும், ஜின்களும் இருக்கும் அதே சமயம்- தனது பிரதிநிதிகளாக இவ்வுலகுக்கு அல்லாஹ் தேர்ந்தெடுத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான், "(நபியே) இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி "நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்" என்று கூறியபோது, அவர்கள் "(இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப்போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார்கள்; அ(தற்கு இறை)வன் "நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" எனக் கூறினான்". (அல்குர்ஆன் 02:30)

அல்லாஹ் ஏவியவைகளுக்கு மாறு செய்யாத, எப்போதும் அல்லாஹ்வை நினைவு கூர்ந்த வண்ணமும், அவனை வணங்கிக் கொண்டும் இருக்கின்ற மலக்குகளை விடவும், அல்லாஹ் மனிதனுக்கு வழங்கியுள்ள மாபெரும் கௌரவம் அவனை தன் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுத்துள்ளமை தான்.

• அல்லாஹ் இப்பிரபஞ்சத்தில் இருக்கும் வானங்கள், பூமி, அவை இரண்டிற்கும் இடையில் உள்ள சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கோள்கள் போன்ற அனைத்தையும் மனிதனுக்கு இசைவாக்கமடையும் வண்ணம் படைத்துள்ளான். இதைப் பற்றி கூறும் போது, "அவனே வானங்களிலுள்ளவை, பூமியிலுள்ளவை அனைத்தையும் தன் அருளால் உங்களுக்கு வசப்படுத்திக் கொடுத்திருக்கிறான்; அதில் சிந்திக்கும் சமூகத்தாருக்கு நிச்சயமாகப் பல அத்தாட்சிகள் உள்ளன." (அல்குர்ஆன் 45:13)

எல்லா படைப்புக்களை விடவும் உயர்ந்து காணப்படும் இம்மனித இனத்துக்கு பிற படைப்பினங்களுக்கு தலை வணங்க வேண்டிய அவசியத்தை அல்லாஹ் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இதுவே அல்லாஹ் மனித இனத்துக்கு வழங்கிய சிறந்த விடுதலையாகும். ஆனால் பிறருக்கு தலை வணங்கக் கூடாத மனிதன் அல்லாஹ்வுக்கு மாத்திரம் தான் தலை வணங்க வேண்டும். ஏனெனில் மனிதனை இவ்வளவு உயர்வானவனாக மாற்றியவன் அல்லாஹ் மாத்திரம் தான். அல்லாஹ்வுக்கு தலை வணங்குவது பிறரை வழிபடுவதை விட்டும் தனக்குக் கிடைத்த பெறும் விடுதலையாக மனிதன் கருத வேண்டும். இதனால் தான் அல்லாஹ் தனக்கும், தனது அடியானுக்கும் மத்தியில் உதவியாளர்களை வைத்துக் கொள்வதைத் தடை செய்துள்ளான். ஆனால் சிலர் அல்லாஹ்வுக்கும், அவர்களுக்கும் மத்தியில் சில இடைத்தரகர்களை ஏற்படுத்திக் கொண்டு, அல்லாஹ்வுக்குக் கொடுக்க வேண்டிய அனைத்து கடவுள் தன்மைகளையும் இவ் இடைத்தரகர்களுக்குக் கொடுக்கின்றனர். தனக்கும் தனது அடியார்களுக்கு மத்தியிலும் எவ்வித

தரகர்களும் கூடாதென இம்மனிதனை அல்லாஹ் தானே உயர்வாக்கியுள்ளான்.. அல்லாஹ் கூறுகிறான், "அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் பாதிரிகளையும், தம் சந்நியாசிகளையும் மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங்களாக்கிக் கொள்கின்றனர்; ஆனால் அவர்களே ஒரே இறைவனைத் தவிர (வேறெவரையும்) வணங்கக்கூடாதென்றே கட்டளையிடப்பட்டுள்ளார்கள்; வணக்கத்திற்குரியவன் அவனன்றி வேறு இறைவன் இல்லை - அவன் அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் மிகவும் பரிசுத்தமானவன்". (அல்குர்ஆன் 09:31)

அனைத்துக் காரியங்களும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறுகின்றன என்ற

இடைத்தரகர்கள் கிடையாது.

"ஒரு முக்கியமான விடயம். இறைவனுக்கும் அடியார்களுக்கும் மத்தியில் எவ்வித இடைத்தரகர்களும்

ஏடியென் டெனியா

பிரெஞ்சு சிந்தனையாளர் மற்றும் ஓவியர்

இஸ்லாத்தின் ஆறாவது நம்பிக்கைக் கோட்பாட்டை ஓர் மனிதன் உறுதியாக ஏற்றுக்கொள்ளும் போது, எதிர்காலத்தில் தனக்கு ஏற்படும் கவலைகள், பயம், நிராசை போன்றவற்றிலிருந்து முற்று முழுதாக விடுதலையடைகின்றான். இது ஒரு முஃமினுக்கு நம்பிக்கையையும், பாதுகாப்பையும் வழங்குகின்றது. தான் ஓர் காரியத்தை செய்ய முனைந்து, அது கைகூடாமல் போகும் போது ஏற்படும் கவலை, ஏக்கம், விரக்தி போன்றவை அவனிடமிருந்து நீங்குகின்றது. ஏனெனில் இவை அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து தான் தனக்குக் கிடைக்கின்றன என்ற அவனின் உறுதியன நம்பிக்கை அவனை மனசஞ்சலத்திருந்து பாதுகாத்துவிடுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "பூமியிலோ, அல்லது உங்களிலோ சம்பவிக்கிற எந்தச் சம்பவமும் - அதனை நாம் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் இல்லாமலில்லை; நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதானதேயாகும்". (அல்குர்ஆன் 57:22)

இவ்வாறு ஈமான் கொள்வதானது உள்ளத்தை எப்போதும் சமநிலையில் வைத்துக் கொள்ளவும்,

நிறைந்த மனநிம்மதியைப் பெற்றுத் தரவும் உதவுகின்றது. தனக்குக் கிடைக்கும் எவ்வித அருட்கொடைகளும் தன்னை பெருமைக் காரனாக மாற்றிவிடவோ, எதுவுமே கிடைக்காத போது தன்னை ஏமாற்றமடைந்த கோழையாக மாற்றிவிடவோ ஈமான் இடமளிக்கமாட்டாது.

- மனிதனுக்குப் பகுத்தறிவை அல்லாஹ் வழங்கியதானது ஆய்விலும், சிந்தனைத் திறனிலும் அவனை உச்சத்துக்கு கொண்டு சென்றுள்ளது. இவற்றைக் கொண்டு ஆய்வுகள் மேற்கொள்ளுமாறும், படிப்பினைகளைப் பெறுமாறும் அல்லாஹ் அவனுக்கு ஏவியுள்ளான். வானங்கள் மற்றும் பூமியைப் பற்றி ஆய்வுகள் செய்து, அறிவியல் ரீதியிலான ஆதாரங்களைத் திரட்டுவது இச் சிந்தனைத் திறனுக்கும், பகுத்தறிவிற்கும் இருக்கும் கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான், *"வானங்களிலும், பூமியிலும் இருப்பவற்றைக் கவனித்துப் பாருங்கள்" என்று (நபியே!) அவர்களிடம் கூறுவீராக; எனினும் ஈமான் கொள்ளாத மக்களுக்கு (நம்) அத்தாட்சிகளும், எச்சரிக்கைகளும் பலனளிக்க மாட்டாது."* *(அல்குர்ஆன் 10:101)*

பகுத்தறிவை கௌரவமாக நினைக்குமாறும், அதனை அடிக்கடி பயன்படுத்தி, பிடிவாதம், பிறரை அச்சொட்டி நடத்தல் போன்ற விடயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் அல்லாஹ் மனிதனுக்கு ஏவியுள்ளான். பகுத்தறிவு இருந்தால் தான் ஒருவருக்கு இஸ்லாமியக் கடமைகளை செய்வதற்கான பக்குவம் கிடைக்கின்றது. அவ்வாறே ஆழ்ந்து சிந்திக்கும் போது அல்லாஹ்வின் ஏகத்துவத்தை அறிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் பகுத்தறிவு எல்லை தாண்டி சென்று, அதில் ஏதாவது குலருபடிகள், கருத்து வேறுபாடுகள் இடம்பெறுகின்ற போது அல்லாஹ் அதை பரிசீலனை செய்வதற்காக வேண்டி அழைப்பு விடுப்பான். அல்லாஹ் கூறுகிறான், *"நீங்கள் உண்மையுடையோராக இருந்தால் உங்களுடைய சான்றை சமர்ப்பியுங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!* *(அல்குர்ஆன் 02:111)*

அவ்வாறே கட்டுக்கதைகள், மூடநம்பிக்கைகள், மாயாஜாலங்கள், ஜின்வசிய வைத்தியங்கள் போன்ற அனைத்தையும் பகுத்தறிவு தகர்த்து விடுகின்றது.

ஒவ்வொரு மனிதனும் தான் செய்யும் செயல்களுக்கு தான் மாத்திரம் தான் பொறுப்புதாரியாக இருக்க முடியும். அதற்கு பிறரை காரணகர்த்தாவாக ஆக்க முடியாது. அவர்களுக்கு இவரின் விடயத்தில் எந்த தலையீடும் கிடையாது. அல்லாஹ் கூறுகிறான்,

"(மறுமை நாளில் தன்) சுமையைக் சுமக்கும் ஒருவன், வேறொருவனுடைய சுமையைச் சுமக்க மாட்டான்". *(அல்குர்ஆன் 35:18)*

ஆண்களுக்குக் கிடைக்கும் சமமான கௌரவம் தான் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும்.

மனித இனம் கௌரவமானது என்பது அதில் இருக்கும் ஆண்களை மாத்திரம் குறிக்கவில்லை. பெண்களையும் தான் குறிக்கின்றது. ஆண்களுக்குக் கிடைக்கும் அதே மதிப்பு, மரியாதை, உரிமைகள் எல்லாம் பெண்களுக்கும் சரிசமமாகக் கிடைக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், "கணவர்களுக்குப் பெண்களிடம் இருக்கும் உரிமைகள் போன்று, முறைப்படி அவர்கள்மீது பெண்களுக்கும் உரிமையுண்டு". (அல்குர்ஆன் 02:228)

மேலும், "முஃமினான ஆண்களும் முஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர்". (அல்குர்ஆன் 09:71)

மறுமை நாளில் கூட அல்லாஹ் கூலி வழங்கும் போது ஆண்களுக்கு ஒருவாறும், பெண்களுக்கு ஒருவாறும் வழங்க மாட்டான். அல்லாஹ் கூறுகிறான், "ஆதலால், அவர்களுடைய இறைவன் அவர்களுடைய இப்பிரார்த்தனையை ஏற்றுக் கொண்டான்; "உங்களில் ஆணோ, பெண்ணோ எவர் (நற்செயல் செய்தாலும்) அவர் செய்த செயலை நிச்சயமாக வீணாக்க மாட்டேன், (ஏனெனில் ஆணாகவோ, பெண்ணாகவோ இருப்பினும்) நீங்கள் ஒருவர் மற்றொருவரில் உள்ளவர் தாம்". (அல்குர்ஆன் 03:195)

மேலும், "ஆகவே, ஆணாயினும் சரி, பெண்ணாயினும் சரி, யார் ஈமான் கொண்டவர்களாக நற்கருமங்கள் செய்கிறார்களோ, அவர்கள் சுவனபதியில் நுழைவார்கள்; இன்னும் அவர்கள் இம்மியேனும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்.

சரிசமம்

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மாணவ மாணவியர்களுக்கு மத்தியில் (கழகங்களிலும், மாணவர் சங்கங்களிலும்) சம உரிமைகளைப் பேணும் திட்டத்தை 1964 ஜூலை 26ல் தான் தொடங்கியது.

உண்மையான அதிசயம்

நாம் அல்குர்ஆனின் சட்டங்களையும், முன்னர் வாழ்ந்த சமூகங்களின் சட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, எவ்வித சந்தேகமுமில்லாமல் ஓர் பாரிய முன்னேற்றத்தை எம்மால் பதிவு செய்ய முடிகின்றது. குறிப்பாக ஏதென்ஸ், ரோம் நாகரீகங்களில் பெண்களின் நிலை மிகவும் மோசமாகவே இருந்தது. அவர்கள் உயிரற்ற ஜடமாக கருதப்பட்டார்கள்.

ரோஜர் குராடி

பிரெஞ்சு தத்துவவியலாளர்

(அல்குர்ஆன் 04:124)

நிச்சயமாக அல்லாஹ் ஆண்களைப் போன்றே பெண்களையும் கௌரவாகப் படைத்துள்ளான். அவளுக்கும் இவ்வுலக வாழ்வில் பரிபூரண பொறுப்புக்களும், கடமைகளும் வழங்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பின்பற்றும் கட்டாயமும் அவர்களுக்கு இருக்கின்றது. ஆண்களைப் போன்றே மறுமையில் பெண்களும் சிறந்த கூலிகளையோ, அல்லது தண்டனைகளையோ பெற்றுக்கொள்வார்கள். அல்லாஹ் முதல் மனிதர்களான ஆதம் மற்றும் ஹவ்வா (அலைஹிஸ்ஸலாம்) இருவருக்கும் ஒரே மாதிரியான பணிகளையே செய்யுமாறு கட்டளையிட்டான். இதைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகையில், "மேலும் நாம், "ஆதமே! நீரும் உம் மனைவியும் அச்சுவனபதியில் குடியிருங்கள். மேலும் நீங்கள் இருவரும் விரும்பியவாறு அதிலிருந்து தாராளமாக புசியுங்கள்; ஆனால் நீங்கள் இருவரும் இம்மரத்தை மட்டும் நெருங்க வேண்டாம்; (அப்படிச் செய்தீர்களானால்) நீங்கள் இருவரும் அக்கிரமக்காரர்களில் நின்றும் ஆகிவிடுவீர்கள்" என்று சொன்னோம்". (அல்குர்ஆன் 02:35)

இச்சம்பவத்தில் சில மதங்களில் கூறப்பட்டுள்ளது போன்று ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சுவனத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கும், அவரின் சந்ததியினர் சபிக்கப்பட்டவர்களாக மாறுவதற்கும் ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காரண கர்த்தாவாக இருக்கவேயில்லை. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களே இதற்கு அடிப்படைக் காரணியாக இருந்ததாக அல்லாஹ் கூறுகிறான், "முன்னர், நாம்

மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்களில் பெண்களின் நிலை.

"ரோம் நகரில் ஓர் பெரும் மாநாடு நடைபெற்றது. அதில் பெண்கள் சம்பந்தமாகவும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் முடிவுகளாக அவள் உயிரற்ற ஜடம் என்றும், ஏனைய வாழ்வாதாரங்களை அவளால் பெற்றிட முடியாது எனவும், அவள் தீண்டத்தகாதவள், ஆகையால் அவள் மாமிசங்களை சாப்பிடவோ, சிரித்துப் பேசவோ உரிமையற்றவள் எனவும், அவளின் மொத்த நேரங்களை வணக்கவழிபாடுகளிலும், பணிவிடை செய்வதிலும் கழிக்கவேண்டுமெனவும் இருந்தது. இவையனைத்தையும் நடைமுறைபடுத்தும் முகமாக அவளின் வாயில் இரும்பினாலான பூட்டை அணிவித்தார்கள். இது தவிர மனிதர்களின் உள்ளங்களை பாழ்ப்படுத்துவதற்காக ஷைத்தான் இவளை பயன்படுத்துகிறான் என்னும் அடிப்படையில் பல உடல்

அவர்கள் பார்வையில் பெண்கள்

"இந்தியர்கள் பெண்களை வேறொரு கோணத்தில் நோக்கினர். பெண்களை விட தொற்றுநோய், மரணம், நெருப்பு, விஷம், பாம்புகள் போன்றன சிறந்தவை எனக் கருதினர். இவ்வுலகில் அவளின் வாழ்வு அவளின் கனவனின் வாழ்வோடு முடிந்து விடும். கனவன் மரணித்த பின்னர் எரிக்கப்படும் தருணத்தில் தானும் உடன்கட்டை ஏற வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் வாழ்நாள் பூராவும் அவளை சாபம் தீண்டிக்கொண்டே இருக்கும் எனும் நம்பிக்கையில் இவ்வாறு

ஆதமுக்கு நிச்சயமாக கட்டளையிட்டிருந்தோம்; ஆனால் (அதனை) அவர் மறந்து விட்டார்; (அக்கட்டளைபடி நடக்கும்) உறுதிப்பாட்டை நாம் அவரிடம் காணவில்லை". (அல்குர்ஆன் 20:115) *"இவ்வாறு ஆதம் தம்முடைய இறைவனுக்கு மாறு செய்து, அதனால் வழி பிசகி விட்டார். பின்னர் அவரது இறைவன் அவரைத் தேர்ந்தெடுத்து அவரை மன்னித்து நேர்வழியும் காட்டினான்".* (அல்குர்ஆன் 20:121-122)

இவ்வாறே ஆண்களும், பெண்களும் எவ்விடயத்திலும் சமமானவர்கள். அல்லாஹ் கூறுகிறான், *"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்".* (அல்குர்ஆன் 49:13)

ஆண்களும், பெண்களும் பின்வரும் விடயங்களில் சரி சமமாக நடாத்தப்படுவார்கள்:

சிவில் உரிமைகளைப் பொறுத்த வரை பெண்மைக்கும் அதில் பங்கு இருக்கின்றது. அவர்களுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதில் நீதமாக நடந்துகொள்ளுமாறு அல்லாஹ் ஆண்களை ஏவியுள்ளான். விற்கும் உரிமை, வாங்கும் உரிமை போன்ற உடண்படிக்கை சார்ந்த உரிமைகளிலும், அவளின் விருப்பம் போல் (இஸ்லாமிய வரையறைகளுக்குட்பட்டு) செயல்படுவதற்கு அவளுக்கு முடியும் எனவும் கூறியுள்ளான். இவ்வாறு சிவில் சார்ந்த உரிமைகளை கட்டாயம் நிறைவேற்ற வேண்டியது ஆண்களின் கடமையாகும். இவற்றில் அவளுக்கு எவ்வித வரையறைகளையும் இடுவதற்கு ஆண்களுக்கு உரிமை கிடையாது. அல்லாஹ் கூறுகிறான், *"ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்த(வற்றில் உரிய) பங்குண்டு; (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்(வற்றில் உரிய) பங்குண்டு".* (அல்குர்ஆன் 04:32)



பெண்களுக்கு அனந்தரச் சொத்திலும் பங்கு இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்கு பாகமுண்டு; அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பாகமுண்டு – (அதிலிருந்துள்ள சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே; (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும்". (அல்குர்ஆன் 04:07)

மார்க்க விடயத்தில் ஆண்களுக்கு வழங்கப்படும் அதே அம்சங்கள் தான் பெண்களுக்கும் வழங்கப்படும். நலவு செய்தால் நலவைப் பெற்றுக் கொள்வார்கள். இஸ்லாத்திற்கு முரணானவைகளைச் செய்தால் தண்டனைகளைப் பெற்றுக்கொள்வார்கள். அல்லாஹ் கூறுகிறான், "திருடனோ திருடியோ அவர்கள் சம்பாதித்த பாவத்திற்கு, அல்லாஹ்விடமிருந்துள்ள தண்டனையாக அவர்களின் கரங்களைத் தரித்து விடுங்கள். அல்லாஹ் மிகைத்தவனும், ஞானம் மிக்கோனுமாக இருக்கின்றான்". (அல்குர்ஆன் 05:38)

மறுமையில் வழங்கப்படும் கூலியிலும் பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள், "ஆணாயினும், பெண்ணாயினும் முஃமினாக இருந்து யார் (சன்மார்க்கத்திற்கு இணக்கமான) நற் செயல்களைச் செய்தாலும், நிச்சயமாக நாம் அவர்களை (இவ்வுலகில்) மணமிக்க தூய வாழ்க்கையில் வாழச் செய்வோம்; இன்னும் (மறுமையில்) அவர்களுக்கு அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றிலிருந்து மிகவும் அழகான கூலியை நிச்சயமாக நாம் கொடுப்போம்". (அல்குர்ஆன் 16:97)

ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசைகள் செய்து கொள்வதிலும் சமமானவர்கள், "முஃமினான ஆண்களும் முஃமினான பெண்களும் ஒருவருக்கொருவர் உற்ற துணைவர்களாக இருக்கின்றனர்; அவர்கள் நல்லதைச் செய்ய தூண்டுகிறார்கள்; தீயதை விட்டும் விலக்குகிறார்கள்; தொழுகையைக் கடைப்பிடிக்கிறார்கள்; (ஏழை



என்ன அநியாயம் இது?!!

"ஆண்களிடம் பெண்கள் அடிமைகளாகவும், கைவேலையாகவும், பர்பாரியர்களாகவும் இருந்தனர். பெண் என்பவள் குறையுள்ள மனித இனம். அவள் எப்போதும் இழிந்த, கீழ்த் தரமான நிலையில்

அரிஸ்டாட்டில்

கிரேக்க தத்துவவியலாளர்

பிரெஞ்சுப் பெண்

"பிரெஞ்சு நாட்டில் கி.பி 586 ஆம் ஆண்டு ஓர் மாநாடு நடைபெற்றது. அதில் பெண் என்பவள் மனித இனத்தில் உள்ளடங்குபவளா? என பல வாதங்கள் நிகழ்ந்தன. இறுதியில் அவள் மனித இனம் தான். அதே சமயம் ஆண்களுக்கு பணிவிடை செய்யவே படைக்கப்பட்டுள்ளாள் என முடிவாகியது. கி.பி 1938, பெப்ரவரி மாதம் பிரெஞ்சு நாட்டின் வரலாற்றில் முதல் தடவையாக பெண்களுக்கு வங்கிகளில் சொந்தமாக கணக்கு ஒன்றை ஆரம்பிக்க

பூரண உரிமைகளைப் பெறாத பெண்

சிறந்த தெளிவை அடைந்துகொண்டு, தீங்கை மடமை என்றும், முட்டாள் தனத்தை பைத்தியம் எனக் கூறுவதற்கும் நானும், எனது உள்ளமும் சுற்றித் திரிந்தோம். அப்போது மரணித்த நிலையில் இருந்த ஓர் பெண்ணைக் கண்டேன். அவள் உடல் திறந்தும், அவளின் நெஞ்சு பொறியாகவும், அவளின் இருகைகளும் கட்டப்பட்டும் இருந்தது." எக்க்லேசியச்டேஸ் 7 (புனித நூல்)

الكتاب المقدس

சரிசமம்

இஸ்லாத்தின் நிழலில் ஓர் பெண் சுதந்திரமாக வாழ தகுதிபெற்றுள்ளாள். இஸ்லாத்தில் கண்ணியமான ஓர் இடத்தை அவள் அடைந்துள்ளாள். இஸ்லாம் பெண்களை ஆண்களுடன் சமமான பிறவியாகவே நோக்குகின்றது. பெண்களை கல்வி கற்கத் தூண்டுகின்றது. கலாச்சார விழுமியங்களை மேம்படுத்திக்கொள்ளச் சொல்கின்றது. மேலும் நடமாடும் உரிமைகள், எதையும் சொந்தமாக வைத்திருக்கும் உரிமைகள், திருமண ஒப்பந்தங்களை வழங்கும் உரிமை, சிந்திக்கும் உரிமை, தமது கருத்துக்களைக் கூறும் உரிமை போன்ற பல உரிமைகளை இஸ்லாம் அவளுக்கு வழங்கியுள்ளது.

மோனா மெக்லோஸ்கி
ஜேர்மனிய இராஜதந்திர உறவுகள்

வரியாகிய) ஜகாத்தை (முறையாகக்) கொடுத்துவருகிறார்கள்; அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் வழிப் படுகிறார்கள்; அவர்களுக்கு அல்லாஹ் சீக்கிரத்தில் கருணை புரிவான் – நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்". (அல்குர்ஆன் 09:71)

பெண்களுடன் இரக்கமாக நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் கூறுகின்றது. யுத்தகளத்தில் பெண்களைக் கொல்வதை வண்மையாகத் தடை செய்திருக்கின்றது. மாதவிடாய்ப் பெண்களை தொடுவதற்கும், அவர்களுடன் ஒன்றாக உணவருந்துவதற்கும் ஏவியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை யஹூதிகள் தான் மறுத்து வந்தார்கள். அவற்றை இழிவாகக் கருதினார்கள். பெண்கள் சுத்தமாகும் வரை அவர்களுடன் சேராமல் ஒதுக்கி வைத்திருந்தார்கள். இஸ்லாம் மார்க்கத்தில் தான் ஓர் பெண் மேற்கூறப்பட்ட கௌரவங்களைப் பெற்றுக்கொண்டாள். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "உங்களில் சிறந்தவர் உங்கள் குடும்பத்தினருக்கு சிறந்தவர்களாக இருப்பவர்கள். உங்களை விட மிகவும் சிறந்தவனாக எனது குடும்பத்துக்கு நான் இருக்கின்றேன்". (ஆதாரம்: திர்மிதி)

நபி ﷺ அவர்களின் காலத்தில் ஓர் பெண் தன் கனவரால் அடிக்கப்பட்டாள், அதற்கு கோபமடைந்த நபியவர்கள், "ஓர் அடிமைக்கு அடிப்பதைப் போன்று உங்கள் மனைவிமார்களை அடிக்கிறீர்கள், இரவு வந்ததும் கட்டியணைத்துக்கொள்கிறீர்கள்?!!" எனக் கோபத்துடன் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

பெண்களில் ஒரு குழுவினர் தமது கனவன்மார் பற்றி முறையிட நபியவர்களிடம் வந்தார்கள், அப்போது நபியவர்கள் கூறினார்கள், "முஹம்மதுடைய குடும்பத்தாரிடம் பல

பெண்கள் தமது கனவன்மாரைப் பற்றி முறையிட வந்துள்ளனர். அப்படிப்பட்ட கனவர்கள் உங்களில் சிறந்தவர்களாக இருக்க முடியாது". (ஆதாரம்:அபூதாவுத்)

தந்தையை விட தாய்க்கே அதிகம் பணிவிடை செய்யுமாறு இஸ்லாம் கூறுகின்றது. ஒரு முறை ஒரு மனிதர் நபி ﷺ அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே, நான் யாருடன் அதிகம் சேர்ந்து நடக்க வேண்டும்?. (மற்றோர் அறிவிப்பில் யாருக்கு அதிகமாக பணிவிடை செய்ய வேண்டும்?) எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள் 'உன்னுடைய தாய்க்கு' என்றார்கள், 'அதன் பிறகு யாருக்கு?' என திரும்பவும் அம்மனிதர் கேட்க, "உனது தாய்க்கு" எனக் கூறினார்கள். "அதன் பிறகு யாருக்கு பணிவிடை செய்ய வேண்டும்?" என அம்மனிதர் கேட்க, "உனது தாய்க்கு" என்றார்கள், திரும்பவும் அம்மனிதர் "அதன் பிறகு யாருக்கு?" எனக் கேட்க "உன்னுடைய தந்தைக்கு" எனக் கூறினார்கள். (ஆதாரம்:புஹாரி, முஸ்லிம்)

அவ்வாறே பெண் பிள்ளைகளை வளர்ப்பவர்களுக்கு, ஆண் பிள்ளைகளை வளர்ப்பவர்களை விட அதிக கூலிகளை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "யார் பெண்பிள்ளைகளைப் பெற்றிருக்கின்றனரோ, அவர்கள் அப்பிள்ளைகளுக்கு சிறந்தவைகளை செய்து கொடுங்கள். உங்களை நரகத்தை விட்டும் பாதுகாத்திடும் திரையாக அவர்கள் மறுமையில் இருப்பார்கள்". (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மேலும் கூறினார்கள், "இறைவா! நிச்சயமாக நான் இரு பலவீனமானவர்களைப் பற்றி தர்மசங்கடமான நிலையில் உள்ளேன், அவர்கள் அநாதைகளும், பெண்களுமாவார்கள்". (ஆதாரம்: நஸயீ)

அநீதமிழைக்கும் சட்டதிட்டங்கள்.

"எட்டாம் ஹென்றி அரசன் பெண்கள் புனித பைபிளை படிக்கக்கூடாது என கட்டளையிட்டிருந்தான். அவ்வாறே கி.பி 1850 ல் பெண்கள் குடியுரிமையையும் பெற்றிருக்கவில்லை. அவர்களுக்கென்று உரிமைகள் எதுவும் இருக்கவில்லை. அவர்களின் ஆடைகளைக் கூட அவர்களுக்கு உரிமை கொண்டாட முடியாமல் இருந்தது. அவர்களின் பிள்ளைகள் சம்பாதித்து வரும் செல்வங்களைக் கூட அவர்களால் உரிமை கொண்டாட

எட்டாம் ஹென்றி அரசன்

மனிதனைப் படைத்ததன் நோக்கம்

இப்பிரபஞ்சத்தை வசப்படுத்திக் கொடுத்து, ஏனைய படைப்புக்களை விட மனிதனை உயர்ந்த படைப்பாக அல்லாஹ் ஆக்கியுள்ளான். இவை அனைத்தையும், "அல்லாஹ் பயனற்றவனோ, வீணாகப் படைப்பவனோ கிடையாது", என மனிதன் அல்லாஹ்வை தூய்மைப் படுத்துவதற்காகவே இவ்வாறு செய்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும்; இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன."

"அத்தகையோர் நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும் தங்கள் விலாப் புறங்களில் (சாய்ந்து) இருக்கும் போதும் அல்லாஹ்வை (நினைவு கூர்ந்து) துதிக்கிறார்கள்; வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றியும் சிந்தித்து, "எங்கள் இறைவனே! இவற்றையெல்லாம் நீ வீணாகப் படைக்கவில்லை; நீ மகா தூய்மையானவன்; (நரக) நெருப்பின் வேதனையிலிருந்து எங்களைக் காத்தருள்வாயாக!" (என்று பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்கள்)". *(அல்குர்ஆன் 03:191-192)*

இறை நிராகரிப்பாளர்கள் தான் இவ்வாறு சிந்திப்பார்கள். "மேலும், வானத்தையும், பூமியையும், இவ்விரண்டிற்குமிடையே உள்ளவற்றையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை. இது (வீணென்பது) காஃபிர்களின் எண்ணமாகும்; காஃபிர்களுக்கு (நரக) நெருப்பின் கேடுதான் உண்டு". *(அல்குர்ஆன் 38:27)*

உண்டு பருகுவதற்கும், அதிகமாக சம்பாதிப்பதற்கும் அல்லாஹ் மனிதனைப் படைக்கவில்லை. அப்படியெனறால் அவன் கால்நடைகளுக்கு ஒப்பானவனாக மாறிவிடுவானே. மாறாக அவனை அனைத்துப் படைப்புக்களை விடவும் சிறப்பாக்கி, அவனின் அந்தஸ்த்தை உயர்த்தியுள்ளான். ஆனால், தான் படைக்கப்பட்ட நோக்கத்தை மறந்து அதிகமானவர்கள் கால்நடைகளுக்கு ஒப்பானவர்களாக மாறிவருகின்றனர். இவ்வுலக வாழ்க்கையின் சொற்ப இன்பத்தில் திலைத்து நிற்கின்றனர். அல்லாஹ் கூறுகிறான்,

அல்லாஹ்வின் பக்கம்

"நிச்சயமாக மார்க்கமும், இயற்கை அறிவியலும் வீண்சந்தேகம், மூடநம்பிக்கைகள் போன்றவற்றுக்கெதிராக ஓர் யுத்தத்தை மேற்கொண்டன. இவ் யுத்தத்தின் முழக்கம் ஒன்றாகவே இருந்தது, 'அல்லாஹ்வின் பக்கம்

மார்க்ஸ் ப்ளாங்க்

கதிரியக்கக் கோட்பாட்டின் நிறுவுனர்

"ஆனால் நிராகரிப்பவர்களோ (இவ்வுலக சுகங்களை) அனுபவித்துக் கொண்டும், மிருகங்கள் தீனி தின்பதைப் போல் தின்று கொண்டும் இருக்கிறார்கள். (நரக) நெருப்பே இவர்கள் தங்குமிடமாக இருக்கும்". (அல்குர்ஆன் 47:12)

மேலும், "(இம்மையில் தம் விருப்பம் போல்) புசித்துக் கொண்டும், சுகம் அனுபவித்துக் கொண்டும் இருக்க அவர்களை விட்டு விடுவீராக; அவர்களுடைய வீணான ஆசைகள் (மறுமையிலிருந்தும்) அவர்களைப் பராக்காக்கி விட்டன; (இதன் பலனைப் பின்னர்) அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள்". (அல்குர்ஆன் 15:03)

மேலும், "நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம்; அவர்களுக்கு இருதயங்கள் இருக்கின்றன - ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் நல்லுணர்வு பெற மாட்டார்கள்; அவர்களுக்குக் கண்கள் உண்டு; ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் (இறைவனின் அத்தாட்சிகளைப்) பார்ப்பதில்லை; அவர்களுக்குக் காதுகள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் (நற்போதனையைக்) கேட்கமாட்டார்கள் - இத்தகையோர் கால்நடைகளைப் போன்றவர்கள். இல்லை! அவற்றை விடவும் வழி கேடர்கள்; இவர்கள் தாம் (நம்வசனங்களை) அலட்சியம் செய்தவர்களாவார்கள்". (அல்குர்ஆன் 07:179)

மனிதர்கள் அனைவரும் தத்தமது உறுப்புக்கள் படைக்கப்பட்ட நோக்கத்தை உறுதியாக அறிந்து வைத்துள்ளனர். கண் பார்ப்பதற்கு, காது கேட்பதற்கு... என தனது உறுப்புக்களைப் பற்றி அறிந்து வைத்துள்ள மனிதன் தன்னைப் பற்றி, தான் படைக்கப்பட்ட நோக்கம் பற்றி அறியாமல் அல்லாஹ் வீணாகத் தான் நம்மைப் படைத்துள்ளான் எனக் கூறுவது எவ்வகையில் நியாயமாகின்றது?! சரி, தன்னைப் படைத்த இறைவன் கூட தம்மைப் படைத்த நோக்கத்தைப் பற்றி கூறினால் அதை ஏற்கும் மனப்பாங்கிலும் இல்லையே?! இவனை என்னவென்று சொல்வது?!!

அப்படியானால் அல்லாஹ் ஏன் எம்மைப் படைத்தான்? ஏன் எம்மை கண்ணியப்படுத்தி, எல்லாப் பொருட்களையும் எமக்கு வசப்படுத்தித்

வலுவான வாதங்கள்

தன்னைப் படைத்து, பரிபாலனம் செய்யும் ஓர் சக்தி இல்லாமல் ஒரு மனிதனால் அவன் வாழ்வின் ஆரம்பத்தையும், தொடர்ச்சியையும் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. தத்துவமேதைகள் வாழ்க்கை பற்றிய தங்கள் தத்துவ ஆய்வுகளில் இப்பிரபஞ்சத்தின் ஒழுங்குவிதி குறித்த வலுவான ஆதாரங்களை என்னால் கண்டுகொள்ள இயலவில்லை.

மேக்னஸ் மெக்லீஸ்

பிரித்தானிய அறிவியல் சங்கத்தின் உறுப்பினர்

தந்தான்? இதைப் பற்றி அல்லாஹ்வே குறிப்பிடுகின்றான், "இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை". (அல்குர்ஆன் 51:56)

மேலும், "எவனுடைய கையில் ஆட்சி இருக்கின்றதோ அவன் பாக்கியவான்; மேலும், அவன் எல்லாப் பொருட்களின் மீதும் பேராற்றலுடையவன்."

"உங்களில் எவர் செயல்களால் மிகவும் அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன், மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்; மேலும், அவன் (யாவரையும்) மிகைத்தவன்; மிக மன்னிப்பவன்". (அல்குர்ஆன் 67:01-02)

புத்திஜீவிகளுக்கு தெரிந்த ஓர் விடயம் தான், ஒரு பொருளை செய்பவர் அதை எந்த நோக்கத்தின் அடிப்படையில் செய்கிறார் என்பதை மற்றவர்களை விட மிகவும் தெளிவாக அவர் அறிந்து வைத்திருப்பார். அல்லாஹ் இதை விட மேலானவன். மனித இனத்தைப் படைத்த அவன் அதனைப் படைத்த நோக்கத்தை மிகவும் அறிந்தவன். எனவே வணக்க வழிபாடு என்பது, தொழுகை, நோன்பு போன்ற இன்ன பிற செயற்பாடுகளோடு நின்றுவிடாது. மாறாக இப்பிரபஞ்சத்தை பரிபாலணம் செய்வதும் இதில் உள்ளடங்கும். அல்லாஹ் கூறுகிறன்,

"அவனே உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கி, அதிலேயே உங்களை வசிக்கவும் வைத்தான். எனவே, அவனிடமே பிழை பொறுக்கத் தேடுங்கள்; இன்னும் தவ்பா செய்து அவன் பக்கமே மீளுங்கள்". (அல்குர்ஆன் 11:61)

மாறாக மனித வாழ்க்கை பூராகவும் வணக்கம் தான். அல்லாஹ் கூறுகிறான், "நீர் கூறும்: "மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும்."

"அவனுக்கே யாதோர் இணையுமில்லை - இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன் - (அவனுக்கு) வழிப்பட்டவர்களில் - முஸ்லிம்களில் - நான் முதன்மையானவன் (என்றும் கூறும்)". (அல்குர்ஆன் 06:162-163)

வணக்கம் என்பது மிகவும் தெளிவான ஒன்று

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "உங்கள் கையில் மரக்கன்று இருக்கும் நிலையில் மறுமை நாள் ஏற்பட்டால் அதை நாட்டிவிடுங்கள்" (ஆதாரம்: அஹ்மத்)

ஸஹாபாக்கள்"அல்லாஹ்வின் தூதரே!, எங்களில் ஒருவர் அவரது மனஇச்சையைப் பூர்த்தி செய்தால் அதற்கும் கூலி உண்டா?" என நபியவர்களிடம் கேட்க, "அவர் அதை தடுக்கப்பட்ட விடயங்களில் ஈடுபடுத்தினால் அவருக்கு பாவம் கிடைக்காதா?!, அவ்வாறு தான் அதை ஆகுமான

மனிதா, இதற்குப் பிறகும் என்ன தாமதம்....

இப்பிரபஞ்சமும், அதில் உள்ளவையும் உனக்கு வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, அவனுக்கு நிகராக எவரும் இல்லை என்பதற்கு சான்றாக பல அத்தாட்சிகளும், ஆதாரங்களும் உன் கண்முன்னே மலிந்து கிடக்கின்றன, நீ மரணித்ததன் பின்னர் உன்னைத் திரும்பவும் உயிர்ப்பித்து, எழுபாட்டுவதென்பது வானங்கள், மற்றும் பூமியைப் படைத்ததை விடவும் அல்லாஹ்வுக்கு மிகவும் இலகுவானது என்பதை நீ அறிந்து வைத்துள்ளாய். அல்லாஹ் உன்னை அழகான தோற்றத்தில் படைத்து, உன்னை ஏனைய படைப்பினங்களை விட கண்ணியப்படுத்தியுள்ளான் என்பதையும் நீ ஏற்றுக்கொண்டுள்ளாய். இது இப்படியிருக்க அல்லாஹ்வுக்கு மாறுசெய்யுமாறு உன்னை தூண்டுவது எது? அல்லாஹ் கூறுகிறான், "மனிதனே! கொடையாளனான சங்கை மிக்க உன் இறைவனுக்கு மாறு செய்யும்படி உன்னை மருட்டி விட்டது எது?"

"அவன்தான் உன்னைப்படைத்து, உன்னை ஒழுங்குபடுத்தி; உன்னைச் செவ்வையாக்கினான்"

"எந்த வடிவத்தில் அவன் விரும்பினானோ (அதில் உன் உறுப்புகளைப்) பொருத்தினான்". (அல்குர்ஆன் 82:6-8)

நீ மரணித்ததன் பின்னர் அல்லாஹ்வைத் தான் சந்திக்க உள்ளாய். அல்லாஹ் கூறுகிறான், "மனிதனே! நிச்சயமாக நீ உன் இறைவனிடம் சேரும் வரை முனைந்து உழைப்பவனாக உழைக்கின்றாய் - பின்னர் அவனைச் சந்திப்பவனாக இருக்கின்றாய்."

"ஆகவே எவனுடைய பட்டோலை அவனுடைய வலக்கையில் கொடுக்கப்படுகின்றதோ,"

"அவன் சுலபமான விசாரணையாக விசாரிக்கப்படுவான்."

"இன்னும், தன்னைச் சார்ந்தோரிடமும் மகிழ்வுடன் திரும்புவான்."

"ஆனால், எவனுடைய பட்டோலை அவனுடைய முதுகுக்குப் பின்னால் கொடுக்கப்படுகின்றதோ-"

"அவன் (தனக்குக்) "கேடு" தான் எனக் கூவியவனாக-"

இவ்வுலகிலும், மறுவுலகிலும் சந்தோசத்தையும், மன நிம்மதியையும் பெற்றுக் கொள்வதற்கு அல்லாஹ் உன்னை எதற்காகப் படைத்தானோ அந்த நோக்கத்தை உணர்ந்து இவ்வுலக வாழ்க்கையை அமைத்துக் கொள்.

இப்பிரபஞ்சமே அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிந்து நடக்கின்றது. அவனது அனைத்துப் படைப்பினங்களும் அவனை எந்நேரத்திலும் துதிசெய்து கொண்டே இருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான்,"வானங்களிலுள்ளவையும், பூமியிலுள்ளவையும் அல்லாஹ்வைத் தஸ்பீஹு (துதி) செய்துகொண்டிருக்கின்றன." (அல்குர்ஆன் 62:01)

அப்படைப்பினங்கள் அனைத்தும் அவனுக்கு சிரம்பணிகின்றன, அல்லாஹ் கூறுகிறான், "வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும், மனிதர்களில் பெரும்பாலானவர்களும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்(து வணங்கு)கின்றன என்பதை நீர் பார்க்கவில்லையா? இன்னும் அநேகர் மீது வேதனை விதிக்கப்பட்டு விட்டது". (அல்குர்ஆன் 22:18)

அவ்வாறே தமது தகுதிக்கும், அமைப்பிற்கும் ஏற்றாற்போல் அவை அனைத்தும் அல்லாஹ்வைத் தொழுகின்றன. அல்லாஹ் கூறுகிறான், "(நபியே!) நீர் பார்க்கவில்லையா? வானங்களிலும் பூமியிலும் உள்ளவையும், பறவைகள் (விண்ணில் தங்கள்) இறக்கைகளை விரித்(துப் பறந்)த வண்ணமாக நிச்சயமாக அல்லாஹ்வைத் தஸ்பீஹு செய்(து துதிக்)கின்றன; ஒவ்வொன்றும் தன் தொழுகையையும், (அல்லாஹ்வை) தஸ்பீஹு செய்யும் வழியையும் திட்டமாக அறிந்தே இருக்கிறது". (அல்குர்ஆன் 24:41)

கம்பீரமான இக்காட்சிகளைக் கண்டும் நீ பின்வாங்கப்போகின்றாயா?! அப்படி பின்வாங்கினால் மற்றைய படைப்பினங்களுக்கு முன்னால் நீ ஓர் இழிவான படைப்பாக மாறிவிடுவாய். அல்லாஹ் கூறுகிறான், "வானங்களிலுள்ளவர்களும், பூமியிலுள்ளவர்களும், சூரியனும், சந்திரனும், நட்சத்திரங்களும், மலைகளும், மரங்களும், பிராணிகளும், மனிதர்களில் பெரும்பாலானவர்களும் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு ஸுஜூது செய்(து வணங்கு)கின்றன என்பதை நீர் பார்க்கவில்லையா? இன்னும் அநேகர் மீது வேதனை விதிக்கப்பட்டு விட்டது; அன்றியும், எவனை அல்லாஹ் இழிவுபடுத்துகின்றானோ அவனை கண்ணியப்படுத்துபவன் எவனுமில்லை; நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியதைச் செய்கிறான்}". (அல்குர்ஆன் 22:18)

அவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா?!!

"வானத்தை ஆய்வு செய்து, அதில் தாம் காணும் ஆச்சரியங்களையும், அதிசயங்களையும் ஒருவர் கண்டுவிட்டு, அவற்றைப் படைத்த அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளாமல் இருந்துவிடுவது என்னை ஆச்சரியத்தில்

ஆப்றஹாம் லிங்கன்

ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின்

முன்னால் ஜனாதிபதி

الطريق إلى السعادة
The Path to Happiness



மனிதனுக்கு மார்க்கம் என்பது தேவைதானா?

மனிதனுக்கு மார்க்கம் என்பது தேவைதானா?

மார்க்கம் என்பது அவசியம் தானா?

சமுதாயமும், அதற்கான மார்க்கத்தின் தேவையும்.

உண்மையான மார்க்கத்தின் வரையறைகள்:

எமக்கு அவசியமான மாரக்கம் எது?

மனிதனுக்கு மார்க்கம் என்பது தேவைதானா?

மார்க்கம் என்பது அவசியம் தானா?

பலமான பெருபேறுகள்

"அறிவியல் ஆராய்ச்சிகளின் பெருபேறுகளின் படி ஈமான் என்பது பலம் பொருந்திய ஓர்

ஐன்ஸ்டீன்
இயற்பியல் மேதை



மார்க்கம் ஒன்று இல்லாமல் நிச்சயம் மனிதனால் வாழவே முடியாது.

மனிதன் இயற்கையிலே ஓர் சமூகப் பிராணியாக இருக்கிறான். அவனுக்கு சமூகத்தை விட்டு தனித்து வாழ்வதானது மிகவும் கடினமான ஒன்றாக இருக்கின்றது. அவனால் அப்படி வாழ முடியாது. அவ்வாறே மார்க்கம் இன்றி தனக்கான சீறான வாழ்வைப் பெறவும் அவனால் இயலாது. எனவே ஏதோ ஓர் மார்க்கத்தைச் சார்ந்து வாழ்வது மனிதனின் இயல்பான குணாதிசயமாகத் திகழ்கின்றது.

பொதுவாகவே மனிதன் தனக்கு ஏதாவது கஷ்டநஷ்டங்களோ, துன்ப துயரங்களோ ஏற்படுகின்ற போது அல்லாஹ்விடமே ஒதுங்க முற்படுகின்றான். "மேலும் அவர்கள் மரக்கலங்களில் ஏறிக்கொண்டால், அந்தரங்க சுத்தியுடன் சன்மார்க்கத்தில் வழிப்பட்டவர்களாக அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றனர்; ஆனால், அவன் அவர்களை (பத்திரமாகக்) கரைக்கு கொண்டு வந்து விடுங்கால், அவர்கள் (அவனுக்கே) இணைவைக்கின்றனர்". (அல்குர்ஆன் 29:65)

ஒருவர் ஓர் இயந்திரத்தை கண்டுபிடிக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவ்வியந்திரம் மக்களுக்கு எவ்வகையில் பயனளிக்கும், எவ்வகையில் தீமை பயக்கும் என்ற அனைத்து அம்சத்தையும் அவர் அறிந்து தான் அவ் இயந்திரத்தை உருவாக்கியிருப்பார். அதை விடவும் மேலான படைப்பாளன் மனிதர்களின் தேவைகளை அறியாமலா இருப்பான். "(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன்; யாவற்றையும் நன்கு தெரிந்தவன்". (அல்குர்ஆன் 67:14)

அதனால் தான் படைப்பாளனான, இரக்கமுள்ள, வாரி வழங்குகின்ற, மக்களின் தவறுகளை மன்னிக்கின்ற இறைவன், மனிதனின் உள்ளம் அமைதி பெறவும், அவனின் வாழ்வு வளம் பெறவும் ஓர் மார்க்கத்தைப் பின்பற்றுமாறு அவனுக்கு ஏவுகிறான். எந்த விடயத்திற்கும் அல்லாஹ்விடம் முறையிட எத்தனிக்கும் மனிதனுக்கு அதற்கான சரியான வழியை இம்மார்க்கம் காட்டுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வும், அவன் தூதரும் உங்களை உங்களுக்கு உயிர் அளிக்ககூடிய காரியத்தின்பால் அழைத்தால் நீங்கள் அவர்களுக்கு பதிலளியுங்கள்". (அல்குர்ஆன் 08:24)

இயல்புக்கு முரணாக அல்லாஹ்வை மறுப்பவர்கள் கூட தங்கள் உள்ளத்தால் ஏதோ ஓர் வகையில் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளத் தான் செய்கிறார்கள். அல்லாஹ் கூறுகிறான், "அவர்களுடைய உள்ளங்கள் அவற்றை (உண்மையென) உறுதி கொண்ட போதிலும், அநியாயமாகவும், பெருமை கொண்டவர்களாகவும் அவர்கள் அவற்றை மறுத்தார்கள். ஆனால், இந்த விஷமிகளின் முடிவு என்ன வாயிற்று என்பதை நீர் கவனிப்பீராக". (அல்குர்ஆன் 27:14)

அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ் பற்றிய நம்பிக்கை இருக்கின்றது என்ற விடயத்தை கஷ்டங்களும், நெருக்கடிகளும், தேவைகளும் அதிகரிக்கின்ற போது அவர்களே உணர்வார்கள். அல்லாஹ் கூறுகிறான், "(நபியே! அவர்களிடம்) நீர் கூறும்: "அல்லாஹ்வுடைய வேதனை உங்களிடம் வந்து விட்டால், அல்லது (நீங்கள் அஞ்சும்) அந்த (விசாரணைக்) காலம் வந்துவிட்டால் (அதிலிருந்து உங்களைக் காப்பாற்ற) அல்லாஹ்வையன்றி (வேறு யாரையாவது) நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் - அழைப்பீர்களா?" என்பதை (நீங்கள் சிந்தித்துப்) பார்த்தீர்களா?

"அப்படியல்ல! - அவனையே நீங்கள் அழைப்பீர்கள்; அப்போது அவன் எதற்காக அவனை அழைத்தீர்களோ அ(த் துன்பத்)தை தான் நாடினால் நீக்கிவிடுவான், இன்னும் (அவனுடன்) இணை வைத்திருந்தவற்றை நீங்கள் மறந்து விடுவீர்கள். (அல்குர்ஆன் 06:41-42)

மேலும், "இன்னும் மனிதனை ஏதேனும் ஒரு துன்பம் தீண்டுமானால், அவன் தன் இறைவன்பால் திரும்பி அவனை அழை(த்துப் பிரார்த்தி)க்கின்றான்; பின்னர் (இறைவன்) தன்னிடமிருந்து ஓர்

மார்க்கத்தைப் பின்பற்றுபவனும், நோயாலிகளும்

"முன்பெல்லாம் மனிதர்களிடத்தில் மார்க்கத்திற்கும் அறிவியலுக்கும் மத்தியில் பாரிய முரண்பாடுகள் காணப்பட்டன. இதற்கான விடை கண்டறியப்படாமலேயே இது ஓய்ந்துவிட்டது. ஆனால் தற்போதை நவீன மனோதத்துவ வளர்ச்சியில் இதற்கான விடை கிடைத்துள்ளது. மனோதத்துவ நிபுணர்களின் கூற்றுப்படி மார்க்கத்தைப் பின்பற்றுவதானது (இறை நினைவு,தொழுகை) மனிதனிடம் ஏற்படுகின்ற பயம், உளைச்சல், நரம்புமண்டல விறைப்பு போன்றவற்றிலிருந்து அவனை விடுவிக்கின்றது. அவனுக்கு ஏற்படும் அரைவாசிக்கும் மேற்பட்ட நோய்களை இது குணமைடையச் செய்கின்றது. இது பற்றி டாக்டர் பிரில் குறிப்பிடும் போது, மார்க்கத்தைப் பின்பற்றும் ஒருவர் நிச்சயம்

டேல் கார்னகி
அமெரிக்க எழுத்தாளர்

அருட்கொடையை அவனுக்கு அளித்தானானால், முன்னர் அவன் எதற்காக அவனை அழைத்து(ப் பிரார்த்தித்து)க் கொண்டிருந்தானோ அதை மறந்து விடுகிறான். அல்லாஹ்வுக்கு இணைகளை ஏற்படுத்தி (மற்றவர்களை) அல்லாஹ்வுடைய பாதையிலிருந்து வழிகெடுக்கிறான். (நபியே!) நீர் கூறுவீராக: "உன் குஃப்ரை (நிராகரிப்பை)க் கொண்டு சிறிது காலம் சுகமனுபவி; நிச்சயமாக நீ நரகவாதிகளில் நின்றுமுள்ளவனே." *(அல்குர்ஆன் 39:08)*

அனைத்து மனிதர்களும், அல்லாஹ்வை வணங்குவதற்காகத் தான் தாம் படைக்கப்பட்டுள்ளோம் என்பதை இயல்பாகவே உணர்கிறார்கள். மனிதர்களுக்கு நன்மையை அளிப்பதற்கும், தீமையைத் தடுப்பதற்கும் சக்தி பெற்றவன் அல்லாஹ் மாத்திரம் தான். அவன், தான் நாடியதை நிறைவேற்றுவான். அவனை யாரும் தான் செய்யும் செயலுக்காக விசாரணை செய்திடவும் முடியாது. அல்லாஹ் கூறுகிறான், *"(நபியே!) அல்லாஹ் உமக்கு ஏதாவதொரு துன்பத்தை ஏற்படுத்திவிட்டால் அவனைத் தவிர (வேறு யாரும்) அதை நீக்க முடியாது. இன்னும் அவன் ஒரு நன்மையை உண்டாக்கிவிட்டால், (அதை எவரும் தடுக்க முடியாது.) அவன் எல்லாப் பொருட்கள் மீதும் பேராற்றலுடையவனாக இருக்கின்றான்".* *(அல்குர்ஆன் 06:17)*

மேலும், *"மனிதர்களுக்கு அல்லாஹ் தன் ரஹ்மத்தில் (அருள் கொடையில்) இருந்து ஒன்றைத் திறப்பானாயின் அதைத் தடுப்பார் எவருமில்லை, அன்றியும் அவன் எதைத் தடுத்து விடுகிறானோ, அதன் பின், அதனை அனுப்பக் கூடியவரும் எவரும் இல்லை".* *(அல்குர்ஆன் 35:02)*

மனிதனுக்கு அறிவாற்றல், மனவலிமை என இரு வகையான சக்திகள் இருக்கின்றன. அவை இரண்டையும் மனிதன் எந்த அளவிற்குப் பயன்படுத்துகின்றானோ அந்த அளவிற்கு தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி அடைகிறான். இதன் மூலம் சந்தோசமும் அடைகிறான். அறிவுத் திறனைப் பொருத்தவரையில் அதன் மூலம் அவன் அல்லாஹ்வையும், அவனது பெயர்கள், பண்புகள், அல்லாஹ்வின் ஏவல், விலக்கள்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. நன்னடத்தைகள், நற்பண்புகள், அல்லாஹ்வை நெருங்குவதற்கான வழிகள் போன்றவைகளைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

டேல் கார்னகி
அமெரிக்கப் எழுத்தாளர்

ஆழ்ந்து சிந்தி

"பிரெஞ்சு நாட்டு தத்துவமேதையான பேகன் என்பவர் உண்மைதான் கூறியுள்ளார். அவர் கூறியதாவது, 'குறைந்த தத்துவவியல் ஞானம் ஒரு மனிதனை நாத்திகத்தின் பக்கம் நெருங்கவைக்கின்றது. ஆழ்ந்த தத்துவஞானம் ஒருவனை மார்க்கத்தின்



உள்ளத்தின் ஆழம், அதில் ஏற்படும் குழப்பங்கள், அதை ஆட்கொள்வதற்கான முறைகள், தனக்கும் தனது இறைவனுக்குமிடையில் இருக்கும் தொடர்பை துண்டிக்கக்கூடிய அம்சங்களை எதிர்கொள்ளும் முறைகள் என்பவற்றையும் அவனால் கற்றுக்கொள்ள இயலுமாகின்றது. இவை அனைத்தும் பிறரை அல்லாஹ்வின் அந்தஸ்த்தில் வைத்து வணங்கி, அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய வணக்க வழிபாடுகளை பிறருக்கு செலுத்துவதை விட்டும் அவனை தடுத்துவிடுகின்றன. அவ்வாறே முட்டால் தனம், அறுவருப்பான ஆசைகள், வீணான சந்தேகங்கள் போன்றவற்றை விட்டும் அவனை அப்புறப்படுத்துகின்றன. இவையனைத்தும் நிறைவேறும் பட்சத்தில் அவனின் வணக்க வழிபாடுகள் அல்லாஹ்விற்கு மாத்திரம் செலுத்தப்படும் ஒன்றாக மாறிவிடுகின்றது. இவ்வுலகில் மன நிம்மதியோடும், சந்தோசத்தோடும் அவனால் வாழ முடிகின்றது. மறுமையில் உயர் அந்தஸ்த்தை அடைந்து கொள்ள ஏதுவாகவும் அமைகின்றது.

இத்தகைய அறிவுத்திறன் தான் மனிதனின் மனவலிமையை மேலும் அதிகரிக்கச் செய்து அவனை நேரான வழியில் உறுதியுடன் பயணிக்க வைக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், *"ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வும், அவன் தூதரும் உங்களை உங்களுக்கு உயிர் அளிக்ககூடிய காரியத்தின்பால் அழைத்தால் நீங்கள் அவர்களுக்கு பதிலளியுங்கள்".* *(அல்குர்ஆன் 08:24)*

நாத்திகர்கள் ஆன்மாவுக்குத் தீணி போடாமல் உடலுக்குத் தேவையான நிம்மதியை மாத்திரம் பெற எத்தனிப்பதால் பெறும் கஷ்டத்தை சந்திக்கிறார்கள். இதனால் பல ஏமாற்றங்களும், மன அழுத்தங்களும் அதிகரித்து, அவர்களின் சந்தோசமே அடியோடு அகன்று விடுகின்றது.

இயற்கை அணர்த்தங்கள், சோதனைகள் போன்றன ஏற்படுகின்ற போது மனிதன் யார் பக்கம் ஒதுங்குவான்? நிச்சயம் அவன் அல்லாஹ்விடம் மாத்திரமே ஒதுங்க முடியும். தனது பலம், ஆசை, எதிர்பார்ப்பு, பொறுமை, பொறுப்புச் சாட்டல் போன்ற அனைத்தையும் அல்லாஹ்விடமே ஒப்படைக்க முடியும். அல்லாஹ் கூறுகிறான், *"(நேர் வழி பெறும்) அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தாம் (முற்றிலும்) ஈமான் கொண்டவர்கள்; மேலும், அல்லாஹ்வை நினைவு கூர்வதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன; அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க!"* *(அல்குர்ஆன் 13:28)*

அநியாயத்திற்கும், அட்டூழியத்திற்கும் மத்தியில் ஒரு மனிதன் வாழ நேரிடும் போது அவன் தன் உள்ளத்தால்



தெளிந்த உண்மை

"டாக்டர் பட்டம் பெறுவதற்காக நான் சமூகவியல் சார்ந்த ஆய்வை மேற்கொண்டேன். அதில் இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களைப் பற்றியும் ஆய்வுசெய்தேன். அது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளால் ஓர் சமுதாயத்தை சமூக, பொருளாதார, ஆண்மீக அடிப்படையில்

டாக்டர் டக்ளஸ்
ரெஜினாவின் மேயர்

உன் உள்ளத்திலே உளவியலுக்கு நிவாரணம் உள்ளது

"மன உளைச்சலுக்கு சிறந்த நிவாரணம்

வில்லியம் ஜேம்ஸ்

அமெரிக்க மனோதத்துவவியல் நிபுனர்



மார்க்கத்தைப் பின்பற்றுவது நோய்களுக்கான நிவாரணியாகும்

"மனோதத்துவ நிபுனர்களின் கூற்றுப்படி மார்க்கத்தைப் பின்பற்றுவதானது மனிதனிடம் ஏற்படுகின்ற பயம், உளைச்சல், நரம்புமண்டல விறைப்பு போன்றவற்றிலிருந்து அவனை

டேல் கார்னகி

அமெரிக்க எழுத்தாளர்



இரண்டும் வெகுதூரம்

"சடவாதம் எப்போதும் மனிதனுக்கும், மிருகங்களுக்கும் மத்தியிலுள்ள ஒற்றுமையை உறுதிசெய்கின்றது. ஆனால் மார்க்கம் இவை இரண்டிற்கு மத்தியிலுள்ள வேறுபாட்டை

அலிஜா இஜெட்பெகோவிக்

போஸ்னியா, ஹெர்சிகோவினா குடியரசின் முன்னாள் ஜனாதிபதி

உறுதியாகக் கூறுவான், "இவ்வுலகுக்கு ஓர் இறைவன் இருக்கின்றான். அவன் நிச்சயம் அநீதமிழைக்கப்பட்டவனுக்கு உதவி புரிவான். மறுமை நாள் என்று ஒன்று இருக்கின்றது தானே, அங்கு ஒவ்வொரு மனிதனுக்கும் தான் செய்த செயல்களுக்கு ஏற்ப கூலி வழங்கப்படும். நல்லவர்களுக்கு நற்கூலிகளும், தீயவர்களுக்கு தண்டனைகளும் வழங்கப்படும். தீயவர்கள் நிச்சயம் தண்டனை பெற்றே தீருவார்கள்". இவ்வாறு கூறி, அல்லாஹ்வின் மீதுள்ள உறுதியினால் அவனின் உள்ளத்தை அவன் குளிரடைய வைக்கின்றான், அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வின் விருப்பத்தைப் பின் பற்றி நடப்போர், அல்லாஹ்வின் கோபத்தைத் தம்மேல் வரவழைத்துக் கொண்டவர் போல் ஆவாரா? (அல்ல - கோபத்தை வரவழைத்துக் கொண்டோருடைய) அவனது இருப்பிடம் நரகமேயாகும்; அது தங்குமிடங்களில் மிகவும் கெட்டதுமாகும்." (அல்குர்ஆன் 03:162)

இவைகளுக்கு மாறாக யார் அல்லாஹ்வை அறிந்து, அவனை விசுவாசம் கொள்ளவில்லையோ, நிச்சயம் அவன் தனது சக்திகள் அனைத்தையும் இழப்பான். மன அமைதி, சந்தோசம், நிம்மதி போன்றவற்றை இழந்துவிடுவான். கவலைகள், சோகங்கள் நிரம்பிய வாழ்வையே பெற்றுக்கொள்வான். தனக்கென சொந்த



முடிவுகளோ, மன உறுதியோ இல்லாமல் உலக இன்பங்களையும், ஆசாபாசங்களையும், சொத்து செல்வங்களையும் சேகரிப்பதிலேயே தனது காலத்தைக் கழிப்பான். தனக்கென ஒரு குறிக்கோள் இருக்கின்றது, தனது வாழ்வுக்கென ஓர் நோக்கம் இருக்கின்றது என்பதை அறியாமல் கால்நடைகளைப் போன்று மாறிவிடுவான். அல்லாஹ் கூறுகிறான், "அல்லது, நிச்சயமாக அவர்களில் பெரும்பாலோர் (உம் உபதேசத்தைக்) கேட்கிறார்கள்; அல்லது அறிந்துணர்கிறார்கள் என்று நீர் நினைக்கின்றீரா? அவர்கள் கால்நடைகளைப் போன்றவர்களேயன்றி வேறில்லை-அல்ல; (அவற்றை விடவும்) அவர்கள், மிகவும் வழி கெட்டவர்கள். " *(அல்குர்ஆன் 25:44)*

திடீரென அவனுக்கு சோதனைகள் ஏற்படுகின்ற போது மன விரக்தி, மன அழுத்தம் போன்றவற்றுக்கு ஆலாகின்றான், ""எவன் என்னுடைய உபதேசத்தைப் புறக்கணிக்கிறானோ, நிச்சயமாக அவனுக்கு நெருக்கடியான வாழ்க்கையே இருக்கும்; மேலும், நாம் அவனை கியாம நாளில் குருடனாவே எழுப்புவோம்" என்று கூறினான்." *(அல்குர்ஆன் 20:124)*

அல்லாஹ்வை அறிந்துகொள்வதில் காணப்படும் இவ்விரு சாரரிலும் உண்மையான முறையில் அல்லாஹ்வை அறிந்து, அவனின் திருப்பொருத்தத்தை நாடி, அவனால் வழங்கப்பட்ட அவனின் மார்க்கத்தைப் பின்பற்றி, அவன் ஏவியவைகளை எடுத்து நடந்து,

உபதேசம் செய்யும் வைத்தியர்கள்

"உளவியல் நிபுணர்கள் அதிகமாக உபதேசம் தான் செய்வார்கள். மார்க்கத்தைப் பின்பற்றுவதன் மூலம் மறுமை நாளின் நரகநெருப்பிலிருந்து விடுபடும் வழிமுறைகளை எமக்குக் கூறமாட்டார்கள். இவ்வுலகில் நரகநெருப்பான வயிற்றுப் புண்கள், நரம்பு முறிவு, பைத்தியம் போன்றவற்றிலிருந்து தவிர்ந்துகொள்ளும் முறைகளைத் தான் கூறுவார்கள்."



ஹென்றி ஃபோர்டு

அமெரிக்கா ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் ஸ்தாபகர்



விலக்கியவைகளை விட்டும் தவிர்ந்து நடந்து வாழ்பவன் தனக்கு எல்லா வகையிலும் அல்லாஹ் தேவையானவன் என்பதை அறிந்து கொள்கிறான். தனது சின்ன பெரிய, மறைமுகமான, வெளிரங்கமான அனைத்துத் தேவைகளையும் எந்நேரத்திலும், எப்பொழுதிலும் அல்லாஹ்விடமே கேட்டுப் பெற்றுக்கொள்வான். அல்லாஹ் கூறுகிறான்,

"மனிதர்களே! அல்லாஹ்வின் உதவி (எப்பொழுதும்) தேவைப்பட்டவர்களாக இருப்பவர்கள் நீங்கள்; ஆனால் அல்லாஹ் எவரிடமும் தேவைப்படாதவன்; புகழுக்குரியவன்." (அல்குர்ஆன் 35:15)

இதற்கு மாற்றமாக அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளாதோர், சந்தேகங்களும், ஏமாற்றங்களும் நிரம்பிய ஓர் இருண்ட உலகில் வாழ்கிறார்கள். குருடனைப் போன்று அங்குமிங்கும் திரிகிறார்கள். இவ்வுலக இன்பங்களில் மிதப்போரும், உயர் பதவிகளை வகிப்போரும் சந்தோசத்தைத் தேடி எங்கு சென்றாலும் அவர்களுக்கு அது எட்டாத காணல் நீராய் இன்னும் தூர சென்றுகொண்டே இருக்கும். அல்லாஹ்வைப் பற்றிய சிந்தனை இல்லாதவனுக்கு எங்கு சென்றாலும் எதுவும் கிடைக்கப் போவதில்லை.. அல்லாஹ்வின் சிந்தனையுடன் இருப்பவனுக்கு எதுவும் கிடைக்காமல் இருப்பதுமில்லை. எனவே ஒரு மனிதனுக்கு மார்க்கம் என்பது அத்தியாவசிய



மார்க்கம் தான் வாழ்க்கை

"மார்க்கம் என்பது ஒரு மனிதன் கட்டாயம் வைத்திருக்க வேண்டிய சொத்துக்களுக்குச் சமன். மார்க்கம் இன்றி வாழும் மனிதன் நிராசையடைந்த

அர்னால்ட் டோயின்பி

பிரித்தானிய வரலாற்றாசிரியர்

பதட்டமான காலம்

"நாம் பதட்டமான காலகட்டத்தில் வாழ்ந்து வருகின்றோம். புதிய கண்டுபிடிப்புக்களும், இலத்திரனியல் சாதனங்களும் மனிதனை உச்சத்தில் கொண்டு போய் வைத்தாகலும் அவனுக்கு மன நிம்மதி, அமைதி, சந்தோசம் போன்றவற்றை அது வழங்கவில்லை என்பது தான் உண்மை. நிராசை, பயம், பதட்டம் போன்றவற்றால் சூழப்பட்ட ஓர் உலகில்

ரெனே டோலோ

நோபல் பரிசு பெற்ற சிறந்த எழுத்தாளர்

சமுதாயமும், அதற்கான மார்க்கத்தின் தேவையும்.

தனது வாழ்வை அமைதியான முறையில் கொண்டு செல்வதற்கு தனிமனிதனுக்கு எப்படி மார்க்கம் தேவைப்படுகின்றதோ அதை விடவும் அதிகமாக ஓர் சமுதாயத்திற்கு மார்க்கம் தேவைப்படுகின்றது. மார்க்கம் என்பது ஓர் சமுதாயத்தைப் பாதுகாக்கும் கேடயமாகும். அதை தனிமனிதன், கையில் எடுத்து முழு சமுதாயத்தையும் காத்திட முடியாது. சமூக வாழ்க்கை என்பது ஒருவருக்கு ஒருவர் உதவி ஒத்தாசையோடு இருப்பது தான். "இன்னும் நன்மையிலும்; பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்; பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்" (அல்குர்ஆன் 05:02)

இவ்வாறு ஒருவருக்குரு ஒருவர் உதவி செய்து கொள்வதானது ஓர் முறையோடு அமைந்தால் தான் அது பூரணமான ஒன்றாக இருக்க வாய்ப்புள்ளது. அவர்களின் கடமைகளையும், உரிமைகளையும் பாதுகாத்திடவும் வழிகோலுகின்றது.

இத்தகைய ஒழுங்கு நெறியை எல்லாவற்றையும் அறிந்த, ஒரே இறைவன் அல்லாஹ்வால் மாத்திரமே தொகுத்திட முடியும் "(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன்; யாவற்றையும் நன்கு தெரிந்தவன்." (அல்குர்ஆன் 67:14)

மனித இனம் எப்போது அல்லாஹ் விதித்துள்ள இவ் ஒழுங்கு நெறியை மீறி, மார்க்கத்தை விட்டும் வெளியேறிவிடுகின்றதோ அப்போது தடுமாற்றம், முரட்டுத் தனம், ஏமாற்றம் போன்ற வலைகளில் சிக்குண்டு, நிம்மதியான வாழ்வுக்காய் குற்றுயிருடன் போராடும்.

மார்க்கம் போன்று



மொழியியல் வாதம்

"நாம் விரும்பும் அனைத்தும் பலவீனமாகிப் போய்விடலாம். அறிவுத்திறனை பயன்படுத்தாமல் செயலிழந்து போகலாம். ஆனால் தனக்கென ஓர் மார்க்கம் இன்றி ஒருவனாலும் இருந்துவிட முடியாது. இது தவிர மனிதன் வாழும் இப்பூமியில் பல தவறான மார்க்கங்களும்

ஏர்னஸ்ட் ரெனன்

பிரெஞ்சு வரலாற்றாசிரியர்

ஃபிலிப் ஈவன்

லெபனான் வரலாற்றாசிரியர்

உண்மையான மார்க்கம்

"இஸ்லாம், மார்க்க ரீதியான அம்சங்கள், உலக அம்சங்கள் என வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. இது மனிதனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையே உள்ள தொடர்பையும், அவனுக்கு செய்யவேண்டிய கடமைகளையுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. -இது சாதாரணமாக நீ உன் சக தோழருக்கு செய்கின்ற கடமைகளைப் போல- அல்லாஹ்வின் அனைத்து ஏவல் விலக்கல்களும் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளன. அல்குர்ஆனில் மொத்தமாக 6000 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வசனங்கள் இருக்கின்றன. அவற்றில் கிட்டத்தட்ட ஆயிரம்

மனோ இச்சைகளுக்கு இடமளிக்காத மார்க்கம்

"முஹம்மதுக்கு மதீனாவில் கிடைத்த அமோக வரவேற்பிற்கும், மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைவதற்கும், ஸ்திரமான ஓர் சாம்ராஜ்யம் உருவாகுவதற்கும் காரணம் அவர்கள் அனைவரும் இஸ்லாத்தில் ஓர் உறுதியான சட்டக்கோர்வையை கண்டதும், மனிதனின் மனோ இச்சையை அடக்கிவிடும் வலிமை

தாமஸ் அர்னால்டு

பிரித்தானியாவைச் சேர்ந்த கீழைத்தேயவாதி

சக்தி வாய்ந்த யாப்புக்களோ, சட்டக்கோர்வைகளோ இவ்வுலகில் கிடையாது. சமூகத்தின் இஸ்திரத்தன்மைக்கு மார்க்கம் போன்று உத்தரவாதமளிக்கும் எந்த கட்டுக்கோப்புக்களும், விதிமுறைகளும் கிடையாது. மார்க்கம் என்று ஒன்று இருப்பதனால் தான் மனிதன் அமைதியாகவும், அடக்கமாகவும் வாழ கற்றுக்கொள்கிறான். அவனது ஒவ்வொரு அசைவுகளும், நடவடிக்கைகளும், எண்ணங்களும் புத்திக்கு எட்டாத ஒருவனால் வழிநடாத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று விசுவாசம் கொள்கிறான். அவனது உள்ளம் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று உறுதியாக நம்புவதால் அவனின் உடல் உறுப்புக்கள் தூய்மையான முறையில் செயல்பட ஆரம்பிக்கின்றன. தனது இரகசிய, பரகசிய செயற்பாடுகள் அனைத்தும் ஓர் கட்டுக்கோப்பிற்குள் கொண்டுவரப்படுகின்றன. இது அவனை வழிதவற விடாமல் பாதுகாத்துக்கொள்கின்றது. மனநிம்மதியை ஈட்டிக்கொடுக்கின்றது. இது தான் அவன் ஏனைய உயிரினங்களை விடவும் உயர்ந்து காணப்படுவதின் இரகசியமாகும். "(நபியே!) நீர் உரக்கச் சொன்னாலும் நிச்சயமாக அவன் இரகசியத்தையும் (அதை விட) மறைவானதையும் அறிகிறான்." (அல்குர்ஆன் 20:07)



உங்கள் பகுத்தற்வு எங்கே?

"அல்லாஹ் இருக்கின்றானா இல்லையா என்னும் விடயத்தில் ஏன் பிரச்சினைப் படுகின்றீர்கள்? அவன் மட்டும் இல்லாவிட்டால் என் மனைவி என்னை ஏமாற்றியிருப்பாள், எனது

வால்டேர்

பிரேஞ்சு தத்துவமேதை

மனிதன் எப்போதும் சரியான அல்லது தவறான கொள்கையின் பக்கம் உந்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றான். அவனது கொள்கை சரியானதாக அமைந்தால் அவனின் அனைத்துச் செயற்பாடுகளும் சரியாக நடைபெற்று விடும். அது தவறானதாக அமைந்து விட்டால் அவனின் அனைத்து செயற்பாடுகளும் தவறிலே போய் முடிந்து விடும்.

இதனால் தான் மார்க்கம் அவனின் அனைத்து நடவடிக்கைகளுக்கும், சமூகத்துடனான அவனின் அனைத்து தொடர்பாடல்களுக்கும் உத்தரவாதமாக இருந்து, நீதமான முறையில் அவனை வழிகெடாமல் பாதுகாக்கின்றது. இது ஓர் சமூகத் தேவையாகும். இது சமூகத்தில் உள்ளவர்களின் உள்ளங்களுக்குப் போய்ச் சேர்ந்து, அவர்கள் இதனை ஏற்று நடப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை.

மார்க்கம் மனிதனில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துவதனால் தான் இவ்வுலகில் பல மார்க்கங்கள் உருப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு சமூகத்தாரும் தமக்கென ஓர் மார்க்கத்தை உருவாக்கி, அல்லது தேர்ந்தெடுத்து, அதன் வழியில் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்கின்றனர். அதிலே நிம்மதியையும் தேடுகின்றனர். தற்போதைய உலகில் நாம் காண்பதைப் போன்று எவ்வளவு தான் மார்க்கம் பெருகினாலும் மனிதன் இவற்றின் மூலம் தனது வாழ்வின் இலட்சியங்களை இன்னமும் நிறைவேற்றிக் கொள்ளவில்லையே.. ஆகையால், ஒவ்வொருவரும் தமக்கென ஓர் மார்க்கத்தை எடுத்துக்கொண்டால், மனிதனின் இலட்சியத்தை நிறைவேற்றி வைக்கும் உண்மையான மார்க்கம் எது? அவ் உண்மையான



உண்மையான மார்க்கத்தின் வரையறைகள்:

பொதுவாக ஒவ்வொரு மனிதனும் தான் பின்பற்றும் கொள்கை தான் ஏனைய அனைத்து கொள்கை, கோட்பாடுகளை விடவும் சிறந்தது என எண்ணுகிறான். தமது மார்க்கத்தை நியாயப்படுத்துவதில் ஒவ்வொரு சாராரும் வித்தியாசமான கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். தவறான, திரிபுபடுத்தப்பட்ட கொள்கை, கோட்பாடுகளை பின்பற்றுவோர் அவற்றை தமது மூதாதையர்கள் மூலமாக பெற்றுக்கொண்டதாகக் கூறுகின்றனர். அல்லாஹ் கூறுகிறான், "இவ்வாறே உமக்கு முன்னரும் நாம் (நம்முடைய) தூதரை எந்த ஊருக்கு அனுப்பினாலும், அவர்களில் செல்வந்தர்கள்: "நிச்சயமாக நாங்கள் எங்கள் மூதாதையரை ஒரு மார்க்கத்தில் கண்டோம்; நிச்சயமாக நாங்கள் அவர்களின் அடிச்சுவடுகளையே பின்பற்றுகின்றோம்" என்று கூறாதிருக்கவில்லை."

"(அப்பொழுது அத்தூதர்,) "உங்கள் மூதாதையரை எதன்மீது நீங்கள் கண்டீர்களோ, அதை விட மேலான நேர்வழியை நான் உங்களுக்குக் கொண்டு வந்திருந்த போதிலுமா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள்: "நிச்சயமாக நாங்கள், எதைக்கொண்டு நீங்கள் அனுப்பப்பட்டிருக்கிறீர்களோ, அதை நிராகரிக்கிறோம்" என்று சொல்கிறார்கள்." (அல்குர்ஆன் 43:23-24)

மேலும் "மேலும், "அல்லாஹ் இறக்கி வைத்த இ(வ்வேதத்)தைப் பின்பற்றுங்கள்" என்று அவர்களிடம் கூறப்பட்டால், அவர்கள் "அப்படியல்ல! எங்களுடைய மூதாதையர்கள் எந்த வழியில் (நடக்கக்) கண்டோமோ, அந்த வழியையே நாங்களும் பின்பற்றுகிறோம்" என்று கூறுகிறார்கள்; என்ன! அவர்களுடைய மூதாதையர்கள், எதையும் விளங்காதவர்களாகவும், நேர்வழிபெறாதவர்களாகவும்

இருந்தால் கூடவா?"

"அந்த காஃபிர்களுக்கு உதாரணம் என்னவென்றால்; ஒரு (ஆடு, மாடு மேய்ப்ப)வனின் கூப்பாட்டையும், கூச்சலையும் தவிர வேறெதையும் கேட்டு, அறிய இயலாதவை(கால் நடை) போன்றவர்கள்; அவர்கள் செவிடர்களாகவும், ஊமையர்களாகவும், குருடர்களாகவும் இருக்கின்றனர்; அவர்கள் எ(ந்த நற்போ)தனையும் உணர்ந்து கொள்ளமாட்டார்கள்." (அல்குர்ஆன் 02:170-171)

அவர்களின் இந்நிலைப்பாட்டிற்கு புத்திக்கூர்மையோ, சிந்தனைத் திறனோ, ஆய்வுகளோ இன்றி கண்மூடித்தனமான பின்பற்றுதலையே நம்பியிருக்கின்றனர். தங்கள் கருத்துக்களை மெய்ப்பிப்பதற்காக எவ்வித தெளிவான, சரியான ஆதாரங்களுமற்ற கட்டுக்கதைகளையும், திரிபுபடுத்தப்பட்ட கோட்பாடுகளையும் ஆதாரங்களாக எடுத்துக்கொள்கின்றனர். உண்மையான மார்க்கத்தில் இத்தகைய அம்சங்கள் இருப்பது சாத்தியமற்றது.

ஏனெனில் உண்மையென்பது இவைகளில் ஏதாவது ஒன்றாகத் தான் இருக்க முடியும். அனைத்து மதங்களும், கொள்கை கோட்பாடுகளும் சரியானதாக இருப்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கும் இக்கொள்கை கோட்பாடுகள் அனைத்தும் ஒரே நேரத்தில் சரியானதாக இருந்தால், உண்மையான கொள்கை, கோட்பாடுகளும் முரண்பாடான ஒன்றாகவே கருதப்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன. இவ்வாறே ஓர் மனிதனின் சீரான நிலைப்பாடு சிந்திக்க ஆரம்பிக்கின்றது.

"(இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்." (அல்குர்ஆன் 04:82)

அப்படியென்றால் உண்மையான அந்த மார்க்கம் எது? இவ்வுலகில் உருவாகியிருக்கும் அனைத்து மார்க்கங்களிலும் சரியான மார்க்கம் இன்னது தான், ஏனைய அனைத்தும் தவறானவை என்பதனை நாம் அறிந்து கொள்வதற்கான வரையறைகள் என்ன?

அதற்கான வரையறைகள் இதோ,

முதலாவது: மார்க்கம் என்பது தெய்வீகத் தன்மை வாந்ததாக இருக்க வேண்டும். அதாவது அது அல்லாஹ்விடமிருந்து வந்த ஒன்றாக இருக்க வேண்டும். அல்லாஹ் அம்மார்க்கத்தை தனது மலக்குமார்களின் ஊடாக நபிமார்களுக்கு வழங்கி, அவர்கள் மூலமாக தனது அடியார்களுக்கு வழங்கியிருக்க வேண்டும். ஏனெனில் உண்மையான மார்க்கம் என்பது இவ்வுலகைப் படைத்து, இரட்சித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ்விடமிருந்து மாத்திரம் தான் வரமுடியும்.

தன்னால் படைக்கப்பட்ட படைப்புக்கள் தமது வாழ்க்கையை இவ்வுலகில், அவன் விரும்பும் அமைப்பில் தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென, அவனால் தான் வரையறை போட முடியும். மறுமையில் அது பற்றி விசாரணை நடாத்த அவன் மாத்திரமே அதிகாரம் பெறவும் முடியும். அல்லாஹ் கூறுகிறான், "(நபியே!) நூஹுக்கும், அவருக்குப் பின் வந்த (இதர) நபிமார்களுக்கும் நாம் வஹீ அறிவித்தது போலவே, உமக்கும் நிச்சயமாக வஹீ அறிவித்தோம். மேலும், இப்றாஹீமுக்கும், இஸ்மாயீலுக்கும், இஸ்ஹாக்குக்கும், யஃகூபுக்கும் (அவர்களுடைய) சந்ததியினருக்கும், ஈஸாவுக்கும், அய்யூபுக்கும், யூனுஸுக்கும், ஹாரூனுக்கும், ஸுலைமானுக்கும் நாம் வஹீ அறிவித்தோம்; இன்னும் தாவூதுக்கு ஐபூர் (என்னும் வேதத்தைக்) கொடுத்தோம்."

"(இவர்களைப் போன்றே வேறு) தூதர்கள் சிலரையும் (நாம் அனுப்பி) அவர்களுடைய சரித்திரங்களையும் உமக்கு நாம் முன்னர் கூறியுள்ளோம்; இன்னும் (வேறு) தூதர்கள் (பலரையும் நாம் அனுப்பினோம்; ஆனால்) அவர்களின் சரித்திரங்களை உமக்குக் கூறவில்லை; இன்னும் மூஸாவுடன் அல்லாஹ் பேசியும் இருக்கின்றான்."

"தூதர்கள் வந்தபின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களுக்கு (சாதகமாக) ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, தூதர்கள் (பலரையும்) நன்மாராயங் கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பினான்); மேலும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாகவும், பேரறிவாளனாகவும் இருக்கின்றான்." (அல்குர்ஆன் 04:163-165)

இதன் அடிப்படையில் யாராவது ஓர் மார்க்கத்தைப் பரப்பி, அது தமது மார்க்கம் என சொந்தம் கொண்டாடுகிறாரோ நிச்சயம் அது தவறான மார்க்கம் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. மனிதன் உருவாக்கும் மார்க்கத்தில் மூடநம்பிக்கைகளும், அனாச்சாரங்களும் நிரம்பிக் காணப்படும் என்பதிலும் எவ்வித சந்தேகமும் கிடையாது. இவ்வாறு தங்கள் விருப்பப் பிரகாரம் மார்க்கங்களை உருவாக்கிக் கொள்பவர்கள், தாம் உருவாக்கியவை மனித வர்க்கத்துக்குப் பயன் உள்ளதா அல்லது பயன் அற்றதா என்பதை அல்லாஹ்வை விட அறிந்தவர்கள் அல்ல என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். "(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன்; யாவற்றையும் நன்கு தெரிந்தவன். " (அல்குர்ஆன் 67:14)

மார்க்கம் என்ற ஒன்றை உருவாக்கி, அதை மனித வர்க்கத்துக்கு வழங்கி, இதனால் மனிதர்களுக்கு எத்தகைய நன்மைகள் இடம்பெறப் போகின்றன என்ற தகவல்களை அறிந்தவன் எம் அனைவரையும் படைத்த அல்லாஹ் ஒருவன்

ஏகத்துவம்

"இஸ்லாத்தின் அடிப்படை அம்சமே ஏகத்துவம் தான். அது அல்லாஹ் ஒருவன் என்றும், முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் என்றும் போதிக்கின்றது. இணைவைப்புக்கள் அனைத்தும் பின்னால் தோன்றியவைகளாகும். இங்கு தந்தை-மகன் என்றோ, உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என்றோ, கீழைத்தேயவாதி-மேற்கத்தேயவாதி என்றோ பல உலகங்கள்

மைக்கல் ஹேம்ஸ்

ஆங்கில எழுத்தாளர்

மாத்தரமே. அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வின் மார்க்கத்தைவிட்டு (வேறு மார்க்கத்தையா) அவர்கள் தேடுகிறார்கள்? வானங்களிலும் பூமியிலும் உள்ள (அனைத்துப் படைப்புகளும்) விரும்பியோ அல்லது வெறுத்தோ அவனுக்கே சரணடைகின்றன; மேலும் (அவை எல்லாம்) அவனிடமே மீண்டும் கொண்டு வரப்படும்." (அல்குர்ஆன் 03:83)

மேலும், "உம் இறைவன் மேல் சத்தியமாக, அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக, ஏற்றுப் பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது (அத்தீர்ப்பை) முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்." (அல்குர்ஆன் 04:65)

இரண்டாவது: மார்க்கம் என்பது அல்லாஹ்வை ஒருமைப்படுத்தும் ஓரிறைக் கொள்கையின் பக்கம் மக்களை அழைக்க வேண்டும். அவனுடன் வேறு படைப்புக்களை இணையாக்குவதைத் தடை செய்ய வேண்டும். ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைப்பது அனைத்து நபிமார்களினதும், ரஸூல்மார்களினதும் தலையாயக் கடமையாக இருந்துள்ளது. இணைவைப்பும், சிலை வணக்கங்களும் புத்திக்கும், சீரான மனோநிலைக்கும் மாற்றமானதாக இருந்துள்ளது. இன்றும், என்றும் அவ்வாறே இருக்கும். அல்லாஹ் கூறுகிறான், "(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை." (அல்குர்ஆன் 21:25)

ஒவ்வொரு நபிமார்களும் தமது சமுதாயத்தினருக்குக் கூறும் போது, "அவர்(தம் கூட்டத்தாரிடம்), "என் கூட்டத்தாரே! அல்லாஹ்வையே வணங்குங்கள், உங்களுக்கு அவனன்றி வேறு நாயனில்லை; நிச்சயமாக நான் உங்களுக்கு வர இருக்கும் மகத்தான ஒரு நாளின் வேதனைப்பற்றி அஞ்சுகிறேன் என்று கூறினார்." (அல்குர்ஆன் 07:59)

எனவே தான் எந்த மார்க்கம் இணைவைப்பை ஆதரித்து, நபிமார்களையோ, மலக்குகளையோ, நல்லடியார்களையோ, சாதாரண மனிதர்களையோ, கற்களையோ அல்லாஹ்வுக்கு இணையாக்குமாறு போதிக்கிறதோ, அது வழிகேட்டின் பக்கம் அழைக்கும் மார்க்கமாகும். ஏனெனில் வணக்க



அல்லாஹ்வின் நியதி

"பொதுவாக சிறுபிள்ளைகளிடம் இறைவனைப் பற்றிய நம்பிக்கை இயல்பாகவே ஏற்படுகின்றது. ஏனெனில் அவர்கள் இவ்வுலகில் உள்ள ஒவ்வொன்றும் ஏதோ ஓர் காரணத்திற்காகப் படைக்கப்பட்டுள்ளன என ஏற்றுக்கொள்கின்றனர். யாருமே இல்லாத ஓர் தீவில் அவர்களை கொண்டுபோய் விட்டால் நிச்சயம் அவர்கள் அல்லாஹ்வை நம்பும்

கேஸ்டன் பாரெட்

மனிதவள ஆய்வாளர் - ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம்

வழிபாடுகள் என்பன, எப்போதும் அல்லாஹ் ஒருவனுக்கு மாத்திரமே நிறைவேற்றப்பட வேண்டும். இணைவைத்தல், சிலைவணக்கம் என்பன எப்போதுமே வழிகேடாகும். அல்லாஹ் அல்லாதவர்களிடமிருந்து வந்த எந்த மார்க்கத்திலும் இணைவைப்பு என்பது இடம்பெற்றால் அது தவறான மார்க்கம் என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. இதற்கு அல்லாஹ் ஓர் சிறந்த உதாரணத்தைக் கூறுகிறான். "மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. எனவே செவிதாழ்த்திக் கேளுங்கள். நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ஈயைக்கூடப் படைக்க முடியாது; இன்னும், அவர்களிடமிருந்து ஒரு பொருளை எடுத்துக் கொண்டு போனால் அவர்களால் அதனை அந்த ஈயிடத்திலிருந்து திரும்பக் கைப்பற்றவும் முடியாது; தேடுவோனும், தேடப்படுவோனும் பலஹீனர்களே."



மூட நம்பிக்கைகளுக்கான மருந்து

"அறிவியல் என்பது மூடநம்பிக்கை

ஆடம் ஸ்மித்

ஸ்காட்டிஷ் தத்துவமேதை

"அவர்கள் அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்த வேண்டியவாறு கண்ணியப்படுத்தவில்லை; நிச்சயமாக அல்லாஹ் வல்லமை மிக்கவன்; (யாவரையும்) மிகைத்தவன்." (அல்குர்ஆன் 22:73-74)

மூன்றாவது: இயற்கைக்குப் பொருந்தும் வகையிலும், இயல்புக்கு ஏற்றாற் போலவும் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், "ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும்; அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை; அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்." (அல்குர்ஆன் 30:30)

அல்லாஹ் அனைத்து மனிதர்களையும் அவர்களுக்கு நன்மை பயக்கும் இயல்பு நிலைக்கு ஏற்ற ஓர் அமைப்பில் படைத்துள்ளான். அவ் இயல்பை மனிதர்களின் வாழ்விலிருந்து பிரித்து விட முடியாது. மார்க்கம் என்பது மனித இனத்துக்கு நன்மை பயக்குவதாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிடில் படைப்பாளன் மார்க்கம் என்ற ஒன்றை உருவாக்கியிருக்க முடியாது. ஏனைய மார்க்கங்கள் இயல்பு நிலைக்கு ஏற்றாற் போல் காணப்படாததினால் தான் மூடநம்பிக்கைகளும், வீண் சந்தேகங்களும், இணைவைப்புக்களும் சமூகத்தில் பெருகுகின்றன.

நான்காவது: சிந்தனைத் திறனோடு ஒத்துப் போவதாக மார்க்கம் இருக்க வேண்டும். ஏனெனில் சரியான மார்க்கம் என்பது அல்லாஹ்விடமிருந்து வந்ததாகும். சிந்தனைத் திறன் என்பது அல்லாஹ்வின் படைப்பாகும். அது அல்லாஹ்வின் படைப்புக்களுக்கோ, அவனின் மார்க்கத்திற்கோ முரண்பாடாக இருக்கக் கூடாது. அல்லாஹ் கூறுகிறான், "அவர்கள் பூமியில் பிரயாணம் செய்து (இவற்றைப்)

பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்த்திருந்தால்) அவர்களுக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய உள்ளங்களும், (நல்லவற்றைச்) செவியேற்கும் காதுகளும் உண்டாகியிருக்கும், நிச்சயமாக (புறக்) கண்கள் குருடாகவில்லை; எனினும், நெஞ்சுக்குள் இருக்கும் இதயங்கள் (அகக் கண்கள்) தாம் குருடாகின்றன." *(அல்குர்ஆன் 22:46)*

மேலும், *"முஃமின்களுக்கு நிச்சயமாக வானங்களிலும், பூமியிலும் அத்தாட்சிகள் இருக்கின்றன."*

"இன்னும் உங்களைப் படைத்திருப்பதிலும், அவன் உயிர்ப் பிராணிகளைப் பரப்பியிருப்பதிலும் (நம்பிக்கையில்) உறுதியுள்ள சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன."

"மேலும் இரவு பகல் மாறி மாறி வருவதிலும், வானத்திலிருந்து அருள் மாரியை அல்லாஹ் இறக்கி வைத்து, இறந்து போன பூமியை அதைக் கொண்டு உயிர்ப்பிப்பதிலும்; காற்றுகளை மாறி மாறி வீசச்செய்வதிலும் அறிவுடைய சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன."

"இவை அல்லாஹ்வுடைய வசனங்கள், இவற்றை (நபியே!) உம்மீது உண்மையுடன் ஓதிக் காண்பிக்கிறோம்; அல்லாஹ்வுக்கும் அவனுடைய வசனங்களுக்கும் பின்னர் இவர்கள் எதனைத் தான் நம்பப் போகிறார்கள்." *(அல்குர்ஆன் 45:3-6)*

ஆதாரங்களைக் கொண்டுவாருங்கள்

"சிறந்த அறிவாளி தனது நம்பிக்கைகளை

டேவிட் ஹியூம்
ஸ்காட்டிஷ் தத்துவமேதை

மனிதன் தன் குணங்கள் மூலம் அறியப்படுகிறான்

"நற்பண்புகள் அற்ற மனிதன் இவ்வுலகுக்கென்று நேர்ந்துவிடப்பட்ட

ஆல்பர்ட் காம்யு
பிரேஞ்சு தத்துவமேதை

மார்க்கம் என்பது கட்டுக்கதைகளும், நகைச்சுவைக் கதைகளும், ஒன்றோடு ஒன்று முரண்படுகின்ற கருத்துக்களும் நிரம்பிய ஒன்றாக இருக்க முடியாது. இவைகள் சீரான சிந்தனைத் திறனுக்கு நேர்மாற்றமான அம்சங்களாகும். ஒரு விடயத்தை ஏவுவதன் மூலம் இன்னொரு விடயத்துடன் முரண்படுவதாகவோ, ஒரு தரப்பினருக்கு சில விடயங்களை தடை செய்து, இன்னொரு தரப்பினருக்கு அதை ஆகுமாக்குவதாகவோ, ஒன்றோடு ஒன்று ஒத்துப் போகின்ற விடயங்களை விலக்கி விட்டு, ஒன்றுக்கொன்று முரண்படுகின்ற விடயங்களை ஆமோதிப்பதாகவோ மார்க்கம் இருக்கக்கூடாது.

அல்லாஹ் கூறுகிறான், *"அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா, (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்."* *(அல்குர்ஆன் 04:82)*

தெளிவான ஆதாரங்களோடு அனைத்து விடயங்களையும்

தெளிவுபடுத்துவதாக மார்க்கம் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், *""நீங்கள் உண்மையுடையோராக இருந்தால் உங்களுடைய சான்றை சமர்ப்பியுங்கள்" என்று (நபியே!) நீர் கூறுவீராக!"* *(அல்குர்ஆன் 02:111)*



நிதர்சனமாய் இரு

'வாழ்வு பற்றிய நடைமுறைக் கண்ணோட்டமும், யதார்த்தமான ஆலோசனைகளும், பிறருக்கு உபகாரம் செய்தல், பிறர் மீது இரக்கம் காட்டுதல் போன்றவற்றின் பக்கம் அழைப்பு விடுவதும், மனிதநேயத்தை வரவேற்பதும் இஸ்லாம் மார்க்கம் நடைமுறையுடன் கூடிய ஓர் உன்னத மார்க்கம் என்பதை என்னுள் தோற்றுவித்தன. இவை எனக்குக் கிடைத்த மிகப்பெரும்

ஜுவில்
டென்மார்க்கைச் சேர்ந்த
கீழைத்தேயவாதி



நற்பண்புகள் நிம்மதியைத் தருகின்றன

'நற்குணம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடும் போது மனதில் நிம்மதி ஏற்படுகின்றது. தீயகுணங்கள் சார்ந்த விடயங்களில் ஈடுபடும் போது மனதில் நிம்மதியற்ற பதட்ட

எர்னஸ்ட் ஹெமிங்வே
அமெரிக்க எழுத்தாளர்

ஐந்தாவது; மார்க்கம் என்பது நல்ல குணாதிசயங்களை கற்றுத் தருவதாகவும், நல்ல விடயங்களை வலியுருத்துவதாகவும் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், *"'வாருங்கள்! உங்கள் இறைவன் உங்கள் மீது விலக்கியிருப்பவற்றையும் (ஏவியிருப்பவற்றையும்) நான் ஓதிக் காண்பிக்கிறேன்; எப்பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள்; பெற்றோர்களுக்கு நன்மை செய்யுங்கள்; வறுமைக்குப் பயந்து உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள் – ஏனெனில் உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கின்றோம்; வெளிப்படையான இரகசியமான மானக்கேடான காரியங்களை நீங்கள் நெருங்காதீர்கள்; அல்லாஹ் தடுத்துள்ள எந்த ஓர் ஆத்மாவையும் நியாயமானதற்கு அல்லாமல் – கொலை செய்யாதீர்கள் – இவற்றை நீங்கள் உணர்ந்து கொள்வதற்காக (இறைவன்) உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கின்றான்."*

"அநாதையின் பொருளின் பக்கம் அவன் பிராயத்தை அடையும் வரையில் அழகான முறையிலன்றி நீங்கள் நெருங்காதீர்கள்; அளவையும், நிறுவையையும் நீதத்தைக் கொண்டு நிரப்பமாக்குங்கள்; நாம் எந்த ஆத்மாவையும் அதன் சக்திக்கு மீறி கஷ்டப்படுத்துவதில்லை; நீங்கள் பேசும்பொழுது அதனால் பாதிக்கப்படுபவர் நெருங்கிய உறவினராக இருந்த போதிலும் – நியாயமே பேசுங்கள்; அல்லாஹ்வுக்கு (நீங்கள் கொடுத்த) உறுதி மொழியை நிறைவேற்றுங்கள். நீங்கள் நினைவு (கூர்ந்து நடந்து கொள்ளும் பொருட்டே அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு) போதிக்கிறான்."

"நிச்சயமாக இதுவே என்னுடைய நேரான வழியாகும்; ஆகவே இதனையே பின்பற்றுங்கள் – இதர வழிகளை நீங்கள் பின்பற்ற வேண்டாம் – அவை உங்களை அவனுடைய வழியைவிட்டுப் பிரித்துவிடும்; நீங்கள் (நேர் வழியைப் பின்பற்றி) பயபக்தியுடையவர்களாக இருப்பதற்கு இவ்வாறு அவன் உங்களுக்கு போதிக்கிறான்." *(அல்குர்ஆன் 06:151-153)*

மேலும், *'நிச்சயமாக அல்லாஹ் நீதி செலுத்துமாறும், நன்மை செய்யுமாறும்,*

உறவினர்களுக்கு கொடுப்பதையும் கொண்டு (உங்களை) ஏவுகிறான்; அன்றியும், மானக்கேடான காரியங்கள், பாவங்கள், அக்கிரமங்கள் செய்தல் ஆகியவற்றை விட்டும் (உங்களை) விலக்குகின்றான் - நீங்கள் நினைவு கூர்ந்து சிந்திப்பதற்காக, அவன் உங்களுக்கு நல்லுபதேசம் செய்கிறான்." (அல்குர்ஆன் 16:90)

எனவே பொய், கொலை, அநியாயம், அட்டூழியம், அநீதம், களவு, கொள்ளை, சுரண்டல் போன்ற தீய விடயங்களை ஏவுவதாகவோ, அதனைத் தூண்டுவதாகோ மார்க்கம் இருக்கக் கூடாது.

ஆறாவது: மனிதனுக்கும் அல்லாஹ்வுக்கும் இடையில் உள்ள தொடர்பையும், அவனுக்கும் ஏனைய மனிதர்களுக்கு மத்தியிலுமுள்ள தொடர்புகளையும் பேணுவதாக மார்க்கம் இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், ""அவனையன்றி நீங்கள் வணங்கிக் கொண்டிருப்பவை யாவும் நீங்கள் உங்கள் மூதாதையரும் வைத்துக் கொண்ட (வெறும் கற்பனைப்) பெயர்களேயன்றி வேறில்லை; அவற்றுக்கு அல்லாஹ் யாதொரு ஆதாரத்தையும் இறக்கி வைக்கவில்லை; அல்லாஹ் ஒருவனுக்கே அன்றி (வேறெவர்க்கும்) அதிகாரம் இல்லை. அவனையன்றி (வேறு எவரையும்) நீங்கள் வணங்கக் கூடாது என்று அவன் (உங்களுக்குக்) கட்டளையிட்டிருக்கின்றான். இதுவே நேரான மார்க்கமாகும்; ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை." (அல்குர்ஆன் 12:40)

அம் மார்க்கம் மனிதன் தனது இறைவனுக்கு செய்திட வேண்டிய கடமைகளையும், பிற மனிதர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் வரையறுத்துக் கொடுக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், "மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள்; அவனுடன் எதனையும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும், நெருங்கிய உறவினர்களுக்கும். அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், அண்டை வீட்டிலுள்ள உறவினர்களுக்கும், அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக்கும், வழிப்போக்கர்களுக்கும்,

சிறந்த அனந்தரச் சொத்து

"இஸ்லாமிய மார்க்கம் இவ்வுலகிற்கு அனந்தரமாகக் அதன் சட்டதிட்டங்களை வழங்கியுள்ளது. அதை 'ஷரீஆ' என்றும் கூறுவர். இஸ்லாமிய சட்டதிட்டங்கள் தனித்துவம் வாய்ந்தவை. அவை மனித வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் செவ்வைப்படுத்துகின்ற இறைக் கட்டளைகளாகும். இவை வணக்க வழிபாடுகள், மார்க்க ரீதியிலான உணர்வுகள், அரசியல், பொருளாதாரம் சார்ந்த சட்டதிட்டங்கள் என அனைத்துத்

ஜோசப் சாக்ட்
ஜேர்மனியைச் சேர்ந்த
கீழைத்தேயவாதி

உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் கர்வமுடையோராக, வீண் பெருமை உடையோராக இருப்பவர்களை நேசிப்பதில்லை." (அல்குர்ஆன் 04:36)

ஏழாவது: மனிதனை எப்போதும் கண்ணியத்துடனும், ஒற்றுமையுடனும் மார்க்கம் நடாத்த வேண்டும். அவர்களுக்கு மத்தியில் எவ்வித இன, மத, நிற, மொழி வேற்றுமைகளை வளர்க்கவே கூடாது. ஒருவன் இன்னொருவனை விட எவ்வகையிலும் உயர்ந்தவன் கிடையாது. அப்படி உயர்ந்தவனாக இருந்தால் அது இறையச்சத்தில் மாத்தரமாகத் தான் இருக்க முடியும். அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக, நாம் ஆதமுடைய சந்ததியைக் கண்ணியப்படுத்தினோம்; இன்னும், கடலிலும், கரையிலும் அவர்களைச் சுமந்து, அவர்களுக்காக நல்ல உணவு(ம் மற்றும்) பொருட்களையும் அளித்து, நாம் படைத்துள்ள (படைப்புகள்) பலவற்றையும் விட அவர்களை (தகுதியால்) மேன்மைப் படுத்தினோம். " (அல்குர்ஆன் 17:70)

மேலும், "மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே



சமத்துவமின்மை

"சமத்துவம் சீர்குழைவதில் மிகவும் மோசமானது, சமனற்ற விடயங்களை சமத்துவப்படுத்த

அரிஸ்டோட்டில்
கிரேக்க தத்துவமேதை

அல்லாஹ்விடமே உதவி தேடு

"சிலவேளை, மனநோய் மருத்துவமனையில் இத்தருணம் வரை கூச்சலிட்டுக்கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான நோயாளிகள், எவ்வித உதவியோ, தொடர்போ இல்லாமல் வாழ்கைப் போராட்டத்தை மேற்கொள்வதற்குப் பதிலாக இறை உதவியை நாடியிருந்தால் அவர்கள் இன்னேரம் பாதுகாப்பாய் இருந்திருக்க

டேல் கார்னகி
அமெரிக்க எழுத்தாளர்

எமக்கு அவசியமான மார்க்கம் எது?

மேற்கூறப்பட்ட அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கும் அச்சிறந்த மார்க்கம் எது?

இவ்வுலகில் இருக்கும் அனைத்து மார்க்கங்களையும் இரு பகுதிகளாகப் பிரித்து நோக்க முடியும். அதில் ஒரு பகுதி, மனிதனால் உருவாக்கப்பட்ட மார்க்கங்களாகும், இவற்றில் உள்ள சட்டதிட்டங்களை அல்லாஹ் அருளவில்லை, மனிதன் தானாகவே இயற்றிக்கொண்டவை. புத்த மதம், ஹிந்து மதம், ஜொராஸ்ட்ரிய மதம் (நெருப்பு வணங்கிகள்), விக்கிர வழிபாடு போன்ற அனைத்து வகையான மார்க்கங்களும், வழிபாடுகளும் இதில் உள்ளடங்குகின்றன. இவை அனைத்தையும் மனிதன் தன் விருப்பத்தின் பேரில் இயற்றிக்கொண்டவைகளாகும். *"(நபியே!) எவன் தன்னுடைய (சரீர, மனோ) இச்சையைத் தன்னுடைய தெய்வமாக ஆக்கிக் கொண்டானோ, அவனை நீர் பார்த்தீரா? மேலும், அறிந்தே அல்லாஹ் அவனை வழிகேட்டில் விட்டு அவனுடைய காதுகள் மீதும் இருதயத்தின் மீதும் முத்திரையிட்டு; இன்னும், அவனுடைய பார்வை மீதும் திரையை அமைத்துவிட்டான். எனவே, அல்லாஹ்வுக்குப் பிறகு அவனுக்கு நேர்வழி காண்பிப்பவர் யார்? நீங்கள் சிந்தித்து உணர வேண்டாமா?"* (அல்குர்ஆன் 45:23)

இவை அனைத்தும் தெய்வீக மார்க்கங்கள் கிடையாது. மனிதன் தனது இச்சையின் பிரகாரம் உருவாக்கிக் கொண்டவை. இதனால் தான் இம் மார்க்கங்களில் கட்டுக்கதைகளும், பொய்புரட்டல்களும், முரண்பாடுகளும், மூடநம்பிக்கைகளும் நிரம்பிக் காணப்படுகின்றன. அல்லாஹ் கூறுகிறான், *"அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா, (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்."* (அல்குர்ஆன் 04:82)

என்றாலும் அல்லாஹ் ஒருவன் தான்

"இவ்வுலகில் உள்ள ஏகப்பட்ட மார்க்கங்களின் கடவுள் தொகையைக் கணிப்பிட்டே ஆய்வாளர்கள் சோர்ந்துவிட்டனர். பழங்கால எகிப்தில் 800 இற்கும் மேற்பட்ட கடவுள்களும், ஹிந்துக்களிடம் 10,000 இற்கும் மேற்பட்ட கடவுள்களும் காணப்படுகின்றன. இவ்வாறு தான் கிரேக்கர்களிடமும், பௌத்தர்களிடமும் ஏனைய மதத்தவர்களிடமும் ஏகப்பட்ட

இவ்வுலகில் உள்ள மார்க்கங்களில் இரண்டாவது வகை, அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்ட மார்க்கங்கள். இவற்றில் யூத மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் முதலியன உள்ளடங்குகின்றன. இம் மார்க்கங்களைப் பின்பற்றுவோருக்கு அல்லாஹ்வே சட்டதிட்டங்களை உருவாக்கிக் கொடுத்தான். அம் மார்க்கங்களையும் பொருந்திக் கொண்டான். அல்லாஹ் கூறுகிறான், "நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான்; ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும் , ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்: "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்" என்பதே - இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ, அது அவர்களுக்குப் பெரும் சுமையாகத் தெரிகிறது - தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான் - (அவனை) முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர்வழி காட்டுகிறான்." (அல்குர்ஆன் 42:13)



உண்மையான மார்க்கம்

"நிச்சயம் நான் உணர்ந்து விட்டேன். மனித இனத்துக்குத் தேவையானது வானுலகிலிருந்து வந்த மார்க்கம் தான். அதுவே உண்மையை உண்மையாகவும்,

டால்ஸ்டாய்
ரஷ்ய இலக்கியவாதி

இவ்வுலகில் மனிதர்கள் தமக்கென உருவாக்கிக் கொண்ட மார்க்கங்களில் பல தத்துவங்களும், அதற்கேற்றாற் போல் மக்கள் தொகையும் இருக்கின்றன.. மக்கள் தங்கள் மார்க்கத்தை விட்டும் வெளியேறாமல் இருப்பதற்காக காலத்திற்கு ஏற்றாற் போல் தத்துவங்களை திருத்தியமைக்க முயல்வதால் அதில் குழப்பங்களையும், வழிகேடுகளையும் கண்டுகொள்கின்றனர். மக்கள் காலப்போக்கில் தாங்கள் பின்பற்றும் மார்க்கம் தவறானது என ஒதுக்கித் தள்ளும் நிலை ஏற்படுகின்றது. இவ்வாறான மார்க்கங்களுக்கென்று சில தனித்துவமான அம்சங்கள் இருக்கின்றன. அவைகள் வருமாறு:

இணைவைப்பு: ஒவ்வொரு நாளும் தங்களுக்கென புதுப்புது கடவுள்களை உருவாக்கிக் கொள்கின்றனர். அக்கடவுள்களை தங்களது கைகளாலேயே வடிவமைக்கவும் செய்கின்றனர். அல்லாஹ்வுக்கு இணையாக எப்படி பல கடவுள்கள் இருக்க முடியும் என்கின்ற விடயத்தை சிறிதும் சிந்திக்காமல் இருக்கின்றனர். அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ் தனக்கென ஒரு மகனை எடுத்துக் கொள்ளவில்லை. அவனுடன் (வேறு) நாயனுமில்லை; அவ்வாறாயின் (அவர்கள் கற்பனை செய்யும்) ஒவ்வோர் நாயனும் தான் படைத்தவற்றை(த் தன்னுடன் சேர்த்து)க் கொண்டு போய் சிலர் சிலரைவிட மிகைப்பார்கள். (இவ்வாறெல்லாம்) இவர்கள் வர்ணிப்பதை

விட்டும் அல்லாஹ் மிகவும் தூயவன்."

"அவன் மறைவானதையும் பகிரங்கமானதையும் நன்கறிபவன்; எனவே அவர்கள் (அவனுக்கு) இணை வைப்பவற்றை விட்டும் அவன் மிகவும் உயர்ந்தவன். " (அல்குர்ஆன் 23:91-92)

வர்க்க வேறுபாடு: மனிதனால் உருவாக்கப்பட்ட மார்க்கங்களில் பெரும்பாலும் மனிதர்களுக்கிடையில் வர்க்க வேறுபாடுகள் நிலவுகின்றன. ஓர் மார்க்கத்தை உருவாக்கியவன் தனக்கும், தன்னைச் சார்ந்தோருக்கும் மாத்திரம் பல சிறப்பம்சங்கள் இருப்பதாகக் கூறி மற்றவர்களை ஒதுக்குகிறான். தன் மதத்தைப் பின்பற்றும் மற்றவர்களை அடிமைகள் போன்று நடத்தி, தங்கள் விடயங்களை சாதித்துக்கொள்கிறான். அல்லாஹ் கூறுகிறான், *"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்."* (அல்குர்ஆன் 49:13)

பிற மனிர்களை இழிவாகக் கருதுவதையும், பரிகாசம் செய்வதையும் அல்லாஹ் தடுத்துள்ளான். *"ஒரு சமூகத்தார் பிறியதொரு சமூகத்தாரைப் பரிகாசம் செய்ய வேண்டாம். ஏனெனில் (பரிகசிக்கப்படுவோர்), அவர்களைவிட மேலானவர்களாக இருக்கலாம்"* (அல்குர்ஆன் 49:11)

எனவே தான் அல்லாஹ்விடத்தில் கறுப்பனை விட வெள்ளையனுக்கோ, ஓர் இனத்தை விட இன்னோர் இனத்திற்கோ, ஓர் சமூகத்தை விட இன்னோர் சமூகத்திற்கோ எவ்வித சிறப்புக்களும் கிடையாது. மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட மார்க்கங்களில் மாத்திரம் இத்தகைய பிரிவினைகளை நம்மால் காணமுடிகின்றது.

இயல்புக்கு முரணான அம்சங்கள்: இத்தகைய மார்க்கங்களில் இயல்புக்கு முரணான பல அம்சங்கள் காணப்படுகின்றன. மனிதனுக்கு செய்ய இயலாத பல விடயங்களை வட்புறுத்தி செய்ய வைக்கின்றனர். மனிதனின் இயல்பு நிலையில் அமைந்த வாழ்வுக்குப் புறம்பான, முரணான, புத்தியால் கூட ஏற்றுக்கொள்ள முடியாத பல அம்சங்கள் நடந்தேறுகின்றன.

சாதி வேற்றுமைகள்

"இந்துக்களிடம் சாதி வேற்றுமை பின்வருமாறு அமையப்பெற்றுள்ளது: பிராமணர்கள்: இவர்களுள் மார்க்க அறிஞர்களும், கல்வி ஞானம் பெற்றோரும் உள்ளடங்குவர். சத்ரியர்கல்: இவர்களுள் பிரபுக்களும், வீரர்களும் உள்ளடங்குவர், வைசியர்கள்: இவர்களுள் வியாபாரிகளும், விவசாயிகளும் உள்ளடங்குவர். சூத்திரர்கள்: இவர்களுள் கைத்தொழில் செய்பவர்களும் உழைக்கும் வர்க்கத்தினரும் உள்ளடங்குவர். உயர் சாதியினர் கீழ் சாதியினரை அடிமை போல் நடாத்துவர். கீழ் சாதியினர் மேல்

எனவே இம் மார்க்கங்களைப் பின்பற்றும் மனிதர்கள் கூட மிகக் கடினத்துடனும், பொறுமையுடனும், இவற்றை செய்யாவிட்டால் தெய்வக்குற்றம் ஆகிவிடும் என்ற எண்ணத்திலும் நிறைவேற்றுகின்றனர். இதனால் நேரான வழியில் இருந்து தீய வழிக்கு மாறிவிடுகின்றனர். அல்லாஹ் கூறுகிறான், ஆகவே, நீர் உம்முகத்தை தூய (இஸ்லாமிய) மார்க்கத்தின் பக்கமே முற்றிலும் திருப்பி நிலைநிறுத்துவீராக! எ(ந்த மார்க்கத்)தில் அல்லாஹ் மனிதர்களைப் படைத்தானோ அதுவே அவனுடைய (நிலையான) இயற்கை மார்க்கமாகும்; அல்லாஹ்வின் படைத்தலில் மாற்றம் இல்லை; அதுவே நிலையான மார்க்கமாகும். ஆனால் மனிதரில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள். *(அல்குர்ஆன் 30:30)*

மூடநம்பிக்கைகள்: இது புத்தி ரீதியான, லாஜிக் அடிப்படையிலான எவ்விதக் காரணங்களுமின்றி வெறும் கற்பனைகளால் மாத்திரம் தோன்றிய சிந்தனைகளும், கோட்பாடுகளுமாகும். மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட மார்க்கங்களில் எவ்வித ஆதாரங்களும் இல்லாமல் பல வகையான மூடநம்பிக்கைகள் உருவாகியிருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான், "(நபியே!) நீர் கூறுவீராக: "நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால், உங்களுடைய ஆதாரங்களைக் கொண்டு வாருங்கள்."" *(அல்குர்ஆன் 27:64)*

முரண்பாடுகள்: இத்தகைய மார்க்கங்களில் ஏகப்பட்ட முரண்பாடுகள் கொட்டிக் கிடக்கின்றன. ஓர் தரப்பினர் ஒரு விடயத்தை முரண் என காண்கின்ற போது, இன்னோர் தரப்பு அதற்கு மாற்றமான முறையில் பல கருத்துக்கள் தெரிவித்து, தங்கள் கருத்தை மேலும் மெருகூட்ட முயற்சிகள் மேற்கொள்கின்றனர். அல்லாஹ் கூறுகிறான், "அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா, (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால், இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்." *(அல்குர்ஆன் 04:82)*

ஆனால் அல்லாஹ்விடமிருந்து வந்த மார்க்கங்கள் மனித இனத்திற்குக் கிடைத்த பெரும் வரமாகும். அவை மனிதனுக்கு சரியான பாதையைக் காட்டி, அதற்கு தகுந்த ஆதாரங்களையும் முன்வைத்து, மூடநம்பிக்கைகள், இயற்கைக்கும், புத்திக்கும் புறம்பான அம்சங்கள், இணைவைப்பு போன்ற அனைத்து விடயங்களிலிருந்தும் மனிதனை தூரப்படுத்துகின்றன. இவைகள் நபிமார்கள் ஊடாக அல்லாஹ் மனித சமுதாயத்திற்கு வழங்கியுள்ளான். "தூதர்கள் வந்தபின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களுக்கு (சாதகமாக) ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, தூதர்கள் (பலரையும்) நன்மாராயங் கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பினான்); மேலும் அல்லாஹ் (யாவரையும்) மிகைத்தவனாகவும், பேரறிவாளனாகவும் இருக்கின்றான்." *(அல்குர்ஆன் 04:165)*

பௌத்தர்களின் முரண்பாடுகள்

"பௌத்தர்கள் இறைவனை மறுத்து, கௌதம புத்தரை அல்லாஹ்வின் புதல்வன் என வாதிட்டு, அவரையே கடவுளாக வணங்குகின்றனர். அவர்கள்

الطريق إلى السعادة
The Path to Happiness

நபிமார்களும், ரஸூல்மார்களும்

நபிமார்களும், ரஸூல்மார்களும்

மனிதர்களுக்கு தூதுவர்கள் அவசியம் தானா?

தூதுத்துவத்தினதும், தீர்க்கதரிசனத்தினதும் யதார்த்தம்

நபித்துவத்தின் அடையாளங்கள்

நபிமார்கள், ரஸூல்மார்களின் அழைப்புப் பணியின் போக்கு,

உலுல் அஸ்ம் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் தூதுவர்களின் வாழ்விலிருந்து சில குறிப்புக்கள்...

நபிமார்களும், ரஸூல்மார்களும்

மனிதர்களுக்கு தூதுவர்கள் அவசியம் தானா?

அல்லாஹ் மனிதர்களை இயல்பான ஓர் அமைப்பில் படைத்துள்ளான். அவர்களுக்கு நன்மைகளையும், தீமைகளையும் வெவ்வேறாகப் பிரித்தறிவதற்காக சிந்தனா சக்தியையும், அறிவாற்றலையும் வழங்கியுள்ளான். இவ்வாறு வழங்கப்பட்ட அறிவாற்றலில் நல்ல விடயங்களை சிந்திக்கும் திறன், தீயவைகளைப் பிரித்தறியும் திறன் போன்றன ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுகின்றன. இவ்வாறான வித்தியாசங்கள் அவர்களுக்கு மத்தியில் பல பிளவுகளையும், முரண்பாடுகளையும் தோற்றுவிக்கின்றன. ஒருவர் சரி காண்பதில் இன்னொருவர் பிழை காண்பார். அவ்வாறே ஒருவர் கூறிய கருத்துக்கள் கூட காலப்போக்கில் தவறானதாக மாறிவிடுகின்றது. சர்வ சாதாரணமாக ஒருவருடன் பேசிக்கொள்ளும் விடயங்களைக் கூட துள்ளியமாக நினைவில் வைத்திருப்பதற்கு முடியாதுள்ளது. இவ்வாறு, தாம் கூறும் கருத்துக்களுக்கும், பேசும் விடயங்களுக்கும் உத்தரவாதம் இல்லாத இச் சிந்தனா சக்திகள் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப்பெறும் ஏவல், விலக்கல்களை துள்ளியமாக அறிவதற்கும், அதனை நினைவில் வைத்திருப்பதற்கும் இயலாதவைகளாகத் தான் இருக்கும். எனவே அல்லாஹ்வை நேரடியாக சந்தித்து, அவன் வழங்கும் ஏவல், விலக்கல்களை எவ்வாறு நினைவில் வைத்து, மக்களுக்குக் கூற முடியும்... அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ் எந்த மனிதரிடத்திலும் வஹீயாகவோ; அல்லது திரைக்கப்பால் இருந்தோ; அல்லது தான் விரும்பியதைத் தன் அனுமதியின் மீது வஹீயை அறிவிக்கக் கூடிய ஒரு தூதரை அனுப்பியோ அன்றி (நேரிடையாகப்) பேசுவதில்லை; நிச்சயமாக அவன் உயர்ந்தவன்; ஞானமுடையவன்." (அல்குர்ஆன் 42:51)

இதனால் தான் அல்லாஹ் தனக்கும் தனது அடியார்களுக்கும் சிறந்த தூதுவர்களாக இருப்பதற்காக மனிதர்களிலேயே சிறந்தவர்களை நபிமார்களாகவும், ரஸூல்மார்களாவும் தேர்ந்தெடுக்கின்றான். அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ் மலக்குகளிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் தூதர்களை தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்! நிச்சயமாக

சாதாரணமாக இரு

"புகழின் உச்சத்தில் இருந்தாலும் முஹம்மத் அவர்கள் சாதாரணமாகத் தான் இருந்தார்கள். ஒரு தொகையினர் இருக்கும் அறையில் அவர் நுழையும் போது அவருக்காக அனைவரும் எழுந்து நின்று மரியாதை செய்வதையும், தன்னை அளவு கடந்து புகழ்வதையும் அவர்

வாஷிங்டன் இர்விங்
அமெரிக்க தூதரக அதிகாரி மற்றும் இலக்கியவாதி

அல்லாஹ் (எல்லாவற்றையும்) செவியேற்பவன்; பார்ப்பவன்." (அல்குர்ஆன் 22:75)

அவர்கள் மனிதர்களை தமது இறைவன் பக்கம் அழைப்பார்கள். அல்லாஹ்வுக்கு எதிராக மக்களிடம் எவ்வித கருத்துக்களோ, கொள்கை கோட்பாடுகளோ நிலவக் கூடாது என்பதற்காக அவர்களை மூடநம்பிக்கைகள், இணைவைப்புக்கள், விக்கிர ஆராதனைகள் போன்ற இருள் சூழ்ந்த வாழ்விலிருந்து சாந்தமான ஓர் வாழ்வின் பக்கம் வெளியேற்றுவர். அல்லாஹ் கூறுகின்றான், "தூதர்கள் வந்தபின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களுக்கு (சாதகமாக) ஆதாரம் எதுவும் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு, தூதர்கள் (பலரையும்) நன்மாராயங் கூறுபவர்களாகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும் (அல்லாஹ் அனுப்பினான்)" (அல்குர்ஆன் 04:165)

மனிதர்களிலிருந்தே தூதுவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கே திரும்ப அனுப்புவது அல்லாஹ் தன் அடியார்களுக்கு வழங்கிய மிகப்பெரிய அருட்கொடையாகும். ஏனெனில் அல்லாஹ்வின் தூதுவர்கள் மனிதர்களாக இருப்பதனால், பிற மனிதர்களின் கருத்துவேறுபாடுகளையும், பெருத்த முரண்பாடுகளையும் அறிந்து, அவற்றைத் தீர்த்து, அவர்களை தூய்மைப்படுத்தி, சீர்திருத்துவர். அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களுக்கு அருள் புரிந்திருக்கின்றான்; அவன் அவர்களுக்கு அவர்களிலிருந்தே ஒரு ரஸூலை(தூதரை) அனுப்பி வைத்தான்; அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கிறார்; இன்னும் அவர்களைப் (பாவத்தைவிட்டும்) பரிசுத்தமாக்குகிறார்; மேலும் அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார் - அவர்களோ நிச்சயமாக இதற்கு முன் பகிரங்கமான வழி கேட்டிலேயே இருந்தனர்." (அல்குர்ஆன் 03:164)

எனவே மக்களை வழிகேட்டிலிருந்து நேர்வழியின் பக்கம் திருப்புவதற்கு அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் மனிதர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பது பின்வரும் வசனத்தின் ஊடாகப் புலனாகின்றது. "அவன் அவர்களுக்கு அவர்களிலிருந்தே ஒரு ரஸூலை(தூதரை) அனுப்பி வைத்தான்"

நபிமார்களும், ரஸூல்மார்களும் மனிதனுக்கு அல்லாஹ்வின் வேதத்தைக் கற்றுக்கொடுத்தனர். அல்லாஹ்வின் இறைத் தன்மையையும், அதன் பிரத்தியேக அம்சங்களையும் அவன் தெரிந்து கொள்வதற்காய் அவனுக்கு அல்லாஹ்வின் தன்மைகள், அவனின் பண்புகள் போன்றவற்றைத் தெளிவுபடுத்தினர். மனிதன்

அல்லாஹ்வின் அற்ப அடிமை என்றும், அவனது வாழ்வு, மரணம், குடியிருப்பு, அவனின் நடத்தைகள் போன்றவை அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கும் என்பதையும் விளங்கப்படுத்தினர். அவ்வாறே அவனது உள்ளம் உயிர்த்தெழுந்து, தீய விடயங்களை விட்டும் தூய்மையாகுவதற்கான வழிமுறைகளையும் போதித்து, இவ் வானங்கள் மற்றும் பூமியை விடவும் பிரம்மாண்டமான சுவனத்தின் பக்கம் அவனை அழைத்தனர். கருத்து வேற்றுமைக்கு மத்தியில் இருந்த இம் மனிதனை இவ்வாறானதோர் நிலைக்கு நபிமார்களும், ரஸூல்மார்களும் உயர்த்திச் சென்றது அல்லாஹ்வின் அருட்கொடையாக அமைந்து விடாதா?

மனிதர்களின் உள்ளங்களையும், அவர்களின் உணர்வுகள், சிந்தனைகள் போன்றவற்றையும், அவர்களின் வீடுகள், பொருட்கள், வாழ்வாதாரங்கள் என்பனவற்றையும், தாம் வாழும் குடும்பம், சமூகம், அதற்குரிய கட்டுக்கோப்புக்கள் ஆகியவைகளையும், இணைவைப்பு, சிலைவணக்கம், மூடநம்பிக்கைகள், கட்டுக்கதைகள் போன்றவற்றிலிருந்து தூய்மைப்படுத்துகின்றனர். மனிதம் என்ற ஓர் அம்சம் அவர்களிடம் பிரதிபலிப்பதற்காக அவர்களுக்கு சிறந்த பழக்கவழக்கங்களையும், பண்பாடுகளையும் சொல்லிக்கொடுத்து, மனிதம் என்ற அம்சத்தை ஒழித்து, ஈவிரக்கமற்ற தன்மைகளை விதைத்திடும் அறியாமையை விட்டும் அவர்களை பாதுகாக்கின்றனர். மனிதனின் உள்ளத்திலிருந்து எப்போது கடவுள் கொள்கை நீங்கிவிடுகின்றதோ, அன்றிலிருந்து அவனது உணர்வுகள் அவனை ஆக்கிரமித்து, வன்செயல்களின் பக்கம் அவனை கொண்டுசெல்கின்றது. இதை விட்டும் அவனைத் தடுப்பது நபிமார்களுக்கு கட்டாயக் கடமையாகத் திகழ்கின்றது.

அறிவீனம் என்பது பண்பு ரீதியான, பண்பாடுகள் ரீதியான, சமூக ரீதியான அத்துமீறல்கள், வன்செயல்கள், உண்மையான குறிக்கோல்களும், நோக்கங்களும் மழுங்கடிக்கப்பட்டு, தமது வாழ்வு சிறந்ததாகவும், மற்றவர்கள் வாழ்வு தமக்குக் கீழாலும் இருக்க வேண்டுமென்ற நிலைப்பாடுகள் என அனைத்து விடயங்களையும் குறிக்கின்றது. தற்போதைய நவீன உலகு எவ்வளவுதான் அறிவியல் வளர்ச்சி கண்டாலும் ஆதிகாலத்தில் காணப்பட்ட அதே அறிவீனம் தற்போதும் இருந்து கொண்டே தான் இருக்கின்றது. இது பற்றி அல்லாஹ் கூறுகிறான், "அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்" (அல்குர்ஆன் 62:02)

வழிகேடு என்பது சிந்தனை, கொள்கை கோட்பாடு, வாழ்வு பற்றிய புரிதல்கள், தமது நோக்கம், அதற்காய் பயணிக்கும் பாதை, பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள், சமூகப் பண்பாடுகள் போன்ற அனைத்திலும் ஏற்படுகின்றது. இவை அனைத்தும் ஒரு மனிதனைப் பிண்ணிப் பிணைந்திருக்கும் அம்சங்களாகும். இவைகளில் வழிகேடு ஏற்படுமானால் நிச்சயம் ஒரு மனிதனால் இதிலிருந்து மீள்வது மிகக் கடினமான ஓர் அம்சம் தான்.

மார்க்கத்தைப் பின்பற்றாத மனிதப் பேய்கள்

"ஓர் அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட புள்ளிவிபர ஆய்வறிக்கையொன்று டேவிட் பர்டன் எழுதிய (அமெரிக்கப் பெண்கள் ஜெபம் செய்கின்றனரா இல்லயா?) என்னும் நூலில் பிரசுரமாகியது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- *80 வீதமான அமெரிக்கப் பெண்கள் தங்கள் வாழ்நாளில் குறைந்தது ஒரு தடவையேனும் கற்பழிப்புக்கு உள்ளாகின்றனர்.*
- *ஒவ்வொரு நாளும் 1900 க்கும் மேற்பட்ட பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர். இதன்படி, 30 வீதமான பெண்கள் கர்ப்பம் தரிக்கின்றனர். அவர்களில் சிலர் கருச்சிதைவு மேற்கொள்ள, மேலும் சிலர் 14 வயதினிலே குழந்தையைப் பெற்றெடுக்கின்றனர்.*
- *இவ்வாறான கற்பழிப்பிற்கு இலக்காகுபவர்களில் 61 வீதமானவர்கள் 18 வயதிற்குக் குறைந்தவர்கள்.*
- *மேலும் 29 வீதமானவர்கள் குழந்தைப் பருவத்தைத் தாண்டிய 11 வயதிற்கும் குறைந்த பெண்களாவர்."*

டேவிட் பர்டன்

அமெரிக்க எழுத்தாளர்



தூதுத்துவத்தினதும், தீர்க்கதரிசனத்தினதும் யதார்த்தம்

ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அவர்களிலிருந்தே ஒருவரைத் தேர்வு செய்து தனது தூதுவராக அல்லாஹ் அனுப்பியுள்ளான்.

"(நபியே!) இன்னும் உமக்கு முன்னர் வஹீ கொடுத்து நாம் அவர்களிடம் அனுப்பி வைத்த தூதர்கள் எல்லோரும் ஆடவரே தவிர வேறல்லர்" *(அல்குர்ஆன் 16:43)*

அந்தந்த சமூகத்தினர் எந்த மொழியை பேசிக்கொண்டிருந்தனரோ அந்த மொழியிலேயே அத்தூதுவர்களும் தமது பிரச்சாரங்களை மேற்கொண்டனர். "ஒவ்வொரு தூதரையும் அவருடைய சமூகத்தாருக்கு அவர் விளக்கிக் கூறுவதற்காக

அவர்களுடைய மொழியிலேயே (போதிக்கும் படி) நாம் அனுப்பிவைத்தோம்; அல்லாஹ் தான் நாடியோரை வழிதவறச் செய்கின்றான், தான் நாடியோருக்கு நேர்வழியையும் காண்பிக்கின்றான்; அவன் மிகைத்தவனாகவும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான்." (அல்குர்ஆன் 14:04)

நபிமார்களும், ரஸூல்மார்களும் சமயோசிதம், உண்மை, நம்பிக்கை, தீய செயல்கள் புரியாத குணம், சீரான உடலமைப்பு போன்ற பண்புகளைப் பெற்றிருந்தனர். அவர்களது உள்ளங்களையும், பண்புகளையும் அல்லாஹ் தூய்மையாக்கி, அவர்களை மனிதர்களிலே மிகவும் சிறந்தவர்களாக மாற்றிவிட்டான். அவர்கள் நற்பண்புகளுக்கு உதாரணப் புருஷர்களாய்த் திகழ்ந்தார்கள். அவர்களுக்கு பொறுமை, சகிப்புத் தன்மை, அறிவாற்றல், கௌரவம், கொடை, வீரம், நீதம் போன்ற இன்ன பிற பண்புகளையும் கொடுத்து, அந்தந்த சமூகங்களில் பிறரை விட இவர்களை பிரித்தறிவதற்கு இலகுவான ஓர் அமைப்பையும் ஏற்படுத்தினான். இப்படியான குணாதிசயங்களைப் பெற்றவர் தான் அல்லாஹ்வின் தூதுத்துவத்தை இவ்வுலகில் நிலைநாட்டுவதற்குப் பொருத்தமானவர். அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ் தனது தூதை எங்கு, அமைக்க வேண்டுமென்பதை நன்கு அறிவான்" (அல்குர்ஆன் 06:124)

மேலும், "ஆதமையும், நூஹையும், இப்றாஹீமின் சந்ததியரையும், இம்ரானின் சந்ததியரையும் நிச்சயமாக அல்லாஹ் அகிலத்தாரை விட மேலாக தேர்ந்தெடுத்தான்." (அல்குர்ஆன் 03:33)

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பற்றிக் கூறும் போது, "மலக்குகள் கூறினார்கள்; "மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னிடமிருந்து வரும் ஒரு சொல்லைக் கொண்டு உமக்கு (ஒரு மகவு வரவிருப்பது பற்றி) நன்மாராயங் கூறுகிறான். அதன் பெயர் மஸீஹ்; மர்யமின் மகன் ஈஸா என்பதாகும். அவர் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் கண்ணியமிக்கோராகவும் (இறைவனுக்கு) நெருங்கி இருப்பவர்களில் ஒருவராகவும் இருப்பார்;"

"மேலும், அவர் (குழந்தையாகத்) தொட்டிலில் இருக்கும்போதும், (பால்யம் தாண்டி) முதிர்ச்சியடைந்த பருவத்திலும் அவர் மக்களுடன் பேசுவார்; இன்னும் (நல்லொழுக்கமுடைய) சான்றோர்களில் ஒருவராகவும் அவர் இருப்பார்." (அல்குர்ஆன் 03:45-46)

அவ்வாறே முஹம்மத் ﷺ அவர்களும் தாம் நபியாக அனுப்பப்படுவதற்கு முன்னர் உண்மையாளர், நம்பிக்கையாளர் என தமது சமூகத்தினரால் அழைக்கப்பட்டார்கள். "மேலும், (நபியே) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர்." (அல்குர்ஆன் 68:04)

இப்படியான உயரிய பண்புகளால் அல்லாஹ் அந்நபிமார்களையும், ரஸூல்மார்களையும் வர்ணித்த போதிலும், அவர்களும் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் தான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எமக்குப் பசி ஏற்படுவதைப் போன்று அவர்களுக்கும் ஏற்படும். அவர்களும் நோய்வாய்ப்படுவார்கள், உறங்குவார்கள், உண்ணுவார்கள், திருமண பந்தத்தில்

இணைவார்கள், மரணிப்பார்கள். அல்லாஹ் கூறுகிறான், "(நபியே!) நிச்சயமாக உமக்கு முன்னரும், நாம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; அவர்களுக்கும் மனைவியரையும், சந்ததிகளையும் நாம் ஏற்படுத்தியிருந்தோம்" (அல்குர்ஆன் 13:38)

மேலும், "நிச்சயமாக நீரும் மரிப்பவர்; நிச்சயமாக அவர்களும் மரிப்பவர்களே." (அல்குர்ஆன் 39:30)

முஹம்மத் ﷺ அவர்களைப் பார்த்து அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ் வெளியாக்க இருந்ததை, மனிதர்களுக்குப் பயந்து நீர் உம்முடைய மனத்தில் மறைத்து வைத்திருந்தீர்" (அல்குர்ஆன் 33:37)

அவர்கள் மனிதர்களாக இருந்ததன் காரணத்தினால் தான் சிலர் கொல்லப்பட்டனர், சிலர் வீட்டை விட்டும் வெளியேற்றப்பட்டனர். வேறு சிலர் கொடுமைப்படுத்தப்பட்டனர். அல்லாஹ் கூறுகிறான், "(நபியே!) உம்மைச் சிறைப்படுத்தவோ, அல்லது உம்மைக் கொலை செய்யவோ அல்லது உம்மை (ஊரைவிட்டு) வெளியேற்றிவிடவோ நிராகரிப்போர் சூழ்ச்சிசெய்ததை நினைவு கூறுவீராக; அவர்களும் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர்; அல்லாஹ்வும் (அவர்களுக்கு எதிராகச்) சூழ்ச்சி செய்து கொண்டிருந்தான். சூழ்ச்சி செய்வோரில் எல்லாம் அல்லாஹ் மிகவும்

நபித்துவத்தின் அடையாளங்கள்

அல்லாஹ் தனது தூதுத்துவத்தை இவ்வுலக மனிதர்களுக்கு எத்திவைப்பதற்காய் தேர்ந்தெடுத்த நபிமார்களிடம், அவர்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தூதர்கள் தான் என்பதற்கான ஆதார்ங்கள், அடையாளங்கள் போன்றன அவர்களிடம் காணப்பட வேண்டும். அப்போது தான் அவர்கள் உண்மையாளர்கள் என்பதை மக்களும் அறிந்து, இவர்கள் போதிப்பவற்றை ஏற்று நடப்பார்கள். இல்லாவிடில் இவரும் நம்மைப் போன்ற ஓர் மனிதர் தானே என அவர்களை கண்டுகொள்ளாமல் இருந்துவிடுவர். அல்லாஹ் கூறுகிறான், "நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம்" (அல்குர்ஆன் 57:25)

நபிமார்களை உண்மைப்படுத்தும் அவ் ஆதாரங்கள், அடையாளங்கள் பின்வருமாறு:

1- அல்லாஹ் தனது தூதுவர்களை மக்களால் கொண்டுவர முடியாத பல அத்தாட்சிகளைக் கொடுத்து, அனுப்புவான். அவைகள் வழமைக்கு மாற்றமான, எவராலும் செய்ய முடியாத, அக்காலத்தில் வாழும் மக்களுக்கு பெரும் சாவாலான அம்சங்களாகத் திகழும். அதில் ஒன்று தான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கைத்தடி. அதை தரையில் போட்டால் பாம்பாக உருவெடுத்து விடும். அல்லாஹ்

கூறுகிறான், ""மூஸாவே! உம்முடைய வலது கையில் இருப்பது என்ன?" (என்றும் அல்லாஹ் கேட்டான்.)"

"(அதற்கவர்) "இது என்னுடைய கைத்தடி; இதன் மீது நான் சாய்ந்து கொள்வேன்; இதைக் கொண்டு என் ஆடுகளுக்கு இலைகள் பறிப்பேன்; இன்னும் இதில் எனக்கு வேறு தேவைகளும் நிறைவேறுகின்றன" என்று கூறினார்."

"அதற்கு (இறைவன்) "மூஸாவே! அதை நீர் கீழே எறியும்" என்றான்."

"அவ்வாறே அவர் அதனைக் கீழே எறிந்தார்; அப்போது அது ஊர்ந்து செல்லும் ஒரு பாம்பாயிற்று."

"(இறைவன்) கூறினான்: "அதைப் பிடியும்; பயப்படாதீர்; உடனே நாம் அதை அதன் பழைய நிலைக்கே மீட்டுவோம்."

"இன்னும், உம் கையை உம் விலாப்புறமாக புகுத்தி (வெளியில்) எடும்; அது ஒளி மிக்கதாய் மாசற்ற வெண்மையாக வெளிவரும்; இது மற்றோர் அத்தாட்சியாகும்."

"(இவ்வாறு) நம்முடைய பெரிய அத்தாட்சிகளிலிருந்து (சிலவற்றை) உமக்குக் காண்பிக்கிறோம்." (அல்குர்ஆன் 20:17-23)

அவ்வாறே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு குருட்டுத் தனத்தையும், வெண்குஷ்டத்தையும் போக்கும் மருத்துவ அத்தாட்சியையும், அல்லாஹ்வின் அனுமதியுடன் இறந்தவரை உயிர்ப்பிக்கும் வல்லமையையும் கொடுத்தான். அல்லாஹ் கூறுகிறான், "(அச்சமயம் மர்யம்) கூறினார்: "என் இறைவனே! என்னை ஒரு மனிதனும் தொடாதிருக்கும்போது எனக்கு எவ்வாறு ஒரு மகன் உண்டாக முடியும்?" (அதற்கு) அவன் கூறினான்: "அப்படித்தான் அல்லாஹ் தான் நாடியதைப் படைக்கிறான். அவன் ஒரு காரியத்தைத் தீர்மானித்தால், அவன் அதனிடம் "ஆகுக" எனக் கூறுகிறான், உடனே அது ஆகி விடுகிறது."

இன்னும் அவருக்கு அவன் வேதத்தையும், ஞானத்தையும், தவ்ராத்தையும், இன்ஜீலையும் கற்றுக் கொடுப்பான்.

இஸ்ராயீலின் சந்ததியினருக்குத் தூதராகவும்

(அவரை ஆக்குவான்; இவ்வாறு அவர் ஆகியதும் இஸ்ரவேலர்களிடம் அவர்:) "நான் உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அத்தாட்சியுடன் நிச்சயமாக வந்துள்ளேன்; நான் உங்களுக்காக களிமண்ணால் ஒரு பறவையின் உருவத்தை உண்டாக்கி நான் அதில் ஊதுவேன்; அது அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு (உயிருடைய) பறவையாகிவிடும். பிறவிக் குருடர்களையும், வெண் குஷ்டரோகிகளையும் குணப்படுத்துவேன்; அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு இறந்தோரையும் உயிர்ப்பிப்பேன்; நீங்கள் உண்பவற்றையும், நீங்கள் உங்கள் வீடுகளில் சேகரம் செய்து வைப்பவற்றையும் பற்றி நான் உங்களுக்கு எடுத்துக் கூறுவேன். நீங்கள் முஃமின்கள் (நம்பிக்கையாளர்) ஆக இருந்தால் நிச்சயமாக இவற்றில் உங்களுக்குத் திடமான அத்தாட்சி இருக்கிறது" (என்று கூறினார்).



"எனக்கு முன் இருக்கும் தவ்ராத்தை மெய்பிக்கவும், உங்களுக்கு விலக்கி வைக்கப்பட்டவற்றில் சிலவற்றை உங்களுக்கு அனுமதிக்கவும் உங்கள் இறைவனிடமிருந்து (இத்தகைய) அத்தாட்சியை உங்களிடம் நான் கொண்டு வந்திருக்கிறேன்; ஆகவே நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; என்னைப் பின் பற்றுங்கள்."

"நிச்சயமாக அல்லாஹ்வே என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவனும் ஆவான்; ஆகவே அவனையே வணங்குங்கள் இதுவே (ஸிராத்துல் முஸ்தகீம் என்னும்) நேரான வழியாகும்." (அல்குர்ஆன் 03:47-51)

முஹம்மத் ﷺ அவர்களுக்கு அத்தாட்சியாக அல்குர்ஆனை அல்லாஹ் வழங்கினான். ""இந்த குர்ஆனை போன்ற ஒன்றைக் கொண்டுவருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து (முயன்று), அவர்களில் ஒரு சிலர் சிலருக்கு உதவிபுரிபவர்களாக இருந்தாலும், இது போன்ற ஒன்றை அவர்கள் கொண்டு வரமுடியாது" என்று (நபியே) நீர் கூறும்."

"நிச்சயமாக, இந்த குர்ஆனில் மனிதர்களுக்காக சகலவிதமான உதாரணங்களையும் (மிகவும் தெளிவாக) விவரித்துள்ளோம்; எனினும், மனிதர்களில் மிகுதியானவர்கள் (இதை)

நிலையான அற்புதம்

"முஹம்மதுக்கு முன் தோன்றிய நபிமார்களின் அற்புதங்கள் அக்காலத்தோடு முடிவடைந்து விட்டன. ஆனால் முஹம்மதுக்கு வழங்கப்பட்ட புனித நூலான அல்குர்ஆன் நிலையான அற்புதமாக, சிறிதம் மாற்றமடையாமல் இருக்கின்றது. இதை அல்குர்ஆனை வாசிக்கும் ஓர் இறை விசுவாசியால் உணர்ந்துகொள்ள முடியும். இவ் அற்புதத்தில் அது கூறவரும் அம்சங்கள் அனைத்தையும் தெளிவாய் எம்மால் கண்டுகொள்ள முடிகின்றது. ஆனால் ஐரோப்பியர்கள் இன்னும் இதனை ஓர் அற்புதமாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் அவர்கள் மொழிபெயர்ப்புக்களை மாத்திரமே வாசிக்கின்றனர். அதனால் அல்குர்ஆனின் அதிக நுட்பமான விடயங்களை அவர்களால்

எடீன் டெனியே

பிரேஞ்சு சிந்தனையாளர் மற்றும் ஓவியர்



நிராகரிக்காதிருக்கவில்லை." *(அல்குர்ஆன் 17:88-89)*



உண்மையான கிறிஸ்தவம்

"முஹம்மத் தூய்மையான வடிவில் மாற்ற நினைத்த கிறிஸ்தவ மார்க்கம், பவ்ல் போதித்து வந்த இரகசிய போதனைகளுக்கும், கிறிஸ்தவ அறிஞர்களால் புகுத்தப்பட்ட கொடூரமான தவறுகளுக்கும் முரண்பட்ட ஒன்றாகவே இருந்தது. முஹம்மத் தனது போதனைகளை இப்றாஹிமின் வழித்தோன்றல்களுக்கு மாத்திரம் உரிய ஒன்றாக ஆக்கிவிடாமல், உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஓர் போதனையாக மாற்றிவிட்டார். இவர் போதித்த நடுநிலையான மார்க்கத்தை பல மில்லயன் மக்கள் பின்பற்ற ஆரம்பித்தனர். இம்மார்க்கம் மாத்திரம் வந்திராவிடில் அனைத்து மனிதர்களும் காட்டுமிராண்டிகளா மாறி,

லைட்னர்

ஆங்கில கீழைத்தேயவாதி

இவ்வாறான பல்வேறு அத்தாட்சிகளை நபிமார்கள், ரஸூல்கள் அனைவருக்கும் வழங்கினான்.

இவ்வாறு நபிமார்கள், ரஸூல்மார்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட அத்தாட்சிகளை உண்ணிப்பாகப் பார்க்கின்ற போது, அறிவு, ஆற்றல், செல்வம் முதலிய மூன்று படித்தரங்களில் இவை அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. முன்னைய காலகட்டங்களில் நடைபெற்றவற்றையும், இனி வரும் காலங்களில் நடைபெறப்போகின்ற அம்சங்கள் பற்றியும் அறிவிப்புச் செய்யும் அம்சம் அறிவில் உள்ளடங்கும். (ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது சமூகம் சாப்பிட்டவற்றையும், வீடுகளில் சேமித்து வைத்திருந்த செல்வ நிலைகளைப் பற்றியும் கூறியது, முஹம்மத் ﷺ அவர்கள், முன்னைய சமூகங்களின் வரலாறுகள், இவ்வுலகில் நடந்தேறும் பிரச்சினைகள், மறுமை நாளின் அடையாளங்கள் போன்றவற்றைக் கூறியது போன்றன இதற்கு உதாரணங்களாகும்.) கைத்தடியை பாம்பாக மாற்றுதல், குருட்டு, குஷ்டரோகம் போன்றவற்றை குணப்படுத்துதல், இறந்தவற்களை உயிர்த்தெழ வைத்தல், முஹம்மத் ﷺ அவர்களை மனிதர்களின் கொடுமைகளிலிருந்தும் ஆபத்துக்களிலிருந்தும் பாதுகாத்தல் போன்றன ஆற்றல் என்ற அம்சத்தினுள் உள்ளடங்குகின்றன. அல்லாஹ் கூறுகிறான், "தூதரே! உம் இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும்; (இவ்வாறு) நீர் செய்யாவிட்டால், அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராகமாட்டீர்; அல்லாஹ் உம்மை மனிதர்களி(ன் தீங்கி)லிருந்து காப்பாற்றுவான்; நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் கூட்டத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான்." *(அல்குர்ஆன் 05:67)*

நபிமார்களும், ரஸூல்மார்களும் செய்துகாட்டிய அனைத்து அத்தாட்சிகளும் இம்மூன்று அம்சங்களினுள் வந்துவிடுகின்றது என்றால் இவையனைத்தையும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் வழங்க முடியாது என்பது புலனாகின்றது.

2- முன்னர் வந்த நபிமார்கள் தமக்குப் பின்னால் வரப்போகும் நபிமார்களைப் பற்றி அறிவிப்புச் செய்தல்.

நபித்துவத்தை உண்மைப்படுத்தும் அடையாளங்களில் முன்னைய நபிமார்கள் தமக்குப் பின்னர் வர இருக்கும் நபிமார்களைப் பற்றி முன்னறிவிப்புச் செய்துவிட்டுச் செல்வதும் ஒன்றாகும். அல்லாஹ் அந் நபிமார்கள் மூலம் இவர்களுக்குப் பின்னர் வரும் அனைத்து நபிமார்களுக்கும் மனிதர்கள் கட்டுப்பட்டு நடக்கும் படியாக உறுதிமொழி வாங்கிவிடுகிறான். அல்லாஹ் கூறுகிறான், "(நினைவு கூருங்கள்:) நபிமார்(கள் மூலமாக அல்லாஹ் உங்கள் முன்னோர்)களிடம் உறுதிமொழி வாங்கியபோது, "நான் உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கொடுத்திருக்கின்றேன். பின்னர் உங்களிடம் இருப்பதை மெய்ப்பிக்கும் ரஸூல் (இறைதூதர்) வருவார். நீங்கள் அவர்மீது திடமாக ஈமான் கொண்டு அவருக்கு உறுதியாக உதவி செய்வீர்களாக" (எனக் கூறினான்). "நீங்கள் (இதை) உறுதிப்படுத்துகிறீர்களா? என்னுடைய இந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்படுகிறீர்களா?" என்றும் கேட்டான்; "நாங்கள் (அதனை ஏற்று) உறுதிப்படுத்துகிறோம்" என்று கூறினார்கள்; (அதற்கு அல்லாஹ்) "நீங்கள் சாட்சியாக இருங்கள்; நானும் உங்களுடன் சாட்சியாளர்களில் (ஒருவனாக) இருக்கிறேன்" என்று கூறினான்." (அல்குர்ஆன் 03:81)

3- நபிமார்களின் சமூகப்பிணைப்பைப் பற்றி ஆய்வுசெய்வதன் மூலம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்கள் என்பதை அறிதல்.

நபிமார்களும், ரஸூல்மார்களும் மக்களுடன் மக்களாக கலந்து வாழ்வதனால் அவர்களின் வாழ்க்கை, வரலாறுகளை அறிந்து கொள்வதற்கு யாரும் முற்படுவதில்லை. இதனால் அவர்களை உண்மைப்படுத்தவும் பலர் முன்வருவதில்லை. கண்ணிப் பெண்ணாக இருந்த மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அவர்களது மகன் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பற்றியும் மக்கள் சந்தேகம் கொண்ட போது, அல்லாஹ் உண்மையான நிலவரத்தை அவர்களுக்கு தெளிவுபடுத்தினான். "பின்னர் (மர்யம்) அக்குழந்தையைச் சுமந்து கொண்டு தம் சமூகத்தாரிடம் வந்தார்; அவர்கள் கூறினார்கள்: "மர்யமே! நிச்சயமாக நீர் ஒரு விபரீதமான பொருளைக் கொண்டு வந்திருக்கிறீர்!"

"ஹாரூனின் சகோதரியே! உம் தந்தை கெட்ட மனிதராக இருக்கவில்லை; உம் தாயாரும் நடத்தை பிசகியவராக இருக்கவில்லை" (என்று பழித்துக் கூறினார்கள்).

உண்மையான சாட்சி

"முஹம்மத் ஒரு போதும் தனக்கு கடவுள் தன்மை இருப்பதாக தன் சமூகத்தாரிடம் கூறியதில்லை. மாறாக தான் ஓர் சாதாரண தூதன் எனவும், மக்களுக்கு தூய போதனைகளைக் கூறுவதற்காக அல்லாஹ்வால் அனுப்பட்டவர்

ரோம் லேண்டாவ்
ஆங்கில விமர்சகர்
மற்றும் சிற்பி

(ஆனால், தம் குழந்தையிடமே கேட்கும் படி) அதன் பால் சுட்டிக் காட்டினார்; "நாங்கள் தொட்டிலில் இருக்கும் குழந்தையுடன் எப்படிப் பேசுவோம்?" என்று கூறினார்கள்.

"நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கின்றேன்; அவன் எனக்கு வேதத்தைக் கொடுத்திருக்கின்றான்; இன்னும், என்னை நபியாக ஆக்கியிருக்கின்றான்.

"இன்னும், நான் எங்கிருந்தாலும், அவன் என்னை முபாரக்கானவனாக (நற்பாக்கியமுடையவனாக) ஆக்கியிருக்கின்றான்; மேலும், நான் உயிருடன் இருக்கும் காலமெல்லாம் தொழுகையையும், ஜகாத்தையும் (நிறை வேற்ற) எனக்கு வஸீய்யத் செய்து (கட்டளையிட்டு) இருக்கின்றான்.

"என் தாயாருக்கு நன்றி செய்பவனாக (என்னை ஏவியிருக்கின்றான்;) நற்பேறு கெட்ட பெருமைக்காரனாக என்னை அவன் ஆக்கவில்லை.

அல்லாஹ்வுக்காக பாரபட்சம் பாரப்பதில்லை

"முஹம்மத் என்பவர் அரேபிய தீபகற்பத்தின் தலைவராகத் திகழ்ந்தார். அவர் யாரையும் பட்டப்பெயர் கூறி அழைத்ததில்லை. தான் செல்வச் செழிப்புடன் வாழ வேண்டுமென நினைத்ததில்லை. மாறாக அல்லாஹ்வின் தூதர் என்னும் கண்ணியத்திலே முஸ்லிம்களுக்கு சேவை செய்த வண்ணம் இருந்தார். தன் வீட்டை தானே சுத்தம் செய்வார். தன் கையாலே தன் பாதணியை தைத்துக்கொள்வார். ஏழைகள், கஷ்டப்படுபவர்கள் போன்ற அனைவருக்கும் தன்னிடம் இருப்பவற்றை கொடுத்து உதவுவார். அதக சமயங்களில் தனக்குப்

எவ்லின் கோபோல்ட்

ஆங்கில உயர்குடிப்பெண்

"இன்னும், நான் பிறந்த நாளிலும், நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர் பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும்" என்று (அக்குழந்தை) கூறியது. (அல்குர்ஆன் 17:27-33)

இவ்வாறு தாயின் மடியிலிருக்கும் போதே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பேசினார்கள்.

முஹம்மத் ﷺ அவர்களுக்கு தூதுத்துவம் வழங்கப்படுவதற்கு முன்னதாகவே குறைஷியர்கள் அவர்களை நம்பிக்கையாளர், உண்மையாளர் என பெயர் சூட்டியிருந்தனர்.. ஏனெனில் அவரின் ஆளுமையும், வாழ்க்கை வரலாறும் இதற்கு ஓர் பெரும் சான்றாக அமைந்திருந்தது. *"(இதை நான் உங்களுக்கு ஓதிக் காட்டக்கூடாது என்று) அல்லாஹ் நாடியிருந்தால், இதனை நான் உங்களிடம் ஓதிக் காண்பித்திருக்க மாட்டேன்; மேலும் அதைப் பற்றி உங்களுக்கு அவன் அறிவித்திருக்கமாட்டான்; நிச்சயமாக நான் இதற்கு முன்னர் உங்களிடையே நீண்ட காலம் வசித்திருக்கிறேன் - இதை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டாமா?" என்று (நபியே!) நீர் கூறுவீராக."* (அல்குர்ஆன் 10:16)

4- நபிமார்களின் அழைப்புப் பணியைப் பற்றி ஆய்வு மேற்கொள்வதன் மூலம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்கள் என்பதை அறிந்துகொள்ளல்:

ஓர் தூதுவரின் அழைப்புப் பணியின் அடிப்படை அம்சம் ஏனைய தூதுவர்களின் அடிப்படை அம்சத்தோடு ஒத்துப்போக வேண்டும். ஏனெனில் அனைத்து தூதுவர்களும் ஏகத்துவகக் கொள்கையின் பக்கம் தான் மக்களை அழைத்திருக்கிறார்கள். அல்லாஹ் மனிதர்களைப் படைத்ததும், அவர்களுக்கு தூதுவர்களை அனுப்பியதும் இந்த ஓர் நோக்கத்துக்கேயாகும். அல்லாஹ் கூறுகிறான், *"(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை."* *(அல்குர்ஆன் 21:25)*

மேலும், *"நம்முடைய தூதர்களில் உமக்கு முன்னே நாம் அனுப்பியவர்களை "அர் ரஹ்மானையன்றி வணங்கப்படுவதற்காக (வேறு) தெய்வங்களை நாம் ஏற்படுத்தினோமா?" என்று நீர் கேட்பீராக. "* *(அல்குர்ஆன் 43:45)*

மேலும், *"மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், "அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்" என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்; எனவே அ(ந்த சமூகத்த)வர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்; வழிகேடே விதிக்கப்பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள்; ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள்."* *(அல்குர்ஆன் 16:36)*

முஹம்மத் ﷺ அவர்களும் இந்தக் கோட்பாட்டின் பக்கம் தான் மக்களை அழைத்தார்கள்.

எனவே சாதாரண மனிதர்களுக்கும், அல்லாஹ்வின் தூதுவர்களுக்கும் மத்தியிலுள்ள வித்தியாசம் வஹி மாத்திரமாகும். அல்லாஹ் கூறுகிறான், *"(நபியே!) நீர் சொல்வீராக: "நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதனே! நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீ அறிவிக்கப்பட்டிருக்கிறது; எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன்*

நானும் உங்களைப் போன்ற மனிதன் தான்.

"முஹம்மதின் வரலாறு ஆழுமை மிக்கது. அவர் மாத்திரம் இல்லாவிட்டால் இஸ்லாம் இவ்வாறு வளர்ச்சி கண்டிருக்க முடியாது. அவரும் ஏனையோரைப் போல் ஓர் மனிதர் தான். அவருக்கும் மரணம் ஏற்பட்டது. அவரும் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு வேண்டியுள்ளார். அவர் மரணிக்க முன்னர் தன் உள்ளத்தை பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்காய் மிம்பர் மேடேயில் ஏறி, 'முஸ்லிம்களே! நான் உங்களில் யாரையாவது கொன்றிருந்தால் இதோ எனது முதுகு இருக்கின்றது, பழி தீர்த்துக்கொள்ளுங்கல். அல்லது

ஹென்றி ஸிரோயா

பிரேஞ்சு நாட்டைச் சேர்ந்த கீழைத்தேய வாதி



நபிமார்கள், ரஸூல்மார்களின் அழைப்புப் பணியின் போக்கு,

நபிமார்கள், ரஸூல்மார்கள் அனைவரினதும் அழைப்புப் பணியின் விதம் ஒன்றாகவே இருந்துள்ளது. அனைவரும் தமது அழைப்புப் பணியில் ஒரே விதமான போக்கையே கையாண்டிருக்கிறார்கள். அல்லாஹ் கூறுகிறான், *"நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான்; ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும் , ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்: "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்" என்பதே"* *(அல்குர்ஆன் 42:13)*

இதனால் தான் அனைத்து நபிமார்களின் மார்க்கங்களும் ஒன்றாகவே இருந்துள்ளது. அல்லாஹ் கூறுகிறான், *"(நம் தூதர்கள் ஒவ்வொருவரிடத்திலும்:) "தூதர்களே! நல்ல பொருள்களிலிருந்தே நீங்கள் உண்ணுங்கள்; (ஸாலிஹான) நல்லமல்களை செய்யுங்கள்; நிச்சயமாக நீங்கள் செய்பவற்றை நான் நன்கு அறிபவன் (என்றும்)"*

"இன்னும், நிச்சயமாக (சன்மார்க்கமான) உங்கள் சமுதாயம் (முழுவதும்) ஒரே சமுதாயம் தான்; மேலும், நானே உங்களுடைய இறைவனாக இருக்கின்றேன்; எனவே நீங்கள் எனக்கே அஞ்சுங்கள்" (என்றும் கூறினோம்). *(அல்குர்ஆன் 23:51-52)*

மார்க்கம் ஒன்றாக இருந்த போதிலும் அவர்களுக்கு மத்தியில் பல்வேறுபட்ட வழிமுறைகள் காணப்பட்டுள்ளன. அல்லாஹ் கூறுகிறான், *"உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம்"* *(அல்குர்ஆன் 05:48)*

இவ்வழிமுறைகள் கூட நபிமார்களின் அடிப்படையான போக்கிற்கு மாற்றமானதாக இருந்ததில்லை. அவ்வாறு மாற்றமாக இருந்திருந்தால் அவைகள் அனைத்தும் அல்லாஹ்வின் அருட்கொடைகளிலிருந்தும், மக்களை சீர்திருத்தும் நோக்கத்திலிருந்தும் விலகி நெறிபிறண்டிருக்கும். அல்லாஹ் கூறுகிறான், *"இன்னும் அந்த உண்மை அவர்களுடைய இச்சைகளைப் பின்பற்றி இருக்குமாயின் நிச்சயமாக வானங்களும், பூமியும் அவற்றிலுள்ளவைகளும் சீர்கெட்டுப் போயிருக்கும்."* *(அல்குர்ஆன் 23:71)*

அனைத்து நபிமார்களும், ரஸூல்மார்களும் தமது அழைப்புப் பணியில் அல்லாஹ்வையும், அவனது மலக்குகளையும், வேதங்களையும், நபிமார்கள், ரஸூல்மார்களையும், மறுமை நாள் மற்றும் விதியைப் பற்றிய நம்பிக்கை என்ற இவ் அனைத்து அம்சங்கள் பக்கமே மக்களை அழைத்திருக்கின்றனர். அல்லாஹ் கூறுகிறான், *"(இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார்; (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர்; இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள்: "நாம் இறை தூதர்களில் எவர் ஒருவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை; (என்றும்) இன்னும் நாங்கள் செவிமடுத்தோம்; (உன் கட்டளைகளுக்கு) நாங்கள் வழிப்பட்டோம்; எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம்; (நாங்கள்)*



மீளுவதும் உன்னிடமேதான்" என்று கூறுகிறார்கள். " (அல்குர்ஆன் 02:285)

ஏக இறைவனான அல்லாஹ்வை மாத்திரம் வணங்குமாறும், மனைவி மக்கள், பிள்ளைகள், நண்பர்கள் போன்ற எவரும் அல்லாஹ்வுக் கிடையாது என்றும், அல்லாஹ்வுக்கு நிகராக எவரும் இல்லையென அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளுமாறும், சிலைவணங்கள், விக்கிரக ஆராதனைகள் போன்றவற்றை விட்டும் தவிர்ந்து நடக்குமாறும் மக்களுக்கு இவர்கள் ஏவி வந்துள்ளனர். அல்லாஹ் கூறுகிறான், "(நபியே!) உமக்கு முன்னர் நாம் அனுப்பிய ஒவ்வொரு தூதரிடமும்: "நிச்சயமாக (வணக்கத்திற்குரிய) நாயன் என்னைத் தவிர வேறு எவருமில்லை; எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்" என்று நாம் வஹீ அறிவிக்காமலில்லை." (அல்குர்ஆன் 21:25)

அவ்வாறே தம்முடைய வழியைப் பின்பற்றுமாரும், வழிகேட்டில் கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடிய வழிகளில் செல்ல வேண்டாமெனவும் அவர்களுக்கு ஏவியுள்ளார்கள். மேலும் வாக்குறுதிகளை நிறைவேற்றுமாரும், அளவு நிறுவைகளில் மோசடி செய்யக்கூடாது எனவும், பெற்றோர்களுக்கு பணிவிடை செய்யுமாறும், மக்களுக்கு மத்தியில் நீதமாக நடந்துகொள்ளுமாறும், சொல், செயல் போன்ற அனைத்திலும் உண்மையைக் கடைபிடிக்குமாறும் அவர்களுக்குப் போதனைகளை மேற்கொண்டிருக்கின்றனர். அவ்வாறே வன்செயல்களில் ஈடுபடுதல், குழந்தைகளைக் கொல்லுதல், எவ்வித நியாயமுமின்றி பிற உயிர்களைக் கொல்லுதல், வட்டியில் திளைத்து இருத்தல், அநாதைகளின் சொத்துக்களை சாப்பிடுதல், பெருமையடித்தல், மோசமான முறையில் மக்களின் சொத்து செல்வங்களைச் சுரண்டுதல் போன்ற அனைத்து விடயங்களை விட்டும் தங்கள் சமுதாயத்தினரை தடுத்துள்ளார்கள்.

இவ்வுலகில் வாழும் அனைத்து மனிதர்களும் நிச்சயம் ஓர் நாளில் மரணித்தே தீருவார்கள். அதில் எவருக்கும் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. என்றாலும் அவர்களது மரணத்திற்குப் பின்னர் எங்கே செல்வார்கள்? அவர்கள் மரணத்திற்குப் பின்னர் நல்லவர்களாக இருப்பார்களா, அல்லது மோசமான நிலையில் இருப்பார்களா? போன்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் நிலவின. அச்சந்தர்ப்பத்தில் அவர்கள் அனைவரும் மரணத்தின் பின் எழுப்பப்படுவார்கள் எனவும், இவ்வுலகில் அவர்கள் செய்த செயல்களுக்கேற்ப கூலியும் வழங்கப்படுவர் எனவும், நல்லவற்றை செய்தவர்கள் நல்லவற்றையும், தீயசெயல்கள் செய்தவர்கள் தண்டனைகளையும் பெற்றுக்கொள்வர் எனவும் ஒவ்வொரு நபிமாரும், ரஸூல்மாரும் தங்களது சமுதாயத்தினருக்கு கூறி, அதற்கு ஏற்றாற் போல் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ளமாறும் கூறியுள்ளார்கள்.

மரணத்திற்குப் பின் மறுவாழ்வு, விசாரணை என்பன இருப்பதனால் நமது வாழ்வு வீணான ஒன்றல்ல என்பதையும், அல்லாஹ் நம்மை வீணாகப் படைக்கவில்லை என்பதையும் விளங்கமுடிகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "மேலும், வானத்தையும், பூமியையும், இவ்விரண்டிற்குமிடையே உள்ளவற்றையும் வீணுக்காக நாம் படைக்கவில்லை. இது (வீணென்பது) காஃபிர்களின் எண்ணமாகும்; காஃபிர்களுக்கு (நரக) நெருப்பின் கேடுதான் உண்டு." (அல்குர்ஆன் 38:27)

மனிதன் தன்னை வணங்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகத் தான் அவனையும், அவனுக்கு ஏற்றதாக அவனைச் சூழ உள்ளவற்றையும் அல்லாஹ் படைத்துள்ளான். "இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை." (அல்குர்ஆன் 51:56)

எனவே தன்னை வணங்குபவர்களையும், தனக்கு மாறு செய்பவர்களையும்

சமமானவர்களாக அல்லாஹ் நோக்க மாட்டான். "அல்லது ஈமான் கொண்டு (ஸாலிஹான) நல்லமல்கள் செய்வோரை பூமியில் குழப்பம் செய்வோரைப்போல் நாம் ஆக்கிவிடுவோமா? அல்லது, பயபக்தியுடையோரைப் பாவிகளைப் போல் நாம் ஆக்கிவிடுவோமா?" (அல்குர்ஆன் 38:28)

இதனால் தான் அல்லாஹ் மறுமை நாள் என்ற ஒன்றை ஏற்படுத்தி, தன்னை தூய்மையான முறையில் வணங்கியவர்களுக்கு நற்கூலிகளையும், தனக்கு மாறு செய்தவர்களுக்கு தண்டனைகளையும் வழங்க இருக்கிறான். அல்லாஹ் கூறுகிறான், "நீங்கள் அனைவரும் அவனிடமே மீண்டு செல்ல வேண்டியிருக்கிறது; அல்லாஹ்வின் வாக்குறுதி மெய்யானது - நிச்சயமாக அவன்தான் முதல் முறையாகப் படைத்தவன்; ஈமான் கொண்டு நேர்மையான முறையில் நற்கருமங்கள் செய்தவர்களுக்கு கூலி வழங்குவதற்காக படைப்பினங்களை மீண்டும் உயிர்ப்பிப்பான். யார் நிராகரித்து விட்டார்களோ அவர்களுக்கு அவர்கள் நிராகரித்த காரணத்தினால் கொதிக்கும் நீரும் நோவினைத் தரும் வேதனையும் உண்டு." (அல்குர்ஆன் 10:04)

அப்படியென்றால் இதற்காக அல்லாஹ் இறந்தவர்களை மீண்டும் எழுப்ப வேண்டுமே.. அது எவ்வாறு அவனால் முடியும்? என சந்தேகம் ஏற்படலாம். எவ்வித முன்னுதாரணங்களுமின்றி இப்பிரமாண்டமான பிரபஞ்சத்தைப் படைத்த இறைவனுக்கு, மரணத்தின் பின் திரும்ப உயிர் கொடுத்த எழுப்பாட்டுதல் என்பது கடினமான காரியமா என்ன... அல்லாஹ் கூறுகிறான், "வானங்களையும், பூமியையும் படைத்து அவற்றின் படைப்பால் எவ்வித சோர்வுமின்றி இருக்கின்றானே அல்லாஹ் அவன் நிச்சயமாக மரித்தோரை உயிர்ப்பிக்கும் ஆற்றலுடையவன்; ஆம்! நிச்சயமாக அவன் எல்லாப் பொருள்கள் மீதும் பேராற்றலுடையவன் என்பதை அவர்கள் பார்க்கவில்லையா?" (அல்குர்ஆன் 46:33)

மேலும், "வானங்களையும் பூமியையும் படைத்தவன், அவர்களைப் போன்றவர்களைப் படைக்கச் சக்தியற்றவனா? ஆம் (சக்தியுள்ளவனே!) மெய்யாகவே, அவனே (பல வகைகளையும்) படைப்பவன்; யாவற்றையும் நன்கறிந்தவன்." (அல்குர்ஆன் 36:81)

இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்க சக்திபெற்றவனுக்கு அதை மீளுருவாக்கம் செய்வதென்பது மிக மிக இலகுவான காரியமாகும். அல்லாஹ் கூறுகிறான், "அவனே படைப்பைத் துவங்குகின்றான்; பின்னர் அவனே அதை மீட்டுகிறான்;

தூய்மையான அடிப்படை

"இஸ்லாம் என்பது முஹம்மத் புதிதாகக் கொண்டுவந்த மார்க்கம் கிடையாது. அவர், ஏசு அவர்கள் வானுலகிற்கு உயர்த்தப்பட்டு 600 வருடங்களின் பின்னர் இவ்வுலகில் தோன்றி, முன்னர் வானுலகிலிருந்து இறக்கப்பட்ட மார்க்கங்களை புதுப்பிக்கும் வகையில் தமது பிரச்சாரத்தை முன்னெடுத்தார். அசுத்தமாகிக் கிடந்த சட்டதிட்டங்களைத் தூய்மைப்படுத்தினார். இவருக்கு முன்னர் வந்த அனைத்து நபிமார்களும் முஸ்லிம்களாகவும், ஒரே போதனையையே இவ்வுலகிற்கு

டெபோரா பாட்டர்
அமெரிக்கப் பத்திரிகை

மேலும், இது அவனுக்கு மிகவும் எளிதேயாகும். வானங்களிலும் பூமியிலும் மிக்க உயர்ந்த பண்புகள் அவனுக்குரியதே; மேலும் அவன் மிகைத்தவன்; ஞானம் மிக்கவன். " (அல்குர்ஆன் 30:27)

இறந்தவற்றை உயிர்ப்பிக்க தன்னால் முடியும் என்பதை அல்லாஹ் இவ்வுலகிலேயே நிரூபித்துக் காட்டியுள்ளான். இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நிகழ்ந்த ஓர் வரலாற்றுக் குறிப்பு இதனைத் தெளிவாகக் கூறுகின்றது, "இன்னும், இப்ராஹீம்: "என் இறைவா! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் என்பதை எனக்குக் காண்பிப்பாயாக!" எனக் கோரியபோது, அவன்,"நீர் (இதை) நம்ப வில்லையா?" எனக் கேட்டான்; "மெய்(யாக நம்புகிறேன்!) ஆனால் என் இதயம் அமைதிபெறும் பொருட்டே (இவ்வாறு கேட்கிறேன்)" என்று கூறினார் "(அப்படியாயின்,) பறவைகளிலிருந்து நான்கைப்பிடித்து, (அவை உம்மிடம் திரும்பி வருமாறு) பழக்கிக்கொள்ளும்; பின்னர்(அவற்றை அறுத்து) அவற்றின் பாகத்தை ஒவ்வொரு மலையின் மீது வைத்து விடும்; பின், அவற்றைக் கூப்பிடும்; அவை உம்மிடம் வேகமாய்(ப் பறந்து) வரும்; நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், பேரறிவாளன் என்பதை அறிந்து கொள்ளும்" என்று (அல்லாஹ்) கூறினான்." (அல்குர்ஆன் 02:260)

அவ்வாறே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இதை அல்லாஹ் ஓர் அத்தாட்சியாகவும் வழங்கினான், "அப்பொழுது அல்லாஹ் கூறுவான்: "மர்யமுடைய மகன் ஈஸாவே நான் உம்மீதும், உம் தாயார் மீதும் அருளிய என் நிஃமத்தை (அருள் கொடையயை) நினைவு கூறும்; பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு உமக்கு உதவியளித்து நீர் தொட்டிலிலும் (குழந்தைப் பருவத்திலும்), வாலிபப் பருவத்திலும் மனிதர்களிடம் பேசச் செய்ததையும், இன்னும் நான் உமக்கு வேதத்தையும், ஞானத்தையும், தவ்ராத்தையும், இன்ஜீலையும் கற்றுக் கொடுத்ததையும் (நினைத்துப் பாரும்); இன்னும் நீர் களிமண்ணினால் என் உத்தரவைக் கொண்டு பறவை வடிவத்தைப் போலுண்டாக்கி அதில் நீர் ஊதியபோது அது என் உத்தரவைக் கொண்டு பறவையாகியதையும், இன்னும் என் உத்தரவைக் கொண்டு பிறவிக் குருடனையும், வெண் குஷ்டக்காரனையும் சுகப்படுத்தியதையும், (நினைத்துப் பாரும்); இறந்தோரை என் உத்தரவைக் கொண்டு (உயிர்ப்பித்துக் கல்லறைகளிலிருந்து) வெளிப்படுத்தியதையும் (நினைத்துப் பாரும்); அன்றியும் இஸ்ராயீலின் சந்ததியினரிடம் நீர் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தபோது, அவர்களில் நிராகரித்தவர்கள், "இது தெளிவான சூனியத்தைத் தவிர வேறு இல்லை" என்று கூறிய வேளை, அவர்கள் (உமக்குத் தீங்கு செய்யாதவாறு) நான் தடுத்து விட்டதையும் நினைத்துப் பாரும்." (அல்குர்ஆன் 05:110)

உண்மையான ஏகத்துவம்

"அரேபிய நாட்டில் தோன்றிய இத் தூதர் தன் இரட்சகனோடு தொடர்புபட்ட நேரான பாதையின் பக்கமும், தூய இறைக்கோட்பாட்டின் பக்கமும் சிலை வணக்கசாலிகளையும், திரிபுபடுத்தப்பட்ட யூத, கிறிஸ்தவ மதங்களைப் பின்பற்றுபவர்களையும் அழைத்தார். மனிதர்களின் பிற்போக்குத் தனமான நடைமுறைகளை மாற்றி, அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள் கிடையாது என்னும்

லோரா வெட்சி வேக்லரி
இத்தாலியைச் சேர்ந்த கீழைத்தேய வாதி

உலுல் அஸ்ம் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் தூதுவர்களின் வாழ்விலிருந்து சில குறிப்புக்கள்...

உலுல் அஸ்ம் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் தூதுவர்களின் வாழ்விலிருந்து சில குறிப்புக்கள்... *"அவன்தான், எழுத்தறிவில்லா மக்களிடம் அவனுடைய வசனங்களை ஓதிக்காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்பிக்கும் படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான்; அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருந்தனர்." (அல்குர்ஆன் 62:02)*

தூதுவர்களின் வருகையால் மனிதர்கள் அல்லாஹ்வையும், தூதுவர்களையும் விசுவாசம் கொள்ளும் தரப்பினர் எனவும், அவர்களை மறுக்கும் தரப்பினர் எனவும் இரு பகுதிகளாகப் பிரிந்துவிட்டனர். அல்லாஹ் கூறுகிறான், *"(ஆரம்பத்தில்) மனிதர்கள் ஒரே கூட்டத்தினராகவே இருந்தனர்; அல்லாஹ் (நல்லோருக்கு) நன்மாராயங் கூறுவோராகவும், (தீயோருக்கு) அச்சமூட்டி எச்சரிக்கை செய்வோராகவும் நபிமார்களை அனுப்பி வைத்தான்; அத்துடன் மனிதர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளைத் தீர்த்து வைப்பதற்காக அவர்களுடன் உண்மையுடைய வேதத்தையும் இறக்கி வைத்தான்; எனினும் அவ்வேதம் கொடுக்கப் பெற்றவர்கள், தெளிவான ஆதாரங்கள் வந்த பின்னரும், தம்மிடையே உண்டான பொறாமை காரணமாக மாறுபட்டார்கள்; ஆயினும் அல்லாஹ் அவர்கள் மாறுபட்டுப் புறக்கணித்துவிட்ட உண்மையின் பக்கம் செல்லுமாறு ஈமான் கொண்டோருக்குத் தன் அருளினால் நேர் வழி காட்டினான்; இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியோரை நேர்வழியில் செலுத்துகின்றான்." (அல்குர்ஆன் 02:213)*

அவர்கள் பெருமையின் காரணமாகவும், தமது மனோ இச்சைக்குக் கட்டுப்பட்டதன் காரணமாகவும் அத்தூதுவர்களைப் பொய்ப்பித்தனர். *"உங்கள் மனம் விரும்பாததை (நம்) தூதர் உங்களிடம் கொண்டு வரும்போதெல்லாம் நீங்கள் கர்வம் கொண்டு (புறக்கணித்து) வந்தீர்களல்லவா? சிலரை நீங்கள் பொய்ப்பித்தீர்கள்; சிலரை கொன்றீர்கள்." (அல்குர்ஆன் 02:87)*

அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அனைத்துத் தூதுவர்களையும் விசுவாசம் கொள்ளுமாறு அல்லாஹ் மனிதர்களுக்கு ஏவுகிறான், *"(முஃமின்களே!)"நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட(வேதத்)தையும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவர் சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும்; மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதையும் இன்னும் மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப்பட்டதையும் நம்புகிறோம்; அவர்களில் நின்றும் ஒருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம்; இன்னும் நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிபடுகிறோம்" என்று கூறுவீர்களாக." (அல்குர்ஆன் 02:136)*

அல்லாஹ்வின் தூதுவர்களை விசுவாசம்கொள்பவர்களுக்கு இவ்வுலகிலும், மறுமை நாளிலும் பாரிய நன்மைகள் காத்திருப்பதாக அல்லாஹ் நன்மாராயம் கூறுகிறான், அவ்வாறு விசுவாசம் கொள்ளாதோருக்கு இவ்வுலகிலேயே பெரும் நஷ்டங்களும், நிம்மதியற்ற வாழ்வும் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கின்றான், தூதுவர்களை விசுவாசம் கொண்டோரைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான், "அல்லாஹ்வையும் அவனது தூதரையும் முஃமின்களையும் யார் நேசர்களாக ஆக்குகிறார்களோ, அவர்கள்தாம் ஹிஸ்புல்லாஹ் (அல்லாஹ்வின் கூட்டத்தினர்) ஆவார்கள்; நிச்சயமாக இவர்களே மிகைத்து வெற்றியுடையோராவார்கள்." (அல்குர்ஆன் 05:56)

மேலும், "(நேர் வழி பெறும்) அவர்கள் எத்தகையோரென்றால், அவர்கள் தாம் (முற்றிலும்) ஈமான் கொண்டவர்கள்; மேலும், அல்லாஹ்வை நினைவு கூர்வதால் அவர்களுடைய இதயங்கள் அமைதி பெறுகின்றன; அல்லாஹ்வை நினைவு கூர்வது கொண்டு தான் இதயங்கள் அமைதி பெறுகின்றன என்பதை அறிந்து கொள்க!"

"எவர்கள் ஈமான் கொண்டு நற்கருமங்கள் புரிகின்றார்களோ, அவர்களுக்கு (எல்லா) நற்பாக்கியங்களும் உண்டு; இன்னும் அழகிய இருப்பிடமும் உண்டு." (அல்குர்ஆன் 13:28-29)

தூதுவர்களை யார் புறக்கணிக்கின்றனரோ அவர்களைப் பற்றி பின்வருமாறு அல்லாஹ் குறிப்பிடுகிறான், "நிராகரிப்பவர்கள் பூமியில் (உங்களை) முறியடித்து விடுவார்கள் என்று (நபியே!) நிச்சயமாக நீர் எண்ணவேண்டாம். இன்னும் அவர்கள் ஒதுங்குமிடம் (நரக) நெருப்புத்தான்; திடமாக அது மிகக் கெட்ட சேரும் இடமாகும். " (அல்குர்ஆன் 24:57)

பொதுவாகவே அல்லாஹ்வின் தூதுத்துவத்தை எத்திவைக்க வந்த நபிமார்களுக்கும், ரஸூல்மார்களுக்கும் பல எதிரிகள் இருந்துள்ளனர். அல்லாஹ் கூறுகிறான், "இவ்வாறே ஒவ்வொரு நபிக்கும், மனிதரிலும் ஜின்களிலும் உள்ள ஷைத்தான்களை விரோதிகளாக நாம் ஆக்கியிருந்தோம்; அவர்களில் சிலர் மற்றவரை ஏமாற்றும் பொருட்டு, அலங்காரமான வார்த்தைகளை இரகசியமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்; (நபியே!) உம்முடைய இறைவன் நாடியிருந்தால் இவ்வாறு அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் - எனவே அவர்களையும் அவர்கள் கூறும் பொய்க்கற்பனைகளையும் விட்டுவிடுவீராக." (அல்குர்ஆன் 06:112)

அத்தோடு இவர்களைப் பொய்ப்பிப்பவர்களும் இவர்களுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்து, இவர்களைப் பரிகசிப்பதும், இழிவாக நோக்குவதும், எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதுமென பல அட்டூழியங்களைச் செய்தனர். அல்லாஹ் கூறுகிறான், "எனினும் அவர்களிடம் (நம்முடைய) எந்தத் தூதர் வந்தாலும் அவரை அந்த மக்கள் ஏளனம் செய்யாமல் இருந்ததில்லை." (அல்குர்ஆன் 15:11)

மேலும், "ஆனால் அவர்களிடம் வந்த நபி ஒவ்வொருவரையும் அவர்கள் பரிகாசம் செய்யாது இருக்கவில்லை." (அல்குர்ஆன் 43:07)

மேலும், "(நபியே!) உமக்கு முன்னர் வந்த தூதர்களும் நிச்சயமாக (இவ்வாறே)

பரிகசிக்கப்பட்டனர்; முடிவில் அவர்கள் எதைப் பரிகசித்துக் கொண்டிருந்தனரோ அதுவே பரிகசித்தவர்களை வந்து சூழ்ந்துகொண்டது." (அல்குர்ஆன் 06:10)

தமது ஊரை விட்டும் நிர்ப்பந்தமாக வெளியேறல், அல்லது தங்களது மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளல் என இரு சந்தர்ப்பங்களை மாத்திரமே கொடுத்து அவர்களைப் பயமுறுத்தினர். "நிராகரிப்பவர்கள் அவர்களுடைய தூதர்களை நோக்கி, "நிச்சயமாக நாங்கள் உங்களை எங்கள் பூமியிலிருந்து வெளியேற்றி விடுவோம்; அல்லது நீங்கள் எங்கள் மார்க்கத்திற்குத் திரும்பிவிட வேண்டும்" என்று கூறினார்கள், அப்போது: "நிச்சயமாக நாம் இந்த அநியாயக்காரர்களை அழித்து விடுவோம்" என்று அவர்களின் இறைவன் அவர்களுக்கு அறிவித்தான்." (அல்குர்ஆன் 14:13)

இத்தகைய பயமுறுத்தல்கள் இறுதியில் அவர்களுக்கு கொலை அச்சுறுத்தல்களை விடுக்கும் அளவுக்கு முற்றிப்போனது. "அன்றியும் ஒவ்வொரு சமுதாயமும் தம்மிடம் வந்த தூதரைப் பழிவாங்கக் கருதினர்" (அல்குர்ஆன் 40:05)

சிலர் பயமுறுத்தல்களோடு நிறுத்திக்கொண்டனர், ஆனால் வேறு சிலரோ உண்மையிலேயே கொலையும் செய்தனர். "உங்கள் மனம் விரும்பாததை (நம்) தூதர் உங்களிடம் கொண்டு வரும்போதெல்லாம் நீங்கள் கர்வம் கொண்டு (புறக்கணித்து) வந்தீர்களல்லவா? சிலரை நீங்கள் பொய்ப்பித்தீர்கள்; சிலரை கொன்றீர்கள்." (அல்குர்ஆன் 02:87)

இப்படியே பொய்ப்பித்து, அட்டூழியங்களை மேற்கொண்டவர்களை அல்லாஹ் அழித்து விட்டு, நபிமார்களின் போதனைகளைக் காப்பாற்றிவிட்டான். அல்லாஹ் கூறுகிறான், ""நானும் என்னுடைய தூதர்களும் நிச்சயமாக மிகைத்து விடுவோம்" என்று அல்லாஹ் விதித்துள்ளான்; நிச்சயமாக அல்லாஹ் மிக்க சக்தியுடையவன்; யாவரையும் மிகைத்தவன்." (அல்குர்ஆன் 58:21)

மேலும், "தூதர்களாகிய நம் அடியார்களிடம், முன்னரே திடமாக நம்வாக்குச் சென்றிருக்கிறது."

"(அதாவது) நிச்சயமாக அவர்கள் உதவி செய்யப்படுவார்கள்" (அல்குர்ஆன் 37:171-172)

கொலை செய்யப்படுவதிலிருந்து சில நபிமார்களை அல்லாஹ் காப்பாற்றியும் உள்ளான். "மேலும், ஈமான் கொண்டு, (அல்லாஹ்விடம்) பயபக்தியுடையவர்களாக இருந்தவர்களை நாம் காப்பாற்றினோம்." (அல்குர்ஆன் 27:53)

மேலும், "மேலும், ஈமான் கொண்டு, (அல்லாஹ்விடம்) பயபக்தியுடையவர்களாக இருந்தவர்களை நாம் காப்பாற்றினோம்." (அல்குர்ஆன் 41:18)

மார்ஸல் போய்ஸரட்
பிரேஞ்சு சிந்தனையாளர்

ஒரே ஒளிவிளக்கிலிருந்து...

"முஹம்மதுடைய தூதுத்துவம் முன்னர் இறக்கப்பட்ட வேதங்களில் கூறப்பட்ட போதனைகளை பொய்ப்பிக்கும் வகையில் அமையவில்லை. மாறாக முன்னைய வேதங்களில் கூறப்பட்டவைகளை உண்மைப்படுத்தி, அவற்றில் ஏற்பட்டிருந்த கையூடல்கள், திரிபுகள் போன்ற குறைபாடுகளை நிவர்த்தி செய்து, முன்னைய நபிமார்களின் போதனைகளைத் தூய்மைப்படுத்தி, அவற்றை மக்களின் நலன்களுக்கு ஏற்றவாறு விஸ்திரப்படுத்தி, எல்லாக் காலகட்டத்தில் வாழும் மனிதர்களுக்குப் பொருந்தும் வகையிலான ஓர்

நேர்வழியிலிருந்து மக்கள் வழிதவறும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்லாஹ் தனது தூதுவர்களை அனுப்பி, அவர்களின் வாழ்வை தூய்மைப்படுத்தக் கூடிய வேதங்களை வழங்கினான். அது முன்னர் இறக்கப்பட்ட வேதவாக்குகளைப் பாதுகாத்து, உண்மைப்படுத்தும் வகையிலும், அவற்றில் கூறப்படாத, சமூகத்துக்குத் தேவையான சில புதிய சட்டங்களை உள்ளடக்கியும் இறக்கப்பட்டது. எனவே ஒரு நபியைப் பொய்ப்பிப்பது, மற்றைய எல்லா நபிமார்களையும் பொய்ப்பிப்பதற்குச் சமனாகும். யார் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை விசுவாசம் கொள்ளவில்லையோ அவர் அதற்கு முன்னர் வந்த மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் விசுவாசம் கொள்ளாதவர் போலாவார். இதே அமைப்பில் தான் முஹம்மத் ﷺ அவர்களுக்கும் அல்லாஹ் வேதத்தையும், தூதுத்துவத்தையும் வழங்கினான், "மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது. எனவே அல்லாஹ் அருள் செய்த(சட்ட திட்டத்)தைக் கொண்டு அவர்களிடையே நீர் தீர்ப்புச் செய்வீராக; உமக்கு வந்த உண்மையை விட்டும் (விலகி,) அவர்களுடைய மன இச்சைகளை நீர் பின்பற்ற வேண்டாம்." (அல்குர்ஆன் 05:48)

எனவே முஹம்மத் ﷺ அவர்களை யார் விசுவாசம் கொள்ளவில்லையோ அவர் ஈஸா, மூஸா அலைஹிமுஸ்ஸலாம் போன்ற மற்ற அனைத்து நபிமார்களையும் விசுவாசம் கொள்ளாததற்குச் சமனாவார். முஹம்மத் ﷺ அவர்கள் ஒரு சமூகத்துக்கென்று மாத்திரம் நபியாகவோ, ரஸூலாகவோ அனுப்பப்படவில்லை. மாறாக இவ்வுலகில் தோன்றிய, தோன்றப்போகின்றன அனைத்து சமூகத்தாருக்கும் பொதுவான ஒரு தூதுவராகவும், இறுதித் தூதுவராகவும் அனுப்பப்பட்டார்கள். இவர் பிறந்து, மரணித்த சமூகத்துக்கு மாத்திரம் தூதுவர் என்றிருந்தால் இந்நேரத்திற்கு மனித சமுதாயமே எவ்வித வழிகாட்டுதலுமின்றி அழிந்து போயிருக்கும். அல்லாஹ் கூறுகிறான், "முஹம்மது(ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை; ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதி (முத்திரை)யாகவும் இருக்கின்றார்; மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள்

நபிமார்கள், ரஸூல்மார்கள் வரலாறுகள்.

அவர்களில் ஒருவரையேனும் நாம் வேறுபடுத்திப் பார்க்கமாட்டோம்.

"முன்னைய வேதங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டு, ஒன்றையொன்று வெறுத்தொதுக்கி வந்த நிலையில், அல்குர்ஆன் இவை அனைத்தையும்

பஷீர் சாரட்

இந்து மதப் போதகர்

அல்லாஹ் முதல் மனிதரான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைத்து, அவர்களை சுவனத்திலிருந்து இவ்வுலகுக்கு அனுப்பிய காலத்திலிருந்து நபிமார்கள் ரஸூல்மார்கள் போன்றோரின் வரலாறும் ஆரம்பிக்கின்றது. "(நபியே) இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி "நிச்சயமாக நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்" என்று கூறியபோது, அவர்கள் "(இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப்போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின்றோம் என்று கூறினார்கள்; அ(தற்கு இறை)வன் "நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்" எனக் கூறினான்."

இன்னும், (இறைவன்) எல்லாப் (பொருட்களின்) பெயர்களையும் ஆதமுக்கு கற்றுக் கொடுத்தான்; பின் அவற்றை வானவர்கள் முன் எடுத்துக்காட்டி, "நீங்கள் (உங்கள் கூற்றில்) உண்மையாளர்களாயிருப்பின் இவற்றின் பெயர்களை எனக்கு விவரியுங்கள்" என்றான்.

அவர்கள் "(இறைவா!) நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக்கொடுத்தவை தவிர எதைப்பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை. நிச்சயமாக நீயே பேரறிவாளன்; விவேகமிக்கோன்" எனக் கூறினார்கள்.

"ஆதமே! அப் பொருட்களின் பெயர்களை அவர்களுக்கு விவரிப்பீராக!" என்று (இறைவன்) சொன்னான்; அவர் அப்பெயர்களை அவர்களுக்கு விவரித்தபோது "நிச்சயமாக நான் வானங்களிலும், பூமியிலும் மறைந்திருப்பவற்றை அறிவேன் என்றும், நீங்கள் வெளிப்படுத்துவதையும், நீங்கள் மறைத்துக் கொண்டிருப்பதையும் நான் அறிவேன் என்றும் உங்களிடம் நான் சொல்லவில்லையா?" என்று (இறைவன்) கூறினான்.

பின்னர் நாம் மலக்குகளை நோக்கி, "ஆதமுக்குப் பணி(ந்து ஸுஜூது செய்)யுங்கள்" என்று சொன்னபோது இப்லீஸைத்தவிர மற்ற அனைவரும் சிரம் பணிந்தனர்; அவன்(இப்லீஸு)

மறுத்தான்; ஆணவமும் கொண்டான்; இன்னும் அவன் காஃபிர்களைச் சார்ந்தவனாகி விட்டான்.

மேலும் நாம், "ஆதமே! நீரும் உம் மனைவியும் அச்சுவனபதியில் குடியிருங்கள். மேலும் நீங்கள் இருவரும் விரும்பியவாறு அதிலிருந்து தாராளமாக புசியுங்கள்; ஆனால் நீங்கள் இருவரும் இம்மரத்தை மட்டும் நெருங்க வேண்டாம்; (அப்படிச் செய்தீர்களானால்) நீங்கள் இருவரும் அக்கிரமக்காரர்களில் நின்றும் ஆகிவிடுவீர்கள்" என்று சொன்னோம்.

இதன்பின், ஷைத்தான் அவர்கள் இருவரையும் அதிலிருந்து வழி தவறச் செய்தான்; அவர்கள் இருவரும் இருந்த(சொர்க்கத்)திலிருந்து வெளியேறுமாறு செய்தான்; இன்னும் நாம், "நீங்கள் (யாவரும் இங்கிருந்து) இறங்குங்கள்; உங்களில் சிலர் சிலருக்கு பகைவராக இருப்பீர்கள்; பூமியில் ஒரு குறிப்பிட்ட காலம் வரை உங்களுக்குத் தங்குமிடமும் அனுபவிக்கும் பொருள்களும் உண்டு" என்று கூறினோம்.

பின்னர் ஆதம் தம் இறைவனிடமிருந்து சில வாக்குகளைக் கற்றுக் கொண்டார்; (இன்னும், அவற்றின் மூலமாக இறைவனிடம் மன்னிப்புக்கோரினார்;) எனவே இறைவன் அவரை மன்னித்தான்; நிச்சயமாக அவன் மிக மன்னிப்போனும், கருணையாளனும் ஆவான்.

(பின்பு, நாம் சொன்னோம் "நீங்கள் அனைவரும் இவ்விடத்தை விட்டும் இறங்கிவிடுங்கள்; என்னிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக நல்வழி(யைக் காட்டும் அறிவுரைகள்) வரும்போது, யார் என்னுடைய (அவ்) வழியைப் பின்பற்றுகிறார்களோ அவர்களுக்கு எத்தகைய பயமும் இல்லை, அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்."

அன்றி யார் (இதை ஏற்க) மறுத்து, நம் அத்தாட்சிகளை பொய்ப்பிக்க முற்படுகிறார்களோ அவர்கள் நரக வாசிகள்; அவர்கள் அ(ந் நரகத்)தில் என்றென்றும் தங்கி இருப்பர். (அல்குர்ஆன் 02:30-39)

பின்னர் மக்கள் அனைவரும் பல முரண்பாடுகளை சந்தித்து, உண்மையிலிருந்தும், நேர்வழியிலிருந்தும் தூரமாகிச் செல்லும் போது, அவர்களுக்குத் தேவையான சில சட்டதிட்டங்களுடன் தனது தூதுவர்களை அவர்களிடம் அனுப்பினான். "நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான்; ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும் , ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால்: "நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள், நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள்" என்பதே" (அல்குர்ஆன் 42:13)=

இவ்வாறே நூஹ், இத்ரீஸ், இப்றாஹிம், இஸ்மாயில், மூஸா, ஈஸா, முஹம்மத் (அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக) என தொடர்ச்சியாக நபிமார்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு அனுப்பப்பட்டவர்களில் சிலரின் வரலாறுகளை அல்லாஹ் நமக்குக்

கூறியுள்ளான். அவற்றில் சிலதை இங்கு பார்ப்போம். இவற்றில் புத்திஜீவிகளுக்கு நிறைய படிப்பினைகள் இருக்கின்றன.

"(நிச்சயமாக) அவர்களின் வரலாறுகளில் அறிவுடையோருக்கு (நல்ல) படிப்பினை இருக்கிறது; இது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாக இருக்கவில்லை, மாறாக இதற்கு முன் உள்ள (வேதத்)தையும் இது உண்மையாக்கி வைக்கிறது. ஒவ்வொரு விஷயத்தையும் இது விவரித்துக் காட்டுவதாகவும், நம்பிக்கை கொண்ட சமூகத்தவருக்கு நேர்வழியாகவும், ரஹ்மத்தாகவும் இருக்கிறது." (அல்குர்ஆன் 12:111)

1- நூஹ் அலைஹிஸ்ஸலாம்:

இவர் வருவதற்கு முன்னர் மக்கள் அனைவரும் முஃமின்களாகத்தான் இருந்தனர். அல்லாஹ் ஒருவனையே வணங்கி, மறுமை நாளையும் விசுவாசம் கொண்டு, மக்களுக்கு நல்லவைகளையும் செய்துகொண்டிருந்தனர். இவர்களின் மரணத்தைத் தொடர்ந்து, கவலையுற்ற மக்கள் இவர்களின் சிறந்த குணங்களையும், மக்களுக்கு செய்த சேவைகளையும் நினைவு கூர்ந்து, இவர்களை சிலைகளாக வடிவமைத்தனர். அவர்களுக்கு வத்து, ஸுவாஉ, யகூஸ், யஊக், நஸ்ர் போன்ற பெயர்களையும் வைத்து, தமது நினைவுச் சின்னங்களாகவும் ஆக்கிக் கொண்டார்கள்

காலம் செல்லச் செல்ல அடுத்த தலைமுறையினரான இவர்களின் பிள்ளைகள் இச்சிலைகளை கண்ணியப்படுத்த ஆரம்பித்தனர். ஏதாவது செய்யும் போது அச்சிலைகளை நினைத்துக்கொள்வது, தினமும் அச்சிலைகளை கடந்து செல்லும் போது தாழ்வாகச் செல்வது என இவர்களின் உள்ளங்களில் ஓர் பெரிய இடத்தை அச்சிலைகள் வகித்தன.

இவ்வாறே காலம் செல்லச் செல்ல அடுத்த தலைமுறையினரும் தோன்றவே அவர்கள் இச்சிலைகளுக்கு அளவுகடந்த கண்ணியம் வைத்து, அவற்றை வணங்க ஆரம்பித்தனர். அச்சிலைகளுக்கு முன்னால் ஸுஜூது செய்தல், நேர்ச்சைகளை நிறைவேற்றல், படையல்கள் படைத்தல் என அவற்றை கடவுளின் அந்தஸ்த்திற்குக் கொண்டு சென்றனர். இவ்வாறே அச்சமூகம் வழிதவற ஆரம்பித்தது.

அந்நேரத்தில் தான் அல்லாஹ் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களை தனது தூதுவராக அனுப்பி, இச்சிலைகளை வணங்குவதை விட்டும் அவர்களைத் தடுத்து, ஒரே இறைவனான அல்லாஹ்வை வணங்குமாறு கட்டளையிட்டான். "இன்னும்: நிச்சயமாக, நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடத்தில் அனுப்பினோம்; அப்போது அவர் (தம் சமூகத்தாரிடம்) "என் சமூகத்தவர்களே! நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள் - அவனன்றி உங்களுக்கு (வேறு) நாயன் இல்லை, நீங்கள் (அவனுக்கு) அஞ்ச வேண்டாமா?" என்று கூறினார்." (அல்குர்ஆன் 23:23)

அவர்கள் இவர் கூறுவதை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர் கூறும் அனைத்தையும் பொய்ப்பித்தார்கள். இறுதியாக அவர் அச்சமூகத்தை அல்லாஹ்வின் வேதனையை சந்திக்க நேரிடும் என எச்சரித்தார். ""நிச்சயமாக நான் உங்கள் மீது மகத்தான நாளின் வேதனைப் பற்றி அஞ்சுகிறேன்" (எனக் கூறினார்)." (அல்குர்ஆன் 26:135)

அதற்கு அச்சமூகத்தினர் பின்வருமாறு கூறினார்கள். "அவருடைய கூட்டத்தாரிலுள்ள தலைவர்கள், "மெய்யாகவே, நாங்கள் உம்மை பகிரங்கமான வழிகேட்டில் தான் திடமாக பார்க்கிறோம்" என்று கூறினார்கள்." (அல்குர்ஆன் 07:60)

அதற்கு நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பதில் கூறுகையில், "அதற்கு (நூஹு) "என் கூட்டத்தார்களே! என்னிடம் எந்த வழிகேடும் இல்லை; மாறாக அகிலங்களின்

இறைவனாகிய (அல்லாஹ்வின்) தூதனாகவே நான் இருக்கின்றேன்" என்று கூறினார்." "நான் என் இறைவனுடைய தூதையே உங்களுக்கு எடுத்துக் கூறி; உங்களுக்கு நற்போதனையும் செய்கின்றேன் – மேலும் நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்விடமிருந்து நான் அறிகிறேன்" (என்றும் கூறினார்). (அல்குர்ஆன் 07:61-62)

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் இக்கூற்றைக் கேட்டு அவர்கள் ஆச்சரியமடைந்து, "நீயும் எங்களைப் போன்ற மனிதன் தானே, எப்படி நீ மாத்திரம் அல்லாஹ்வின் தூதுவராக இருக்க முடியும்?" எனக் கேட்டனர். "உன்னைப் பின்பற்றுவோர் எவ்வித மதிப்பும் அற்ற இழிவானவர்களும், கீழ்ஜாதியினரும் தான். அவர்களிடம் சொத்து செல்வங்களோ, பணமோ கிடையாது. நீ அவர்களுக்குப் பொய்யான சில வாதங்களை முன்வைத்து அவர்களை வழிகெடுக்கப் பார்க்கிறாய்" எனக் கூறினார்கள். "ஆனால், அவருடைய சமூகத்தாரில் காஃபிர்களாய் இருந்த தலைவர்கள்: "இவர் உங்களைப் போன்ற மனிதரேயன்றி வேறில்லை; இவர் உங்களை விட சிறப்புப் பெற விரும்புகிறார்; மேலும், அல்லாஹ் நாடியிருந்தால் அவன் மலக்குகளை(த் தூதர்களாக) அனுப்பியிருப்பான். முன்னிருந்த நம் மூதாதையரிடம் இ(த்தகைய விஷயத்)தை நாம் கேள்விப்பட்டதேயில்லை" என்று கூறினார்கள்."

"இவர் ஒரு பைத்தியக்கார மனிதரேயன்றி வேறில்லை; எனவே இவருடன் நீங்கள் சிறிது காலம் பொறுத்திருந்து பாருங்கள்" (எனவும் கூறினர்). (அல்குர்ஆன் 23:24-25)

நூஹ் கூறுவதை ஏற்காமல் சிலைகளையே வணங்குமாறு அவர்களுக்குள்ளேயே கூறிக்கொண்டனர்."மேலும் அவர்கள்: "உங்கள் தெய்வங்களை விட்டுவிடாதீர்கள்; இன்னும் வத்து, ஸுவாஉ, யகூஸு, யஊக், நஸ்ரு ஆகியவற்றை நிச்சயமாக நீங்கள் விட்டுவிடாதீர்கள்" என்றும் சொல்கின்றனர்." (அல்குர்ஆன் 71:23)

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அச்சமூகத்தைப் பார்த்து, "உங்களை எச்சரிப்பதற்காகவும் நீங்கள் அஞ்சி நடப்பதற்காகவும் உங்களுக்கு அருள் புரியப்பட வேண்டுமென்பதற்காகவும் உங்களைச் சேர்ந்த ஒரு மனிதர் மீது உங்கள் இறைவனிடமிருந்து நற்போதனை உங்களுக்கு வருவதைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்களா?" (அல்குர்ஆன் 07:63) என்று கேட்டார்.

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது சமூகத்தாருடன் நலினமான போக்கையை கடைபிடித்தார்கள். ஆனாலும் அவர்கள் தமது பிடிவாதத்தை விடவே இல்லை. இவர் தமது சமூகத்தாருக்கு பிரச்சாரம் செய்த விதத்தைப் பற்றி அல்லாஹ் கூறுகையில்,"பின்னர் அவர்: "என் இறைவா! நிச்சயமாக, நான் என் சமூகத்தாரை இரவிலும், பகலிலும் (நேர்வழியின்பால்) அழைத்தேன்." "ஆனால் என் அழைப்பு அவர்கள் (நேர்வழியிலிருந்து) வெருண்டு ஓடுதலை அதிகரித்ததல்லாமல் வேறில்லை. "அன்றியும்: நீ அவர்களுக்கு மன்னிப்பு அளிப்பதற்காக, (உன் பக்கம்) நிச்சயமாக அவர்களை நான் அழைத்தபோதெல்லாம், தம் காதுகளில் தம் விரல்களை வைத்துக் கொண்டனர்; மேலும், தங்களைத் தம் ஆடைகளைக் கொண்டு மூடிக் கொண்டனர், அன்றியும், அவர்கள் (தம் வழிகேட்டில்) பிடிவாதமாகவும்; பெரும் மமதை பெருமையடித்துக் கொள்வோராகவுமே இருக்கிறார்கள். (அல்குர்ஆன் 71:5-7)

தனக்கு இயன்ற வரைக்கும் அவர்களுக்குப் பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தார். ""அதன் பின்னர், நிச்சயமாக நான் அவர்களிடம் பகிரங்கமாகவும்

பேசினேன்; இரகசியமாக அந்தரங்கத்திலும் பேசினேன்.” மேலும், “நீங்கள் உங்களுடைய இறைவனிடம் மன்னிப்புத் தேடுங்கள்; நிச்சயமாக அவன் மிகவும் மன்னிப்பவன்” என்றுங் கூறினேன். (அல்குர்ஆன் 71:9-10)

அதற்கு சிலர் காரசாரமுறையில் பல சாட்டுப்போக்குகளை முன்வைத்தனர். “அவர்கள்: “தாழ்ந்தவர்கள் உம்மைப் பின்பற்றும்போது, உம் மீது நாங்கள் ஈமான் கொள்வோமா,” என்று கூறினார்கள்.” (அல்குர்ஆன் 26:111)

அதற்கு நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், “அவர் கூறினார்: அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி நான் அறியமாட்டேன்.” (அல்குர்ஆன் 26:112)

மேலும்,“நீங்கள் அறியக்கூடியவர்களாக இருப்பின், அவர்களுடைய கேள்வி கணக்கு (பற்றிய விசாரணை) என்னுடைய இறைவனிடம்தான் இருக்கிறது.” (அல்குர்ஆன் 26:113)

மேலும்,“முஃமின்களை நான் விரட்டி விடுபவன் அல்லன்.” (அல்குர்ஆன் 26:114) “எனவே ஈமான் கொண்டவர்களை (அவர்கள் நிலை எப்படி இருப்பினும்) நான் விரட்டி விடுபவன் அல்லன்” (அல்குர்ஆன் 11:29)

இறுதித் தூதுவம்

“இஸ்லாமிய மார்க்கத்தை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தவர் முஹம்மத் தான். நபிமார்களின் வரிசையில் இறுதியானவரும்

வோல்ஃப் ப்ரவ்ன் ஆஹ்ரர் நெலீர்
ஆஸ்திரிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்

“என்னை விசுவாசம் கொண்டு, எனக்கு பக்கபலமாக இருந்து, உதவி ஒத்தாசைகளைப் புரிவோரை நான் எப்படி விரட்டி விட முடியும்?’ என நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கேட்டுவிட்டு, அச்சமூகத்தைப் பார்த்து: ““என் சமூகத்தவர்களே! நான் அவர்களை விரட்டிவிட்டால்; அல்லாஹ்வி(ன் தண்டனையி)லிருந்து எனக்கு உதவி செய்பவர் யார்? (இதை) நீங்கள் சிந்திக்க வேண்டாமா?” (அல்குர்ஆன் 11:30) “நான் பகிரங்கமாக அச்சமூட்டி எச்சரிப்பவனேயன்றி வேறில்லை.” (அல்குர்ஆன் 26:115) என்றார்கள்.

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உயர்ந்தவன்-தாழ்ந்தவன், பணக்காரன்-ஏழை, பெரியோர்-சிறியோர், வெள்ளையன்-கறுப்பன் போன்ற எந்தவொரு பாகுபாடும் இன்றி அனைவருக்கும் ஒரே விதமாகத்தான் தனது போதனைகளை மேற்கொண்டார்கள். நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முன்வைக்கும் ஆதாரங்களுக்கும், கேட்கும் கேள்விகளுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் இறுதியில் கல்லால் அடித்துத் கொன்றுவிடப் போவதாக அவரை பயமுறுத்தினர். “அதற்கவர்கள் கூறினார்கள்: “நூஹே! நீர் (உம் பிரச்சாரத்தை விட்டும்) விலகிக் கொள்ளாவிட்டால், நிச்சயமாக நீர் கல்லாலெறிந்து கொல்லப்படுவீர்” என்று கூறினார்கள்.” (அல்குர்ஆன் 26:116)

இவர்கள் தாம் கூறும் எதையும் செவ்யேற்று, நேர்வழி பெறப்போவதில்லை என நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு உறுதியான போது, இத்தகைய பிடிவாதக்காரர்களிடமிருந்து தம்மைப் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் வேண்டிக்கொண்டார்கள். “அவர் கூறினார்: “என் இறைவனே! என்னுடைய சமூகத்தார்கள் நிச்சயமாக என்னைப் பொய்யாக்கி விட்டார்கள். ஆகவே, நீ

எனக்கும், அவர்களுக்கு மிடையே தீர்ப்புச் செய்து, என்னையும், என்னுடனிருக்கும் முஃமின்களையும் இரட்சிப்பாயாக!" (என்று பிரார்த்தித்தார்.)" (அல்குர்ஆன் 26:117-118)

நூஹ் அலைஹிஸ்ஸலாம் சமுதாயத்தினர் இறை நிராகரிப்பில் இருந்தாலும் அல்லாஹ்வின் வேதனையைப் பற்றி அவர் அவர்களை எச்சரித்துக்கொண்டே இருந்தார். அப்போது சிலர் "எங்கே தண்டனையே கொண்டு வா பார்க்கலாம்" என அவரை கேலி செய்தனர். "(அதற்கு) அவர்கள், "நூஹே! நிச்சயமாக நீர் எங்களுடன் தர்க்கம் செய்தீர்; அதிகமாகவே நீர் எங்களுடன் தர்க்கம் செய்தீர். எனவே, நீர் உண்மையாளராக இருந்தால், எங்களுக்கு நீர் வாக்களிப்பதை எங்களிடம் கொண்டு வாரும்" என்று கூறினார்கள்." (அல்குர்ஆன் 11:32)

இவ்வாறு வேதனையைக் கொண்டுவருவது தன்னுடைய கையில் கிடையாது எனவும், அது அல்லாஹ்விடத்தில் தான் உள்ளதாகவும் அவர் கூறினார். "அதற்கு) அவர், "நிச்சயமாக அல்லாஹ் நாடினால், அதை உங்களிடம் கொண்டு வருபவன் அவனே ஆவான்; அதை நீங்கள் தடுத்து விடக்கூடியவர்களும் அல்லர்" என்று கூறினார்." "நான் உங்களுக்கு நல்லுபதேசம் செய்யக்கருதினாலும், உங்களை வழிகேட்டிலேயே விட்டு வைக்க அல்லாஹ் நாடியிருந்தால், என்னுடைய நல்லுபதேசம் உங்களுக்கு (யாதொரு) பலனும் அளிக்காது; (என்றும் கூறினார்). (அல்குர்ஆன் 11:33-34)

இப்படியிருக்கும் போது அல்லாஹ் அவருக்கு ஆறுதல் கூறும் வண்ணம் வஹீ அறிவித்தான், "மேலும், நூஹ்வுக்கு வஹீ அறிவிக்கப்பட்டது: "(முன்னர்) ஈமான் கொண்டவர்களைத் தவிர, (இனி) உம்முடைய சமூகத்தாரில் நிச்சயமாக எவரும் நம்பிக்கை கொள்ளமாட்டார்; ஆதலால் அவர்கள் செய்வதைப்பற்றி நீர் விசாரப்படாதீர்." (அல்குர்ஆன் 11:36)

இருபது நூற்றாண்டுகளாக தாம் பிரச்சாரம் மேற்கொண்டும் எவ்விதப் பயனும் அளிக்கவில்லையே என அவர் மனம் தளர்ந்து, அல்லாஹ்விடம் பின்வருமாறு பிரார்த்தனை மேற்கொண்டார். "அப்பால் நூஹ் கூறினார்: "என் இறைவா! பூமியின் மீது இக்காஃபிர்களில் எவரையும் நீ வசித்திருக்க விட்டு விடாதே." "நிச்சயமாக நீ அவர்களை விட்டு வைப்பாயானால். உன் அடியார்களை அவர்கள் வழி கெடுத்துவிடுவார்கள்; அன்றியும், பாவிகளையும், காஃபிர்களையும் அன்றி அவர்கள் பெற்றெடுக்கமாட்டார்கள். (அல்குர்ஆன் 71:26-27)

அல்லாஹ் இவரது பிரார்த்தனையை ஏற்றுக்கொண்டு, ஓர் கப்பலைக் கட்டுமாறு அவர்களுக்குக் கூறினான். "அதற்கு, "நீர் நம் கண் முன் நம்முடைய வஹீயறிவிப்பின்படியும் கப்பலைச் செய்வீராக! என்று அவருக்கு நாம் அறிவித்தோம்" (அல்குர்ஆன் 23:27)

எனவே நூஹ் அலைஹிஸ்ஸலாம் கப்பல் கட்டும் பணியைத் தொடரந்தார். "அவர் கப்பலைக் கட்டிக் கொண்டிருந்த போது, அவருடைய சமூகத்தின் தலைவர்கள் அவர் பக்கமாகச் சென்றபோதெல்லாம் அவரைப் பரிகசித்தனர்" (அல்குர்ஆன் 11:38)

அதற்கு அவர் நலினமாக பின்வருமாறு பதிலளித்தார், "(அதற்கு) அவர்: "நீங்கள் எங்களைப் பரிகசிப்பீர்களானால், நிச்சயமாக நீங்கள் பரிகசிப்பதுபோலவே, (அதிசீக்கிரத்தில்) நாங்கள் உங்களைப் பரிகசிப்போம்" என்று கூறினார்." (அல்குர்ஆன் 11:38)

இவ்வாறு கூறி அல்லாஹ்வின் வேதனையை நினைவுபடுத்தி அவர்களை பயமுறுத்தினார். ""அன்றியும், எவன்மீது அவனை இழிவு படுத்தும் வேதனை வருமென்றும், எவன்மீது நிலைத்திருக்கும் வேதனை இறங்கும் என்றும் வெகு

விரைவில் நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்" (என்றும் கூறினார்)." (அல்குர்ஆன் 11:39)

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கப்பல் கட்டும் பணியில் மும்முரமாக ஈடுபட்டார்கள். கப்பலும் கட்டிமுடிக்கப்பட்டது. அத்தருணத்தில் ஈமான் கொடண்டவர்களையும், உயிரினங்களிலிருந்து ஒவ்வொரு ஜோடியையும் அக்கப்பலில் ஏற்றுமாறு அல்லாஹ்விடமிருந்து உத்தரவு வந்தது. "இறுதியாக, நம் உத்தரவு வந்து, அடுப்புப் பொங்கவே, (நாம் நூஹை நோக்கி:) "உயிர்ப் பிராணிகள் ஒவ்வொரு வகையிலிருந்தும் (ஆண் பெண் கொண்ட) ஒவ்வொரு ஜோடியை (அக்கப்பலில்) ஏற்றிக் கொள்ளும்; (மூழ்கடிக்கப்படுவார்கள் என்று எவர்களைக் குறித்து முன்பே நம்) வாக்கு ஏற்பட்டுவிட்டதோ அவர்களைத் தவிர; உம் குடும்பத்தாரையும், ஈமான் கொண்டவர்களையும் ஏற்றிக்கொள்ளும்" என்று நாம் கூறினோம்; வெகு சொற்ப மக்களைத் தவிர மற்றவர்கள் அவருடன் ஈமான் கொள்ளவில்லை." (அல்குர்ஆன் 11:40)

அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று, தம்மை விசுவாசம் கொண்டவர்களையும், உயிர்ப் பிராணிகளில் ஒவ்வொரு ஜோடியையும் அக்கப்பலில் ஏற்றினார்கள். "இதிலே நீங்கள் ஏறிக் கொள்ளுங்கள்; இது ஓடுவதும் நிற்பதும் அல்லாஹ்வின் பெயராலேயே (நிகழ்கின்றன). நிச்சயமாக என் இறைவன் மன்னிப்பவனாகவும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான். என்று கூறினார்." (அல்குர்ஆன் 11:41)

நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவர்களுடன் அவர்களை விசுவாசம் கொண்டோரும், உயிரணங்களும் அக்கப்பலில் ஏறிய பிறகு, வானம் குமுறி, கடுமையான மழை பெய்ய ஆரம்பித்தது. பூமியிலிருந்தும் பல ஊற்றுக்கள் தோன்றி, அவற்றிலிருந்தும் நீர் வர ஆரம்பித்தது. "ஆகவே, நாம் கொட்டும் மழையைக் கொண்டு வானங்களின் வாயில்களைத் திறந்து விட்டோம்." மேலும், பூமியின் ஊற்றுகளை பொங்க வைத்தோம்; இவ்வாறாக, குறிப்பிட்ட ஓர் அளவின் படி (இரு வகை) நீரும் கலந்(து பெருக் கெடுத்)தது. அப்போது, பலகைகளினாலும் ஆணிகளினாலும் செய்யப்பட்ட மரக்கலத்தின் மீது அவரை ஏற்றிக் கொண்டோம். எனவே, எவர் (அவர்களால்) நிராகரிக்கப்பட்டுக் கொண்டிருந்தாரோ, அவருக்கு (நற்) கூலி கொடுப்பதாக, (அம்மரக்கலம்) நம் கண் முன்னிலையில் மிதந்து சென்று

வரலாற்றுச் சிதைவுகள்

"மத்திய கால நூற்றாண்டுகளில் கிறிஸ்தவர்கள் மனிதர்களுக்கு மத்தியில் இன வெறியை உண்டுபண்ணும் வகையில் தங்கள் வேத நூல்களில் நச்சுக் கருத்துக்களைச் சொருக ஆரம்பித்தனர். அதில் அவர்கள், மதகுருமார்களும், தூய்மையானவர்களும் சாமின் வழித்தோன்றலில் வந்தவர்கள் என்றும், குதிரை வீரர்கள் யாபேத்தின் வழித்தோன்றலில் வந்தவர்கள் என்றும், ஏழை எளியவர்கள் காமின் வழித்தோன்றலில் வந்தவர்கள் என்றும் வீண் புரளியைக் கிளப்பிவிட்டனர். 1964ஆம் ஆண்டு அமெரிக்க செனட்டராக இருந்த ரோபர்ட் பேய்ட் என்பவருக்கு மேற்கு வெஜினாவிலிருந்து ஓர் கட்டளை வந்தது. தம் அரசியலை நீடிப்பதற்காக நோவாவின் வரலாற்றில் பயன்படுத்தப்பட்டு வரும் இனவேற்றுமைகளைக் களைந்து, நீதமாக ஆட்சிபுரியுமாறு கூறும்

கொண்டிருந்தது. (:)

அப்போது, தன்னை விசுவாசம் கொள்ளாத தனது மகன் நீரில் மூழ்காமல் இருக்க விரண்டோடிக் கொண்டிருப்பதைக் கண்ட நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவனை அழைத்தார்கள். "(அப்போது தம்மை விட்டு) விலகி நின்ற தம் மகனை நோக்கி "என்னருமை மகனே! எங்களோடு நீயும் (கப்பலில்) ஏறிக்கொள்; காஃபிர்களுடன் (சேர்ந்து) இராதே!" என்று நூஹ் அழைத்தார்." (அல்குர்ஆன் 11:42)

என்றாலும் அவரது மகன் தனது தந்தையை விசுவாசம் கொள்ளாமல், அவரின் போதனைகளையும் ஏற்காமல் அவருக்கு பின்வருமாறு பதிலளித்தான், "அதற்கு அவன்: "என்னைத் தண்ணீரிலிருந்து பாதுகாக்கக் கூடிய ஒரு மலையின் மேல் சென்று நான் (தப்பி) விடுவேன்" எனக் கூறினான்;" (அல்குர்ஆன் 11:43)

அதற்கு நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "இன்றைய தினம் அல்லாஹ் யாருக்கு அருள் புரிந்திருக்கிறானோ அவரைத் தவிர அல்லாஹ்வின் கட்டளையிலிருந்து காப்பாற்றப்படுபவர் எவருமில்லை என்று கூறினார்" (அல்குராஆன் 11:43)

இவ்வாறு உரையாடல் இடம்பெற்றுக்கொண்டிருக்குமே போதே திடீரென ஓர் அலை தோன்றி, அவரின் மகனை மூழ்கடித்து விட்டது. "அச்சமயம் அவர்களிடையே பேரலை ஒன்று எழுந்து குறுக்கிட்டது; அவன் மூழ்கடிக்கப்பட்டவர்களில் ஒருவனாகி விட்டான்." (அல்குர்ஆன் 11:43)

தன் மகன் மேல் அதிக பாசம் கொண்ட நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது மகனைக் காப்பாற்றுமாரு அல்லாஹ்விடம் மன்றாடினார்கள். ஏனெனில் அல்லாஹ் இவரின் குடும்பத்தாரை பாதுகாப்பதாக வாக்களித்திருந்தான்.

நபிமார்களை தரம்குறைத்து மதிப்பிடல்

"நோவா விவசாயம் செய்து வந்தார். மாதுளை, திராட்சை போன்ற கனிகளையும் நட்டினார். திராட்சைக் கனிகள் காய்த்த போது, அதிலிருந்து மதுவைத் தயாரித்து, அதைக் குடித்து, மதுபோதையில் வீழ்ந்தார். அப்போது அவரின் ஆடைகள் விலகி நிர்வாணமாக இருந்தார். காம், தன்னுடைய தகப்பனின் நிர்வாணத்தைக் கண்ட போது அது அவனுக்கு வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருக்க, தன்னுடைய சகோதரர்களுக்கும் அதை வேடிக்கையாக அறிவித்து, பரியாசம் பண்ணினான். அவர்களிருவரும் இவரை ஓர் ஆடையால் அவரின் நிர்வாணத்தை மறைத்தனர். ஆனால் திராட்சை ரச வெறி தெளிந்து எழுந்த நோவா காம் தனக்குச் செய்ததை அறிந்து காமின் இளைய மகனான கானானைச் சபிக்கிறார். இவன் தன் இரு சகோதரர்களின் அடிமையாகத் தான் இருக்கப்போகிறன். சேமும், யாபேத்தும் தேவ கிருபை பெற்றவர்கள் எனக் கூறினார்." (ஆதியாகமம்)

பாபிலோனிய தல்மூதில் இதற்கு பின்வருமாறு விளக்கம் கூறப்பட்டுள்ளது, : "கானான் அல்லது காம் நோவாவுடன் ஓரினக்கச் செய்கையில் ஈடுபட்டிருக்கலாம். அதனால் தான் நோவா சபித்தார். ஓர் சங்கையான தீர்க்கதரிசிக்கு இவை

"நூஹ் தன் இறைவனிடம் "என் இறைவனே! நிச்சயமாக என் மகன் என் குடும்பத்தைச் சேர்ந்தவனே; உன் வாக்குறுதி நிச்சயமாக உண்மையானது; நீதி வழங்குவோர்களிலெல்லாம் மேலான நீதிபதியாய் நீ இருக்கிறாய்" எனக் கூறினார்." (அல்குர்ஆன் 11:45)

குடும்பத்தாரைப் பாதுகாப்பதாக அல்லாஹ் கூறியது அவர்களிலும் விசுவாசம் கொண்டோரைத் தான் என்றும், நிராகரித்தவர்களை அல்ல என்றும் அல்லாஹ் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தெளிவுபடுத்தினான். "அ(தற்கு இறை)வன் கூறினான்: "நூஹே! உண்மையாகவே அவன் உம் குடும்பத்தைச் சேர்ந்தவன் அல்லன்; நிச்சயமாக அவன் ஒழுக்கமில்லாச் செயல்களையே செய்து கொண்டிருந்தான்." (அல்குர்ஆன் 11:46)

அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு, அவனை ஒருமைப்படுத்தாவிட்டால் சொந்த மகனாக இருந்தாலும் அல்லாஹ்வின் வேதனையிலிருந்து எந்த நபயினாலும் காப்பாற்றிட முடியாது..

தண்ணீர் பூமி பூராகவும் நிறைந்து, நிராகரிப்போர் அனைவரும் அதில் மாண்டு, அழிந்த பின்னர் அல்லாஹ் பூமியின் ஊற்றுக்களையும் நிறுத்திவிட்டான், "பின்னர்: "பூமியே! நீ உன் நீரை விழுங்கி விடு! என்றும்" (அல்குர்ஆன் 11:44)

அவ்வாறே மழை பொழிவதையும் நிறுத்திவிட்டான், "வானமே! (மழையை) நிறுத்திக்கொள்" என்று சொல்லப்பட்டது" (அல்குர்ஆன் 11:44)

அதன் பின்னர் அக்கப்பல் ஓர் மலையில் தரைதட்டியது. "(கப்பல்) ஜூதி மலைமீது தங்கியது" (அல்குர்ஆன் 11:44)

பின்னர் அல்லாஹ் நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பாதுகாப்பாக இறங்குமாறு கட்டளையிட்டான். ""நூஹே! உம் மீதும் உம்மோடு இருக்கின்ற மக்கள் மீதும் நமது பாதுகாப்புடனும் அபிவிருத்திகளுடனும் நீர் இறங்குவீராக" (அல்குர்ஆன் 11:48)

அவரும், அவருடன் இருந்த முஃமின்களும் பாதுகாப்பாக இறங்கினார்கள். அவர்கள் அனைவருமாகச் சேர்ந்து ஓர் ஊரை உருவாக்கி, அதில் மரங்களையும் நட்டு, தம்முடன் இருந்த உயிர்ப்பிராணிகள் அனைத்தையும் விடுவித்தார்கள். உலகம் புதிதான ஓர் கோணத்தில் பரிணமிக்க ஆரம்பித்தது. காலம் செல்லச் செல்ல அம்மக்களும் பிள்ளைகள் பெற்று ஓர் புது தலைமுறையினர் உருவாகினர்.

2- இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம்:

இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஏகத்துவத்தைப் போதித்த நபியாகக் காணப்பட்டார். இந்த விடயம் அவரின் வாழ்க்கைக் குறிப்புக்களிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றது. "நிச்சயமாக இப்றாஹீம் ஒரு வழிகாட்டியாகவும் அல்லாஹ்வுக்கு அடிபணிந்தவராகவும் (நேரான பாதையில்) சார்ந்தவராகவும் இருந்தார்; மேலும், அவர் முஷ்ரிக்குகளில் (இணை வைப்போரில்) ஒருவராக இருக்கவில்லை." (அல்குர்ஆன் 16:120)

இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வுக்கு இணைகற்பிக்கும் ஓர் சமுதாயத்தில் தான் வளர்ந்தார்கள். அவருடைய தந்தை ஓர் சிலை வணக்கசாலியாகவும், சிலைகளை செய்பவராகவும் இருந்தார். இதனை இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மறுத்து வந்துள்ளார்கள். "இப்றாஹீம் தம் தகப்பனார் ஆஜரிடம், "விக்கிரகங்களையா நீர் தெய்வங்களாக எடுத்துக் கொள்கிறீர்? நான் உம்மையும் உம் சமூகத்தாரையும், பகிரங்கமான வழி கேட்டில் இருப்பதை

நிச்சயமாக பார்க்கிறேன்" என்று கூறியதை நினைத்துப்பாரும்." (அல்குர்ஆன் 06:74)

இக்கொள்கையிலேயே உறுதியோடு இருக்கும் அவரின் சமூகத்தையும் அவர் அடியோடு வெறுத்தார். சிலை வணக்கம் இவரின் மனதிற்கு சரியானதாகத் தென்படவில்லை. எனவே அவர் அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தார். "ஆகவே அவரை இரவு மூடிக் கொண்டபோது அவர் ஒரு நட்சத்திரத்தைப் பார்த்தார்; "இதுதான் என் இறைவன்!" என்று கூறினார்; ஆனால் அது மறைந்த போது அவர், "நான் மறையக் கூடியவற்றை நேசிக்க மாட்டேன்" என்று சொன்னார்." (அல்குர்ஆன் 06:76)

*நட்சத்திரம் என்பது, விடிவெள்ளியாகும். "பின்னர் சந்திரன் (பிரகாசத்துடன்) உதயமாவதைக் கண்டு.." (அல்குர்ஆன் 06:77)

*அதாவது, சந்திரனையும் சில மக்கள் வணங்கிக் கொண்டிருந்தனர். "அவர், "இதுவே என் இறைவன்" என்று கூறினார்" (அல்குர்ஆன் 06:77)

இவர்கள் உறுதியாக அதை வணங்குவதனால் தான் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும் அதை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள். "ஆனால் அது மறைந்த போது" (அல்குர்ஆன் 06:77)

*அதாவது, அதுவும் அடிவானத்தைக் கடந்து சென்று, மறைந்தவுடன்

"அவர், "என் இறைவன் எனக்கு நேர்வழி காட்டவில்லையானால், நான் நிச்சயமாக வழி தவறியவர்கள் கூட்டத்தில் (ஒருவனாக) ஆகிவிடுவேன்" என்று கூறினார்."

பின் சூரியன் (மிக்க ஒளியுடன்) உதயமாவதைக் கண்டபோது (அல்குர்ஆன் 06:77-78)

*ஏனெனில் இதனையும் ஓர் சமூகம் வணங்கிக் கொண்டிருந்ததை அவர் கண்டார். ""இதுவே என் இறைவன்; இது எல்லாவற்றிலும் பெரியது" என்று அவர் கூறினார்" (அல்குர்ஆன் 06:78)

சூரியனை எவ்வாறு கடவுளாக ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்காகத் தான் இவ்வாறு செய்தார்கள். "அதுவும் அஸ்தமிக்கவே" (அல்குர்ஆன் 06:78)

*கண்களை விட்டும் அது மறைந்து விட்டதும், இதனை வணங்கிக் கொண்டிருந்தோரைபா பார்த்து, "அவர், "என் சமூகத்தாரே! நீங்கள் (ஆண்டவனுக்கு) இணைவைக்கும் (ஒவ்வொன்றையும்) விட்டு நிச்சயமாக நான் விலகி விட்டேன்" என்று கூறினார்."

"வானங்களையும் பூமியையும் படைத்தவன் பக்கமே நான் உறுதியாக என் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்; நான் முஷ்ரிக்கானவனாக - (இணைவைப்போரில் ஒருவனாக) இருக்க மாட்டேன்" (என்று கூறினார்).." (அல்குர்ஆன் 06:78-79)

இவையனைத்தும் கடவுளாக இருக்க முடியாது என்பது இவருக்கு நிருபணமான போது, தனது தந்தைக்கு அதிகமாக உபதேசம் செய்தார்கள், இணைவைப்பிலிருந்து நீங்கும் படியும் அவருக்கு எடுத்துரைத்தார். ""என் அருமைத் தந்தையே! (யாதொன்றையும்) கேட்க இயலாத, பார்க்க இயலாத உங்களுக்கு எந்தத் தேவையையும்



பூர்த்தி செய்ய இயலாததுமான ஒன்றை ஏன் நீங்கள் வணங்குகிறீர்கள்?" என்று அவர் தம் தந்தையிடம் கூறியதை நினைவுபடுத்தும்."

"என் அருமைத் தந்தையே! மெய்யாகவே உங்களிடம் வந்திராத கல்வி ஞானம் நிச்சயமாக எனக்கு வந்திருக்கிறது; ஆகவே, நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்; நான் உங்களைச் செவ்வையான நேர்வழியில் நடத்துகிறேன்.

"என் அருமைத் தந்தையே! நீங்கள் ஷைத்தானை வணங்காதீர்கள்; நிச்சயமாக ஷைத்தான், அர்ரஹ்மானுக்கு (அருள் மிக்க நாயனுக்கு) மாறு செய்பவன்.

"என் அருமைத் தந்தையே! நிச்சயமாக அர்ரஹ்மானிடமிருந்துள்ள வேதனை வந்து உங்களைத் தொட்டு, நீங்கள் ஷைத்தானின் கூட்டாளியாகி விடுவதைப் பற்றி நான் அஞ்சுகிறேன்" (என்றார்). (அல்குர்ஆன் 19:42-45)

என்றாலும் அவர் தந்தையின் பதிலோ மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. "(அதற்கு அவர்) "இப்றாஹீமே! நீர் என் தெய்வங்களை புறக்கணிக்கிறீரா? நீர் (இதை விட்டும்) விலகிக்க கொள்ளாவிட்டால் உம்மைக் கல்லாலெறிந்து கொல்வேன்; இனி நீர் என்னைவிட்டு நெடுங்காலத்திற்கு விலகிப் போய்விடும்" என்றார்." (அல்குர்ஆன் 19:46)

அதற்கு இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "(அதற்கு இப்ராஹீம்) "உம்மீது ஸலாம் உண்டாவதாக! மேலும் என் இறைவனிடம் உமக்காகப் பிழை பொறுக்கத் தேடுவேன்; நிச்சயமாக அவன் என் மீது கிருபையுடையவனாகவே இருக்கின்றான்" என்று கூறினார்."

நான் உங்களை விட்டும், அல்லாஹ்வையன்றி நீங்கள் பிரார்த்திப்பவற்றை விட்டும் விலகிக் கொள்கிறேன்; மேலும் நான் என் இறைவனை பிரார்த்தித்துக் கொண்டே இருப்பேன்; என் இறைவனைப் பிரார்த்திப்பது கொண்டு நான் நிர்ப்பாக்கியவானாகாமல் இருக்கப் போதும்" (என்றார்). (அல்குர்ஆன் 19:47-48)

இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது தந்தையையும், தன் சமூகத்தினரையும் ஓரிறைக் கொள்கையின் பக்கம் அழைத்துக் கொண்டே இருந்தார்கள். என்றாலும் அவரது அழைப்புக்கு ஒருவரும் செவிசாய்க்கவில்லை. அனைவரும் இணைவைப்பில் பிடிவாதமாகவே இருந்தனர். "அவருடன் அவருடைய கூட்டத்தார் விவாதித்தார்கள்; அதற்கவர் "அல்லாஹ்வைப் பற்றியா என்னிடம் தர்க்கம் செய்கிறீர்கள்? அவன் நிச்சயமாக எனக்கு நேர்வழி காட்டிவிட்டான்; நீங்கள் அவனுக்கு இணையாக்குபவற்றைப் பற்றி நான் பயப்படமாட்டேன்; என் இறைவன் எதையாவது நாடினாலன்றி (எதுவும் நிகழ்ந்து விடாது); என் இறைவன் (தன்) ஞானத்தால் எல்லாப் பொருட்களையும் சூழ்ந்திருக்கின்றான்; இதை நீங்கள் சிந்திக்க வேண்டாமா?" என்று கூறினார்."

உங்களுக்கு அவன் எந்த அத்தாட்சியும் இறக்கி வைக்காமலிருக்கும்போது நீங்கள் அல்லாஹ்வுக்கு இணைவைப்பது பற்றி பயப்படவில்லை - அப்படியிருக்க நீங்கள் (அவனுக்கு) இணைவைப்பவற்றுக்கு நான் எப்படி பயப்படுவேன்? நம் இருபிரிவினரில் அச்சமின்றி இருக்கத்தகுதி உடையவர் யார்? நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், (கூறுங்கள் எனவும் கேட்டார்) (அல்குர்ஆன் 06:80-81)

மீண்டும் மீண்டும் அவர்களுக்கு இவற்றையே நினைவுபடுத்திக் கொண்டிருந்தார்கள். "அவர் தம் தந்தையையும், தம் சமூகத்தவரையும் நோக்கி: "நீங்கள் எதை வணங்குகிறீர்கள்?" என்று கேட்டபோது," (அல்குர்ஆன் 26:70)

அதற்குப் பதிலாக அவரது சமூகம், "அவர்கள்: "நாங்கள் சிலைகளை வணங்குகிறோம்; நாம் அவற்றின் வணக்கத்திலேயே நிலைத்திருக்கிறோம்" என்று கூறினார்கள்."

(அதற்கு இப்றாஹீம்) கூறினார்: "நீங்கள் அவற்றை அழைக்கும் போது, (அவை காதுகொடுத்துக்) கேட்கின்றனவா?

"அல்லது அவை உங்களுக்கு நன்மை செய்கின்றனவா; அல்லது தீமை செய்கின்றனவா? (எனவுங் கேட்டார்) (அல்குர்ஆன் 26:71-73)

இக்கணத்த கேள்விகளுக்கு அவர்களின் பதில் பின்வருமாறு அமைந்திருந்தது. "(அப்போது அவர்கள்) "இல்லை! எங்கள் மூதாதையர் இவ்வாறே (வழிபாடு) செய்ய நாங்கள் கண்டோம்" என்று கூறினார்கள்." (அல்குர்ஆன் 26:74)

எனவே அவர்களுக்கு தெளிவான, சிந்தனை ரீதியிலான பல சான்றுகளுடன் தூய்மையான ஏகத்துவக் கொள்கையைப் போதிக்க ஆரம்பித்தார்கள், "அவ்வாறாயின், "நீங்கள் எதை வணங்கிக் கொண்டிருந்தீர்கள்? என்பதை நீங்கள் பார்த்தீர்களா?" என்று கூறினார்."

"நீங்களும், உங்கள் முந்திய மூதாதையர்களும் (எதை வணங்கினீர்கள் என்று கவனியுங்கள்)."

"நிச்சயமாக இவை எனக்கு விரோதிகளே - அகிலங்களின் இறைவனைத் தவிர (அவனே காப்பவன்)."

"அவனே என்னைப் படைத்தான்; பின்னும், அவனே எனக்கு நேர்வழி காண்பிக்கிறான்.

"அவனே எனக்கு உணவளிக்கின்றான்; அவனே எனக்குக் குடிப்பாட்டுகிறான்."

"நான் நோயுற்ற காலத்தில், அவனே என்னைக் குணப்படுத்துகிறான்.

"மேலும் அவனே என்னை மரிக்கச் செய்கிறான்; பிறகு அவனே என்னை உயிர்ப்பிப்பான்."

"நியாயத் தீர்ப்பு நாளன்று, எனக்காக என் குற்றங்களை மன்னிப்பவன் அவனே என்று நான் ஆதரவு வைக்கின்றேன்.

"இறைவனே! நீ எனக்கு ஞானத்தை அளிப்பாயாக. மேலும், ஸாலிஹானவர்களுடன் (நல்லவர்களுடன்) என்னைச் சேர்த்து வைப்பாயாக!"

"இன்னும், பின் வருபவர்களில் எனக்கு நீ நற்பெயரை எற்படுத்துவாயாக!"

"இன்னும், பாக்கியம் நிறைந்த சுவனபதியின் வாரிஸுக்காரர்களில் (ஒருவனாக) என்னை ஆக்கி வைப்பாயாக!"

என் தந்தையாரையும் மன்னிப்பாயாக! நிச்சயமாக, அவர் வழி கெட்டவர்களில் (ஒருவராக) இருக்கிறார்.(என்று பிரார்த்தித்தார்)" *(அல்குர்ஆன் 26:75-86)*

இப்படியே போய்க்கொண்டிருக்கும் போது ஒரு நாள் அவரின் சமூகத்தாருக்கு பெருநாள் தினம் வந்தது. அச்சமூகத்தின் அரசனும், அவ்வூர் வாசிகளும் பெருநாள் தினத்தைக் கொண்டாடும் முகமாக பாலைவனத்திற்குச் சென்றார்கள். ஆனால் இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செல்லவில்லை. "எனவே அவரை விட்டும் அ(வருடைய சமூகத்த)வர்கள் திரும்பிச் சென்றனர்."

அப்பால் அவர்களுடைய தெய்வங்களின் பால் அவர் சென்று; "(உங்களுக்கு முன் படைக்கப்பட்டுள்ள உணவுகளை) நீங்கள் உண்ணமாட்டீர்களா?" என்று கூறினார்.

உங்களுக்கு என்ன (நேர்ந்தது)? நீங்கள் ஏன் பேசுகிறீர்களில்லை?" (என்றும் கேட்டார்.)

பின் அவர் அவற்றின் பக்கம் திரும்பி வலக்கையால் அவற்றை அடித்து (உடைத்து) விட்டார். (:அல்குர்ஆன் 37:90-93)

சென்றவர்கள் அனைவரும் திரும்பி வந்ததன் பின்னர் தாம் வணங்கும் சிலைகள் அனைத்தும் உடைந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றனர். தாம் உடைபடுவதிலிருந்தே தம்மைக் காத்துக்கொள்ள சக்தியற்ற இவைகள் எப்படி கடவுள்களாக இருக்க முடியும்? வந்த அவசரத்தில் கத்தினார்கள். ""எங்கள் தெய்வங்களுக்கு இவ்வாறு (தீங்கு) செய்தது யார்? நிச்சயமாக அவன் அக்கிரமக்காரர்களில் ஒருவனாக இருப்பான்" என்று கூறினார்கள்."

அதற்கு (அவர்களில் சிலர்) "இளைஞர் ஒருவர் இவற்றைப் பற்றி (அவதூறாகக்) குறிப்பிட்டு வந்ததை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம், அவருக்கு இப்றாஹீம் என்று பெயர் சொல்லப்படுகிறது" என்று கூறினார்கள்.

"அப்படியானால் அவரை மக்கள் கண் முன்னே கொண்டு வாருங்கள்; அவர்கள் சாட்சியம் கூறும் பொருட்டு" என்று சொன்னார்கள்.

"இப்றாஹீமே! எங்கள் தெய்வங்களை இவ்வாறு செய்தவர் நீர் தாமோ?" என்று (அவர் வந்ததும்) கேட்டனர். (அல்குர்ஆன் 21:59-62)

அதற்கு இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "அதற்கு அவர் "அப்படியல்ல! இவற்றில் பெரிய சிலை இதோ இருக்கிறதே, இது தான் செய்திருக்கும்; எனவே, இவை பேசக்கூடியவையாக இருப்பின், இவற்றையே நீங்கள் கேளுங்கள்" என்று கூறினார்." (அல்குர்ஆன் 21:63)

அவ்வாறு செய்ய முடியாததை நினைத்து, அனைவரும் வெட்கித் தலைகுனிந்தனர். "(இதற்கு பதில் கூறத் தெரியாத) அவர்கள் தங்களுக்குள் திரும்பி, (ஒருவருக்கொருவர்) "நிச்சயமாக நீங்கள் தாம் (இவற்றை தெய்வங்களாக நம்பி) அநியாயம் செய்து விட்டீர்கள்" என்று பேசிக் கொண்டார்கள்."

பிறகு அவர்கள் (அவமானத்துடன்) தங்கள் தலைகளைத் தொங்கப் போட்டுக் கொள்ளுமாறு செய்யப்பட்டார்கள்; "இவை பேச மாட்டா என்பதைத் தான் நீர் நிச்சயமாக அறிவீரே!" (என்று கூறினர்). (அல்குர்ஆன் 21:64-65)

அதற்கு இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள், ""(அப்படியாயின்)

அல்லாஹ்வையன்றி உங்களுக்கு எந்த நன்மையும் செய்யாத உங்களுக்கு தீங்கும் அளிக்காதவற்றையா வணங்குகிறீர்கள்" என்று கேட்டார்."

"சீச்சீ! உங்களுக்கும், நீங்கள் வணங்கும் அல்லாஹ் அல்லாதவற்றுக்கும் கேடு தான்; நீங்கள் இதனை அறிந்து கொள்ளவில்லையா?" (என்று இப்ராஹீம் கூறினார்). (அல்குர்ஆன் 21:66-67)

தமக்கு இப்றாஹிமுடன் தர்க்கிக்கும் அளவுக்கு திறமை இல்லாததினாலும், அவர் தமது கடவுள்களை உடைத்ததற்காவும் அவரைப் பழிவாங்க நினைத்தார்கள். "(இதற்கு) அவர்கள் நீங்கள் (இவரை ஏதாவது செய்ய நாடினால் இவரை (நெருப்பிலிட்டு) எரியுங்கள்; (இவ்வாறு செய்து) உங்கள் தெய்வங்களுக்கு உதவி செய்யுங்கள்" என்று கூறினார்கள்." (அல்குர்ஆன் 21:68)

ஆனால் அல்லாஹ் அந்நெருப்பிலிருந்து இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் காப்பாற்றி விட்டான். "இப்ராஹீம் தீக்கிடங்கில் எறியப்பட்டவுடன்) "நெருப்பே! இப்ராஹீம் மீது நீ குளிர்ச்சியாகவும், சுகமளிக்கக் கூடியதாகவும், ஆகிவிடு!" என்று நாம் கூறினோம்."

மேலும், அவர்கள் அவருக்குச் சதி செய்ய நாடினார்கள், ஆனால் நாம் அவர்களையே நஷ்டவாளிகளாய் ஆக்கினோம்! (அல்குர்ஆன் 21:69-70)

இவ்வாறு இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை அல்லாஹ் காப்பாற்றிய போது, திரும்பவும் அவ் அரசனிடம் வந்தார்கள். "அல்லாஹ் தனக்கு அரசாட்சி கொடுத்ததின் காரணமாக (ஆணவங்கொண்டு), இப்ராஹீமிடத்தில் அவருடைய இறைவனைப் பற்றித் தர்க்கம் செய்தவனை (நபியே!) நீர் கவனித்தீரா? இப்ராஹீம் கூறினார்: "எவன் உயிர் கொடுக்கவும், மரணம் அடையும்படியும் செய்கிறானோ, அவனே என்னுடைய ரப்பு(இறைவன்)" என்று" (அல்குர்ஆன் 02:258)

அதற்கு அவ் அரசன், "அதற்கவன், "நானும் உயிர் கொடுக்கிறேன்; மரணம் அடையும் படியும் செய்கிறேன்" என்று கூறினான்" (அல்குர்ஆன் 02:258)

இவ்விடயத்தில் இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அவ் அரசனுடன்

விவாதிக்க விரும்பவில்லை. ஏனெனில் கண்கட்டுவித்தைகள் மூலமாக அவ் அரசனுக்கு ஒருவனை கொன்றுவிட்டு, திரும்பவும் உயிர்ப்பிக்க முடியும் என்பதனை அவர் அறிந்திருந்தார். அதனால் தமது தர்க்கத்திற்கு இன்னொரு விடயத்தை முன்வைத்தார்கள், *"(அப்பொழுது) இப்ராஹீம் கூறினார்: "திட்டமாக அல்லாஹ் சூரியனைக் கிழக்கில் உதிக்கச் செய்கிறான்; நீ அதை மேற்குத் திசையில் உதிக்கும்படிச் செய்!" என்று (அல்லாஹ்வை) நிராகரித்த அவன், திகைத்து வாயடைப்பட்டுப் போனான்; தவிர, அல்லாஹ் அநியாயம் செய்யும் கூட்டத்தாருக்கு நேர் வழி காண்பிப்பதில்லை."* *(அல்குர்ஆன 02:258)*

இவ்விடயத்தில் அவ் அரசனின் இயலாமை வெளிப்பட்டது.

இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ் இறந்தவர்களை எப்படி எழுப்புகிறான் என்பதை தனது கண்களால் காண ஆசைப்பட்டார்கள். *"இன்னும், இப்ராஹீம்: "என் இறைவா! இறந்தவர்களை நீ எவ்வாறு உயிர்ப்பிக்கிறாய் என்பதை எனக்குக் காண்பிப்பாயாக!" எனக் கோரியபோது, அவன்,"நீர் (இதை) நம்ப வில்லையா?" எனக் கேட்டான்; "மெய்(யாக நம்புகிறேன்!) ஆனால் என் இதயம் அமைதிபெறும் பொருட்டே (இவ்வாறு கேட்கிறேன்)" என்று கூறினார் "(அப்படியாயின்,) பறவைகளிலிருந்து நான்கைப்பிடித்து, (அவை உம்மிடம் திரும்பி வருமாறு) பழக்கிக்கொள்ளும்; பின்னர்(அவற்றை அறுத்து) அவற்றின் பாகத்தை ஒவ்வொரு மலையின் மீது வைத்து விடும்; பின், அவற்றைக் கூப்பிடும்; அவை உம்மிடம் வேகமாய்(ப் பறந்து) வரும்; நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன், பேரறிவாளன் என்பதை அறிந்து கொள்ளும்" என்று (அல்லாஹ்) கூறினான்."* *(அல்குர்ஆன் 02:260)*

அதன் பின்னர் இப்றாஹிமுக்கும், அவரது மகன் இஸ்மாயிலுக்கும் (இருவருக்கும்



பலஸ்தீனில் ஹேப்ரன் நகரில் இருக்கும் இப்றாஹீமி மசூதியில் அமைந்துள்ள இப்றாஹிம் நபியின் தொழுமிடம்.

3- மூஸா அலைஹிஸ்ஸலாம்

இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித்தோன்றலில் வந்த பனூ இஸ்ரவேலர்கள் எகிப்து அரசனான பிர்அவ்னிடம் அடிமைகளாக இருந்தார்கள். தம்மை பிர்அவ்னிடமிருந்து விடுவித்துச் செல்ல ஒரு வாலிபன் தோன்றுவான் என இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முன்னறிவிப்புச் செய்த செய்தியை அறிந்திருந்தனர். இந் நண்மாராயம் எல்லோராலும் பரவலாகப் பேசப்பட்டது. இதையறிந்த பிர்அவ்ன், இஸ்ரவேலர்களில் பிறக்கும் அனைத்து ஆண் குழந்தைகளையும் கொல்லுமாறு தம் பணியாளர்களுக்கு ஏவினான். "நிச்சயமாக ஃபிர்அவ்ன் இப்பூமியில் பெருமையடித்துக் கொண்டு, அந்த பூமியிலுள்ளவர்களைப் (பல) பிரிவினர்களாக்கி, அவர்களிலிருந்து ஒரு கூட்டத்தாரை பலஹீனப்படுத்தினான்; அவர்களுடைய ஆண் குழந்தைகளை அறுத்(துக் கொலை செய்)து பெண் குழந்தைகளை உயிருடன் விட்டும் வைத்தான்; நிச்சயமாக அவன் குழப்பம் செய்வோரில் ஒருவனாக இருந்தான்." (அல்குர்ஆன் 28:04)

இச்சந்தர்ப்பத்தில் தான் பிர்அவ்னிடம் பலகீனமாக இருந்த பனூ இஸ்ரவேலர்களை அல்லாஹ் காப்பாற்ற நினைத்தான். "ஆயினும் (மிஸ்ரு) பூமியில் பலஹீனப் படுத்தப்பட்டோருக்கு நாம் உபகாரம் செய்யவும், அவர்களைத் தலைவர்களாக்கிவிடவும் அவர்களை (நாட்டுக்கு) வாரிசுகளாக்கவும் நாடினோம்."

"இன்னும், அப்பூமியில் அவர்களை நிலைப்படுத்தி ஃபிர்அவ்னும், ஹாமானும், அவ்விருவரின் படைகளும் இவர்களைப்பற்றி எ(வ் விஷயத்)தில் பயந்து கொண்டிருந்தார்களோ அதைக் காண்பிக்கவும் (நாடினோம்). (அல்குர்ஆன் 28:05-06)

பிர்அவ்ன் தனது பணியாட்கள் மூலமாக யார் எச்சந்தர்ப்பத்தில் குழந்தை பெற இருகிகறார்கள் என்ற முழுத் தகவல்களையும் ஒன்று சேர்த்து, ஆண்குழந்தைகள் பிறக்கும் போது அவைகளைக் கொன்று குவித்து, தாம் அவதானமாக இருக்கிறோம் என எவ்வளவு தான் நினைதிருந்தாலும், அல்லாஹ் பிர்அவ்னும், ஹாமானும், அவர்களிருவரின் படைகளும் எந்த விடயத்தை அஞ்சிக்கொண்டிருந்தார்களோ அதைக் காண்பிக்க ஆரம்பித்தான்.

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாயார் அவரைப் பெற்றெடுத்த போது, பிர்அவ்னை எண்ணி, அஞ்சி, நடுங்கினார்கள். "நாம் மூஸாவின் தாயாருக்கு: "அவருக்கு (உன் குழந்தைக்குப்) பாலூட்டுவாயாக; அவர் மீது (ஏதும் ஆபத்து வரும் என்று) நீ பயப்படுவாயானால், அவரை ஆற்றில் எறிந்து விடு - அப்பால் (அவருக்காக) நீ பயப்படவும் வேண்டாம், துக்கப்படவும் வேண்டாம்; நிச்சயமாக நாம் அவரை உன்னிடம் மீள வைப்போம்; இன்னும், அவரை (நம்) தூதர்களில் ஒருவராக்கி வைப்போம்" என்று வஹீ அறிவித்தோம்." (அல்குர்ஆன் 28:07)

அல்லாஹ்வின் கட்டளைக்கிணங்க தனது குழந்தையை ஓர் பெட்டியில் போட்டு ஆற்றில் எறிந்துவிட்டார்கள். "(நதியில் மிதந்து வந்த) அவரை ஃபிர்அவ்னுடைய குடும்பத்தினர் எடுத்துக் கொண்டார்கள்; (பிற்காலத்தில் அவர்) அவர்களுக்கு விரோதியாகவும் துக்கந்தருபவராகவும் ஆவதற்காக! நிச்சயமாக ஃபிர்அவ்னும், ஹாமானும், அவ்விருவரின் படைகளும் தவறிழைப்பவர்களாகவே இருந்தனர்." (அல்குர்ஆன் 28:08)

ஆற்றில் மிதந்து வந்த குழந்தை மீது பிர்அவ்னின் மனைவிக்கு அல்லாஹ் இரக்கத்தை உண்டாக்கினான். "இன்னும்: (குழந்தையைக் கண்ட) ஃபிர்அவ்னின் மனைவி ("இக்குழந்தை) எனக்கும் உங்களுக்கும் கண் குளிர்ச்சியாக இருக்கிறது - இதை நீங்கள் கொன்று விடாதீர்கள்; நமக்கு இவர் பயன் அளிக்கக்கூடும்; அல்லது நாம் இவரை நம் புதல்வராக்கிக் கொள்ளலாம்" என்று சொன்னார்; இன்னும் அவர்கள் (இதன் விளைவு என்னவாகும் என்பதை) உணர்ந்து கொள்ளவில்லை." (அல்குர்ஆன் 28:09)

இது ஒரு பக்கமிருக்க, மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தாயாரின் நிலை பின்வருமாறு இருந்தது. "மூஸாவின் தாயுடைய இருதயம் (துக்கத்தால்) வெறுமையாகி விட்டது; முஃமின்களில் நின்றுமுள்ளவளாய் இருப்பதற்காக நாம் அவள் உள்ளத்தை உறுதிப்படுத்தாது இருந்திருந்தால், அவள் (மூஸா ஆற்றில் விடப்பட்டதை) வெளிப்படுத்த முடுகியிருப்பாள்."

இன்னும் மூஸாவின் சகோதரியிடம்: "அவரை நீ பின் தொடர்ந்து செல்" என்றும் (தாய்) கூறினாள். (அவ்வாறே சென்று ஃபிர்அவ்னின்) ஆட்கள் காண முடியாதபடி அவள் தூரத்திலிருந்து அவரை கவனித்து வந்தாள்.

நாம் முன்னதாகவே அவரை(ச் செவிலித்தாய்களின்) பாலருந்துவதை தடுத்து விட்டோம்; (அவருடைய சகோதரி வந்து) கூறினாள்: "உங்களுக்காக பொறுப் பேற்று அவரை(ப் பாலூட்டி) வளர்க்கக் கூடிய ஒரு வீட்டினரை நான் உங்களுக்கு அறிவிக்கட்டுமா? மேலும் அவர்கள் அவர் நன்மையை நாடுபவராக இருப்பார்கள்."

இவ்வாறு அவருடைய தாயாரின் கண்குளிர்ச்சியடையவும், அவள் துக்கப்படாதிருக்கவும், நிச்சயமாக அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது என்பதை அவள் அறிந்து கொள்வதற்காகவும் நாம் அவரை அவர் தாயாரிடத்தே திரும்பச் சேர்த்தோம் - எனினும், அவர்களில் பெரும்பாலோர் (இதை) அறிய மாட்டார்கள். (அல்குர்ஆன் 28:10-13)

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் கொடுங்கோலன் பிர்அவ்னின் வீட்டிலேயே வளர்ந்தார்கள். "இன்னும், அவர் வாலிபமடைந்து, (பக்குவ) நிலை பெற்றபோது,

நாம் அவருக்கு ஞானத்தையும் கல்வியையும் அளித்தோம் - இவ்வாறே நல்லோருக்கு நாம் (நற்) கூலி வழங்குகிறோம்."

(ஒரு நாள் மூஸா) மக்கள் அயர்ந்து (தூக்கத்தில் பராமுகமாக) இருந்த போது, நகரத்தில் நுழைந்தார்; அங்கு இரண்டு மனிதர்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்ததைக் கண்டார்; ஒருவன் அவர் கூட்டத்தைச் சேர்ந்தவன்; மற்றொருவன் அவர் பகைவன் கூட்டத்தைச் சேர்ந்தவன்; பகைவனுக்கெதிராக உதவி செய்யுமாறு அவர் கூட்டத்தான் கோரினான் - மூஸா அ(ப் பகை)வனை ஒரு குத்துக் குத்தினார்; அவனை முடித்தார்; (இதைக் கண்ட மூஸா): "இது ஷைத்தானுடைய வேலை; நிச்சயமாக அவன் வழி கெடுக்கக்கூடிய பகிரங்கமான விரோதியாவான்" என்று கூறினார்.

"என் இறைவா! நிச்சயமாக நான் என் ஆத்மாவுக்கே அநியாயம் செய்து விட்டேன்; ஆகவே, நீ என்னை மன்னிப்பாயாக!" என்று பிரார்த்தித்தார்; அப்போது அவன் அவரை மன்னித்தான் - நிச்சயமாக அவன், மிகவும் மன்னிப்பவனாகவும், கிருபை மிக்கவனாகவும் இருக்கின்றான்.

"என் இறைவா! என் மீது நீ அருள்புரிந்ததன் காரணமாக, நான் இனி ஒரு போதும் குற்றவாளிகளுக்கு உதவி செய்பவனாக இருக்க மாட்டேன்" என்று கூறினார். (அல்குர்ஆன் 28:14-17)

பிர்அவ்னிடமிருந்து மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிரியும் நேரமும் வந்தது. "மேலும், (தமக்கு என்ன நடக்குமோ என்று மறுநாள்) காலையில் பயத்துடன் கவனித்துக் கொண்டு நகரத்தில் இருந்தபோது, முன் தினம் அவரிடம் உதவி கோரியவன் (மீண்டும்) அவரை (உதவிக்காக) கூச்சலிட்டு அழைத்தான் அதற்கு, மூஸா: "நிச்சயமாக நீ பகிரங்கமான கலகக்காரனாக இருக்கின்றாய்" என்று அவனிடம் கூறினார்."

பின்னர், மூஸா தம்மிருவருக்கும் பகைவனாக இருந்தவனைப் பிடிக்க, நாடியபோது, அவர் இனத்தான் (தன்னையே அவர் பிடிக்க) வருகிறார் என்று எண்ணி) "மூஸாவே! நேற்று ஒரு மனிதனை நீர் கொலை செய்தது போல், என்னையும் கொலை செய்ய நாடுகிறீரா? இப்பூமியில் அக்கிரமம் செய்பவராகவே இருக்க நீர் நாடுகிறீர். மேலும், இணக்கம் ஏற்படுத்துவோரில் (ஒருவராக) இருக்க நீர்

நாடவில்லை" என்று கூறினான்.

பின்னர், நகரத்தின் ஒரு கோடியிலிருந்து (நன்) மனிதர் ஒருவர் ஓடி வந்து, "மூஸாவே! நிச்சயமாக (இந்நகர்ப்) பிரமுகர்கள் ஒன்று கூடி உம்மைக் கொன்று விட வேண்டுமென ஆலோசனை செய்கிறார்கள்; ஆகவே நீர் (இங்கிருந்து) வெளியேறி விடுவீராக! நிச்சயமாக நாம் உம் நன்மையை நாடுபவர்களில் ஒருவனாவேன்" என்று கூறினார்.

ஆகவே, அவர் பயத்துடனும், கவனமாகவும் அ(ந் நகரத்)தை விட்டுக் கிளம்பி விட்டார்; "என் இறைவா! இந்த அக்கிரமக்கார சமூகத்தாரை விட்டும் நீ என்னைக் காப்பாற்றுவாயாக!" என்று பிரார்த்தித்தார். *(அல்குர்ஆன் 28:18-21)*

இத்தகைய சூழ்நிலையில் அவர் மத்யன் எனும் ஓர் ஊரை நோக்கிச் சென்றார்கள். "பின்னர், அவர் மத்யன் (நாட்டின்) பக்கம் சென்ற போது, "என் இறைவன் என்னை நேரான பாதையில் செலுத்தக் கூடும்" என்று கூறினார்."

இன்னும், அவர் மத்யன் நாட்டுத் தண்ணீர்(த் துறையின்) அருகே வந்தபோது, அவ்விடத்தில் ஒரு கூட்டத்தினர் (தம் கால் நடைகளுக்குத்) தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்ததைக் கண்டார்; அவர்களைத் தவிர, பெண்கள் இருவர் (தங்கள் ஆடுகளுக்குத் தண்ணீர் புகட்டாது) ஒதுங்கி நின்றதைக் கண்டார்; "உங்களிருவரின் விஷயம் என்ன?" என்று (அப்பெண்களிடம்) அவர் கேட்டார்; அதற்கு: "இம்மேய்ப்பவர்கள் (தண்ணீர் புகட்டிக் விட்டு) விலகும் வரை நாங்கள் எங்கள் (ஆடுகளுக்குத்) தண்ணீர் புகட்ட முடியாது - மேலும் எங்கள் தந்தை மிகவும் வயது முதிர்ந்தவர்" என்று அவ்விருவரும் கூறினார்கள்.

ஆகையால், அவ்விருவருக்குமாக அவர் (ஆட்டு மந்தைக்குத்) தண்ணீர் புகட்டினார்; பிறகு அவர் (ஒரு மர) நிழலில் ஒதுங்கி: "என் இறைவா! நீ எனக்கு இறக்கியருளும் நல்லவற்றின்பால் நிச்சயமாக நான் தேவையுள்ளவனாக இருக்கின்றேன்" என்று கூறினார். *(அல்குர்ஆன் 28:22-24)*

இவ்விரு பெண்களும் தங்கள் தந்தையான ஷுஅய்ப் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் சென்று, தமக்கு நடந்த சம்பவத்தைக் கூறவே, ஷுஅய்ப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது மகள்களில் ஒருவரை மூஸா அலைஹிஸலாம் அவர்களிடம் அனுப்பிவைத்தார். "(சிறிது நேரத்திற்குப்) பிறகு



அவ்விரு பெண்களில் ஒருவர் நாணத்துடன் நடந்து மூஸாவின் முன் வந்து; “எங்களுக்காக நீங்கள் தண்ணீர் புகட்டியதற்கான கூலியை உங்களுக்கு வழங்குவதற்காக எங்கள் தந்தை உங்களை அழைக்கிறார்” என்று கூறினார்” (அல்குர்ஆன் 28:25)

ஷுஅய்ப் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அழைப்பை ஏற்று அவரும் அங்கு சென்றார், “இவ்வாறாக மூஸா அவரிடம் வந்தபோது தம் வரலாற்றை எடுத்துச் சொன்னார்; அதற்கவர்; “பயப்படாதீர்! அக்கிரமக்கார சமூகத்தாரை விட்டும் நீர் தப்பித்துவிட்டீர்” என்று கூறினார்.” (அல்குர்ஆன் 28:25)

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அமானிதத்தைக் கண்ட அவ்விரு பெண்களில் ஒருவர் தமது தந்தையிடம் பின்வருமாறு கூறினார்.

“அவ்விரு பெண்களில் ஒருவர் கூறினார்; “என் அருமைத் தந்தையே! நீங்கள் இவரைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளுங்கள்; நீங்கள் கூலிக்கு அமர்த்துபவர்களில் நிச்சயமாக இவர் மிகவும் மேலானவர்; பலமுள்ளவர்; நம்பிக்கையானவர்.” (அல்குர்ஆன் 28:26)

ஷுஅய்ப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் மகளின் ஆசைக் கேட்ப மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் பின்வருமாறு கேட்டார்கள்,“(அப்போது அவர் மூஸாவிடம்) கூறினார்: “நீர் எனக்கு எட்டு ஆண்டுகள் வேலை செய்யவேண்டும் என்ற நிபந்தனையின் மீது, என்னுடைய இவ்விரு பெண்களில் ஒருவரை உமக்கு மணமுடித்துக் கொடுக்க நிச்சயமாக நான் நாடுகிறேன் - ஆயினும், நீர் பத்து (ஆண்டுகள்) பூர்த்தி செய்தால், அது உம் விருப்பம்; நான் உமக்கு சிரமத்தை கொடுக்க விரும்பவில்லை. இன்ஷா அல்லாஹ், என்னை நல்லவர்களில் உள்ளவராக காண்பீர்.””

(அதற்கு மூஸா) கூறினார்: “இதுவே எனக்கும் உங்களுக்குமிடையே (ஒப்பந்தமாகும்), இவ்விரு தவணைகளில் நான் எதை நிறைவேற்றினாலும் என் மீது குற்றமில்லை - நாம் பேசிக் கொள்வதற்கு அல்லாஹ்வே சாட்சியாக இருக்கிறான். (அல்குர்ஆன் 28:27-28)

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும் தாம் வாக்களித்த தவணையை முடித்துவிட்டு, தனது குடும்பத்தினருடன் அவ்வூரை விட்டு புறப்பாட்டார்கள். “ஆகவே மூஸா (தம்) தவணையை முடித்துக்கொண்டு, தம் குடும்பத்துடன் பயணம் செய்து கொண்டிருந்த போது; “தூர்” (மலையின்) பக்கத்தில் ஒரு நெருப்பைக் கண்டார்; அவர் தம் குடும்பத்தாரிடம் “நீங்கள் (இங்கு சிறிது) தங்குங்கள்; நிச்சயமாக, நான் ஒரு நெருப்பைக் காண்கின்றேன். நான் உங்களுக்கு அதிலிருந்து ஒரு செய்தியையோ, அல்லது நீங்கள் குளிர் காயும் பொருட்டு, ஒரு நெருப்புக் கங்கையோ கொண்டு வருகிறேன்” என்று கூறினார்.” (அல்குர்ஆன் 28:29)

அச்சந்தர்ப்பத்தில் தான் அவருக்கு வஹி அருளப்பட்டது. “அவர் நெருப்பின் அருகே வந்த போது, (அங்குள்ள) பாக்கியம் பெற்ற அப் பள்ளத்தாக்கிலுள்ள ஓடையின் வலப்பக்கத்தில் (ஒரு) மரத்திலிருந்து: “மூஸாவே! நிச்சயமாக நானே அகிலத்தாருக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ்!” என்று கூப்பிடப்பட்டார்.”

"உம் கைத்தடியைக் கீழே எறியும்" என்றும் (கட்டளையிடப்பட்டார். அவ்வாறு எறிந்ததும்) அது பாம்பைப் போன்று நெளிவதைக் கண்டு, அவர் திரும்பிப் பார்க்காமல் பின் வாங்கி ஓடினார்; (அப்பொழுது): "மூஸாவே! முன்னோக்கி வாரும்! இன்னும், அஞ்சாதீர்; நீர் அடைக்கலம் பெற்றவர்களில் உள்ளவர்."

உம் கையை உம் சட்டைக்குள் புகுத்தும்; அது ஒளி மிக்கதாய், மாசற்ற வெண்மையாக வெளிவரும்; இன்னும், நீர் அச்சப்படுங்காலை உம்முடைய கைகளை உம் விலாவில் சேர்த்துக் கொள்ளுங்கள் - இவ்விரண்டும் ஃபிர்அவ்னுக்கும், அவனுடைய பிரதானிகளுக்கும் உரிய, உம் இறைவனால் அளிக்கப்பட்ட இரு அத்தாட்சிகளாகும்; நிச்சயமாக அவர்கள் பாவம் செய்யும் சமூகத்தாராகவே இருக்கின்றார்கள்" (என்றும் அவருக்கு கூறப்பட்டது). (அல்குர்ஆன் 28:30-32)

ஆனால் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களோ ஏற்கனவே தான் ஒருவனைக் கொன்றுவிட்டு வந்ததினாலும், அவரின் நாவு கொன்னலாக இருப்பதினாலும் பிர்அவ்னிடம் செல்லப் பயந்தார்கள். "(அதற்கு அவர்): "என் இறைவா! நிச்சயமாக, நான் அவர்களில் ஒருவனைக் கொன்று விட்டேன்; ஆகையால் அவர்கள் என்னைக் கொலை செய்து விடுவார்கள் என்று பயப்படுகிறேன்" என்று கூறினார்."

இன்னும்: "என் சகோதரர் ஹாரூன் - அவர் என்னை விடப் பேச்சில் மிக்க தெளிவானவர்; ஆகவே என்னுடன் உதவியாய் நீ அவரை அனுப்பி வைப்பாயாக! என்னை அவர் மெய்ப்பிப்பார். நிச்சயமாக, அவர்கள் என்னைப் பொய்ப்பிப்பார்கள் என்று நான் பயப்படுகிறேன்" (என்றுங் கூறினார்). (அல்குர்ஆன் 28:33-34)

தனக்குது துணையாக தனது சகோதரன் ஹாரூனை அவர்களுடன் அனுப்புமாறு அல்லாஹ்விடம் வேண்டிக்கொண்டார், ""என் குடும்பத்திலிருந்து எனக்கு (உதவி செய்ய) ஓர் உதவியாளரையும் ஏற்படுத்தித் தருவாயாக!"

"என் சகோதரர் ஹாரூனை (அவ்வாறு ஏற்படுத்தித் தருவாயாக)!

"அவரைக் கொண்டு என் முதுகை வலுப்படுத்துவாயாக!

"என் காரியத்தில் அவரைக் கூட்டாக்கி வைப்பாயாக!

"நாங்கள் உன்னை அதிகமதிகம் (தஸ்பீஹு செய்து) துதிப்பதற்காகவும்;

"உன்னை அதிகமதிகம் நினைவு கூர்வதற்காகவும் (இவற்றையெல்லாம் அருள்வாயாக!)

"நிச்சயமாக, நீ எங்களை நோக்கியவனாகவே இருக்கிறாய்" (என்றார்)

"மூஸாவே! நீர் கேட்டவை, நிச்சயமாக உமக்குக்

கொடுக்கப்பட்டிருக்கின்றன" என்று (அல்லாஹ்) கூறினான். (அல்குர்ஆன் 20:29-36)

அதன் பின்னர் அவ்விருவரும் பிர்அவ்னிடம் சென்று, தாம் அனுப்பப்பட்டதன் நோக்கத்தைப் பற்றிக் கூறி, அவனை இணையற்ற அல்லாஹ்வை வணங்குமாறு அழைப்பு விடுத்தனர். அவனின் அடக்குமுறைக்கு உட்பட்டிருக்கும் பனூ இஸ்ரவேலர்களை விடுவிக்குமாறும், அவர்களை அல்லாஹ்வை மாத்திரம் அஞ்சி, வணங்குவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்குமாறும் வேண்டிக்கொண்டார்கள். பெருமைக்காரனான பிர்அவ்ன் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஏளனமாகப் பார்த்து பின்வருமாறு கூறினான், "(ஃபிர்அவ்ன்) கூறினான்: நீர் குழந்தையாக இருந்தபோது நாம் உம்மை எங்களிடம் வைத்து வளர்க்கவில்லையா? இன்னும், உம் வயதில் பல ஆண்டுகள் எங்களிடத்தில் நீர் தங்கியிருக்கவில்லையா? (எனக் கூறினான்.)"

"ஆகவே, நீர் செய்த (கூடாத கொலைச்) செயலையும் செய்துவிட்டீர்; மேலும், நீர் நன்றி மறந்தவராகவும் ஆகிவிட்டீர்" (என்றும் கூறினான்). (அல்குர்ஆன் 26:18-19)

அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "(மூஸா) கூறினார்: "நான் தவறியவர்களில் (ஒருவனாக) இருந்த நிலையில் அதைச் செய்துவிட்டேன்." (அல்குர்ஆன் 26:20)

அதாவது, அவருக்கு வஹீ அறிவிக்கப்படுவதற்கு முன்னர் செய்ததாக் கூறினார். ""ஆகவே, நான் அப்போது உங்களைப் பற்றி பயந்தபோது, உங்களை விட்டு(த் தப்பி) ஓடினேன்; பிறகு என் இறைவன் எனக்கு ஞானத்தை அளித்து, (அவனுடைய) தூதர்களில் என்னை (ஒருவனாக) ஆக்கியிருக்கிறான்." (அல்குர்ஆன் 26:21)

பின்னர் பிர்அவ்னைப் பார்த்து, அவனின் கேள்விக்கு விடையாக பின்வருமாறு கூறினார்கள், ""பனூ இஸ்ராயீல்களை அடிமையாக வைத்துக் கொண்டிருக்கும் நிலையில் இது நீ எனக்குச் சொல்லிக் காண்பிக்கக் கூடிய பாக்கியமாகுமா?"" (அல்குர்ஆன் 26:22)

அதாவது, நானும் பனூ இஸ்ரவேலர்களில் ஒருவனாக இருந்தும், நீ எனக்கு நன்மை செய்ததாக் கூறிய விடயங்கள் அனைத்தும், நீ அவர்களை உன் தேவைகளுக்காக பாவித்துக்கொண்டமைக்கும், அடிமைகளாக நடத்தியமைக்கும் ஈடாகிவிட்டது என்று கூறினார்,

பின்னர் பிர்அவ்ன் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அழைக்கும் கடவுளைப் பற்றிக் கேட்டான். "அதற்கு ஃபிர்அவ்ன்: "அகிலத்தாருக்கு இறைவன் யார்?" என்று கேட்டான்." (அல்குர்ஆன் 26:23)

அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "அதற்கு (மூஸா) "நீங்கள் உறுதி கொண்டவர்களாக

இருப்பின், வானங்களுக்கும், பூமிக்கும் இவ்விரண்டுக்குமிடையே உள்ளவற்றுக்கும் இறைவனே (அகிலத்தாரின் இறைவன் ஆவான்)" என்று கூறினார்." (அல்குர்ஆன் 26:24)

இவ்வாறு கூறியதும் பிர்அவ்ன் கோபமடைய ஆரம்பித்தான், "தன்னை சுற்றியிருந்தவர்களை நோக்கி: "நீங்கள் (இவர் சொல்வதைச்) செவிமடுக்கிறீர்கள் அல்லவா?" என்று (ஃபிர்அவ்ன்) கேட்டான்." (அல்குர்ஆன் 26:25)

ஆனால் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களோ, ஒருவரையும் பொருட்படுத்தாமல் தனது பிரச்சாரத்தைத் தொடர்ந்தார்கள். "(அப்பொழுது மூஸா) "உங்களுக்கும் இறைவன்; உங்கள் முன்னவர்களான மூதாதையருக்கும் (அவனே) இறைவன் ஆவான்" எனக் கூறினார்." (அல்குர்ஆன் 26:26)

பிர்அவ்னின் கோபம் தலைக்கேறியது, "(அதற்கு ஃபிர்அவ்ன்:) "நிச்சயமாக உங்களிடம் அனுப்பப்பட்டிருக்கிறாரே உங்களுடைய தூதர் (அவர்) ஒரு பைத்தியக் காரரே ஆவார்" எனக் கூறினான்." (அல்குர்ஆன் 26:27)

என்றாலும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இவை எவற்றையும் பொருட்படுத்தவில்லை. "(அதற்கு மூஸா) "நீங்கள் உணர்ந்து கொள்பவர்களாக இருப்பீர்களாயின், அவனே கிழக்கிற்கும், மேற்கிற்கும், இன்னும் இவ்விரண்டிற்குமிடையே இருப்பவற்றிற்கும் இறைவன் ஆவான்" எனக் கூறினார்." (அல்குர்ஆன் 26:28)

சர்வாதிகாரியான பிர்அவ்ன் தன்னை இறைவன் என்று நிரூபிப்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லாமல் கோபத்துடன் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பயமுறுத்த ஆரம்பித்தான். "(அதற்கு ஃபிர்அவ்ன்:) "நீர் என்னை அன்றி வேறு நாயனை ஏற்படுத்திக் கொள்வீராயின் நிச்சயமாக உம்மைச் சிறைப்பட்டோரில் ஒருவராக நான் ஆக்கிவிடுவேன்" எனக் கூறினான்." (அல்குர்ஆன் 26:29)

அவனின் கோபத்தையே பொருட்படுத்தாத மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இப்பயமுறுத்தலையும் அலட்சியமாகவே நோக்கினார்கள், "(அதற்கு அவர்) "நான் உனக்குத் தெளிவான (அத்தாட்சிப்) பொருளை கொண்டு வந்தாலுமா?" எனக் கேட்டார்."

"நீர் உண்மையாளராக இருப்பின் அதை நீர் கொண்டு வாரும்" என (ஃபிர்அவ்ன்) பதில் கூறினான்.

ஆகவே அவர் தம் தடியைக் கீழே எறிந்தார்; அது தெளிவானதொரு மலைப்பாம்பாகி விட்டது.

இன்னும் அவர் தம் கையை வெளியில் எடுத்தார்; உடனே அது பார்ப்பவர்களுக்கு பளிச்சிடும் வெண்மையானதாக இருந்தது. (அல்குர்ஆன் 26:30-33)

இவ்வளவு தெளிவான ஆதாரங்களை மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் காட்டும் போது மக்கள் அவரை விசுவாசம் கொள்வார்களோ என பிர்அவ்ன் பயந்துவிட்டான், "(ஃபிர்அவ்ன்) தன்னைச் சூழ்ந்து நின்ற தலைவர்களை நோக்கி



"இவர் நிச்சயமாக திறமை மிக்க சூனியக்காரரே!" என்று கூறினான்."

"இவர் தம் சூனியத்தைக் கொண்டு உங்களை உங்கள் நாட்டை விட்டும் வெளியேற்ற நாடுகிறார்; எனவே இதைப் பற்றி நீங்கள் கூறும் யோசனை என்ன?" (என்று கேட்டான்.)

அதற்கவர்கள் "அவருக்கும், அவருடைய சகோதரருக்கும் சிறிது தவணை கொடுத்து விட்டு பல பட்டிணங்களுக்கு(ச் சூனியக்காரர்களைத்)திரட்டிக் கொண்டு வருவோரை அனுப்பி வைப்பீராக-

(அவர்கள் சென்று) சூனியத்தில் மகா வல்லவர்களையெல்லாம் உம்மிடம் கொண்டு வருவார்கள்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 26:34-37)

இவற்றைக் கண்டு பயந்தது மாத்திரமல்லாமல், பெருமையின் காரணமாக அவற்றை ஏற்கவும் மறுத்தான். "நாம் நம்முடைய அத்தாட்சிகளையெல்லாம் ஃபிர்அவ்னுக்குக் காண்பித்தோம்; ஆனால் அவன் (அவற்றையெல்லாம்) பொய்யெனக் கூறி, நம்பிக்கை கொள்ள மறுத்து விட்டான்."

"மூஸாவே! நீர் உம் சூனியத்தைக் கொண்டு, எங்களை எங்கள் நாட்டை விட்டு வெளியேற்றுவதற்காகவா நம்மிடம் வந்தீர்?" என்று கூறினான்.

"அவ்வாறாயின் இதைப் போன்ற சூனியத்தை நாங்களும் உமக்குத் திடனாகச் செய்து காண்பிப்போம்; ஆகவே, நாங்களோ அல்லது நீரோ மாற்றம் செய்ய முடியாதபடி நமக்கும் உமக்குமிடையே ஒரு வார்த்தைப் பாட்டை (எல்லோரும் வந்து காணக் கூடிய) ஒரு சரியான தலத்தில் ஏற்படுத்தும் (என்றான்).

"யவ்முஜ் ஸீனத்" (பண்டிகை நாளே) உங்களுடைய தவணையாகவும், மக்கள் யாவரும் ஒன்று சேரப்பெறும் ளுஹா (முற் பகல்) நேரமும் ஆக இருக்கட்டும்" என்று சொன்னார்.

அவ்வாறே ஃபிர்அவ்ன் திரும்பிச் சென்று, (சூனியத்திற்கான) சூழ்ச்சிக்காரர்களை ஒன்று திரட்டிக் கொண்டு, மீண்டும் வந்தான். (அல்குர்ஆன் 20:56-60)

இப்படியெல்லாம் செயற்படும் இச்சூனியக்காரர்களுக்கு அல்லாஹ்வின் வேதனை வந்துவிடுமோ என மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பயந்தார்கள்.

"(அப்பொழுது) மூஸா சூனியக் காரர்களிடம் "உங்களுக்குக் கேடுதான்! அல்லாஹ்வின் மீது பொய்யை இட்டுக் கட்டாதீர்கள், (அவ்வாறு செய்தால்) அவன் வேதனையினால் உங்களை அழித்து விடுவான்; எவன் பொய்யை இட்டுக் கட்டுகிறானோ, திடனாக அவன் (நற்பேறு கெட்டு) அழிந்து விட்டான்" என்று கூறினார்." (அல்குர்ஆன் 20:61)

இவ்வாறு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறவே, அச்சூனியக்காரர்கள் இது சூனியக்காரனின் கூற்று இல்லையே என சந்தேகிக்க ஆரம்பித்தனர். "சூனியக்காரர்கள் தமக்குள்ளே தங்கள் காரியத்தைக் குறித்து(த் தங்களிடையே) விவாதித்து, (அவ்விவாதத்தை) இரகசிய ஆலோசனையாகவும் வைத்துக் கொண்டனர்." (அல்குர்ஆன் 20:62)

என்றாலும் தம் விடயத்தில் உறுதியாகவே இருந்தார்கள். "(சூனியக்காரர்கள்

மக்களை நோக்கி:) "நிச்சயமாக இவ்விருவரும் சூனியக்காரர்களே! தம்மிருவருடைய சூனியத்தைக் கொண்டு உங்களை உங்களுடைய நாட்டை விட்டு வெளியேற்றவும், சிறப்பான உங்களுடைய (மார்க்கப்) பாதையைப் போக்கிவிடவுமே இவ்விருவரும் விரும்புகிறார்கள்."

"ஆகவே உங்கள் திட்டத்தை ஒரு சேரத் தீர்மானித்துக் கொண்டு அணி அணியாக வாருங்கள்; இன்றைய தினம் எவருடைய (கை) மேலோங்குகிறதோ, நிச்சயமாக அவர்தாம் வெற்றியடைவார்" (என்றுங் கூறினார்).

"மூஸாவே! நீர் எறிகின்றீரா? எறிகிறவர்களில் நாங்கள் முதலாவதாக இருக்கட்டுமா?" என்று (சூனியக்காரர்கள்) கேட்டனர்.

அதற்கவர்: "அவ்வாறன்று! நீங்களே (முதலில்) எறியுங்கள்" என்று (மூஸா) கூறினார். (அவர்கள் எறியவே) அவர்களுடைய கயிறுகளும் அவர்களுடைய தடிகளும் அவர்கள் சூனியத்தால் (பாம்புகளாக) நிச்சயமாக நெளிந்தோடுவது போல் அவருக்குத் தோன்றியது. (அல்குர்ஆன் 20:63-66)

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் சூனியக்காரர்கள் மக்களை நம்ப வைத்து விடுவார்களோ என சற்று பயந்தார்கள். "அப்போது, மூஸா தம் மனதில் அச்சம் கொண்டார்." (அல்குர்ஆன் 20:67)

அப்போது அவருக்கு அல்லாஹ்விடமிருந்து கட்டளை வந்தது. ""(மூஸாவே!) நீர் பயப்படாதீர்! நிச்சயமாக நீர் தாம் மேலோங்கி நிற்பீர்!" என்று நாம் சொன்னோம்."

"இன்னும், உம் வலது கையில் இருப்பதை நீர் கீழே எறியும்; அவர்கள் செய்த (சூனியங்கள் யா)வற்றையும் அது விழுங்கி விடும்; அவர்கள் செய்தது சூனியக்காரனின் சூழ்ச்சியே ஆகும்; ஆகவே சூனியக்காரன் எங்கு சென்றாலும் வெற்றி பெற மாட்டான்" (என்றும் கூறினோம்). (அல்குர்ஆன் 20:68-69)

"அப்பொழுது நாம் "மூஸாவே! (இப்பொழுது) நீர் உம் கைத்தடியை எறியும்" என அவருக்கு வஹீ அறிவித்தோம்; அவ்வாறு அவர் எறியவே (அது பெரிய பாம்பாகி) அவர்கள் (சூனியத்தால்) கற்பனை செய்த யாவற்றையும் விழுங்கி விட்டது."

இவ்வாறு உண்மை உறுதியாயிற்று, அவர்கள் செய்த (சூனியங்கள்) யாவும் வீணாகி விட்டன. (அல்குர்ஆன் 07:117-118).

அச்சமயம் சூனியக்காரர்களுக்கு ஓர் பேரதிர்ச்சி காத்திருந்தது. "அங்கேயே தோற்கடிக்கப்பட்டார்கள்; அதனால் அவர்கள் சிறுமைப்பட்டார்கள்."

அன்றியும் அந்தச் சூனியக்காரர்கள் சிரம் பணிந்து:

"அகிலங்களின் இறைவன் மீது நிச்சயமாக நாங்கள் ஈமான் கொண்டோம்;

"அவனே மூஸாவுக்கும் ஹாரூனுக்கும் இறைவனாவான்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 07:119-122)

"(மூஸா வெற்றி பெற்றதும்) சூனியக்காரர்கள் ஸுஜூதில்

செய்தவர்களாக வீழ்த்தப்பட்டு – "ஹாரூனுடைய மூஸாவுடைய இறைவன் மீதே நாங்கள் ஈமான் கொள்கிறோம்" என்று கூறினார்கள்." (அல்குர்ஆன் 20:70).

என்றாலும் பிர்அவ்ன் இவ்வாறு விசுவாசம் கொண்டோரை கடுமையாக பயமுறுத்தினான். ""நான் உங்களை அனுமதிக்கும் முன்னரே நீங்கள் அவர் மேல் ஈமான் கொண்டு விட்டீர்களா? நிச்சயமாக அவர் உங்களுக்குச் சூனியத்தைக் கற்றுக் கொடுத்த தலைவர் (போல் தோன்றுகிறது); எனவே, நான் உங்களை மாறு கை, மாறு கால் வாங்கி, பேரீத்த மரக்கட்டைகளில் உங்களைக் கழுவேற்றுவேன்; மேலும் வேதனை கொடுப்பதில் நம்மில் கடுமையானவர் யார், அதில் நிலையாக இருப்பவரும் யார் என்பதை நிச்சயமாக நீங்கள் அறிந்து கொள்வீர்கள்" என்று (ஃபிர்அவ்ன்) கூறினான்." (அல்குர்ஆன் 20:71)

என்றாலும் அவர்களின் பதில் பிர்அவ்னை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதாக அமைந்தது. ""(அவ்வாறாயின் அதனால் எங்களுக்கு) எந்தக் கெடுதியுமில்லை; நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனிடம் தாம் திரும்பிச் செல்வோம்" எனக் கூறினார்கள்."

"(அன்றியும்) முஃமினானவர்களில் நாங்கள் முதலாமவர்களாக இருப்பதினால் எங்கள் இறைவன் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னித்து விடுவான்" என்று, நாங்கள் ஆதரவு வைக்கின்றோம் (என்றுங் கூறினார்கள்). (அல்குர்ஆன் 26:50-51)

ஆனாலும் பிர்அவ்ன் முஃமின்களை தொடர்ந்தும் நோவினை செய்துகொண்டே இருந்தான். இதனால் அல்லாஹ் அவனையும், அவனுடன் இருந்தவர்களையும் தண்டிக்க ஆரம்பித்தான். "பின்னர் நாம் ஃபிர்அவ்னுடைய கூட்டத்தாரைப் பஞ்சம் பிடிக்கச் செய்து, விவசாயப் பலன்களைக் குறைத்துத் தண்டித்தோம் – அவர்கள் நல்லுணர்வு பெறுவதற்காக."

அவர்களுக்கு ஒரு நன்மை வருமானால், "அது நமக்கு (உரிமையாக) வரவேண்டியது தான்" என்று கூறினார்கள்; ஆனால் அவர்களுக்கு ஒரு கெடுதி ஏற்படுமானால், அது மூஸாவினாலும், அவருடனிருப்பவர்களாலும் வந்த பீடையென்பார்கள்; அறிந்து கொள்ளுங்கள்: அவர்களுடைய இந்த துர்பாக்கியமெல்லாம் அல்லாஹ்விடமிருந்தே வந்துள்ளது – எனினும் அவர்களில் பெரும்பாலோர் இதனை அறிந்து கொள்வதில்லை. (அல்குர்ஆன் 07:130-131)

இவர்கள் விசுவாசம் கொள்ளவுமில்லை, பாவமன்னிப்புக் கோரவுமில்லை. "அவர்கள் மூஸாவிடம், "நீர் எங்களை வசியப்படுத்த எவ்வளவு அத்தாட்சிகளைக் கொண்டு வந்த போதிலும், நாங்கள் உம்மை நம்பக்கூடியவர்களாக இல்லை" என்று கூறினார்கள்."

ஆகவே அவர்கள் மீது, கனமழையையும், வெட்டுக்கிளியையும்,

பேனையும், தவளைகளையும், இரத்தத்தையும் தெளிவான அத்தாட்சிகளாக (ஒன்றன்பின் ஒன்றாக) அனுப்பி வைத்தோம் - ஆனால் அவர்கள் பெருமையடித்து குற்றம் புரியும் சமூகத்தாராகவே ஆகியிருந்தனர். (அல்குர்ஆன் 07:132-133)

அவர்களுக்கு கஷ்டம் வருகின்ற போதெல்லாம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் பின்வருமாறு கூறுவார்கள். "தங்கள் மீது வேதனை ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் "மூஸாவே! உம் இறைவன் உமக்கு அளித்திருக்கும் வாக்குறுதியின்படி எங்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக! எங்களை விட்டும் இவ் வேதனையை நீர் நீக்கி விட்டால், நிச்சயமாக நாங்கள் உம்மீது நம்பிக்கை கொண்டு இஸ்ரவேலர்களை உம்முடன் மேலும் நிச்சயமாக அனுப்பி விடுகிறோம்" என்று கூறினார்கள்."

அவர்கள் அடைந்துவிடக்கூடிய ஒரு தவணை வரை வேதனையை அவர்களை விட்டும் நாம் நீக்கியபோது அவர்கள் மாறு செய்தே வந்தனர். (அல்குர்ஆன் 07:134-135)

தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற இவர்கள் மறுத்த போது அல்லாஹ்வின் வேதனை அவர்களை வந்தடைந்தது. "ஆகவே, அவர்கள் நம் அத்தாட்சிகளைப் பொருட்படுத்தாமல்; அவற்றைப் பொய்ப்பித்துக் கொண்டு இருந்ததால், அவர்களைக் கடலில் மூழ்கடித்து அவர்களிடம் நாம் பழிவாங்கினோம்." (அல்குர்ஆன் 07:136)

எகிப்தியர்கள் இறை நிராகரிப்பிலும், அட்டூழியம் செய்வதிலும், அல்லாஹ்வால் அனுப்பப்படும் தூதுவர்களுக்கு முரண்படுவதிலும், அவர்களைப் பொய்ப்பிப்பதிலும், தம் அரசன் பிர்அவ்னைப் பின் தொடர்ந்து கொண்டிருந்த போது, அவர்கள் இவை அனைத்திலிருந்தும் விடுபடும் முகமாக அல்லாஹ் அவர்களுக்கு தனது பெரும் அத்தாட்சிகளைக் காண்பித்தான். ஆனாலும் அவர்கள் இவற்றிலிருந்து விடுபடுவதாகவே இல்லை. என்றாலும் இவர்களில் சிலரும், சூனியக்காரர்களும், பனூ இஸ்ரவேலர்கள் அனைவரும் மாத்திரம் தான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு வழிபட்டார்கள். பனூ இஸ்ரவேலர்கள் பிர்அவ்னுக்கும், அவனது அட்டூழியங்களுக்கப் பயந்துதான் மூஸா நபியை அதிகமாக விசுவாசிக்க ஆரம்பித்தனர். இப்படியாகவாவது ஈமான் கொண்டுள்ள இச்சிலரை வழிகெடுவதிலிருந்து காத்திடுவதற்காக அல்லாஹ் மூஸா மற்றும் ஹாரூன் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களிருவருக்கும் இவர்களுக்கான ஓர் பாதுகாப்பான இடத்தைத் தேர்ந்தெடுக்குமாறும், அதில் அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்குமாறும் கட்டளையிட்டான். "ஆகவே, மூஸாவுக்கும், அவருடைய சகோதரருக்கும்: "நீங்கள் இருவரும் உங்கள் சமூகத்தாருக்காக பட்டிணத்தில் வீடுகளை அமைத்துக் கொடுங்கள்; உங்களுடைய அவ்வீடுகளையே பள்ளிகளாக (கிப்லாவாக) ஆக்கி அவற்றில் தவறாமல் தொழுகையை நிலைநிறுத்துங்கள் - மேலும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்திகளும் கூறுவீராக!" என்று வஹீ அறிவித்தோம்." (அல்குர்ஆன் 10:87)

பின்னர் அல்லாஹ் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு பின்வருமாறு வஹி அறிவித்தான், "மேலும், "நீர் என் அடியார்களை அழைத்துக் கொண்டு, இரவோடு இரவாகச் சென்று விடும்; நிச்சயமாக நீங்கள் பின் தொடரப்படுவீர்கள்" என்று நாம் மூஸாவுக்கு வஹீ அறிவித்தோம்." (அல்குர்ஆன் 26:52)

ஆனால் பிர்அவ்ன் நிலை இவ்வாறு இருந்தது, "(அவ்வாறு அவர்கள் சென்றதும்) ஃபிர்அவ்ன் (ஆட்களைத்) திரட்டுபவர்களைப் பட்டணங்களுக்கு அனுப்பி வைத்தான்."

"நிச்சயமாக இவர்கள் மிகவும் சொற்பத் தொகையினர் தான்.

"நிச்சயமாக இவர்கள் நம்மை(ப் பெருங்) கோபத்திற்குள்ளாக்கி விட்டனர்.

"நிச்சயமாக நாம் அனைவரும் எச்சரிக்கையுடனே இருக்கிறோம்." (அல்குர்ஆன் 26:53-56)

ஆனால் அல்லாஹ்வோ பிர்அவ்னையும், அவனின் கூட்டத்தினரையும் அவர்களின் சொந்த இடங்களை விட்டும் வெளியேற்றிவிடவே நினைத்தான். "அப்போது நாம், அவர்களைத் தோட்டங்களை விட்டும், நீரூற்றுக்களை விட்டும் வெளியேற்றி விட்டோம்."

இன்னும், (அவர்களுடைய) பொக்கிஷங்களை விட்டும், கண்ணியமான வீடுகளை விட்டும் (அவர்களை வெளியேற்றினோம்).

அவ்வாறு தான் (அவர்களை நடத்தினோம்); அத்துடன் பனூ இஸ்ராயீல்களை அவற்றுக்கு வாரிசுகளாகவும் நாம் ஆக்கினோம். (அல்குர்ஆன் 26:57-59)

பனூ இஸ்ரவேலர்கள் இருக்கும் இடத்தை இவர்கள் ஒருவாறு கண்டுபிடித்தனர். "பிறகு, சூரியன் உதிக்கும் நேரத்தில் (ஃபிர்அவ்னின் கூட்டத்தார்) இவர்களைப் பின் தொடர்ந்தார்கள்." (அல்குர்ஆன் 26:60)

பனூ இஸ்ரவேலர்களை இவர்கள் கண்டுபிடித்த போது, "இவ்விரு கூட்டத்தினரும் ஒருவரையொருவர் கண்டபோது: "நிச்சயமாக நாம் பிடிபட்டோம்" என்று மூஸாவின் தோழர்கள் கூறினர்." (அல்குர்ஆன் 26:61)

ஆனால் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களோ அல்லாஹ்வின் மீது உறுதியான நம்பிக்கையில் இருந்தார்கள். "அதற்கு (மூஸா), "ஒருக்காலும் இல்லை! நிச்சயமாக என் இறைவன் என்னுடன் இருக்கிறான். எனக்கு சீக்கிரமே அவன் வழி காட்டுவான்" என்று கூறினார்;." (அல்குர்ஆன் 26:62)

இந்நேரத்தில் தான் அல்லாஹ்வின் உதவி அவர்களுக்கு வந்தது. "உம் கைத்தடியினால் இந்தக் கடலை நீர் அடியும்" என்று மூஸாவுக்கு வஹீ அறிவித்தோம். (அவ்வாறு அடித்ததும் கடல்) பிளந்தது; (பிளவுண்ட) ஒவ்வொரு பகுதியும் பெரும் மலை போன்று ஆகிவிட்டது."

(பின் தொடர்ந்து வந்த) மற்றவர்களையும் நாம் நெருங்கச் செய்தோம்.

மேலும், நாம் மூஸாவையும், அவருடன் இருந்த அனைவரையும் காப்பற்றினோம்

பிறகு, மற்றவர்களை (ஃபிர்அவ்னின் கூட்டத்தாரை) நாம் மூழ்கடித்து விட்டோம்.

நிச்சயமாக இதிலே அத்தாட்சி இருக்கிறது; எனினும் அவர்களில் பெரும் பாலோர் நம்பிக்கை கொள்பவர்களாக இல்லை.

(நபியே!) நிச்சயமாக உம்முடைய இறைவன் (யாவரையும்) மிகைத்தவனாகவும், கிருபையுடையவனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 26:63-68)



இப்பயங்கரமான சூழ்நிலையில் தான்.. "மேலும், இஸ்ராயீலின் சந்ததியினரை

நாம் கடலைக் கடக்க வைத்தோம்; அப்போது, ஃபிர்அவ்னும், அவனுடைய படைகளும், (அளவு கடந்து) கொடுமையும், பகைமையும் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தார்கள்" (அல்குர்ஆன் 10:90)

பிர்அவ்ன் மரணத்தருவாயில் திண்டாடும் போது தான் அல்லாஹ்வை உறுதிகொள்ள ஆரம்பித்தான். "(அவனை மூழ்கடிக்க வேண்டிய நேரம் நெருங்கி) அவன் மூழ்க ஆரம்பித்ததும் அவன்: இஸ்ராயீலின் சந்ததியினர் எந்த நாயன் மீது ஈமான் கொண்டுள்ளார்களோ, அவனைத் தவிர வேறு இறைவன் இல்லையென்று நானும் ஈமான் கொள்கிறேன்; இன்னும் நான் அவனுக்கே முற்றும் வழிபடுபவர்களில் (முஸ்லிம்களில்) ஒருவனாக இருக்கின்றேன்" என்று கூறினான்." (அல்குர்ஆன் 10:90)

என்றாலும் அவன் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளும் விடயத்தில் தாமதித்து விட்டான். எனவே அவனை மரணம் தொற்றிக்கொண்டது. ""இந்த நேரத்தில் தானா (நீ நம்புகிறாய்)? சற்று முன் வரையில் திடனாக நீ மாறு செய்து கொண்டிருந்தாய்; இன்னும், குழப்பம் செய்பவர்களில் ஒருவனாகவும் இருந்தாய்." (அல்குர்ஆன் 10:91)

இவ்வாறே அல்லாஹ் பனூ இஸ்ரவேலர்களுக்கு அவர்களின் எதிரிகளை அழித்து, அருள்புரிந்தான். அவர்கள் கடலைக் கடந்து சென்ற போது அதில் ஒருவர் பின்வருமாறு கூறினார், "நாம் இஸ்ராயீலின் சந்ததியினரைக் கடலைக்கடந்து (அழைத்துச்) சென்றபோது, தங்களுக்குரிய விக்கிரகங்களை ஆராதனை செய்து கொண்டிருந்த ஒரு கூட்டத்தார் அருகே (அவர்கள்) சென்றார்கள். உடனே அவர்கள், "மூஸாவே! அவர்களிடமிருக்கும் கடவுள்களைப் போல் நமக்கும் நீங்கள் ஒரு கடவுளை ஆக்கித்தருவீர்களாக!" என்று வேண்டினர். (அல்குர்ஆன் 07:138)

*பிர்அவ்னின் கொடுமையிலிருந்து தப்பியதும் அம்மனிதன் இவ்வாறு கேட்டான்.

"; "நிச்சயமாக நீங்கள் ஓர் அறிவில்லாத கூட்டத்தாராக இருக்கின்றீர்கள்" என்று மூஸா (அவர்களிடம்) கூறினார்."

"நிச்சயமாக இந்த மக்கள் ஈடுபட்டிருக்கும் மார்க்கம் அழியக் கூடியது; இன்னும் அவர்கள் செய்பவை யாவும் (முற்றிலும்) வீணானவையே" (என்றும் கூறினார்)." (அல்குர்ஆன் 07:138-139)

பின்னர் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வை சந்திப்பதற்காகச் சென்றார்கள். "மூஸாவுக்கு நாம் முப்பது இரவுகளை வாக்களித்தோம்; பின்னர், மேலும் அதை பத்து (இரவுகளைக்) கொண்டு பூர்த்தியாக்கினோம்; இவ்வாறாக அவருடைய இறைவன் (வாக்களித்த) காலக்கெடு நாற்பது இரவுகளாக முழுமை பெற்றது. அப்போது மூஸா தம் சகோதரர் ஹாரூனை நோக்கி, "நீங்கள் என்னுடைய சமூகத்தாருக்கு, என் கலீஃபாவாக இருந்து, (அவர்களைத்) திருத்துவீர்களாக! குழப்பமுண்டாக்குபவரின் வழியைப் பின் பற்றாதிருப்பீர்களாக!" என்று கூறினார்." (அல்குர்ஆன் 07:142)

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்வுடன் உரையாடினார்கள். அல்லாஹ்வுடன் அவருக்கு தூதுத்துவத்தை வழங்கி கௌரவித்தான்.

"அதற்கு அவன், "மூஸாவே! நிச்சயமாக நான் உம்மை என் தூதுவத்தைக் கொண்டும் (உம்முடன் நேரில்) நான் பேசியதைக் கொண்டும், (உம்மை) மனிதர்களிலிருந்து (மேலானவராக இக்காலை) தேர்ந்து எடுத்துள்ளேன் - ஆகவே நான் உமக்குக் கொடுத்ததை (உறுதியாகப்) பிடித்துக் கொள்ளும்; (எனக்கு) நன்றி செலுத்துபவர்களில் (ஒருவராகவும்) இருப்பீராக" என்று கூறினான்." (அல்குர்ஆன் 07:144)

அல்லாஹ் அவருக்கு சில நல்லுபதேசங்களையும், தவ்ராத் வேதத்தையும் வழங்கி, அருள்புரிந்தான். "மேலும் நாம் அவருக்கு பலகைகளில், ஒவ்வொரு விஷயம் பற்றிய நல்லுபதேசங்களையும், (கட்டளைகளையும்,) ஒவ்வொன்றைப் பற்றிய விளக்கங்களையும் எழுதி: "அவற்றை உறுதியாகப் பற்றிப் பிடிப்பீராக! இன்னும் உம்முடைய சமூகத்தாரை அவற்றில் அழகானவற்றை எடுத்துக் கொள்ளுமாறு கட்டளையிடுவீராக! அதிசீக்கிரம் பாவிகளின் தங்குமிடத்தை நான் உங்களுக்கு காட்டுவேன்" (என்று கூறினான்)." (அல்குர்ஆன் 07:145)

அல்லாஹ்வுடனான சந்திப்பு முடிவுற்றபின், தனது சமூகத்தாரிடம் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் திரும்ப வந்தார்கள். அவர்கள் வந்தபோது... "மூஸாவின் சமூகத்தார் அவர் (சென்ற) பின் தங்கள் நகைகளைக் கொண்டு ஒரு காளைக் கன்றின் சிலையை(ச் செய்து அதைத் தெய்வமாக) ஆக்கிக் கொண்டார்கள்; அதற்கு (மாட்டின் சப்தத்தைப் போல் வெறும்) சப்தமிருந்தது; நிச்சயமாக அது அவர்களிடம் பேசவும் மாட்டாது, இன்னும் அவர்களுக்கு (நேர்) வழி காட்டவும் செய்யாது என்பதை அவர்கள் கவனித்திருக்க வேண்டாமா, அவர்கள் அதனையே (தெய்வமாக) ஆக்கிக் கொண்டார்கள் - இன்னும் அவர்கள் (தமக்குத் தாமே) அநியாயம் செய்து கொண்டார்கள்."

அவர்கள் செய்துவிட்ட தவறு பற்றி கைசேதப் பட்டு, நிச்சயமாக தாங்களே வழி தவறி விட்டதை அறிந்து கொண்ட போது, அவர்கள்: "எங்கள் இறைவன் எங்களுக்குக் கிருபை செய்து எங்களை மன்னிக்கா விட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 07:148-149)

இந்நிலை மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை பெரிதும் பாதித்தது. "(இதனையறிந்த) மூஸா தன் சமூகத்தாரிடம் கோபத்துடன், விசனத்துடன் திரும்பி வந்த போது; (அவர்களை நோக்கி) "நான் இல்லாத சமயத்தில் நீங்கள் செய்த இக்காரியம் மிகவும் கெட்டது; உங்கள் இறைவனுடைய கட்டளை (வேதனை)யைக் (கொண்டு வர) அவசரப்படுகிறீர்களா?" என்று கூறினார்; பின்னர் வேதம் வரையப் (பெற்றிருந்த) பலகைகளை எறிந்து விட்டு, தம் சகோதரர் (ஹாரூன்) உடைய தலை(முடி)யைப் பிடித்துத் தம் பக்கம் இழுத்தார். அப்போது (ஹாரூன்) "என் தாயின் மகனே! இந்த மக்கள் என்னை பலஹீனப்படுத்தி என்னை கொலை செய்யவும் முற்பட்டனர். ஆகவே (என்னுடைய) "பகைவர்களுக்கு என்மூலம் மகிழ்ச்சியை ஏற்படுத்தி விடாதீர்" இன்னும் என்னை அநியாயக் காரக் கூட்டத்தாருடன் சேர்த்துவிடாதீர்" என்று கூறினார்."

"என் இறைவனே! என்னையும் என் சகோதரரையும் மன்னிப்பாயாக! உன் ரஹ்மத்தில் (நற்கிருபையில்) - பிரவேசிக்கச் செய்வாயாக! ஏனெனில், நீயே கிருபையாளர்களிலெல்லாம், மிக்க கிருபையாளன்" என்று (பிரார்த்தித்துக்) கூறினார். (அல்குர்ஆன் 07:150-151)

பின்னர் காளைக் கன்றை செய்த சாமிரியைப் பார்த்து பின்வருமாறு கேட்டார்கள், ""ஸாமிரிய்யே! உன் விஷயமென்ன?" என்று மூஸா

அவனிடம் கேட்டார்." (அல்குர்ஆன் 20:95)

அதற்கு அவன், ""அவர்கள் காணாத ஒன்றை நான் கண்டேன்; ஆகவே, நான் அந்த தூதர் காலடியிலிருந்து ஒரு பிடி (மண்ணாகப்) பிடித்து, அதை எறிந்தேன்; அவ்விதம் (செய்வதை) என் மனம் எனக்கு அழகா(ன செயலா)க ஆக்கிற்று" என (ஸாமிரி பதில்) சொன்னான்." (அல்குர்ஆன் 20:96)

அதற்கு மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், ""நீ இங்கிருந்து போய் விடு; நிச்சயமாக இந்த வாழ்க்கையில் (எவரைக் கண்டாலும், என்னைத்) "தீண்டாதீர்கள்" என்று சொல்(லித் திரி)வது தான் உனக்குள்ளது, (மறுமையில்) நிச்சயமாக உனக்கு வாக்களிக்கப்பட்ட வேதனையும் உண்டு; அதை விட்டும் நீ தப்பமாட்டாய்; மேலும்: நீ தரிபட்டு ஆராதனை செய்து கொண்டிருந்தாயே அந்த "நாயனைப்" பார்; நிச்சயமாக அதனைச் சுட்டெரித்துப் பின்னர் (சாம்பலாக்கி) அதைக் கடலில் பரத்திவிடுவோம்" என்றார்."

"உங்களுடைய நாயன் அல்லாஹ் ஒருவன்தான்; அவனைத் தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறில்லை; எல்லாப் பொருட்களிலும் ஞானத்தால் விசாலமானவன்" என்றும் கூறினார். (அல்குர்ஆன் 20:97-98)

தனக்குக் கிடைக்கப்பெற்ற வேதப் புத்தகத்தோடு பாலஸ்தீனத்தை நோக்கி தனது சமூகத்துடன் பயணிக்க ஆரம்பித்தார்கள். "மூஸாவை விட்டும் கோபம் தணிந்த போது, (அவர் எறிந்த விட்ட) பலகைகளை எடுத்துக் கொண்டார் - அவற்றில் வரையப்பெற்ற குறிப்புகளில் தம் இறைவனுக்குப் பயப்படுபவர்களுக்கு நேர் வழியும், (இறை) கிருபையும் இருந்தன." (அல்குர்ஆன் 07:154)

பனூ இஸ்ரவேலர்களில் சிலர் தவ்ராத் வேதத்திலுள்ள சில விடயங்களை ஏற்க மறுத்தார்கள். அந்நேரம் அல்லாஹ் அவர்களுக்கு மேலால் மலையை உயர்த்தினான். "நாம் (ஸினாய்) மலையை அவர்களுக்கு மேல் முகட்டைப்போல் உயர்த்தினோம்; அப்போது அவர்கள் அது தங்கள் மீது விழுந்து விடுமோ என்று எண்ணியபோது, நாம் அவர்களை நோக்கி, "நாம் உங்களுக்குக் கொடுத்த (வேதத்)தைப் பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்; அதிலுள்ளவற்றைச் சிந்தியுங்கள்; நீங்கள் பயபக்தியுடையோர் ஆகலாம்" (என்று கூறினோம்)." (அல்குர்ஆன் 07:171)

அம்மலை தம்மீது விழுந்துவிடுமோ எனப் பயந்து தவ்ராத் வேதத்தை ஏற்றுக்கொண்ட அவர்கள், மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். ஒரு தடவை பனூ இஸ்ரவேலர்களில் ஒருவர் தமது கூட்டத்திலேயே இருக்கும் செல்வந்த மனிதரைக் கொன்றுவிட்டார். கொலைக் குற்றத்தை ஏற்க எவரும் முன்வரவில்லை. அனைவரும் ஒருவரையொருவர் குற்றம்சாட்டிக்கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் நீதம் வேண்டிச் சென்றார்கள். "நீங்கள் அல்லாஹ்வின் தூதுதவராக

சாமிரி தான் கன்றை செய்தான்.

"அல்லாஹ்வின் தூதரான ஹாரூன் நபி தங்கத்தினால் ஆனான கன்றை செய்து, மக்களை இணைவைப்பின் பால் அழைக்கவில்லை. ஏனெனில் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அனைத்துத் தூதுவர்களும் அல்லாஹ்வை வணங்குமாறு தான் தன் சமூகத்தினருக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இது தவிர, இது தொடர்பாக வரும் ஏனைய சம்பவங்கள் அனைத்தும் கையூடல்களாகும். அதில் ஒன்று தான், 'ஹாருன் அவர்களைப் பார்த்து, 'உங்கள் அனைவரின் காதுகளில் இருக்கும் தங்கத் தோடுகளையும் கழட்டித் தாருங்கள்' எனக் கூறினார். அனைத்தும் கழட்டப்பட்டு இவரிடம் கொடுக்கப்பட்டது. இவற்றைப் பயன்படுத்தி ஓர் கன்றை உருவாக்கி, 'இஸ்ரவேலர்களே! நான் எகிப்திலிருந்து உங்களுக்காகக் கொண்டு வந்த உங்களின் தெய்வம் தான் இது'

இருந்தால் கொலைக்காரன் யார் என்பதனை உமது இறைவனிடம் கேட்டுக் கூறுங்கள்" என்றார்கள். அப்போது அல்லாஹ் மூஸா நபிக்கு "அவர்களுக்கு ஓர் மாட்டை அறுக்கச் சொல்லி, அதன் ஓர் உறுப்பை எடுத்து, இறந்தவருக்கு அடிக்கச் சொல்லுங்கள். நான் அவரை உயிர்ப்பித்து, தன்னைக் கொன்றவன் யார் என்பதை அடையாளம் காட்ட வைக்கிறேன்" என்றான். ""நீங்கள் ஒரு மனிதனை கொன்றீர்கள்; பின் அதுபற்றி (ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டித்) தர்க்கித்துக் கொண்டிருந்தீர்கள்; ஆனால் அல்லாஹ் நீங்கள் மறைத்ததை வெளியாக்குபவனாக இருந்தான் (என்பதை நினைவு கூறுங்கள்)."

"(அறுக்கப்பட்ட அப்பசுவின்) ஒரு துண்டால் அ(க்கொலையுண்டவனின் சடலத்)தில் அடியுங்கள்" என்று நாம் சொன்னோம். இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான்; நீங்கள் (நல்ல) அறிவு பெறும் பொருட்டுத் தன் அத்தாட்சிகளையும் அவன்(இவ்வாறு) உங்களுக்குக் காட்டுகிறான். (அல்குர்ஆன் 02:72-73)

எனவே மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பனூ இஸ்ரவேலர்களுக்கு, கொலை செய்தவனை கண்டுபிடிப்பதற்காக ஓர் மாட்டை அறுக்குமாறு கூறினார்கள், அச்சம்பவம் பின்வருமாறு அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

"இன்னும் (இதையும் நினைவு கூறுங்கள்) மூஸா தம் சமூகத்தாரிடம், "நீங்கள் ஒரு பசுமாட்டை அறுக்க வேண்டும் என்று நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்" என்று சொன்னபோது, அவர்கள் "(மூஸாவே!) எங்களை பரிகாசத்திற்கு ஆளாக்குகின்றீரா?" என்று கூறினர்; (அப்பொழுது) அவர், "(அப்படிப்

பரிகசிக்கும்) அறிவீனர்களில் ஒருவனாக நான் ஆகிவிடாமல் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்" என்று கூறினார்." *(அல்குர்ஆன் 02:67)*

அதற்கு அவர்கள், "அது எத்தகையது என்பதை எங்களுக்கு விளக்கும்படி உம் இறைவனிடம் எங்களுக்காக வேண்டுவீராக!" என்றார்கள்." *(அல்குர்ஆன் 02:68)*

அவர்கள் ஓர் சாதாரன விடயத்தை தமக்குத் தாமே கடினமாக்கிக் கொண்டார்கள். "அது எத்தகையது என்பதை எங்களுக்கு விளக்கும்படி உம் இறைவனிடம் எங்களுக்காக வேண்டுவீராக!" என்றார்கள். "அப்பசு மாடு அதிகக் கிழடுமல்ல, கன்றுமல்ல, அவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாகும்." *(அல்குர்ஆன் 02:68)*

*நடுத்தர வயதைக் கொண்ட ஓர் மாடு. ""அது எத்தகையது என்பதை எங்களுக்கு விளக்கும்படி உம் இறைவனிடம் எங்களுக்காக வேண்டுவீராக!" என்றார்கள். "அப்பசு மாடு அதிகக் கிழடுமல்ல, கன்றுமல்ல, அவ்விரண்டிற்கும் இடைப்பட்டதாகும். எனவே "உங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்றுங்கள்" என்று அவன் (அல்லாஹ்) கூறுவதாக" (மூஸா) கூறினார்." *(அல்குர்ஆன் 02:68)*

மேலும், ""அதன் நிறம் யாது!" என்பதை விளக்கும்படி நமக்காக உம் இறைவனை வேண்டுவீராக!" என அவர்கள் கூறினார்கள்;" *(அல்குர்ஆன் 02:69)*

*அல்லாஹ் இவர்களுக்கு இந்த நிறத்தில் தான் மாடு இருக்க வேண்டுமென நிபந்தனை இடவில்லை.

"அவர் கூறினார் "திடமாக அது மஞ்சள் நிறமுள்ள பசு மாடு; கெட்டியான நிறம்; பார்ப்பவர்களுக்குப் பரவசம் அளிக்கும் அதன் நிறம் என அ(வ்விறை)வன் அருளினான்" என்று மூஸா கூறினார்." *(அல்குர்ஆன் 02:69)*

அவர்கள் அனைவரும் ஒன்று கூடி, ஏதோ ஆலோசனைகள் மேற்கொண்டு விட்டு, மீண்டும் கேட்டார்கள். ""உமது இறைவனிடத்தில் எங்களுக்காக பிரார்த்தனை செய்வீராக! அவன் அது எப்படிப்பட்டது என்பதை எங்களுக்கு தெளிவு படுத்துவான். எங்களுக்கு எல்லாப் பசுமாடுகளும் திடனாக ஒரே மாதிரியாகத் தோன்றுகின்றன; அல்லாஹ் நாடினால் நிச்சயமாக நாம் நேர்வழி பெறுவோம்" என்று அவர்கள் கூறினார்கள்." *(அல்குர்ஆன் 02:70)*

அதற்கு மூஸா நபியவர்கள், "அவர் (மூஸா) "நிச்சயமாக அப்பசுமாடு நிலத்தில் உழவடித்தோ, நிலத்திற்கு நீர் பாய்ச்சவோ பயன்படுத்தப்படாதது; ஆரோக்கியமானது; எவ்விதத்திலும் வடுவில்லாதது என்று இறைவன் கூறுகிறான்" எனக் கூறினார். "இப்பொழுதுதான் நீர் சரியான விபரத்தைக் கொண்டு வந்தீர்" என்று சொல்லி அவர்கள் செய்ய இயலாத நிலையில் அப்பசு மாட்டை அறுத்தார்கள்." (அல்குர்ஆன் 02:71)

பல நகரங்களிலும், கிராமங்களிலும் சுற்றித்திருந்து, பெரும் கஷ்டத்துடன் இப்பண்புகள் அனைத்தும் ஒருங்கப்பெற்ற ஓர் மாட்டைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து அறுத்தார்கள். யார் கொன்றது என்ற விடயத்தில் பிரச்சினையாக இருந்த அவ் இறந்தவரின் உடலுக்கு மாட்டின் ஒரு பகுதியால் அடித்தார்கள். அவர் திரும்பவும் அல்லாஹ்வின் அனுமதியுடன் உயிர்த்தெழுந்தார். அப்போது மூஸா நபியவர்கள் "உம்மைக் கொன்றது யார்?" எனக் கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர் இன்னார் தான் எனக் காட்டினார். ""(அறுக்கப்பட்ட அப்பசுவின்) ஒரு துண்டால் அ(க்கொலையுண்டவனின் சடலத்)தில் அடியுங்கள்" என்று நாம் சொன்னோம். இவ்வாறே அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான்; நீங்கள் (நல்ல) அறிவு பெறும் பொருட்டுத் தன் அத்தாட்சிகளையும் அவன்(இவ்வாறு) உங்களுக்குக் காட்டுகிறான்." (அல்குர்ஆன் 02:73)

பாலஸ்தீனத்தை அவர்கள் வந்தடைந்த போது, அங்கு பலசாலிகளான இரு சமூகத்தினர் இருப்பதைக் கண்டார்கள். "அன்றி, மூஸா தம் சமூகத்தாரை நோக்கி, "என் சமூகத்தோரே! அல்லாஹ் உங்கள் மீது புரிந்திருக்கும் அருட்கொடையை நினைத்துப் பாருங்கள்; அவன் உங்களிடையே நபிமார்களை உண்டாக்கி, உங்களை அரசர்களாகவும் ஆக்கினான்; உலக மக்களில் வேறு யாருக்கும் கொடுக்காததை உங்களுக்குக் கொடுத்தான்" என்று அவர் கூறியதை (நபியே! இவர்களுக்கு) நினைவு கூறும்."



4- ஈஸா அலைஹிஸ்ஸலாம்

மர்யமின் தந்தையான இம்ரான் அலைஹிமஸ்ஸலாம் பனூ இஸ்ரவேலர்களில் மிகவும் சிறந்த வணக்கசாலியாக இருந்தார்கள். அவர் தாவுத் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வழித்தோன்றலில் வந்தவர். அவ்வாறே மர்யமின் தாய் குழந்தைப் பாக்கியம் அற்றவராக இருந்தார்கள். தனக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்க வேண்டுமென ஆசைப்பட்டு, அதை அல்லாஹ்வுக்காக நேர்ச்சைக் கடனாகவும் ஆக்கினார்கள். "இம்ரானின் மனைவி "என் இறைவனே! என் கர்ப்பத்திலுள்ளதை உனக்கு முற்றிலும் அர்ப்பணிக்க நான் நிச்சயமாக நேர்ந்து கொள்கிறேன்; எனவே (இதை) என்னிடமிருந்து நீ ஏற்றுக் கொள்வாயாக! நிச்சயமாக நீ யாவற்றையும் செவியுறுவோனாகவும், நன்கறிபவனாகவும் இருக்கின்றாய்" என்று கூறியதையும்-"

(பின், தான் எதிர்பார்த்ததற்கு மாறாக) அவள் ஒரு பெண் குழந்தையைப் பெற்றதும்: "என் இறைவனே! நான் ஒரு பெண்ணையே பெற்றிருக்கிறேன்" எனக் கூறியதையும் நினைவு கூறுங்கள்; அவள் பெற்றெடுத்ததை அல்லாஹ் நன்கறிவான்; ஆண், பெண்ணைப் போலல்ல (மேலும் அந்தத்தாய் சொன்னாள்:) "அவளுக்கு மர்யம் என்று பெயரிட்டுள்ளேன்; இன்னும் அவளையும், அவள் சந்ததியையும் விரட்டப்பட்ட ஷைத்தானி(ன் தீங்குகளி)லிருந்து காப்பாற்றத் திடமாக உன்னிடம் காவல் தேடுகின்றேன். (அல்குர்ஆன் 03:35-36)

அல்லாஹ் அவரின் தாயாரின் நேர்ச்சையை ஏற்றுக்கொண்டான். "அவளுடைய இறைவன் அவள் பிரார்த்தனையை அழகிய முறையில் ஏற்றுக் கொண்டான்; அக்குழந்தையை அழகாக வளர்த்திடச் செய்தான்" (அல்குர்ஆன் 03:37)

அழகான தோற்றத்திலும், நல்லடியார்களின் வழியிலும் அக்குழந்தை வளர்ந்தது. இதனால் தான் அல்லாஹ் கூறுகிறான், "அதனை வளர்க்கும் பொறுப்பை ஜகரிய்யா ஏற்றுக்கொள்ளும்படி செய்தான்" (அல்குர்ஆன் 03:37)

மர்யமை வளர்ப்பதற்கு ஒரு நபியை அல்லாஹ் தேர்ந்தெடுத்தது அல்லாஹ் அவர் மீது பொழிந்த அருட்கொடையாகும். "ஜகரிய்யா அவள் இருந்த மிஹ்ராபுக்குள் (தொழும் அறைக்குப்) போகும் போதெல்லாம், அவளிடம் உணவு இருப்பதைக் கண்டார், "மர்யமே! இ(வ்வுணவான)து உனக்கு எங்கிருந்து வந்தது?" என்று அவர் கேட்டார்; "இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது - நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கணக்கின்றி உணவளிக்கின்றான்" என்று அவள்(பதில்) கூறினாள்." (அல்குர்ஆன் 03:37)

இது அல்லாஹ் மர்யமுக்குக் கொடுத்த ஓர் அற்புதமாகும். இதனால் அல்லாஹ் அவரை பரிசுத்தப்படுத்தி, தன்னை வணங்குமாறு அவருக்கு ஏவினான்.

"(நபியே! மர்யமிடத்தில்) மலக்குகள்; மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்; உம்மைத் தூய்மையாகவும் ஆக்கியிருக்கிறான்; இன்னும் உலகத்திலுள்ள பெண்கள் யாவரையும் விட (மேன்மையாக) உம்மைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான்" (என்றும்),"

"மர்யமே! உம் இறைவனுக்கு ஸுஜூது செய்தும், ருகூஃ செய்வோருடன் ருகூஃ செய்தும் வணக்கம் செய்வீராக" (என்றும்) கூறினர். (அல்குர்ஆன் 03:42-43)

பின்னர் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பிறக்க இருக்கும் போது அல்லாஹ் மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்களை, குடும்பத்தினரை விட்டும் தனிமைப்படுத்தினான். "(நபியே!) இவ்வேதத்தில் மர்யமைப் பற்றியும் நினைவு கூர்வீராக; அவர் தம் குடும்பத்தினரை விட்டும் நீங்கி, கிழக்குப் பக்கமுள்ள இடத்தில் இருக்கும்போது,"

அவர் (தம்மை) அவர்களிடமிருந்து (மறைத்துக் கொள்வதற்காக) ஒரு திரையை அமைத்துக் கொண்டார்; அப்போது நாம் அவரிடத்தில் நம் ரூஹை (ஜிப்ரீலை) அனுப்பி வைத்தோம்; (மர்யமிடம்) சரியான மனித உருவில் தோன்றினார். (அல்குர்ஆன் 19:16-17)

மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்கள் தனக்கு ஏதோ தீங்குவிளைவிக்கத் தான் இவர் வருவதாக எண்ணி பயந்தார்கள். "(அப்படி அவரைக் கண்டதும்,) "நிச்சயமாக நாம் உம்மை விட்டும் ரஹ்மானிடம் காவல் தேடுகிறேன்; நீர் பயபக்தியுடையவராக இருந்தால் (நெருங்காதீர்)" என்றார்."

"நிச்சயமாக நான் உம்முடைய இறைவனின் தூதன்; பரிசுத்தமான புதல்வரை உமக்கு அளிக்க (வந்துள்ளேன்") என்று கூறினார். (அல்குர்ஆன் 19:18-19)

கண்ணிப் பெண்ணான மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். "அதற்கு அவர் (மர்யம்), "எந்த ஆடவனும் என்னைத் தீண்டாமலும், நான் நடத்தை பிசகியவளாக இல்லாதிருக்கும் நிலையிலும் எனக்கு எவ்வாறு புதல்வன் உண்டாக முடியும்?" என்று கூறினார்." (அல்குர்ஆன் 19:20)

அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அம்மலக்கு இது அல்லாஹ்வின் முடிவு எனவும், இது அவனின் அத்தாட்சி எனவும் எடுத்துக் கூறினார். ""அவ்வாறேயாகும்; "இது எனக்கு மிகவும் சுலபமானதே; மனிதர்களுக்கு ஓர் அத்தாட்சியாகவும், நம்மிடமிருந்து ஒரு ரஹ்மத்தாகவும் நாம் அவரை ஆக்குவோம்; இது விதிக்கப்பட்ட விஷயமாகும்" என்று உம் இறைவன் கூறுகிறான்" எனக் கூறினார்." (அல்குர்ஆன் 19:21)

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஓர் தூய்மையான, எவ்விதக் குற்றச்செயல்களிலும், விபச்சாரத்திலும் ஈடுபடாத ஓர் தாய்க்கு, தந்தையின்றி பிறந்தது அல்லாஹ்வின் மிகப் பெரிய அத்தாட்சிகளில் ஒன்றாகும். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை எவ்வாறு தந்தையின்றி படைத்தானோ அதே போன்று ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அல்லாஹ் படைத்தான். "அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே; அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப் பின் "குன்"

(ஆகுக) எனக் கூறினான்; அவர் (மனிதர்) ஆகிவிட்டார்."

(நபியே! ஈஸாவைப் பற்றி) உம் இறைவனிடமிருந்து வந்ததே உண்மையாகும்; எனவே (இதைக் குறித்து) ஐயப்படுவோரில் நீரும் ஒருவராகிடாதீர். (அல்குர்ஆன் 03:59-60)

மர்யம் அலைஹஸ்ஸலாம் அவர்கள் கற்பம் தரித்த போது தனது சமூகத்தினரை விட்டும் சற்று ஒதுங்கியிருந்தனர். "அப்பால், மர்யம் ஈஸாவை கருக்கொண்டார்; பின்னர் கர்ப்பத்துடன் தொலைவிலுள்ள ஓரிடத்தை சென்றடைந்தார்." (அல்குர்ஆன் 19:22)

தனிமையிலேயே தனது குழந்தையையும் பெற்றெடுத்தார்கள். "பின்பு (அவருக்கு ஏற்பட்ட) பிரசவ வேதனை அவரை ஒரு பேரீத்த மரத்தின்பால் கொண்டு வந்தது: "இதற்கு முன்பே நான் இறந்து, முற்றிலும் மறக்கப் பட்டவளாகி இருக்கக் கூடாதா" என்று கூறி(அரற்றி)னார்." (அல்குர்ஆன் 19:23)

இங்கு ஈஸா நபிக்கு இன்னொரு அத்தாட்சியும் காத்திருந்தது. "(அப்போது ஜிப்ரீல்) அவருக்குக் கீழிருந்து: "(மர்யமே!) கவலைப்படாதீர்கள்! உம்முடைய இறைவன் நிச்சயமாக உமக்கு கீழாலேயே ஒரு சின்ன ஆற்றை உண்டாக்கியிருக்கின்றான்" என்று அழைத்து கூறினார்."

"இன்னும், இந்த பேரீச்ச மரத்தின் கிளையைப் பிடித்து உம் அருகில் இழுத்துக் குலுக்கும்; (கொய்வதற்குப்) பக்குவமான பழங்களை உம் மீது அது உதிர்க்கும்.

"ஆகவே, (அவற்றை) உண்டு, (ஆற்று நீரைப்) பருகி கண் குளிர்ந்து இருப்பீராக! பின்னர் எந்த மனிதரையேனும் நீர் பார்க்க நேரிட்டால், "மெய்யாகவே அர்ரஹ்மானுக்காக நான் நோன்பிருப்பதாக நேர்ந்திருக்கின்றேன்; ஆதலின் இன்றைய தினம் எந்த மனிதருடனும் பேச மாட்டேன்" என்று கூறும். (அல்குர்ஆன் 19:24-26)

மர்யம் தனது சமுதாயத்தினரிடம் வந்த போது, கண்ணிப்பெண்ணாக இருந்த அவரை அவரது சமூகம் இழிநிலையில் பார்த்தது. "பின்னர் (மர்யம்) அக்குழந்தையைச் சுமந்து கொண்டு தம் சமூகத்தாரிடம் வந்தார்; அவர்கள் கூறினார்கள்: "மர்யமே! நிச்சயமாக

நபிமார்கள் மனிதர்களில் சிறந்தவர்கள்

"நபிமார்கள் மதுஅருந்தினர், விபச்சாரம் புரிந்தனர், மக்களை கொல்லச் சொன்னர் போன்ற அனைத்தும் அவர்கள் மீதான இட்டுக்கட்டுதல்களும், திரிபுபடுத்தல்களுமாகும். அவர்கள் சிறந்த பண்புகளைக் கொண்ட மனிதப் புருஷர்கள். அல்லாஹ்வின் தூதுவர்கள். அவர்கள் இவ்வாறு நடந்துகொள்ள எத்தனிக்கவும் மாட்டார்கள். தாவீது நபியைப் பற்றி (சாமுவேல்(2) 11/ 2-26) இலும், யோசுவா நபியைப் பற்றி (யோசுவா 6/ 24)





நீர் ஒரு விபரீதமான பொருளைக் கொண்டு வந்திருக்கிறீர்!""

ஹாரூனின் சகோதரியே! உம் தந்தை கெட்ட மனிதராக இருக்கவில்லை; உம் தாயாரும் நடத்தை பிசகியவராக இருக்கவில்லை" (என்று பழித்துக் கூறினார்கள்). (அல்குர்ஆன் 19:27-28)

எவருடைய கேள்விக்கும் மர்யம் பதில் சொல்லவே இல்லை.

"(ஆனால், தம் குழந்தையிடமே கேட்கும் படி) அதன் பால் சுட்டிக் காட்டினார்." (அல்குர்ஆன் 19:29)

இதை அவர்கள் மறுத்தார்கள். ""நாங்கள் தொட்டிலில் இருக்கும் குழந்தையுடன் எப்படிப் பேசுவோம்?" என்று கூறினார்கள்."

"நிச்சயமாக நான் அல்லாஹ்வுடைய அடியானாக இருக்கின்றேன்; அவன் எனக்கு வேதத்தைக் கொடுத்திருக்கின்றான்; இன்னும், என்னை நபியாக ஆக்கியிருக்கின்றான்.

"இன்னும், நான் எங்கிருந்தாலும், அவன் என்னை முபாரக்கானவனாக (நற்பாக்கியமுடையவனாக) ஆக்கியிருக்கின்றான்; மேலும், நான் உயிருடன் இருக்கும் காலமெல்லாம் தொழுகையையும், ஜகாத்தையும் (நிறை வேற்ற) எனக்கு வஸிய்யத் செய்து (கட்டளையிட்டு) இருக்கின்றான்.

"என் தாயாருக்கு நன்றி செய்பவனாக (என்னை ஏவியிருக்கின்றான்;) நற்பேறு கெட்ட பெருமைக்காரனாக என்னை அவன் ஆக்கவில்லை.

"இன்னும், நான் பிறந்த நாளிலும், நான் இறக்கும் நாளிலும் (மறுமையில்) நான் உயிர் பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும்" என்று (அக்குழந்தை) கூறியது. (அல்குர்ஆன் 19:29-33)

ஆனாலும் யஹூதிகளில் சிலர் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. மர்யமின் மீது சந்தேகம் கொண்டு, அவர் மீது அவதூறும் கூறினார்கள். "இன்னும் அவர்களின் நிராகரிப்பின் காரணமாகவும், மர்யமின் மீது மாபெரும் அவதூறு கூறியதின் காரணமாகவும் (அவர்கள் சபிக்கப்பட்டனர்)." (அல்குர்ஆன் 04:156)

விபச்சார அவதூறிலிருந்து அல்லாஹ் மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பாதுகாத்தான். "இவருடைய தாயார் மிக்க உண்மையானவர்" (அல்குர்ஆன் 05:75)

அவர் ஈஸா நபியையும், அவரின் தூதுத்துவத்தையும்



ஏற்றிருந்தார். அல்லாஹ் அவருக்கும், அவரது மகன் ஈஸா நபிக்கும் அருள்புரிந்தான். "அப்பொழுது அல்லாஹ் கூறுவான்: "மர்யமுடைய மகன் ஈஸாவே நான் உம்மீதும், உம் தாயார் மீதும் அருளிய என் நிஃமத்தை (அருள் கொடையயை) நினைவு கூறும்; பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு உமக்கு உதவியளித்து நீர் தொட்டிலிலும் (குழந்தைப் பருவத்திலும்), வாலிபப் பருவத்திலும் மனிதர்களிடம் பேசச் செய்ததையும், இன்னும் நான் உமக்கு வேதத்தையும், ஞானத்தையும், தவ்ராத்தையும், இன்ஜீலையும் கற்றுக் கொடுத்ததையும் (நினைத்துப் பாரும்" (அல்குர்ஆன் 05:110)

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பல அத்தாட்சிகளையும் வழங்கினான். "இன்னும் நீர் களிமண்ணினால் என் உத்தரவைக் கொண்டு பறவை வடிவத்தைப் போலுண்டாக்கி அதில் நீர் ஊதியபோது அது என் உத்தரவைக் கொண்டு பறவையாகியதையும், இன்னும் என் உத்தரவைக் கொண்டு பிறவிக் குருடனையும், வெண் குஷ்டக்காரனையும் சுகப்படுத்தியதையும், (நினைத்துப் பாரும்); இறந்தோரை என் உத்தரவைக் கொண்டு (உயிர்ப்பித்துக் கல்லறைகளிலிருந்து) வெளிப்படுத்தியதையும் (நினைத்துப் பாரும்); அன்றியும் இஸ்ராயீலின் சந்ததியினரிடம் நீர் தெளிவான அத்தாட்சிகளைக் கொண்டு வந்தபோது, அவர்களில் நிராகரித்தவர்கள், "இது தெளிவான சூனியத்தைத் தவிர வேறு இல்லை" என்று கூறிய வேளை, அவர்கள் (உமக்குத் தீங்கு செய்யாதவாறு) நான் தடுத்து விட்டதையும் நினைத்துப் பாரும்."

"என் மீதும் என் தூதர் மீதும் ஈமான் கொள்ளுங்கள்" என்று நான் ஹவாரிய்யூன் (சீடர்)களுக்கு தெரிவித்தபோது, அவர்கள், "நாங்கள் ஈமான் கொண்டோம்: நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் (அல்லாஹ்வுக்கு வழிப்பட்டவர்கள்) என்பதற்கு நீங்களே சாட்சியாக இருங்கள்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 05:110-111)

பின்னர் ஹவாரிய்யூன் என அழைக்கப்படும் அவரின் சீடர்கள் இறைவனிடம் பிரார்த்தனை புரிந்து, தமக்கு வானத்திலிருந்து உணவு மரவை ஒன்றை பெற்றுத் தருமாறு வேண்டிக்கொண்டார்கள்.

""மர்யமுடைய மகன் ஈஸாவே! உங்கள் இறைவன் வானத்திலிருந்து எங்களுக்காக உணவு மரவையை (ஆகாரத் தட்டை) இறக்கி வைக்க முடியுமா?" என்று ஹவாரிய்யூன் (சீடர்) கள் கேட்டபோது அவர், "நீங்கள் முஃமின்களாக இருந்தால், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்." (அல்குர்ஆன் 05:112)

ஆனால் இவர்கள் அல்லாஹ் வழங்கிய அவ் அருட்கொடைக்கு நன்றி செலுத்தாமல் இருப்பார்களோ என பயந்தார்கள். ""நீங்கள் முஃமின்களாக இருந்தால், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்" என்று கூறினார்."

அதற்கவர்கள், "நாங்கள் அதிலிருந்து புசித்து எங்கள் இதயங்கள் அமைதி பெறவும், நிச்சயமாக நீங்கள் எங்களுக்கு



உண்மையையே கூறினீர்கள் என்பதை அறிந்து கொள்ளவும், இன்னும் நாங்கள் அதைப்பற்றி சாட்சி கூறக் கூடியவர்களாகவும் இருக்க விரும்புகின்றோம்" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 05:112-113)

எனவே ஈஸா நபியும் அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். "மர்யமுடைய மகன் ஈஸா, "அல்லாஹ்வே! வானத்திலிருந்து எங்கள் மீது ஓர் உணவு மரவையை இறக்குவாயாக; அது எங்களுக்கு - எங்களில் முன்னவர்களுக்கும், எங்களில் பின் வருபவர்களுக்கும் ஒரு பெருநாளாகவும், உன்னிலிருந்து ஓர் அத்தாட்சியாகவும் இருக்கும்; இன்னும் எங்களுக்கு உணவுப் பொருட்களை அளிப்பாயாக; நீயே உணவளிப்பவர்களில் மேலானவனாக இருக்கிறாய்" என்று (பிரார்த்தித்துக்) கூறினார்."

அதற்கு அல்லாஹ், "நிச்சயமாக நான் அதை உங்களுக்கு இறக்கிவைக்கிறேன்; ஆனால், அதன்பின் உங்களில் எவரேனும் ஒருவர் நிராகரித்தால், உலகத்தாரில் எந்த ஒருவருக்கும் செய்திராத வேதனையைக் கொண்டு அவரை வேதனைப்படுத்துவேன்" என்று கூறினான். (அல்குர்ஆன் 05:114-115)

அவர்களில் சிலர் ஈஸா நபியை நிராகரித்தார்கள்.

ஆனால் ஈஸா நபியை நிராகரித்த யூதர்கள் தங்கள் நிராகரிப்பிலும், ஈஸா ஓர் நபி என்பதைப் பொய்ப்பிப்பதிலும் உறுதியாகவே இருந்தார்கள். "(ஈஸாவின் எதிரிகள்) சூழ்ச்சி செய்தனர். அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்தான். அல்லாஹ் சிறப்பாகச் சூழ்ச்சி செய்பவன்." (அல்குர்ஆன் 03:54)

இவர்களின் இச்சூழ்ச்சிகளை அல்லாஹ் ஈஸா நபிக்கு அறிவித்து, அவற்றிலிருந்து அவர்களைக் காப்பாற்றிவிட்டான். "ஈஸாவே! நான் உம்மைக் கைப்பற்றுபவனாகவும், என்னளவில் உம்மை உயர்த்துபவனாகவும், (என்னை) மறுப்போரிடமிருந்து உம்மைத் தூய்மைப்படுத்துபவனாகவும், உம்மைப் பின்பற்றுவோரை (என்னை) மறுப்போரை விட கியாமத் நாள் வரை மேல் நிலையில் வைப்பவனாகவும் இருக் கிறேன். பின்னர் என்னிடமே உங்களின் திரும்புதல் உள்ளது. நீங்கள் முரண்பட்ட விஷயத்தில் உங்களுக்கிடையே தீர்ப்பு வழங்குவேன்." (அல்குர்ஆன் 03:55)

இன்ஜீல் வேதத்தில் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் இறைவன் ஒருவன் தான் என்பதை நிரூபித்துள்ளார்.

"அவரிடம், விவாதத்தை கேட்டுக்கொண்டிருந்த ஓர் எழுத்தாளர் வந்து, எல்லாக் கட்டளைகளுக்கும் முதன்மையான கட்டளை எது? எனக் கேட்டார். அதற்கு இயேசு, "எல்லாவற்றிற்கும் முதற்கட்டளை, 'இஸ்ரவேலர்களே! செவிமடுங்கள். எங்கள் இறைவன் ஒருவன் தான். உங்கள் ஒவ்வொருவரின் உள்ளத்தாலும், சிந்தனையாலும், பலத்தாலும் அவனை ஒருமைப்படுத்த வேண்டுமென நான் விரும்புகிறேன்' என்பதாகும்." (மர்கஸ்

உடண்படிக்கைகளை முறித்தல், சூழ்ச்சிகள் செய்தல், இறை நிராகரிப்பு, நபிமார்களைக் கொள்ளுதல், மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது அவதூறு கூறுதல் போன்ற இவர்களின் இழிசெயல்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன. இதைப் பற்றி அல்லாஹ் கூறும் போது, "அவர்கள் தமது உடன்படிக்கையை முறித்ததாலும், அல்லாஹ்வின் வசனங்களை ஏற்க மறுத்ததாலும், நியாயமின்றி நபிமார்களைக் கொலை செய்ததாலும், எங்கள் உள்ளங்கள் மூடப்பட்டுள்ளன என்று கூறியதாலும், (இதற்கும்) மேலாக அவர்கள் (ஏக இறைவனை) மறுத்ததாலும் அவர்களின் உள்ளங்கள் மீது அல்லாஹ் முத்திரையிட்டான். அவர்கள் குறைவாகவே நம்பிக்கை கொள்கின்றனர்."

அவர்கள் (ஏகஇறைவனை) மறுத்ததாலும், மர்யமின் மீது மிகப் பெரும் அவதூறை அவர்கள் கூறியதாலும்,

அல்லாஹ்வின் தூதரான மர்யமின் மகன் மஸீஹ் 92 எனும் ஈஸாவை நாங்களே கொன்றோம்'' என்று அவர்கள் கூறியதாலும் (இறைவன் முத்திரை யிட்டான்.) (அல்குர்ஆன் 04:155-157)

அல்லாஹ் இவர்களிடமிருந்து ஈஸா நபியைக் காப்பாற்றினான். "அவரை அவர்கள் கொல்ல வில்லை. அவரைச் சிலுவையிலும் அவர்கள் அறையவில்லை" (அல்குர்ஆன் 04:157)

ஆனால் அவரைப் போன்ற வேறு ஒருவருக்கே மேற்கண்ட அனைத்தையும் செய்தனர். "மாறாக அவர்களுக்கு ஆள்மாறாட்டம் செய்யப்பட்டது. 456 இதில் முரண்பட்டோர் சந்தேகத்திலேயே உள்ளனர். ஊகத்தைப் பின்பற்றுவதைத் தவிர அவர்களுக்கு இது குறித்து அறிவு இல்லை. அவர்கள் அவரை உறுதியாகக் கொல்லவே இல்லை."

மாறாக அவரை அல்லாஹ் தன்னளவில் உயர்த்திக் கொண்டான். அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமுடையோனாகவும் இருக்கிறான் (அல்குர்ஆன் 04:157-158)

எனவே ஈஸா நபி உண்மையில் மரணிக்கவில்லை. அவர்கள் வானுலகுக்கு உயர்த்தப்பட்டார்கள் என்பது இதனூடாகப் புலனாகின்றது. "வேதமுடையோரில் ஒவ்வொரு வரும் அவர் (ஈஸா, மீண்டும் வந்து) மரணிப் பதற்கு முன் அவரை நம்பிக்கை கொள்ளாமல் இருக்க மாட்டார்கள். கியாமத் நாளில் அவர்களுக்கு சாட்சியாக அவர் இருப்பார்." (அல்குர்ஆன் 04:159)

இது ஈஸா நபியைப் பற்றிய உண்மையான சம்பவமாகும். "இவரே மர்யமின் மகன் ஈஸா. அவர்கள் சந்தேகம் கொண்டிருந்த உண்மைச் செய்தி இதுவே."

எந்தப் பிள்ளையையும் ஏற்படுத்திக் கொள்வது அல்லாஹ்வுக்குத்

இஸ்லாத்தில் ஈஸா அலைஹிஸ்ஸலாம்

"இஸ்லாத்தை நான் படிக்கும் போது இயேசுவின் இன்னொரு ரூபத்தை என்னால் கண்டுகொள்ள முடிந்தது. அது என்னில் பாரிய தாக்கத்தை

ஃப்ரடெரிக் டோலமார்க்
ஜோகன்னஸ்பர்க் பேராயர்

தகுதியானதன்று. அவன் தூயவன். ஒரு காரியத்தைப் பற்றி அவன் முடிவெடுத் தால் ஆகு' என்று தான் அதற்குக் கூறுவான். உடனே அது ஆகி விடும். (அல்குர்ஆன் 19:34-35)

இவ்வசனத்தின் மூலமாக அல்லாஹ் தனக்கு எந்தப் பிள்ளைகளையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை எனக் கூறுகிறான். எனவே அவன் தான் அனைத்தையும் படைத்த நாயன். அவனின் படைப்புக்கள் அவனின் பக்கம் தேவையுள்ளவர்களாக இருக்கின்றனர். வானங்கள் மற்றும் பூமியிலுள்ள அனைத்தும் அல்லாஹ்வின் அடிமைகளாக இருந்து, அவனை வழிபடுகின்றன.

இயேசு சிலுவையில் அறையப்பட்டதை மறுத்து, வானுகிற்கு உயர்த்தப்பட்டதை பைபிள் உறுதிசெய்கின்றது.

- "இயேசுவுக்கு கல்லால் அடிப்பதற்காக பெரிய பாராங்கல்லை உயர்த்தினார்கள். அப்போது அவர் திடீரென மறைந்து ஹைகலை விட்டும் வெளியில் வந்து அவர்களுக்கு மத்தியில் சென்றார்." (யோவான் 08:59)
- "அவரைப் பிடிக்குமாறு வேண்டிக்கொண்டனர். அவர்கள் கையில் இயேசு சிக்காமல் தப்பிவிட்டார்" (யோவான் 10:93)
- "வேதத்தில் குறிப்பிடப்பட்டது போல் அவரின் எழும்புகள் முறிக்கப்பட மாட்டாது என்னும் கூற்றை நிறைவேற்றுவதற்காகவே இது இடம்பெற்றது." (யோவான் 36:19)
- ""இவ் இயேசு உங்களை விட்டும் பரலோகத்திற்கு உயர்த்தப்பட்டார். (அப்போஸ்தலர் நடபடிகள் 1:11)



5- முஹம்மத்

முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்கள், ரஸூல்மார்களுக்கெல்லாம் இறுதியானவர். இவரைப் பற்றி ஈஸா நபியவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். "இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்கு (அனுப்பப்பட்ட) அல்லாஹ்வின் தூதர். எனக்கு முன் சென்ற தவ்ராத்தை உண்மைப்படுத்துபவன். எனக்குப் பின்னர் வரவுள்ள அஹ்மத் என்ற பெயருடைய தூதரைப் பற்றி நற்செய்தி கூறுபவன்'' என்று மர்யமின் மகன் ஈஸா கூறியதை நினைவூட்டுவீராக! அவர்களிடம் தெளிவான சான்றுகளைக் கொண்டு வந்த போது 'இது தெளிவான சூனியம்' எனக் கூறினர்" (அல்குர்ஆன் 61:06)

முஹம்மத் ﷺ அவர்களைப் பற்றிய முன்னறிவிப்புக்கள் தவ்ராத், மற்றும் இன்ஜீல் ஆகிய வேதங்களில் கூறப்பட்டுள்ளன. "எழுதப் படிக்கத் தெரியாத இத்தூதரை, இந்த நபியை (முஹம்மதை) அவர்கள் பின்பற்றுகின்றனர். தங்களிடம் உள்ள தவ்ராத்திலும், இஞ்சீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதை அவர்கள் காண்கின்றனர். இவர்,நன்மையை அவர்களுக்கு ஏவுகிறார். தீமையை விட்டும் அவர்களைத் தடுக்கிறார். தூய்மையான வற்றை அவர்களுக்கு அனுமதிக்கிறார். தூய்மையற்றவைகளை அவர்களுக்கு அவர் தடை செய்கிறார். அவர்களுடைய சுமையையும்,அவர்கள் மீது (பிணைக் கப்பட்டு) இருந்த விலங்குகளையும் அவர் அப்புறப்படுத்துகிறார். இவரை நம்பி, இவரைக் கண்ணியப்படுத்தி, இவருக்கு உதவியும் செய்து, இவருடன் அருளப்பட்ட ஒளியையும் பின்பற்றுவோரே வெற்றி பெற்றோர்." (அல்குர்ஆன் 07:157)

அவ்வாறே அல்லாஹ் அனைத்து நபிமார்களிடமும் முஹம்மத் ﷺ அவர்களைக் கொண்டு ஈமான் கொள்ளுமாறும், அவர்கள் உயிருடன் இருக்கும் காலத்தில் இவர் அனுப்பப்பட்டால் இவருக்கு அனைவரும் உதவியாய் இருக்குமாறும், இச்செய்தியை தமது சமூகத்தவரிடம் எத்திவைக்குமாறும் வாக்குறுதி வாங்கியுள்ளான். "''உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் நான் தந்த பின் உங்களிடம் இருப்பதை உண்மைப்படுத்தும் தூதர் உங்களிடம் வந்தால் அவரை நம்புவீர்களா? அவருக்கு உதவுவீர்களா?'' என்று நபிமார்களிடம் அல்லாஹ் உறுதி மொழி

எடுத்து ''இதை ஒப்புக் கொண்டீர்களா? எனது பலமான உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டீர்களா?'' என்று கேட்ட போது, ''ஒப்புக் கொண்டோம்'' என்று அவர்கள் கூறினர். ''நீங்களே இதற்குச் சாட்சியாக இருங்கள்! உங்களுடன் நானும் சாட்சியாக இருக்கிறேன்'' என்று அவன் கூறினான்." (அல்குர்ஆன் 03:81)

இம் முன்னறிவிப்புக்கள் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "(முஹம்மதே!) 'நீர் (இறைவனின்) தூதர் அல்லர்' என்று, மறுப்போர் கூறுகின்றனர். 'எனக்கும், உங்களுக்கு மிடையே அல்லாஹ்வே போதுமான சாட்சியாவான். வேதத்தின் அறிவு உள்ளோரும் போதுமானவர்கள்' என்று கூறுவீராக!" (அல்குர்ஆன் 13:43)

மேலும், "இது முன்னோரின் வேதங்களிலும் உள்ளது. இஸ்ராயீலின் மக்களில் உள்ள அறிஞர்கள் இதை அறிந்து (ஏற்று) இருப்பது இவர்களுக்குச் சான்றாக இல்லையா?" (அல்குர்ஆன் 26:196-197)

வேதம் கொடுக்கப்பட்டோரும் தங்கள் பிள்ளைகளை எப்படி தெளிவாக அறிந்து வைத்துள்ளனரோ அதை போன்று முஹம்மத் ﷺ அவர்களைப் பற்றியும் அறிந்து வைத்திருந்தனர். "நாம் யாருக்கு வேதத்தை வழங்கினோமோ அவர்கள், தமது பிள்ளைகளை அறிவது போல் இவரை அறிவார்கள். அவர்களில் ஒரு சாரார் அறிந்து கொண்டே உண்மையை மறைக்கின்றனர்." (அல்குர்ஆன் 02:146)

மேலும், "அவர்களிடம் இருப்பதை உண்மைப்படுத்தும் தூதர் (முஹம்மத்) அல்லாஹ்விடமிருந்து அவர்களிடம் வந்த போது, வேதம் கொடுக்கப்பட்டோரில் ஒரு பிரிவினர் ஏதும் அறியாதோரைப் போல் அல்லாஹ்வின் வேதத்தைத் தமது முதுகுக்குப் பின்னால் வீசி எறிந்தனர்." (அல்குர்ஆன் 02:101)

முஹம்மத் ﷺ அவர்களைப் பற்றிய முன்னறிவிப்புக்கள் அவர்களின் வேதங்களில் முன்னரே அறிவிக்கப்பட்ட போதிலும், உண்மையை மறைக்கும் சமூகத்தினரான இவர்கள் தெரிந்தும் தெரியாததுமாய் இருக்கின்றனர்.

ஏனைய நபிமார்களைப் போன்றே



முஹம்மத் தான் இறுதித் தூதுவர்

"ஏனெனில் அல்லாஹ் என்னை இப்பூமியிலிருந்து உயர்த்திவிடுவான். என்னைப் போன்ற உருவில் ஒருவனை ஒப்பனை செய்துவிடுவான். மக்கள் அவனை நான் தான் என நினைத்துவிடுவர். என்னைப் போன்று மாறியவனின் மரணம் மிகக் கொடூரமாக இருக்கும். நான் பூமியில் சில காலம் இத்தகைய வெட்க நிலையிலேயே இருப்பேன். எப்போது முஹம்மத் வருவாரோ

பர்னபாஸ் சுவிஷேசம்

முஹம்மத் ﷺ அவர்களும் ஏகத்துவக் கொள்கையையே மக்களுக்குப் போதித்தார்கள். அல்லாஹ் கூறுகிறான், *"'என்னைத் தவிர வணக்கத்திற் குரியவன் வேறு யாருமில்லை; எனவே என்னையே வணங்குங்கள்!' என்பதை அறிவிக்காமல் உமக்கு முன் எந்தத் தூதரையும் நாம் அனுப்பியதில்லை."* *(அல்குர்ஆன் 21:25)*

அவ்வாறே தனக்கு முன் சென்ற அனைத்து நபிமார்கள் ரஸூல்மார்கள் அனைவரையும் உண்மைப்படுத்தும் முகமாக இவர் அனுப்பப்பட்டார். எனவே அவர்கள் அனைவரைக் கொண்டும் நாம் விசுவாசம் கொள்ள வேண்டும். *"அவர்களுக்கிடையே பாகுபாடு காட்ட மாட்டோம்"* *(அல்குர்ஆன் 02:136)*

யார் முஹம்மத் ﷺ அவர்களை உண்மைப்படுத்தி விட்டு, ஏனைய நபிமார்களை விசுவாசம் கொள்ளவில்லையோ அவர்கள் முஹம்மத் ﷺ அவர்களை உண்மைபடுத்தவுமில்லை, அவரை விசுவாசம் கொள்ளவுமில்லை என அல்குர்ஆன் கூறுகின்றது. *"நூஹுக்கு எதை அவன் வலியுறுத்தினானோ அதையே உங்களுக்கும் மார்க்கமாக்கினான். (முஹம்மதே!) உமக்கு நாம் அறிவித்ததும் இப்ராஹீம், மூஸா மற்றும் ஈஸாவுக்கு நாம் வலியுறுத்தியதும், 'மார்க்கத்தை நிலை நாட்டுங்கள்! அதில் பிரிந்துவிடாதீர்கள்!' என்பதே.."* *(அல்குர்ஆன் 42:13)*

முஹம்மதும் ஏனைய மனித்ரகளைப் போன்று ஓர் சாதாரண மனிதர் தான். *"'நான் உங்களைப் போன்ற மனிதன் தான். (எனினும்) உங்கள் கடவுள் ஒரே ஒரு கடவுளே என எனக்கு அறிவிக்கப்படுகிறது. தமது இறைவனின் சந்திப்பை எதிர்பார்ப்பவர் நல்லறத்தைச் செய்யட்டும்! தமது இறை வணக்கத்தில் எவரையும் இணை கற்பிக்காது இருக்கட்டும்' என்று (முஹம்மதே!) கூறுவீராக!"* *(அல்குர்ஆன் 18:110)*

நபி ﷺ அவர்கள் எழுதவோ, படிக்கவோ தெரியாதவராகத்தான் இருந்தார்கள். இவரின் இந்த பண்பு முன்னர் அருளப்பட்ட வேதங்களிலும் இவரை அடையாளம் காண்பதற்காகக் கூறப்பட்டுள்ளன. *"எழுதப் படிக்கத் தெரியாத இத்தூதரை, இந்த நபியை (முஹம்மதை) அவர்கள் பின்பற்றுகின்றனர். தங்களிடம் உள்ள தவ்ராத்திலும்,*

இஞ்சீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதை அவர்கள் காண்கின்றனர். இவர்,நன்மையை அவர்களுக்கு ஏவுகிறார். தீமையை விட்டும் அவர்களைத் தடுக்கிறார். தூய்மையான வற்றை அவர்களுக்கு அனுமதிக்கிறார். தூய்மையற்றவைகளை அவர்களுக்கு அவர் தடை செய்கிறார். அவர்களுடைய சுமையையும்,அவர்கள் மீது (பிணைக் கப்பட்டு) இருந்த விலங்குகளையும் அவர் அப்புறப்படுத்துகிறார். இவரை நம்பி, இவரைக் கண்ணியப்படுத்தி, இவருக்கு உதவியும் செய்து, இவருடன் அருளப்பட்ட ஒளியையும் பின்பற்றுவோரே வெற்றி பெற்றோர்." (அல்குர்ஆன் 07:157)



முன்சென்ற நபிமார்கள், ரஸூல்மார்கள் அனைவருக்கும் அல்லாஹ் எப்படி ஓர் அற்புதத்தைக் கொடுத்து அனுப்பினானோ, முஹம்மத் ﷺ அவர்களுக்கும் ஓர் மாபெரும் அற்புதத்தை வழங்கினான். அது தான் புனித அல்குர்ஆன். இதில் மனித வர்க்கத்தின் நேர்வழிக்கான சட்டதிட்டங்களும், முன்னர் நடைபெற்ற பல சம்பவங்களும் உள்ளடங்கியிருக்கின்றன. "இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமாகவும், நேர் வழியாகவும், அருளாகவும், முஸ்லிம்களுக்கு நற்செய்தியாகவும் உமக்கு அருளினோம்." (அல்குர்ஆன் 16:89)

இது முஃமின்களுக்கு ஓர் சான்றாகவும் இருக்கின்றது. "இவை மனிதர்களுக்குத் தெளிவான சான்றுகள். உறுதியாக நம்பும் சமுதாயத்திற்கு நேர்வழியும், அருளுமாகும்." (அல்குர்ஆன் 45:20)

மனிதர்கள் மத்தியில் காணப்படும் முரண்பாடுகளையும் இது தீர்த்துவைக்கின்றது. "அவர்கள் முரண்பட்டதை அவர்களுக்கு (முஹம்மதே!) நீர் விளக்குவதற்காகவே உமக்கு இவ்வேதத்தை நாம் அருளியுள்ளோம். (இது) நம்பிக்கை கொள்ளும் சமுதாயத்திற்கு நேர் வழியாகவும், அருளாகவும் உள்ளது." (அல்குர்ஆன் 16:64)

நபியவர்களின் அமானிதத்தையும், உண்மையையும் கண்டு, அவர்களை உண்மையாளர், நம்பிக்கையாளர் என அழைத்த குறைஷியர்கள், அவர் கொண்டுவந்த இக் குர்ஆனைப் பொய்ப்பித்தனர். எனவே

பைபிள் முஹம்மதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது

"இக்களங்கம் முஹம்மத் வரும் வரையிலும் நீடிக்கும். எப்போது முஹம்மத் வருகின்றாரோ அப்போது அல்லாஹ்வின் மார்க்கத்தை விசுவாசம் கொள்பவர்களுக்கு ஏமாற்றம் தந்தது எது என விளங்கிவிடும். ஏசாயாவில், 'உன் பெயரை முஹம்மத் என நான் ஆக்கிவிட்டேன். முஹம்மதே! இறைவனை தூய்மைப்படுத்துபவரே! உன் பெயர் நிலையாய் இருக்கும்' எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே ஆபகூக், 'பாரான் மலையிலிருந்து பரிசுத்தவான்களுக்கு மத்தியிலிருந்து அல்லாஹ் அவரை பிரசன்னமாக்கினான். முஹம்மதின் மகிமையால் வானத்தை ஒளிமயமாக்கினான். அவரின் புகழால் இப்பூமி நிரைந்துவிடும்.' எனக் கூறுகின்றது. ஏசயாவில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது, 'அவருக்கு வழங்கியதை வேறு எவருக்கும் வழங்கமாட்டேன். அஹ்மத் என்பவர் அல்லாஹ்வைப் புகழ்வார். பூமியில் மிகவும் சிறந்தவராக இருப்பார். அவரின் மூலம் பூமியிலுள்ள அனைவரும் சந்தோசப்படுவர். அனைத்து கௌரவங்களையும் அவருக்கே வழங்குவர்.

பர்னபாஸ் சுவிஷேசம்

தான் அல்லாஹ் முடிந்தால் உலகமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இது போன்ற ஓர் குர்ஆனைக் கொண்டு வருமாறு சவால் விட்டான். "இக்குர்ஆன் போன்றதைக் கொண்டு வருவதற்காக மனிதர்களும், ஜின்களும் ஒன்று திரண்டாலும் இது போன்றதைக் கொண்டு வர முடியாது. அவர்களில் ஒருவர் மற்றவருக்கு உதவியாளராக இருந்தாலும் சரியே' என்று கூறுவீராக!" (அல்குர்ஆன் 17:88)

மொழிவளத்தில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தவர்களால் கூட மொத்த குர்ஆனைப் போன்றதையும் கொண்டுவருவதற்கு முடியாமல் போனதினால் அதிலுள்ள வசனங்களைப் போன்று 10 வசனங்களையாவது கொண்டு வருமாறு அல்லாஹ் சவால்விட்டான். "'இவர் இதை இட்டுக்கட்டிக் கூறு கிறார்' என்று அவர்கள் கூறுகிறார்களா? நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இட்டுக்கட்டி, பத்து அத்தியாயங்களை இது போன்று கொண்டு வாருங்கள்! அல்லாஹ்வையன்றி உங்களுக்கு இயன்றவர்களை (துணைக்கு) அழைத்துக் கொள்ளுங்கள்!' என்று கூறுவீராக!" (அல்குர்ஆன் 11:13)

இதைச் செய்யவும் அவர்களுக்கு முடியாமல் போனதினால் அடுத்து, இதை ஒத்த ஓர் சிறிய அத்தியாயத்தையாவது கொண்டுவருமாறு சவால் விட்டான். "நமது அடியாருக்கு (முஹம்மதுக்கு) நாம் அருளியதில் நீங்கள் சந்தேகம் கொண்டு, (அதில்) நீங்கள் உண்மையாளர்களாகவும் இருந்தால் இது போன்ற ஓர் அத்தியாயத்தைக் கொண்டு வாருங்கள்! அல்லாஹ்வைத் தவிர ஏனைய உங்கள் உதவியாளர்களையும் அழைத்துக் கொள்ளுங்கள்!" (அல்குர்ஆன் 02:23)

நாவண்மை மிக்கவர்களாகவும், சொல்லாட்சிக் கலைஞர்களாகவும் இருந்த குறைஷியர்களுக்கு அதுவும் முடியாமல் போனது. என்றாலும் அல்குர்ஆன் பொய்யான ஒன்று என்ற வாதத்திலே தொடர்ந்தும் இருந்தனர். இவ்விடயத்தில் உலுல் அஸ்ம் என அழைக்கப்படும் இப்றாஹிம், நூஹ், மூஸா, ஈஸா முதலிய நபிமார்களைப் போல் பொறுமையாக இருக்குமாறு அல்லாஹ்

உதாரணப் புருஷர்

"மனிதர்களில் சிறந்தவர் யார் என நான் வரலாறுகளில் தேடும் போது

கோதா
ஜேர்மனியக் கவிஞர்

கேள்விகளைத் தொடு, அல்குர்ஆன் உனக்கு பதிலளிக்கும்

"நான் அல்குர்ஆனைப் படித்தேன். அதில் வாழ்கையில் கேட்கத்தோன்றும் அனைத்துக் கேள்விகளுக்கும் விடைகளைக்

மைக்கேல் ஹார்ட்
அமெரிக்க எழுத்தாளர்



மனிதர்களுக்கு அஹ்மத்....

"கிறிஸ்தவர்களைப் பற்றி பரவலாக இருக்கும் ஓர் கருத்து தான், உன்னதத்தில் இருக்கின்ற அல்லாஹ்வுக்கே மகிமை, பூமிக்கு சாந்தி, மனிதர்களுக்கு சந்தோசம் என்பதாகும். ஆனால் அக்கருத்து அவ்வாறல்ல, அது பின்வருமாறே அமைந்து இருந்தது. உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும், பூமிக்கு இஸ்லாம்,

அப்துல் ஆஹாத் தாவூத் அல் அசூரி
முன்னால் மோசூல் நகர மேயர்

நபியவர்களுக்கு கட்டளையிட்டான். "உறுதி மிக்க தூதர்கள் பொறுத்தது போல் நீரும் பொறுப்பீராக!" (அல்குர்ஆன் 46:35)

பொறுமையோடு தங்கள் அழைப்புப் பணியை நபியவர்கள் தொடர்ந்தார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் வார்த்தைகளைக் கற்றுக்கொடுத்தார்கள். அல்லாஹ் அவருக்கு பக்கபலமாக இருந்து அவரைப் பாதுகாத்தான். "நபியே! உமக்கும், உம்மைப் பின்பற்றும் நம்பிக்கை கொண்டோருக் கும் அல்லாஹ்வே போதும்." (அல்குர்ஆன் 08:64)

"தனது அடியாருக்கு அல்லாஹ் போதுமானவன் இல்லையா?" (அல்குர்ஆன் 39:36)

நபியவர்களுக்கும், அவரைப் பின்பற்றிய ஸஹாபாக்களுக்கும் ஏனைய நபிமார்களுக்கு உதவி புரிந்ததைப் போல் பல உதவிகளையும் அல்லாஹ் செய்தான். "'நானும் எனது தூதர்களுமே மிகைப் போம்' என்று அல்லாஹ் விதித்து விட்டான். அல்லாஹ் வலிமை மிக்கவன்; மிகைத்தவன்." (அல்குர்ஆன் 58:21)

மேலும், "நமது அடியார்களான தூதர்களுக்கு நமது கட்டளை முந்தி விட்டது. அவர்களே உதவி செய்யப்படுவார்கள். நமது படையினரே வெல்பவர்கள்.." (அல்குர்ஆன் 37:171-173)

"நமது தூதர்களுக்கும், நம்பிக்கை கொண்டோருக்கும் இவ்வுலக வாழ்க்கையிலும் சாட்சிகள் முன் வரும் நாளிலும் நாம் உதவுவோம்." (அல்குர்ஆன் 40:51)

ஆனால் இறை நிராகரிப்பாளர்களோ இவரின் தூதுத்துவத்தைத் தடுத்து, அல்லாஹ்வின் ஒளியை அனைக்க முற்பட்டனர். அல்லாஹ் இவர்களின் சதிகள் அனைத்தையும் முறியடித்தான். "அல்லாஹ்வின் ஒளியைத் தமது வாய் களால் ஊதி அணைக்க நினைக்கின்றனர். (தன்னை) மறுப்போர் வெறுத்தாலும் அல்லாஹ் தனது ஒளியை

முழுமைப்படுத்துபவன்."

இணை கற்பிப்போர் வெறுத்த போதிலும் அனைத்து மார்க்கங்களை விட மேலோங்கச் செய்வதற்காக அவனே தனது தூதரை நேர் வழியுடனும், உண்மை மார்க்கத்துடனும் அனுப்பினான். *(அல்குர்ஆன் 61:8-9)*

தனது அருளினால் இஸ்லாத்தை மேலோங்கச் செய்து, ஏனைய கொள்கைகளுக்கு மத்தியில் ஏகத்துவக் கொள்கையை உயர்வடைய வைத்து, மனித சமூகத்துக்கே இம்மார்க்கத்தின் மூலமாகவும், இத் தூதுத்துவத்தின் மூலமும் அல்லாஹ் அருள்பாலித்தான்.

"இன்று உங்கள் மார்க்கத்தை உங்களுக்காக நிறைவு செய்து விட்டேன். எனது அருளை உங்களுக்கு முழுமைப்படுத்தி விட்டேன். இஸ்லாத்தை உங்களுக்கான வாழ்க்கை நெறியாக பொருந்திக் கொண்டேன்." *(அல்குர்ஆன் 05:03)*

இம்மார்க்கத்தை இறுதிநாள் வரை பாதுகாக்கும் பொறுப்பை தானே ஏற்றுக்கொண்டான். "நாமே இந்த அறிவுரையை அருளி னோம். நாமே இதைப் பாதுகாப்போம்" *(அல்குர்ஆன் 13:09)*

இதுவே அனைத்து தூதுத்துவத்திற்கும் இறுதியான தூதுத்துவமாகும். "முஹம்மத் உங்களின் ஆண்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களில் முத்திரையாகவும் இருக்கிறார். அல்லாஹ் ஒவ்வொரு

அற்புதம் வாய்ந்த அல்குர்ஆன்

"அல்குர்ஆன் சிந்தனைகளை ஆக்கிரமிக்கின்றது. இதயங்களில் பல பகுதிகளையும் கைப்பற்றிவிடுகின்றது. முஹம்மத் ﷺ அவர்களின்

ஹென்றி டீ கஸ்ட்ரீஸ்

பிரேஞ்சு இராணுவத்தின் முன்னால் கர்னர்

الطريق إلى السعادة
The Path to Happiness

மறுமை நாள் வரை தாக்குப்பிடிக்கும் தூதுத்துவம்.

மறுமை நாள் வரை தாக்குப்பிடிக்கும் தூதுத்துவம்.

முஹம்மத் ﷺ அவர்களின் தூதுத்துவத்திற்கான சான்றுகள்

இறுதி நபித்துவம்

உலக மக்கள் அனைவருக்குமான அருட்கொடை

நபி ﷺ அவர்களின் வருகையால் மனிதகுளத்தின் மகிழ்ச்சி,

மறுமை நாள் வரை தொடர்ந்து இருக்கும் அத் தூதுத்துவம் எது?

الرسالة الباﷺية سمت الكون كله:

இறுதிவரை தொடரும் மார்க்கம் நபிமார்கள், ரஸூல்மார்கள் போதித்த மார்க்கமாகும்.

இறைதிவரை நிலைத்திருக்கும் தூதுத்துவத்தின் பூரணத்துவம்.

இம்மார்க்கத்தின் அடிப்படை அம்சங்கள்

இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்.

இஸ்லாமிய சட்டக் கோர்வையும், மனிதனால் இயற்றப்பட்ட சட்டதிட்டங்களும்.

இஸ்லாத்தின் மூலாதாரங்கள்,

மறுமை நாள் வரை தாக்குப்பிடிக்கும் தூதுத்துவம்.

மனிதர்களில் அல்லாஹ்வால் அருளப்பட்ட வேதவாகுகளைப் பின்பற்றாமல், அதிலிருந்து விலகிச் செல்லும் ஒவ்வொரு காலகட்டத்திலும் அவர்களை நேர்வழியின் பால் அழைப்பதற்காக அல்லாஹ் பல நபிமார்களை ஒருவர் பின் ஒருவராக அனுப்பியுள்ளான். "தூதர்களை அனுப்பிய பின்னர் அல்லாஹ்வைக் குறை கூற மனிதர்களுக்கு எந்த ஆதாரமும் இருக்கக் கூடாது என்பதற்காக நற்செய்தி கூறி, எச்சரிக்கும் தூதர்களை (அவன் அனுப்பினான்.) அல்லாஹ் மிகைத்தவனாக வும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான்." (அல்குரஆன் 04:165)

அல்லாஹ் எம்மனிதரையும் அவர்களுக்கு தூதுவர்களை அனுப்பாமல் வேதனை செய்யமாட்டான். "ஒரு தூதரை அனுப்பாதவரை நாம் (எவரையும்) தண்டிப்பதில்லை." (அல்குர்ஆன் 17:15)

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அனுப்பப்பட்டு, திரும்ப வானுலகுக்கு உயர்த்தப்பட்ட பின்னர், மக்கள் அனைவரும் வழிகேட்டிலும், அநீதமிழைப்பதிலும், மடமைத்தனத்திலும் மூழ்க ஆரம்பித்தனர். அல்லாஹ்வால் வழங்கப்பட்ட வேதங்கள் கூட மனித கையூடல்களாலும், உட்பூசல்களாலும் திரிபுபடுத்தப்பட்டு, உருக்குலைந்துவிட்டன. தூய ஓரிறைக் கொள்கை சிலை வணக்கத்தினாலும், இணைவைப்பாலும் அலங்கரிக்கப்பட்டன. அல்லாஹ்வின் மீது பொய்கூறுவதற்கும், அவனின் கடவுள் தன்மையில் அத்துமீறுவதற்கும் கூட துணிவுள்ள மனிதர்கள் தோன்ற ஆரம்பித்தார்கள். வேதம் வழங்கப்பட்ட மக்களுக்கும், சிலைவணங்கிகளுக்கும் மத்தியிலும் வணக்க வழிபாடுகளிலும், நடைமுறை வாழ்விலும் எவ்வித வித்தியாசங்களையும் அந்நேரத்தில் காண முடியாமல் போயிற்று. இத்தகைய புகைமண்டலத்திற்கு மத்தியில் ஏகத்துவம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்து, இணைவைப்பும், நாத்திகமும் உருப்பெற ஆரம்பித்தன. அல்லாஹ்வின் வார்த்தைகளில் தமது மனோ இச்சைகளுக்கேற்ப பல மாற்றங்கள் மேற்கொள்ளபட்டமையால் வேதக்காரர்கள் அவற்றைத்

தூக்கி எறிந்துவிட்டனர். அல்லாஹ்வால் தடுக்கப்பட்டவற்றை மிகத் துணிச்சலோடு சர்வ சாதாரணமாக செய்ய ஆரம்பித்தனர். வேதங்களை தத்தமது சுயலாபங்களுத் தகுந்வாறு மாற்றி, அதன் மூலம் வயிற்றுப் பிழைப்பு நடாத்தினர். சீரான வழிகாட்டுதலும், நேர்மையான தலைமைத்துவமும் இல்லாமல் மனிதர்களுக்கு மத்தியில் பல யுத்தங்கள் மூண்டன. பல குழப்பங்கள் தோன்ற ஆரம்பித்தன. மானம், மனிதம் என்ற அம்சங்கள் அடியோடு குழிதேண்டிப் புதைக்கப்பட்டன. உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டு, விரக்தி நிலையும், பயங்கர சூழ்நிலைகளும் தாண்டவமாடின. இத்தருணத்தை ஒரு மனிதன் சிந்தித்தால் அவர்களுக்கு மரண வேளை நெருங்கிவிட்டது, அவர்களின் வாழ்க்கை இத்தோடு முடிந்து விட்டது, இதற்கு மேலும் ஒரு தூதுவர் வந்து இவர்களை நேர்வழியின் பக்கம் அழைப்பது சிந்தனைக்கே எட்டாத அம்சம் என்றே அவனுக்கு சிந்திக்கத் தோன்றும். அந்த அளவுக்கு பல அநாச்சாரங்களும், அட்டூழியங்களும் பெருகி, கொலைகளும், பதவிப் பேராசைகளும், சுய நலன்களும் தலைவிரித்தாடின.

இத்தகையதோர் கொடூரமான சூழ்நிலையில் தான் அல்லாஹ் முஹம்மத் ﷺ அவர்களை தனது இறுதித் தூதராக இவ்வுலகுக்கு அனுப்பினான். *"மாறாக அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களில் முத்திரையாகவும் இருக்கிறார்."* *(அல்குர்ஆன் 33:40)*

இருளிலும், மடமைத்தனத்திலும் சிக்குண்டுக் கிடக்கும் ஒட்டுமொத்த மனித சமூகத்தையும் நேர்வழியின் பக்கம் கொண்டு வருவதற்காக வேண்டி, அவரை ஓர் வழிகாட்டியாகத் தேர்ந்தெடுத்து, அவர் மூலமாக ஓர் பூரண மார்க்கத்தை இவ்வுலக மக்களுக்கு அல்லாஹ் வழங்கினான். *"(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம்."* *(அல்குர்ஆன் 21:107)*

இவர் மூலம் மக்கள் சந்தோசமான ஓர் பாதையில் பயணிப்பதற்காக வேண்டி இவ்வாறு அல்லாஹ் இவ்வாறு செய்தான்.

மிகப்பெரும் நிகழ்வு

"மனித வரலாற்றில் இடம்பெற்ற மிகவும் வளமான நிகழ்வுகளில் முக்கியத்துவம்

ஜார்ஜ் சர்டன்

விரிவுரையாளர்- வாஷிங்டன் மற்றும் ஹாவார்ட் பல்கலைக்கழகம்

இவ்விடயத்திற்காக அவர் மக்களிடம் எவ்வித கூலிகளையோ, உலக இன்பங்களையோ எதிர்பார்க்கவில்லை. அல்லாஹ் கூறுகிறான். "‘இதற்காக உங்களிடம் நான் எந்தக் கூலியும் கேட்கவில்லை. நான் சுயமாக உருவாக்கிக் கூறுபவனல்லன்’ என்று (முஹம்மதே!) கூறுவீராக!" (அல்குர்ஆன் 38:86)

அல்லாஹ் தனது இறுதித் தூதரையும் ஏனைய தூதர்களைப் போன்று மனிதர்களிலிருந்தே தேர்ந்தெடுத்தான். அவர் அல்லாஹ்வின் அடிமையாகவும், தூதுவராகவும் இவ்வுலகில் வாழ்ந்தார். சாதாரண மனிதர்களுக்குள்ள அனைத்து உணர்வுகளும் இவர்களுக்கும் இருந்துள்ளது. பிறருக்கு பசி ஏற்படுவதைப் போன்று இவருக்கும் ஏற்பட்டுள்ளது. காயங்கள் ஏற்பட்டுள்ளன, அவ்வாறே பிறருடன் சேர்ந்து வேலைகளையும் செய்துள்ளார். தான் அல்லாஹ்வின் அடிமை என்று கூறுவதில் பெருமையடைந்திருக்கிறார். அல்லாஹ்வும் தனது அடியானான இவரை கண்ணியப்படுத்தியுமுள்ளான். அல்லாஹ் கூறுகிறான். "அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். அவன் தான் தனது அடியார் மீது, எவ்விதக் கோணலும் இல்லாத நேரான இவ்வேதத்தை அருளினான்" (அல்குர்ஆன் 18:01)

எப்போதும் அல்லாஹ்வின் அடிமையாகவே இருக்க விரும்பிய முஹம்மத் ﷺ அவர்கள் தன்னுடைய விடயத்தில் யாரும் எல்லை மீறிச் செயற்படுவதையோ, அவருக்கு இருக்கும் தகுதிகளை விட, உயர் தகுதிகளை வழங்கி புகழ்வதையோ விரும்பவில்லை. "கிறிஸ்தவர்கள் மர்யமின் மகனை அளவு கடந்து

ஆச்சரியமான செய்தி

"வரலாறு பதிந்ததிலே மிகவும் ஆச்சரியமான செய்தி இஸ்லாத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தான். அது தோன்றுவதற்கு முன் வாழ்ந்த முரட்டுச் சமுதாயத்தினரையும், சீர்கெட்டிருந்த பூமியையும் வெறும் பத்து வருடங்களில் சீரான ஓர் சமூகமாக மக்களையும், தூய பூமியாக அவர்கள் வாழ்ந்த பூமியையும் மாற்றிவிட்டது. இப்பது வருடங்களில் உலகின் அரைவாசிப் பகுதி வரை பரந்து சென்று புகழில் உச்சத்தைத் தொட்ட அரசர்களை கீழிறக்கியும், மக்களை சீர்குலைத்துக் கொண்டிருந்த பல மார்க்கங்களை இல்லாதொழித்தும் தனது ஆளுமையை இப்பூமியில் நிலைநாட்டியது. முழு உலகிற்கும் இஸ்லாம் தான் தேவை என்ற

லோதர்ப் ஸ்டோடார்ட்
அமெரிக்க எழுத்தாளர்

புகழ்வதைப் போன்று, நீங்களும் என்னை அளவு கடந்து புகழ வேண்டாம். நான் அல்லாஹ்வின் அடிமையாக இருக்கிறேன். இவர் அல்லாஹ்வின் அடியாரும், தூதுவருமாவார் என்றே கூறுங்கள்" என்றார்கள். (ஆதாரம்: புஹாரி). நபி ﷺ அவர்களைக் காண்பவர்கள் அனைவரும் அவரின் உயர் குணத்தை உடனே கண்டுகொள்வர். அவரின் நண்பர்களாக இருப்பதற்கு முன்னர் அவருக்கு விரோதியாக இருந்தவர்களும், முஸ்லிம்களாக மாறுவதற்கு முன்னர் காபிர்களாக இருந்தவர்களும் இவரை உண்மையாளர், நம்பிக்கையாளர் என சாட்சி கூறியிருக்கின்றனரே.. அதை விடவும் அல்லாஹ்வே இவரின் குணாதிசயங்களுக்கு சாட்சியாக இருந்துள்ளான், "நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர்." (அல்குர்ஆன் 68:04)

அவரை அல்லாஹ் தனது இறுதித் தூதராகத் தேர்வு செய்ததற்கு இவரின் குணம் ஒன்றே போதும். இவர் மூலமாக தனது மார்க்கம் நிறைவு பெற்றதும்

அகிலத்தாருக்கெல்லாம் அருட்கொடை

"முஹம்மதின் வாழ்க்கையும், அவரின் பலமும், சிந்தனையும், திடகாத்திரமும், மூடநம்பிக்கைகளுக்கெதிரான அவரின் போராட்டமும், ஓரிறைக் கொள்கையின் நாமத்தை இப்பூமியில் நிலைநாட்ட வேண்டுமென்ற அவரின் உறுதி மனப்பான்மையும் தான் தூய இஸ்லாமிய கோட்பாட்டை இவ் உலகில் தலைநிமிர்ந்து வாழ வைத்தது. இவையனைத்தும் அவர் மக்களை ஏமாற்றவில்லை என்பதற்கும், தான் ஓர் போலியான வாழ்வை வாழவில்லை என்பதற்கும் ஆதாரமாகத் திகழ்கின்றன. அவர் ஓர் தத்துவமேதை, பேச்சாளர், தூதர், மக்களுக்கு என்றும் நலவையே நாடுபவர், மனிதநேயத்திற்காக போராடுபவர். எதனாலும் வெற்றிகொள்ள முடியாத ஓர் கோட்பாட்டை உருவாக்கியவர். உலகில் 20 இற்கும் மேற்பட்ட தலைசிறந்த நாடுகளைத் தோற்றுவித்தவர். இவர் உருவாக்கிய உயரிய மனித நேயத்தை வேறு யார் உருவாக்கினார்!!

லமார்டீன்
பிரேஞ்சுக் கவிஞர்

அவரை மரணிக்கச் செய்து, அவர் போதித்த சட்டதிட்டங்களை மறுமை நாள் வரும் வரைக்கும் இவ்வுலகில் தோன்றும் அனைவரும் பின்பற்றும் வகையில் பாதுகாத்துள்ளான்.

மனிதப் புனிதர்

"நிச்சயமாக முஹம்மத் மனித வரலாற்றில் உலக ரீதியான, மார்க்க ரீதியான வாழ்வுகளை ஒரே நேரத்தில் சரி சமனாக வாழ்ந்த ஒரே மனிதராவார்.

மனிதப் புனிதர்
அமெரிக்க எழுத்தாளர்

முஹம்மத் ﷺ அவர்களின் தூதுத்துவத்திற்கான சான்றுகள்

1- நபியவர்கள் மக்களுக்கு அல்லாஹ்வை மாத்திரம் வணங்க வேண்டுமெனவும், அவனைத் தவிர வேறு தெய்வங்களை வணங்கக் கூடாது எனவும் போதித்தார்கள். இப்போதனை முன்னர் தோன்றிய நபிமார்களான மூஸா, ஈஸா ஆகியோர்களின் போதனைகளுக்கு ஒப்பாகவே இருந்துள்ளது. எனவே நபியவர்கள் போதித்த தூய்மையான இறைக்கோட்பாடு, மார்க்க சட்டதிட்டங்கள் அனைத்தையும் ஒருவர், அவருக்கு முன் தோன்றிய நபிமார்களின் போதனைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அனைவரும் ஒரு விடயத்தின் பக்கமே மக்களை அழைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்துவிடும்.

2- நபியவர்கள் முன்னைய நபிமார்களைப் போன்று பல அற்புதங்களை நிகழ்த்திக் காண்பித்திருக்கிறார்கள். அல்லாஹ் நபிமார்களை அவர்களது சமூகத்துக்குத் தனது தூதுவராக அனுப்பும் போது, அச்சமூகம் எந்த விடயத்தில் பிரசித்தி பெற்றிருக்கின்றார்களோ அதை முறியடிக்கக் கூடியதான பல அற்புதங்களைக் கொடுத்து அனுப்புவது வழமை. அப்போது தான் அச்சமூகம் இவர் உண்மையாளர் என நம்பி, இவர் கூறும் போதனைகளை ஏற்றுக்கொள்வார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய கைத்தடி அவர்கள் சமூகத்தில் பிரசித்தம் பெற்றிருந்த சூனியத்தை முறியடித்தது. அச்சமூகத்தில் சூனியத்தின் பல வகைகளையும் கற்றுத் தேர்ந்த பல நிபுணர்கள் இருந்தும் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் அற்புதத்தை அவர்களால் முறியடிக்க முடியாமல் போனது.

அவ்வாறே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய அற்புதமான குருடு, குஷ்டரோகம் போன்ற நோய்களைக் குணப்படுத்தும் அற்புதம்,

அவரை முட்டாள் தான் மறுப்பான்

"பொருள் ரீதியாக முஹம்மத் ஓர் உண்மையான நபியாக இருப்பது உண்மைதான். ஆனால் அவர் மக்களை வெற்றியின் பக்கம் வழிநடாத்திச் சென்ற

ஹான்ஸ் காங்
சுவிஸின் இறையியல் கோட்பாட்டறிஞர்

இறந்தவர்களை அல்லாஹ்வின் நாட்டத்தோடு சில குறிப்பிட்ட காலத்துக்கு உயிர்த்தெழ வைத்தல் போன்ற அற்புதம் அக்கால சமுகத்தில் பிரசித்தம் பெற்றிருந்த வைத்தியத்துறையை முறியடித்தது.

அவ்வாறு தான் முஹம்மத் ﷺ அவர்களுக்கும் அல்லாஹ் பின்வரும் அற்புதங்களை வழங்கினான். அவை சில குறிப்பிட்ட நேரத்திற்கு அல்லது காலத்திற்கே தாக்குப் பிடிக்கக்கூடியனவாய் இருந்தன. தனது விரல்களுக்கு மத்தியிலிருந்து நீர் ஊற்றை வரவைத்து, போர்க்களத்தில் இருந்த அனைத்து ஸஹாபாக்களையும் தமக்குப் போதியளவு நீர்ருந்த வைத்தமை, தனக்கு முன்னால் கொஞ்சமாக இருந்த உணவை அதிகப்படுத்தி, அவருடன் இருந்த அனைத்து முஸ்லிம்களும் சாப்பிடும் அளவுக்கு ஆக்கியமை, நபியவர்கள் வழமையாக பிரசங்கம் செய்யும் மரக்கட்டையை அப்புறப்படுத்தி புது மேடையை உருவாக்கிய போது அம்மரக்கட்டை கவலையால் முனுமுனுத்தமை, மக்காவில் இருக்கும் போது ஒரு மரம் அவருக்கு ஸலாம் சொல்லிப் பணிந்தமை, தனது கையில் இருந்த கட்கள் தஸ்பீஹ் செய்தமை, அல்லாஹ்வின் நாட்டத்தினால் நோயாளிகளைக் குணப்படுத்தியமை என பல அற்பதங்களை நிகழ்த்தியிருக்கின்றார்கள்.

அல்குர்ஆனில் நபியவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களில் ஒன்றாக ஒரே இரவில் மக்காவிலிருந்து பாலஸ்தீனத்தில் இருக்கும் பைத்துல் மக்திஸிற்குச் சென்று, அங்கிருந்து ஏழு வானங்களையும் கடந்து அல்லாஹ்விடம் சென்ற இஸ்ரா-மிஃராஜ் பயணத்தைக் குறிப்பிடுகின்றது. "மஸ்ஜிதுல் ஹராமிலிருந்து, சுற்றுப்புறத்தைப் பாக்கியம் மிக்கதாக நாம் ஆக்கிய மஸ்ஜிதுல் அக்ஸா வரை தனது சான்றுகளைக் காட்டுவதற்காக ஓர் இரவில் தனது அடியாரை (முஹம்மதை) அழைத்துச் சென்றவன் தூயவன். அவன் செவியுறுபவன்; பார்ப்பவன்." (அல்குர்ஆன் 17:01)

சந்திரனை இரண்டாகப் பிரித்துக் காட்டிய அற்புதத்தையும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. "அந்த நேரம் நெருங்கி விட்டது. சந்திரனும் பிளந்து விட்டது" (அல்குர்ஆன் 54:01)

முஷ்ரிக்குகள் நபி ﷺ அவர்களிடம் அவர்

அல்லாஹ்வின் வார்த்தை

"நான் அல்குர்ஆனை பூரணமாக வாசித்து முடித்த பின்னர் படைப்புக்கள் சம்பந்தமாக எழுகின்ற அனைத்து கேள்விகளுக்கும் முழுமையான பதில்களை அதில் கண்டுகொண்டேன். ஏனைய வேதங்களில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகளுக்கு முரணாகவும், மாற்றமாகவும் அல்குர்ஆன் மிகவும் துள்ளியமாகவும், நேர்த்தியாகவும் இவற்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இது உண்மையான தகவல் தானா என சந்தேகங்கள் எழாத வண்ணம் தெள்ளத் தெளிவாக இவை பற்றி விளக்குகின்றது. இது அல்லாஹ்விடமிருந்து வந்த வார்த்தைகள் என்பதில் எவ்வித

டெபோரா பாட்டர்

அமெரிக்க பத்திரிகை

உண்மையான தூதுவராக இருந்தால் சந்திரனை இரண்டாகப் பிளந்து காட்டுமாறு வேண்டினர். அப்படிப் பிரித்துக் காட்டினால் அவர்கள் அனைவரும் விசுவாசம் கொள்வதாகவும் வாக்களித்தனர். அன்று பௌர்ணமி தினமாக இருந்தது. நபியவர்களும் அல்லாஹ்விடம் இவர்களின் கோரிக்கையை நிறைவேற்றி வைக்குமாறு பிரார்த்தித்தார்கள். அந்நேரத்தில் சந்திரன் இரண்டாகப் பிரிந்து ஒரு பகுதி சபா மலைக்கு நேராகவும், மற்றது சபா மலைக்கு அடுத்த பக்கத்திலும் நின்றுகொண்டது. இதை சூனியக்காரச் செயலாக நினைத்து அவர்கள் நபியவர்களை உண்மைப்படுத்தவில்லை. இது காலம் காலமாக நடந்தேறி வரும் இணைவைப்பாளர்களின் நியதியாகும். தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி உண்மையான சான்றுகளை அழித்துவிடப் பார்ப்பார்கள். அல்லது பலவாரான சந்தேகங்களை உண்டுபண்ணி, மக்களை வழிகேட்டில் கொண்டுபோய்ச் சேர்த்திட பல சூழ்ச்சிகளை மேற்கொள்வார்கள். அல்லாஹ் கூறுகிறான், "அவர்கள் சான்றைக் கண்டால் 'இது தொடர்ந்து நடக்கும் சூனியம்' எனக் கூறிப் புறக்கணிக்கின்றனர். பொய்யெனக் கருதி தமது மனோ இச்சைகளைப் பின்பற்றுகின்றனர். ஒவ்வொரு காரியமும் பதிவாகின்றது.." (அல்குர்ஆன் 54:02-03)

3- அல்குர்ஆன்: இதுவே அல்லாஹ்வின் மிகப்பெரும் அற்புதமாகும். இது குறிப்பிட்ட நேரத்திற்கோ, அல்லது காலத்திற்கோ நீடிக்கக்கூடியது அல்ல. உலகம் அழியும் நாள் வரைக்கும் அற்புதமாக தொடர்ந்தும் இருக்கக்கூடியது. இது புத்திக்கான அற்புதமாகும். ஏனெனில் இது இலக்கிய நயம் பொருந்திய ஒரு புத்தகமாகும். இதனை அல்லாஹ் எழுத்தறிவோ, படிப்பறிவோ அற்ற முஹம்மத் ﷺ அவர்களுக்கு வழங்கினான். அக்காலத்தில் வாழ்ந்த தலை சிறந்த இலக்கியவாதிகளுக்கெல்லாம் இது போன்ற ஒன்றைக் கொண்டுவருமாறு சவால் விட்டிருக்கின்றான். ஆனால் யாரும் இது வரையும் அப்படியொன்றை உருவாக்கவே இல்லை. அவ்வாறே இது ஒரு தகவல் களஞ்சியமாகவும் இருக்கின்றது. மனிதன் தோன்றுவதற்கு முன் உள்ள காலகட்டத்தில் இருந்து எதிர்கலாத்தில் நடக்க இருக்கம் அத்தனை அம்சங்களையும்

மிகத் தூரமானது....

"அரேபிய நபிக்கு முன்னர் தோன்றிய நபிமார்களையும், ரஸூல்மார்களையும் கண்ணியப்படுத்தும் இஸ்லாம் மார்க்கத்தைப் போன்று வேறு மார்க்கங்கள் கிடையாது. அவர்கள் அனைவரையும் விசுவாசம் கொண்டு, கண்ணியப்படுத்துமாறு இறை விசுவாசிகளுக்கு இது கட்டாயப்படுத்துகின்றது. அவ்வாறே ஏனைய மார்க்கங்களை கண்ணியப்படுத்தும் தன்மை இஸ்லாத்தில் தவிர வேறு எந்த மார்க்கங்களிலும்

நாஸ்ரி ஸல்ஹறாப்

லெபனான் இலக்கியவாதி

மிகத் துள்ளியமாகக் குறிப்பிடுகின்றது. அவ்வாறே சிறந்த சட்டதிட்டங்களையும், உயர் குணங்களையும், வழிகாட்டுதலையும் உள்ளடக்கிய ஓர் சட்டப்புத்தகமாகவும் இது இருக்கின்றது.

அவ்வாறே இன்றைய விஞ்ஞான அறிவியல் கூட இதை ஓர் அற்புதமாக ஒப்புக்கொள்கின்றது. ஏனெனில் விஞ்ஞான அறிவு அறவே அற்ற காலத்தில் இறக்கப்பட்ட இப்புத்தகம் இவ்வாறு துள்ளியமாக பல தகவல்களை உள்ளடக்கியுள்ளது என்றால் நிச்சயம் இது முஹம்மதின் வார்த்தையாக இருக்க முடியாது. அல்லாஹ்வின் வார்த்தைதான். முஹம்மத் அல்லாஹ்வின் தூதர் தான் என்பதனை நிருபணம் செய்கின்றது. அவ்வாறே தாயின் கருவறையில் குழந்தை உருவாகும் கட்டமைப்புக்கள், இரு கடல்களுக்கு நடுவில் உள்ள திரை போன்ற இன்னோரன்ன அம்சங்களைக் கண்டுபிடித்து குர்ஆன் அல்லாஹ்வின் வேதம் தான் என்பதை நிரூபித்துக்கொண்டே இருக்கின்றது. மேலும் இப்புனித அல்குர்ஆன் 1400 வருடங்களாக எவ்வித மனித கையூடல்களும் இல்லாமல் தூய்மையான முறையில் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றது என்பது இன்னொரு அற்புதமாகும். இதை எத்தனை தடவை தான் வாசித்தாலும், வாசிப்பவனுக்கு சலிப்பே ஏற்படாது. அல்லாஹ் கூறுகிறான்,

தெளிவான வார்த்தை

"அல்குர்ஆன் வசனங்களினூடாக முஹம்மத் கூறிய கருத்துக்கள், இன்றளவும் பலரால் ஆய்வுகளுக்கு உள்ளாகிக் கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு ஆய்விலும் பல அதிசயத்தக்க அம்சங்கள் எமக்குக்

ப்லெச்சர் ரீஜஸ்

பிரேஞ்சு நாட்டைச் சேர்ந்த கீழைத்தேயவாதி

{إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ ﴿٩﴾}[الحجر: 9]

மேலும் அல்லாஹ் அல்குர்ஆன் மூலமாக தூய இறைக்கோட்பாட்டையும் பாதுகாத்து, ஓர் பூரண மார்க்கத்தை மக்களுக்கு வழங்கியுள்ளான். இது மறுமை நாள் வரைக்கும் தொடரும். எனவே முஹம்மத் ﷺ அவ்ரகளுக்கு அல்லாஹ் வழங்கிய அற்புதம், அவருக்கு முன்னர் வந்த நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்களை விடவும் பலம் பொருந்தியது என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம். ஏனெனில் இவ் அற்புதம் சர்வதேசமயமானது. இது விடுக்கும் சவால் அனைத்து மக்களுக்கும் பொதுவானது. மறுமை நாள் வரும் வரை நிரந்தரமானது. ஆனால் அது வரை இதைப் போன்ற ஒன்றை உருவாக்க எவராலும் முடியாது. அல்லாஹ் கூறுகிறான். "இக்குர்ஆன் போன்றதைக் கொண்டு வருவதற்காக மனிதர்களும், ஜின்களும் ஒன்று திரண்டாலும் இது போன்றதைக் கொண்டு வர முடியாது. அவர்களில் ஒருவர் மற்றவருக்கு உதவியாள ராக இருந்தாலும் சரியே' என்று கூறுவீராக" *(அல்குர்ஆன் 17:88)*

4- நபி ﷺ அவர்கள் இவ்வுலகில் நிகழ இருக்கும் சில நிகழ்வுகள் பற்றி முன்னறிவிப்புச் செய்தார்கள். அவைகள் அவர் கூறியவாரே நடந்தன. (ஷாம்



பிரதேசம், ஈராக், கான்ஸ்டன்டிநோபல் போன்ற பிராந்தியங்கள் வெற்றிகொள்ளப்பட்டமை.) அவ்வாறே ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முதல், நூஹ், இப்றாஹிம், மூஸா, ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் போன்ற நபிமார்கள் வரையிலும் தோன்றிய சமுதாயங்கள் பற்றியும், அவர்களின் நிலைகள் பற்றியும், அவர்களுக்கும் நபிமார்களுக்கும் இருந்த தொடர்புகள் பற்றியும் அறிவித்துள்ளார்கள். எதிர்காலத்தில் நடக்க இருக்கும் பல விடயங்களைப் பற்றியும் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். அவற்றில் சில தற்போது நடந்து முடிந்துவிட்டன. பாரிஸியர்கள் ரோம் பிரதேசத்தை வெற்றி கொண்ட போது, பல வருடங்கள் கழித்து ரோம் பாரஸீகத்தை வெற்றிகொள்ளும் எனக்கூறியது உண்மையில் நடந்தேறியது. அல்லாஹ் கூறுகிறான். "ரோமப் பேரரசு அருகில் உள்ள பூமியில் வெற்றி கொள்ளப்பட்டு விட்டது. அவர்கள் தோல்விக்குப் பிறகு சில வருடங்களில் அல்லாஹ்வின் உதவியால் வெற்றி பெறுவார்கள். முன்னரும், பின்னரும் அதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது. நம்பிக்கை கொண்டோர் அந்நாளில் மகிழ்ச்சியடைவார்கள். தான் நாடியோருக்கு அவன் உதவி செய்கிறான். அவன் மிகைத்தவன்; நிகரற்ற அன்புடையோன். (இது) அல்லாஹ்வின் வாக்குறுதி. அல்லாஹ் தனது வாக்குறுதியை மீற மாட்டான். எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள். இவ்வுலக வாழ்க்கையில் வெளிப்படையாகத் தெரிபவற்றை அவர்கள் அறிவார்கள். அவர்கள் மறுமையைப் பற்றி கவனமற்றுள்ளனர்." (அல்குர்ஆன் 30:01-07)

அல்லாஹ் அறிவித்தது போலவே அது நடந்தேறியது.

5- நபி ﷺ அவர்களுக்கு முன்னர் அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களும் இவரைப் பற்றி தங்கள் சமுகத்தாரிடம் முன்னறிவிப்புச் செய்துள்ளனர். இவரின் வருகையைப் பற்றியும், இவரின் ஊர், அங்கு மக்களிடம் இவருக்கு இருக்கும் கௌரவம், அனைத்து சமுதாயத்தினரும், அரசர்மார்களும் இவருக்குக் கட்டுப்படுவது பற்றியும் தங்கள் சமுகத்தாருக்குத் தெரிவித்துள்ளனர்.

அல்குர்ஆனும், நவீன அறிவியலும்

"அல்குர்ஆனைப் பற்றிய எவ்வித முன்னறிவோ, தகவல்களோ இன்றி அவற்றில் உள்ள அறிவயல் கூற்றுக்கள் சம்பந்தமாக ஆய்வொன்றை மேற்கொண்டேன். அப்போது எவ்வித விமர்சனங்களுக்கும் உட்பட முடியாது, நவீன அறிவியலுடன் ஒத்துப் போகின்ற பல தகவல்களை

மொரீஸ் பியூகாயல்

பிரேஞ்சு வைத்தியர்

6- இவரே இறுதி நபியாவார். இவருக்குப் பின்னர் எந்த நபியும் வரமாட்டார்கள். அப்படி இவர் இறுதி நபியாக இருக்காவிட்டால் இவருக்கு முன்னர் தோன்றிய நபிமார்கள் தங்கள் சமூகத்தாரிடம் கூறிய அனைத்தும் பொய்த்துவிடும்.

7- முஹம்மத் ﷺ அவர்கள் பற்றி அல்லாஹ்வால் இறக்கப்பட்ட தவ்ராத், இன்ஜீல் போன்ற வேதங்களில் கூறப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக இவ்வேதங்களைக் கற்றுத் தேர்ந்த புஹைரா ராஹிப், வரகத் பின் நவ்பல், ஸல்மான் அல்பாரிஸி, அப்துல்லாஹ் இப்னு ஸலாம், ஸைத் இப்னு ஸஃனா போன்றோர் இருந்துள்ளனர்.

8- தன்னுடன் போராடியவர்களை ஜெயித்ததும் அல்லாஹ்வின் அத்தாட்சிகளில் ஒன்றாகும். சாதாரணமான ஒரு மனிதர் அவர் அல்லாஹ்வினால் அனுப்பப்பட்ட தூதர் என பொய்யாக வாதாடிக்கொண்டு, தனது எதிரிகளை ஜெயித்து, இஸ்லாத்தை இப்பூமியில் பரவச்செய்து, தன்னைப் பின்பற்றுவென ஒரு சாம்ராஜ்யத்தையே உருவாக்குவது என்பது நடந்தேற முடியாத ஒரு விடயமாகும். இது அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட உண்மையான தூதுவரால் மாத்திரமே முடியும்.

9- நபி ﷺ அவர்கள் தனது வழிபாட்டிலும், பத்தினித்தனத்திலும், உண்மையிலும் புகழப்படுபவராக இருப்பதும், தனது வாழ்வையே நற்குணங்களின் களஞ்சியமாக மாற்றியமைத்துக்கொண்டமையும் இவர் அல்லாஹ்வின் தூதுவர் என்பதனை பறைசாற்றுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர்." (அல்குர்ஆன் 68:04)

பூரண நற்குணங்கள் ஒரு நபியிடம் மாத்திரமே முழுமையாக இருக்க முடியும்.

10- தொடர் அறுபடாமல் சங்கிலித் தொடராக முஹம்மத் ﷺ அவர்களின் நபித்துவமும், அவர் நிகழ்த்திய அற்புதங்களும் எம்மை வந்தடைந்துள்ளன. சங்கிலித் தொடரான அறிவிப்பானது, வரலாற்றில் எவ்வித உட்பூசல்களும் நுழைந்திடாமல் பாதுகாக்கின்றது. ஒருவர் முன் சென்ற நபிமார்களின் வாழ்வைப் படிக்கின்றபோது அது சரியான தகவலா என உறுதிப்படுத்த அறிவிப்புக்கள் தொடரைத்தான் பார்ப்பார். அந்த வகையில் முஹம்மத் ﷺ அவர்களின் வரலாற்றையும் இதே அடிப்படையில் தான் அணுக வேண்டும். மூஸா, ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வரலாறு நம்மை எப்படி வந்தடைந்தது என ஒருவர் ஆராய முற்பட்டால் அது சங்கிலித்

நிச்சயமாக இது அல்லாஹ்வின் வார்த்தை தான்

"முஹம்மதுடைய நபித்துவத்தில் ஒருபோதும் நான் சந்தேகம் கொண்டதில்லை. அவர் தான் இறுதித் தூதர். மனித இனம் அனைத்துக்கும் பொதுவாக அனுப்பப்பட்டவர். தவ்ராத், இன்ஜீல் முதலிய வேதங்களில் கூறப்பட்ட செய்திகளை திரிபுகளிலிருந்து தூய்மைப்படுத்த வந்தவர். அதற்கு உதாரணம் தான் இப்புனித அல்குர்ஆன். இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் குரோதம் கொண்ட ஐரோப்பிய அறிஞர் பாஸ்கல் என்பவரின் ஒரு கருத்தைத் தவிர மற்ற அனைத்துக் கருத்துக்களையும் நான் மறுக்கின்றேன். அது தான், 'அல்குர்ஆனை முஹம்மத்

ஃபென்ஸாய் மோன்தா

பிரேஞ்சு சிந்தனையாளர், மற்றும் சுற்றுப்பிரயாணி

தொடரான அறிவிப்பின் மூலமே நம்மை வந்தடைந்துள்ளது என உறுதியாகவே அறிந்துகொள்வார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக வந்த நபிமார்களின் வரலாறுகளே இம்முறையில் பாதுகாப்பக இருக்கிறதென்றால் அவர்களை விடவும் நமக்கு மிக அணமைக் காலத்தில் வந்த முஹம்மத் ﷺ அவர்களின் நபித்துவச் செய்தி மிக மிக நம்பிக்கை மிக்கதாகவும், அதிக பாதுகாப்புடனும் இருக்கின்றது. அவ்வாறே அவருக்கு அருளப்பட்ட அற்புதங்களும் நம்பகத்தன்மை வாய்ந்தது. அவருக்கு வழங்கப்பட்ட பெரும் அற்புதமான அல்குர்ஆன் கூட தொடர் அறுபடாத சங்கிலித் தொடரைக் கொண்ட அறிவிப்புக்களினால் தான் நம்மை பாதுகாப்பாக எவ்வித மாற்றமுமில்லாமல் வந்துள்ளது.



11- நபியவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாமல் இருந்தது இன்னொரு அற்புதமாகும். ஏனெனில் இத்தகைய மனிதர் இவ்வளவு பிரம்மாண்டமான விடயங்களையெல்லாம் கூறுகிறாரா? நிச்சயம் இவர் கூறும் கூற்றுக்கள் அல்லாஹ்வினுடையதாகத் தான் இருக்க முடியும் என மக்கள் ஏற்றுகொள்ள இந்த பண்பு நபியவர்களுக்கு மிகவும் உதவியது. அவர் எழுதி, வாசிக்கும் ஆற்றலைப் பெற்றிருந்தால், தனது சிந்தனையில் உதிப்பவற்றையே இவ்வாறு குர்ஆன் எனக் கூறுகிறார் என மக்கள் அவரை ஏற்க மறுத்திருப்பார்கள். அல்லாஹ் கூறுகிறான், "இவ்வாறே உமக்கு இவ்வேதத்தை அருளினோம். நாம் யாருக்கு வேதத்தை வழங்கினோமோ அவர்கள் இதை நம்பு கின்றனர். (வேதம் கொடுக்கப்படாத) இவர்க ளிலும் இதை நம்புவோர் உள்ளனர். (நம்மை) மறுப்போரைத் தவிர வேறு எவரும் நமது வசனங்களை நிராகரிப்பதில்லை."

(முஹம்மதே!) இதற்கு முன் எந்த வேதத்திலிருந்தும் நீர் வாசிப்பவராக இருந்தில்லை. (இனியும்) உமது வலது கையால் அதை எழுதவும் மாட்டீர்! அவ்வாறு இருந்திருந்தால் வீணர்கள் சந்தேகம் கொண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 29:47-48)

அவ்வாறே நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த அனைத்தும் அல்லாஹ்வினுடையது என பின்வரும் வசனம் தெளிவுபடுத்துகின்றது. "அவனே எழுதப்படிக்காத சமுதாயத்தில் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பினான். அவர்களுக்கு அவர் அவனது வசனங்களைக் கூறுகிறார். அவர்களைப்

அல்லாஹ்வின் நியதி

"பழைய டயக்லீஷன் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் பல பிரதேசங்கள் சீர்குழைந்துகொண்டு இருந்த காலகட்டத்தில் பாலைவனத்தின் நடுவிலிருந்து ஓர் எழுச்சி தோன்றியது. அது அப் பேரரசை வலுவிழக்கச்செய்து, மேற்கத்தேயத்தில் புதிதாக உருவெடுத்து வந்த பல ராஜ்ஜியங்களை ஆட்டம் காணச்செய்தது. இதன் பலம் கண்ணெதிரே அதிகரித்துக்கொண்டு செல்வதற்கு அல்லாஹ்வின் கிருபையும், அவனின் கண்காணிப்புமே காரணமாக இருந்தது எனக் கூறலாம். இது பெரும் பலம் பொருந்திய ஓர் சாம்ராஜ்யமாக மாறி, சிரியா, எகிப்து, சசானித் பேரரசு போன்றவற்றை தன் வசப்படுத்தியது. அவ்வாறே கான்ஸ்டன்டைன்

ஆல்டோ மியலி

பிரேஞ்சு நாட்டைச் சேர்ந்த கீழைத்தேயவாதி



பரிசுத்தப்படுத்துகிறார். அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். அவர்கள் இதற்கு முன் தெளிவான வழி கேட்டில் இருந்தனர்."
(அல்குர்ஆன் 62:02)

நபியவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை மக்களுக்கு கற்றுக்கொடுக்கும் போது வாய்மொழியாகவே கற்றுக்கொடுத்தார்கள். ஆனால் அவருக்கு முன்னர் தோன்றிய நபிமார்கள் தங்கள் சமூகத்தினருக்கு எழுதிக் காண்பித்தே கற்றுக்கொடுத்தனர். எழுத, வாசிக்கத் தெரிந்த நபிமார்கள் தங்களது சமூகத்தினரை எவ்வாறு அல்லாஹ்வின் போதனைகளைக் கற்றுக்கொடுத்து நல்வழியின் பக்கம் அழைத்தார்களோ, அதை விடவும் மேலாக எழுத, வாசிக்கத் தெரியாத முஹம்மத் ﷺ அவர்கள் தனது சமுதாயத்தை கல்வியிலும், வணக்க வழிபாடுகளிலும் உயர்த்தியுள்ளார்கள். இதுவே முஹம்மத் ﷺ அவர்களுக்கும் ஏனைய நபிமார்களுக்குமுள்ள வித்தியாசமாகும். எழுத, வாசிக்கத் தெரியாமலே இவ்வளவு பெரிய சாதனை நிகழ்த்தியுள்ளார்கள் என்றால் இது அவருக்கு அல்லாஹ் வழங்கிய அற்புதங்களில் ஒன்று தானே...

நபித்துவத்தின் பண்புகள்

"நான் முஹம்மதை விரும்புகிறேன். அவரின் கருத்துக்களும், கூற்றுக்களும் மிகவும் கம்பீரம் வாய்ந்தது. இவர் தன்னைப் பற்றி சிந்திக்காமல் தனது சமூகத்தைப் பற்றியே தினமும் சிந்திப்பார். இவருக்கு பெருமை என்பது கிடையாது. எப்போதும் பணிவாகவே இருப்பார். ரோமப் பேரரசுக்கும், பாரசீகப் பேரரசுக்கும் இம்மை, மறுமை சம்பந்தப்பட்ட வாழ்வின் பக்கம் வருமாறு கம்பீரமாய் அழைப்பு விடுத்தார். அவர் நேற்று நடந்தவற்றை சிந்தித்து, இன்றைய செயற்பாடுகள்

தாமஸ் கார்லைல்

ஸ்கொட்லாந்தின் வரலாற்றாசிரியர், மற்றும் எழுத்தாளர்

இறுதி நபித்துவம்

ஒவ்வொரு காலகட்டத்திற்கும் பொருந்தும் வகையில் இவ்வுலகில் தனது தூதுத்துவத்தை பொதுவானதாக ஆக்குவதற்கு அல்லாஹ் நாடி, அதற்கு முஹம்மத் ﷺ அவர்களை சரியான தேர்வாக தேர்வு செய்தான். *"(முஹம்மதே!) நற்செய்தி கூறுபவராக வும், எச்சரிக்கை செய்பவராகவும் மனிதர்கள் அனைவருக்குமே உம்மை அனுப்பியுள்ளோம். எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்" (அல்குர்ஆன் 34:28)*

இறுதித் தூதுத்துவமாக இது இருப்பதனால் மனித கையூடல்கள், திரிபுபடுத்தல் போன்றவற்றிலிருந்து இவற்றை அல்லாஹ் பாதுகாத்தான். அவ்வாறே தனது இறுதித் தூதுத்துவத்தை எத்திவைக்க வந்த நபி ﷺ அவர்களையும் தனது தூதர்களில் இறுதியானவராகவும் ஆக்கினான். அவருக்குப் பின்னர் எந்த நபியும் இவ்வுலகில் தோன்றமாட்டார்கள். ஏனெனில் பூரணமாகவும், அனைத்துக் காலகட்டத்திற்கும் பொருந்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் இத் தூதுத்துவத்தை மீண்டும் புதிதாகக் கூறவோ, புதிய சட்டங்களை அமுல்படுத்தவோ எவ்விதத் தேவையும் அல்லாஹ்வுக்குக் கிடையாது.

ஒரே மார்க்கம்

"நபிமார்களின் போதனைகள் அனைத்தும் ஒன்றாகவே இருந்துள்ளது. ஆதம் முதல் முஹம்மத் வரை அனைவரும் தமது அழைப்புப் பணியில் ஒரே போக்கையே பேணிவந்தனர். அவ்வாறே இறைக் கொள்கையைப் போதிக்க ஸபூர், தவ்ராத், குர்ஆன் என மூன்று வேதங்கள் இறக்கப்பட்டன. இவை அனைத்தும் ஒரே அம்சத்தையே மக்களுக்குக் கூறுகின்றன. ஆனால் அல்குர்ஆனைப் பொருத்தவரையில் அதுவே இறுதியாக இறங்கிய வேதம். இதற்குப் பிறகு

ஹென்றி டி க்வாம்

பிரேஞ்சு இராணுவத்தின் முன்னால் கர்னர்

வானுலக வேதங்களில் இறுதியானது

"ஒரு காலத்தில் தவ்ராத் வேதம் மக்களுக்கு நேர்வழியைக் காட்டிக்கொண்டிருந்தது. அதன் பின் இன்ஜீல் வேதம் அருளப்படவே மக்கள் அனைவரும் அதைப் பின்பற்றத் தொடங்கினர். அதன் பின்னர் அல்குர்ஆன் இறக்கப்பட்டது. அது முன்னர் இறக்கப்பட்ட வேதங்களை விட தெளிவான, விரிவான பல கோட்பாடுகளை முன்வைத்தது. மேலும் முன்னைய வேதங்களில் திரிபுபடுத்தப்பட்ட அம்சங்களையும் மாற்றியமைக்கும் முகமாக இதன் போதனைகள் இருந்தன. இது அனைத்து சட்டதிட்டங்களையும், போதனைகளையும் உள்ளடக்கும் வேதமாகும்.

வாஷிங்டன் இர்விங்

அமெரிக்காவைச் சேர்ந்த கீழைத்தேயவாதி

எனவே தான் அல்குர்ஆனுக்கு முன்னர் இவ்வுலகில் தான் இறக்கிய அனைத்து வேதங்களை விடவும் இதனை மேலானதாக ஆக்கி, அவ்வேதங்களைத் தடைசெய்தான். முன்னர் கடமையாக்கப்பட்ட மார்க்கச் சட்டங்களை ரத்து செய்து விட்டு, இறுதியாக முஹம்மத் ﷺ அவர்களுக்கு வழங்கிய மார்க்கச் சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வந்தான். இவ்வேதத்தை பாதுகாக்கும் பொறுப்பையும் தானே ஏற்றுக்கொண்டான். அந்த வகையில் சங்கிலித் தொடர் வரிசையில் சப்தமாகவும், எழுத்துருவிலும் நம்மை வந்தடைந்திருக்கும் இவ் அல்குர்ஆன் முற்றிலும் பாதுகாப்பானது. இதே தொடரில் வந்த இஸ்லாமிய வணக்க வழிபாடுகள், கொள்கை கோட்பாடுகள், சட்டதிட்டங்கள் போன்ற அனைத்தும் முற்றிலும் பாதுகாப்பானதாகும்.

இஸ்லாமிய வரலாறுகளைப் புரட்டிப் பார்க்கும் ஒருவர் அவற்றுக்கான ஸஹாபாக்களின் பாரிய பங்களிப்புகளைக் கண்டுகொள்ள முடியும். நபியவர்களின் வணக்க வழிபாடுகள், இறைவனுடனான அவரின் தொடர்புகள், பாவமன்னிப்ப கேட்கும் முறை,

போராட்டம், கௌரவம், வீரம், தன்னுடன் சேர்ந்திருந்தோருடன் ஏற்படுத்திக் கொண்ட உறவுமுறைகள், அவரின் கவலைகள், சந்தோசங்கள், அவர் மேற்கொண்ட பிரயாணங்கள், தங்கிய இடங்கள், அவர் சாப்பிடும், நீர் அருந்தும் முறைகள், ஆடை அணியும் முறைகள், தூங்கி, எந்திரிக்கும் முறைகள் என அவரின் ஒவ்வொரு அசைவுகளையும் பதிந்து வைதுள்ளார்கள்.

எனவே இம் மார்க்கமானது அல்லாஹ்வின் நாட்டப்படி மிகவும் துள்ளியமான முறையில் பாதுகாப்பாக இருப்பதனை அவரால் உணர்ந்துகொள்ள முடியும்.

முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறுதித் தூதர் என்பதனை நீங்கள் விளங்கியிருப்பீர்கள். அல்லாஹ் இதனை மேலும் உறுதிப்படுத்துகிறான். "முஹம்மத் உங்களின் ஆண்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. மாறாக அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களில் முத்திரையாகவும் இருக்கிறார். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவனாக இருக்கிறான்." (அல்குர்ஆன் 33:40)

மனித குலத்திற்கான ஆசிரியர்

"நான் முஹம்மதின் வரலாற்றைப் படித்தேன். அதில் அவரின் ஆழுமை பற்றி தெளிவாக அறிந்துகொண்டேன். மக்கள் அவரின் நபித்துவத்தை விசுவாசம் கொண்டு, அவர் போதிக்கும் அனைத்து அம்சங்களையும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அவ்வாறே அவரின் செயற்பாடுகள் அவர் போதித்த மார்க்கத்தின் அடிப்படையாக இருக்கின்றன. அவர் முஸ்லிம் சமூகத்திற்கு மாத்திரம் தனது போதனைகளை குறிப்பாக ஆக்கவில்லை. இதை உலகலாவிய

அர்னால்ட் டொய்ன்பீ

பிரித்தானிய வரலாற்றாசிரியர்

இறுதி நபி

"ஒரே இறைவனான அல்லாஹ் தேர்ந்தெடுத்த முஹம்மத் என்பவரிடமிருந்து நிறைய அனுபவங்களை நான் கண்டுகொண்டேன். அல்லாஹ் இவரின் மூலமாக தனது

டால்ஸ்டாய்

ரஷ்ய இலக்கியவாதி



அல்லாஹ்வை வணங்குங்கள்.

"முஹம்மத் இறுதி நபியாக இருந்தார். அவர் மக்களை அல்லாஹ்வை வணங்குவதன் பக்கம் அழைக்கும் ஓர் மகத்தான அழைப்பாளராகவும்

வாஷிங்டன் இர்விங்

அமெரிக்காவைச் சேர்ந்த கீழைத்தேயவாதி

உலக மக்கள் அனைவருக்குமான அருட்கொடை

அல்லாஹ் முஹம்மத் ﷺ அவர்களை உலக மக்கள் அனைவருக்கும் ஓர் அருட்கொடையாக அனுப்பினான். அவர்களில் காணப்படும் பெரியோர்கள், சிறியோர்கள், ஆண்கள், பெண்கள், அவரைக் கொண்டு ஈமான் கொள்ளாத மக்கள் என அனைத்துத் தரப்பினருக்கும் பொதுவான ஓர் அருட்கொடையாகவே அனுப்பியுள்ளான். இது நபியவர்களின் வாழ்வில் அதிகமாகக் காண்லாம். மக்கள் வழிகேட்டில் போய் அல்லாஹ்வின் தண்டனைகளைப் பெறக்கூடாது என்பதில் மிகத் தெளிவாக இருந்தார்கள். அம்மக்களை நேர்வழியின் பக்கம் அழைக்கும் போதெல்லாம் பொய்ப்பித்தல்கள், கொலை அச்சுறுத்தல்கள் போன்றவற்றை சந்தித்த போதிலும் கூட அவர் மனம் தளராமல் மக்களுக்காகவே போராடினார்கள். அல்லாஹ் கூறுகிறான். "(முஹம்மதே!) உம்மைப் பிடித்து வைத்துக் கொள்ளவோ, உம்மைக் கொலை செய்யவோ, உம்மை வெளியேற்றவோ (ஏக இறைவனை) மறுப்போர் சூழ்ச்சி செய்ததை எண்ணிப் பார்ப்பீராக! அவர்களும் சூழ்ச்சி செய்கின்றனர். அல்லாஹ்வும் சூழ்ச்சி செய்கிறான் சூழ்ச்சி செய்வோரில் அல்லாஹ் சிறந்தவன்." *(அல்குர்ஆன் 08:30)*

இத்தகைய இன்னல்கள் அச்சமூகத்தின் மீதான அக்கறையை மென்மேலும் அதிகரிக்கச் செய்தது. அல்லாஹ் கூறுகிறான், "உங்களிடம் உங்களைச் சேர்ந்த தூதர் (முஹம்மத்) வந்து விட்டார். நீங்கள் சிரமப்படுவது அவருக்குப் பாரமாக இருக்கும். உங்கள் மீது அதிக அக்கறை உள்ளவர். நம்பிக்கை கொண்டோரிடம் பேரன்பும், இரக்கமும் உடையவர்." *(அல்குர்ஆன் 09:128)*

இஸ்லாமிய சர்வதேசம்

"முஹம்மதுக்கு அல்லாஹ் இறக்கிய அல்குர்ஆனில் சர்வதேச இஸ்லாம் பற்றிக் குறிப்பிடும் வசனங்கள், உலக மக்களுக்கான பொதுவான அழைப்பாகவே இருக்கின்றது. நபியவர்கள் உலகத்தார் அனைவருக்கும் அனுப்பப்பட்ட தூதர் தான் என்பதற்கு இவை ஆதாரமாகத் திகழ்கின்றன. இது அறபு மொழி பேசும் மக்களுக்கு மாத்திரம் உரிய மார்க்கம் கிடையாது. அனைத்து மொழி பேசும் மக்களுக்கும்

லோரா வீஜியா வெக்லரி
இத்தாலியைச் சேர்ந்த கீழைத்தேயவாதி

தாம் இறைநிராகரிப்பாளர்களினால் துன்புறுத்தப்பட்டு அவதியுறும் சந்தர்ப்பத்தில் ஒரு மலக்கு அவரிடம் வந்து, இவ்விரு மலைகளையும் பெயர்த்து உங்களை கொடுமைப்படுத்திய இவ்வூராரை அழித்துவிட்டுமா? எனக் கேட்டபோது, வேண்டாம், பொறுமையாக இருங்கள். அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழிகாட்ட வாய்ப்புள்ளது என்றே அவர்களிடமிருந்து பதில் வந்தது. அவ்வாறே மக்கா வெற்றிக்கொள்ளப்பட்ட போது தனக்கும், முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்த அனைவரையும் மன்னித்தார்கள். இதனால் தான் அல்லாஹ் கூறுகிறான், "(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம்." (அல்குர்ஆன் 21:107)

எனவே நபி ﷺ அவர்கள் நிற, மத, மொழி, கொள்கை, கோத்திர வேறுபாடுகளையும் கடந்து அனைத்து மனிதர்களுக்கும் அருட்கொடையாகவே இருந்துள்ளார்.

அவ்வாறே மனிதர்கள் தவிர்ந்த உயிரினங்கள், சடப்பொருட்கள் போன்றவற்றையும் அது விட்டுவைக்க வில்லை. ஒரு அன்ஸாரித் தோழர் தனது ஒட்டகத்திற்கு கடுமையாக அடித்துவிட்டு, அதற்கு சாப்பாடு கொடுக்காமல், பசியுடன் வைத்தார். இதனை அறிந்த நபியவர்கள் அதற்கு சாப்பாடு கொடுக்குமாறும், அதனுடன் நல்லமுறையில் நடந்துகொள்ளுமாறும் அவருக்குக் கூறினார்கள். இன்னொரு மனிதர் புறாவின் குஞ்சுகளை கூட்டிலிருந்து எடுத்துச் செல்வதைக் கண்ட

போது, அக்குஞ்சுகளை அதன் தாயுடன் சேர்த்துவிடுமாறு கூறினார்கள். மேலும் "நீங்கள் அறுப்புப் பிராணியை அறுக்கும் போது கத்திகளை நன்றாக கூர்மையாக்கிக் கொள்ளுங்கள்" எனவும் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: முஸ்லிம்)

நபி ﷺ அவர்களின் இரக்க மனப்பான்மை என்பது சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும், எதேச்சையான சந்தர்ப்பங்களிலும் ஏற்பட்டவை அல்ல. அவற்றை அவர்கள் தமது சமூகத்தின் மீதும் கடமையாக்கியிருக்கிறார்கள். மக்களுடன் இரக்கமாகவும், மிருதுவாகவும் நடந்துகொள்ளுமாறு ஆர்வமூட்டியிருக்கிறார்கள். அவர்களுடன் கல்நெஞ்சத்துடன் நடந்துகொள்வது எச்சரித்துள்ளார்கள். "இறைவா! என் சமுதாயத்தாரின் விவகாரங்களில் ஒன்றுக்குப் பொறுப்பேற்றுக்கொண்ட ஒருவர், அவர்களைச் சிரமத்திற்குள்ளாக்கினால், அவரை நீயும் சிரமத்திற்குள்ளாக்குவாயாக! என் சமுதாயத்தாரின் விவகாரங்களில் ஒன்றுக்குப் பொறுப்பேற்றுக்கொண்ட ஒருவர், அவர்களிடம் மென்மையாக நடந்து கொண்டால், நீயும் அவரிடம் மென்மையாக நடந்து கொள்வாயாக!" (ஆதாரம்:முஸ்லிம்) எனவே இரக்கம் என்பது அவரின் அடிப்படைக் குணங்களில் ஒன்றாக இருந்துள்ளது. இஸ்லாமிய மார்க்கம் அனைவரிடத்திலும் இரக்கம் காட்டும் மார்க்கமாகும்.

நன்கொடையாக அளிக்கப்பட்ட அருள்

"வரலாற்று ரீதியாக முஹம்மதின் வாழ்வை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அழகாகக் கூறவில்லை. 'அகிலத்தாருக்கெல்லாம் அருட்கொடையாக நாம் உன்னை அனுப்பியுள்ளோம்' என அவன் கூறுகிறான். ஓர் அநாதை அனைத்து பலகீனமானவர் மீதும் கிருபையுள்ளவராய் இருந்தார். தேவையுள்ள மக்கள், அநாதைகள், வழிப்போக்கர்கள், கஷ்டத்திற்கு ஆலானவர்கள், ஏழைகள் என அனைவருடனும்

ஜீன் லீக்

ஸ்பானிஷைச் சேர்ந்த கீழைத்தேயவாதி

நபி ﷺ அவர்களின் வருகையால் மனிதகுளத்தின் மகிழ்ச்சி,

மக்களை இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு சென்றார்

"முஹம்மத் படைப்பினங்களை தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த, மகழ்ச்சிகரமான நிலைக்கு விரைவாக உயர்த்தினார். இதற்கு முன் அவர்கள் வழிகேட்டிலும், நிம்மதியற்ற நிலையிலும் இருந்தனர். அவர்களின் வாழ்வை

க்வில்லியம்

ஆங்கில சிந்தனையாளர்.

நபி ﷺ அவர்களின் வருகையால் அல்லாஹ் மனித இனத்தை நேரான பாதையில் செலுத்த ஆரம்பித்தான். நபியவர்கள் கொண்டு வந்த வழிகாட்டுதல்கள் சிறப்பு வாய்ந்தவையாக இருந்தன. மனிதர்களுக்கான பிரயோசனமான கல்வியையும், சிறந்த செயற்பாடுகளையும், நல்ல குணாதிசயங்களும், நேரான வழிமுறைகளையும் கற்றுக்கொடுத்தார்கள். ஏனைய சமூகத்தவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவு, செயற்பாடுகள் என்பவற்றோடு இவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் பாரிய ஏற்றத்தாழ்வுகளைக் காணமுடியும். அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவனே எங்கள் இறைவன். எங்களைப் பொருந்திக்கொள்பவனும் அவனே..

இஸ்லாமிய கொள்கையைப் பொருத்தமட்டில் மக்கள் இணைவைப்பிலும், இறைநிராகரிப்பிலும், சிலைவணக்கங்களிலும் மூழ்கியிருந்த போது அவர்களை தூய்மையான ஓரிறைக் கொள்கையால் நல்வழிப்படுத்தினார்கள். இணையற்ற இறைவனை வணங்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். ஏனைய நபிமார்களைப் போலவே மனிதர்களை வணங்கிக்கொண்டிருந்தோரை மனிதர்களைப் படைத்த இறைவனை வணங்குமாறு பணித்தார்கள். இணைவைப்பு, அல்லாஹ் அல்லாதவருக்கு அஞ்சி, அவர்களுக்கு தங்கள் வணக்கங்களைச் செலுத்துதல் போன்ற விடயங்களை விட்டும் அவர்களைத் தூய்மைப்படுத்தினார்கள். "'என்னைத் தவிர வணக்கத்திற் குரியவன் வேறு யாருமில்லை; எனவே என்னையே வணங்குங்கள்!' என்பதை அறிவிக்காமல் உமக்கு முன் எந்தத் தூதரையும் நாம் அனுப்பியதில்லை." (அல்குர்ஆன் 21:25)

மேலும், "உங்கள் வணக்கத்திற்குரியவன் ஒரே ஒரு இறைவனே. அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. (அவன்) அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன்." (அல்குர்ஆன் 02:163)

சமூகவியலைப் பொருத்தமட்டில் அநியாயங்களும், அட்டூழியங்களும் மக்கள் மத்தியில் நிலவி, அவர்களுக்கு மத்தியில் சாதி வேற்றுமைகளும், கோத்திர வேற்றுமைகளும் உருவாகி, ஒருவர் மற்றவரை ஒதுக்கித் தள்ளும் நிலை உண்டானது. இவற்றையெல்லாம் அடியோடு ஒழித்துவிட்டு, அவர்களுக்கு மத்தியில் சமத்துவத்தை ஏற்படுத்தினார்கள். அறபி, அறபியல்லாதவன், வெள்ளையன், கறுப்பன் என்ற பாகுபாடுகளையும் தாண்டி யாரும் யாரை விடவும் உயர்ந்தவன் கிடையாது. அல்லாஹ்வைப் பயந்து, நற்செயல் புரிவோருக்குத் தான் சிறப்பும, உயர்வும் இருக்கின்றது என்று கூறி, மக்களை ஒருநிலைப்படுத்தினார்கள். அல்லாஹ் கூறுகிறான், "உங்களில் (இறைவனை) அதிகம் அஞ்சுவோரே அல்லாஹ்விடம் அதிகம் சிறந்தவர். அல்லாஹ் அறிந்தவன்; நன்கறிபவன்." (அல்குர்ஆன் 49:13)

மக்களுக்கு மத்தியில் நீதத்தை நிலைநாட்டுமாறும், அவர்களுக்கு நல்லவற்றையே செய்யுமாறும், சமூக நலனில் அக்கறை கொள்ளுமாறும் அவர்களுக்கு ஏவி, அநியாயம், பகைமை, குரோதம் போன்றவற்றிலிருந்து அவர்களைத் தடுத்தார்கள். அல்லாஹ் கூறுகிறான், "நீதி, நன்மை, மற்றும் உறவினருக்குக் கொடுப்பதை அல்லாஹ் கட்டளையிடுகிறான். வெட்கக்கேடானவை, தீமை, மற்றும் வரம்பு மீறுவதை உங்களுக்குத் தடுக்கிறான். நீங்கள் நல்லுணர்வு பெறுவதற்காக உங்களுக்கு அறிவுரை கூறுகிறான்." (அல்குர்ஆன் 16:90)

நபியவர்கள் மனிதர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை செலுத்தியுள்ளார்கள். பிறரை இழிவாகப் பார்ப்பது முதல் கொலைகுற்றங்கள் செய்யும் வரையுள்ள அனைத்தையும் தடுத்துள்ளார்கள். "நம்பிக்கை கொண்டோரே! ஒரு சமுதாயம்

உலக மக்களுக்கான மார்க்கம்

"'அல்லாஹ்விடம் மார்க்கம் என்பது இஸ்லாமே' (அல்குர்ஆன் 03:19), '(முஹம்மதே!) நற்செய்தி கூறுபவராக வும், எச்சரிக்கை செய்பவராகவும் மனிதர்கள் அனைவருக்குமே உம்மை அனுப்பியுள்ளோம்.' (அல்குர்ஆன் 34:28) ஆகிய இரு வசனங்களும் என் உள்ளத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. இஸ்லாம் குறிப்பிட்டுக் கூறும் அம்மனிதர் உலக மக்களுக்கான தூதர். அவர் பற்றி ஏனைய மதங்களிலும் கூறப்பட்டுள்ளது. அவர் இதற்கு முன் தோன்றிய அனைத்து நபிமார்களையும் உண்மைப்படுத்துபவராகவும், கண்ணியப்படுத்துபவராகவும் இருக்கிறார். எமது தலைவர் ஈஸா போதித்த அதே போதனையைத் தான் இவரும் போதிக்கிறார். எனவே இஸ்லாம் மார்க்கம் உண்மையான, உலக மக்கள் அனைவருக்குமான மார்க்கம் என்பதில்

வாக்னர்

டச்சு ஆராய்ச்சியாளர்

இன்னொரு சமுதாயத்தைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக் கூடும். எந்தப் பெண்களும் வேறு பெண்களைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக் கூடும். உங்களுக்குள் நீங்கள் குறை கூற வேண்டாம். பட்டப் பெயர்களால் குத்திக் காட்ட வேண்டாம். நம்பிக்கை கொண்ட பின் பாவமான பெயர் (சூட்டுவது) கெட்டது. திருந்திக் கொள்ளாதவர்கள் அநீதி இழைத்தவர்கள்." (அல்குர்ஆன் 49:11)

நற்பண்புகளைப்பொருத்தமட்டில் ஒழுக்கம், கண்ணியம், கௌரவம் போன்றன குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருந்த வேளையில் நபி ﷺ அவர்கள் மக்களுக்கு சிறந்த ஒழுக்க விழுமியங்களையும், சீரிய குணநலன்களையும் கற்றுக்கொடுத்தார்கள். இதனால் ஒருவர் மற்றவருடன் மிகவும் சந்தோசமாக, கண்ணியமாக புலங்க ஆரம்பித்தனர். நபியவர்கள் கூறினார்கள், "நான் நற்குணங்களைப் பூர்த்தி செய்யவே அனுப்பப்பட்டுள்ளேன்". (ஆதாரம்: பைஹகி) அவ்வாறே அல்லாஹ்வும் கூறுகிறான். "நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர்." (அல்குர்ஆன் 68:04)

நபி ﷺ அவர்கள் நற்குணம், ஒழுக்கம், எளிமை, பேணுதல், சிறந்த நடவடிக்கைகள், குடும்பவியல், பேச்சு போன்ற அனைத்துப் பகுதிகளிலும் ஓர் உதாரணப் புருஷராய்த் திகழ்ந்தார்கள். அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி, அல்லாஹ்வை அதிகம் நினைக்கும் உங்களுக்கு

இறுதி ஹஜ்ஜின் பாடங்கள்

"முஹம்மத் தான் மரணிப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் மேற்கொண்ட ஹஜ் கடமையின் போது மக்களுக்க ஆற்றிய உரையின் முதலாவது பகுதியில் மக்களின் சமத்துவத்தைப் பற்றிப் பேசினார். அதன் இறுதி அம்சமாக ஓர் நீக்ரோ முஃமினும் நீதமான தலைவராக இருக்கலாம் என்பதை வலியுறுத்தும் வகையில் இருந்தது. நிச்சயமாக இஸ்லாத்தின்

ஹெர்பர்ட் ஜார்ஜ் வெல்ஸ்

பிரித்தானிய எழுத்தாளர் மற்றும் இலக்கியவாதி

அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது." (அல்குர்ஆன் 33:21)

பெண்களைப் பொருத்தமட்டில் இஸ்லாத்திற்கு முன்னர் அவர்கள் பாரிய இன்னல்களை சந்தித்து வந்துள்ளனர். எவ்வித உரிமைகளுமின்றி ஜடமாக வாழ்ந்திருக்கிறாள். மக்கள் இவர்கள் விடயத்தில் இவளும் மனித இனம் தானா? அவளுக்கு வாழ்வதற்கான உரிமை இருக்கின்றதா அல்லது சிறுவயதிலேயே கொல்லப்பட்டு, புதைக்கப்பட வேண்டியவளா என்றவாறெல்லாம் கருத்துவேறுபாடுகள் நிலவியுள்ளன. இதைப் பற்றி பின்வருமாறு அல்லாஹ் குறிப்பிடுகிறான். "அவர்களில் ஒருவனுக்குப் பெண் குழந்தை பற்றி நற்செய்தி கூறப்பட்டால் அவனது முகம் கருத்து, கவலைப் பட்டவனாக ஆகி விடுகிறான்.

அவனுக்குக் கூறப்பட்ட கெட்ட(தெனக் கருதிய) செய்தியினால் சமுதாயத்திலிருந்து மறைந்து கொள்கிறான். இழிவுடன் இதை வைத்துக் கொள்வதா? அல்லது மண்ணில் இதை (உயிருடன்) புதைப்பதா? (என்று எண்ணுகிறான்) கவனத்தில் கொள்க! அவர்கள் தீர்ப்பளிப்பது மிகவும் கெட்டது." (அல்குர்ஆன் 16:58-59)

அவள் வெறுமனே நேரம் போக்கிடும் விளையாட்டுப் பொருளாகவும், வியாபாரம் செய்யப்படும் பொம்மையாகவும், சிறுமைப்படுத்தப்பட்ட படைப்பாகவுமே அவர்களால் நோக்கப்பட்டாள்.

இப்படியெல்லாம் நோக்கப்பட்ட பெண்ணை கண்ணியப்படுத்துவதற்காக அல்லாஹ் நபியவர்களை அனுப்பினான். அல்லாஹ் கூறுகிறான், "நீங்கள் அமைதி பெற உங்களிலிருந்தே துணைவியரை உங்களுக்காகப் படைத்து

அல்லாஹ்வின் தூதர் முஹம்மதின் குணங்கள்

"முஹம்மத் சிறந்த உயர்குணங்களைக் கொண்டிருந்தார். கொடை வள்ளலாகவும், கண்ணியமானவராகவும், வெட்கமுள்ளவராகவும், உணர்வுள்ளவராகும் இருந்தார். அவ்வாறே பலம் பொருந்தியவராகவும், சிந்தனைத் திறன் மிக்கவாராகவும், இலகிய குணமுள்ளவராகவும், எதைக் கொண்டும் திருப்தியடையும் மனப்பக்குவம்

அப்துல்லாஹ் க்வில்லியம்

ஆங்கில சிந்தனையாளர்

உங்களுக்கிடையே அன்பையும், இரக்கத்தையும் ஏற்படுத்தியிருப்பது அவனது சான்றுகளில் ஒன்றாகும். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன." (:)

பெண்ணான தனது தாய்க்கு உபகாரம் செய்யுமாறு மக்களுக்கு ஏவினார்கள். "'என்னைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள்! பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்!' என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான்" (அல்குர்ஆன் 17:23)

இறைத்தூதர்ﷺஅவர்களிடம் ஒருவர் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! நான் அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் அருகதையானவர் யார்?' என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள், 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள், 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். 'உன் தாய்' என்றார்கள். அவர், 'பிறகு யார்?' என்றார். அப்போது நபி(ஸல்) அவர்கள், 'பிறகு, உன் தந்தை' என்றார்கள். (ஆதாரம்: புஹாரி),

தனது மகளை கண்ணியப்படுத்தச் சொல்லியுள்ளார்கள், "யாருக்கு மூன்று பெண்பிள்ளைகள் இருந்து, அவர்களுக்கு பக்கபலமாக இருந்து, அவர்கள் மீது இரக்கம் காட்டி, அவர்களை நல்லமுறையில் பராமரிக்கின்றார்களோ அவருக்கு சுவர்க்கம் கடமையாகிவிட்டது" என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். அப்போது அவரிடம் "அல்லாஹ்வின்

உலகத்தாருக்கான பாதை

"முஹம்மதின் வரலாற்றை பல தடவை நான் படித்துள்ளேன். அதில் நற்பண்புகளைத் தவிர வேறு எதையும் நான் கண்டதில்லை. உலக மக்கள் செல்வதற்கு ஏற்ற பாதையாக அவர் போதித்த இஸ்லாம் மார்க்கத்தை நான்

பெர்னாட் ஷா
ஆங்கில எழுத்தாளர்

பெண்ணின் நிலை

"அரேபிய நாட்டில் பெண்களின் நிலைப்பாடுகளை இஸ்லாம் உயர்த்தி விட்டது. பெண் பிள்ளைகளைப் புதைக்கும் பழக்கத்தைத் தடுத்து நிறுத்தியது. செல்வம் சம்பந்தப்பட்ட விடயத்தில் ஆண், பெண் இரு பாலாரையும் சமத்துவப்படுத்தியது. பெண்ணுக்கு இஸ்லாம் ஆகுமாக்கியிருக்கும் வேலைகளை செய்ய அனுமதி வழங்கியது. தன் சொத்துக்களைப் பாதுகாத்திடவும், விரும்பியவாறு செலவு செய்யவும் உரிமையை வழங்கியது. ஓர் பெண்ணின் கனவன் மரணித்தால் அவரின் மகனுக்கு அப்பெண் சொந்தமாகும் வழமையை இல்லாதொழித்தது. அனந்தரச் சொத்தில் பெண்ணின் பங்கை ஆணின் பங்கில் அரைவாசியாய் ஆக்கியது. பெண்களின்

வில் ட்யூரன்ட்
அமெரிக்க எழுத்தாளர்

தூதரே, இரண்டு பெண்பிள்ளைகள் இருந்தால்..??" எனக் கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் "இரண்டுபேர் இருந்தாலும் தான்" என பதிலளித்தார்கள். *(ஆதாரம்: அஹ்மத்).*

அவ்வாறே தனது மனைவியையும் கௌரவப்படுத்துமாறு கூறியுள்ளார்கள். "உங்களில் மிகவும் சிறந்தவர் உங்கள் குடும்பத்தினருக்கு சிறந்தவகையில் இருப்பவராவார். நான் எனது குடும்பத்தினருடன் சிறந்தவனாக இருக்கிறேன்." *(ஆதாரம்: இப்னுமாஜா)*



அநீதி !!

"ஐரோப்பாவில் ஓர் தத்துவ மாநாடு நடைபெற்றது. அதில் பெண்களுக்கு உயிர் உண்டா இல்லையா? அவள் மனித இனத்தில் சேருவாளா? போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. இறுதியில் பெண்களுக்கு உயிர் உள்ளதென்றும், அவள் மனித இனத்தில் உள்ளவள் என்றும், ஆனால் ஆண்களை விட அந்தஸ்த்தில் குறைந்தவர்கள் என்றும்

மறுமை நாள் வரை தொடர்ந்து இருக்கும் அத் தூதுத்துவம் எது?

உலகில் தோன்றிய அதிகமான மதங்கள், மார்க்கங்கள் அதை தோற்றுவித்தோரின் பெயரிலோ, அவர்கள் வாழ்ந்த கோத்திரங்கள், பரம்பரைகள் போன்றவற்றின் பெயர்களினாலோ பிரபலமாக அழைக்கப்படுகின்றன. சரத்துஸ்திர சமயம் அதை உருவாக்கிய சரத்துஸ்தரின் பெயரினால் அழைக்கப்படுகிறது. புத்த சமயம் அதை உருவாக்கிய புத்தரின் பெயரினால் அழைக்கப்படுகின்றது, யஹூதா என்னும் கோத்திரத்தில் தோன்றியதனால் யூதர்கள் தங்களை யஹூதிகள் என அழைக்கின்றனர். கிறிஸ்தவர்கள் என தம்மை அடையாளம் காண்பவர்கள் இறைவனால் ஆசிர்வதிக்கப்பட்டவர்கள் (கிறிஸ்து) என்ற பொருளில் தங்களை இவ்வாறு அழைதுக்கொள்கின்றனர். ஆனால் இஸ்லாம் என்ற பெயரோ இவை அனைத்திற்கும் மாற்றமானது.

இது ஒரு மனிதனுடனோ, குறிப்பிட்ட சமூகத்துடனோ தொடர்புபட்ட பெயர்கிடையாது. இஸ்லாம் என்றால் சாந்தி, அமைதி, அடிபணிதல் என்றே பொருள்படுகின்றது. யார் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து, அவனுக்கு மாத்திரமே தனது வழிபாடுகளை ஆக்கிக்கொண்டு, அவன் ஏவியவைகளை எடுத்து நடந்து, அவன் தடுத்தவற்றை தவிந்து நடந்து கொள்கிறாரோ அவர் அல்லாஹ்வுக்கு அடிபணிந்துவிடுவார். இவற்றை செய்வதோடு, இறுதி நபியான முஹம்மத் ﷺ அவர்களைப் பின்பற்றி, அவர் கொண்டுவந்தவைகளை உண்மைப்படுத்தி, அவரை ஏற்றுக்கொள்கிறாரோ அப்போது தன்னை முழுமையாகவே அல்லாஹ்வுக்கு அடிபணிய வைத்துவிட்டவராகக் கருதப்படுவார். அவர் எந்த காலத்தில் வாழ்ந்தாலும் சரி, எந்த இடத்தில் வைத்தும் இவைகளைத் தனது வாழ்வில் எடுத்து நடந்தாலும் சரி, அவ்வாறே எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் இவர் முஸ்லிம் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிந்தவர்) என்றே அழைக்கப்படுவார்.

அல்லாஹ்வுக்கு எவ்வித இணையுமில்லை

“அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவனே உண்மையாளன். அவன் தவிரந்த அனைத்து கடவுள்களும் பொய்யானவர்கள். அவனே எம்மைப் படைத்தான். எமக்கு உணவளிக்கின்றான். அவனிடம் சரணடைவதற்காக இஸ்லாம் மார்க்கத்தை வழங்கினான். அவனிடமே நாம் உதவி தேடி, எமது பாரங்களை சாட்டிவிட வேண்டும். அவன் எமக்குத் தரும் அனைத்தையும் நாம் மனமாற ஏற்றுக்கொள்ள வேண்டும். அவனைத் தவிர எமக்கு உதவி செய்வோர் எவரும் இல்லை, நல்லவற்றை ஏற்படுத்தித் தருவோர் எவரும் இல்லை. ஆனால் மனிதன் இவற்றை மறந்து வாழ்கிறான். இவ்வுலகை நிச்சயம் ஒருவன் இயக்கிக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் உணர வேண்டும். அவன் அல்லாஹ் தான் என்பதைப் புரிய

தாமஸ் கார்லைல்

ஸ்கொட்லாந்தின் வரலாற்றாசிரியர் மற்றும் எழுத்தாளர்.

அரபி என்றோ, அரபி அல்லாதவன் என்றோ வேற்றுமைகள் கிடையாது.

"முஸ்லிம்கிளில் பலர் பல கோத்திரங்களாகவும், பல வர்க்கத்தினராகவும் சிதரிக்கிடந்தாலும் அவர்களை அந்நியர்களாக இஸ்லாம் பார்ப்பதில்லை. இஸ்லாமிய மார்க்கத்தில் உரிமைகளைப் பெறுவதில் சீன முஸ்லிமிற்கும், அரேபிய முஸ்லிமிற்கும் எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் கிடையாது. இதன் மூலம் இஸ்லாமிய உரிமைச்

கோஸ்டோவ் லுபோன்
பிரேஞ்சு வரலாற்றாசிரியர்



الرسالة الباقية س□مت الكون

இஸ்லாம் என்பது இவ்வுலகம் இயல்பாக எதில் சென்றுகொண்டிருக்கிறதோ அவற்றையே குறிக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வின் மார்க்கத்தை விடுத்து வேறு ஒன்றையா தேடுகின்றனர்? வானங்களிலும், பூமியிலும் உள்ளவை விரும்பியோ, விரும்பாமலோ அவனுக்கே அடிபணிகின்றன. அவனிடமே அவர்கள் கொண்டு செல்லப்படுவார்கள்" (:)

இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப் படைப்புக்களும் ஓர் தலைமைத்துவத்தற்குக் கட்டுப்பட்டு நடப்பதை நாம் அறிவோம். சூரியன், சந்திரன், பூமி, ஏனைய கோல்கள் போன்றன ஓர் சக்தியை மையமாக வைத்தே சுற்றிக்கொண்டிருக்கின்றன. அதை மீறி இவற்றால் தாமதிக்கவோ, ஒன்றையொன்று முந்திச் செல்லவோ முடியாது. அவ்வாறே மனிதனைப் பற்றி ஆய்வு செய்தால் கூட அவன் சுவாசிப்பதும், உண்ணல், பருகலில் ஈடுபடுவதும், உணர்வுகள் உட்பட அவனின் ஏனைய அம்சங்கள் அனைத்தும் இறைவன் விதித்த பிரகாரமே நடைபெறுகின்றன. இறைவனின் கட்டளைக்கு அவனின் ஒவ்வொரு உறுப்பும் கட்டுப்படு, தமது கடமைகளை செவ்வனவே நிறைவேற்றுகின்றன.

இத்தகைய அல்லாஹ்வின் விதிமுறைகளைக் கட்டுப்பட்டு தத்தமது பணிகளை முறையே நிறைவேற்றுகின்ற இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்து படைப்பினங்களும், பெரும் பெரும் கோல்கள் தொடக்கம், மண்ணுக்கடியில் இருக்கும் உயிரணு வரைக்குமான அனைத்தும் தாம் அல்லாஹ்வுக்கு முற்றிலும் கட்டுப்பட்டு நடப்பதை பறைசாற்றிக்கொண்டே இருக்கின்றன. இவை அனைத்தும் நிர்ணயத்திற்குக்

கட்டுப்பட்டு நடக்கின்றன என்றால் இஸ்லாம் என்பது இப்பிரபஞ்சம் பூராகவும் நிறம்பிக் காணப்படுவதை உணர முடிகின்றது. எனெனில் இஸ்லாம் என்பது அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, அவனுக்கே முற்றிலும் அடிபணிவதைக் குறிக்கின்றது. சூரியன், சந்திரன், பூமி போன்ற கோல்கள் அவனின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. காற்று, நீர், ஒளி, இருள், சூடு, குளிர் போன்றன அவனின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. மரங்கள், செடிகொடிகள், கால்நடைகள் என யாவும் அவன் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான், "வானங்களில் உள்ளவை, பூமியில் உள்ளவை அனைத்தையும் அவன் உங்களுக்குப் பயன்படச் செய்தான். சிந்திக்கும் சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன." (அல்குர்ஆன் 54:13)

பொதுவாக தனது இறைவனைப் பற்றி அறிந்திராதவனும், அவனையும், அவனது அத்தாட்சிகளையும் மறுக்கினறவனும், அவனை அல்லாமல் பிறரை வணங்கி, அவனக்கு இணைகற்பிப்பவனும் தான் எந்த நிலையில் இருக்கின்றானோ அந்த நிலைக்கேற்ப ஏதோ ஒன்றுக்கு அடிபணிந்துகொண்டு தான் இருக்கிறான்.

மனிதனை இரு விடயங்கள் முரண்பாட்டில் கொண்டுபோய் விடுகின்றன:

முதலாவது விடயம்: அவனின் இயல்பு நிலை, இயல்பாகவே அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடத்தல், அவனை வணங்குவதற்கு ஆசைகொள்ளல், அவனை நெருங்க முற்படுதல், அல்லாஹ் விரும்பக்கூடியவற்றை தாமும் விரும்புதல், அல்லாஹ் வெறுக்கக்கூடிய தீமை, அநியாயம் போன்றவற்றை தாமும் வெறுத்தல் போன்ற அனைத்தையும் செய்கிறான். அவ்வாறே பணம் சம்பாதித்தல், குடும்பம், பிள்ளைகளோடு சேர்ந்து இருத்தல், உண்ணல், பருகல், திருமணம் முடித்தல் போன்றவற்றையும் தமக்காக செய்துகொள்கிறான். இவை அனைத்தையும் செயற்படுத்துவதற்கு அவனின் உடல் உறுப்புக்கள் சீராக இயங்கவேண்டும். இதுவே ஒருவனின் இயல்பு நிலை.

இரண்டாவது விடயம்: மனிதனின் எண்ணங்களும், தேர்வுகளும். அல்லாஹ் பல நபிமார்களை அனுப்பி, வேதங்களை இறக்கிவைத்தமை பொய்யான விடயங்களிலிருந்து உண்மையான விடயம் எது என வடிகட்டி அறிந்துகொள்வதற்காகத் தான். அவன் தேர்வு செய்யப்போகும் இவ்விடயத்தில் தெளிவாக இருப்பதற்காக வேண்டி, பகுத்தறிவையும், சிந்தனைத் திறனையும் வழங்கினான். இவன் தன் சிந்தனைத் திறனின் மூலம் நல்வழியைத் தெரிவு செய்தால் அதன் பக்கம் அல்லாஹ் அவனுக்கு வழிகாட்டுவான். தீயவழியைத் தெரிவு செய்தான் அதன் பக்கம்

வழிகாட்டுவான். அல்லாஹ் கூறுகிறான், "'இவ்வுண்மை உங்கள் இறைவனிட மிருந்து உள்ளது' என்று (முஹம்மதே) கூறுவீராக! விரும்பியவர் நம்பட்டும்! விரும்பியவர் மறுக்கட்டும். அநீதி இழைத் தோருக்கு நரகத்தை நாம் தயாரித்துள்ளோம். அதன் சுவர்கள் அவர்களைச் சுற்றி வளைத்துக் கொள்ளும். அவர்கள் தண்ணீர் கேட்டால் முகத்தைப் பொசுக்கும் உருக்கிய செம்பு போன்ற கொதி நீர் வழங்கப்படும். அது கெட்ட பானம். கெட்ட தங்குமிடம்." (அல்குர்ஆன் 18:29)

முதலாவது விடயத்தின் அடிப்படையில் மனிதனை உற்று நோக்கினால் பிறரின் உதவியின்றியே, பிறரின் வற்புருத்தலின்றியே இயற்கையாகவே கட்டுப்படும் தன்மை இருப்பதனைக் கண்டுகொள்ளலாம்.

இரண்டாவது விடயத்தின் அடிப்படையில் உற்றுநோக்கினால் அவன் நாடிய ஒன்றை தெரிவுசெய்யும் அதிகாரம் அவனிடம் இருப்பதனைக் காண முடிகின்றது. அதன் மூலம் ஒன்றோ முஸ்லிமாக இருப்பான். அல்லது காபிராக மாறிவிடுவான். அல்லாஹ் கூறுகிறான், "அவனுக்கு நாம் நேர் வழி காட்டி னோம். அவன் நன்றி செலுத்துபவனாகவோ, நன்றி கெட்டவனாகவோ இருக்கிறான்." (அல்குர்ஆன் 76:03)

இதனால் இரு வகையான மனிதர்கள் நம் மத்தியில் இருக்கின்றனர்:

தன்னைப் படைத்தவனை அறிந்து, அவனை தனது கடவுளாக ஏற்று, தேர்வுக்குரிய தனது வாழ்வில் அவன் விதித்த சட்டதிட்டங்களை எடுத்து நடந்து கொள்பவன், இயல்பாகவே இறைவனுக்கு அடிபணிந்து, பிறரின் வட்புறுத்தலின்றி, தாமாகவே அவனை கடவுளாக ஏற்றுக்கொண்டவன் போல் இருக்கிறான். இவன் தான் ஓர் பரிபூரண முஸ்லிம். இவனிடம் இஸ்லாத்தின் அனைத்து அம்சங்களும் குடிகொண்டுள்ளன. அவனது அறிவும் உண்மையானதாக மாறிவிட்டது. ஏனெனில் அவன் அல்லாஹ்வை தன்னைப் படைத்து, பரிபாளிக்கும் இறைவனாக ஏற்றுக்கொண்டுவிட்டான். அவனது புத்தியும், அவனின் தீர்க்கமான முடிவுகளும் உண்மையாகிவிட்டன. ஏனெனில் அல்லாஹ் தனக்கு வழங்கிய தூய்மையான புத்திக்கூர்மையால் அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுவதற்குத் தகுதியான வேறு கடவுள்கள் இருக்க முடியாது என சிறந்த முடிவை எடுத்துவிட்டான். அவ்வாறே அவனின் நாவும் உண்மையை மொழிந்ததினால் அதுவும் உண்மையானதாகவே மாறிவிட்டது. ஏனெனில் தனக்குப் பேச்சாற்றலை வழங்கிய இறைவனை, ஒருவன் எனக்கூற ஆரம்பித்துவிட்டானே. இனி அவனின் வாழ்வில் உண்மையைத் தவிர வேறு எதுவும் இருக்கமாட்டாது. ஏனெனில் அவனுக்கு வழங்கப்பட்ட தேர்வு வாழ்க்கையில் முழுமையாக அல்லாஹ்வின் சட்டதிட்டங்களுக்கு அடிபணிந்துவிட்டானே. மனிதனும், ஏனைய அல்லாஹ்வின் படைப்பினங்களும் அவனின் கட்டளைக்கு மாத்திரம் அடிபணிந்து நடப்பதினால் அவனுக்கும், ஏனைய படைப்பினங்களுக்கு மத்தியிலும் ஓர் பரஸ்பர அறிமுகம்

உண்டாயிற்று... அதே போல் இவை அனைத்தும் மனிதனின் தேவைக்காகவே பயன்படுமாறு அல்லாஹ் அமைத்துள்ளான். "நன்மை செய்த நிலையில் தமது முகத்தை அல்லாஹ்வை நோக்கித் திருப்புபவர் பலமான கயிற்றைப் பிடித்துக் கொண்டார். காரியங்களின் முடிவு அல்லாஹ்விடமே உள்ளது." (அல்குர்ஆன் 31:22)

இதற்கும் அதற்கும் மத்தியில் ரொம்ப தூரம்

"அல்குர்ஆனின் பார்வையில் அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதற்கும், கிறிஸ்துவ மதத்தில் உள்ளது போல் முக்கடவுள்களை நம்புவதற்கும் இடையில் ஒப்பீடு செய்து பார்க்க எனக்கு எவ்விதத் தெரிவும் இருக்கவில்லை. கிறிஸ்தவ கடவுள் கொள்கையை விட இஸ்லாமிய கடவுள் கொள்கை யதார்த்தமானதாகவும், தெளிவானதாகும் இருந்தது. அந்நேரமே எனக்கு கிறிஸ்தவ மதத்தின் மீதான பிடிப்பு குறைய ஆரம்பித்தது. அதன் பின்னர் எவ்வித முரண்பாடுகளுமின்றி

நாக்மோ ராமோனி

கானா நாட்டு மதப்போதகர்

இறுதிவரை தொடரும் மார்க்கம் நபிமார்கள், ரஸூல்மார்கள் போதித்த மார்க்கமாகும்.

இஸ்லாம் என்பது அல்லாஹ் இம் மனித குலம் அனைத்திற்கும் அருளிய ஓர் பொதுவான மார்க்கமாகும். அல்லாஹ் கூறுகிறான். *"உங்கள் இறைவன் ஒரே இறைவனே. அவனுக்கே கட்டுப்படுங் கள்! பணிந்தோருக்கு நற்செய்தி கூறுவீராக!"* (அல்குர்ஆன் 22:34)

இதைத் தான் அனைத்து நபிமார்களும், ரஸூல்மார்களும் போதித்தார்கள், *"'அல்லாஹ்வையும், எங்களுக்கு அருளப்பட்டதையும், இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் மற்றும் (அவரது) வழித்தோன்றல்களுக்கு அருளப்பட்டதையும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் வழங்கப்பட்டதையும், ஏனைய நபிமார்களுக்கு தமது இறைவனிடமிருந்து வழங்கப்பட்டதையும் நம்பினோம்; அவர்களுக்கிடையே பாகுபாடு காட்ட மாட்டோம்; அவனுக்கே நாங்கள் கட்டுப்பட்டவர்கள்' என்று கூறுங்கள்!"* (அல்குர்ஆன் 02:136)

நபிமார்களும், ரஸூல்மார்களும் இதை விசுவாசம் கொண்டு, அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். நூஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது சமூகத்தினருக்கு பினவருமாறு கூறினார்கள், *"நூஹுடைய வரலாறை அவர்களுக் குக் கூறுவீராக! 'என் சமுதாயமே! நான் இருப்பதும், அல்லாஹ்வின் வசனங்கள் மூலம் நான் அறிவுரை கூறுவதும் உங்களுக்குப் பெரும் கஷ்டமாக இருந்தால், அல்லாஹ்வையே சார்ந்து விட்டேன். உங்கள் திட்டத்தையும், உங்கள் தெய்வங்களையும் திரட்டுங்கள்! பின்னர் உங்கள் திட்டம் உங்களுக்கு மறைமுகமாக இருக்க வேண்டாம். பின்னர் என் விஷயத்தில் தீர்ப்பளியுங்கள்! எனக்கு அவகாசம் தராதீர்கள்!' என்று தமது சமுதாயத்திடம் கூறியதை நினைவூட்டுவீராக!"*

நீங்கள் புறக்கணித்தால் (அது பற்றி எனக்குக் கவலையில்லை.) நான் உங் களிடம் எந்தக் கூலியையும் கேட்கவில்லை. என் கூலி அல்லாஹ்விடமே உள்ளது. நான் முஸ்லிமாக இருக்குமாறு கட்டளையிடப் பட்டுள்ளேன்' (என்றும் கூறினார்.)

(அல்குர்ஆன் 10:71-72)

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள், "அவரது இறைவன் 'கட்டுப்படு!' என்று அவரிடம் கூறிய போது 'அகிலத்தின் இறைவனுக்குக் கட்டுப்பட்டேன்' என்று அவர் கூறினார்." (அல்குர்ஆன் 02:131)

அவ்வாறே இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களும், அவருக்குப் பின்னர் வந்தவர்களும் தங்கள் பிள்ளைகளுக்கு பின்வருமாறு கூறினார்கள், "'என் மக்களே! அல்லாஹ் உங்களுக்காக இம்மார்க்கத்தைத் தேர்வு செய்துள்ளான். முஸ்லிம்களாகவே295 தவிர நீங்கள் மரணிக்கக் கூடாது' என்று இப்ராஹீமும், யஃகூபும் தமது பிள்ளைகளுக்கு வலியுறுத்தினர்."

யஃகூபுக்கு மரணம் நெருங்கிய போது, நீங்கள் சாட்சிகளாக இருந்தீர்களா? 'எனக்குப் பின் எதை வணங்குவீர்கள்?' என்று தமது பிள்ளைகளிடம் அவர் கேட்ட போது 'உங்கள் இறைவனும், உங்கள் தந்தையரான இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் இறைவனுமாகிய ஒரே இறைவனையே வணங்குவோம். நாங்கள் அவனுக்கே கட்டுப்பட்டவர்கள்' என்றே (பிள்ளைகள்) கூறினர். (அல்குர்ஆன் 02:132-133)

மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறும் போது, "'என் சமுதாயமே! நீங்கள் அல்லாஹ்வை நம்பி, முஸ்லிம்களாக இருந்தால் அவனையே சார்ந்திருங்கள்!' என்று மூஸா கூறினார்." (அல்குர்ஆன் 10:84) என்றார்கள்

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள், "'என்னையும், என் தூதரையும் நம்புங்கள்!' என்று (ஈஸாவின்) சீடர்களுக்கு நான் அறிவித்த போது ''நம்பிக்கை கொண்டோம்! நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீயே சாட்சியாக இருப்பாயாக!'' என

அவர்கள் கூறினர்." (அல்குர்ஆன் 05:111)

இஸ்லாம் என்பது வானுலகில் இருந்து மனித வர்க்கத்தினர் அனைவருக்கும் தனது இறுதித் தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் மூலமாக அல்லாஹ் இறுதியாக இறக்கிய மார்க்கமாகும். இதைப் பூரணப்படுத்திவிட்டு, மார்க்கமாகவும் அவன் பொருந்திக்கொண்டான், "எனது அருளை உங்களுக்கு முழுமைப்படுத்தி விட்டேன். இஸ்லாத்தை உங்களுக்கான வாழ்க்கை நெறியாக பொருந்திக் கொண்டேன்" (அல்குர்ஆன் 05:03)



மேற்கூறப்பட்ட வசனத்தினூடாக மனிதவர்க்கத்தினர் அனைவருக்கும் ஒரே மார்க்கமாக அல்லாஹ் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ளமை தெளிவாகின்றது. இது உண்மையான மார்க்கம் எனவும் அல்லாஹ் அறிவித்துள்ளான். இதைத் தவிற வேறு எந்த மார்க்கங்களையும், வழிமுறைகளையும் மனிதன் பின்பற்றலாகாது என்பதும் புலனாகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்விடம் மார்க்கம் என்பது இஸ்லாமே" (அல்குர்ஆன் 03:19)

மேலும், "இஸ்லாம் அல்லாத மார்க்கத்தை யாரேனும் விரும்பினால் அவரிடமிருந்து அது ஏற்கப்படாது. அவர் மறுமையில் இழப்பை அடைந்தவராக இருப்பார்." (அல்குர்ஆன் 03:85)

முதலாவது கூறப்பட்டுள்ள வசனத்தில் அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாம் எனவும், இரண்டாவது வசனத்தில் இஸ்லாத்தைத் தவிர வேறு எந்த மார்க்கத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை எனவும் உறுதியாக அல்லாஹ் கூறியுள்ளான். யார் முஸ்லிமாக இருக்கிறாரோ அவர் தான் மறுமையில் வெற்றிபெறுவார். முஸ்லிமால்லாத நிலையில் மரணிப்பவர் நரகிலே நுழைவிக்கப்பட்டு, அவர்களுக்கு கடுமையான வேதனையும் வழங்கப்படும். இதனால் தான் அனைத்து நபிமார்களும் தாங்கள் முஸ்லிம்கள் (அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவர்கள்) எனவும், அவ்வாறு முஸ்லிமல்லாதவர்களை விட்டும் தாம் நீங்கிவிட்டதாகவும் பிரச்சாரம் செய்துள்ளனர். எனவே யூதர்களிலும், கிறிஸ்தவர்களிலும் யார் மறுமை நாளில் வெற்றி கிடைக்க வேண்டுமென நினைக்கிறார்களோ, அவர்கள் இஸ்லாம் மார்க்கத்தை மாத்திரம் தான் பின்பற்றியாக வேண்டும். மூஸா, ஈஸா அலைஹிமுஸ்ஸலாம் என்போரை உண்மையாளர்கள் என ஏற்றுக்கொள்வதானால் முஹம்மத் ﷺ அவர்களைப் பின்பற்றியே ஆக வேண்டும். ஏனெனில் இவர்கள் அனைவரும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட, இஸ்லாத்தைப் போதித்த தூதுவர்கள் தான். இறுதித் தூதராக இருக்கும் முஹம்மத் ﷺ அவர்களின் வருகைக்குப் பின் எவரும் இனி பின்பற்றத்தக்க

நபியாக வரமுடியாது. எனவே தன்னை முஸ்லிம் என வாதிடுபவர் நிச்சயம் முஹம்மத் ﷺ அவர்களை விசுவாசம் கொண்டு, அவரின் போதனைகளை ஏற்று நடந்து, அவருக்கு அருளப்பட்ட அல்குர்ஆனின் பிரகாரம் தமது செயற்பாடுகளை தமது வாழ்வில் எடுத்து நடக்க வேண்டும். இல்லையேல் அவர் முஸ்லிமாகக் கருதப்படமாட்டார். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "முஹம்மதின் உயிர் எவன் கைவசம் இருக்கின்றதோ, அவன் மீது சத்தியமாக, யூத, கிறிஸ்தவர்களில் எனக்குக் கட்டுப்படாமல் நடந்து, எனக்கு அருளப்பட்டதையும் விசுவாசம் கொள்ளாமல் யார் மரணிக்கிறாரோ அவர் நரகிலேயே நுழைவார்" (ஆதாரம் :முஸ்லிம்)

இஸ்லாம் இலகுவான மார்க்கம்

"இஸ்லாத்தின் இலகுவான தன்மை தூய ஓரிறைக் கோட்பாட்டிலிருந்தே தோற்றம் பெறுகின்றது. ஏனைய மார்க்கங்களை விட இஸ்லாத்தில் இறைக் கோட்பாடு மிகவும் இலகுவாகவும், புரியும் படியும் அமையப்பெற்றுள்ளது. ஏகத்துவக் கொள்கையை நிலைநாட்டுவதற்கும், அல்லாஹ்வுக்கு முன்னால் அனைத்து மக்களையும் சமத்துவமாக நிறுத்துவதற்கும் இஸ்லாத்தின் அடிப்படைகளுக்கு ஒப்பான ஒன்றும் எங்கும்

கோஸ்டோவ் லுபோன்

பிரேஞ்சு வரலாற்றாசிரியர்



இறைதிவரை நிலைத்திருக்கும் தூதுத்துவத்தின் பூரணத்துவம்.

முஹம்மத் ﷺ அவர்கள் மூலமாக மக்களுக்கு அல்லாஹ் வழங்கிய இஸ்லாம் எனும் இம் மார்க்கம், அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு, அவனை ஒருமைப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது. "அவனே (என்றும்) உயிருடன் இருப்பவன். அவனைத் தவிர வணக்கத் திற்குரியவன் வேறு யாருமில்லை. எனவே வணக்கத்தைத் தூய எண்ணத்துடன் அவனுக்கே உரித்தாக்கி அவனையே அழையுங்கள்! அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்."

என் இறைவனிடமிருந்து தெளிவான சான்றுகள் என்னிடம் வந்த போது அல்லாஹ்வையன்றி யாரை அழைக்கிறீர் களோ அவர்களை வணங்குவதை விட்டும் நான் தடுக்கப்பட்டு விட்டேன். மேலும் அகிலத்தின் இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடக்க கட்டளையிடப்பட்டுள்ளேன் என்று (முஹம்மதே!) கூறுவீராக! (அல்குர்ஆன் 40:65-66)

வணக்கவழிபாடுகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கு மாத்திரம் தான் நிறைவேற்றப்பட வேண்டும். "'என் சிறைத் தோழர்களே! ஏராளமான கடவுள்கள் (இருப்பது) சிறந்ததா? அடக்கியாளும் ஒரே ஒருவனாகிய அல்லாஹ்வா?'"

'அவனன்றி நீங்கள் வணங்குபவை வெறும் பெயர்களே. நீங்களும், உங்களின் முன்னோர்களும் அவற்றுக்குப் பெயரிட்டீர் கள்! இது குறித்து அல்லாஹ் எந்தச் சான்றையும் அருளவில்லை. அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர எவருக்கும் இல்லை. அவனைத் தவிர எதையும் நீங்கள் வணங்கக் கூடாது' என்று அவன் கட்டளையிட்டுள்ளான்..' (அல்குர்ஆன் 12:39-40)

இது இயற்கையோடு ஒத்துப்போகும் மார்க்கமாகும். இதன் யதார்த்தமான தன்மைகளை ஒருவர் விளங்கிக் கொண்டால் அவரால் இதனை விட்டும் அவரால் பிரிந்து இருக்க முடியாமல் போய்விடும். "இதுவே நேரான மார்க்கம். எனினும் அதிகமான மனிதர்கள் விளங்குவதில்லை" (அல்குர்ஆன் 12:40)

இது, எந்த விடயமாக இருந்தாலும் அவற்றை ஆதரங்களோடு நிரூபித்துக்காட்டும் மார்க்கமாகும். "'நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்கள் சான்றைக் கொண்டு வாருங்கள்!' என்று கேட்பீராக!" (அல்குர்ஆன் 27:64)

இது, நிம்மதியான, அமைதியான வாழ்வை ஒருவருக்கு வழங்கும் மார்க்கமாகும். "ஆணோ, பெண்ணோ நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்தால் அவரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய் வோம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றின் காரணமாக அவர்களின் கூலியை அவர்களுக்கு வழங்குவோம்." (அல்குர்ஆன் 16:97)

நபி ﷺ அவர்கள் மூலமாக அல்லாஹ் அருளிய இவ் இஸ்லாம் மார்க்கத்தில் மனிதர்களுக்கு பிரயோசனம் அளிக்கக்கூடிய அனைத்து விடயங்களும் ஆகுமாக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குக் கெடுதிகளை உண்டுபண்ணும் விடயங்கள் அனைத்தும் தடைசெய்யப்பட்டுள்ளன. இலேசான இம் மார்க்கத்தில் மனித சக்திக்கு உட்படாத அம்சங்களையெல்லாம் செய்யுமாறும் வற்புறுத்தப்படவில்லை. அல்லாஹ் கூறுகிறான், "எழுதப் படிக்கத் தெரியாத இத்தூதரை, இந்த நபியை (முஹம்மதை) அவர்கள் பின்பற்றுகின்றனர். தங்களிடம் உள்ள தவ்ராத்திலும், இஞ்சீலிலும் இவரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதை அவர்கள் காண்கின்றனர். இவர், நன்மையை அவர்களுக்கு ஏவுகிறார். தீமையை விட்டும் அவர்களைத் தடுக்கிறார். தூய்மையானவற்றை அவர்களுக்கு அனுமதிக்கிறார். தூய்மையற்றவைகளை அவர்களுக்கு அவர் தடை செய்கிறார். அவர்களுடைய சுமையையும்,அவர்கள் மீது (பிணைக் கப்பட்டு) இருந்த விலங்குகளையும் அவர் அப்புறப்படுத்துகிறார். இவரை நம்பி, இவரைக் கண்ணியப்படுத்தி, இவருக்கு உதவியும் செய்து, இவருடன் அருளப்பட்ட ஒளியையும் பின்பற்றுவோரே வெற்றி பெற்றோர்." (அல்குர்ஆன் 07:157)

இது ஓர் பூரணமான, சிறந்த, அனைத்துக் காலங்களுக்கும் பொருந்துகின்ற மார்க்கமாகும். இதுவே

அடிமைத்துவம் என்பது அல்லாஹ்வுக்கே ஒருவனுக்கே.

"இஸ்லாத்தின் ஓரிறைக் கோட்பாடு என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அது என்னை அல்லாஹ்வுக்கு மாத்திரம் அடிபணியும் படியும், ஏனைய மனிதர்களுக்கு அடிபணியக் கூடாதெனவும் போதனை செய்தது. இஸ்லாமிய ஏகத்துவம் மனிதனை கண்ணியப்படுத்துகின்றது. அவனை சக மனிதர்களுக்கு அடிமைப் படக்கூடாது என்னும் விடயத்தில் உறுதியாய் இருக்கின்றது. இது ஓர் உண்மையான சுதந்திரத்தை வழங்கும் உன்னத மார்க்கமாகும். அடைமைத்துவம்

இப்றாஹிம் கலீல்

எகிப்திய மிஷனரி ஆச்சாரியார்

மதமும் உலகும் ஒன்றோடு ஒன்றாய் இருக்கின்றது

"தனித்து விளங்கும் இவ் இயக்கமானது முஹம்மதை சிறந்த ஆளுமை மிக்கவர் என்பதனை அங்கீகரிக்கின்றது. அவர் மார்க்கத்தோடு இவ்வுலக வாழ்வையும் சிறந்த முறையில் அமைத்துக்கொண்டார். அவருக்கு நிகராக மனித வரலாற்றில் எவருமே

மைக்கேல் ஹார்ட்
அமெரிக்க எழுத்தாளர்



ஏன் இருக்கக் கூடாது ?!

"இது தான் இஸ்லாம் என்று இருக்கும் போது, நாம் ஏன் முஸ்லிம்களாக

கோவ்டா
ஜேர்மனிய இலக்கியவாதி

சந்தோசம், மன நிம்மதி, அறிவியல், நாகரீகம் போன்றவற்றுக்கான வழிகளை அமைத்துத் தருகின்றது. நீதி, நேர்மை, கௌரவம், சுதந்திரம், நலவுகள் என அனைத்திற்கும் தன் வாயில்களைத் திறந்துகொடுக்கின்து. இவ்வளவு மகத்தான மார்க்கத்தில் எம் இருப்பிடத்தை ஆக்கித் தந்த வல்ல நாயனுக்கே எல்லாப் புகழும். "தன் முகத்தை அல்லாஹ்வுக்குப் பணியச் செய்து, நல்லறம் செய்து, உண்மை வழியில் நின்ற இப்ராஹீமின் மார்க்கத்தைப் பின்பற்றி நடந்தவரை விட அழகிய மார்க் கத்திற்குரியவர் யார்? அல்லாஹ் இப்ராஹீமை உற்ற தோழராக்கிக் கொண்டான்." (அல்குர்ஆன் 04:125)

இருள் சூழ்ந்த வாழ்வை விட்டும் இத்தகைய பிரகாசமான, சுதந்திரமான மார்க்கத்தைப் பின்பற்றுமாறு அல்லாஹ் நமக்கு அழைப்பு விடுக்கின்றான். "‘‘வேதமுடையோரே! நாம் அல்லாஹ்வைத் தவிர (யாரையும்) வணங்கக் கூடாது; அவனுக்கு இணையாக எதையும் கருதக் கூடாது; அல்லாஹ்வையன்றி நம்மில் ஒருவர் மற்றவரைக் கடவுள்களாக ஆக்கக் கூடாது என்ற எங்களுக்கும், உங்களுக்கும் பொதுவான கொள்கைக்கு வாருங்கள்!’’ என்று கூறுவீராக! அவர்கள் புறக்கணித்தால் ‘‘நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்களே சாட்சிகளாக இருங்கள்!’’ எனக் கூறி விடுங்கள்!" (அல்குர்ஆன் 03:64)

அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, சந்தோசத்தில் நிலைத்திருக்கும் மனிதனோடு இன்னொரு மனிதனும் இருக்கின்றான். அவன் இயற்கையோடு ஒத்துப்போகும் மார்க்கத்தைப் புறக்கணித்து, அதற்கும், தனக்கும் மத்தியில் தாமாகவே தடையை உண்டாக்கி, இது தான் உண்மையான மார்க்கம் என்பதற்குப் பல சான்றுகளும், அத்தாட்சிகளும் அவனுக்குக் காண்பிக்கப்பட்டும், அவை அனைத்தையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இருளும், சந்தேகங்களும், கட்டுக்கதைகளும், மூடநம்பிக்கைகளும் நிறம்பிய ஓர் வாழ்வை தமக்காகத் தேர்ந்தெடுத்துள்ளான்.

தான் தன்னைப் போன்ற ஓர் மனிதனுக்கே அடிமையாக இருக்க வேண்டுமென சந்நியாசிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, அவர்களிடம் தனது மூளையை அடகு வைத்து விட்டு, தன் மனோ இச்சைப்படி வாழ்கிறான். நபிமார்களும் அல்லாஹ்வின் அடிமைகளான

நபிமார்களும் நல்ல பல போதனைகளை முன்வைத்தனரே, அவர்கள் கூறுவதை ஏன் ஏற்க மறுக்கின்றார்கள்? இவ்வுலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இயற்கை மார்க்கம் இஸ்லாத்தில் தான் பிறக்கின்றன. "இது அல்லாஹ்வின் இயற்கையான மார்க்கம். இதன் மீதே மனிதர்களை அல்லாஹ் அமைத்துள்ளான். அல்லாஹ்வின் படைப்பை மாற்றியமைக்கக் கூடாது. இதுவே நேரான மார்க்கம். எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்." (அல்குர்ஆன் 30:30)

வழிகேட்டையும், மூடநம்பிக்கைளையும் தமது வாழ்வாக எடுத்து நடக்கும் காபிர்களின் நிலை எவ்வாறு இருக்கும் என தற்போது உனக்கே ஓர் முடிவுக்கு வரலாம்.

"அவனே உங்களைப் பூமியில் வழித்தோன்றல்களாக ஆக்கினான். யாரேனும் (ஏக இறைவனை) மறுத்தால் அவரது மறுப்பு அவருக்கே எதிரானது. மறுப்போருக்கு அவர்களின் மறுப்பு அவர்களின் இறைவனிடம் கோபத்தைத் தவிர அதிகமாக்காது. மறுப்போருக்கு அவர்களின் மறுப்பு, இழப்பைத் தவிர அதிகமாக்காது." (அல்குர்ஆன் 35:39)

முஹம்மதுக்கு தனது தூதுத்துவத்தின் மீதான உறுதி

"சாதாரண மனிதரிடம் இருந்து தனக்கு வழிபடுமாறு சென்ற கடிதங்களைக் கண்டதும் அன்றைய அரசர்களுக்கு நிச்சயம் போதையேறி இருக்கும். என்றாலும் இப்படி அவர் அனுப்பி வைத்த கடிதங்கள் மூலம், அவரின் தைரியத்தையும், தன் மீதும், தனது தூதுத்துவத்தின் மீதும் அவர் கொண்டிருந்த உறுதியை எம்மால் உணர முடிகின்றது. இத்தகைய தைரியத்தையும், உறுதியையும் தான் அவரது சமூகம் அவரிடமிருந்து பெற்றுக்கொண்டது. பாலை வனத்தில் வாழ்ந்து வந்தவர்கள் துணிவுள்ளவர்களாய் மாறி பல பிரதேசங்களை வெற்றி கொண்டு, தலைமைப் பொறுப்பை தமதாக்கிக் கொண்டனர். பிரிந்து கிடந்த சமூகத்தை ஒற்றுமைப் படுத்தி,

ஜவஹர்லால் நேரு

இந்தியாவின் முதல் பிரதமர்

இத்தூதுத்துவத்தின் அடிப்படைகளும், மூலாதாரங்களும், அவற்றின் சிறப்பம்சங்களும் எவை?

இம்மார்க்கத்தின் அடிப்படை அம்சங்கள்

இஸ்லாமிய மார்க்கம் எல்லாக் காலத்துக்கும் பொருத்தமான, ஒவ்வொரு மனிதனுக்கும் நன்மை பயக்கும் அம்சங்களை உள்ளடக்கிய பல தனித்துவமான விதிமுறைகளையும், அடிப்படை அம்சங்களையும் கொண்டுள்ளது. அவற்றில் சில முக்கியமான அம்சங்கள்:

முதலாவது: இலேசும், கஷ்டமின்மையும்.

இஸ்லாம் கடமையாக்கியுள்ள அனைத்து அம்சங்களும் மனிதனின் சக்திக்கு உட்பட்டதாகவே இருக்கின்றது. வழமையான செயற்பாடுகளில் கூட அவனுக்கு எவ்விதக் கஷ்டங்களையோ, துன்பங்களையோ அது ஏற்படுத்தவில்லை. ஏனெனில் இம்மார்க்கம் இலேசானதாகும். "அல்லாஹ் உங்களுக்கு எளிதானதையே நாடுகிறான். சிரமமானதை உங்களுக்கு நாட மாட்டான்." (அல்குர்ஆன் 02:185)

மேலும், "அல்லாஹ் உங்களுக்கு (சட்டங்களை) எளிதாக்கவே விரும்புகிறான். (ஏனெனில்) மனிதன் பலவீனனாகப் படைக்கப்பட்டுள்ளான்." (அல்குர்ஆன் 04:28)

மேலும், "எவரையும் அவரது சக்திக்குட்பட்டே தவிர அல்லாஹ் சிரமப்படுத்த மாட்டான்" (அல்குர்ஆன் 02:286)

ஆயிஷா ட அவர்கள் அறிவிக்கிறார்கள், " இரண்டு விஷயங்களில் விரும்பியதைத் தேர்வு செய்து கொள்ளும்படி இறைத்தூதர் ﷺ அவர்களிடம் கூறப்பட்டால் அவர்கள் அவ்விரண்டில் இலேசானதையே -அது பாவமான விஷயமாக



முஹம்மதின் தூதுத்துவம்

"ஏகத்துவக் கோட்பாடு, ஆட்சிக்கான சட்டர்கோர்வைகள் என இவை இரண்டையும் அரேபிய சமுதாயத்தில் நிரை நிறுத்துவதற்காய் முஹம்மத் தன் வாழ்நாளையே அர்பணித்தார். இதன் மூலம் ஓர் தூய இஸ்லாமிய சாம்ராஜ்யம் அரேபிய தீபகற்பத்தில் வளர ஆரம்பித்தது. இதன் மூலம் அறியாமையில் சிக்கித் தவித்த சமூகத்தை நாகரீகம் கொண்ட புது சமூகமாக

அர்னால்ட் டொய்ன்பீ

பிரித்தானிய வரலாற்றாசிரியர்

இல்லாதிருக்கம் பட்சத்தில்- எப்போதும் தேர்வு செய்வார்கள். அது பாவமான விஷயமாக இருந்தால் அதிலிருந்து (விலகி) வெகு தொலைவில் நிற்பார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள், தமக்காக எதிலும் (யாரையும்) ஒரு போதும் பழிவாங்கியதில்லை; இறைவனின் புனித(ச் சட்ட)ம் ஏதும் சீர்குலைக்கப்பட்டு, அதற்கு பதிலாக அல்லாஹ்வின் சார்பாகத் தண்டிக்க வேண்டுமென்று இருந்தாலே தவிர (அப்போது மட்டும் பழிவாங்குவார்கள்.)" (ஆதாரம்:புஹாரி)

யாருக்கு இஸ்லாமிய மார்க்கத்தில் கஷ்டம் என்பது நீக்கப்பட்டு விட்டதோ, அவருக்கு அதன் அனைத்து விடயங்களும் இலகுவானதாகவே அமைந்துவிடும். எவ்விதக் களைப்பும் இன்றி அதன் அனைத்துக் காரியங்களையும் செய்துவிடுவார். அல்லாஹ் கூறுகிறான், "உங்கள் தந்தை இப்ராஹீமின் மார்க்கமான இம்மார்க்கத்தில் அவன் உங்களுக்கு எந்தச் சிரமத்தையும் ஏற்படுத்தவில்லை" (அல்குர்ஆன் 22:78)

இஸ்லாமியக் கடமைகள் என்பது மனிதனுக்கு இவ்வுலகிலும், மறுமை நாளிலும் சந்தோசமான வாழ்க்கையை ஈட்டித்த தருவதற்கான வழிகளாகும். அவற்றை அல்லாஹ் இலேசானதாகத்தான் மனிதனுக்கு வழங்கியுள்ளான். "நம்பிக்கை கொண்டோரே! சில விஷயங்களைப் பற்றி கேள்வி எழுப்பாதீர்கள்! அவை உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டால் உங்களுக்குத் தீங்கு தரும். குர்ஆன் அருளப்படும் நேரத்தில் அவை பற்றி நீங்கள் கேள்வி கேட்டால்

தெளிவான கொள்கை

இஸ்லாத்தின் ஐந்து கடமைகளும் முஸ்லிமல்லாத மக்களுக்கு கஷ்டத்தைக் கொடுத்து, அவர்களை இஸ்லாத்தை விட்டும் விரண்டோட வைக்கும் அம்சங்களாகத் திகழவில்லை. இவ் ஐந்து அடிப்படை அம்சங்களையும் பின்பற்றும் முஸ்லிம்களின் உள்ளங்களில் கூட இஸ்லாமிய கொள்கைகளை பலவந்தமாகவும், கஷ்டப்படும் நுழைவிக்க வேண்டிய தேவை கிடையாது. ஏனெனில் இஸ்லாமிய அடிப்படை அம்சங்கள் மிகவும் இலகுவான விடயங்களையே போதிக்கின்றன. அதன் மூலம் தன் கொள்கைகளை இலகுவாக மக்கள் புரியும் வகையில் விளங்கப்படுத்துகின்றன."

ஜார்ஜ் சர்டன்

விரிவுரையாளர — வாஷிங்டன் மற்றும் ஹாவார்ட் பல்கலைக்கழகம்

முதலில் மார்க்கம் தான்

"முஸ்லிம்களின் அடிப்படை அம்சங்களாக நற்குணங்களும், அவர்களின் சட்டங்களும், அவர்களின் அரசாங்கமும் திகழ்ந்தது. இவை அனைத்தும் அவர்களின் மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன. இஸ்லாம் மார்க்கம் ஏனைய மார்க்கங்களை விட இலகுவானதும், தெளிவானதுமாகும். இதன் அடிப்படை அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை

வில் ட்யூரன்ட்
அமெரிக்க எழுத்தாளர்

அவை உங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு விடும். அவற்றை அல்லாஹ் மன்னித்தான். அல்லாஹ் மன்னிப்பவன்; சகிப்புத் தன்மையுள்ளவன்."

உங்களுக்கு முன் சென்ற சமுதாயத்தினர் இவ்வாறு கேள்வி கேட்டனர். பின்னர் அவர்கள், அவற்றை மறுப்போராக ஆகி விட்டனர். (அல்குர்ஆன் 05:101-102)

இரண்டாவது: மனிதர்களின் நலன்களில் கவனம் செலுத்துதல்.

இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பின்பற்றும் ஒருவர், அவை மனிதர்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களைத் தான் போதிக்கின்றது என்பதைப் புரிந்துகொள்வார். எக்காலத்திலும் தனிமனிதனுக்கோ, அல்லது ஒட்டுமொத்த சமூகத்துக்குமோ நன்மையான விடயங்களை வழங்கி, தீமை பயக்கும் விடயங்களிலிருந்து அவர்களைக் காக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம்." (அல்குர்ஆன் 21:107)

அருள், இரக்க மனப்பாங்கு என்பது நன்மையான விடயங்களைத்தான் எப்போதும் வலியுறுத்தி நிற்கும். இவ் இரக்க மனப்பாங்கு அல்லாஹ் விதித்த சட்டவரம்புகளில் கிடையாது எனில் தனது தூதுவரை அருள் என வர்ணித்திருக்க மாட்டான். எனவே அல்லாஹ்வின் அனைத்து சட்டவிதிகளும் மக்களுக்கு நன்மை

பயக்குவதாகவே இருக்கின்றன. ஏனெனில் அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன். மக்களின் வழிபாடுகளோ, அவர்கள் அவனுக்கு மாறு செய்வதோ அவனை ஒன்றும் பண்ணிவிடாது. அவ்வாறே இஸ்லாமிய சட்டதிட்டங்களில் இருக்கும் நீதம், இரக்க மனப்பாங்கு, நன்மை என அனைத்தும் நேர்மாறாக இடம்பெற்றால் அது இஸ்லாமிய சட்டமாக இருக்காது.

மூன்றாவது: நீதியை நிலைநாட்டுதல்.

பொதுவாகவே நீதியை நிலைநாட்டுமாறு பல வசனங்கள் அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ளன. நாம் நீதியை நிலைநாட்டுகின்ற போது, எத்தகைய முரண்பாடுகளாக இருந்தாலும் அநியாயம் என்பது விரண்டோடிவிடும். அல்லாஹ் கூறுகிறான்,

"நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, நீதிக்குச் சாட்சிகளாக ஆகி விடுங்கள்! ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க, உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள்! அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்." (அல்குர்ஆன் 05:08)

இஸ்லாமே பாதுகாப்பானது...

"இஸ்லாமிய கொடியின் கீழ் யூதர்கள் பாதுகாப்புடனும், நீதமாகவும் நடாத்தப்பட்டனர். தமது எதிரிகளின் தீங்குகளிலிருந்தும் பாதுகாக்கப்பட்டார்கள். இவ்வாறு அதிக காலம் முஸ்லிம்களின்

நஸீம் சூசே

ஈராக்கிய யூத விரிவுரையாளர்

நான்காவது: பூரணத்துவம்.

ஒரு மார்க்கம் சிறந்து விளங்க வேண்டுமெனில் அது பூரணத்துவம் அடைந்திருக்க வேண்டும். இல்லையேல் புத்துப்புது சட்டங்களை காலத்திற்கே உருவாக்கி, அதில் பல முரண்பாடுகளை சந்திக்க நேரிடும். அல்லாஹ் கூறுகிறான், "அந்தப் புத்தகத்தில் எந்த ஒன்றையும் நாம் விட்டு விடவில்லை." (அல்குர்ஆன் 06:38)

மேலும், "இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமாகவும், நேர் வழியாகவும், அருளாகவும், முஸ்லிம்களுக்கு நற்செய்தியாகவும் உமக்கு அருளினோம்." (அல்குர்ஆன் 16:89)

இப் பூரணத்துவம் கொள்கை கோட்பாடுகளிலும், வணக்க வழிபாடுகளிலும், குணநலன்கள், சட்டதிட்டங்கள் என மொத்தத்தில் வாழ்வின் ஒவ்வொரு அங்கத்திலும் பிரதிபலிக்க வேண்டும்.

ஐந்தாவது: நடுநிலை, சமத்துவம்.

இஸ்லாம் மார்க்கமானது சமத்துவம், நடுநிலை என்பவற்றைப் போதிக்கும் மார்க்கமாகும். "உங்களை நடு நிலையான சமுதாயமாக்கினோம்." *(அல்குர்ஆன் 02:143)*

இஸ்லாமிய கடமைகள், சட்டதிட்டங்கள் அனைத்தும் தராசினால் கணிக்கப்படுகின்றன. "வன் வானத்தை உயர்த்தி, தராசை நிறுவினான்." *(அல்குர்ஆன் 55:07)*

எவ்விடயத்திலும் நடுநிலையோடு நடந்துகொள்ளுமாறு அல்லாஹ் முஸ்லிம்களுக்குக் கட்டளையிட்டுள்ளான்.

"அவர்கள் செலவிடும் போது விரையம் செய்ய மாட்டார்கள். கஞ்சத்தனமும் செய்ய மாட்டார்கள். அதற்கு இடைப்பட்ட நிலையாகவே அது இருக்கும்." *(அல்குர்ஆன் 25:67)*

நபி ﷺ அவர்கள் எல்லை மீறிச்செல்வதிலிருந்து தடுக்கின்றார்கள், "எல்லை மீறிச் செல்வதை விட்டும் உங்களை எச்சரிக்கிறேன். நிச்சயமாக உங்களுக்கு முன்னிருந்தோரை அது அழித்துவிட்டது." அவ்வாறே நடுநிலையோடு செயற்பட்டு, ஒவ்வொன்றிற்குமுரிய உரிமைகளை வழங்குமாறும் ஏவியுள்ளார்கள். "நீ உனது இறைவனுக்குக் கொடுக்க வேண்டிய உரிமைகள் இருக்கின்றன. உனக்கு நீயே வழங்கவேண்டிய உரிமைகளும், உனது குடும்பாத்தாருக்கு வழங்க வேண்டிய உரிமைகளும் இருக்கின்றன. எனவே அவரவருடைய உரிமைகளை அவரவர்களுக்கு சரியான முறையில் நிறைவேற்றிவிடு."

இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள்.

முதலாவது: தெய்வீகத் தன்மையை அடிப்படையாகக் கொண்டது.

இஸ்லாமிய மார்க்கம் இப்பிரபஞ்சத்தையும், அதில் உள்ளவற்றையும் படைத்த அல்லாஹ்வால் நிறுவப்பட்டது. தெய்வீகத் தன்மைவாய்ந்த இம்மார்க்கம் பல தனித்துவங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றில் சில: அல்லாஹ்வே படைப்பாளன், அருட்கொடைகளைத் தருபவன், அவன் மாத்திரம் தான் மார்க்கத்தை பராமறிக்கத் தகுதியுள்ளவன். நபிமார்களும், அவர்களைப் பின்துயர்ந்தோரும் இம்மார்க்கம் அல்லாஹ்விற்கே சொந்தமானது என உறுதியாகக் கூறி, இதைத் தவிரவுள்ள ஏனைய மார்க்கங்களை ஒதுக்கித் தள்ளினார்கள். இம்மார்க்கத்தைப் பற்றி இறுதி நபியும், ஏனைய நபிமார்களும் கூறியதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான், "‘ தூதர்களில் நான் புதியவன் அல்லன். எனக்கோ, உங்களுக்கோ என்ன செய்யப்படும் என்பதை அறிய மாட்டேன். எனக்கு அறிவிக்கப்படுவதைத் தவிர வேறு எதையும் நான் பின்பற்றவில்லை. நான் தெளிவாக எச்சரிக்கை செய்பவனே தவிர வேறில்லை’ எனக் கூறுவீராக!" (அல்குர்ஆன் 46:09)

அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அனைத்துத் தூதர்களும் அல்லாஹ் அவர்களுக்கு எதைப் பின்பற்றுமாறு கூறினானோ அதையே தமது வாழ்க்கையில் எடுத்து நடந்தார்கள். அதற்கு முரணாகவோ, அல்லது தாமாக புதிதாக எதையும் உருவாக்கியோ செயற்படவில்லை. ஏனெனில் தனது படைப்புக்களைப் பற்றி அல்லாஹ் நன்கறிந்துள்ளான். "படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுட்பமானவன்; நன்கறிந்தவன்." (அல்குர்ஆன் 67:14)

அல்லாஹ் மனிதனைப் பற்றி நன்கு அறிந்தவன். அவற்களுக்கு எது நன்மையை உண்டுபண்ணும், எது தீமையைக் கொண்டுவரும் என்பன போன்ற அனைத்தையும் துள்ளியமாக அறிந்தவன். இவ்வாறு வேறு எவராலும் தாம் உருவாக்கிய பொருளைப் பற்றி அறிந்திரமுடியாது. அல்லாஹ் கூறுகிறான், "நன்கு அறிந்தோர் நீங்களா? அல்லாஹ்வா?’ என்று கேட்பீராக!" (அல்குர்ஆன் 02:140)

அல்லாஹ்வே இம்மார்க்கத்தை உருவாக்கியவன். இதன் சட்டதிட்டங்களைக் கூட அனைவருக்கும் சமமாகவும், நீதமானதாகவும் ஆக்கியவன். இஸ்லாமிய குற்றவியல் தண்டனைகளைக் கூட இவ்வுலகென்றும், மறுவுலகுக்கென்றும் இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றான். தன்னுடைய நன்மைக்கான

பங்கை இவ்வுலகில் எவர் பெறவில்லையோ, அல்லது தான் செய்த குற்றத்துக்குத் தகுந்த தண்டனையைப் பெறவில்லையோ, அவை அனைத்தையும் மறுமையில் அடைந்துகொள்வார்.

இரண்டாவது: குணநலன்களுக்கும், மார்க்கத்தும் இடையிலான இணைப்பு.

வெறுமனே சட்டதிட்டங்களை மாத்திரம் உருவாக்குவதால் அவை உருவாக்கப்பட்ட நோக்கம் நிறைவேறிவிடாது. அதை அமுல்படுத்துவதற்கு மக்களிடம் வரவேற்பும், அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையும் இருக்க வேண்டும். அவ்வாறே சிறந்த சட்டதிட்டங்களை உருவாக்கிவிட்டு, அதை அதற்குத் தகுந்தவர்களுக்கு அமுல்படுத்தும் போது அவை உருவாக்கப்பட்ட நோக்கம் நிறைவேறுகின்றது. மக்களிடம் இவற்றுக்கான ஒப்புதல் ஏற்படவேண்டுமெனில் இவற்றின் நீதம், மனிதர்களுக்கு இவை செய்ய இருக்கும் நன்மைகள் போன்றவற்றை மக்கள் அறிந்து, அவற்றை நம்ப வேண்டும். அப்படிப்பட்ட மக்களின் வரவேற்பைப் பெற்று, அவர்களின் நம்பிக்கையையும் வென்ற மார்க்கம் தான் இஸ்லாம். "அவர்களுக்காக கருத்தாழமிக்க சொல்லை அவர்களின் உள்ளங்களில் (பதியுமாறு) கூறுவீராக!" (அல்குர்ஆன் 04:63)

"எனவே அறிவுரை கூறுவீராக! (முஹம்மதே!) நீர் அறிவுரை கூறுபவரே. அவர்களுக்கு நீர் பொறுப்பாளி அல்லர்." (அல்குர்ஆன் 88:21-22)

அமைதியின் மார்க்கம்

"என் வாழ்வில் முதல் தடவையாக நான அமைதியையும், பாதுகாப்பையும் உணர்ந்தேன். என் வாழ்வின் பெறுமதியையும் உணர்ந்துகொண்டேன். நீ அல்லாஹ்வைப் பார்க்காவிட்டாலும் அவன் உன்னைப் பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்பதன் பொருளையும் உணர்ந்துகொண்டேன். நம் அனைத்து செயற்பாடுகளையும் அவன் கவனித்து, மறுமை நாளில் அதற்குரிய

அனடோலி அன்டர் பவ்ச்

இக்காரணத்தை அடிப்படையாக வைத்துத் தான் அல்லாஹ் நபி ﷺ அவர்களைத் தேர்ந்தெடுத்தான். அவர்கள் கூறினார்கள், "நான் சிறந்த நற்பண்புகளைப் பூரணப்படுத்தவே அனுப்பப்பட்டுள்ளேன்."

மூன்றாவது: இவ்வுலகுக்கும், மறுவுலகுக்கும் இடையிலான இணைப்பு.

மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கான கூலிகளையும், தண்டனைகளையும் இவ்வுலகில் மாத்திரம் தான் அவனால் வழங்க முடியும். ஆனால் இஸ்லாம் மார்க்கத்தின் சட்டதிட்டங்களுக்கான கூலிகளும், தண்டனைகளும் இரு உலகிலுமே வழங்கப்படும். இதுவே ஏனைய மனித யாப்புக்களை விட்டும்

இஸ்லாத்தைத் தனித்துவப்படுத்துகின்றது. எனவே ஒரு முஃமின் அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை செவ்வனவே தனது வாழ்க்கையில் எடுத்து நடப்பான். ஏனெனில் இவ்வுலகில் அவனால் மேற்கொள்ளப்படும் அனைத்துச் செயற்பாடுகளையும் அல்லாஹ் பார்த்துக்கொண்டிருக்கின்றான் என்ற பயம் அவனை உருத்திக்கொண்டே இருக்கும். இவ்வுலக சட்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்ளும் மனிதர்கள் மறுமையில் அல்லாஹ்வின் பிடியிலிருந்து ஒருபோதும் தப்ப முடியாது என்பதையும் அவன் அறிந்து வைத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான், "தன் மீது யாரும் சக்தி பெற மாட்டார்கள் என்று அவன் எண்ணுகிறானா?" (அல்குர்ஆன் 90:05)

மேலும், "அவனை யாரும் பார்க்கவில்லை என்று எண்ணுகிறானா?" (அல்குர்ஆன் 90:07)

நான்காவது: தனது சட்டக்கோர்வையின் காரணமாக சமூகத்தின் இயல்பு நிலைமை.

இஸ்லாமிய மார்க்கம் ஒரு தரப்பினரை விட்டு விட்டு, இன்னொரு தரப்பினருக்கு நன்மை பயக்கும் மார்க்கம் கிடையாது. அவ்வாறே ஒரு மனிதனின் சொந்த விடயங்களில் இன்னொருவர் தலையிடவும் அனுமதிக்காது. ஒவ்வொரு மனிதனின் தகுதிக்கேற்றவாறு நன்மைகளை அவரவருக்கு வாரி வழங்குகின்றது. ஆனால் முஸ்லிமல்லாதவர்களுள் அதிகமானவர்கள் பல பிரச்சினைகளுக்கும், கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்கின்ற போது, அவர்களின் அதிகமான நலன்கள் தனிமனித லாபங்களுக்கு இலக்காகின்றன. முதலாளித்துவக் கொள்கையின் அடிப்படையில் வாழும் சமூகத்தில் எப்போதும் தனிமனிதனுக்கே அதிக மதிப்பு காணப்படுகின்றது. அங்கு தொழிலாளிகளுக்கென்று எதுவும் கிடையாது. அவ்வாறே சோசலிசக் கொள்கையின் அடிப்படையில் வாழும்



சமூகத்தில் தனிமனிதனுக்கென்று எதுவும் கிடையாது. அங்கு அனைத்தும் பொதுவுடைமையாக மாற்றப்பட வேண்டியிருக்கின்றது. பொதுப் பொருளாதார நீரோட்டத்தின் விளிம்பில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், பொது நலம், கூட்டு முயற்சி போன்றவற்றால் தனி நபர்களிடம் செல்வம் குவிந்து கிடப்பதை முற்றாகத் தடைசெய்தல் போன்ற காரியங்களை இக்கொள்கை மேற்கொள்கின்றது. ஆனால் இஸ்லாம் மார்க்கம் இவ்விரு சமூக நிலைமைகளையும் சீரமைப்பதற்காகவே தனது சட்டதிட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. சமூகத்தில் பொதுவுடைமையை ஆதரிப்பதோடு, தனிமனித நலன்களிலும் அக்கறை செலுத்துகிறது. அரசியல் களத்தைப் பொருத்தமட்டில் தனது தலைவருக்குக் கட்டாயம் குடிமக்கள் அனைவரும் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்ற கொள்கையை இட்டுள்ளது. அவ்வாறே அத்தலைவனும் இஸ்லாமிய விதிகளின் படி தனது வாழ்வை அமைத்து, அதன் பிரகாரமே ஆட்சியும் புரிய வேண்டும். அவ்வாறு அவன் செயற்படவில்லையெனில் அவனிடமிருந்து அப்பதவி பறித்தெடுக்கப்படும். அத்தருணத்தில் குடிமக்கள் அவனைப் பின்பற்றாமல் தமக்கென வேறோர் தலைவரை நியமித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு இஸ்லாம் சமூக விடயத்தில் சமநிலையைப் பேணுகின்றது.

ஐந்தாவது: மாற்றத்திற்கு உள்ளாகாத சட்டக்கோர்வைகள்.

இஸ்லாம் மார்க்கம் தான் இயற்றிய சட்டக்கோர்வைகளை என்றும் மாற்றியது கிடையாது. சட்டக்கோர்வையின் அடிப்படை மூலாதாரமான அல்குர்ஆனிலும் கூட எவ்வித மாற்றங்களும் இடம்பெறவில்லை. அல்லாஹ் கூறுகிறான், "நாமே இந்த அறிவுரையை அருளி னோம். நாமே இதைப் பாதுகாப்போம்." (அல்குர்ஆன் 15:09)

இதில் எவ்வித தவறுகளும் கிடையாது. "இதன் முன்னும், பின்னும் இதில் தவறு வராது. புகழுக்குரிய ஞானமிக் கோனிடமிருந்து அருளப்பட்டது." (அல்குர்ஆன் 41:42)

அவ்வாறே ஹதீஸ் துறையும் மிகவும் தூய்மையான முறையில் பாதுக்காக்கப்படுள்ளது. இவ்விரண்டு மூலாதாரங்களும், ஒவ்வொரு அம்சங்களையும் மிகவும் துள்ளியமாக விளக்காமல் பொதுவான அடிப்படையிலே அவற்றின் சட்டவிதிமுறைகளை விளக்குகின்றன. ஏனெனில் துள்ளியமான விளக்கங்களை, ஒவ்வொரு கால கட்டத்திற்கும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்பவும் ஆராய்ந்து,

அதன் அடிப்படையில் தீர்ப்பளிக்கும் முழுமையான அதிகாரத்தை முஜ்தஹிதீன்களிடமே விட்டுள்ளது. அவர்கள் மார்க்கத்தின் பொதுவான சட்டங்களை மையமாக வைத்து, சமூகத்தில் தோன்றும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மார்க்கத்துக்கு முரணாகாத அடிப்படையில் விளக்கங்களைக் கூறுவார்கள். இவ்வாறு மார்க்க விதிகளுக்கு அமைவாக சட்டதிட்டங்களை அமுல்படுத்தும் போது, புதிது புதிதாகத் தோன்றும் பிரச்சினைகளுக்குக் கூட மார்க்கத்திற்கு முரணாகாத தீர்வுகளை

கண்ணியமான மார்க்கம்

"இஸ்லாம் சமாதானம், சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம், கண்ணியம் போன்றன உள்ளடங்கிய மார்க்கமாகும். இவை அனைத்தும் அதன் சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் போன்றவற்றின் மூலம் தெரிந்துகொள்ளலாம். இஸ்லாத்தில் விரதமானது ஏனைய மதங்களிலுள்ள நோன்பை விட முற்றிலும் வேறுபட்டது. ஆசாமிகள் செய்வது போல் உடலின் வேண்டுதல்களை தலைகீழாக மாறி நடமாடும் கோவிலாக மனித உடல் மாறுவது தான் நோன்பு கிடையாது. இஸ்லாம் உடலின் வேண்டுதல்களுக்கு ஒழுக்கம் போதிக்கும் அதே வேளையில் அதை தலை கீழாக மாற்றிவிடவில்லை. இஸ்லாத்தில் விரதமானது, மனோ இச்சைகளுக்குப் புரம்பான போராட்டம், பொறுமை என்பவற்றில் தன் ஆண்மாவை பழக்கப்படுத்திக் கொள்வதாகும். இரகசியத்திலும், பரகசியத்திலும் அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்தல், ஏனையோரின் பசியை உணர்தல், உள்ளத்திற்கு திருப்தியை அளித்தல் போன்ற அனைத்தையும் இது உள்ளடக்கியுள்ளது. விரதமென்பது ஒருவனது ஆரோக்கியத்திற்கும், சிந்தனைக்கும்

பிரீஷா பென்க்மார்ட்டி

புத்த மதத்திலிருந்து இஸ்லாத்திற்கு மாறிய தாய்லாந்திய அமைப்பு

இஸ்லாமிய சட்டக் கோர்வையும், மனிதனால் இயற்றப்பட்ட சட்டதிட்டங்களும்.

இஸ்லாமிய சட்டக் கோர்வைக்கும், மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களுக்கும் நிறையவே வித்தியாசங்கள் இருக்கின்றன.

உள்ளத்தில் பயத்தையும், பரிசுத்தத்தையும், மதிப்பையும் ஏற்படுத்தல்.

இஸ்லாமிய சட்டக்கோர்வையைப் பின்பற்றும் ஒருவனுக்கு, இது அவன் பின்பற்றும் மார்க்கத்தோடு தொடர்புபட்டுள்ளது என்பதாலும், இதை அமைத்தவன் அல்லாஹ் என்பதினாலும் அவனிடம் பயமும், பரிசுத்தமும், மதிப்பும் குடிகொள்கின்றது. யாரின் உள்ளத்தில் அல்லாஹ் பற்றிய அச்சம் கிடையாதோ, அவனுக்குத் தாழ்வு மனப்பான்மை, பரிசுத்தம், மதிப்பு போன்றன ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை.

இஸ்லாமிய சட்டக்கோர்வை இயற்கையோடு ஒத்துப்போதலும், அனைத்துக் காலத்திற்கும் உகந்ததாக அது இருத்தலும்.

இஸ்லாமிய சட்டக்கோர்வை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பொருந்தும் வகையிலே அமைக்கப்பட்டுள்ளது. அவர்களின் சூழல், இயல்பு நிலைகள், இனம், மொழி போன்ற அனைத்து வித்தியாசங்களையும் தாண்டி ஒரே அமைப்பில் அவை அமுல்படுத்தப்படுகின்றன. ஏனெனில் இதை உருவாக்கிய அல்லாஹ், மனிதனுகு நடக்கின்ற, நடக்கப்போகின்ற அனைத்தைப் பற்றியும் அறிந்தவன். அவர்களின் மனோநிலைகள், உணர்ச்சிகள் போன்றவற்றோடு தொடர்புபட்ட அனைத்தையும் மிகவும் துள்ளியமாக அறிந்தவன். அல்லாஹ் கூறுகிறான், "(முஹம்மதே!) உண்மை வழியில் நின்று உமது முகத்தை இம்மார்க்கத்தை நோக்கி நிலைப்படுத்துவீராக! இது அல்லாஹ்வின் இயற்கையான மார்க்கம். இதன் மீதே மனிதர்களை அல்லாஹ் அமைத்துள்ளான். அல்லாஹ்வின் படைப்பை மாற்றியமைக்கக் கூடாது. இதுவே நேரான மார்க்கம். எனினும் மனிதர் களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்." (அல்குர்ஆன் 30:30)

ஆனால் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டங்களில் காலம் செல்லச் செல்ல அவனது அறிவு வளர்ச்சியின் காரணமாக அவற்றில் பல குறைபாடுகளைக்

கண்டுபிடித்து, மீண்டும் திருத்தம் செய்யும் பணிகள் இடம்பெறுகின்றன. ஏனெனில் நேற்றைய அறிவு இன்று அவனிடம் இருப்பதில்லை. அதே போல் நாளை பற்றிய அறிவும் இன்று அவருக்கு இருப்பதில்லை. நாளையாகும் போது இன்னும் புதுப்புது விடயங்கள் ஏற்படுகின்ற போது திரும்பவும் மாற்ற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே இது இயற்கையோடு ஒவ்வாத, அனைத்து தரப்பினருக்கும் ஒத்துப்போகாத, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற மாறும் சட்டங்களாகவே இருக்கின்றன.

இஸ்லாமிய சட்டம் உண்மை, நீதம் போன்றவற்றோடு ஒத்துப்போதல்.

இஸ்லாமிய சட்டம் உண்மை, நீதம் என்பவற்றோடு எப்போதும் ஒத்துப்போவதாகவே இருக்கின்றது. ஏனெனில் அங்கு பிழை, தவறு, அநீதி, அநியாயம், மனோ இச்சைக்குக் கட்டுப்படுதல் போன்றன ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை. அல்லாஹ் கூறுகிறான், "உமது இறைவனின் வார்த்தை உண்மையாலும், நீதியாலும் நிறைந் துள்ளது. அவனது வார்த்தைகளை மாற்றுபவன் எவனும் இல்லை. அவன் செவியுறுபவன்; அறிந்தவன்." (அல்குர்ஆன் 06:115)

மறைவான விடயங்கள், வெளிப்படையானவைகள் போன்றவற்றை அல்லாஹ் நன்கறிவான். அவன் ஒன்றை ஏவினால் அது மனிதனுக்கு நன்மை பயக்குவதாகவே இருக்கும். அவ்வாறே ஒன்றை விட்டும் தடுத்தால் அது அவனுக்கு தீமை பயக்குவதாகவே இருக்கும். ஆனால் மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்களில் அதிக முரண்பாடுகளும், பிழைகளும், தவறுகளும், மனோ இச்சைகளும் நிறைந்து காணப்படுவதால் அது எப்போதும் குறைபாடுகளிலிருந்து விலகி நிற்க முடியாமல் இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள். (அல்குர்ஆன் 04:82)

மனிதனைப் பராமரிப்பதாக இது இருக்கின்றது.

இஸ்லாமிய சட்டம் வெருமனே சிந்தனைகளாலும், சித்தாந்தங்களாலும் உருவாக்கப்பட்டவை அல்ல. அது மனிதனுக்கும், அவனது இயல்பு நிலை, அவனது அமைப்பு போன்ற அனைத்தையும் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. மனிதனைப் படைத்த இறைவன் அவர்களுக்குத் தேவையானவற்றை அறியாமலா இருப்பான்... "படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுட்பமானவன்; நன்கறிந்தவன்" (அல்குர்ஆன் 67:14)

அவர்களுக்கு எவற்றை இலகுவாக்க வேண்டுமென்பதையும் அறிந்தவன், "அல்லாஹ் உங்களுக்கு (சட்டங்களை) எளிதாக்கவே விரும்புகிறான். (ஏனெனில்) மனிதன் பலவீனனாகப் படைக்கப்பட்டுள்ளான்" (அல்குர்ஆன்

04:28)

சந்தோசமான, தூய சமுதாயம்

"இஸ்லாத்தின் சட்டதிட்டங்களைப் பேணி வாழ்கின்ற முஸ்லிம் சமூகம் எவ்விதத் தீங்குகளுமற்ற தூய்மையான, மகிழ்வான

பிரீஷா பென்க்மார்ட்டி

புத்த மதத்திலிருந்து இஸ்லாத்திற்கு மாறிய தாய்லாந்திய அமைப்பு

இஸ்லாத்தின் மூலாதாரங்கள்,

இஸ்லாமிய சட்டதிட்டங்களும், கொள்கை கோட்பாடுகளும் முழுமையான இறைச் செய்தியாகவே இருக்கின்றது. இதற்கான மூலாதாரங்களாக அல்குர்ஆனும், ஹதீஸும் திகழ்கின்றன. அவை இரண்டு பற்றியும் ஓர் சுருக்கமான கண்ணோட்டம் வருமாறு,

1- அல்குர்ஆன்,

அல்லாஹ் இப் புனித அல்குர்ஆனை தனது இறுதித் தூதர் முஹம்மத் ﷺ அவர்களுக்கு இறக்கினான். இறையச்சம் கொண்டவர்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், முஸ்லிம்களுக்கான யாப்பாகவும், அல்லாஹ் யாருக்கு நேர்வழிகாட்ட நாடியுள்ளானோ அவர்களின் உள்ளத்திற்கான நிவாரணியாகவும், இருள் சூழ்ந்த இறை நிராகரிப்பு வாழ்விலிருந்து யாரை வெளியேற்ற நாடுகிறானோ அவருக்கான ஒளி விளக்காகவும் இது இருக்கின்றது. அல்லாஹ் மனிதனை எதற்காகப் படைத்தானோ அவ் அனைத்து நோக்கங்களுக்குமான வழிகாட்டியாகவும் இது இருக்கின்றது. அல்லாஹ் அல்குர்ஆனை மாத்திரமின்றி, இதற்கு முன்னரும் தவ்ராத், ஸபூர், இன்ஜீல் என வேதங்களையும், ஏடுகளையும் ஒவ்வொரு நபிமாருக்கும் அல்லாஹ் வழங்கியுள்ளான். இவையனைத்தும் அல்லாஹ்வால் நபிமார்களுக்கு வழங்கப்பட்ட இறைச்செய்திகளாகும். இப் புனித அல்குர்ஆன் அல்லாஹ்வின் இறைச் செய்தி என சாட்சி பகர்கின்றவர், இதற்கு முன்னர் அருளப்பட்ட வேதங்களையும், அது அருளப்பெற்ற நபிமார்களையும் விசுவாசம் கொண்டே ஆக வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வையும், அவனது தூதர்களையும் மறுத்து,

வானுலகின் இறுதி வேதம் அல்குர்ஆனாகும்

"ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக்கொண்ட பின், அல்குர்ஆன் தான் இறுதி வேதம் என்பதற்கான ஆதாரங்களைத் தேட ஆரம்பித்தேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே. இக்கேள்விக்கான விடை கிடைத்தது. அல்குர்ஆன் முன்னர் இறக்கப்பட்ட வேதங்கள் குறிப்பிடும் அத்தனை விடயங்களையும் தெளிவாகவும், விளக்கமாகவும் கூறுகின்றது. மற்றைய வேதங்களுக்கு மத்தியில் முரண்பாடாக இருக்கும் விடயங்களைத் கூட இது மிகத் துள்ளியமாகக் கூறுகின்றது. இதுவே அல்குர்ஆனின் சிறப்புக்களில்

பஷீர் ஷாத்
இந்து மதப் போதகர்

''சிலவற்றை ஏற்று சிலவற்றை மறுப்போம்'' எனக் கூறி, அல்லாஹ்வுக்கும், அவனது தூதர்களுக்குமிடையே வேற்றுமை பாராட்டி இதற்கு இடைப்பட்ட வழியை உருவாக்க யார் எண்ணுகிறார்களோ அவர்கள் தாம் உண்மையாகவே (நம்மை) மறுப்பவர்கள். மறுப்போருக்கு இழிவு தரும் வேதனையைத் தயாரித்துள்ளோம்"

அல்லாஹ்வையும், அவனது தூதர் களையும் நம்பி அவர்களில் எவருக்கிடையேயும் பாரபட்சம் காட்டாதோருக்கு அவர்களது கூலிகளை அவன் பின்னர் வழங்குவான். அல்லாஹ் மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 04:150-152)

அல்குர்ஆனின் அந்தஸ்தும், அதன் சிறப்பும்

"14 நூற்றாண்டுகளாக அல்குர்ஆன் முஸ்லிம்களில் உள்ளத்தில் பாதுகாப்புடன் இருக்கின்றது. அது அவர்களின் சிந்தனைகளைப் பதப்படுத்தி, நற்குணங்களை உருவாக்குகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்களின் திறமைகளை கூர்மையாக்குகின்றது. மக்களின் உள்ளத்தின் இலகுவான கொள்கைகளை நட்டிவிடுகின்றது. ஓரிறைக் கோட்பாட்டை நிருவி, பல தெய்வ வழிபாட்டை அவர்களை விட்டும் தூரமாக்கி விடுகின்றது. அவர்களுக்கு மத்தியில் சமூக ஒழுங்கு விதிமுறைகளை உருவாக்கி, ஒரே சமூகமாக என்றும் நிலைபெற உதவி செய்கின்றது. மூட நம்பிக்கைகள், வீண் சந்தேகங்ள், கல்நெஞ்சத் தனங்கள், அநீதிகள் போன்ற அனைத்தையு அவர்களின் உள்ளத்திலிருந்து கிள்ளியெறிந்து விடுகின்றது. முஸ்லிம்களின் உள்ளத்தில் பணிவையும், கண்ணியத்தையும்

வில் ட்யூரன்ட்
அமெரிக்க எழுத்தாளர்

ஆயினும் மேற்கூறப்பட்ட வேதங்களின் புனிதத்துவம் நீங்கி, அதில் மனித கையூடல்களும், மாற்றங்களும் நடந்தேறியுள்ளன.

ஆனால் அல்குர்ஆனில் அது போன்ற எவ்விதச் செயல்களும் இடம்பெறவில்லை. ஏனெனில் இதைப் பாதுகாக்கும் பொறுப்பை அல்லாஹ்வை ஏற்றுள்ளான். "நாமே இந்த அறிவுரையை அருளி னோம். நாமே இதைப் பாதுகாப்போம்" (அல்குர்ஆன் 15:09)

இதைக் கொண்டு முன்னைய வேதங்களை அல்லாஹ் செயலிழக்கச் செய்துவிட்டான். "உண்மையை உள்ளடக்கிய வேதத்தை உமக்கு அருளினோம். அது தனக்கு முன் சென்ற வேதத்தை உண்மைப் படுத்துவதாகவும், அதைப் பாதுகாப்பதாகவும் இருக்கிறது." (அல்குர்ஆன் 05:48)

அவ்வாறே இக் குர்ஆன் அனைத்தையும் தெளிவுபடுத்தும் வேதமாகவும் இருக்கின்றது. "இவ்வேதத்தை ஒவ்வொரு பொருளுக்கும் விளக்கமாகவும், நேர் வழியாகவும், அருளாகவும், முஸ்லிம்களுக்கு நற்செய்தியாகவும் உமக்கு அருளினோம்." (அல்குர்ஆன் 16:89)

இது நேர்வழிகாட்டியாகவும் இருக்கின்றது, "உங்களுக்கு உங்கள் இறைவனிடமிருந்து தெளிவான சான்றும், நேர் வழியும் அருளும் வந்து விட்டன." (அல்குர்ஆன் 06:157)

நேரானதின் பால் வழிகாட்டுகின்றது, "இந்தக் குர்ஆன் நேரானதற்கு வழி காட்டுகிறது. 'நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்வோருக்கு பெரிய கூலி உள்ளது' என்று நற்செய்தியும் கூறுகிறது." (அல்குர்ஆன் 17:09)

இது ஒட்டுமொத்த மனித இனத்திற்குமே வழிகாட்டியாக இருக்கின்றது.

மனித வர்க்கத்தினருக்கு எதுவெல்லாம் தேவையோ அவை அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சட்டதிட்டங்கள், கொள்கை கோட்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், ஒழுக்கவியல் சார்ந்த அம்சங்கள் என அனைத்துத் துறைகளையுமே உள்ளடக்கியுள்ளது. அல்லாஹ் கூறுகிறான், "அந்தப் புத்தகத்தில்

அனைத்தையும் உள்ளடக்கிய நூல்

"அல்குர்ஆன் கற்பித்தல், போதனைகளை வழங்குதல் போன்ற காரியங்களை மேற்கொள்ளும் ஓர் நூலாகும். இது வேறுமனே சட்டதிட்டங்களையும், உணர்வு ரீதியான அம்சங்களையும் உள்ளடக்கவில்லை. முஸ்லிம்களை உயரச் செய்யும் நற்குணங்களை விதைக்கும் இடமாகவும், தீயவைகளை விட்டும் அவர்களைத் தடுத்து, நல்லவற்றை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்

சிட்னி ஃபிஷர்

பேராசிரியர் — அமெரிக்க ஓஹியோ பல்கலைக்கழகம்

2- நபியவர்களின் வழிமுறை

அல்லாஹ் முஹம்மத் ﷺ அவர்களுக்கு அல்குர்ஆனை இறக்கிய அதே நேரத்தில் பல வழிமுறைகளையும் இறைச் செய்தியாக வழங்கினான். அல்லாஹ் கூறுகிறான்,

"அ(வர் பேசுவ)து அறிவிக்கப்படும் செய்தியைத் தவிர வேறில்லை." (அல்குர்ஆன் 53:04)

இதுவும் குர்ஆனைப் போன்றது தான். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "அறிந்துகொள்ளுங்கள். நான் குர்ஆனும், அதைப்போல் ஒன்றையும் கொடுக்கப்பட்டுள்ளேன். அறிந்துகொள்ளுங்கள். நான் குர்ஆனும், அதைப்போல் ஒன்றையும் கொடுக்கப்பட்டுள்ளேன்". (ஆதாரம் :அஹ்மத்), இதுவும் அல்லாஹ்விடமிருந்து நபி ﷺ அவர்களுக்கு இறைச்செய்தியாக வந்த ஒன்று தான். நபி ﷺ அவர்கள் தமது மனோ இச்சையின் பிரகாரம் பேசமாட்டார்கள். ஏனெனில் அவர் பேசுவதும் மார்க்கமாகத் தான் கருதப்படுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், *"எனக்கு அறிவிக்கப்படுவதைத் தவிர வேறு எதையும் நான் பின்பற்றவில்லை. நான் தெளிவாக எச்சரிக்கை செய்பவனே தவிர வேறில்லை' எனக் கூறுவீராக!"* (அல்குர்ஆன் 46:09)

உறுதியான வழிமுறை

"முஹம்மதின் வழிமுறை இன்றளவும் தூய்மையான வடிவில் இருக்கின்றது. இப்பூமிப் பந்தில் வாழும் பல

எடியென் டெனியே

பிரேஞ்சு சிந்தனையாளர் மற்றும், ஓவியர்

எனவே ஹதீஸ் என்பது இஸ்லாத்தின் மூலாதாரங்களுள் இரண்டாவதாகத் திகழ்கின்றது. நபியவர்களின் சொல், செயல், அங்கீகாரம், வர்ணணைகள் என்பன யாவும் அறிவிப்பாளர் தொடர் அறுபடாத சரியான அமைப்பில், நபியவர்கள் அறிவித்ததாக இடம்பெறும் அனைத்தும் ஹதீஸ் என அழைக்கப்படும். அல்குர்ஆனில் பொதுவாகவோ, குறிப்பிடப்பட்டோ, அல்லது சுருக்கமாகவோ கூறப்பட்டிருக்கும் விடயங்களை தெளிவுபடுத்துமாறு அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகிறான், "மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தப் போதனையை உமக்கு அருளினோம்." *(அல்குர்ஆன் 16:44)*

எனவே ஹதீஸ் என்பது அல்குர்ஆனுக்கு விளக்கமாக இடம்பெற்றிருப்பதை நம்மால் காண முடிகின்றது. நபி ﷺ அவர்கள் தனக்கு இறக்கப்படுவதை சொல்லாலோ, செயலாலோ, அல்லது அவை இரண்டாலுமோ விளக்கமாகக் கூறுவார்கள். எனவே அல்குர்ஆனின் சில சட்டதிட்டங்களுக்கு விளக்கம் சொல்லும் வகையில் ஹதீஸ் அல்குர்ஆனை விட வேறுபட்டிருக்கின்றது.

ஹதீஸ் என்பது சட்டங்கள் அடிப்படையிலும், கொள்கை, வணக்க வழிபாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், ஒழுக்க விழுமியங்கள் போன்ற அனைத்திலும் செயல்முறை அமுலாக்கமாகத் திகழ்கின்றது. நபி ﷺ அவர்கள் தனக்கு ஏவப்பட்ட விடயங்களைக் கடைபிடித்து, அவற்றை மக்களுக்கு ஏவினார்கள். தான் செய்தது போலவே அவற்றை அவர்களும் செய்யுமாறு கட்டளையிட்டார்கள். உண்மையான விசுவாசத்தை அடைய வேண்டுமானால் நபியவர்களை அச்சொட்டாகப் பின்பற்றுமாறு அல்லாஹ் மக்களுக்கு ஏவுகின்றான். "அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி, அல்லாஹ்வை அதிகம் நினைக்கும் உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது."

"அல்குர்ஆனும், ஹதீஸும் ஒன்றோடு ஒன்று

"அல்குர்ஆனைத் தான் ஹதீஸும் போதிக்கின்றது. அது முஹம்மத் நபியின் சொல், செயல், வழிகாட்டல் போன்றவற்றால் உருவான ஒன்றாகும். வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திற்குமான முழுமையான செயல் வடிவை ஒருவர் ஹதீஸிலிருந்தே பெற்றுக்கொள்ள முடியும். ஹதீஸ் அல்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கின்றது. அதற்கு விளக்கமாகவும், அது இல்லாமல் இதுவும் இல்லை என்னும் நிலையிலும் ஹதீஸ்

ஜாக் ரேஸ்லர்
பிரேஞ்சு நாட்டைச் சேர்ந்த
கீழைத்தேயவாதி

(அல்குர்ஆன் 33:21)

நன்கொடையாகத் திகழும் நபி வழி

"முஹம்மதின் வழிமுறையை நடைமுறைப்படுத்துவது, இஸ்லாத்தையும் அதன் வளர்ச்சியையும் பாதுகாப்பதற்குச் சமனாகும். இதனை யாராவது விட்டுவிட்டால் அவர் இஸ்லாத்துக்கு கலங்கம் விளைவித்த

லியோபோல்ட் வைஸ்

ஆஸ்திரிய சிந்தனையாளர்



நபியவர்களின் சொற்களையும், செயல்களையும் ஸஹாபாக்கள் தங்களுக்குப் பின்னால் வந்தவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். அவர்களும் தங்களுக்குப் பின்னால் வந்தவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். இப்படியே ஹதீஸ்களைப் படிப்பவர்கள் அவற்றை கோர்வை செய்ய ஆரம்பித்தனர். ஹதீஸை கோர்வை செய்பவர்கள் அதனை நபியவர்கள் கூறியதாக அறிவிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார்கள். நபியவர்களுக்கும் தனக்கும் மத்தியில் இருக்கும் அறிவிப்பாளர் தொடர் எவ்வளவு சுருக்கமானதாக இருக்கின்றதோ அந்த அளவுக்கு அவர்களின் கௌரவமும் அதிகரித்தது. இவ்வாறு நிலவும் அறிவிப்பாளர் தொடரில் இருக்கும் அனைத்து அறிவிப்பாளர்களும் உறுதியானவர்களாகவும், நீதமானவர்களாகவும், அதிக ஞாபக சக்தி மிக்கவர்களாகவும், உண்மையாளர்களாகவும்

ஹதீஸ்கள் ஒன்றுதிரட்டப்படல்

'ஹதீஸ்கள் எனப்படுபவை நபி முஹம்மத் கூறியதாக அவரது தோழர்கள், அல்லது முஹம்மதிடமிருந்து கேட்டோரிடமிருந்து நீண்ட அறிவிப்பாளர் தொடருடன் காணப்படும் கூற்றாகும். இது தீவிர ஆய்வின் பின்னர் ஏற்றுக்கொள்ளத்தக்க அம்சமாக கருதப்படும். இவ்வாறு தான் அதிகமான

ஹதீஸ்கள் ஒன்றுதிரட்டப்படல்

பிரேஞ்சு நாட்டைச் சேர்ந்த கீழைத்தேயவாதி

الطريق إلى السعادة
The Path to Happiness

மகிழ்ச்சிக்கான வழி

மகிழ்ச்சிக்கான வழி

மகிழ்ச்சியின் தெளிவும், அதன் யார்த்த நிலையும்.

மகிழ்வென்பது இன்பங்களை மாத்திரம் கொண்டதல்ல.

இல்லை, மகிழ்வென்பது அமைதியிலும் கிடையாது.

மகிழ்வுக்கான வழி... மனிதனுக்கு அவனது உள்ளத்துடனும், வாழ்வுடனும், பிரபஞ்சத்துடனும் சமரச நல்லிணக்கத்தை உண்டுபன்னுகின்றது.

மகிழ்ச்சிக்கான வழியின் அடையாளங்கள்.

இஸ்லாத்தின் அடிப்படையில் இவ்வுலக மகிழ்விற்கான காரணங்கள்

துன்பங்களும், துர்ப்பாக்கியங்களும் ஒருவனை மகிழ்வுப்பாதையை விட்டும் திசை திருப்பிவிடும்.

மகிழ்ச்சிக்கான வழி

மகிழ்ச்சியின் தெளிவும், அதன் யதார்த்த நிலையும்.

மகிழ்வு என்ற சொல்லின் அர்த்தத்தைப் புரிவதில் அனேகமானவர்கள் பலவாறான கருத்துக்களைக் கூறி வருகின்றனர். சிலர் இதை இன்பம், ஓய்வு, பட்டம், பதவி, பணம், பிரபல்யம் போன்றவற்றோடு இணைந்த ஒன்று எனக் கருதுகின்றனர். இதனால் அதிகமானவர்கள் மகிழ்வை அடந்துகொள்வதற்காய், இவற்றைத் தேடி தங்கள் வாழ்நாள் முழுவதையும் அதிலே கழிக்கின்றனர். உண்மை தான். மகிழ்வென்பது மனிதனின் உள்ளத்தில் தோன்றுகின்ற பொலிவு, களிப்பு, எதையும் பொருந்திக்கொள்ளும் தன்மை, மன அமைதி போன்ற கலவைகளால் உருப்பெருகின்ற ஓர் உணர்வாகும். இதன் அடிப்படையில் நோக்கினால், மகிழ்வை அடையும் விதங்கள், சந்தர்ப்ப சூழ்நிலைகள், இயல்பு நிலைகள், தான் கவனம் செலுத்தும் விடயங்கள், பல்வேறு சமூகக் கலாச்சாரங்கள் என அனைத்துக் கட்டங்களிலும் ஒருவருக்கொருவர் வித்தியாசப்படுகின்றன. சிலர் சொத்து செல்வம், வீடு வாசல்கள், ஆரோக்கியம் போன்றவற்றில் மகிழ்வு இருப்பதாகக் கருதுகின்றனர். வேறு சிலர் மனைவி மக்கள், பிள்ளை குட்டிகள், தொழில், கல்வி போன்றவற்றில் இருப்பதாகக் கருதுகின்றனர். இன்னும் சிலர் காதலித்தல், இடையூறுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளல்,

அமைதி, மகிழ்வு போன்றவற்றுக்கான மார்க்கம்

"நான் எனக்குள்ளே கேட்டுக்கொண்டேன், : முஸ்லிம்கள் ஏழைகளாக இருந்தும் ஏன் மகிழ்வாக உள்ளனர்? ஸ்வீடன் நாட்டவர்கள் செல்வச் செழிப்புடன் இருந்தும் ஏன் நிம்மதியற்ற வாழ்வை உணர்கின்றனர்? எனது நாடான சுவிஸும் பெரும் செல்வச் செழிப்பு உள்ள நாடாக இருந்தும் இங்கும் நான் இதைத் தான் உணர்கிறேன். அப்போது தான் நான் கீழைத்தேய மதங்களைப் படிக்க ஆரம்பித்தேன். முதலில் இந்து மதத்தைப் படித்தேன். அது எனக்கு போதிய திருப்தியை அளிக்கவில்லை. பின்னர் இஸ்லாத்தைப் படித்தேன். அப்போது தான் எனக்கு உண்மை புரிந்தது. அது ஏனைய மார்க்கங்களுக்கு முரண்படாமல் அவற்றின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் காணப்பட்டது. இதுவே இறுதி வேதம். இதனைப் படித்த பின்னர் தான் நான் நிம்மதியாக இருப்பதை

ரூகியா டோபோக்கியா

சுவிஸ் நாட்டின் சிந்தனையாளர், மற்றும் பத்திரிகையாளர்

ஏழைகளுக்கு உதவி புரிதல், துறவரம் பூண்டல் போன்றவற்றிலே மகிழ்வு இருப்பதாகக் கருதுகின்றனர். இவற்றில் ஆச்சரியமான விடயம் என்னவெனில் இவர்களில் யாராவது ஒருவரிடம், "நீங்கள் உண்மையிலே மகிழ்வை அனுபவிக்கிறீர்களா?" எனக் கேட்டால், "ம்ம் ... இல்லை" என்றே கூறுகிறார்.

எனவே மகிழ்வு என்பதன் யதார்த்த நிலை ஆலுக்கு ஆல், சமூகத்துக்குச் சமூகம் மாறுபடுவதை இதனூடாக அவதானிக்க முடிகின்றது. சர்வதேச மட்டத்தில் மகிழ்வை வரையறுப்பதற்காக நிறைய ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் எப்பிரதேசத்தில் வாழும் குடிமக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றனர் என்ற தொனியில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவு ஆராய்ச்சியாளர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அனைத்து வசதிகளும் கொண்ட அமெரிக்க மக்கள் மகிழ்சியற்ற வாழ்வை வாழ்வதாகவும், ஏழ்மையில் வாடுகின்ற நைஜீரிய மக்கள் அதிக மகிழ்வோடு வாழ்வதாகவும் அவ் ஆய்வு தெரிவித்தது.

இது அமெரிக்க சஞ்சிகையான நியூஸ் வீக் மேற்கொண்ட ஆய்வின் முடிவாகும். தனது ஆய்வுக்காக பெரும்பான்மை இனமாக முஸ்லிம்கள் காணப்படும் நைஜீரியா, காலணித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த மெக்ஸிகோ, வெணிசூலா, சால்வடார் முதலிய நான்கு நாடுகளை தேர்வு செய்திருந்தது. என்றாலும் இவ் அறிக்கையின் படி அதகமான அமெரிக்கர்களின் கருத்து, மகிழ்வென்பது வசதி வாய்ப்புக்கள், சொத்து செல்வங்கள் போன்றவற்றோடு சம்பந்தப்படவில்லை என்பதாக இருக்கின்றது.(1) முதலாளித்துவத்தின் மிகத் தீவிர வடிவத்தினால் உருப்பெற்ற இச் செயல்முறைவாத சமூகத்தில் இப்படி நிலவுவது மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. ஏனெனில் இச் சஞ்சிகை மேற்கொண்ட இம்முயற்சியின் நோக்கம், ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தில் மார்க்கம் என்ற ஒன்று பரவி, அதில் மக்கள் தங்கள் உள்ளங்களில் ஏற்படும் நோய்வகளுக்கான சிகிச்சையை, மகிழ்ச்சியை அதில் தேட முடியாது என்பதாகவே இருந்தது(2). அதன் அடிப்படையிலே இவ் ஆய்வை மேற்கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

மனித வர்க்கத்தின் சந்தோசம்

"என் சிந்தனையில் தோன்றுவதை கூறாமல் இருக்க முடியாது. மேற்கத்தேய நவீன நகரமயமாக்கல் உள்ளங்களை அழித்துவிட்டன. மனித சந்தோசத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டன. மனிதர்களிடம் மூதேவித்தனங்களையும், குரோத மனப்பான்மையையும் விதைத்துவிட்டன. இஸ்லாத்தில் உள்ளது போன்று மனித நேயத்தை ஆதரிக்கும் வகையிலோ, அவர்களுக்கு பூரணமான

நஸீம் சூசே

ஈராக்கிய யூத விரிவுரையாளர்

(1) நியூஸ்வீக் சஞ்சிகை, அறபுப் பதிப்பு, 2004/8/3, பக்.58

(2) நியூஸ்வீக் சஞ்சிகை, அறபுப் பதிப்பு, 2005/9/6

எனவே மகிழ்வென்பது என்ன, அதை எவ்வாறு அடைந்துகொள்ள முடியும் போன்ற கேள்விகளுக்கான விடைகளை சில துறைசார் அறிஞர்களின் கருத்துக்களினூடாக நோக்குவோம். பிரபல தத்துவ ஞானியான பிளேட்டோ, மகிழ்வென்பது ஞானம், வீரம், பத்தினித்தனம், நீதம் போன்ற உளநற்பண்புகளைக் குறிப்பதாகவும், ஒரு மனிதன் மகிழ்வை அனுபவிக்க வேண்டுமானால் அவனின் உயிர் வேறொரு உலகுக்குச் செல்ல வேண்டும் எனவும் கூறியுள்ளார். இவரின் மாணவரான அரிஸ்டோட்டில் குறிப்பிடுகையில், மகிழ்வென்பது இறைவனிடமிருந்து கிடைக்கப்பெறும் நன்கொடை எனவும், அது உடல் நலம் மற்றும் முறையான பிராணவாயு, வளங்களைப் பெற்று அவற்றை சிறந்த முறையில் உபயோகித்தல், தன் வேலையில் கவனம் செழுத்தி, அதன் நோக்கத்தை நிறைவேற்றல், சிறந்த அறிவு மற்றும் தூய்மையான கொள்கைச் சிந்தனை அவனிடம் குடிகொள்ளல், கௌரவம் மற்றும் மக்களுக்கு நன்மைகளை செய்தல் முதலிய ஐந்து பரிணாமங்களில் இடம்பெறுவதாகவும் குறிப்பிடுகிறார். உளவியல் அடிப்படையில் நாம் மகிழ்வை நோக்கினால், ஒரு மனிதன் தனது வாழ்வைப் பொருந்திக்கொள்ளும் அளவுகோலை வைத்தோ, அல்லது தொடர்ந்து ஏற்படும் நல்ல உணர்வுகளின் பிரதிபலிப்புக்களைத் திரட்டியோ மகிழ்வை மட்டிட முடியும் எனக் கூறுவதைக் காணமுடிகின்றது3. என்றாலும் மகிழ்வு சம்பந்தமாக ஏற்பட்டுள்ள இத்தகைய முரண்பட்ட கருத்துக்களைத் தீர்ப்பதற்காக சில கேள்விகளுக்கு விடை தேட வேண்டியுள்ளது. மகிழ்வு என்றால் என்ன? எவ்வாறு ஒருவனால் மகிழ்ச்சியாக இருக்க முடிகின்றது?, மகிழ்வென்பது வெறுமனே இன்பங்களை தீர்த்துக்கொள்வதில் மாத்திரம் தங்கியுள்ளதா?? இதோ...

மகிழ்வென்பது இன்பங்களை மாத்திரம் கொண்டதல்ல.

அதிகமான, பல்வேறுபட்ட இன்பங்கள் மனிதனை சூழ்ந்த வண்ணமே இருக்கின்றன. அதிகமானவர்கள் இவற்றின் பின்னால் மகிழ்வைத் தேடி அலைகின்றனர். ஓர் இன்பத்தை அடைந்து கொள்வதால் மகிழ்வை முழுமையாக அடைந்துவிட்டதாகக் கூறமுடியாது. நிரந்தரமற்ற இவ்வின்பத்தை அனுபவிப்பவர்கள் மகிழ்வை விட்டும் தாம் தூரச் செல்வதாக எண்ணுவர். எனவே பல்வேறுபட்ட வடிவங்களிலும், தன்மைகளிலும் காணப்படும் இன்பங்களில் மகிழ்வென்பதை நம்மால் பெற்றுக்கொள்ள முடியாது. அத்தோடு இன்பத்தையும், மகிழ்வையும் அனேகமானவர்கள் ஒன்றோடு ஒன்று கலந்துவிட்டதால் அதன் யதார்த்த நிலை உணரப்படுவதில்லை. உண்மையில் மகிழ்வும், இன்பமும் மனிதனின் உள்ளத்திற்கு மகிழ்வைத் தரும் விடயத்தில் தொடர்புபட்டதாக இருந்தாலும், மனிதனின் உள்ளத்தில் தொடர்ந்து இருக்கும் விடயத்தில் இன்பம் வேறுபடுகின்றது. இன்பம் தனது நிரந்தரத் தன்மையை இழப்பதால் கைசேதமும், துயரங்களும் அவனை ஆட்கொல்கின்றன. ஆனால் மகிழ்வானது அவனது உள்ளத்தில் அதிக காலத்திற்கு தாக்குப்பிடித்து நிற்கின்றது.

இவ்வாறு புரிதலில் ஏற்படும் கோலாரினால் அதிகமானவர்களுக்கு இன்பத்திலும், மகிழ்விலும் குழப்பம் ஏற்படுகின்றன. அனைத்து இன்பங்களிலுமே மகிழ்வு இருப்பதாக எண்ணி அவற்றை நாடிச் செல்கின்றனர். மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைவது ஒரு வகையான இன்பமாகும். அப்படி பிரபல்யமாக இருப்பவர்கள் ஒரு சபைக்கு வந்தால் அவர்களுக்கு எத்தனை மரியாதை, எத்தனை பாராட்டு... ஆனால் இப்படி பிரபல்யமாக இருக்கும் செல்வந்தர்கள், கௌரவ பதவிகளை வகிப்பவர்கள் போன்றோரில் எத்தனை பேர் துயரங்களினாலும், மனச்சோர்வினாலும் உளவியல் நிபுணர்களிடம் சிகிச்சைப் பெற்று வருகின்றனர் !!! எத்தனை பேர் இத்தோடு தமது வாழ்வு முடிந்து விட்டதாக எண்ணி, தற்கொலை செய்து கொண்டுள்ளனர்!!! தம்மை அதிகமாக பாலுறவில் ஈடுபடுத்தி, அதில் இன்பத்தைக் காணப் போய், எத்தனையோ பேர் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். செய்யத்தகாத காரியங்களில் தான் அதிக இன்பம் இருப்பதாக மனிதன் உணர்கிறான். பாலியல் திரைப்படங்களைப் பார்ப்பதில் இன்பமடைபவனின் உளவியலில் பாதிப்பு ஏற்படுகின்றது. அவனின் கௌரவ இணைப்புக்கள் துண்டிக்கப்படுகின்றன. சமூகத்தின் தூய்மையை கெடுக்கும் அளவுக்கு அவனின் நிலமை மோசமடைகின்றது. உணவில் இன்பத்தை அனுபவிக்கும் ஒருவன் அளவுக்கு மீறி உண்பதால் பல நோய்கள் ஏற்பட்டு வைத்தியசாலைகளின் வாசல்படியை மிதிக்கும் நிலை ஏற்படுகின்றது.

சில வேளைகளில் இன்பத்திற்கும், மகிழ்விற்கும் இடையிலுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ள இடமளிக்காமல் சில கோணங்களினால் அவனே குழப்பத்திற்கு ஆலாகிறான். சில சுயநலவாதிகளால், இன்பங்களில் பலதரப்பட்டவாறு மகிழ்வடையலாம் என அவனது சிந்தனை தூண்டப்படுவதால் அவர்களால் இவன் பயன்படுத்தப்படுகின்றான். போதைப் பொருளை உபயோகிக்கும் ஒருவன் முதலில் அதில் உள்ள இன்பத்தை மாத்திரம் அனுபவிக்க முயல்கிறான். கடைசியில் அவனே போதைப் பொருளுக்கு அடிமையாகி, அதனால் பல சமூக விரோத செயற்பாடுகளில் இறங்குகிறான்.

எத்தனையோ ஊடகங்கள் புதிது புதிதாக வரும் பொருட்களை விளம்பரப்படுத்தி, மக்களை அதன் பால் ஈர்க்க வைக்கின்றனர். ஆனால் அப்பொருட்களை வாங்கப்போகும் மக்கள் அதை விடவும் எட்வான்ஸாக உள்ள பொருட்களைத் தேடிச் செல்கின்றனர்.

ஆகையால் தாம் விரும்பும் அனைத்திலும் பூரணமான மகிழ்வை ஒருவனால் எதிர்பார்க்க முடியாமல் இருக்கின்றது. அவ்வாறு இருக்குமென்றிருந்தால் ஒவ்வொரு பணக்காரனும், தலைமைப் பதவியில் இருக்கும் ஒவ்வொரும் அதிக மகிழ்ச்சியைக் கொண்டாடுவோராய் இருந்திருப்பார்கள். இது தவிர பல ஆய்வறிக்கைகளும், கண்முன்னே நடந்தேறும் சம்பவங்களும் இதனை மறுக்கின்றன. ஒரு வேளை இது இவ்வுலகில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அல்லாஹ்வின் நியதியாகவும் இருக்கலாம். பணக்காரர்கள் தொலைக்கும் அதிகமான மகிழ்வுகளை ஏழைகள் அடைந்து கொள்கின்றனர். ஆனால் ஏழைகள் வாழும் வாழ்க்கை முறையை விட செல்வந்தர்கள் சிறந்த வாழ்க்கையையே வாழ்கின்றனர். ஒரு வேளை மகிழ்வு என்பது அமைதியில் இருக்குமோ.....!!!

இல்லை, மகிழ்வென்பது அமைதியிலும் கிடையாது.

அமைதியடைதல் தான் மகிழ்வு என அதிகமானவர்கள் எண்ணுகின்றனர். அமைதியடைய பல போராட்டங்களைக் கூட மேற்கொள்கின்றனர். அது தனக்கு கவலை, துன்பம், தனிமை, முட்டாள் தனம் போன்றவற்றை ஏற்படுத்துகின்ற விடயமாக இருந்தாலும் சரி, அவற்றை செய்து, அமைதியடைய முயல்கின்றனர். அதே சமயம் தன்னுடைய அமைதிக்காக வேண்டி தனது உடலை வருத்திக்கொள்கிறோமே என்ற உணர்வையும் மறந்து விடுகின்றனர். சில வேளைகளில் உடலை வருத்தி செயல்படுவது கூட பாரிய மகிழ்வை நம் மத்தியில் உண்டு பண்ணுகின்றது. கிணற்றில் விழுந்து, ஒரு குழந்தை உயிருக்காகப் போராடிக்கொண்டிருப்பதை நீங்கள் கண்டு, அதைக் காப்பாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆலாகின்றீர்கள் என வைத்துக்கொள்வோம். உடனே அக்கிணற்றின் ஆழத்தையோ, அதில் இருக்கும்

தண்ணீரின் நிலையையோ, அது அமைந்திருக்கும் இடத்தைப் பற்றியோ யோசிக்காமல் உங்களையும் மீறி அக்கிணற்றில் குதித்து அக்குழந்தையைக் காப்பாற்றுவீர்கள். அப்படி குதித்த உங்களுக்கு மேலிருந்து உள்ளே செல்லும் வரைக்கும் நிறைய அடிபட்டு, தோல் கிழிந்து பல நோவினைகள் ஏற்பட்டிருக்கும். அவை அனைத்தையும் பொருட்படுத்தாமல் உங்களால் ஓர் உயிர் பிழைத்ததை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள். அவ்வாறே தமது உடல், சிந்தனை போன்றவற்றை வருத்தி கல்விகற்கின்ற மாணவர்கள், இறுதியில் தங்கள் கல்வியின் பயனைக் கண்டுகொள்ளும் போது தான் பட்ட கஷ்டங்கள் அனைத்தையும் மறந்து மகிழ்ச்சியுருகின்றனர். விளையாட்டு வீரர் தமது உடல் களைப்படைவதை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. தனது விளையாட்டில் கவனம் செலுத்தி, அதன் மூலம் மகிழ்ச்சியுருகிறார். இயலாதவர்கள், தேவையுள்ளவர்கள் போன்றோருக்கு உதவுபவர் தமது சொத்து செல்வத்தை ஒரு பொருட்டாக நினைப்பதில்லை. தனது செல்வத்தால் அவர்கள் அடையும் மகிழ்வைக் கண்டு, பெருமையடைகிறார். இத்தகைய தருனத்தில், மனிதன் தனது அமைதியை உண்மையிலேயே அழித்துக்கொண்டு, அதன் மூலம் தனக்கு மகிழ்வு ஏற்படவேண்டுமென எண்ணுகிறான்.

இங்கு மகிழ்வுக்காகக் கூறப்பட்ட பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் கூட மகிழ்வின் யதார்த்த நிலையை அறியாமல் தடுமாற்றத்தில் தான் இருக்கின்றான். மகிழ்விற்கான உண்மையான அர்த்தத்தை அறிவதற்கு ஆர்வமாக இருப்பதோடு, அதனை அடைந்து கொள்ளும் வழிகளை அறிந்து கொள்வதற்கும் ஆவலாய் இருக்கிறான்.



வாழ்வென்பது சுமைதாங்கியல்ல

"அவள் தற்கொலை செய்வதற்கு முன் இறுதியாக அதில் பின்வருமாறு எழுதி வைத்திருந்தாள், 'என்னை மன்னித்துவிடுங்கள். வாழ்வென்பது

டெலீடா

உலகப் புகழ்பெற்ற பாடகி

1- மனிதன்:

எதற்காகப் படைக்கப்பட்டான்?

அல்லாஹ் கூறுகிறான், "அவனே உங்களை மண்ணிலிருந்தும் பின்னர் விந்துத் துளியிலிருந்தும் பின்னர் கருவுற்ற சினை முட்டையிலிருந்தும் படைத்தான். பின்னர் உங்களைக் குழந்தையாக வெளியேற்றுகிறான். பின்னர் உங்கள் பருவத்தை அடைகின்றீர்கள். பின்னர் முதியோராக ஆகின்றீர்கள். இதற்கு முன்பே கைப்பற்றப்படுவோரும் உங்களில் உள்ளனர். குறிப்பிட்ட காலக் கெடுவை நீங்கள் அடைகின்றீர்கள். நீங்கள் விளங்குவதற்காக (இதைக் கூறுகிறான்)" *(அல்குர்ஆன் 40:67)*

மனிதனின் அடிப்படை மண்ணும், இந்திரியத்துளியுமாகும். அவனின் இறுதி நிலை இத்துப்போகும் பிணமாகும். இவற்றுக்கிடைப்பட்ட காலத்தில் அசுத்தங்களை சுமக்கும் வண்டியாக இருக்கின்றான். அவனின் உடலிலிருந்து வெளியாகும் ஒவ்வொன்றும் அசுத்தமாகும். இப்படியிருந்துகொண்டு அல்லாஹ்வோடு அவன் தர்க்கம் செய்துகொண்டிருக்கிறான். அவனுக்கு நன்றிகெட்டவனாகவும் இருக்கின்றான். அல்லாஹ் கூறுகிறான், "மனிதன் சபிக்கப்பட்டு விட்டான். அவன் எப்படி நன்றி கெட்டவனாக இருக்கிறான்? எந்தப் பொருளிலிருந்து அவனை (இறைவன்) படைத்தான்? விந்துத் துளியிலிருந்து அவனைப் படைத்து அவனுக்கு (விதியை) நிர்ணயித்தான். பின்னர் வழியை அவனுக்கு எளிதாக்கினான். பின்னர் அவனை மரணிக்கச் செய்து மண்ணறைக்கு அனுப்புகிறான். பின்னர் தான் நாடும் போது அவனை எழுப்புவான்." *(அல்குர்ஆன் 80:17-22)*

அத்தோடு அவனை ஏனைய படைப்பினங்களை விட கண்ணியப்படுத்தியுள்ளான். முதல் மனிதர் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மலக்குமார்களை சிரம்பணியுமாறு செய்தான். இப்பிரபஞ்சத்திலிருக்கும் அனைத்தையும் அவனுக்கு பயனுள்ளதாக ஆக்கினான். பல வியத்தகு அம்சங்களை கண்டுபிடிக்கின்ற அறிவையும் அல்லாஹ் தான் அவனுக்கு வழங்கினான். "ஆதமுடைய மக்களை மேன்மைப்படுத்தினோம். அவர்களைத் தரையிலும், கடலிலும் சுமந்து செல்ல வைத்தோம். தூய்மையானவற்றை அவர்களுக்கு வழங்கினோம். நாம் படைத்த அதிகமான படைப்புகளை விட அவர்களைச் சிறப்பித்தோம்." *(அல்குர்ஆன் 17:70)*

மனிதன் தன்னை இவ் அம்சங்கள் மூலமாகத் தான் அறிந்து கொள்ள முடியும். இவற்றின் மூலமே அல்லாஹ் தனக்கு வழங்கியுள்ள புகழ், கௌரவம், பணம், அறிவு போன்ற அனைத்தும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கப்பெற்றுள்ளன என நம்பக்கை கொள்ள முடியும். அல்லாஹ் கூறுகிறான், "உங்களிடம் உள்ள ஒவ்வொரு அருட்கொடையும் அல்லாஹ்வுடையது. பின்னர் உங்களுக்கு ஒரு தீங்கு ஏற் பட்டால் அவனிடமே முறையிடுகின்றீர்கள்." *(அல்குர்ஆன் 16:53)*

மனிதன் என்பவன் வெறும் சதைகளாலும், எலும்புகளாலும் உருவாக்கப்பட்ட படைப்பாவான். அவனுக்கு உள்ளம் என்ற ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. அது தூய அறிவினாலும், நல்ல செய்றாபடுகளாலும் திருத்தப்பட வேண்டிய ஒன்று. இத்தகைய அமைப்பு அவனது இயலாமையையே

காட்டுகின்றது. இப்படி இயலாமையை தன்னகத்தே கொண்டுள்ளவனைத் தான் எந்தப்படைப்பினத்தாலும் சுமந்துகொள்ள முடியாத ஒன்றைக் கொடுத்து, அல்லாஹ் அவனை கௌரவப்படுத்தியுள்ளான். "வானங்கள், பூமி மற்றும் மலைகளுக்கு அமானிதத்தை நாம் முன் வைத்தோம். அதைச் சுமக்க அஞ்சி அவை மறுத்து விட்டன. மனிதன் அதைச் சுமந்து கொண்டான். அவன் அநீதி இழைப்பவனாகவும், அறியாதவனாகவும் இருக்கிறான்." (அல்குர்ஆன் 33:72)

மனிதனின் விசுவாசத்தில் ஏதாவது குறைகள் ஏற்படுகின்ற போது, அவனுக்கு இருக்கும் இரு பக்கங்களில், ஒன்றைப் பார்த்தால் எவ்வித நோக்கமோ, குறிக்கோளோ அற்ற உடம்பையும், அதில் காணப்படும் அசுத்தங்களையும், மனோ இச்சைகளையுமே அவனால் காணமுடியும். இந்நிலையில் தன் மனம் விரும்பிய போக்கில் செல்வதால் அவன் மிருகங்களுக்கு ஒப்பானவனாக மாறிவிடுகின்றான். "(ஏக இறைவனை) மறுப்போர் (இவ்வுலகில்) கால்நடைகள் தின்பது போல் தின்று அனுபவிக்கிறார்கள். நரகமே அவர்களுக்குத் தங்குமிடம்." (அல்குர்ஆன் 47:12)

அவனது இரண்டாவது பக்கமான கௌரவம், உயர்வு என்பவற்றை மறந்து வாழ்கின்ற போது, பெருமை, அநியாயம், அட்டூழியம் என்பன அவனிடம் தானாகவே ஏற்பட்டு, தாம் அல்லாஹ்விடமே மீள செல்ல இருக்கிறோம் என்பதையும் மறந்து, செயற்படுகிறான். "அவ்வாறில்லை! தன்னைத் தேவையற்றவன் எனக் கருதியதால் மனிதன் வரம்பு மீறுகிறான். உமது இறைவனிடமே திரும்பிச் செல்லுதல் உண்டு." (அல்குர்ஆன் 96:06)

எனவே முதலில் தன்னைப் பற்றியும், தனது சிறந்த இணக்கப்பாடுகள் பற்றியும் மனிதன் அறிந்துகொள்ள வேண்டும். அவனுக்கு கவலைகளும், துன்பங்களும் ஏற்படுவதற்கான முக்கியக் காரணமே அவன் தன்னைப் பற்றியோ, சமூகத்தில் தனது இடத்தைப் பற்றியோ அறிந்து கொள்ளாமல் இருப்பது தான். அவ்வாறே நான் யார்? எனது அந்தஸ்து என்ன? தன்னால் என்ன செய்ய முடியும்? என்பன பற்றியும் சிந்திப்பதே இல்லை.

தெளிவான பதில்

"இஸ்லாம் மார்க்கத்தைப் படிக்கும் போது ஒவ்வொரு மனிதனும் தனது உண்மையான, இயல்பான ஆழுமையையும், மனித உணர்வுகளையும் கண்டுகொள்கிறன். இதுவே உண்மையான மார்க்கம். இதில் தான் என்னுள் எழுந்த கேள்விகளுக்கான

ரோஸ் மேரி ஹொறா

ஆங்கிலப் பத்திரிகை



உன் பலத்தை அறிந்துகொள்

"மக்கள் மத்தியில் இவரின் செயற்பாடுகள் குறைத்து மதிப்பிடப்பட்டாலும், இவர் தன் மீது உறுதியாய் இருந்தார். தான் பாடசாலையிலிருந்து விரட்டப்படும் கூட மனம் தளரவில்லை. புதுக் கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்தார். அதன் பின் தான் மக்கள் மத்தியில் பிரபல்யமானார். இதில் முக்கியமான அம்சம் என்னவெனில் தன்னைப் பற்றியும், தன் பலத்தைப் பற்றியும் அறிந்துகொண்டால் பல சாதனைகளை

அடிசன்

ஏன் படைக்கப்பட்டான்?!

அல்லாஹ் தனது படைப்பினங்கள் அனைத்தையும் வீணாகப்படைக்கவில்லை. *"உங்களை வீணாகப் படைத்துள்ளோம்' என்றும் நம்மிடம் திரும்பக் கொண்டு வரப்படமாட்டீர்கள்' என்றும் நினைத்து விட்டீர்களா? உண்மையான அரசனாகிய அல்லாஹ் உயர்ந்தவன். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. (அவன்) கண்ணியமிக்க அர்ஷின் அதிபதி."* *(அல்குர்ஆன் 23:115-116)*

தன்னை வணங்க வேண்டு என்ற ஒரே நோக்கத்துக்காகவே தனது படைப்பினங்களைப் படைத்தான். வணக்கம் என்பது அவைகளின் வாழ்கை முழுவதையும் உள்ளடக்கியுள்ள அம்சமாகும். அதில் அவன் செய்யும் செயல்கள், வீண்விளையாட்டுக்கள் போன்ற அனைத்தும் உள்ளடங்கும். வெறும் உணர்வுகள் மாத்திரம் வணக்கமாக மாறிவிடாது. *"ஜின்னையும், மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே தவிர (வேறு எதற்காகவும்) நான் படைக்கவில்லை."* *(அல்குர்ஆன் 51:56)*

இவ் உண்மையை அறியாதவன் தொடர்ந்தும் தனது அறிவீனத்தினால் தண்டிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறான். எப்போதும் சந்தேகத்திலும், தடுமாற்றத்திலுமே அவனது வாழ்க்கை நகர்ந்துகொண்டிருக்கிறது. அவனது வணக்க வழிபாடு மகிழ்வை விட்டும் பிரிகின்றது, மகிழ்வு இவ்வுலகை விட்டும் பிரிகின்றது. இவ்வுலகம் மறு உலகை விட்டும் பிரிகின்றது. இறுதியில் கைசேதப்பட்டு என்ன பயன்? அவன் இவைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்பதற்காகத்தானே அல்லாஹ் தனது படைப்புக்கள் அனைத்தும் அவனுக்கு பயனுள்ளதாக ஆக்கிக் கொடுத்தான்.. *"வானங்களில் உள்ளவை, பூமியில் உள்ளவை அனைத்தையும் அவன் உங்க ளுக்குப் பயன்படச் செய்தான். சிந்திக்கும் சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன."* *(அல்குர்ஆன் 45:13)*

தன்னைச் சோதிப்பதற்காகவே தனது இறைவன் இவ்வுலகின் பிரதிநிதியாகத் தன்னை ஆக்கியுள்ளான் என்பதையும் மனிதன் அறிந்துகொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், *"அவனே உங்களைப் பூமியில் வழித்தோன்றல்களாக ஆக்கினான். அவன் உங்களுக்கு வழங்கியவற்றில் உங்களைச் சோதித்துப் பார்ப்பதற்காக உங்களில் சிலரை விட சிலருக்குத் தகுதிகளை உயர்த்தினான். உமது இறைவன் விரைவாகத் தண்டிப்பவன்; அவன் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்."* *(அல்குர்ஆன் 06:165)*

2- வாழ்வு:

மனிதன் தன்னைப் பற்றி அறிந்துகொண்டதன் பின்னர், தன்னோடு தொடர்புபட்ட வாழ்க்கையின் அமைப்பைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அதில் அதிகமான இன்பங்களும், களிப்புக்களும், தான் விரும்பியதை அடையவேண்டுமென்ற பேராசைகளும் கொட்டிக்கிடக்கின்றன. இப்படிப்பட்ட வாழ்க்கையின் நோக்கம் என்ன? ஆம் அதன் உன்னத நோக்கமே யார் நல்ல செயல்களை செய்கின்றனர் என்பதனை சோதிப்பது தான். அதற்காகத் தான் அல்லாஹ் வாழ்வையும், மரணத்தையும் ஏற்படுத்தியுள்ளான். "உங்களில் அழகிய செயலுக்குரியவர் யார் என்பதைச் சோதிப்பதற்காக மரணத் தையும், வாழ்வையும் அவன் படைத்தான். அவன் மிகைத்தவன்; மன்னிப்பவன்." (அல்குர்ஆன் 67:02)

இது தான் உண்மை. இதைத் தான் அதிகமானவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. அல்லாஹ் கூறுகிறான், "இவ்வுலக வாழ்க்கைக்கு உதாரணம், வானிலிருந்து நாம் இறக்கிய தண்ணீரைப் போன்றது. மனிதர்களும், கால்நடைகளும் உண்ணுகிற பூமியின் தாவரங்களுடன் அத்தண்ணீர் கலக்கிறது. முடிவில் பூமி அலங்காரம் பெற்று கவர்ச்சியாக ஆகிறது. அதன் உரிமையாளர்கள் அதன் மீது தமக்குச் சக்தி இருப்பதாக நினைக்கும் போது நமது கட்டளை இரவிலோ, பகலிலோ அதற்கு (பூமிக்கு) கிடைக்கிறது. உடனே நேற்று அவ்விடத்தில் இல்லாதிருந்தது போல் அறுக்கப்பட்டதாக அதை ஆக்கி விடுகிறோம். சிந்திக்கின்ற சமுதாயத்திற்கு இவ்வாறே சான்றுகளைத் தெளிவுபடுத்துகிறோம்." (அல்குர்ஆன் 10:24)

மேலும், "தண்ணீரை வானத்திலிருந்து நாம் இறக்கினோம். அது பூமியின் தாவரங்களுடன் இரண்டறக் கலந்தது. (பின்னர் காய்ந்து) அவை சருகுகளாக மாறின. அவற்றைக் காற்று அடித்துச் சென்றது. இதை இவ்வுலக வாழ்வுக்கு உதாரணமாகக் கூறுவீராக! அல்லாஹ் அனைத்துப் பொருட்களின் மீதும் ஆற்றலுடையவன்." (அல்குர்ஆன் 18:45)

தற்போது நாம் வாழும் வாழ்க்கையானது ஓர் நடைபாதை போன்றதாகும். இங்கு தங்குவதற்கு எந்த இடமும் கிடையாது. அவ்வாறே இவ்வுலகம் முடிவடைவதோடு எமது வாழ்க்கையும் முடிவடைந்து விடாது. மறுமையில் இதற்கு மாற்றமான நிரந்தரமான வாழ்வு நம்மை காத்துநிற்கின்றது. அதன் பக்கம் கூட்டிச் செல்லும் பாலமாகத்தான் இவ்வுலக வாழ்வு இருக்கின்றது.

இதில் அதிகமான வீண்கேளிக்கைகளும், களியாட்டங்களும், கவர்ச்சியும் மாத்திரமே நிறைந்து காணப்படுகின்றன. இதைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான். "'விளையாட்டும், வீணும், கவர்ச்சியும், உங்களுக்கிடையே பெருமையடித்தலும், பொருட் செல்வத்தையும், மக்கட் செல்வத்தையும் அதிகமாக்கிக் கொள்வதும் ஆகியவையே இவ்வுலக வாழ்க்கை.' என்பதை அறிந்து கொள்ளுங்கள்! (இவ்வுலகின் நிலை) மழையைப் போன்றது. அதன் (காரணமாக முளைத்த) பயிர்கள் (ஏக இறைவனை) மறுப்போருக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. பின்னர் அது காய்ந்து விடுகிறது. அது மஞ்சள் நிறமாக மாறுவதைக் காண்பீர். பின்னர் கூளமாக ஆகிறது. மறுமையில் (தீயோருக்குக்) கடும் வேதனையும், (நல்லோருக்கு) அல்லாஹ்விடமிருந்து மன்னிப்பும், திருப்தியும் உண்டு. இவ்வுலக வாழ்வு ஏமாற்றும் வசதிகள் தவிர வேறில்லை." (அல்குர்ஆன் 57:20)

மேற்கூறப்பட்ட வசனங்களில் இவ்வுலகம் அட்பமான, சிறுமையான ஒன்று எனவும், உள்ளம் அவற்றை விட்டும் தூர விலகி, மறுமையுடன் தொடர்புள்ளதாகவே இருக்க வேண்டும் எனவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வுலகை இங்குள்ள பொருட்களுடன் ஒப்பிட்டு, சீர்த்தூக்கிப் பார்க்கின்ற போது இது ஓர் பிரம்மாண்ட வாழ்வு என்றே நமது சிந்தனையில் தோன்றும். அதையே மறுவுலகோடும், அங்குள்ள வாழ்வோடும் ஒப்பிட்டு, சீர்தூக்கிப் பார்க்கின்ற போது இது அட்பமான, சிறியதோர் வாழ்வு என்ற உணர்வு நம்மிடையே தோன்றும். வேலைப்பழு நிறைந்த இவ்வுலகில தெரியும் அனைத்தும் உண்மை தான். உண்மையை மாத்திரம் தேடுகின்ற போது நமது சிந்தனையில் தோன்றும் இவையனைத்தும் யதார்த்தம் தான். அதற்காக இவ்வுலகின் ஆசாபாசங்களை விட்டும் துறவரம் பூண்ட வேண்டுமென்றோ, இதில் உள்ளவற்றை பராமரிக்காமல் விட்டு விடவேண்டுமென்றோ அல்குர்ஆன் குறிப்பிடவில்லை. எமது உணர்வுகளை சீர்தூக்கிப் பார்த்து, வீணானவைகளிலும், ஏமாற்றம் தரும் விடயங்களிலும் செல்லாமல் நல்லதோர் வாழ்வை இங்கு அமைத்துக்கொள்ளுமாறே அது எமக்குக் கட்டளையிடுகின்றது. மறுவுலகுக்கான பாலமாய் இருக்கும் இவ்வுலகைக் கடந்து செல்லச் செல்ல, எவ்வளவு சீக்கிரமாக நீங்கிக் கொண்டே செல்கின்றதோ, இங்கு இருக்கும் எந்தவொன்றும் நிரந்தரமானவை கிடையாது என்பதை வலியுறுத்திக்கொண்டே இருக்கின்றது. இவ்வுலகில் மனிதன் செய்யும் செயல்களுக்கேற்ற வாரே மறுமையில் அவனது வாழ்வும் அமையப்பெற இருக்கின்றது. ஆகையால் இவ்வுலகம் அவனுக்கான ஓர்

பரீட்சை மண்டபமாகவும் இருக்கின்றது. அவனைச் சூழ இருக்கும் இன்பங்களும், களிப்புக்களும், ஆசாபாசங்களும் அவனோடு சிறிது காலத்திற்கே சேர்ந்து இருக்கும். அவனது மரணத்தோடு அவனைவிட்டும் பிரிந்து விடும். மரணத்தின் பின் தனது மண்ணறைக்கு எதைக் கொண்டு செல்ல இருக்கிறான் ? அவனுக்குத் துணையாக யார் செல்ல இருக்கின்றனர்? "'உங்களுக்கு நாம் வழங்கியவற்றை யெல்லாம் உங்கள் முதுகுக்குப் பின்னால் விட்டு விட்டு உங்களை ஆரம்பத்தில் நாம் படைத்தது போல் தன்னந்தனியாக நம்மிடம் வந்து விட்டீர்கள்! தெய்வங்கள் என்று நீங்கள் கருதிக் கொண்டிருந்த, உங்கள் பரிந்துரையாளர்களை நாம் உங்களுடன் காணவில்லையே? உங்களுக்கிடையே (உறவுகள்) முறிந்து விட்டன. நீங்கள் கற்பனை செய்தவை உங்களை விட்டும் மறைந்து விட்டன' (என்று கூறப்படும்.)" (அல்குர்ஆன் 06:94)

இதனை அதிகமானவர்கள் மறந்தே தமது வாழ்வில் மூழ்கிக் கிடக்கின்றனர். "இவ்வுலக வாழ்க்கையில் வெளிப்படையாகத் தெரிபவற்றை அவர்கள் அறிவார்கள். அவர்கள் மறுமையைப் பற்றி கவனமற்றுள்ளனர்." (அலகுர்ஆன் 30:07)

அப்படியானால் அல்லாஹ்வை சந்திக்க இருக்கின்றோமே என்பதை மறந்துவிட்டு, இவ்வுலக வாழ்வின் லயித்துக் கொண்டிருப்பவர்களின் நிலை என்ன? "நமது சந்திப்பை நம்பாது, இவ்வுலக வாழ்வில் திருப்தியடைந்து அதிலேயே நிம்மதி அடைவோரும், நமது வசனங் களைப் புறக்கணிப்போரும், (தீமையை) செய்து கொண்டிருந்ததன் காரணமாக அவர்களின் தங்குமிடம் நரகமாகும்." (அல்குர்ஆன் 10:07-08)

அவ்வாறு எல்லாவற்றை விடவும் இவ்வுலக வாழ்வையே மேன்மையாகக் கருதுவோரின் நிலை என்ன? "யார் வரம்பு மீறி, இவ்வுலக வாழ்வைத் தேர்ந்தெடுத்துக் கொண்டானோ அவனுக்கு நரகமே தங்குமிடம். யார் தமது இறைவன் முன்னே நிற்பது பற்றி அஞ்சி, மனோ இச்சையை விட்டும் தன்னை விலக்கிக் கொண்டாரோ சொர்க்கமே (அவரது) தங்குமிடம்." (அல்குர்ஆன் 79:37-41)

இவருக்கு இவ்வாறு நிகழக் காரணம், வீண்கூத்துக்களையும், கேளிக்கைகளையும், தமது மார்க்கமாகப் பின்பற்றியதேயாகும். அல்லாஹ் கூறுகிறான், "அவர்கள் தமது மார்க்கத்தை வீணாகவும், விளையாட்டாகவும் ஆக்கிக் கொண்டனர். இவ்வுலக வாழ்க்கை அவர்களை மயக்கி விட்டது. இந்த நாளைச் சந்திக்க வேண்டிவரும் என்பதை அவர்கள் மறந்து, நமது வசனங்களை அவர்கள்

மேலும் இஸ்லாமிய மார்க்கத்தை கோணலனான மார்க்கமாய் சித்தரித்தனர். "அவர்கள் மறுமையை விட இவ்வுலக வாழ்வை விரும்புகின்றனர். அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுக்கின்றனர். அதைக் கோணல் மார்க்கமாகச் சித்தரிக்கின்றனர். அவர்கள் (உண்மையிலிருந்து) தூரமான வழி கேட்டில் உள்ளனர்" (அல்குர்ஆன் 14:03)

மனிதன் தனது பார்வையில் இவ்வுலகை இழிவான ஒன்றாகக் கருதவேண்டுமென்ற அடிப்படையில், இதைப் பராமரிக்காமல் விட்டுவிட்டு, சிக்கனமான அறிவு, செயற்பாடுகள் போன்றவற்றை சம்பாதித்து, எப்போதும் மரணத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்பது இதன் அர்த்தம் கிடையாது. மாறாக அவன் இவ்வுலகில் சிறந்த முறையில் வாழ வேண்டும். அல்லாஹ் கூறுகிறான். "அல்லாஹ் உனக்குத் தந்தவற்றில் மறுமை வாழ்வைத் தேடு! இவ்வுலகில் உன் கடமையை மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு நல்லுதவி செய்தது போல் நீயும் நல்லுதவி செய்! பூமியில் குழப்பத்தைத் தேடாதே! குழப்பம் செய்வோரை அல்லாஹ் விரும்ப மாட்டான் (என்றும் கூறினர்)." (அல்குர்ஆன் 28:77)

மேலும், "உங்களுக்கு எந்தப் பொருள் வழங்கப்பட்டாலும் அது இவ்வுலக வாழ்க்கையின் வசதியும், அலங்காரமுமாகும். அல்லாஹ்விடம் இருப்பதே சிறந்தது; நிலையானது. விளங்க மாட்டீர்களா?" (அல்குர்ஆன் 28:60)

இக்கண்ணோட்டத்தில் பார்க்கின்ற போது, மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள வாழ்க்கையானது ஓர் பொக்கிஷமாகக் கருதப்படுகின்றது. அதை அவன் சிறந்த முறையில் கவனித்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் நிரந்தர வாழ்வை அளிக்க இருக்கும் மறுமையை விட இதற்கு முக்கியத்துவம் அளிக்காமலும் இருக்க வேண்டும். ஏனெனில் இங்கு காணப்படும் அனைதும் இவ்வுலகத்தோடு சம்பந்தப்பட்ட பொருட்களும், அலங்காரங்களுமாகும். அல்லாஹ் கூறுகிறான், "பெண்கள், ஆண் மக்கள், திரட்டப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளியின் குவியல்கள், அழகிய குதிரைகள், கால்நடைகள், மற்றும் விளை நிலங்கள் ஆகிய ஆசைப்படும் பொருட்களை நேசிப்பது மனிதர்களுக்கு கவர்ச்சியாக்கப்பட்டுள்ளது. இவை இவ்வுலக வாழ்க்கையின் வசதிகள். அல்லாஹ்விடம் அழகிய புகலிடம் உள்ளது" (அல்குர்ஆன் 03:14)

மேலும், "செல்வமும், பிள்ளைகளும் இவ்வுலக வாழ்க்கையின் கவர்ச்சியாகும். நிலையான நல்லறங்களே உமது இறைவனிடம் கூலியில் சிறந்ததும், எதிர்பார்க்கப்படுவதில் சிறந்ததுமாகும்." (அல்குர்ஆன் 18:46)

அதே நேரம் இவ்வுலகில் கிடைக்கும் சிறந்த பொருட்களை வெறுத்து ஒதுக்கவும் கூடாது. "'தனது அடியார்களுக்காக அல்லாஹ் வழங்கிய அலங்காரத்தையும், தூய்மையான உணவுகளையும் தடை செய்பவன் யார்?'' என்று கேட்பீராக!

''அவை இவ்வுலக வாழ்க் கையிலும் குறிப்பாக கியாமத் நாளிலும் நம்பிக்கை கொண்ட மக்களுக்குரியது'' எனக் கூறுவீராக! அறிகின்ற சமுதாயத்திற்கு இவ்வாறே சான்றுகளை விளக்குகிறோம்." (அல்குர்ஆன் 07:32)

மனிதன் தனது வாழ்வையும் சரியான முறையில் விளங்கியதன் பின்னர், பேரின்பங்களை ஊட்டக்கூடிய இவ்வுலக வாழ்வோடு, என்னிடம் இருக்கும் எதுவும் நிறந்தரமானவை அல்ல என்ற உறுதியுடன் போராடுகிறான். எனவே இங்கு அவன் அடைந்துகொள்ளும் இன்பங்களை வீண்விரயம் செய்யாமல் அவற்றைப் பயன்படுத்திக்கொள்கிறான். அவ்வாறே இவ்வுலக வாழ்க்கையில் தான் நினைத்த எதுவும் நடைபெறாது, அல்லாஹ் நாடியவை மட்டுமே நடைபெறும் என்பதையும் சரிவர விளங்கிக் கொள்வதால் அவனுக்கு எந்தத் துன்பம் நிகழ்ந்தாலும் அதை பெரிதுபடுத்தாமல் இருக்கப் பழகிக் கொள்கிறான். "இந்தப் பூமியிலோ, உங்களிடமோ எந்தத் துன்பம் நிகழ்ந்தாலும் அதை நாம் உருவாக்குவதற்கு முன்பே பதிவேட்டில் இல்லாமல் இருக்காது. இது அல்லாஹ்வுக்கு எளிதானது. உங்களுக்குத் தவறி விட்டதற்காக நீங்கள் கவலைப்படாமல் இருப்பதற்காகவும், அவன் உங்களுக்கு வழங்கியதில் நீங்கள் பூரித்துப் போகாமல் இருப்பதற்காகவும் (விதியை ஏற்படுத்தியுள்ளான்). கர்வமும் பெருமையும் கொண்ட ஒவ்வொருவரையும் அல்லாஹ் நேசிக்கமாட்டான்" (அல்குர்ஆன் 57:22-23)

இதே சிந்தனையோடு அவன் இவ்வுலகில் காணப்படும் இன்பங்கள், ஆசாபாசங்கள், அலங்காரங்கள் போன்றவற்றோடு தொடர்புபட்டு வாழ்வதால் மறுமையில் அல்லாஹ் அவனுக்காக கூலிகளை வழங்குவான். ஏனெனில் அவனின் இவ்வுலக வாழ்வு மறுவுலக வாழ்வுடன் தொடர்புபட்டுவிட்டது. தனது உடமபின் சந்தோசங்கள் ஆண்மாவின் சந்தோசமாக மாறிவிட்டது, இவ்வுலக இன்பங்களில் தனக்கு திருப்தியும், மனநிம்மதியையும் ஏற்பட்டுவிட்டது.

கேள்வி கேல், அல்குர்ஆன் உனக்கு பதில் தரும்

"அல்குர்ஆனை நான் படிக்கும் போது, வாழ்க்கையைப் பற்றிய அத்தனை கேள்விகளுக்கும் தெளிவான விடைகளை

மைக் டைசன்
சர்வதேச
குத்துச்சண்டை வீரர்

3- பிரபஞ்சம்:

ஒரு முஸ்லிம் சிந்தனை தற்போது இப்பிரபஞ்சத்தின் மீது திரும்புகின்றது. அவற்றைப் பற்றியும் சிந்திக்க ஆரம்பிக்கிறான், அல்லாஹ் கூறுகிறான், "'வானங்களிலும், பூமியிலும் உள்ளவற்றைச் சிந்தியுங்கள்!' என்று கூறுவீராக! நம்பிக்கை கொள்ளாத கூட்டத்துக்கு சான்றுகளும், எச்சரிக்கைகளும் பயனளிக்காது." (அல்குர்ஆன் 10:101)

பின்னர் அல்லாஹ்வின் அத்தாட்சிகளைப் பற்றிக் குறிப்பிடும் வசனங்களைப் பற்றி தனது ஆய்வை மேற்கொண்டு, தன்னைப் பற்றியும், தனது வாழ்வு பற்றியும் ஆய்வு செய்து முடிவுகளைக் கண்டது போல் இதிலும் சில முடிவுகளைக் காண இருக்கின்றான். இதில் இரு பூரணமான விடயங்கள் சம்பந்தமாக அவனது ஆய்வு அமைய வேண்டும்.

முதலாவது, அல்லாஹ் அவனுக்கு இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்தையும் பயன்பெறும் வகையில் அமைத்துக் கொடுத்துள்ளான். அதனூடாக வெறுமனே இன்பங்களை மாத்திரம் அவன் அனுபவிப்பதைப் பற்றி சிந்திக்கக் கூடாது. அவை அவனுக்கு ஊழியம் செய்வதற்கும், அவனின் நல்வாழ்வை சீராக அமைத்துத் தருவதற்கும் படைக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றித் தான் சிந்திக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான். "வானங்களில் உள்ளதையும், பூமியில் உள்ளதையும் உங்களுக்காக அல்லாஹ் பயன்படச் செய்ததையும், தனது அருட் கொடைகளை வெளிப்படையாகவும், அந்தரங்கமாகவும் வாரி வழங்கியிருப்பதை யும் நீங்கள் காணவில்லையா? அறிவு, நேர் வழி, ஒளிவீசும் வேதம் எதுவும் இன்றி அல்லாஹ்வைப் பற்றி தர்க்கம் செய்வோரும் மனிதர்களில் உள்ளனர்." (அல்குர்ஆன் 31:20)

மேலும், "இரவு, பகல், சூரியன், சந்திரன் ஆகியவற்றை உங்களுக்காக அவன் பயன்படச் செய்தான். (ஏனைய) நட்சத்திரங்களும் அவனது கட்டளைப்படி வசப்படுத்தப்பட்டுள்ளன. விளங்கும் சமுதாயத்துக்கு இதில் பல சான்றுகள் உள்ளன." (அல்குர்ஆன் 16:12)

மேலும், "அவனே பூமியை (பயன்படுத்த) எளிதானதாக உங்களுக்கு அமைத்தான். எனவே அதன் பல பகுதிகளிலும் செல்லுங் கள்! அவனது உணவை உண்ணுங்கள்! அவனிடமே மீளுதல் உள்ளது." (அல்குர்ஆன் 67:15)

இது போன்று அல்குர்ஆனில் அதிகமாகக் காணப்படும் வசனங்களினூடாக இப்பிரபஞ்சம் தனக்குப் பயனளிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெளிவாகவே அவனால் அறிந்துகொள்ள முடியும். அதே சமயம் இவ்வுலகின் இயல்புக்கு ஏற்றவாறு தன்னை அவசியம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறே இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் மனச்சோர்வை விட்டும் தன்னைத் தடுத்துக்கொள்வதில் அவதானமாகவும்





இருக்க வேண்டும். இவ் இயற்கை அனர்த்தங்கள் பலகீனமான அமைப்பில் இருக்கும் மனிதனுக்கு எப்போதும் சவாலாக இருக்காது. அதே போல் இயற்கையின் கோரத்திற்கு தொடர்ந்தும் பலிகடாவாக மனிதனும் இருக்க மாட்டான்.

அவனின் இரண்டாவது ஆய்வு: இப்பிரபஞ்சம் தனது எல்லா இரகசியங்களையும் மனிதனுக்கு வெளிக்காட்டவில்லை. மனிதனுக்கு பயனளிப்பதற்காக இது அமைக்கப்பட்டிருந்தாலும், மனிதனின் கட்டுப்பாட்டையும் தாண்டிய, அவனால் அடைந்து கொள்ள முடியாத இன்னும் பல படைப்பினங்களும் இப்பிரபஞ்சத்தில் இருக்கின்றன. இப்பிரபஞ்சம் மலக்குகள், ஜின்கள் போன்ற படைப்பினங்களையே உலாவந்தாலும் கூட மனிதனின் அறிவுக்கு எட்டாத இன்னும் பல விடயங்கள் இதில் காணப்படுகின்றன. இதையும் அவன் அறிந்திருக்க வேண்டும்.

இவ்விரு ஆய்வுகளின் அடிப்படையில் இப்பிரபஞ்சத்தைப் பற்றிய அவனின் சிந்தனை முழுமையடைகின்றது. இதில் காணப்படும் அனைத்துப் படைப்பினங்களை விடவும் தனது அந்தஸ்து எத்தகையது என்பதை அவன் அறிந்து கொள்கிறான். தனக்கென பயன்படும் வகையில் அமைந்த படைப்புக்கள் இருக்கும் அதே சமயம், சில படைப்பினங்கள் சம்பந்தமாக அறிந்து கொள்வது கடினம் என்பதையும் விளங்கிக் கொள்கிறான்.

மனிதனுக்கும் அவனைச் சூழவுள்ளவர்களுக்குமான தொடர்பு சிறந்த ரசனைகளும், பண்பாடுமிக்கதாவும் இருக்க வேண்டும். பெருங்குழப்பத்திற்கு மத்தியில் வாழ்பவர்களால் அவர்களோடு தொடர்புபட்டவர்களும் பாதிப்படைகின்றனர். ஏனெனில் அவர்களுக்கு மத்தியிலுள்ள தொடர்பானது சமனற்ற நிலையிலும், நெறிமுறைக்குட்படாததாகவுமே காணப்படுகின்றது. சுயநலம், பொறாமை, தீய எண்ணம், சதித் திட்டம், துருவித் துருவி ஆராய்தல் போன்றவற்றினால் அவர்களின் தொடர்புப் பாலம் அமையப் பெற்றுள்ளதினால், இவை திருப்தியற்ற, கலக்கமுள்ள, கஷ்டங்களால் நிறம்பிய வாழ்வையே அவர்களுக்கு வழங்குகின்றன. இப்படியிருந்தால் அவனுக்கு எங்கே மகிழ்வும், மனநிம்மதியும் ஏற்படப் போகின்றது?? அல்லாஹ் கூறுகிறான், "நன்மையும், தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும், உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார். பொறுமையை மேற்கொண்டோர் தவிர மற்றவர்களுக்கு இது (இந்தப் பண்பு) வழங்கப்படாது. மகத்தான பாக்கியம் உடையவர் தவிர (மற்றவர்களுக்கு) இது வழங்கப்படாது.." (அல்குர்ஆன் 41:34-35)

யார் சிறந்த உரிமைகளோடும், கடமைகளோடும் பிறருடன் தொடர்புபடுகின்ற வாழ்வை அமைத்துக் கொள்வாரோ அவன் தனது கடமைகளை பூரணமாக நிறைவேற்றிவிட்டார். இவற்றில் பொடுபோக்காக நடந்துகொள்பவர் தனக்குத் தானாகவே எதிரிகளை அமைத்துக்கொள்கின்ற அதேவேளை மகிழ்ச்சியாக இருப்போரை விட்டும் தூரச் செல்கிறார். அன்பென்பது ஒரு மனிதன் தனது சக மனிதருடன் நெருங்கிப் பழகுவதற்கான உயரிய வாய்ப்பாக இருக்கின்றது. இதுவே பொதுவான இயல்பாக ஒரு மனிதனிடம் காணப்படுவதும் கூட.

மனிதநேயம் மிக்க மார்க்கம்

"வாழ்நாளில் பூராகவும் தொலைத்து விட்ட என்னை இஸ்லாத்தில் தான் நான் கண்டுகொண்டேன். முதல் தடவையாக நான் மனிதன் என்பதையும் அதில் தான் அறிந்துகொண்டேன். நிச்சயமாக இஸ்லாம் மார்க்கம் மனிதனை அவனது இயல்பான நிலைக்கு கொண்டுசெல்கின்றது. இது

மார்டின் பில்லின்ஸ்
ஆங்கில சிந்தனையாளர்

மகிழ்வுக்கான வழி... மனிதனுக்கு அவனது உள்ளத்துடனும், வாழ்வுடனும், பிரபஞ்சத்துடனும் சமரச நல்லிணக்கத்தை உண்டுபன்னுகின்றது.

மேற்கூறப்பட்ட முறைகளில் ஒருவர் விசுவாசம் கொள்கின்ற போது, தனது இறைவனுக்கும், தனக்கும், தன்னைச் சூழால் உள்ள பிரபஞ்சத்திற்கும் ஏதோ ஓர் இணக்கப்பாடு நிலவுகின்றது. முதலில் அவன் அல்லாஹ்வை இறைவனாக ஏற்று, அவன் தன் மீது விதித்துள்ள கடமைகளைச் சரிவர நிறைவேற்ற வேண்டுமென்பதை அறிந்துகொள்கிறான். இரண்டாவதாக, ஏனைய படைப்பினங்களுக்கு மத்தியில் தனது பெறுமதியைப் பற்றி அறிந்துகொள்கிறான். அவன் இவ்வுலகில் வாழும் காலம் அனைத்தும் அவனுக்குரிய பரீட்சைக் களமாக அல்லாஹ் மாற்றியுள்ளான். அவ்வாறே இவ்வுலகை நிர்வகிக்கும் பொறுப்பும் அவனிடமே கையளிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகிறான். *"ஸமூது சமுதாயத்திடம், அவர்களின் சகோதரர் ஸாலிஹை (அனுப்பினோம்). 'என் சமுதாயமே! அல்லாஹ்வை வணங்குங்கள்! அவனன்றி வணக்கத்திற்குரியவன் உங்களுக்கு வேறு யாருமில்லை. அவனே உங்களைப் பூமியிலிருந்து படைத்தான். அதில் உங்களை வசிக்கச் செய்தான். எனவே அவனிடம் பாவமன்னிப்புத் தேடுங்கள்! பின்னர் அவனை நோக்கித் திரும்புங்கள்! என் இறைவன் அருகில் உள்ளவன்; பதிலளிப்பவன்' என்றார்."* *(அல்குர்ஆன் 11:61)*

அவ்வாறே மார்க்க வரம்புகளுக்கு உட்பட்டவாறும், தனது தேவைக்கேட்பவாறும் இவ்வுலக

நற்பண்புகளின் மார்க்கம்

"இதனால் தான் நான் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுக்கொண்டேன். இதில் நான் நிம்மதியையும், சந்தோசத்தையும் அடைந்துகொண்டேன். இம் மார்க்கத்தை உடலோடும், உயிரோடும் கலந்துவிட்டது. இதை யாராலும் பிரித்துவிட முடியாது. இம்மார்க்கத்தில் உள்ள சிறந்த குணங்களை நான் எடுத்து நடக்கின்றேன். மனித நேயத்தை ஆதரிக்கிறேன். இதனால் தான் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை எனவும், முஹம்மத் அல்லாஹ்வின்

வேனேன் மோஸேஸ்யோ

பிரேஞ்சு சிந்தனையாளர்

இன்பங்களை அனுபவிப்பதற்கும் பணிக்கப்பட்டுள்ளான். தனது இறைவனைப் பற்றியும், தன்னைப் பற்றியும், தன்னைச் சூழ இருக்கின்ற இப் பிரபஞ்சத்தைப் பற்றியும் அவன் பூரணமாக அறிந்ததன் பின்னர் அவற்றைத் தனது செயலில் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்படுத்துகின்ற போது மகிழ்வென்பது அல்லாஹ்வின் பொருத்தத்தைப் பெறுவதிலும், அவன் ஏவியவைகளை எடுத்து நடந்து, மார்க்க வரம்புகளோடு தன்னை நிறுத்திக் கொள்வதிலுமே இருக்கின்றது என்பதை அவனால் புரிந்துகொள்ள முடிகின்றது. மேலும் உடம்பினதும், உயிரினதும் கோரிக்கைகளுக்கு மத்தியிலும், தனி மனித சமூகக் கோரிக்கைகளுக்கு மத்தியிலும், இவ்வுலகில் வசிப்பதற்கும், மறுவுலகில் வசிப்பதற்கும் இடையிலுள்ள கோரிக்கைகளையும் சீர்தூக்கிப் பார்க்கின்ற போது, இவ்வுலகில் அடைந்து கொள்ளும் மகிழ்வானது மிகவும் குறைவானதாகவே இருக்கின்றது, ஏனெனில் இவ்வுலக வாழ்வானது விடாமுயற்சி, செயற்பாடு, பரீட்சை போன்றவைகளை உள்ளடக்கிய உலகமாகும். மறுவுலகமானது விசாரணைகள் நடைபெற்று, அதற்கேற்றாற் போல் கூலிகள் வழங்கப்படும் இடமாகும். அங்கு யார் வெற்றியடைகின்றாரோ, அவன் பூரணமான மகிழ்வைப் பெற்றுக்கொள்கின்றான். அல்லாஹ் கூறுகிறான்,

இஸ்லாமே சிறந்தது

"இவ் உலகில் இஸ்லாத்தைப் போல் சிறந்தது எதுவுமில்லை. இது இவ்வுலகினதும், மறுமையினதும் யதார்த்தங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. பொய்யைத் தெளிவுபடுத்துகின்றது. சந்தோசத்தை அள்ளித் தருகின்றது. இவ் அருட்கொடையை எனக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கு நான் சிரம்பணிகிறேன். என் உள்ளம் முழுவதும் மகிழ்வு நிறைந்துள்ளது. இவ்வாறே நான் தொடர்ந்து இருந்து இஸ்லாமிய குடும்பம் ஒன்றைப் பெற்று, இஸ்லாமிய சகோதரத்துவத்தை நிலை

மர்செலா மைக்கேலேஞ்சலோ

பிரித்தானிய நடிகை

"அவர்களின் இறைவன் தனது அருளையும், திருப்தியையும், சொர்க்கச் சோலைகளையும் (வழங்குவதாக) அவர்களுக்கு நற்செய்தி கூறுகிறான். அதில் அவர்களுக்கு நிலையான இன்பம் உண்டு. அதில் என்றென்றும் நிரந்தரமாக இருப்பார்கள். அல்லாஹ்விடம் மகத்தான கூலி உண்டு." (அல்குர்ஆன் 09:21-22)

மனித இனம் மகிழ்வை அடைந்து கொள்வதற்கும், மன அமைதியை உணர்ந்துகொள்வதற்கும், சிறந்ததோர் வாழ்வை இவ்வுலகிலும், மறுவுலகிலும் பெற்றுக்கொள்வதற்கும், விசுவாசம், சிறந்த நல்ல செயற்பாடுகள் போன்றன அவசியம் தேவைப்படுகின்றன. அல்லாஹ் கூறுகிறான்,

"ஆணோ, பெண்ணோ நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்தால் அவரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய் வோம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றின் காரணமாக அவர்களின்

ஈமானும் உள ஆரோக்கியமும்

"வளர்முக நாடுகள் பலவற்றிலிருந்து பல வர்க்க மக்கள் கடந்த 30 ஆண்டுகளாக என்னிடம் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். அவர்களில் நடுத்தர வயதை அடைந்துள்ள ஏராளமானோருக்கு ஒரே பிரச்சினை தான் இருந்தது. அவர்களின் உளவியலில் அவர்களின் மார்க்க விழுமியங்களையும், சட்டதிட்டங்களையும் நம்பிக்கை கொள்ளாததே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அவர்களது மார்க்கத்தைப் பின்பற்றி, அதில் நம்பிக்கை கொள்ளாத வரையில் அவர்களை என்னால் என்றுமே

கார்ல் பியூங்
பிரபல உளவியல் நிபுணர்

மகிழ்ச்சிக்கான வழியின் அடையாளங்கள்.

அல்லாஹ்வைக் கொண்டு விசுவாசம் கொள்ளல் என்ற மகிழ்வின் உண்மையான பாதையை நாம் அவசியம் அறிந்திருக்க வேண்டும். நாம் மன நிம்மதியுடன் அதில் பயணிக்க வேண்டுமானால் அப்பாதையின் அடையாளங்கள் சம்பந்தமாக அவசியம் அறிந்தாக வேண்டும்.

1- இது அல்லாஹ்வின் பாதை:

அல்லாஹ் கூறுகிறான், "இதுவே எனது நேரான வழி. எனவே இதனையே பின்பற்றுங்கள்! பல வழிகளைப் பின்பற்றாதீர்கள்! அவை, அவனது (ஒரு) வழியை விட்டும் உங்களைப் பிரித்து விடும். நீங்கள் (இறைவனை) அஞ்சுவதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான்." (அல்குர்ஆன் 06:153)

அல்லாஹ்வின் பாதை தான் மகிழ்வுக்கான பாதை என்பதை இவ்வசனத்தினூடாக அறிந்து கொள்ள முடிகின்றது. அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளாதோர் இப்பாதையை விட்டுவிட்டு, மகிழ்வை அடைந்துகொள்வதற்காய் மனிதர்களால் உருவாக்கப்படுகின்ற பாதைகளில் பயணிக்கின்ற போது, நிச்சயம் எங்கு சென்றாலும் அது அவர்களுக்குக் கிட்டாது. அல்லாஹ் கூறுகிறான், "எனது நேர் வழியைப் பின்பற்றுபவர் வழி தவற மாட்டார். துர்பாக்கியசாலியாகவும் மாட்டார். எனது போதனையைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. அவனை கியாமத் நாளில் குருடனாக எழுப்புவோம்." (அல்குர்ஆன் 20:123-124)

எனவே மகிழ்வென்பது இவ்வழியில் பயணிப்பவருக்கு மட்டுமே உரியது. நெருக்கடி என்பது இவ்வழியை விட்டும் யார் தடம் புரள்கின்றனரோ அவர்களுக்குரியது. அவர் இவ்வுலகிலும், மறுவுலகிலும் துர்ப்பாக்கியசாலியாகவே காணப்படுவர்.

2- இப்பாதை ஆன்மீக மகிழ்வையும், உடலியல் மகிழ்வையும் ஒன்றாக சேர்க்கின்றது.

மனிதன் என்பவன் உடலாலும், உயிராலும் உருப்பெற்றவன். இவை இரண்டிற்குமே தேவைகள் இருக்கின்றன. சில தத்துவங்களும், தவறான வழிமுறைகளும் உயிருக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்குமாறு மக்களை ஏவி வருகின்றன. இதனால் மனிதன் இவ்வுலகில் ஒதுக்கப்பட்ட சமுதாயம் போல், தனது வாழ்வை துறவம் செய்கிறான். இதற்கு மாற்றமாக நவீன காலத்தில் நிலவும் பல வழிமுறைகள் உடலுக்கு மாத்திரம் முக்கியத்துவம் வழங்குகின்றன. உடல் எதை எல்லாம் விரும்புகின்றதோ அவற்றை மாத்திரம் செய்யுமாறு போதித்து வருகின்றன. இதனால் மனிதன் தனது மனிதாபிமானத்தை இழந்து, மிருகத்துக்கு ஒப்பான வாழ்வின் பக்கமே செல்கிறான். ஆனால் இஸ்லாம் இவ்விரண்டிற்குமே தீணி போடுகின்றது. "அல்லாஹ் உனக்குத் தந்தவற்றில் மறுமை வாழ்வைத் தேடு! இவ்வுலகில் உன் கடமையை மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு நல்லுதவி செய்தது போல் நீயும் நல்லுதவி செய்! பூமியில் குழப்பத்தைத் தேடாதே! குழப்பம் செய்வோரை அல்லாஹ் விரும்ப மாட்டான் (என்றும் கூறினர்)." (அல்குர்ஆன் 28:77)

"நிச்சயமாக உனது இறைவனுக்கு நீ செய்யவேண்டிய கடமைகள் இருக்கின்றன. உனக்கு நீயே செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன, உனது குடும்பத்துக்கு செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. எனவே அவரவருக்கு அவரவரின் கடமைகளை சரிவர நிறைவேற்றி விடு" என ஸல்மான் அல்பாரிஸி ؓ அவர்கள் கூறியதை நபி ﷺ அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். (ஆதாரம் :புஹாரி)

3- இது மகிழ்வும், வீரமும் ஒன்று சேர்ந்த பாதை.

யார் ஈமானின் சுவையை உணர்கிறாரோ, அவர் தனது உயிரே போனாலும் அதை விட்டும் பிரிந்து விடமாட்டார். பிர்அவ்னின் சூனியக்காரர்கள் தமது மகிழ்வுக்கான வழியைத் தேர்வு செய்யும் போது, பிர்அவ்ன் அவர்களை பயமுறுத்தினான். அவர்களுக்கு பின்வருமாறு கூறினான், "நான் உங்களுக்கு அனுமதியளிப்ப தற்கு முன் அவரை நம்பி விட்டீர்களா? அவரே உங்களுக்குச் சூனியத்தைக் கற்றுத் தந்த உங்களது குருவாவார். எனவே உங் களை மாறுகால் மாறுகை வெட்டி, உங்களைப் பேரீச்சை மரத்தின் அடிப்பாகத்தில் சிலு வையில் அறைவேன். நம்மில் கடுமையாகத் தண்டிப்பவரும், நிலையானவரும் யார் என்பதை (அப்போது) அறிந்து கொள்வீர்கள்' என்று அவன் கூறினான்." (அல்குர்ஆன் 20:71)

அதற்கு அவர்கள், "'எங்களிடம் வந்த தெளிவான சான்றுகளையும், எங்களைப் படைத்த வனையும் விட நாங்கள் உன்னைத் தேர்ந்தெடுக்கப் போவதில்லை. நீ கூற வேண்டிய தீர்ப்பைக் கூறிக் கொள்! இவ்வுலக வாழ்க்கையில் தான் நீ தீர்ப்பு வழங்குவாய்' என்று அவர்கள் கூறினார்கள்" (அல்குர்ஆன் 20:72)

அவர்கள் ஈமானின் சுவையை உணர்ந்ததால் தான் சிறிது நேரத்திற்குள்ளேயே அதில் உறுதியாகி விட்டார்கள். கொலை அச்சுறுத்தல்கள் வந்த போதும் தமது முடிவில் உறுதியுடன் நிற்க வைத்து, அவர்களுக்கு மன ஆறுதலையும் அது வழங்கியது.

தெளிவான பதில்கள்

"ஆண்மாவுக்கும், உடம்புக்கும் மத்தியில் காணப்பட்ட பல சங்கடங்களுக்கான தெளிவான பதில்களை இஸ்லாத்தில் காண முடிகின்றது. ஆண்மாவுக்கும், உடம்புக்கும் செய்ய வேண்டிய கடமைகள் பற்றி இஸ்லாம் தெளிவாகக் கூறுகின்றது. இஸ்லாத்தைப் பொறுத்த மட்டில் உடலின் முக்கியத் தேவையாக பாலியல் உணர்வுகளை வைத்துள்ளது. அதற்குத் தீணி போடும் வகையிலே திருமணத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் போது தான் மனிதன் தன் பிற செயற்பாடுகளில் நிதானமாகவும், பலமாகவும் செயற்பட முடியும். அவ்வாறே ஆண்மாவுக்குத் தீணி போடும் வகையில் தொழுகை, நோன்பு, இதர வணக்க வழிபாடுகளை இஸ்லாம் கடமையாக்கியிருக்கின்றது. இவற்றின் மூலம் மனதுக்குத் தேவையான நிம்மதியையும், சந்தோசத்தையும் பெற்றுக்கொண்டு, அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு செவி

ரோஸ் மேரி ஹொ
ஆங்கிலப் பத்திரிகை

ஈமானும், பதட்டமும் ஒரே இடத்தில் இருக்க முடியாது.

"ஆழமான கடலில் ராட்சத அலைகல் தோன்றுவதில்லை. அவ்வாறே அல்லாஹ்வைப் பற்றி ஆழமாக நம்பிக்கை கொண்டுள்ள ஒருவனிடம் பதட்டம் ஏற்படுவதில்லை. அவனுக்கு எவ்வளவு தான் தடயங்கள் ஏற்பட்டாலும் மகிழ்வுடனே அவற்றை

வில்லியம் ஜேம்ஸ்
அமெரிக்க தத்துவமேதை

4- மகிழ்வென்பது உள்ளத்தில் மன அமைதியை ஏற்படுத்தும்.

உள்ளத்தில் அமைதியும், சாந்தமும் ஏற்படாத வரை மகிழ்வு என்பது நிகழாது. அவ்வாறே அவனின் உள்ளத்தில் ஈமான் இடம்பெறாதவரை மன அமைதி ஏற்படாது. அல்லாஹ் கூறுகிறான், "தமது நம்பிக்கையுடன் மேலும் நம்பிக் கையை அதிகமாக்கிக் கொள்வதற்காக அவனே நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்களில் நிம்மதியை அருளினான். வானங்கள் மற்றும் பூமியின் படைகள் அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் அறிந்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான்." *(அல்குர்ஆன் 48:04)*

ஈமான் என்பது இரண்டு வழிகளில் மனிதனுக்கு மகிழ்வை வழங்குகின்றது. முலாவது, மனிதனை தீய செயல்கள், குற்றங்கள் புரிவதிலிருந்து அவனைத் தடுக்கின்றது. இதுவே மனிதனுக்கு துன்பம், துயரம், துர்ப்பாக்கியம் போன்றவற்றை ஏற்படுத்தும் காரணியாகத் திகழ்ந்தது. எவரின் உள்ளத்தில் ஈமான் இல்லையோ அவர் தனது மனோ இச்சைக்குக் கட்டுப்படாமல், தனது ஆசைகளை நிறைவேற்றாலம் மகிழ்வை அடைந்து கொள்வார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இரண்டாவது, ஈமானானது மகிழ்வின் முக்கிய அம்சமான மன அமைதியை அவனுக்கு வழங்குகின்றது. எத்தனை பிரச்சினைகள் வந்தாலும், எத்தனை துன்பங்கள் வந்தாலும் அதிலிருந்து இவனை ஈமான் காப்பாற்றிவிடுகின்றது. ஈமானின்றி வாழ்பவர்கள் பயம், பீதி, பதட்டம் போன்றவற்றால் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். ஈமான் கொள்வதனால் அல்லாஹ்வின் சக்திக்கு முன்னால் எந்தவொரு அச்சமும் மனிதனுக்கு ஏற்படுவதில்லை.

ஒரு முஃமினின் உள்ளம் எத்தகைய கஷ்டங்களையும் குறைத்தே மட்டிடுகின்றது. ஏனெனில் அது தனது முழுப்பாரத்தையும் அல்லாஹ்விடமே சாட்டியுள்ளது. ஈமானின் வாடை கூட அறவே இல்லாத உள்ளம் மரத்திலிருந்து விழுந்த இலை போன்று

அங்குமிங்கும் தடுமாறிக்கொண்டிருக்கும். மரணத்தை விட மிகவும் பயமுறுத்தும் விடயம் வேறொன்றுமில்லை. இச்சந்தர்ப்பத்தில் கூட ஒரு முஃமின் பயப்படாமல், மன அமைதியோடு அதற்கு முகம்கொடுக்கின்றான். ஏனெனில் அவன் அல்லாஹ்வை அஞ்சி, அவன் கூறிய பிரகாரம் வாழ்ந்ததால் மரணத்தின் பின் தனது நிலை சீரானதாகவே இருக்கும் என்ற நிம்மதியில் பயத்தை மறந்துவிடுகிறான்.

நிச்சயமாக ஈமானானது அமைதியையும், பாதுகாப்பையும் மனிதனிடத்தில் ஏற்படுத்துகின்றது. ஓர் இறை விசுவாசி, தான் அல்லாஹ் மேல் வைத்த நம்பிக்கையின் காரணமாக, அவனின் பாதுகாப்பும், உதவியும் தனக்கு எப்போதும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பயணிக்கிறான். இதுவே அவனின் உள்ளத்தில் மகிழ்வையும், நிம்மதியையும் விதைக்கின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அல்லாஹ் தன்னுடன் இருக்கிறான் என்பதை அவன் உணர்ந்துகொண்டே இருக்கின்றான். "அல்லாஹ், நம்பிக்கை கொண்டோருடன் இருக்கிறான்" *(அல்குர்ஆன் 08:19)*

ஓர் இறை விசுவாசி எவ்வளவு கஷ்டங்களை சந்தித்தாலும், எவ்வளவு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தாலும், அல்லாஹ்வின் வேதம் அவனின் உள்ளத்தில் ஏற்படுகின்ற வீண் சந்தேகங்களையும், உடம்பில் ஏற்படுகின்ற வலிகள், காயங்கள் போன்றவற்றையும் நீக்கிவிடுகின்றது. அவனது பயத்தை தைரியமானதாக மாற்றிவிடுவதோடு, துர்ப்பாக்கியத்தை நற்பாக்கியமாகவும் மாற்றியமைக்கின்றது. இவ்வுலகின் அனைத்து சொத்து செல்வங்களுக்கும் பொறுப்பாக இருப்பவனின் மகிழவுக்கு ஈடாகாத அளவுக்கான மகிழ்வை அவனிடத்தில் அது ஏற்படுத்துகின்றது.

5- இவ்வுகிலிருந்து சுவர்க்கத்துக்கான மகிழ்வின் பயணம்.

மனிதனின் வாழ்வு மூன்று கட்டங்களாக இருக்கின்றது. இவ்வுலக வாழ்வு, மரணத்தின் பின்னர் மண்ணறை வாழ்வு, மறுமை வாழ்வு. இவ் ஒவ்வொரு கட்டத்திலும் மகிழ்வு அவனைத் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது. இவ்வுலகில் அவனது மகிழ்வு பின்வருமாறு இருக்கின்றது. "ஆணோ, பெண்ணோ நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்தால் அவரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய்வோம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றின்



பாதுகாப்பு

"ஒரு முஸ்லிம் அல்குர்ஆனை ஆழமாக வாசித்து, இஸ்லாத்தின் உணர்வுகளை உண்மைப்படுத்தும் போதெல்லாம், பாதுகாப்பை உணர்கிறார். ஷைத்தானால் அவனை எப்போதும் தீண்டிட

கேசியஸ் க்லே

அமெரிக்க குத்துச்சண்டை வீரர்

காரணமாக அவர்களின் கூலியை அவர்களுக்கு வழங்குவோம்." (அல்குர்ஆன் 16:97)

அதாவது, இவ்வுலகில் குறைந்த வசதியோடு வாழ்ந்தாலும் அவருக்கு நிம்மதியான வாழ்வு கிடைக்கும். உள இன்பம், அதன் அமைதி, அல்லாஹ்வின் மேலுள்ள அதன் உறுதி, எதையும் அல்லாஹ்விடமே பாரம் சாட்டிடும் அதன் மனோநிலை போன்றவற்றால் இந்நிம்மதியான, மகிழ்ச்சியான வாழ்வு அவருக்கு ஏற்படுகின்றது.

மண்ணறையில் அவர் அடையப்போகும் மகிழ்வு பற்றி அபூஹுரைரா ரலி அவர்கள் அறிவிக்கும் பின்வரும் ஹதீஸ் குறிப்பிடுகின்றது. நிச்சயமாக ஒரு முஃமின் தனது மண்ணறையில் பசுமையான வெளியைக் காண்பார். அவரின் மண்ணறை 70 அடி நீளம் வரை விசாலமாக்கப்பட்டு, பௌர்ணமி நிலவு போன்ற பிரகாசத்தினால் அது ஒளியேற்றப்படும். (இதை இமாம் அல்பானி / அவர்கள் ஹஸன் என்று கூறியுள்ளார்கள்)

மறுமையில் அவன் அடைய இருக்கும் மகிழ்வு பற்றி அல்லாஹ் குறிப்பிடுகிறான். "நல்லோர் சொர்க்கத்தில் இருப்பார்கள். வானங்களும் பூமியும் நிலையாக இருக்கும் காலமெல்லாம் அவர்கள் அதில் நிரந்தரமாக இருப்பார்கள். உமது இறைவன் நாடியதைத் தவிர. (அது) குறைவில்லாத அருட்கொடை." (அல்குர்ஆன் 11:108)

அவர்கள் இவ்வுலகில் மகிழ்வை வென்றார்கள். மறுவுலகில் நிரந்தரமான அருட்கொடைகளை நிச்சயம் வெல்வார்கள்.

எனவே இஸ்லாம் மார்க்கம் இவ்வுலகுக்கென்றும், மறுவுலகுக்கென்றும் நிரந்தரமானதோர் மகிழ்வையே மனிதனுக்கு வழங்குகின்றது. இவ்விரு உலகிலும் கிடைக்கப்பெறும் மகிழ்விற்கு மத்தியில் பிரிக்க முடியாததோர் இணைப்பு இருக்கின்றது. இவ்வுலகமானது மறுவுலகுக்கான ஓர் பாலமாக இருப்பதனால் இங்கு சம்பாதிக்கும் சம்பாத்தியங்களுக்கு ஏற்பவே மறுவுலகிலும் அதன் பிரதிபலிப்பு தெரிய ஆரம்பிக்கிறது. எனவே மகிழ்வுக்கான வழி, ஒன்றே ஒன்று தான். அதுவே நிரந்தரமான மகிழ்வை மனிதனுள் ஏற்படுத்துகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "யாரேனும் இவ்வுலகின் பயனை விரும்பினால் இவ்வுலகின் பயனும், மறுமையின் பயனும் அல்லாஹ்விடமே உள்ளன. அல்லாஹ் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான்." (அல்குர்ஆன் 04:134)



இவ்வுலக, மறுவுலகுக்கான மார்க்கம்

"ஓர் அறிஞன் நிச்சயம் இஸ்லாத்தின் இயல்பு நிலையை ஏற்றுக்கொள்வான். ஏனெனில் அது மாத்திரமே இம்மை, மறுமை வாழ்வு பற்றி சீரான கண்ணோட்டத்தை

பெர்னாட் ஷா

அமெரிக்க எழுத்தாளர்





இஸ்லாத்தின் அடிப்படையில் இவ்வுலக மகிழ்விற்கான காரணங்கள்

நாம் வாழும் இவ் இஸ்லாமிய வாழ்வில் மகிழ்வை அடைந்துகொள்ள பல காரணங்கள் இருக்கின்றன.

1. அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு, அவனை ஒருமைப்படுத்தி மகிழ்தல்.

அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அதன் மூலமாகக் கிடைக்கப்பெறும் மகிழ்ச்சி, மன அமைதி போல் வேறு எதுவும் கிடையாது. அல்லாஹ் கூறுகிறான், "நம்பிக்கை கொண்டு, தமது நம்பிக்கையுடன் அநீதியைக் கலந்து விடாமல் இருப்போர்க்கே அச்சமற்ற நிலை உள்ளது. அவர்களே நேர் வழி பெற்றோர்." (அல்குர்ஆன் 06:82)

பூரணமான ஏகத்துவக் கொள்கை ஒரு மனிதனிடத்தில் ஏற்படும் போது, மகிழ்வையும், மன அமைதியையும் இவ்வுலகிலும், மறுவுலகிலும் அவன் பூரணமாக அடைந்துகொள்கிறான். அல்லாஹ் அவரின் உள்ளத்தில் சந்தோதச்சை உண்டுபன்னுகிறான். அல்லாஹ்வுக்கு இணைவைத்த வாழ்வை வாழ்பவர்கள் நெருக்கடி மிக்கதோர் வாழ்வையே வாழ்கின்றனர். அவர்களின் உள்ளமும் உயரச் செல்வோரின் மனஇறுக்கம் போல் மாறிவிடுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "ஒருவனுக்கு நேர் வழி காட்ட அல்லாஹ் நாடினால் அவனது உள்ளத்தை இஸ்லாத்திற்காக விரிவடையச் செய்கிறான். அவனை வழி தவறச் செய்ய நாடினால் அவனது உள்ளத்தை வானத்தில் ஏறிச் செல்பவனைப் போல் இறுக்கமாக்கி விடுகிறான். இவ்வாறே நம்பிக்கை கொள்ளாதோருக்கு வேதனையை அல்லாஹ் வழங்குகிறான்." (:)

இஸ்லாமிய அடிப்படையில் மகிழ்வாக இருப்பவரும், இணைவைப்பில் வாழ்ந்து கொண்டு தாம் மகிழ்வாக இருக்கிறோம் என்று கூறுபவர்களும் ஒருக்காலும் சமனாக முடியாது. அவர்கள் உண்மையில்

இலகுவான கொள்கை

"இஸ்லாமியக் கொள்கை பயம், தடுமாற்றம் போன்றவற்றிலிருந்து மனிதனைக் காக்கின்ற ஓர் இலகுவான கேடயமாகும். ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிம்மதியை இது ஏற்படுத்துகின்றது. இஸ்லாமிய கொள்கையின் வாயில் எப்போதும் திறந்தே இருக்கின்றன. இதில் நிற, இன வேறுபாடின்றி எவருக்கும் நுழையலாம். இது சமத்துவமிக்க கொள்கையாகும். இங்கு அல்லாஹ்வை அஞ்சி நடப்போரோ உயர்ந்தோராகக்

நழ்மீ லூக்கா

எகிப்திய சிந்தனையாளர், மற்றம் தத்துவமேதை

உண்மையான பாதுகாப்பு

"முஸ்லிம்கள் தொழும் போது உணர்கின்ற நல்லிணக்கம், சந்தோசத்தின் பயபக்தி போன்றவற்றை நானும் தற்போது உணர்கிறேன். இதுவே உண்மையான பாதுகாப்பு. என் பிள்ளைகளும் இப் பாதுகாப்பிலே இருக்கிறார்கள்.

லாரன் பூத்

பிரிட்டிஷ் மனித உரிமை

வழிகேட்டிலேயே தமது வாழ்வை அடகுவைத்துள்ளனர். அல்லாஹ் கூறுகிறான், "யாருடைய உள்ளத்தை இஸ்லாத்திற்காக அல்லாஹ் விரிவடையச் செய்து விட்டானோ அவர் தமது இறைவனிடமிருந்து (கிடைத்த) ஒளியில் இருக்கிறார். இறைவனை நினைப்பதை விட்டு உள்ளங்கள் இறுகிப் போனவர்களுக்குக் கேடு தான். அவர்களே தெளிவான வழி கேட்டில் இருப்பவர்கள்." (அல்குர்ஆன் 39:22)

இணைவைப்பு என்று தெரியாமல் அதில் இருப்பவருக்கு நேர்வழி கிடைத்தால் நிச்சயம் அல்லாஹ்வின் அருளால் அவர் நேர்வழியின் பக்கம் திரும்பிவிடுவார். வழிகேடு என்று தெரிந்துகொண்டும் பின்வாங்குவோர் மகிழ்வை இழந்தோரே... அல்லாஹ் கூறுகிறான், "இறந்தவனை உயிர்ப்பித்து, மக்களிடையே நடந்து செல்வதற்காக அவனுக்கு ஒளியையும் ஏற்படுத்தினோமே அவன், இருள்களில் கிடந்து அதிலிருந்து வெளியேற முடியாமல் உள்ளவனைப் போல் ஆவானா? இவ்வாறே (நம்மை) மறுப்போருக்கு அவர்கள் செய்து வருபவை அழகாக்கப்பட்டுள்ளன." (அல்குர்ஆன் 06:122)

2- அல்லாஹ்வை நினைவு கூர்வதும், அவனுடன் உரையாடுவதும், அவனை நெருங்குவதும்.

ஒரு மனிதனுக்கு எவ்வளவு தான் இவ்வுலக ஆசாபாசங்கள் வழங்கப்பட்டாலும், மகிழ்வுக்கான வழிகளை எவ்வளவு தான் அவர் அடைந்து கொண்டாலும், அல்லாஹ்வை விட்டும் தூரமாக இருந்தால் அவரால் உண்மையான மகிழ்வை ஒருக்காலும் அடைந்துகொள்ள முடியாது. அல்லாஹ்வுடன் தொடர்பில் இருக்கும் போது தான் ஒரு மனிதனுக்கு மன நிம்மதி, மகிழ்வு போன்றன ஏற்படுகின்றன. அல்லாஹ் கூறுகிறான், "நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவால் அமைதியுறுகின்றன. கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் நினைவால் தான் உள்ளங்கள் அமைதியுறுகின்றன." (அல்குர்ஆன் 13:28)

சிதறிக்கிடக்கும் உள்ளம் அல்லாஹ்வை ஏற்றுக்கொள்வதால் ஒன்று சேர்கின்றது. அதன் தனிமை அல்லாஹ்வோடு தனித்து உறவாடுவதால் நீங்கிவிடுகின்றது. அவனை யதார்த்தமாக நம்பி, உண்மைப்படுத்துவதால் ஏற்படும் சந்தோசம் அதன் கவலைகளை நீக்கிவிடுகின்றது. அல்லாஹ்வுடன் நெருக்கமாக இருப்பதால் அதன் பதட்டங்கள் விரண்டோடுகின்றன. அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களையும், அவனின் நாட்டங்களையும் பொருந்திக்கொள்வதால் அதற்கு ஏற்படும் கவலைகள் நீங்கி, பொறுமை ஏற்படுகின்றது. தான் வேண்டுவதைக் கூட தைரியமாக கேட்டுப்பெற்றுக்கொள்ள வழிவகை செய்துகொடுக்கிறது. தனக்கு ஏற்படும் இடர்பாடுகள் கூட தொடர்ந்தும் அவனை நினைவு கூர்ந்த வண்ணம் இருபத்தனால் இலேசானதாக மாறிவிடுகின்றது. அதன் இடர்பாடுகளை நீக்கிக் கொள்வதற்காக உலகும், அதிலுள்ள அனைத்தும் வழங்கப்பட்ட பின்பும் நீங்காத அத்தகைய இடர்பாடு, அல்லாஹ்வை தூய்மையான முறையில் வணங்குவதால் நீங்கிவிடுகின்றது,(1).

3- நற்செயல்கள்.

அல்லாஹ் கூறுகிறான், "நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் செய்தோருக்கு நல்வாழ்வும், அழகிய தங்குமிடமும் உண்டு." (அல்குர்ஆன் 13:29)

அல்லாஹ்வையும், மலக்குமார்களையும், வேதங்களையும், ரஸூல்மார்களையும், மறுமை நாளையும் தமது உள்ளத்தால் விசுவாசம் கொள்வோர், அவற்றைத் தமது செயற்படுகளாலும் உண்மைப்படுத்துவது அவசியமாகின்றது. உள்ளத்தின் செயற்பாடுகளாக அல்லாஹ்வை நேசித்தல், அவனைப் பயப்படல், அவனிடமே ஆதரவு வைத்தல் போன்றனவும், உடல் உறுப்புக்களின் செயற்பாடுகளாக தொழுகை, நோன்பு, ஹஜ் போன்றனவும் காணப்படுகின்றன. இவ்வாறு செய்வோருக்கு பூரண அமைதியையும், மன நிம்மதியையும் அல்லாஹ் வழங்குகிறான். இதை அல்லாஹ் தான் நாடியோருக்கு இவ்வுலகிலும், தான் நாடியோருக்கு மறுவுலகிலும் வழங்குகிறான்.

(1) மித்ராஜுஸ் ஸாலிகீன் — இமாம் இப்னுல் கையிம் /. பக் 743



எனவே நாம் எமது செயற்பாடுகளை ஈமானுடன் தொடர்புள்ளதாக அவசியம் ஆக்கிக்கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், *"நம்பிக்கை கொண்டோர், யூதர்கள், ஸாபியீன்கள், மற்றும் கிறித்தவர்களில் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி நல்லறங்களைச் செய்தோருக்கு எந்த அச்சமும் இல்லை. அவர்கள் கவலைப்படவும் மாட்டார்கள்."* *(அல்குர்ஆன் 05:69)*

நபி ﷺ அவர்கள் தனது அமைதியை தொழுகையிலும், இதர வணக்க வழிபாடுகளிலுமே கண்டுகொண்டார்கள், அவர்கள், "பிலாலே, இகாமத் சொல்லும், எங்களை அமைதியடையச் செய்யும்" எனக் கூறுபவராக இருந்துள்ளார்கள், (ஆதாரம்: அபூதாவுத்)

4- மகிழ்வின் இரகசியம் தான தர்மமாகும்.

பிறருக்குக் கொடுத்து வாழ்பவர் மனிதர்களிலே மிகவும் மகிழ்ச்சியானவராக இருப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அல்லாஹ் கூறுகிறான், *"நீங்கள் விரும்புவதை (நல் வழியில்) செலவிடாத வரை நன்மையை அடைந்து கொள்ளவே மாட்டீர்கள். நீங்கள் எப்பொருளை (நல் வழியில்) செல விட்டாலும் அல்லாஹ் அதை அறிந்தவன்."* *(அல்குர்ஆன் 03:92)*

தர்மம் என்பது பல வழிகளில் கொடுக்கப்படுகின்றது. என்றாலும் அல்லாஹ் தனது சொத்து செல்வங்களிலிருந்து ஒரு பகுதியை ஏழை எளியோருக்குக் கொடுத்துதவுவதை இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றாக ஆக்கியுள்ளான். அதே போல் தாம் கொடுக்கும் இக்கொடை நல்லெண்ணத்துடனும், அல்லாஹ்வின் திருமுகத்தை நாடியும் வழங்கப்பட வேண்டுமென்பதிலும் கவனமாக இருக்கின்றான். பிறருக்குக் காட்டுவதற்காகவோ, கொடுத்ததை சொல்லிக்காட்டிக் கொண்டோ இருப்பதையும் வெறுக்கிறான். *"நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பாது மக்களுக்குக் காட்டுவதற்காக தனது செல்வத்தைச் செலவிடுபவனைப் போல், உங்கள் தர்மங்களைச் சொல்லிக் காட்டியும், தொல்லை தந்தும் பாழாக்கி விடாதீர்கள்!"* *(அல்குர்ஆன் 02:264)*

கொடுக்கும் தர்மத்தை அது போய்ச் சேரும் தரப்பைப் பொறுத்து விசாலப்படுத்திக் கொள்ள வேண்டும். அதை பணமாகவோ, உணவாகவோ, உதவியாகவோ செய்து கொடுக்கலாம். அல்லாஹ் கூறுகிறான், *"அவனை நேசித்ததற்காக ஏழைக்கும், அனாதைக்கும், சிறைப்பட்டவருக்கும் உணவளிப்பார்கள் அல்லாஹ்வின் முகத்துக்காகவே உங்களுக்கு உணவளிக்கிறோம். உங்களிடமிருந்து பிரதிபலனையோ, நன்றியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை."* *(அல்குர்ஆன் 76:08-09)*

அப்படிக் கொடுக்கும் தர்மம் ஓர் புண்முருவலாகக் கூட இருக்கலாம். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "உன் சகோதரனைப் பார்த்து புன்முறுவல் பூப்பதும் தர்மமாகும்" (ஆதாரம் : திர்மிதி), மேலும் கூறினார்கள், "யார் தன் சகோதரனின் தேவையை நிறைவேற்றுகிறாரோ அவரின் தேவையை அல்லாஹ் நிறைவேற்றுகிறான். யார் ஓர் முஸ்லிமின் கஷ்டத்தைப் போக்குகின்றாரோ, மறுமையில் அவரின் கஷ்டத்தை அல்லாஹ் போக்கிவிடுகிறான். யார் ஒரு முஸ்லிமின் குறையை மறைக்கின்றாரோ, மறுமையில் அவரின் குறையை அல்லாஹ் மறைத்துவிடுகிறான்." (ஆதாரம்: அபூதாவுத்), இத்தகைய கொடையானது இவ்வுலகில் நிச்சயம் நமக்கு மகிழ்வையே தரும் என்பதில்

எவ்வித சந்தேகமும் கிடையாது. ஆனால் பிறருக்குக் காட்டவேண்டுமென்பதற்காகவோ, அல்லது இவ்வுலக லாபத்தை நாடியோ கொடுக்கப்படும் தர்மங்களில் எவ்வித மகிழ்வும் கிடையாது.

5- அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டுவது, மகிழ்வின் திறவுகோலாகும்.

மனிதனின் சக்திக்கு மீறி ஒரு காரியம் நிகழும் போதும், தனக்கு எதையும் செய்ய முடியாமல் போகின்ற போதும், சக்திவாய்ந்த இறைவன் பக்கமே அவன் ஒதுங்குகிறான். அவனிடமே தனது பாரங்களை இறக்கிவிடுகின்றான். எனவே அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டுவது மகிழ்வின் திறவுகோலாகத் திகழ்கின்றது. அவன் சக்தி மிக்கவன். வானங்கள் மற்றும் பூமியின் அரசாட்சி அவனிடமே இருக்கின்றது. அவன் ஒன்றை நாடினால் ஆகுக எனக் கூறுவான். அது ஆகிவிடும். அல்லாஹ் கூறுகிறான், "ஏதேனும் ஒரு பொருளை அவன் நாடும் போது ஆகு' என்று அவன் கூற உடனே அது ஆகி விடும்." *(அல்குர்ஆன் 36:82)*

அதனால் தான் எது நடந்தாலும் தன்மீதே உறுதியாக இருக்குமாறு அல்லாஹ் கூறுகிறான். "நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் அல்லாஹ்வையே சார்ந்திருங்கள்" *(அல்குர்ஆன் 05:23)*

மனிதனுக்கு ஏற்படும் எந்த விடயமாக இருந்தாலும் அவை அனைத்தையும் அல்லாஹ் பொறுப்பேற்கத் தயாராக இருக்கின்றான். அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வையே சார்ந்திருப்பீராக! அல்லாஹ் பொறுப்பேற்கப் போதுமானவன்." *(அல்குர்ஆன் 04:81)*

இவ்வாறு அல்லாஹ்வின் மீது பொறுப்புச் சாட்டுவது, அவனுக்கு பூரண மன நிம்மதியையும், அமைதியையும், மகிழ்வையும் அளிக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வை அஞ்சுவோருக்கு அவன் ஒரு போக்கிடத்தை ஏற்படுத்துவான். அவர் எண்ணிப் பார்த்திராத வகையில் அவருக்கு உணவளிப்பான். அல்லாஹ்வையே சார்ந்திருப்போருக்கு அவன் போதுமானவன். அல்லாஹ் தனது காரியத்தை அடைந்து கொள்பவன். ஒவ்வொரு பொருளுக்கும் அல்லாஹ் ஓர் அளவை நிர்ணயம் செய்துள்ளான்." *(அல்குர்ஆன் 65:02-03)*

அதுமட்டுமல்லாமல் ஷைத்தானின் தீங்குகளை விட்டும் அவனை அல்லாஹ் பாதுகாக்கின்றான்,

“நம்பிக்கை கொண்டோர் மீதும், தமது இறைவனையே சார்ந்திருப்போர் மீதும் அவனுக்கு அதிகாரம் இல்லை.” (அல்குர்ஆன் 16:99)

எதிரிகளின் தீங்குகளை விட்டும் அவனுக்குப் பாதுகாப்புக் கிடைக்கின்றது. *“‘’மக்கள் உங்களுக்கு எதிராகத் திரண்டு விட்டனர். எனவே அவர்களுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்!’’ என்று அவர்களிடம் சில மனிதர்கள் கூறினர். இது அவர்களுக்கு நம்பிக்கையை அதிகமாக்கியது. ‘’எங்களுக்கு அல்லாஹ் போதுமானவன்; அவன் சிறந்த பொறுப்பாளன்’’ என்று அவர்கள் கூறினர்.”*

எனவே அவர்கள் அல்லாஹ்வின் அருளுடனும், நற்பேறுடனும் திரும்பினார்கள். அவர்களுக்கு எந்தக் கேடும் ஏற்படவில்லை. அவர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றனர். அல்லாஹ் மகத்தான அருளுடையவன்.

தனது நேசர்களை ஷைத்தான் தான் (இவ்வாறு) அச்சுறுத்துகிறான். எனவே நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் அவர்களுக்கு அஞ்சாதீர்கள்! எனக்கே அஞ்சுங்கள்! (அல்குர்ஆன் 03:173-175)

பொறுப்புச்சாட்டல் என்பதன் இரகசியம் அவனது உள்ளம் எப்போதும் அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வை ஏற்றுக்கொள்ளாத உள்ளங்களுக்கு உடனடியாக பாதிப்புக்கள் ஏற்படுமா? என்றால் அவ்வாறும் உடனே நடந்து விடாது. ஆனால் உள்ளத்தால் வேறொருவனை ஏற்றுக்கொண்டு விட்டு, ‘அல்லாஹ்வின் மீதே பொறுப்புச் சாட்டுகிறேன்’ என ஒருவர் கூறுவதில் எப்பயனுமில்லை. ஏனெனில் நாவால் பொறுப்புச் சாட்டுதல் என்பதற்கும், உள்ளத்தால் பொறுப்புச் சாட்டுதல் என்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன.

6- அல்லாஹ்வை உறுதிகொள்வதிலும் மகிழ்வு இருக்கின்றது.

ஈமான் கொள்வதானது ஒரு முஃமினின் உள்ளத்தில் அல்லாஹ்வின் மீதான உறுதியை அதிகரிக்கச் செய்கின்றது. இதனால் இவ்வுலகில் எந்தவொன்றுக்கும் அவன் பயப்பட வேண்டிய

சூழ்நிலை உருவாவதில்லை. ஏனெனில் இவ்வுலகில் நடைபெறும் அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறுகின்றன என்பதை அவன் உறுதியாக அறிந்து வைத்துள்ளான். அல்லாஹ் கூறுகிறான். *"அல்லாஹ் உமக்குத் துன்பத்தை ஏற்படுத்தினால் அவனைத் தவிர அதை நீக்குபவன் யாருமில்லை. அவன் உமக்கு நன்மையை ஏற்படுத்தி விட்டால் அவன் அனைத்துப் பொருட்களின் மீது ஆற்றலுடையவன்."* *(அல்குர்ஆன் 06:17)*

"பிறருக்கு உதவி செய்வதன் மூலம் மன அழுத்தத்திற்கான நிவாரணம் இருப்பதாக நவீன ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவ்வாறே உளவியல் துறை நிபுணர்கள், பிறருக்கு உதவி செய்வதால் நரம்புத் தளர்ச்சி ஏற்படுவது குறைவதாகவும் குறிப்பிடுகின்றனர். பிறருக்கு உதவுவதால் 'எண்டோர்பின்' என்னும் ஹோர்மோன் சுரக்கின்றது. இது மகிழ்வையும், நிம்மதியையும் ஏற்படுத்துகின்ற ஹோர்மோனாகும். ஐக்கிய அமெரிக்காவின் சுகாதார ஊக்குவிப்பு அமைப்பின் பணிப்பாளர் 'ஆலன் லெக்ஸ்' என்பவர், 'பிறருக்கு உதவி செய்வது மன அழுத்தத்தைக் குறைப்பதோடு, தனிப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தமான சிந்தனைகளின் தாக்கத்தையும் குறைத்து விடுகின்றது. இது உள்ளத்துக்கு

அவ்வாறே தனக்குக் கிடைப்பெறும் செல்வம் கூட அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கின்றது என்பதையும் உறுதியாக அறிந்துகொள்கிறார். *"அல்லாஹ்வையன்றி நீங்கள் கற்பனையாகப் படைத்த சிலைகளையே வணங்குகிறீர்கள். அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை வணங்குகிறீர்களோ அவர்கள் உங்களுக்குச் செல்வம் வழங்க இயலாது. எனவே அல்லாஹ்விடமே செல்வத்தைத் தேடுங்கள்! அவனையே வணங்குங்கள்! அவனுக்கு நன்றி செலுத்துங்கள்! அவனிடமே திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்!"* *(அல்குர்ஆன் 29:17)*

இவ்வுலகிலுள்ள எந்த உயிரினமாக இருந்தாலும் அதற்கு உணவளிக்கும் பொறுப்பு அல்லாஹ்வினுடையதாகும். அல்லாஹ் கூறுகிறான், *"பூமியில் உள்ள உயிரினம் எதுவாக இருந்தாலும் அவற்றுக்கு உணவளிப்பது அல்லாஹ்வின் பொறுப்பாகும். அவற்றின் வசிப்பிடத்தையும், அவை சென்றடையும் இடத்தையும் அவன் அறிவான். ஒவ்வொன் றும் தெளிவான பதிவேட்டில் உள்ளது."* *(அல்குர்ஆன் 11:06)*

நீங்கள் வளர்க்கும் உயிரினங்களுக்குக் கூட உங்களால் உணவளிக்க முடியாமல் போகும் பட்சத்தில், அல்லாஹ்வே அவற்றுக்கும் உணவளிக்கிறான்.

"எத்தனையோ உயிரினங்கள் தமது உணவைச் சுமந்து செல்வதில்லை. அல்லாஹ்வே அவற்றுக்கும், உங்களுக்கும் உணவளிக்கிறான். அவன் செவியுறுபவன்; அறிந்தவன்." (அல்குர்ஆன் 29:60)

தனக்குக் கிடைக்க வேண்டிய உணவு நிச்சயம் வந்தே தீரும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். ஏனெனில் அது தனது பங்காகும். அல்லாஹ் கூறுகிறான், "வானத்தில் உங்கள் உணவும், நீங்கள் வாக்களிக்கப்பட்டதும் உள்ளன. வானம் மற்றும் பூமியின் இறைவன் மீது ஆணையாக! நீங்கள் பேசுகிறீர்கள் என்பது (உண்மையாக இருப்பது) போல் இது உண்மை." (அல்குர்ஆன் 51:22-23)

அல்லாஹ் மனிதர்களுக்குப் போய்ச் சேரவேண்டிய செல்வங்களைப் பங்குபிரித்து வைத்துள்ளான். "என் இறைவன், தான் நாடியோருக்குச் செல்வத்தைத் தாராளமாக வழங்குகிறான். குறைத்தும் வழங்குகிறான். எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்' என்று கூறுவீராக!" (அல்குர்ஆன் 34:36)

அவ்வாறே அல்லாஹ் நன்மையிலும், தீமையிலும் தன்னை சோதிப்பான் என்பதையும் அவர் உறுதியாக விசுவாசம் கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், "ஒவ்வொருவரும் மரணத்தைச் சுவைப்பவரே. நன்மை, தீமையின் மூலம் பரீட்சித்துப் பார்ப்பதற்காக உங்களைச் சோதிப்போம். நம்மிடமே திரும்பக் கொண்டு வரப்படுவீர்கள்!" (அல்குர்ஆன் 21:35)

அல்லாஹ்வின் இரக்கத்தன்மை மாத்திரம் இல்லையெனில் இவ்வுலகில் இருக்கும் அனைத்தும் அழிந்திருக்கும்.



மனிதன் இவ்வுலகில் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் அவன் ஓர் விருந்தாளி போல் தான் இங்கு வசிக்கிறான். அவனால் இங்கு நிலையாக இருக்க முடியாது என்பதையும் அறிந்துகொள்கிறான். ஒரு நாள், இன்னொரு உலகுக்கு போய்த்தான் ஆக வேண்டும். அவ்வாறே காலா காலம் ஏற்படும் சோதனைகளைக் கண்டும் அஞ்சக் கூடாது. அல்லாஹ்வைத் தவிர இவ்வுலகில் வேறு எவரையும் அஞ்சி நடந்திடக் கூடாது. தனது எதிரி கழுத்தில் கத்தி வைக்கும் அளவுக்கு முன்னெறி வந்தாலும் அஞ்சாமல் தைரியமாக இருக்க வேண்டும். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு நேர்ந்த விடயத்தைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகையில், *"இரு கூட்டத்தினரும் நேருக்கு நேர் பார்த்துக் கொண்ட போது 'நாம் பிடிக்கப்பட்டு விடுவோம்' என்று மூஸாவின் சகாக்கள் கூறினர். 'அவ்வாறில்லை. என்னுடன் என் இறைவன் இருக்கிறான். அவன் எனக்கு வழி காட்டுவான்' என்று அவர் கூறினார். உமது கைத்தடியால் கடலில் அடிப்பீராக' என்று மூஸாவுக்கு அறிவித்தோம். உடனே அது பிளந்தது. ஒவ்வொரு பிளவும் பெரும் மலை போன்று ஆனது. அங்கே மற்றவர்களையும் நெருங்கச் செய்தோம். மூஸாவையும், அவருடன் இருந்த அனைவரையும் காப்பாற்றினோம். பின்னர் மற்றவர்களை மூழ்கடித்தோம். இதில் சான்று உள்ளது. அவர்களில் அதிகமானோர் நம்பிக்கை கொள்வோராக இருக்கவில்லை."* *(அல்குர்ஆன் 26:61-63)*

நபி ﷺ அவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்டு, ஸவ்ர் குகையில் இருக்கும் போது, அவரின் எதிரிகள் அக்குகைக்கு மேலால் நடமாடினர். சற்றேனும் தங்கள் பாதங்களுக்குக் கீழே பார்த்திருந்தால் நபியவர்களையும், அபூபக்கர் / அவர்களையும் கொன்றிருப்பார்கள். அந்நேரத்தில், பயந்த நிலையில் இருந்த தனது தோழர் அபூபக்கர் / அவர்களுக்கு பின்வருமாறு ஆருதல் கூறினார்கள். *"நீர் கவலைப் படாதீர்! அல்லாஹ் நம்முடன் இருக்கிறான்' என்று அவர் தமது தோழரிடம் கூறிய போதும் அவருக்கு அல்லாஹ் உதவியிருக்கிறான். தனது அமைதியை அவர் மீது இறக்கினான். நீங்கள் பார்க்காத படைகளின் மூலம் அவரைப் பலப்படுத்தினான். (தன்னை) மறுப்போரின் கொள்கையைத் தாழ்ந்ததாக அவன் ஆக்கினான். அல்லாஹ்வின் கொள்கையே உயர்ந்தது. அல்லாஹ் மிகைத்தவன்; ஞானமிக்கவன்."* *(அல்குர்ஆன் 09:40)*

அல்லாஹ்வே மரணத்தை ஏற்படுத்துபவன். எனவே மரணம் சம்பவிப்பதைப் பற்றி ஒரு போதும் கவலை கொள்ளத் தேவையில்லை.



நம்பிக்கையும், வாழ்வும்....

"பலமான நம்பிக்கையானது ஓர் மனிதன் சிறந்த முறையில் வாழ உதவுகின்றது. அதை அவன் இழந்து விடும் போது கஷ்டமான வாழ்வை

ஏர்னஸ்ட் ரேனென்

ஏர்னஸ்ட் ரேனென்

சடரீதியான நாகரீகம் உன்னை தாழ்த்தி விடும்

நிச்சயமாக இஸ்லாம் மார்க்கம் இலகுவான, உள்ளத்தில் அமைதியை ஏற்படுத்துகின்ற மார்க்கமாகும். ஆனால் தற்போதைய சர்வதேச நாகரிகங்கள் மனித உள்ளத்தில் நிராசையையே உண்டுபண்ணுகின்றன. ஏனெனில் அவர்கள் எதையும் நம்ப மாட்டார்கள். ஐரோப்பியர்கள் இஸ்லாத்தை சடரீதியான அவர்கள் கண்ணோட்டத்தில் நோக்குவதால் இன்னும் அதைப் பற்றி அறியாமல் இருக்கின்றார்கள்.

ருகியா டோபாக்கியா

சுவீஸ் நாட்டின் சிந்தனையாளர், மற்றும் பத்திரிகையாளர்



இந்நம்பிக்கையில் மனிதன் உறுதியாக இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்,

"உயிர்களை அவை மரணிக்கும் நேரத்திலும், மரணிக்காதவற்றை அவற்றின் உறக்கத்திலும் அல்லாஹ் கைப்பற்றுகிறான். எதற்கு மரணத்தை விதித்து விட்டானோ அதைத் தனது கைவசத்தில் வைத்துக் கொண்டு மற்றதை குறிப்பிட்ட காலம் வரை விட்டு விடுகிறான். சிந்திக்கின்ற மக்களுக்கு இதில் பல சான்றுகள் உள்ளன." (அல்குர்ஆன் 39:42)

மரணம் என்பது எல்லாருக்குமே ஏற்படும். அதிலிருந்து எவரும் தப்பிக்க முடியாது என்றும் உறுதிகொள்ள வேண்டும். "'நீங்கள் எதை விட்டும் வெருண்டு ஓடுகிறீர்களோ அந்த மரணம் உங்களைச் சந்திக்கக் கூடியது. பின்னர் மறைவானதை யும், வெளிப்படையானதையும் அறிபவ னிடம் கொண்டு செல்லப்படுவீர்கள். நீங்கள் செய்து கொண்டிருந்ததை அவன் உங்களுக்கு அறிவிப்பான்' என்று கூறுவீராக!" (அல்குர்ஆன் 62:08)

நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் தான் ஒவ்வொருவருக்கும் மரணம் சம்பவிக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "மனிதர்களுடைய அநீதியின் காரண மாக அவர்களை அல்லாஹ் தண்டிப்பதாக இருந்தால் பூமியில் எந்த உயிரினத்தையும் அவன் விட்டு வைக்க மாட்டான். மாறாக குறிப்பிட்ட காலக்கெடு வரை அவர்களைப் பிற்படுத்தியிருக்கிறான். அவர்களின் கெடு வந்ததும் சிறிது நேரம் பிந்தவும் மாட்டார்கள். முந்தவும் மாட்டார்கள்." (அல்குர்ஆன் 16:61)

7- மனநிறைவு என்பது மகிழ்வுக்கான வாயிலாகும்.

மகிழ்வென்பது ஒருவரின் ஆன்மா எப்போதும் மனநிறைவுடன் இருப்பதைக் குறிக்கின்றது. அவ்வாறே கோபம் என்பது ஒருவனின் வாழ்வு, ஆன்மா, உணர்வுகள் போன்றவற்றை அடியோடு அழித்துவிடுகிறது. மனநிறைவைப் பொறுத்தவரையில், ஒருவனிடம் மகிழ்வு, மன அமைதி, சாந்தம் போன்றவற்றை அது ஏற்படுத்துகின்றது. அதேபோல் அல்லாஹ் தனக்கு வழங்கியவற்றைக் கொண்டு திருப்தி காணச்செய்து, மனதில் நிம்மதியையும் மகிழ்வையும் ஏற்படுத்துகின்றது. இத்தகைய சாந்தமும், மன நிம்மதியும் ஒருவனின் வாழ்வை அமைதியின் சிகரமாக

மாற்றிவிடுகின்றது. இத்தகையவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரிடமும் தனது தேவைகளை முன்வைக்க முன்வரமாட்டான். இவ்வுலக இன்பங்களைப் பார்த்து ஆத்திரமடையால் திடமாக இருப்பான். அது அவனை நல்ல செயல்களை செய்யவைத்து, அல்லாஹ்விடமே அனைத்தையும் முறையிட வைக்கிறது. பின்னர் அல்லாஹ் தனக்குக் கொடுப்பது எதுவாக இருப்பினும் அதை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையையும் அவனிடம் உண்டுபன்னுகிறது. இத்தகைய மனநிறைவானது பலவகையில் இடம்பெறலாம்.

1 அல்லாஹ்வை இறைவனாக ஏற்பதிலும், இஸ்லாத்தை மார்க்கமாக எடுத்து நடப்பதிலும், முஹம்மத் ﷺ அவர்களை நபியாகவும், ரஸூலாகவும் ஏற்றுக்கொள்வதிலும் மன நிறைவு கிடைக்கின்றது. இவற்றை யார் பொருந்திக்கொள்ளவில்லையோ, அவன் பதட்டம், தடுமாற்றம் போன்றவை நிறைந்த, வலையில் சிக்கிவிட்டதாகவே அர்த்தம். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "அல்லாஹ்வை இறைவனாக ஏற்று, இஸ்லாத்தைத் தனது மார்க்கமாக ஏற்று, முஹம்மதை நபியாகவும், ரஸூலாகவும் ஏற்று நடப்பவர் ஈமானின் சுவையை அடைந்துவிட்டார்." (ஆதாரம்: புஹாரி), ஈமானின் சுவையை உணராதவர் மகிழ்வின் சுவையை உணரமுடியாது. அல்லாஹ்வைப் பொருந்திக்கொள்வதானது, அவனை ஒருமைப்படுத்தி, அவனுக்கு மாத்திரமே தனது வணக்கங்களைப் புரிந்து, தனது அனைத்துக் காரியங்களையும் அவனிடமே முன்வைப்பதைக் குறிக்கின்றது. இதற்கு மாற்றமாக வாழ்பவன் நிச்சயம் பதட்டமானதோர் வாழ்வில் இருக்கிறான்.

2 . அல்லாஹ்வின் சட்டவிதிகளில் மனநிறைவடைதல். அல்லாஹ் கூறுகிறான், "(முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையே ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல், முழுமையாகக் கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்." (அல்குர்ஆன் 04:65)

மனித இனத்தின் பெரும்பாலானவர்கள் துர்ப்பாக்கிய நிலையிலே தங்களது வாழ்வை அமைத்துக்கொண்டுள்ளனர். ஏனெனில் அவர்கள் குறைபாடுகள் நிறைந்த, மூடநம்பிக்கைகளால் உருவாக்கப்பட்ட பல மார்க்கங்களையும், சட்டவிழுமியங்களையும் சார்ந்து வாழ்வதால் மகிழ்வான வாழ்வை அடைந்துகொள்வதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இவர்கள் பின்பற்றும் அனைத்து மார்க்கங்களும் மக்களின் நலனஅகளைப் பற்றிய

அறிவில்லாத மனிதனால் உருவாக்கப்பட்டவை. அதில் தனிநபர் விருப்பங்களும், சுயநலன்களுமை அதிகம் காணப்படும். மக்களுக்கு அதன் மூலம் என்ன நலவுகள் ஏற்படப்போகின்றன என்பதை சிறிதும் கூட அவற்றில் கூறப்பட்டிராது. அல்லாஹ் கூறுகிறான், "படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுட்பமானவன்; நன்கறிந்தவன்." *(அல்குர்ஆன் 67:14)*

3 அல்லாஹ் நிர்ணயித்த விதியில் மனநிறைவடைதல். தனக்கு ஏதும் துன்பங்கள் நிகழ்ந்தால் அது அல்லாஹ்வின் நாட்டம் இன்றி நடந்திருக்காது என ஒருவன் உறுதியாக ஏற்றுக்கொள்வதால் அல்லாஹ் அவனின் உள்ளத்திற்கு நேர்வழியைக் கொடுக்கிறான். "எந்தத் துன்பம் ஏற்பட்டாலும் அல்லாஹ்வின் விருப்பத்தைக் கொண்டே தவிர இல்லை. அல்லாஹ்வை நம்பும் உள்ளத்திற்கு அவன் வழிகாட்டுவான். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவன்." *(அல்குர்ஆன் 64:11)*

அவ்வாறே தனக்கு ஏற்படும் தீங்குகளையும், துன்பங்களையும் அவனே நீக்குவான் எனவும் உறுதிகொள்கிறான். "அல்லாஹ் உமக்கு ஒரு தீங்கை அளித்தால் அவனைத் தவிர அதை நீக்குபவன் யாருமில்லை. உமக்கு அவன் ஒரு நன்மையை நாடினால் அவனது அருளைத் தடுப்பவன் யாரும் கிடையாது.

இஸ்லாமிய உயிர்

"நிச்சயமாக இஸ்லாம் மார்க்கம் உள்ளத்தில் அமைதியையும், சாந்தியையும் உட்புகுத்துகின்ற மார்க்கமாகும். இவ் உலக வாழ்வில் மனிதனுக்கு கண்ணியத்தையும், மகிழ்வையும் அது வழங்குகின்றது. இது என்னுள்ளும் நுழைந்தது. அதில் நான் இறை நாட்டத்தை நம்பிக்கை கொண்டேன். அதன் பின்னர் எனக்கு வரும் எவ்விதப்

ரெக்ஸ் இங்ராம்

ரெக்ஸ் இங்ராம்

ஈமானின் ஆச்சரியமிக்க விடயங்களுள் ஒன்றுதான், தனக்கு எத்தகைய தீங்கு ஏற்பட்டாலும் அதில் பொறுமை காப்பதும், தனக்குக் கொடுக்கப்பட்ட அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதும். இதனால் அவனுள் ஏற்படும் மனநிறைவைப் போன்று வேறுயாருக்கும் ஏற்படாது. நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "முஃமினின் விடயம் ஆச்சரியமாக இருக்கின்றது. அவனின் அனைத்து விடயங்களும் நல்லதாகவே இருக்கின்றது. அவனைத் தவிர வேறு யாருக்கும் அது இருக்காது. அவனை மகிழ்வூட்டும் ஏதாவது நடைபெற்றால் அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்துகிறான். அது அவனுக்கு சிறந்ததாக இருக்கின்றது. அவனுக்குத் தீங்கு விளைவிக்கும் ஏதாவது நடைபெற்றால் பொறுமையாக இருக்கிறான். அதுவும் அவனுக்கு சிறந்ததாகவே இருக்கின்றது." (ஆதாரம்: முஸ்லிம்), அவ்வாறே

நம்மை விட உயர்ந்த நிலையில் இருக்கும் ஒருவரைக் கண்டால் எப்படி நடக்கவேண்டுமென்ற முறையை நபியவர்கள் கற்றுத்தந்துள்ளார்கள். "உங்களை விட கீழ் நிலையில் இருப்போரைப் பாருங்கள், உங்களை விட மேல் நிலையில் உள்ளவரைப் பார்க்காதீர்கள். அது உங்களுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடையை அற்பமாகக் கருதுவதிலிருந்து உங்களை தடுத்துவிடும்" (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

துன்பங்களும், துர்ப்பாக்கியங்களும் ஒருவனை மகிழ்வுப்பாதையை விட்டும் திசை திருப்பிவிடும்.

இஸ்லாம் ஒவ்வொரு காலகட்டத்திலும் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள், நாகரிக வாளர்ச்சி போன்றவற்றுக்கேற்ப, மக்களுக்கு நன்மையான விடயங்களையும், அவர்களை இயற்கையோடு ஒத்துப்போக வைக்கும் சட்டதிட்டங்களையும் வழங்கிவந்துள்ளது. சமூக, பொருளாதார, அரசியல் சார்ந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை வழங்கியுள்ளது. இருப்பினும் அதிகமானவர்கள் இவற்றைப் புறக்கணித்து, வழிகேட்டிலேயே போய்விட்டனர். சிலர் பல போராட்டங்களை மேற்கொண்டு இஸ்லாமிய கொள்ளை தவறானது என்ற புரட்சிகளையும் ஏற்படுத்தினர். இதன் விளைவு இஸ்லாத்தை எதிர்த்தவர்களும், அதனை மறுத்தவர்களும் துன்பம், துர்ப்பாக்கியம் போன்றவற்றால் பாதிப்புற்று, சமூகத்தில் குழப்பம் விளைவிக்கும் நிலைக்கு மாறிவிட்டனர். ஆனால் இஸ்லாத்தைத் தனது மார்க்கமாக ஏற்று நடப்போர், ஈருலகிலும் மகிழ்வான வாழ்வைப் பெறுவதற்கு அல்லாஹ்வின் உத்தரவாதத்தைப் பெற்றுவிட்டனர்.

இவ் இஸ்லாமிய மார்க்கத்தினூடாக அல்லாஹ் மனித வர்க்கத்தினருக்கு நேரான பாதையைக் காட்டி, அவர்களை மகிழ்வான வாழ்வின் பக்கம் செல்வதற்கு ஊக்கப்படுத்தியுள்ளான். என்றாலும் மனிதனின் இயல்பு நிலையானது, தனது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருக்கும் எதையும் - அது தனக்கு நன்மை பயக்கும் அம்சமாக இருப்பினும்- ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெறாது., இதனால் தான் அல்லாஹ் அழைப்பாளர்கள் மூலமாக இத்தகையவர்களுக்கு யதார்த்தத்தைப் புரிய வைத்து, அவர்களை நேரான பாதைக்குக் கொண்டுவருமாறு கட்டளை பிறப்பித்துள்ளான்.

நபி ﷺ அவர்கள் தானும் மகிழ்வை அனுபவித்து, பிறரையும் அனுபவிக்கச் செய்வதற்காக வேண்டி

அல்லாஹ்வால் அனுப்பப்பட்டார்கள். அல்லாஹ் கூறுகிறான், "(முஹம்மதே!) நீர் துர்பாக்கிய சாலியாக ஆவதற்காக உமக்கு இக்குர்ஆனை நாம் அருளவில்லை." (அல்குர்ஆன் 20:02)

மேலும், "(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம். " (அல்குர்ஆன் 21:107)

நபி ﷺ அவர்களைப் பின்பற்றுவது மகிழ்வைப் பெற்றுக்கொள்ள வழிகோலுவதோடு, வெற்றிப்பாதையையும் நம்முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றது. அவர் ஏவியவைகளை எடுத்து நடப்பதும், விலக்கியவைகளை விட்டும் தவிர்ந்து நடப்பதும், ஈருலகிலும் மகிழ்வை எமக்கு ஈட்டித் தருகின்றது. இதற்கு மாற்றமாக நடந்துகொள்வோருக்கு ஈருலகிலும் துர்ப்பாக்கிய நிலையே ஏற்படுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "எனது போதனையைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. அவனை கியாமத் நாளில் குருடனாக எழுப்புவோம். 'என் இறைவா! நான் பார்வையுடையவனாக இருந்தேனே? ஏன் என்னைக் குருடனாக எழுப்பினாய்?' என்று அவன் கேட்பான் அப்படித் தான். நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்தன. அதை நீ மறந்தாய். அவ்வாறே இன்று மறக்கப்படுகிறாய்' என்று (இறைவன்) கூறுவான்.." (அல்குர்ஆன் 20:124-126)

அல்லாஹ்வை நம்பியவனுக்கும், மறுத்தவனுக்கும் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது. நம்பியவன் பின்வரும் நிலையில் இருப்பான். "அவரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய் வோம்" (அல்குர்ஆன் 16:97)

மறுத்தவனின் நிலை இவ்வாறு இருக்கும், "புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு." (அல்குர்ஆன் 20:124)

இஸ்லாமிய உதயம்

'எத்தனையோ வழித்தோன்றல்கள் பயம், பதட்டம், அநீதி போன்ற நெருக்கடி மிக்க வாழ்வை வாழ்ந்து வருகின்றன. இவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஓர் நாளில் இஸ்லாம் முழு உலகையும் ஆக்கிரமிக்கும். அந்நாளில் சமாதானம் இவ்வுலகை ஆளும். சாந்தி மனித உள்ளங்களை

ஹெர்பர்ட் ஜார்ஜ் வெல்ஸ்

பிரித்தானிய எழுத்தாளர், மற்றும் இலக்கியவாதி

மகிழ்ச்சியான வாழ்க்கை என்பது அல்லாஹ்வின் கட்டளைகளை, தனிமையிலும், பொது இடத்திலும் ஏற்று நடந்து, அவனின் விதி நிர்ணயத்தில் மன நிம்மதியடைந்து வாழ்வதையே குறிக்கின்றது. ஏனெனில் இவ்வாறு வாழ்பவன் அல்லாஹ்வின் நினைவிலேயே எப்போதும் இருக்கின்றான். "நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவால் அமைதியுறுகின்றன. கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் நினைவால் தான் உள்ளங்கள் அமைதியுறுகின்றன."

(அல்குர்ஆன் 13:28)

இதற்கு மாற்றமான வாழ்வே நெருக்கடிமிக்கதாகவும், பதட்டம் மிக்கதாவும் காணப்படும். ஏனெனில் இவ்வாழ்வைத் தேர்ந்தெடுத்தவன் அல்லாஹ்வுக்கு முற்றிலும் மாறு செய்பவனே... அல்லாஹ் கூறுகிறான், "அவனை வழி தவறச் செய்ய நாடினால் அவனது உள்ளத்தை வானத்தில் ஏறிச் செல்பவனைப் போல் இறுக்கமாக்கி விடுகிறான். இவ்வாறே நம்பிக்கை கொள்ளாதோருக்கு வேதனையை அல்லாஹ் வழங்குகிறான்." (அல்குர்ஆன் 06:125)

நெருக்கடிமிக்க வாழ்வு என்பது ஏழ்மையினாலோ, நோயினாலோ, அல்லது உலக இன்பங்களை அனுபவிப்பதிலோ, அதை அனுபவிக்காமல் விடுவதிலோ ஏற்படுவதில்லை. அது தனது ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு விடயத்திலும் ஏற்படும் தடுமாற்றத்தினால் ஏப்படுவமதாகும். இவ்வாறான தடுமாற்றத்துக்குக் காரணம் அவனின் சிந்தனை முறையாகும். சொத்து செல்வங்கள் அதிகரிப்பதும், குறைவதும், நோய் ஏற்படுவதும், ஆரோக்கியம் பெறுவதும் கூட சில சமயங்களில் அவன் சிந்திக்கும் விதத்தினால் துர்ப்பாக்கிய நிலைக்கு அவனை ஆலாக்கி விடுகின்றது. அல்லாஹ் கூறுகிறான்,"அவர்களின் மக்கட் செல்வமும், பொருட் செல்வமும் உம்மைக் கவர வேண்டாம். அவற்றின் மூலம் இவ்வுலக வாழ்க்கையில் அவர்களைத் தண்டிப்பதையும், அவர்கள் (ஏக இறைவனை) மறுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களது உயிர்கள் பிரிவதையுமே அல்லாஹ் நாடுகிறான்." (அல்குர்ஆன் 09:55)

மேலும், "அவர்களின் மக்கட் செல்வமும், பொருட் செல்வமும் உம்மைக் கவர வேண்டாம். அதன் மூலம் இவ்வுலகில் அவர்களைத் தண்டிப்பதையும், அவர்கள் (ஏக இறைவனை) மறுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களது உயிர்கள் பிரிவதையுமே அல்லாஹ் நாடுகிறான்." (அல்குர்ஆன் 09:85)

மனிதனைப் பொருத்தவரை துர்ப்பாக்கிய நிலை என்பது அவனது ஏழ்மையுடனோ, செல்வத்தினுடனோ, நோய் நொம்பலங்களினுடனோ சம்பந்தப்படவில்லை. மாறாக அவன் அல்லாஹ்வை விட்டும் தூரமாகி, வேறு பாதைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றின் பிரகாரம் நடந்துகொண்டு, அடியானுக்கும், இறைவனுக்கும் மத்தியிலுள்ள தொடர்பைத் துண்டித்துக் கொண்டதினாலே இவ்வாறு ஏற்பட்டது. ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கும் போது, பின்வருமாறு வேண்டினார்கள், "என் இறைவா! உன்னிடம் பிரார்த்தித்ததில் நான் துர்ப்பாக்கியசாலியாக இருந்ததில்லை." (அல்குர்ஆன் 19:04)

இது ஸகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மாத்திரம் உரியதல்ல. எங்களுக்கும் இதை அல்லாஹ் அறிவித்துள்ளான், "என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால்

‘நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்திப்பவன் என்னைப் பிரார்த்திக்கும் போது பிரார்த்தனைக்குப் பதிலளிக்கிறேன். எனவே என்னிடமே பிரார்த்தனை செய்யட்டும்! என்னையே நம்பட்டும். இதனால் அவர்கள் நேர் வழி பெறுவார்கள்’ (என்பதைக் கூறுவீராக!)” *(அல்குர்ஆன் 02:186)*

அடியானுக்கும், இறைவனுக்கும் இடையிலுள்ள தொடர்பு பேணப்படும் காலமெல்லாம் மகிழ்வை அவன் பெற்றுக்கொண்டே இருப்பான். அத்தொடர்பு எப்போது துண்டிக்கப்படுகின்றதோ அப்போது துன்பங்களும், துர்ப்பாக்கிய நிலைகளும் அவனை வந்தடைகின்றன. இதனால் தான் அல்லாஹ் நேர்வழியோடு அருளையும், வழிகேட்டோடு துர்ப்பாக்கியத்தையும் சேர்த்துக் கூறுகிறான். அதில் முதலாவது, *“அவர்களே, தமது*



மனிதே நேயத்தைப் பாதுகாப்பவர்.

“நிச்சயமாக நீதமான மனிதர் என அழைக்கப்படுபவர் முஹம்மத் தான். அவர் தான் மனிதே நேயத்தைப் பாதுகாக்கத் தகுதி பெற்றவர். இந் நவீன உலகில் அவரைப் போன்ற ஒரு மனிதர் தலைமைப் பொறுப்பை ஏற்றால் நிச்சயம் தற்போது ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதில் வெற்றி கொண்டிருப்பார். சாந்தியையும், சமாதானத்தையும்,

பெர்னாட் ஷா
ஆங்கில எழுத்தாளர்

الطريق إلى السعادة
The Path to Happiness

அறிவியல் மற்றும் நாகரிகத்திற்கான பாதை

அறிவியல் மற்றும் நாகரிகத்திற்கான பாதை

இஸ்லாமும் அறிவியலும்

நாகரீகத்திற்கான வழி

நாகரீகத்திற்குத் தேவையான அம்சங்கள்.

அல்குர்ஆனினதும், ஹதீஸினதும் அற்புதங்கள்,

அறிவியல் மற்றும் நாகரிகத்திற்கான பாதை

இஸ்லாமும் அறிவியலும்

மகிழ்வானது நிச்சயம் அறிவியலுடனும், நாகரிகத்துடனுமே பயணிக்க வேண்டும். அறிவீனம், தேக்க நிலை போன்றவற்றுடன் அது என்றும் பயணிக்க முடியாது. இவ்வுலகில் இருக்கும் பெரும்பாலான மார்க்கங்கள், சிந்தனைகள் போன்றன அறிவைத் தேடுவதற்கும், அதனைப் பயன்படுத்தி, ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும், அறிவியல் மேதைகளை கௌரவிப்பதற்கும் ஒவ்வொரு மனிதனையும் தூண்டுகின்றன. நபி ﷺ அவர்கள் கொண்டுவந்த இஸ்லாம் மார்க்கமும் இதனையே வழியுறுத்துகின்றது. இஸ்லாத்தின் வருகையானது, புதியதோர் பாரிய நாகரிகத்தை இவ்வுலகில் தோற்றுவித்தது. இதனால் தான் நபி ﷺ அவர்களின் வருகை கூட அறிவிற்கு முக்கியத்துவம் வழங்கி, சிறந்த நாகரிகம் கொண்டதோர் சூழலை உருவாக்கும் விடயத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது. இதன் மூலம் ஆன்மீகத்திற்கு நன்மை பயக்கி, இவ்வுலகிற்கு தெய்வீக வழியைக் காட்டுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், *"அறியாமைக் காலத் தீர்ப்பைத் தான் அவர்கள் தேடுகிறார்களா? உறுதியாக நம்புகிற சமுதாயத்திற்கு அல்லாஹ்வை விட அழகிய தீர்ப்பளிப்பவன் யார்?"* *(அல்குர்ஆன் 05:50)*

இத்தகைய இஸ்லாம் மார்க்கத்தில் அறிவீனம், சந்தேகம், வீணான சிந்தனைகள் போன்றவற்றுக்கு இடமே கிடையாது. நபி ﷺ அவர்களுக்கு அருளப்பட்ட முதல் இறைச் செய்தியிலேயே பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. *"(முஹம்மதே!) படைத்த உமது இறைவனின் பெயரால் ஓதுவீராக! அவன் மனிதனை கருவுற்ற சினை முட்டையிலிருந்து படைத்தான். ஓதுவீராக! உமது இறைவன் கண்ணியமானவன். அவனே எழுது கோலால் கற்றுத் தந்தான். அறியாதவற்றை மனிதனுக்குக் கற்றுத் தந்தான்."* *(அல்குர்ஆன் 96:01-05)*

இம் முதலாவது இறைச் செய்தியே இம் மார்க்கத்தையும், உலகையும், மறுமை நாளையும் அறிந்து கொள்வதற்கான திறவுகோலாக இருக்கின்றது.

இங்கு கவனிக்கத்தக்க ஓர் விடயம் யாதெனில், இஸ்லாத்தின் அறிவியல் மீதான

கண்ணோட்டம் அல்குர்ஆனின் இம் முதல் வசனத்தோடு ஆரம்பிக்கவில்லை. மாறாக அல்லாஹ் மனிதனைப் படைத்த ஆரம்பப் பகுதியிலே ஆரம்பித்தது. முதல் மனிதரான ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைத்து, அவர்களை இவ்வுலகிற்குப் பிரதிநிதியாக ஆக்கியதன் பின்னர், மலக்குமார்கள் அனைவருக்கும் அவருக்கு ஸுஜூது செய்யுமாறு ஏவினான். இவ்வாறு அவரைக் கண்ணியப்படுத்தக் காரணம் அவருக்கு அல்லாஹ் கற்றுக்கொடுத்திருந்த அறிவுதான். அல்லாஹ் கூறுகிறான். *"பூமியில் நான் ஒரு தலைமுறையைப் படைக்கப் போகிறேன் என்று உமது இறைவன் வானவர்களிடம் கூறிய போது 'அங்கே குழப்பம் விளைவித்து இரத்தம் சிந்துவோரையா அதில் படைக்கப் போகிறாய்? நாங்கள் உன்னைப் புகழ்ந்து போற்றுகிறோமே; குறைகளற்றவன் என உன்னை ஏற்றுக் கொண்டிருக்கிறோமே' என்று கேட்டனர். 'நீங்கள் அறியாதவற்றை நான் அறிவேன்' என்று (இறைவன்) கூறினான்.*

அனைத்துப் பெயர்களையும் (இறைவன்) ஆதமுக்குக் கற்றுக் கொடுத்தான். பின்னர் அவற்றை வானவர்களுக்கு எடுத்துக் காட்டி 'நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இவற்றின் பெயர்களை என்னிடம் கூறுங்கள்!' என்று கேட்டான்.

'நீ தூயவன். நீ எங்களுக்குக் கற்றுத் தந்ததைத் தவிர எங்களுக்கு வேறு அறிவு இல்லை. நீயே அறிந்தவன்; ஞானமிக்கவன்' என்று அவர்கள் கூறினர்.

'ஆதமே! இவற்றின் பெயர்களை அவர்களுக்குக் கூறுவீராக!' என்று (இறைவன்) கூறினான். அவர்களுக்கு அவற்றின் பெயர்களை அவர் கூறிய போது, 'வானங்களிலும், பூமியிலும் உள்ள மறைவானவற்றை நான் அறிவேன் என்றும், நீங்கள் வெளிப்படுத்துவதையும், மறைத்துக் கொண்டிருந்ததையும் அறிவேன் என்றும் உங்களிடம் கூறவில்லையா?' என (இறைவன்) கேட்டான்." (அல்குர்ஆன் 02:30-33)

இஸ்லாத்தின் அறிவியல் சார்ந்த முக்கியத்துவம், அல்குர்ஆனின் ஆரம்ப வசனமான "இக்ர்" என்ற சொல்லோடு மாத்திரம் நின்று விடவில்லை. {اِقْرَأْ}

மாறாக இது நிரந்தர யாப்பான இஸ்லாத்தில், ஓர் நிலையான அம்சமாகவே திகழ்கின்றது. அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு அத்தியாயமும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அறிவியலைப் பற்றிக் கூறாமலில்லை. இதன் அடிப்படையில், ஏனைய கடவுள் வழிபாடுகளை விட்டுவிட்டு, அல்லாஹ்வை

வாசிப்பீராக... இஸ்லாத்தின் அழைப்பு

"நிச்சயமாக இஸ்லாம் மார்க்கம் கல்வி, மற்றும் அறிவியல் பக்கம் மக்களை அழைக்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. தனது முதல் வசனத்திலே இதனை நடைமுறைப்படுத்த இஸ்லாம் முனைகின்றது. அல்லாஹ் கூறுகிறான், 'உன்னைப் படைத்த உனது இரட்சகனின் பெயரால்

ராபர்ட் பேர் ஜோசப்

பிரேஞ்சுப் பல்கலைக்கழகங்களில் தத்துவ ஆசிரியர்

ஒருமைப்படுத்துவது அறிவின் முதல் அம்சமாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "'அல்லாஹ்வைத் தவிர வணக்கத் திற்குரியவன் வேறு யாருமில்லை' என்பதை அறிந்து கொள்வீராக! உமது பாவத்திற் காகவும், நம்பிக்கை கொண்ட ஆண்களுக் காகவும், பெண்களுக்காகவும் நீர் மன்னிப்புக் கேட்பீராக! நீங்கள் இயங்குவதையும், தங்குவதையும் அல்லாஹ் அறிவான்." *(அல்குர்ஆன் 47:19)*

அவ்வாறே அறிவைப் பெற்றவர்களைக் கௌரவித்து, அவர்களோடு அறிவீனர்கள் என்றும் சமமாக முடியாது என்பதையும் வலியுறுத்திக் கூறுகிறான், "அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? என்று கேட்பீராக! அறிவுடையோர் தான் நல்லறிவு பெறுவார்கள்." *(அல்குர்ஆன் 39:09)*

அறிவைப் பெற்றவர்களின் அந்தஸ்தை அல்லாஹ் இவ்வுலகில் உயர்த்திவிடுகிறான். "உங்களில் நம்பிக்கை கொண்டோருக்கும், கல்வி வழங்கப் பட்டோருக்கும் அல்லாஹ் பல தகுதிகளை உயர்த்துவான். நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்." *(அல்குர்ஆன் 58:11)*

அறிவைத் தவிர வேறு எதையும் மேலதிகமாக தேடவோ, சம்பாதிக்கவோ கூடாது எனவும் அல்லாஹ் அல்குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான். "என் இறைவா! எனக்குக் கல்வியை அதிகப்படுத்து' எனக் கூறுவீராக!" *(அல்குர்ஆன் 20:114)*

நபி ﷺ அவர்கள் அறிவின் முக்கியத்துவத்தையும், அதன் சிறப்பைப் பற்றியும் பின்வருமாறு குறிப்பிட்டார்கள். "அறிவைத் தேடி யார் பயணிக்கிறாரோ அவரின் வழியை அல்லாஹ் இலகுபடுத்துகிறான். அறிவைத் தேடுபவரைப் பொருந்திக்கொள்ளும் முகமாக மலக்குகள் தங்கள் இறக்கைகளை விரிக்கின்றனர். வானம் மற்றும் பூமியில் இருப்போரும், கடலுக்கடியில் காணப்படும் மீனினங்களும் அவருக்காக வேண்டி பாவமன்னிப்புக் கோறுகின்றன. வணக்கசாலியை விட

பள்ளிவாயல் பல்கலைக்கழகம்

"அக்காலத்தில் பள்ளிவாயில்கள் பல்கலைக்கழகங்களாகத் திகழ்ந்தன. அறிவுத் தாகம் உள்ளவர்களால் பள்ளிவாயல் நிரம்பி வழியும். இஸ்லாமிய கற்கை நெறி, தத்துவம், வைத்தியம், கணிதம் போன்ற பல வகையான துறைகள் பள்ளிவாயில்களில் பாடங்களாகப் போதிக்கப்பட்டன. உலகின் பல பாகங்களிலிருந்தும் பலர் வந்து இக்கல்விகளைக் கற்றுச் சென்றார்கள். அங்கு யாருக்கு மத்தியிலும் இன வேற்றுமைகளோ, பிரதேச வேறுபாடுகளோ

ஸ்டான்லி லேன் போன்
பிரித்தானிய விஞ்ஞானி

அறிவாளிக்குறிய சிறப்பு, ஏனைய கோல்களை விட சந்திரனுக்குள்ள மதிப்பைப் போன்றதாகும். நிச்சயமாக அறிஞர்கள் நபிமார்களின் வாரிசுகள். அவர்கள் தீனார்களையோ, திர்ஹங்களையோ அனந்தரமாக விட்டுச் செல்லவில்லை. அறிவைத் தான் விட்டுச் சென்றுள்ளனர். எனவே அதை யார் பெற்றுக்கொள்கிறாரோ, அவர் பூரண பங்கைப் பெற்றுக்கொண்டுவிட்டார்". (ஆதாரம்: இப்னு ஹிப்பான், இப்னு மாஜா) நபி ﷺ அவர்களின் வருகைக்குப் பின்னர் பள்ளிவாயில்கள் அனைத்தும் அறிவைப் போதிக்கும் கல்விக்கூடங்களாக மாறின.

அறபு மொழியில் அறிவு என்பதை குறிக்கப் பயன்படும் (علم) என்ற சொல் அல்குர்ஆனில் மொத்தமாக 779 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது கிட்டத்தட்ட ஒரு அத்தியாயத்திற்கு 7 சொற்கள் வீதம் இடம்பெற்றுள்ளன. இது தவிர அறிவு என்னும் சொல்லின் பொருளில் அமைந்த நிறைய சொற்கள் அல்குர்ஆனில் காணப்படுகின்றன. உறுதி, நேர்வழி, புத்தி, சிந்தனை, ஆய்வு, நுட்பம், தெளிவு, ஆதாரம், அத்தாட்சி, விளக்கம் போன்றவாறான சொற்களே அவை. ஹதீஸ் நூட்களில் இது போன்ற புள்ளிவிபரத்தை மேற்கொள்ள முடியாது. ஏனெனில் அதில் அதிகமான ஹதீஸ்கள் காணப்படுவதால் இவ்வாறு தேடுவது மிகவும் கடினமாகும்.

அல்குர்ஆன் பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல், கணிதவியல் போன்றவாறானதோர் நூல் கிடையாது. அது மனிதனுக்கு நேரான பாதையைக் காட்டுகின்ற ஓர் வழிகாட்டியாகும். அத்தோடு அது நவீன அறிவியலுக்கு முரண்பாடாகவும் என்றும் இருக்கமாட்டாது.

இதன் காரணமாகத்தான் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தில் நீண்டகாலமாக இது மாபெரும் தாக்கத்தைச் செலுத்தி வந்தது. அறிவின் அனைத்துத் துறைகளிலும் வரலாறு கண்டிராத பாரிய முன்னேற்றங்கள் இடம்பெற்றன. பாரிய நாகரீக வளர்ச்சிகளுக்கு முஸ்லிம்களே சொந்தக்காரர்களாக மாறினர். மனித மூளைகள் ஆராய்ச்சியின் பக்கம்



மொரீஸ் பியூகாயல்

பிரேஞ்சு விஞ்ஞானி, மற்றும் வைத்தியர்

அல்குர்ஆனும், அதன் அறிவியல் அற்புதங்களும்

"அல்குர்ஆனின் பல வசனங்கள் இயற்கை விஞ்ஞானத்தைப் பற்றிப் பேசுகின்றன. பேராசிரியர் யூசுப் மர்வா என்பவர் தனது 'அல்குர்ஆனில் இயற்கை விஞ்ஞானம்' என்னும் நூலில் மொத்தமாக 774 வசனங்களில் அல்குர்ஆன் இயற்கை விஞ்ஞானம் பற்றிப் பேசுவாதாகக் குறிப்பிட்டுள்ளார். அவை வருமாறு: கணிதம் 61 வசனங்கள், பௌதிகவியல் 264 வசனங்கள், அணு 5 வசனங்கள், இரசாயனவியல் 29 வசனங்கள், சார்பு 62 வசனங்கள், வானியல் 100 வசனங்கள், தட்பவெப்பநிலை 20 வசனங்கள், நீரியல் வளம் 14 வசனங்கள், விண்வெளி அறிவியல் 11 வசனங்கள், விலங்கியல் 12 வசனங்கள், விவசாயவியல் 21 வசனங்கள், உயிரியல் 36 வசனங்கள், புவியியல் 73 வசனங்கள், மானிடவியல் 10 வசனங்கள், புவிச்சரிதவியல் 20 வசனங்கள், அண்டவியல் மற்றும் பேரண்டத்தின்

நகர்ந்து இவ்வுலகை ஓர் முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல அல்குர்ஆனே இதற்கு வழிகாட்டியாக இருந்தது. மேக்ஸ் மெய்ரஹூப் என்பவர் குறிப்பிடுகையில், "இரசாயனவியல் துறை ஐரோப்பாவிற்குக் கிடைக்க ஜாபிர் பின் ஹய்யான் என்பவரே காரணமாக இருந்தார். அவர் கண்டுபிடித்த அதிகமான கலைச்சொற்கள் இன்றும் கூட ஐரோப்பாவில் பல்வேறுபட்ட மொழிகளில் பாவனையில் உள்ளன." என்கின்றார்.

ஆல்டோ மில்லி என்பவர், "கணிதவியல், வானியல் என்பவற்றுக்கு முன்னோடியாக அபூ அப்தில்லாஹ் முஹம்மத் பின் மூஸா அல்ஹூவாரிஸ்மி[1] என்பவரே திகழ்ந்துள்ளார். இவரிடமிருந்து பல அறிஞர்கள் கல்விகற்றுத் தேர்ந்துள்ளனர். இவர் எழுதிய புத்தகங்கள் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் 16ம் நூற்றாண்டு வரை போதிக்கப்பட்டு வந்துள்ளன" என்று குறிப்பிடுகின்றார்.

ஸிக்ரட் ஹன்க் என்னும் பெண் அபூ அல்காஸிம் அல் ஸஹ்ராவி என்பவர் எழுதிய ‘கிதாப் அல் தஸ்ரீப்’[2] என்னும் நூலின் ஒரு பாகமான சத்திரசிகிச்சைப் பகுதி பற்றிக் குறிப்பிடுகையில், "இப்புத்தகத்தின் மூன்றாம் பாகத்தில் ஐரோப்பியர்கள் அதிகமாக கவனம் செலுத்தி வருகின்றனர். அதில் சத்திரசிகிச்சைக்கான அடிப்படைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. மருத்துவத்துறை இப்பகுதிக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கின்றது. வைத்தியத்துறையில் சத்திரசிகிச்சை என்பது ஒரு தனிக் கலையாக மாறும் அளவுக்கு இப்புத்தகத்தின் உடற்கூறியலில் தனித்துக் காணப்படுகின்றது" என்கின்றார். இப்புத்தகத்திற்கு ஐரோப்பியர்களிடத்தில் அதிக வரவேற்பு இருக்கின்றது என்பதை இது குறிக்கின்றது.

(1) இவர் தான் முதன் முதலில் அட்சரக் கணிதத்தைக் கண்டுபிடித்தவர். இந்து இலக்கங்களை வடிவமைத்தவர். இவருக்கு கணிதம், வானியல், புவியியல் போன்ற துறைகளில் நிறைய ஆய்வு நூல்கள் இருக்கின்றன.

(2) இது 30 பாகங்களைக் கொண்ட நூலாகும். இதில் அதிகமான பட விளக்கங்கள் காணப்படுகின்றன. ஸஹ்ராவி அவர்கள் பாவித்த இருநூறுக்கும் மேலான வைத்தியக் கருவிகள் சார்ந்த படங்களை அவைகள். இப்புத்தகத்தின் சத்திரசிகிச்சை சார்ந்த பகுதியை மாத்திரம் ஜிராட் கொமோனா என்பவர் 12ம் நூற்றாண்டில் லத்தீன மொழிக்கு மொழியாக்கம் செய்தார். இப் புத்தகத்துக்கு பல பதிப்புக்கள் வெளிவந்தன. முதல் பதிப்பு 1497ம் ஆண்டு வெனிஸிலும், இரண்டாம் பதிப்பு 1541ம் ஆண்டில் பாஸலிலும், மூன்றாம் பதிப்பு 1778ம் ஆண்டு ஒக்ஸ்போர்டிலும் வெளிவந்தன. டாக்டர் லுக்லேக் 19ம் நூற்றாண்டில் இதை பாரசீக மொழிக்கு மொழியாக்கம் செய்தார்.

முஸ்லிம் அறிஞர்கள் தமது திறமைகளை ஒவ்வொரு காலகட்டத்திலும் இவ் உலகுக்கு முன்வைத்துக்கொண்டே இருக்கின்றனர். அந்த வகையில் அஹ்மத் ஸவீல்[1] என்பவர் தனது விஞ்ஞானத்தின் வயது எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "எனது ஆய்வு பல பகுதிகளாக ஒன்று சேர்ந்து, பிரிகின்ற அணுவின் மையப்பகுதியை மையமாகக் கொண்டிருந்தது. அது ஒரு செக்கனில் பல கால எல்லைகளைக் கொண்டிருந்தது. இக்காலம் பாரிய இராட்சத காலமாய்த் தென்பட்டது" என்கின்றார்.

நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த அறிவும், வழிகாட்டலும் மனிதர்களை இருள் சூழ்ந்த உலகிலிருந்து, நவீன ஒளிவீசும் உலகுக்குக் கொண்டுவந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இஸ்லாம் அறிவுக்கென்று சில முறைகளை நிர்ணயித்துள்ளது. அவைகள் வருமாறு, அறிவின்றி எதையும் கண்மூடித் தனமாக பின்பற்றல் கூடாது. அல்லாஹ் இணைவைப்போரைப் பற்றிக் குறிப்பிடுகையில், "'அல்லாஹ் அருளியதைப் பின்பற்றுங்கள்!' என்று அவர்களிடம் கூறப்பட்டால் 'எங்கள் முன்னோர்களை எதில் கண்டோமோ அதையே பின்பற்றுவோம்' என்று கூறுகின்றனர். அவர்களின் முன்னோர்கள் எதையும் விளங்காமலும், நேர் வழி பெறாமலும் இருந்தாலுமா?" (அல்குர்ஆன் 02:170)

ஊகித்துப் பின்பற்றல் கூடாது "அவர்கள் ஊகத்தையே பின்பற்றுகின்றனர். அவர்கள் அனுமானம் செய்வோர் தவிர வேறு இல்லை." (அல்குர்ஆன் 06:116)

(1) எகிப்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் இரசாயண மேதையாவார். தனது இரசாயணவியல் கண்டுபிடிப்பான அதிர்வெண்ணை பகுப்பாய்வு செய்யும் கெமராவைக் கண்டுபிடித்ததினால் 1999ம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார். இது ஒரு பெம்டோ செக்கனில் செயல்படக் கூடியது (Femtosecond Spectroscopy). இதனைக் கொண்டு இரசாயண எதிர்விளைவுகளைப் பற்றி ஆய்வு செய்ய முடியும். டாக்டர் அஹ்மத் ஸாவில் லேசரைப் பயன்படுத்தி அணுவின் உள்ளே உள்ள பல பகுதிகள் தோன்றுவதையும், அவை ஒன்றுடன் ஒன்று இணைவதையும் படம் பிடிக்கும் புதிய முறையை அறிமுகப்படுத்தினார். அது ஒரு முறை படம்பிடிக்கும் நேரம் பெம்டோ செக்கன் என அறியப்படுகின்றது. இதை செயற்பாடு ரீதியாகப் பார்த்தால் ஒரு செக்கனுக்கு பல கோடி படங்களைப் பிடிக்க வல்லது

கலாச்சார உணர்வு

"நகரமயமாக்கல் வரலாற்றில் திடீரென மாற்றங்கள் ஏற்பட்டது மிகவும் குறைவு. ஆனால் முஸ்லிம்களிடம் இது மிகவும் விரைவாகப் பரவி, அவர்களை, இஸ்லாமிய கலாச்சாரத்தை இப்புவியில் நிலைநாட்ட வலிகோலியது. கவர்னர் முதல் தொழிலாளி வரை அனைத்து முஸ்லிம்களும் கல்வித்தாகம் கொண்டவர்களாக இருந்தார்கள். பலர் தம் நாட்டை விட்டும் தூரப் பிரதேசங்களுக்குச் சென்று கல்வியைத் தேடலானார்கள். அந்நேரம் அறிவின் சிகரமாக பக்தாத் காணப்பட்டது. அதன் பின் பல இடங்களில் பல கல்வி மையங்கள் எழுச்சி பெறவே பல்கலைக்கழகங்களும் உருவாகின. ஐரோப்பியர்கள் கூட முஸ்லிம்களிடம் வந்து நவீன அறிவியலைக் கற்றுச் சென்றார்கள்.

ஸ்டான்லி லேன் போன்

பிரித்தானிய கீழைத்தேய வாதி

அறிவுக்கு முரண்படுகின்ற மனோ இச்சைகளைப் பின்பற்றவும் கூடாது. "அதிகமானோர் அறிவில்லாமல் தமது மனோ இச்சைகள் மூலம் வழி கெடுக்கின்றனர்.." *(அல்குர்ஆன் 06:119)*

நீதத்தை விட்டும் தூரப்படுத்தும் கோபம், வெறுப்பு போன்றன இருக்கக்கூடாது. "ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க, உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள்! அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்." *(அல்குர்ஆன் 05:08)*

திரிவுபடுத்தப்பட்ட அறிவை விட்டும் எச்சரிக்கின்றது. அல்லாஹ் யஹூதிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, "யூதர்களில் சிலர், வார்த்தைகளை அதற்குரிய இடங்களிலிருந்து மாற்றுகின்றனர். ''செவியுற்றோம்; மாறு செய்தோம்; (நாங்கள் கூறுவது) உமக்குச் சரியாகக் கேட்காமல் போகட்டும்'' எனவும் 'ராஇனா' எனவும் கூறு கின்றனர்" *(அல்குர்ஆன் 04:46)*

வரம்பு மீறி நடத்தல், துர்ப்பாக்கியவானாக மாறுதல் போன்றவற்றை விட்டும் எச்சரிக்கின்றான். ""மக்களுக்கு அநீதி இழைத்து நியாயமின்றி பூமியில் வரம்பு மீறுவோருக்கு எதிராகவே குற்றம் பிடிக்க வழி உண்டு. அவர்களுக்குத் துன்புறுத்தும் வேதனை உண்டு. *(அல்குர்ஆன் 42:42)*

மக்களுக்கு மத்தியில் நீதம் செலுத்தும் போது அறிவியலில் நம்பிக்கையைப் பேணவேண்டும். "மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது நீதியாக நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் என அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான்" *(அல்குர்ஆன் 04:58)*

நீதம், சாட்சி கூறும் விடயம் போன்றவற்றில் உண்மையைக் கடைபிடித்தல் வேண்டும். "நம்பிக்கை கொண்டோரே! உங்களுக்கோ, பெற்றோருக்கோ, உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் நீங்கள் நீதியை நிலை நாட்டுவோராகவும், அல்லாஹ்வுக்காக சாட்சி கூறுவோராகவும் ஆகி விடுங்கள்!" *(அல்குர்ஆன் 04:135)*

எதை செய்வதானாலும் ஆதாரத்துடனே செய்ய வேண்டும். "'நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்கள் சான்றைக் கொண்டு

அறிவியல் நாகரீகம்

"அரேபியர்களின் நாகரீகங்களையும், அவர்களின் அறிவியல் நூற்களையும், கண்டுபிடிப்புக்களையும் நாம் ஆராயும் போது பல உண்மைகள் தெளிவாகின்றன. மத்திய நூற்றாண்டில் முஸ்லிம்கள் கல்வியில் சிறந்து விளங்கினர். மேற்கத்தேய பல்கலைக்கழகங்களில் கூட கிட்டத்தட்ட 5 நூற்றாண்டுகளாக இவர்கள் தொகுத்த அறியல் நூற்களையே பாடமாக நடாத்தினர். முஸ்லிம் அறிஞர்கள் தான் ஐரோப்பாவினுள் அறிவியல்

கொஸ்டோவ் லி போன்
பிரேஞ்சு வரலாற்றாசிரியர்

அல்குர்ஆன் ஓர் அற்புத நூல்

"அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனங்களையும் உன்னிப்பாகக் கவனிக்கின்ற போது, அவற்றுக்கு இயற்கை விஞ்ஞானத்துடன் தொடர்பு இருப்பதை என்னால் உணர முடிந்தது. அவை அனைத்தும் தற்போதைய நவீன உலகிலேயே அறிந்து கொள்வது சாத்தியமானதாக இருக்கின்றது. எனக்கு ஆச்சரியமாக இருந்தது, முஹம்மத் ﷺ அவர்கள், இத்தகைய அறிவியல் வளர்ச்சிகள் இடம்பெறாத காலகட்டத்தில் இவ்வுண்மைகளை எவ்வாறு கூறியிருக்க முடியும் !! நிச்சயம் அல்குர்ஆன் இறைவேதமாகும். இது ஓர் அற்புதம் என்பதில் எவ்வித

ரெனே ஜினோ

பிரேஞ்சு தத்துவமேதை

வாருங்கள்!' என்று கேட்பீராக!" (அல்குர்ஆன் 27:46)

அறிவியலுக்கும், நாகரீகத்திற்கும் இது போல் இன்னும் நிறைய முறைசார் போக்குகளை இஸ்லாம் ஒலுகச்சொல்கின்றது.

நாகரீகத்திற்கான வழி

ஒவ்வொரு வர்க்கத்தினரும் அல்லது ஒவ்வொரு சமூகத்தினரும் தமக்கென்று பிரத்தியேகமான ஓர் கலாச்சாரத்தைக் கொண்டிருக்கின்றனர். கலாச்சாரம் என்பது வாழ்கை முறையாகும். அது தனிப்பட்ட வாழ்விலும், சமூக வாழ்விலும் தாக்கம் விளைவிக்கின்ற ஒழுங்கு முறையாகும். ஒவ்வொருவரினது நடைமுறைகளையும், செயற்பாடுகளையும் ஒரே சாயலில் வடிவமைப்பதில் வல்லதாகும். கலாச்சாரத்தை ஓர் சமூகத்தின் அடையாளம் என்று கூடக் கூறலாம். நாகரீகம் என்பது கலாச்சாரத்தை மெருகூட்டும் வகையில் அமைந்த ஓர் அம்சமாகும். கலாச்சாரங்களை இன்னொரு படி மேல் உயர்த்தி, அவற்றை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்கின்றது. நடைமுறை வாழ்வில் பல சாதனைகளை மேற்கொள்கின்றது. காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்றவாறு மக்களை தயார்படுத்துகின்றது. இது அறிவியல், கலாச்சாரம், மார்க்கம், அரசியல், பொருளாதாரம், சூழல் போன்ற அனைத்திலும் ஆதிக்கம் செலுத்தி, மக்களைக் கவர்கின்ற முறையில் புதிதான பல முயற்சிகளை மேற்கொள்கின்றது. ஓர் சமூகம் மேற்கூறப்பட்ட விடயங்களில் எதில் சிறந்து விளங்குகின்றதோ, அதை அச்சமூகத்தின் நாகரீக வளர்ச்சி என்றே நாம் கூறுகின்றோம்.

நாடோடி வாழ்வு வாழ்ந்து, அதில் இனவெறியும், கொலைவெறியும் தாண்டவமாடி, அவ்வாழ்க்கையில் சலிப்படைந்து காணப்பட்ட போது, நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றிக் கேள்விபட்டதும், அதிகமானவர்களின் வரண்டு கிடந்த உள்ளங்கள் செலிப்படைந்தன. இப்புதிய மார்க்கம் போதித்த நற்குணங்களையும், சிறந்த பண்பாடுகளையும், உயரிய கலாச்சாரத்தையும் அடிமனதோடு ஏற்றுக்கொண்டன. ஏனெனில் அவர்கள் அனைவரும் முன்னைய காலத்தில் அடிமைகளாகவும், ஒதுக்கப்பட்ட சமூகமாகவும்,

வேலைகளை செய்வதற்கென்ற படைக்கப்பட்டவர்களாகவும் நோக்கப்பட்டனர். இத்தருணத்தில் இவ் இஸ்லாம் மார்க்கம் அவர்களுக்குக் கிடைத்தது பெரும் வரமாகவே இருந்தது. இதில் தமக்கு சுதந்திரத்தையும், தமக்கான உரிமைகளையும் பெற்றுக்கொண்டனர். நிம்மதியான, சந்தோசமான வாழ்வையும் இதில் அடைந்துகொண்டனர். இத்தகைய நாகரீகமான வாழ்வை இதற்கு முன்னர் அவர்கள் கண்டதே இல்லை.

இஸ்லாமிய நாகரீகமானது மனிதனை கண்ணியப்படுத்தியது. எந்த ஒரு மனிதனையும் நிற, இன, மொழி அடிப்படையில் பிரித்து நேக்கவில்லை. அனைவரையும் சமமாக நடாத்தி, அவர்களுக்கான உரிமைகளையும் சமமாகவே வழங்கியது. இன, கோத்திர வெறியர்களாய் இருந்த மனிதர்களை சமூக அடிப்படையில் அனைவரும் கலந்து வாழ்வதற்கான வழிவகைகளை செய்து கொடுத்தது. அனைவரது கொள்கை கோட்பாடுகளையும், நடைமுறைசார் அம்சங்களையும், சிந்தனைகளையும் ஒன்றாக மாற்றியமைத்து, அவர்களை ஒரு தாய் மக்களாக நடாத்தியதில் இஸ்லாமிய நாகரீகத்திற்கு பெரும் பங்கு இருக்கின்றது.

இஸ்லாமிய நோக்கில் நாகரீகம் என்பது, மன நிம்மதி, அமைதி, பாதுகாப்பு, சிறந்ததோர் சமூகத்தைக் கட்டியெழுப்புதல், மனிதர்களுக்கு அக மகிழ்வை வழங்கல் போன்றவைகளை நோக்காகக் கொண்டதாகவும், தீமைகளை எதிர்த்துப் போராடக்கூடியதாகவுமே இருக்க வேண்டும். தற்போது மேற்கூறப்பட்டவைகளுக்கு முரணாகக் காணப்படும் சிவில் நாகரீகத்தை நாகரீகம் எனக் கூறமுடியாது. ஏனெனில் அது அமைதி, மன நிம்மதி போன்றவற்றோடு சமூகத்தையும், நாட்டையும் கட்டி எழுப்பவில்லை. மக்களுக்கு தீமைபயக்கும் விடயங்களை அவர்களை விட்டும் தூரப்படுத்தவோ, அவர்களுக்கு நன்மைபயக்கும் விடயங்களை ஏற்படுத்திக் கொடுக்கவோ இது இன்னும் முன்வரவில்லை.

மாறாக மனிதர்களுக்கு அதிக பதட்டங்களையும், தடுமாற்றங்களையும் உண்டுபன்னுதல், வரம்பு மீறும் விடயங்களை அவர்களுக்குப் போதித்தல், சிறந்த



சிறந்த ஒழுங்கமைப்பு

“இன்று இஸ்லாமே மேலோங்கிக் காணப்படுகின்றது. ஏனெனில் அதன் சமூக, அரசியல் ஒழுங்கமைப்புக்கள் சிறந்தவையாக அன்று தொடக்கம் இன்று வரை காணப்படுகின்றன. இது ஒவ்வொரு சமூகத்துக்கும் பொருத்தமான ஒழுங்கமைப்புக்களாகக் காணப்படுகின்றன. முன்னைய காலத்தில் மக்கள் அரசியல் தலைவர்களால் அடிமைப்படுத்தப்பட்டும், அநீதமிழைக்கப்பட்டும் வாழ்ந்து வந்த காலத்தில் இஸ்லாம் அவர்களைப் போய்ச் சேர்ந்த போது ஆனந்தத்தோடு ஏற்றுக்கொண்டனர். மக்களுக்கும், அரசுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாத காலகட்டத்தில் சிறந்த அரசியல் ஒழுங்கமைப்பை முன்வைத்த போது அதனையும் மக்கள் ஆரவாரமாக ஏற்றுக்கொண்டனர். அந்நிலை இன்றும் நீடிக்கின்றது. எனவே இது

ஹெர்பர்ட் ஜார்ஜ் வெல்ஸ்
பிரித்தானிய இலக்கியவாதி,
மற்றும் எழுத்தாளர்

குணநலன்களை விட்டும் அவர்களை தூரப்படுத்தல், மனிதனின் உயரிய குணாதிசயங்களை சீர்குழைத்தல், மனிதர்களை இயந்திரங்களாகப் பயன்படுத்தல் போன்றவைகளிலே இது சிறந்து விளங்குகின்றது.

நாகரீகத்திற்குத் தேவையான அம்சங்கள்.

இஸ்லாமிய நாகரீகத்திற்கென்று சில தனித்துவமான அம்சங்கள் இருக்கின்றன. நாகரீகத்தின் அடிப்படை அம்சங்கள், அதன் குறிக்கோல்கள், விதிமுறைகள் போன்ற விடயங்களில் பிற நாகரீகங்களை விட்டும் இதனை வேறுபிரித்துக் காட்டுகின்றன. சில சமயங்களில் இதற்கும் ஏனைய நாகரீகத்திற்கும் மத்தியில் ஒற்றுமை நிலவினாலும் கூட அடிப்படை அம்சங்களை நோக்குகின்ற போது அதன் யதார்த்தம் தெரிய வருகின்றது.

இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படை கிரேக்கர்களைப் போல் பகுத்தறிவைக் கொண்டு பெருமைப்படுவதோ, ரோமர்களைப் போல் பலம், அதிகாரம் போன்றவற்றைக் கொண்டு அகங்காரம் கொள்வதோ, பாரசீகர்களைப் போல் உடல் சந்தோசம், இராணுவ பலம், அரசியல் செல்வாக்கு போன்றவற்றில் கவனம் செலுத்துவதோ, இந்துக்கள், பௌத்தர்களைப் போல் ஆண்மீக பலத்தைப் பெற்றுக்கொள்வதோ, மூடநம்பிக்கைகளாலும், கட்டுக்கதைகளாலும் மத்திய நூற்றாண்டில் ஐரோப்பாவையே இருளில் மூழ்கடித்த மார்க்க மேதைகளின் ஆதிக்கத்தை ஆதரிப்பதோ, கிரேக்க, ரோமர்களிடமிருந்து அனந்தரமாக தற்போதைய உலகு பெற்றுள்ள அறிவியலில் இன்பம் காணுதல், பிரபஞ்சத்தின் இரசாயனங்களைப் பெற்று அதில் உச்ச பயனை அடைதல் போன்றவையோ அல்ல. இஸ்லாமிய நாகரிகத்தின் அடிப்படை ஏகத்துவம், சிந்தனை, அறிவு, செயற்பாடு, ஆன்மா, பிரநிதித்துவம், புத்திக்கு மதிப்பளித்தல், மனிதர்களோடு கௌரவமாக நடந்துகொள்ளல் போன்ற மனிதனின் மொத்த வாழ்வின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும். இதனால் தான் இஸ்லாமிய நாகரீகமானது ஏனைய நாகரீகங்களை விட்டும் வேறுபட்டு, தனித்துவமாக விளங்குகின்றது. அர்ப்பனிப்பு, தியாகம், விடாமுயற்சி, நீதம், மன்னிப்பு, நலவை நாடுதல், முழு உலகுக்கும் அறிவியலைப் பரப்புதல் போன்றவற்றில் இஸ்லாமிய



ஏமாற்றத்தின் அடையாளம்

"முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஐரோப்பாவில் செரிந்து வாழும் இத்தருணத்தில் ஐரோப்பாவில் இஸ்லாத்தின் தாக்கம் பற்றி ஆய்வை மேற்கொள்வது பொருத்தமான ஒன்றாக இருக்கின்றது. ஏனெனில் மத்திய நூற்றாண்டுகளில் கிறிஸ்தவ எழுத்தாளர்கள் முஸ்லிம்களுக்கும், இஸ்லாத்திற்கும் எதிராக பல எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இஸ்லாத்தை விசமர்சித்து பல புத்தகங்களை எழுதினர். கடந்த சில தசாப்தங்களாக பலரும் இஸ்லாத்தின் அப்படி என்னதான் இருக்கின்றது என்னும் ஆவலில் அதைப் பற்றி ஆராய ஆரம்பித்துள்ளனர். இதன் முடிவுகள் கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் அமைந்திருந்தது. முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையேயான உறவை பலப்படுத்தியுள்ளது. இவ்வாறிருந்தும் இன்னும் நாம் இஸ்லாத்தை எதிர்க்க ஆரம்பித்தால் எம்மைப் போன்ற ஏமாலிகள் வேறு எவரும் கிடையாது."

மோண்ட்கோமெறி வாட்
பிரித்தானிய கீழைத்தேயவாதி

நாகரீகம் உயர்ந்து காணப்படுகின்றது. மனித இனத்தை ஆட்சி செய்வதற்கான அனைத்து வளங்களையும்ம் இது கொண்டிருப்பதனால் மீண்டும் மீண்டும் இவ்வுலக மக்களுக்கு தனது தனித்துவத்தை எடுத்துக் காட்டி, அவர்களை தன் பக்கம் இழுத்துக்கொள்கின்றது.

உலகின் தற்கொலைகள்

"தற்போது மேற்கத்தேயர்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, தம் வாழ்வுக்கான அர்த்தத்தை அறிந்து கொள்ளவும், சிறந்த வரலாற்றைப் படைத்திடவும் இஸ்லாத்தின் பக்கம் தேவை கண்டுள்ளனர். இஸ்லாம் நம்பிக்கையையும், அறிவியலையும் பிரித்துப் பார்ப்பதில்லை. இரண்டையும் ஒன்றோடு ஒன்று கலந்து விட்ட கலவையாகத் தான் பார்க்கின்றது. இதனை மேற்கத்தேயர்களும் தற்போது ஏற்க ஆரம்பித்துள்ளனர். அவ்வாறே தற்கொலையினால் அழிந்து செல்லும் சமூகத்தைப் பாதுகாத்திட இஸ்லாத்தால் மாத்திரமே முடியும் என்பதையும் தற்போது அவர்கள்

மர்மூடேக் பீக்ஸூல்
ஆங்கில சிந்தனையாளர், மற்றும்
இலக்கியவாதி

இஸ்லாமிய நாகரீகம் சிறந்து விளங்குவதற்குக் காரணமான அம்சங்கள்:

1- ஈமானும், ஏகத்துவமும்.

மகிழ்வின் பாதைக்கும், அறிவியலை அடைந்து கொள்வதற்கும், நாகரீகத்தைக் கட்டியெழுப்பவதற்கும் முக்கியமான அம்சமாக ஈமான் (விசுவாசம்) திகழ்கின்றது. அல்லாஹ்வை ஈமான் கொள்ளாமல், அவனை ஒருமைப்படுத்தாமல் வளர்ச்சி கண்டு செல்லும் நாகரீகங்கள் தமக்கு மத்தியில் உட்பூசல்களையும், சண்டை சச்சரவுகளையும் எதிர்கொண்டு, மனிதனின் வாழ்வை துர்ப்பாக்கியம் நிறைந்ததாகவும், படுபாதாளத்தை நோக்கை செல்லும் பயணிப்பாகவும் மாற்றியமைக்கின்றது. ஏனெனில் அவை மனிதர்களைப் பல தெய்வங்களை வழிபடவைத்து, அவர்களிடையே பிளவுகள் தோன்றக் காரணமாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான். "அவ்விரண்டிலும் (வானங்களிலும், பூமியிலும்) அல்லாஹ்வைத் தவிர வேறு கடவுள்கள் இருந்திருந்தால் இரண்டும் சீரழிந்திருக்கும். அவர்கள் கூறுவதை விட்டும் அர்ஷுக்கு அதிபதியாகிய அல்லாஹ் தூயவன்" *(அல்குர்ஆன் 21:22)*மேலும், "அல்லாஹ் பிள்ளையை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அவனுடன் எந்தக் கடவுளும் இல்லை. அவ்வாறிருந்தால் தான் படைத்தவற்றுடன் ஒவ்வொரு கடவுளும் (தனியாகப்) போயிருப்பார்கள். ஒருவரையொருவர் மிகைத்திருப்பார்கள். அவர்கள் கூறுவதை விட்டும் அல்லாஹ் தூயவன்" *(அல்குர்ஆன் 23:91)*

மேலும், "‘அவர்கள் கூறுவது போல் அவனுடன் பல கடவுள்கள் இருந்திருந்தால்

அவர்களும் அர்ஷுடைய (இறை) வனிடம் (சரணடைய) ஒரு வழியைத் தேடியிருப்பார்கள்' என்று கூறுவீராக!" (அல்குர்ஆன் 17:42)

அநேகமான நாகரீகங்களில் இவ்வாறே இடம்பெறுகின்றன. நாகரீகம் என்பதன் அர்த்தம் புறக்கணிக்கப்பட்டு, தான் பயணிக்கும் திசையிலிருந்து விலகி, மனித இனத்திற்கு நலவு செய்வதாக எண்ணி, பாரிய கெடுதிகளையே விளைவிக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான், "அவர்கள் அல்லாஹ்வையன்றி தமது மத போதகர்களையும், பாதிரிகளையும், மர்யமின் மகன் மஸீஹையும் கடவுள்களாக்கினர். ஒரே கடவுளை வணங்குமாறு தான் அவர்கள் கட்டளை யிடப்பட்டனர். அவனைத் தவிர வணக்கத் திற்குரியவன் வேறு யாருமில்லை. அவர்கள் இணை கற்பிப்பவற்றை விட்டும் அவன் தூயவன்" (அல்குர்ஆன் 09:31)

2- சர்வதேசமயமானது.

இஸ்லாம் என்பது அனைத்துக் காலகட்டத்திற்கும், பலதரப்பட்ட மொழி பேசுகின்றவர்களுக்கும், பல நிறங்களில், பல இனங்களில் வாழ்பவர்களுக்கும் என அனைவருக்கும் பொதுவான ஓர் மார்க்கமாகும். "(முஹம்மதே!) நற்செய்தி கூறுபவராக வும், எச்சரிக்கை செய்பவராகவும் மனிதர்கள் அனைவருக்குமே உம்மை அனுப்பியுள்ளோம். எனினும் மனிதர்களில் அதிகமானோர் அறிய மாட்டார்கள்" (அல்குர்ஆன் 34:28)

மேலும், "(பொய்யையும் உண்மையையும்) பிரித்துக் காட்டும் வழி முறையை அகிலத்தாருக்கு எச்சரிக்கை செய்யக் கூடியதாக தனது அடியார் மீது அருளியவன் பாக்கியமானவன்." (அல்குர்ஆன் 25:01)

அறிவியல் சாதனைகள்

"இஸ்லாம் கடந்த 8 நூற்றாண்டுகளாக தனது அறிவியல் சாதனைகளை மெய்ப்பித்துக்கொண்டே வருகின்றது. எனவே இஸ்லாம் என்பது நாகரீகத்தை மாத்திரம் உலகுக்கு சொல்ல வருகிறது என்றும், நாகரீகத்தில் உயர்ந்தவர்கள் மேற்கத்தேயர்கள் என்றும் ஒரு போதும் நாம் நினைத்து விடக்கூடாது. இத்தகைய சாதனைகளை நிலைநிறுத்துவதற்கு இஸ்லாத்திடம் பல சிறந்த நெறிமுறைகள் இருக்கின்றன

இளவரசர் சார்லஸ்
பிரிட்டன் முடிக்குரிய இளவரசர்

மத்தியகால நூற்றாண்டு

"மூஸா இப்னு நஸீர் என்பவர் ஐரோப்பாவையும் கடந்து சென்றிருந்தால் இன்னேரம் ஐரோப்பாவும் முஸ்லிம் பிரதேசங்களாக மாறியிருக்கும். ஓரிறைக்

கொஸ்டோவ் லிபோன்
பிரேஞ்சு வரலாற்றாசிரியர்

மேலும், "“மனிதர்களே! நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதர். அவனுக்கே வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சி உரியது. என்று (முஹம்மதே!) கூறுவீராக (அல்குர்ஆன் 07:158)

மேலும், "(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம்" (அல்குர்ஆன் 21:107)

எந்நிலையிலும் மாற்றமடையாத கொள்கை கோட்பாடுகளையும், நீதம், உண்மை, நலவு போன்றவற்றை ஒவ்வொரு இடத்திற்கும், காலத்திற்கும் ஏற்ற வகையில், மக்களின் இயல்புக்குப் பொருந்தும் வகையில் நிலைநாட்டும் மார்க்கமாகவும் இஸ்லாம் திகழ்கின்றது. ஏனெனில் இது தன் படைப்பினங்களின் நலன்கள் யாவற்றையும் அறிந்த வல்ல நாயன் அல்லாஹ்விடமிருந்து வந்த வழிகாட்டுதல் ஆகும். அல்லாஹ் கூறுகிறான், "படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுட்பமானவன்; நன்கறிந்தவன்." (அல்குர்ஆன் 67:14)

இஸ்லாம் என்பது சில குறிப்பிட்ட வர்க்கத்தினருக்கோ, குழுவினருக்கோ, நிறத்தினருக்கோ, இனத்தினருக்கோ உரிய மார்க்கம் கிடையாது. இது ஆதிகாலம் தொட்டு, இன்றளவிலும், இதற்குப் பின்னர் வரப்போகும் அனைத்துத் தரப்பினருக்குமுரிய மார்க்கமாகும். நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த இவ் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஆராயும் ஒருவர் இத்தகைய வேற்றுமைகளை ஒரு போதும் காணமாட்டார். இஸ்லாம் தன்னைப் பின்பற்றுமாறு உலக மாக்கள் அனைவருக்கும் பொதுவான அழைப்பு விடுக்கின்றது. எனவே இஸ்லாத்தின் சின்னங்களும், சட்டதிட்டங்களும், விழுமியங்களும் ஒவ்வொரு காலகட்டத்தில் தோன்றும் அனைத்துத் தரப்பினருக்கும் பொருந்தும் வகையிலேயே அல்லாஹ்வால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நீதம், சிறந்த நற்குணங்கள் போன்றவற்றை சிலருக்கு மாத்திரம் வழங்கி, வேறு சிலருக்கு வழங்காமல் இருக்க வேண்டுமென இஸ்லாத்தில் எம்மால் கூற முடியாது. ஏனெனில் வேறு மதங்களில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. யூதர்கள் தங்களைச் சாராத ஏனையோருடன் நடந்துகொள்ளும் முறை பற்றி அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகின்றான், "நம்பி, ஒரு குவியலையே ஒப்படைத்தால் உம்மிடம் திருப்பித் தருவோரும் வேதமுடையோரில் உள்ளனர். நீர் நம்பி ஒரு தங்கக் காசை ஒப்படைத்தால் நிலையாய் நின்றால் தவிர உம்மிடம் திருப்பித் தராதோரும் அவர்களில் உள்ளனர். ‘‘எழுதப்படிக்கத் தெரியாத சமுதாயத்தின் விஷயத்தில் எங்கள் மீது எந்தப் பாவமும் ஏற்படாது’’ என்று அவர்கள் கூறுவதே இதற்குக் காரணம். அல்லாஹ்வின் பெயரால் அறிந்து கொண்டே அவர்கள்



அர்னால்ட் டொயின் பீ
பிரித்தானிய வரலாற்றாசிரியர்

அடக்கியாளப்படுவோர் அடக்குவோரை சிறைப்பிடித்தல்

"அடக்கியாளப்பட்ட இஸ்லாம் சிலுவை யுத்தத்தில் அடக்குவோரை அடங்க வைத்தது. தனது நாகரீகக் கலைகளை கிறிஸ்தவ உலகில் நுழைவித்தது. அந்நேரம் லத்தீனப் பிரதேசம் துருப்பிடித்து, அழிந்து போகும் நிலையில் இருந்தது. இஸ்லாமிய நாகரீகத்தின் தாக்கம் அவர்கள் மத்தியில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. சிசிலியன், அன்டலூசியா போன்ற பகுதிகளில்

3- அறிவியல் மற்றும் சிவில் நாகரீகமும்.

மனிதனைப் பொறுத்தவரையில் இஸ்லாம் அவனை இப்பூமியில் வசிக்கவும், அதில் சிறந்த நாகரீகங்களை உருவாக்கிக்கொள்ளவுமே படைத்துள்ளான். "அவனே உங்களைப் பூமியிலிருந்து படைத்தான். அதில் உங்களை வசிக்கச் செய்தான்." (அல்குர்ஆன் 11:61)

மேலும், "அவனே உங்களைப் பூமியில் வழித்தோன்றல்களாக ஆக்கினான். யாரேனும் (ஏக இறைவனை) மறுத்தால் அவரது மறுப்பு அவருக்கே எதிரானது. மறுப்போருக்கு அவர்களின் மறுப்பு அவர்களின் இறைவனிடம் கோபத்தைத் தவிர அதிகமாக்காது. மறுப்போருக்கு அவர்களின் மறுப்பு, இழப்பைத் தவிர அதிகமாக்காது." (அல்குர்ஆன் 34:39)

இஸ்லாமிய மார்க்கம், மனித இனத்திற்குப் பயன்படும் அறிவியல் கலைகளை விட்டுவிடுபவர்களையும், பூமியில் மாற்றங்களை ஏற்படுத்தாதவர்களையும் பாவிகளாகக் கருதுகின்றது. மக்கள் அறிவியலிலும், நாகரீகத்திலும் பின்தங்கி, அவர்கள் தத்துவங்கள், விவாதங்கள், வீண் தர்க்கங்கள் போன்றவற்றில் ஈடுபட்டு, வாழ்வதிலும், தொழில் புரிவதிலும், உலகைக் கட்டியெழுப்புவதிலும் அவர்கள் உரிமைகளை பெறாமல் இருந்த காலத்தில் தான், நபி ﷺ அவர்கள் இவ் இனிய மார்க்கத்தைக் கொண்டுவந்து, மக்களின் குணாதிசயங்களை செவ்வையாக்கி, அவர்களின் உரிமைகளைப் பெற்றுத் தந்து, கௌரவமான தோற்றத்தில் அவர்களை வடிவமைத்தார்கள். அவர்களுக்கு அறிவியல், சிவில், முன்னேற்றம் போன்றவற்றுக்கான நாகரீகத்தைக் காண்பித்தார்கள். எனவே ஒரு முஸ்லிமின் உள்ளத்தில் வணக்கவழிபாடுகள் சார்ந்த ஆன்மீக அம்சங்களும், வாழ்வு, தொழில், முன்னேற்றம் போன்ற லௌகீக அம்சங்களும் என்றும் முரண்படாது. ஏனெனில் இவை அனைத்தையும் அல்லாஹ்வுக்காகவே அவன் செய்ய முனைகிறான். "எனது தொழுகை, எனது வணக்க முறை, எனது வாழ்வு, எனது மரணம் யாவும் அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன என்று கூறுவீராக"

தகுந்த தளபதி எங்கே?!

"இஸ்லாத்தைப் பற்றி தௌாவகப் பேசக்கூடிய ஓர் தளபதி தோன்றினால், மீண்டும் ஒரு முறை தனது பலத்தால்

மோண்ட்கோமெறி வாட்
பிரித்தானிய கீழைத்தேயவாதி

வாழ்வில் ஊடுறுவிச் செல்லும்

"நிச்சயமாக இஸ்லாம் மார்க்கமானது மனிதவர்க்கத்துக்கே மிகவும் சிறந்த மார்க்கமாகும். இஸ்லாம் மனிதன வாழ்வின் அனைத்துப் பகுதியிலும் ஊடுறுவி இருக்கின்றது. மனிதர்களிடம் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் ஒரே

கோஃபா லால் ஜாபா

இந்தியப் பத்திரிகையாளர், மற்றும் அரசியல் வாதி

(அல்குர்ஆன் 06:162)



மத்தேயு சுவிசேஷம்

“’அதற்கு அவர்: காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல என்றார்.’, ‘இந்தப் பன்னிருவரையும் இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: நீங்கள் புறஜாதியார் நாட்டுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற் போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப்



4- விழுமியங்கள் சார்ந்த நாகரீகம்.

நபி ﷺ அவர்கள் தாம் அனுப்பப்பட்ட நோக்கமே நற்குணங்களைப் பூர்த்தி செய்வது தான் என்று கூறியிருக்கும் போது, குணநலன்களோடு வாழ்வது இஸ்லாத்தின் வணக்கமாகக் கருதப்படுகின்றது. எனவே சிறந்த நற்குணங்களும், நற்பண்புகளும் சிறந்ததோர் நாகரீகமாக இஸ்லாத்தில் கருதப்படுகின்றது. நற்பண்புகள் என்பது மனிதனின் அனைத்து நடவடிக்கைகளிலும் ஒன்றறக் கலந்திருக்கின்றது. ஒருவனுக்கு தன்னுடனும், அல்லாஹ்வுடனும், பிற மனிதர்களுடனுமான தொடர்பாடல்கள், இறை நிராகரிப்பாளர்கள், பெரியோர்கள், சிறியோர்கள், ஆண்கள், பெண்கள், தன்னுடன் சிநேகமானவர்கள், எதிரிகள், இறைநிராகரிப்பாளர்கள் போன்றோருடனான தொடர்புகள் என அனைத்திலும் இஸ்லாத்தின் குணம் சார்ந்த நாகரீகம் வியாபித்திருக்கின்றது. கொடை, வீரம், நீதம், இரக்கம், பணிவு, ஒழுக்கம், உண்மை, வெட்கம், சகிப்புத் தன்மை, மன நிம்மதி, நல்லவைகளை விரும்புதல் போன்ற அனைத்தையும் ஒருவன் தனது வாழ்வில் எடுத்து நடக்க வேண்டுமென இஸ்லாம் ஏவுகின்றது. தனக்கு எதிர்ப்புக்கள் நிலவினால் கூட நீதத்தைக் கைவிடக்கூடாது என பின்வரும் வசனத்தில் குறிப்பிடுவது இவற்றில் ஒன்றாகும். "நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு, நீதிக்குச் சாட்சிகளாக



கட்டிக்காத்தல்

"இஸ்லாம் சிறந்த ஆழுமையான மார்க்கம் என அறியப்படுகின்றது. இது அனைத்தையும் கட்டிக் காக்கும் மார்க்கமாகும். அழித்துவிடும் மார்க்கமல்ல. உதாரணத்திற்கு ஒருவன் ஓர் நிலத்தை குறிப்பிட்ட காலம் வாங்கி, அதில் பயிர் பச்சை ஒன்றையும் செய்யாமல் வெறுமனே வைத்துவிட்டு, காலம் முடிந்ததும் மீட்டுக்கொடுக்கின்றான். இப்போது யார் அப்பூமியை வாங்கி விவசாயம் மேற்கொள்வாரோ அவர் தான் அப்பூமிக்குச் சொந்தக்காரர். அவ்வாறு தான் இஸ்லாமும். கட்டிக்காப்பவன்

சர் சார்லஸ் எட்வர்ட் ஆர்ச்சிபால்ட்
ஆங்கில அரசியல் வாதி

உள்ளங்களை பக்குவப்படுத்தும் மார்க்கம்

"இஸ்லாம் ஏனைய மார்க்கங்களை விட சிறந்த அறிவியல் கண்டுபிடிப்புக்களைக் கொடுத்த மார்க்கமாகும். அதில் மிகப்பெரும் அம்சமாக மனதை இங்கிதப்படுத்தி, அதனை பண்படுத்தும் அம்சங்களை

கொஸ்டோவ் லிபோன்
பிரேஞ்சு வரலாற்றாசிரியர்

ஆகி விடுங்கள்! ஒரு சமுதாயத்தின் மீதுள்ள பகை நீங்கள் நீதியாக நடக்காமலிருக்க, உங்களைத் தூண்ட வேண்டாம். நீதியாக நடங்கள்! அதுவே இறையச்சத்திற்கு நெருக்கமானது. அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! நீங்கள் செய்வதை அல்லாஹ் நன்கறிந்தவன்." (அல்குர்ஆன் 05:08)

நபி ﷺ அவர்களின் தூதுத்துவம் கூட தன்னை விசுவாசிக்கும் மனிதர்களுக்கு மாத்திரமல்லாமல் உலக மக்கள் அனைவருக்குமானது என்றே அல்லாஹ் குறிப்பிடுவது, உலகில் சிறந்த நாகரீகமாக நற்குணங்கள் பரவவேண்டும் என்பதனால் தான். அல்லாஹ் கூறுகின்றான், *"(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம்"* (அல்குர்ஆன் 21:107)

இத்தகைய நற்பண்புகள் இஸ்லாமிய நாகரீகத்தின் ஓர் அங்கமாகவும், அடிப்படை அம்சமாகவும் இருப்பதால், ஒரு முஸ்லிம் எச்சந்தர்ப்பத்திலும் இவற்றை விட்டும் தூரமாகிவிடக் கூடாது. பூமியைக் கட்டியெழுப்பும் விடயத்திலும், பிறருக்குப் பயன்படும் வகையில் புதிய விடயங்களைக் கண்டுபிடிக்கின்ற போதிலும் நற்குணங்கள் சார்ந்த அம்சங்கள் அவனிடத்திலும், அவன் உருவாக்கும் செயற்பாடுகளிலும் பிரதிபலிக்க வேண்டும். இதனால் தான் அல்லாஹ் நபி ﷺ அவர்களை, ஒழுக்க விழுமியங்களில் எப்போதும், எச்சந்தர்ப்பத்திலும் அனைவருக்கும் முன்னுதாரணமாகத் திகழுமாறு கட்டளை பிறப்பித்துள்ளான். *"அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி, அல்லாஹ்வை அதிகம் நினைக்கும் உங்களுக்கு அல்லாஹ்வின் தூதரிடம் அழகிய முன்மாதிரி இருக்கிறது."* (அல்குர்ஆன் 33:21)

பகிரங்கமான அரைகூவல்

"நீங்கள் ஒவ்வொருவரும் என்னை அறிந்திருப்பீர்கள். நான் தான் ஹிரால், தேசியத் தலைவர் காந்தியின் மகன். நான் மக்கள் முன்னிலையிலும், முஸ்லிம்கள் மத்தியிலும் பகிரங்கமாகக் கூறுகிறேன். நான் இஸ்லாத்தை விரும்புகிறேன். அல்குர்ஆனை நேசிக்கிறேன். அல்லாஹ்வைக்கொண்டும், அவன் தூதர் முஹம்மத் ﷺ அவர்களைக் கொண்டும் விசுவாசம் கொள்கிறேன். அவரே இறுதி நபியாவார். அவர் கொண்டு வந்த அனைத்தும் உண்மையாகும். எனது வாழ்வும், மரணமும் அல்குர்ஆனோடு தான். நான் மக்களையும், எனது குடும்பத்தினரையும் இஸ்லாத்தின் பால் அழைக்க இருக்கின்றேன். இம் மார்க்கம் அறிவியல், கலாச்சாரம், நீதம், பாதுகாப்பு, சமத்துவம், சந்தோசம் போன்ற அனைத்தையும் எனக்குத்



அப்துல்லாஹ் ஹிரால் காந்தி

மகாத்மா காந்தியின் மகன்

"நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் உங்கள் சான்றைக் கொண்டு வாருங்கள்!" என்று கேட்பீராக!" *(அல்குர்ஆன் 02:111)*

இவ்வுலகில் காணப்படும் அனைத்து மர்மமான விடயங்களுக்கும் தக்க தீர்வுகள் ஆராய்ச்சிகளின் மூலம் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆசாமிகள், அறியாதவர்கள் கூறுவது போன்று எதுவும் கிடையாது.

6- உள அமைதி, புற அமைதி சார்ந்த நாகரிகம்.

உள அமைதி என்பது நவீன நாகரீகங்களினால் அதிகமானவர்களின் உள்ளங்களில் ஏற்படுகின்ற மனக்குழப்பங்களை விட்டும் அவர்களை நீக்கி, மகிழ்வுடன் வாழ வைப்பதைக் குறிக்கின்றது. பொதுவாக மனிதனின் உலக விடயங்கள் சித்தாந்தங்களோடு சேர்ந்து இருப்பதும், வணக்க வழிபாடுகள், தொழில், வாழ்வாதாரம் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதும், ஆன்மீக, லௌகீக விடயங்களில் ஈடுபடுவதும், அறிவியல், மார்க்கம் போன்றவற்றோடு ஒன்றி வாழ்வதும் நவீன நாகரீகங்களில் பெரும்பாலும் காணப்படுகின்ற விடயங்கள் தான். இவைகள் அவனிடத்தில் பாரிய பிரச்சினைகளையும், சவால்களையும், உளப் போராட்டங்களையும் ஏற்படுத்திவிடுகின்றன. ஆனால் ஓரிறைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமிய நாகரீகம் மேற்குறிப்பிட்ட அனைத்து அம்சங்களை விட்டும் ஒருவனை தூரப்படுத்துகின்றது. அவற்றில் ஏற்படும் மனக்கசப்புக்களுக்கும் தீர்வுகளை வழங்குகின்றது. இஸ்லாத்தைப் பொருத்தவரை இவ்வுலக வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட மாட்டாது. இவ்வுலகம் மறுமைக்கான விளைநிலமாகவும், மறுமைக்கு எம்மை அழைத்துச் செல்லும் பாலமாகவும் இருப்பதால் ஆசாபாசங்களில் அதிக கவனம் செலுத்துவதையும், அது கிடைக்காத விடத்து துன்பப்படுவதையும் தேவையற்ற ஒன்றாகக் கருதுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ் உனக்குத் தந்தவற்றில் மறுமை வாழ்வைத் தேடு! இவ்வுலகில் உன் கடமையை மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு நல்லுதவி செய்தது போல் நீயும் நல்லுதவி செய்! பூமியில் குழப்பத்தைத்

தேடாதே! குழப்பம் செய்வோரை அல்லாஹ் விரும்ப மாட்டான் (என்றும் கூறினர்)." *(அல்குர்ஆன் 28:77)*

மேலும், *"தொழுகை முடிக்கப்பட்டதும் பூமியில் அலைந்து அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள்! அல்லாஹ்வை அதிகம் நினையுங்கள்! நீங்கள் வெற்றி பெறுவீர்கள்."* *(அல்குர்ஆன் 62:10)*

தொழுகை முடிந்ததும், ஆகுமாக்கப்பட்ட தொழிலில் ஈடுபடும்படியும், அவற்றை அல்லாஹ்வின் திருமுகம் நாடி செய்யுமாறும் மேற்கூறப்பட்ட வசனத்தில் கூறப்பட்டுள்ளது. நபி ﷺ அவர்கள் தனது தோழர் ஒருவரைப் பார்த்து பின்வருமாறு கூறினார்கள், "அல்லாஹ்வின் திருப் பொருத்தத்தை நாடி நீ செலவழித்தால், உனது மனைவியின் வாயில் வைக்கும் ஒவ்வொரு உணவு உட்பட அனைத்திற்கும் உனக்குக் கூலி உண்டு" (ஆதாரம்: மாலிக்), இஸ்லாம் மார்க்கம் வெறுமனே மறுமைக்காக மாத்திரம் தன்னை ஈடுபடுத்த விரும்பவில்லை. இவ்வுலக வாழ்வுடனும் சேர்ந்து போக வேண்டும். ஆனால் இவ்வுலக வாழ்வு தான், உண்மையான வாழ்வு என்னும் நோக்கில் செயற்படக் கூடாது என்றே கூறுகின்றது. *"நம்பிக்கை கொண்டோரே! உங்களின் பொருட்செல்வமும், மக்கட்செல்வமும் அல்லாஹ்வின் நினைவை விட்டு உங்களைத் திசை திருப்பி விட வேண்டாம். இதைச் செய்வோரே இழப்பை அடைந்தவர்கள்."* *(அல்குர்ஆன் 63:09)*

மேலும், *"இவ்வுலகில் உன் கடமையை மறந்து விடாதே! அல்லாஹ் உனக்கு நல்லுதவி செய்தது போல் நீயும் நல்லுதவி செய்! பூமியில் குழப்பத்தைத் தேடாதே! குழப்பம் செய்வோரை அல்லாஹ் விரும்ப மாட்டான் (என்றும் கூறினர்)."* *(அல்குர்ஆன் 28:77)*

பகுத்தறிவும், தர்க்கவியலும்

"இஸ்லாத்தில் சிறந்த அம்சம் யாதெனில் அது புத்திக்கு வேலையைக் கொடுக்கின்றது. அவ்வாறே ஆய்வுக்கும் பாரிய இடத்தை வழங்குகின்றது. தன்னைப் பின்பற்றுவோரை, தன்னைப் பற்றி ஆராய்ந்து விட்டு ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றது. சிறந்த முறையில் ஆய்வு செய்து விட்டு, தெளிவான அறிவோடு இஸ்லாத்திற்குள் வருமாறு இஸ்லாம் மக்களைத் தூண்டுகின்றது. இஸ்லாம் என்பது பகுத்தறிவும், தர்க்கவியலும் நிறைந்த மார்க்கமாகும். இதனால் தான் முஹம்மதுக்கு இறங்கிய முதல் வசனமே அறிவைப் போதிக்கும் வகையில் அமைந்திருந்தது. அவ்வாறே தன்னைப் பின்பற்றுவோரை தன்னை ஆய்வுக்குட்படுத்தி நம்பிக்கை

ஆரோன் லியோன்

ஆரோன் லியோன்

தொழிலை விரும்புவதும், மனைவியின் மீது பாசமாக இருப்பதும், குழந்தை குட்டிகளோடு கொஞ்சி விளையாடி, அவர்கள் விடயத்தில் கவனம் எடுப்பதும் மார்க்க வரையறைகளோடும், நபி ﷺ அவர்களின் வழிகாட்டுதல் அடிப்படையிலும் இருக்க வேண்டும். தனது ஒவ்வொரு செயலிலும் அல்லாஹ்வின் திருப்பொருத்தம் காணப்பட வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், "எனது தொழுகை, எனது வணக்க முறை, எனது வாழ்வு, எனது மரணம் யாவும் அகிலத்தின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன என்று கூறுவீராக" (அல்குர்ஆன் 06:162)

எமது வாழ்வின் அனைத்து அங்கமும் அல்லாஹ்வுக்குரியதாகவே இருக்க வேண்டும். தூய்மையான எண்ணத்தோடு உள்ளத்தால் செய்யப்படுகின்ற அனைத்தும் அல்லாஹ்வுக்குரியதாகவே இருக்க வேண்டும். அதுவே ஒருவனுக்கு உள அமைதியைப் பெற்றுத் தருகின்றது.

புற அமைதி என்பது உறவினர்கள், வேற்றுக் குடும்பத்தவர்கள், சிநேகமானவர்கள், பகைவர்கள் என மக்களோடு நடந்து கொள்ளும் முறைகளில், அமைதி, மகிழ்வு போன்றன ஏற்படுவதைக் குறிக்கின்றது. ஒருவரைக் காணும் போது, அவரைப் பார்த்து, ‘உங்கள் மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும், அபிவிருத்தியும் உண்டாகட்டும்’ (அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு) எனக் கூறி, தானும் மகிழ்வுற்று, அவரையும் மகிழ்விக்க வேண்டும். இஸ்லாம் மார்க்கம் பிறரை மகிழ்விப்பதைப் போன்றும், அவர்களோடு நல்லமுறையில் நடந்துகொள்ளுமாறு கூறியது போலும் வேறு எந்த மார்க்கமும் தமது பக்தர்களுக்குக் கற்றுத்தரவில்லை. "மஸ்ஜிதுல் ஹறாமை விட்டும் உங்களைத் தடுத்த சமுதாயத்தார் மீதுள்ள பகைமை, வரம்பு மீறுவதற்கு உங்களைத் தூண்ட வேண்டாம். நன்மையிலும், இறையச்சத்திலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளுங்கள்! பாவத்திலும், வரம்பு மீறலிலும் ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளாதீர்கள்! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! அல்லாஹ் கடுமையாகத் தண்டிப்பவன்." (அல்குர்ஆன் 05:02)

புத்திக் கூர்மையான தீர்வுகள்

"அல்குர்ஆன் நவீன காலத்தில் ஏற்படும் பொருளாதார, சமூக, பண்பாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்குச் சிறந்த, கூர்மையான தீர்வுகளை முன்வைக்கின்றது. இதனால் தான் முஹம்மதின் தூதுத்துவம் வெகு விரைவிலே அக்காலத்தில் மக்கள் மத்தியில் வெற்றி கண்டது. என் கருத்துப்படி, அல்குர்ஆனின்

மோண்ட்கோமெறி வாட்

பிரித்தானிய கீழைத்தேய வாதி



7- அன்பு, பரஸ்பரம் ரீதியில் அமைந்த நாகரிகம்.

இஸ்லாமிய நாகரீகம் தனது உறுப்பினர்களை தூய உள்ளத்துடனும், இதய சுத்தியோடும் ஒருவருக்கொருவர் பழகுமாறு கட்டளையிட்டுள்ளது. இதன் அடிப்படையில் முஃமினான ஒருவர் தனது சகோதர முஃமினுக்கு எவ்வாறு பிரார்த்தனை புரிவார் என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது. "அவர்களுக்குப் பின் வந்தோர் 'எங்கள் இறைவா! எங்களையும், நம்பிக்கையுடன் எங்களை முந்தி விட்ட எங்கள் சகோதரர்களையும் மன்னிப்பாயாக! எங்கள் உள்ளங்களில் நம்பிக்கை கொண்டோர் மீது வெறுப்பை ஏற்படுத்தி விடாதே! நீ இரக்கமுடையோன்; நிகரற்ற அன்புடையோன்' என்று கூறுகின்றனர்." (அல்குர்ஆன் 59:10)

மேலும், "அல்லாஹ்விடம் தூய உள்ளத்துடன் வருவதைத் தவிர, செல்வமோ, மக்களோ அந்நாளில் பயன் தராது." (அல்குர்ஆன் 26:88-89)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "நீங்கள் ஒருவருக்கொருவர் கோபம் கொள்ள வேண்டாம், பொறாமை கொள்ள வேண்டாம், புறமுதுகு காட்டி ஓட வேண்டாம். அல்லாஹ்வின் அடியார்களாக, சகோதரர்களாக இருங்கள். ஒரு முஸ்லிம் பிற முஸ்லிமை மூன்று நாட்களுக்கு மேல் வெறுத்து இருப்பது ஆகுமானதல்ல. இருவரும் சந்திக்கும் போது முதலில் முகமன் கூறுபவரே அவர்களிருவரிலும் சிறந்தவராவார்"

சிறந்த வாழ்க்கை

"நாம் நீதமான முறையில் செயற்பட்டால் இஸ்லாத்தில் நல்லவைகளின் பக்கம் அழைத்துச் செல்லும் ஏராளமான அம்சங்களை எம்மால் அறிந்து கொள்ள முடியும். நற்பண்புகள் ரீதியாக எமது வாழ்வு பலம் பொருந்திய ஒன்றாக மாறிவிடும். இவை அல்லாஹ்வின் படைப்பினங்கள் மீது இரக்கம் காட்டுதல், மக்களுக்கு மத்தியில் அமானிதத்தைப் பேணுதல், அன்பாகவும், தூய்மையான உள்ளத்தோடும் பழகுதல், காழ்ப்புணர்வுகளை விட்டும் தூரமாகியிருத்தல் போன்ற பல நற்பண்புகளை எம் மத்தியில்

ஜோல்ட் தஸ்ஹீர்

யூத கீழைத்தேய வாதி

(ஆதாரம்: முஸ்லிம்),

மக்களுக்கு மத்தியில் அன்பும், பரஸ்பரமும் ஏற்பட நபி ﷺ அவர்கள் பின்வருமாறு கூறினார்கள், "எனது உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக, நீங்கள் விசுவாசம் கொள்ளும் வரை சுவனத்தில் நுழைய மாட்டீர்கள். ஒருவருக்கொருவர் அன்பாக நடக்காத வரை விசுவாசம் கொண்டவர்களாக ஆக மாட்டீர்கள். இவற்றை ஈட்டித் தரும் ஓர் விடயத்தை உங்களுக்கு நான் அறிவித்துத் தரட்டுமா? உங்களுக்கு மத்தியில் நீங்கள் ஸலாத்தை (முகமன் கூறுவதை) பரப்பிக்கொள்ளுங்கள்." (ஆதாரம்: திர்மிதி),

சிறந்த மனிதர்கள்

"நிச்சயமாக முஸ்லிம்கள் கிறிஸ்தவர்களை விட உயர்ந்தவர்கள், தமது வாழ்நாளை பொக்கிஷமாக பாதுகாப்பவர்கள். அவர்களில் அதிகமானவர்கள் தமக்குக் கீழால் உள்ளவர்களோடு இரக்கமாக நடந்து கொள்கின்றனர். வரலாறுகளில் அவர்கள் செய்த கொடுரங்கள் விரல் விடு எண்ணும் அளவே இருக்கின்றன. ஆனால் கிறிஸ்தவர்கள் கி.பி. 1099 ஆம் ஆண்டு பைத்துல் மக்திஸை ஆக்கிரமிக்கும் போது காட்டுமிராண்டித்தனமாக நடந்து, தமது பெயரை வரலாற்றில்

வில் ட்யூரண்ட்
அமெரிக்க எழுத்தாளர்

நபி ﷺ அவர்களிடம் "மனிதர்களில் சிறந்தவர் யார்?" என வினவப்பட்டது. அதற்கவர்கள், "இதய சுத்தியோடு இருப்பவரும், உண்மை பேசுபவரும்" என பதிலளித்தார்கள். அதற்கு ஸஹாபாக்கள், "உண்மை பேசுபவரைப் பற்றி அறிந்திருக்கிறோம். இதய சுத்தியோடு இருப்பவர் என்றால் என்ன?" என வினவினர். அதற்கு நபியவர்கள், "தூய்மையான உள்ளத்தோடு அல்லாஹ்வை அஞ்சுபவர்கள். அவர்களின் உள்ளத்தில் பாவகாரியமோ, அநியாயமோ, குரோதமோ, பொறாமையோ இருக்காது". எனக் கூறினார்கள். (ஆதாரம்: இப்னு மாஜா)

8- ஆன்மீக, லௌகீகம் சார்ந்த நாகரிகம்.

இஸ்லாமிய நாகரீகம் ஆன்மீக வெளிப்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற அதே வேளை, லௌகீக செயற்பாடுகளிலும் பொடுபோக்காக இருந்து விடவில்லை. அல்லாஹ் மனிதனை ஆன்மீகம், லௌகீகம் என இரு அமைப்பிலும் படைத்துள்ளான். இவற்றுக்குத் தேவையான வாழ்வாதாரங்கள் அனைத்தையும் வழங்கியுள்ளான். உடம்பைப் பொருத்த வரையில் அது சிறந்த முறையில் வாழ்வதற்கான சூழல், அதற்குத் தகுந்தாற் போல் உணவு, தொழில் போன்ற அனைத்தையும் அமைத்துக்கொடுத்தான். அவ்வாறே உயிருக்குத் தேவையானவற்றை வானுலகிலிருந்து தனது தூதுவர்கள் மூலமாக இறக்கிவைத்தான். இதைப்பற்றி அல்லாஹ் குறிப்பிடும் போது, *"சேற்றிலிருந்த கருப்புக் களிமண்ணால் வடிவமைத்து, நான் மனிதனைப் படைக்கவுள்ளேன்' என்று வானவர்களுக்கு உமது இறைவன் கூறியதை நினைவூட்டுவீராக. அவரை நான் சீர்படுத்தி எனது உயிரை அவருக்குள் நான் ஊதும் போது, அவருக்குப்*

டேல் கார்னகி
அமெரிக்க
எழுத்தாளர்



"ஆன்மீக

"மார்க்கம் என்பது, நீர், மின்சாரம், உணவு போன்ற எமது அத்தியாவசியத்தேவைகளில் ஒன்றாக இருக்க வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன். இதுவும் நாம் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் வாழ நமக்கு உதவி செய்கின்றது. என்றாலும் மார்க்கம் இதையும் தாண்டி என்னை ஓர் கட்டத்திற்கு கொண்டு சென்றுவிட்டது. அது தான் நம்பிக்கையும், எதிர்பார்ப்பும், வீரமும். அது என்னுள் சந்தோசம், மனநிம்மதி, போதுமென்ற மனப்பான்மை போன்றவற்றை ஏற்படுத்தி, என்னுள் இருந்த பயம், பதட்டம், உளைச்சல் போன்றவற்றை என்னை விட்டும் அப்புறப்படுத்தி

நாஸ்ரி ஸல்ஹாபி
லெபனான்
இலக்கியவாதி

இஸ்லாத்தின் மகிமை

"இஸ்லாத்திற்கு பல இலக்கியங்களைக் கண்ட எமது பேனைகள் தேவைப்படுவதில்லை. பேனைகளுக்குத் தான் இஸ்லாம் தேவைப்படுகின்றது இஸ்லாத்தின் மகிமைகளையும், நற்பண்புகளையும் வரைவதற்கு. அவ்வாறே பேனைக்கு அல்குர்ஆனும் தேவைப்படுகின்றது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் நிறைய

பணிந்து விழுங்கள்!' (என்று கூறினான்)!"
(அல்குர்ஆன் 15:28-29)

உடலும், உயிரும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ள அல்லாஹ்வின் படைப்பாகத் திகழ்கின்றது. மரணத்தைத் தவிர வேறு எதனாலும் உடலை விட்டும் உயிரைப் பிரித்தெடுக்க முடியாது. உடல் மற்றும் உயிர், இவை இரண்டிற்கும் தேவைகள் இருக்கின்றன. உடலின் தேவையாக உண்ணல், பருகல், உடுத்தல் போன்றன இருக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒன்று உடம்புக்குக் கிடைக்காவிட்டாலும் அது பலவீனமானதாக மாறிவிடும். அவ்வாறே உயிருக்கும் பல தேவைகள் இருக்கின்றன. உயிரானது அன்பு, கொடை, தியாகம் போன்றன இல்லாமல் வாழமுடியாது. தான் வணங்குவதற்கும், விரும்புவதற்கும், ஆதரவு வைப்பதற்கும், அஞ்சுவதற்கும், பாதுகாப்பைப் பெறுவதற்கும் ஓர் இறைவன் இல்லாமல் எப்படி அதனால் வாழ முடியும்? தான் அமைதி காண்பதற்கு ஒருவரும் இல்லாமல், அன்பு, பரஸ்பரம் போன்றன செலுத்துவதற்கு ஆலில்லாமல் வெற்று உள்ளமாக எவ்வாறு இருக்க முடியும்? உயிரின் தேவைகளை நிறைவேற்றாத ஒருவர் உடலின் தேவையை நிறைவேற்றாமல், அதை கஷ்டத்தில் ஆழ்த்தியவரைப் போன்றவராவார். இவ்வாறு தனது அரைப் பகுதியான உடலை, நல்லமுறையில் கவனித்து, மற்ற அரைவாசியான உயிரை வெறுமனே விட்டுவிட்டு, ஒரு மனிதனால் எவ்வாறு வாழ முடிகின்றது? அல்லது இரண்டையுமே சிறந்த முறையில் கவனிக்காமல் விட்டுவிட்டு, அவனால் எவ்வாறு இவ்வுலகில் நிலைத்திருக்க முடிகின்றது? இன்றைய மேற்கத்தேய நாகரீகம் இதைத் தான் செய்துகொண்டிருக்கின்றது. மனிதனின் லௌகீக வாழ்வை மாத்திரம் கவனித்து, அவனது ஆன்மீகத்தைக் கவனிக்காமல்

விட்டுவிடுகின்றது. இதனால் மனிதனிடத்தில் குரோதம், கோபம், வெறுப்பு, பகைமை போன்றன தோன்றி, அவன் மிருகங்களுக்கு ஒப்பான வாழ்வை வாழ ஆரம்பிக்கிறான். மகிழ்ச்சி, மன அமைதி, நிம்மதி போன்றவற்றைத் தொலைத்து, அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறான். எனவே இது ஓர் உண்மையான நாகரீகமாக இருக்கவே முடியாது.9- மனிதனிலும், அவனது உரிமைகளிலும் கவனம் செலுத்தும் நாகரீகம்.

மனித உரிமைகள் ஓர் நாட்டில் நிலைநாட்டப்படுவதை வைத்து, அந்நாட்டின் நீதம், பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, குடிமக்களின் சுதந்திரம் போன்றவற்றைக் கணிப்பிட முடியும். அவ்வாறே அந்நாட்டு மக்களின் உணர்வுகள், விழிப்புணர்வுகள், சட்டத்தை மதித்து நடக்கும் தன்மை போன்றனவற்றையும் கணிப்பிட முடியும். ஜனநாயக அரசின் கீழ் இயங்கும் நாட்டில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதானது முக்கியமான அம்சமாகத் திகழ்கின்றது.

ஓர் நாட்டில் நிலைநாட்டப்பட வேண்டிய மனித உரிமைகள் சம்பந்தமாக இஸ்லாமிய நாகரீகம் சில உதராணங்களைக் குறிப்பிடுகின்றது. அவை வெறும் அடையாளங்களாக மாத்திரம் பாதுகாத்து வராமல், அவற்றை அமுல்படுத்துமாறும் ஏவுகின்றது. அவைகள் வருமாறு:

1. மனித உரிமைகளின் அடிப்படை அம்சமாக, ஓர் அரசு, அல்லாஹ்வால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களின் அமைப்பைக் கடைபிடிக்கும் ஒன்றாக இருக்க வேண்டும். அல்லாஹ் கூறுகிறான், "அதிகாரம் அல்லாஹ்வுக்கே தவிர (வேறு எவருக்கும்) இல்லை. அவன் உண்மையை உரைக்கிறான். தீர்ப்பளிப்போரில் அவன் மிகச் சிறந்தவன்' என்றும் கூறுவீராக!" (அல்குர்ஆன் 06:57)

இஸ்லாமிய சட்டவரையறை மனித உரிமைகளுக்கு உத்தரவாதமாகத் திகழ்கின்றது. ஏனெனில் படைப்பினங்களைப் பற்றி நன்கறிந்த அல்லாஹ் அவற்றுக்கு ஒரு போதும் தீங்கை நாடமாட்டான்.

2. இஸ்திரத்தன்மை: இவை காலத்துக் காலம் மாற்றமடையாமல் இருக்க வேண்டும்.

3. உரிமைகள் அனைத்தும் அல்லாஹ்வை

அஞ்சுவதை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். ஏனெனில் ஒரு மனிதன் எப்போதும் அல்லாஹ்வை மாத்திரம் அஞ்சுபவனாகவே இருக்க வேண்டும். இது இஹ்ஸான் (அழகிய முறையில் செயலாற்றல்) என்பதைக் குறிக்கின்றது. நபி ﷺ அவர்கள் கூறினார்கள், அல்லாஹ்வை நீங்கள் பார்த்துக் கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுடன் வழிபடுவதாகும். ஏனெனில், அவனை நீங்கள் பார்க்கவில்லை என்றாலும், அவன் உங்களைப் பார்க்கின்றான் " (ஆதாரம்: முஸ்லிம்)4. இஸ்லாமிய மார்க்கத்தின் இயல்புநிலையோடு மனித உரிமைகள் பின்னிப் பிணைந்திருத்தல்: உரிமைகளை வெறும் பதிவாக மாத்திரம் இஸ்லாம் விட்டுவிடவில்லை. அதைத் தனது சட்டதிட்டங்களுக்கு அமைந்ததாகவே ஆக்கியுள்ளது. அதைத் தன் விழுமியங்களோடும் இணைத்துள்ளது. எவர் இவ் விழுமியங்களில் குறைகளை ஏற்படுத்துகின்றாரோ அவர் உரிமைகளில் குறை ஏற்படுத்திவிட்டார். இறுதியில் இது இஸ்லாத்தை விட்டும் ஒருவரை தூரமாக்கும் விடயம் வரை நீடிக்கும். ஏனெனில் இம் மார்க்கமும், அதன் சட்டதிட்டங்களும் இறைவனிடமிருந்து வந்தவையாகும். எனவே இவைகளை வெறும் உரிமைகளாக மாத்திரம் அல்லாமல், ஓர் முஸ்லிமின் கடமையாகவும் இஸ்லாம் ஆக்கியுள்ளது.

5. ஒரு மனித சமுதாயத்தைத் தலைமை தாங்குவதானது

குறைகள் எம்மிடம் தான்

"முஸ்லிம்களின் பொடுபோக்கு தான் —இஸ்லாமிய சட்டதிட்டங்களைப் பற்றி நான் குறிப்பிடவில்லை- நவீன நாகரீக சிதைவுகளுக்குக் காரணம் என்பது எமக்குத்

லியோபோல்ட் வைஸ்

ஆஸ்திரிய சிந்தனையாளர்

அதில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களையும் தலைமை தாங்குவதன் ஒரு பகுதியாகும். இதிலிருந்து, இஸ்லாத்திலுள்ள மனித உரிமைகள் வெளிப்படுகின்றன. அதே நேரம் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் இதற்கு மாற்றமாகவே இருக்கின்றன."‘கொலைக்குப் பதிலாகவோ, பூமியில் செய்யும் குழப்பத்திற்குப் பதிலாகவோ இல்லாமல் ஒருவர், மற்றொருவரைக் கொலை செய்தால் அவர் எல்லா மனிதர்களையும் கொலை செய்தவர் போலாவார்’ என்றும், ‘ஒரு மனிதனை வாழ வைத்தவர் எல்லா மனிதர்களையும் வாழ வைத்தவர் போலாவார்’ என்றும் இஸ்ராயீலின் மக்களுக்கு இதன் காரணமாகவே விதியாக்கினோம். அவர்களிடம் நம்முடைய தூதர்கள் தெளிவான சான்றுகளைக் கொண்டு வந்தனர். இதன் பின்னர் அவர்களில் அதிகமானோர் பூமியில் வரம்பு மீறுவோராகவே உள்ளனர்." (அல்குர்ஆன் 05:)

6. இஸ்லாத்தில் மனித உரிமைகள் உருவாகுவதற்கு வரலாறுகள் எதுவும் கிடையாது: அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற ஜனநாயக நாடுகளில் பின்பற்றப்படுவது போல் மனித உரிமைகள் தோற்றம் பெறுவதற்கு சமூகப் பிரச்சினைகளோ, சிந்தனை மோதல்களோ இஸ்லாமிய மனித உரிமைகள் உருவாகுவதில் தாக்கம் செலுத்தவில்லை. இதன் அடிப்படைகளும், சட்டதிட்டங்களும் எவ்வித

முழு உலகிற்குமான சாந்தி

"அல்குர்ஆன் படைத்தவனைப் பற்றி எனக்கு அறிவித்துத் தந்தது. அப்போதே இஸ்லாத்தை அல்குர்ஆனிலிருந்து அறிந்துகொண்டேன். முஸ்லிம்களின் செயற்பாடுகளை வைத்து இஸ்லாத்தை நான் அறிந்து கொள்ளவில்லை. முஸ்லிம்களே! இவ் உலகில் இஸ்லாம் பரவ வேண்டுமெனில் நீங்கள் உண்மையான

கேட் ஸ்டீவன்ஸ்
பிரித்தானியப் பாடகர்

வரலாற்றுப் பின்னனிகளைக் கொண்டிராமலும், இது சம்பந்தமாக கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்காமலும், மனிதனைப் படைத்து, அவனுக்கு நன்மை பயக்கும் அம்சங்கள் பற்றி நன்கறிந்த அல்லாஹ்விடமிருந்தே வந்தன.

7. இவை மனித வாழ்க்கையோடு தொடர்புபட்ட, வாழ்வில் நடந்தேற வேண்டிய அம்சங்களாகும். மனிதத் தேவைகளை முன்வைத்து, அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளும் ஓர் அடிப்படை நிகழ்வாகும். ஆனால் மனித சட்டங்களில் காணப்படும் உரிமைகள், தத்துவங்களை மையமாக வைத்தே இயற்றப்படுகின்றன.

8. இஸ்லாத்தில் தனித்து விளங்கக் கூடிய மனித உரிமைகளைகளில் சில: பெற்றோர், உறவினர்கள், பிள்ளைகள் போன்றோருக்கான உரிமைகள், உறவுமுறையில் அமைந்தோருக்கான உரிமைகள், சிசுக்களின் உரிமைகள், மார்க்க அடிப்படையிலும், உலக அடிப்படையிலும் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய உரிமைகள், நல்லவற்றை சம்பாதித்து, வட்டியைத் தடுத்துவிடும் உரிமைகள், நல்ல விடயங்கள் பக்கம் அழைத்து, தீய விடயங்களை விட்டும் விலக்கிவிடும் உரிமைகள்.

9. இஸ்லாமிய மனித உரிமைகள், மனிதனின் கௌரவத்தைப் பாதுகாப்பதிலும், அல்லாஹ்வை விசுவாசம் கொள்வதன் மூலம் அவனிடத்தில் இலகிய உணர்வுகளை ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்துகின்றன. இதனால் அவன் எல்லா நிலைகளிலும் அல்லாஹ்வைப் பயந்து நடக்கும் நிலைக்கு ஆலாகின்றான். அவ்வாறே இவ்வுலகில் காணப்படும் அனைத்தையும் அல்லாஹ் மனிதனுக்குப் பயனளிப்பதற்காகவே படைத்துள்ளான் என்பதை அவன் அறிந்து, அதன்படி செயற்படுவதிலும் அவை கவனம் செலுத்துகின்றன. இவ்வுலகில் தோன்றிய நாகரீகங்கள் அனைத்தும், மனிதனுக்கு நன்மையானவைகளைத் தவிர வேறு எதையும் வழங்கவில்லை என்பதை வரலாறு நிரூபித்த போதிலும், அந் நன்மைகளுக்குப் பின்னால் பல சுயநலன்களும், மக்களை சீரழிவின் பக்கம் கொண்டு செல்லும் திட்டங்களும் மறைந்து காணப்படுவதை என்றும் அது கண்டதில்லை. இத்தகையவர்களின் உள்ளத்தில் அச்ச உணர்வும், இறைவன் பற்றிய சிந்தனையும், இலகிய மனப்பான்மையும் காணப்படாததே இவற்றுக்குக் காரணமாகத் திகழ்கின்றன.

நபி ﷺ அவர்கள் கொண்டு வந்த நாகரீகம் உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒன்று என்ற போதிலும், உலகையே ஆச்சரியத்தில் ஆழ்த்திய இவ் இஸ்லாமிய நாகரீகத்தில் இருக்கும் தற்போதைய முஸ்லிம்களின் நிலைமைகளை வைத்து, சிலர் பல கேள்விகளைத் தொடுக்கின்றனர். ஏன் முஸ்லிம்கள் இன்னும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்றனர்? இதற்கான பதிலை மிகவும் சுலபமாக கண்டறியலாம். தற்போதைய முஸ்லிம்கள் தங்களுக்கு அல்லாஹ்வால் இறக்கப்பட்ட மார்க்கத்தை முழுமையாகப் பின்பற்றுவதில்லை. அவர்களில் அதிகமானவர்கள் இஸ்லாத்தை விட்டும் விலகிச் செல்கின்ற போது பாரிய கஷ்டங்களையும், துன்பங்களையும், பல பின்னடைவுகளையுமே சந்திக்கின்றனர். இவ்வாறு இல்லாமல் இருந்தால் இன்று மக்கள் அனைவரையும் மகிழ்ச்சிக்குள் ஆழ்த்தும் ஓர் சிறந்த நாகரீகமாக இஸ்லாமிய நாகரீகம் இருந்திருக்கும். எனவே முஸ்லிம்களின் சீரழிவினால் உலகம் சந்தித்த இழப்பு என்ன என்பதை அறிந்து கொள்ள முஸ்லிம்களிலும், முஸ்லிமல்லாதவர்களிலும் நேர்மையானவர்கள்

காலியான உலகம்

"முஸ்லிம்களால் தமது முன்னோர்கள் இவ்வுலகில் இஸ்லாமிய நாகரீகத்தைப் பரவச் செய்தது போல் மிகவும் வேகமாக அதைப் பரவச்செய்ய இயலும். ஆனால் ஒரு நிபந்தனை, அவர்கள் தங்கள் முன்னோர்களின் நற்குணங்களை முன்மாதிரியாக எடுத்து நடக்க வேண்டும்.

மொர்மஜூக் பெக்டேல்

ஆங்கில எழுத்தாளர்

எழுதிய வரலாற்று நூல்களைப் படித்தாலே முஸ்லிம்களின் பின்னடைவிற்கான காரணங்களும், அதனால் இவ்வுலகு சந்தித்த இழப்புகளும் தெளிவாகப் புரிந்துவிடும்.

அல்குர்ஆனினதும், ஹதீஸினதும் அற்புதங்கள்,

ஒவ்வொரு தூதுவர்களும் தங்கள் தூதுத்துவத்தை உறுதிப்படுத்துவதற்காய் அல்லாஹ்விடமிருந்து அற்புதங்களைக் கொண்டு வந்தனர். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கைத் தடியையும், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வெண்குஷ்டம், குருடு போன்றவற்றைக் குணப்படுத்தும் அற்புதத்தையும், இறந்தவர்களை அல்லாஹ்வின் அனுமதியோடு எழுப்பும் அற்புதத்தையும் நிகழ்த்திக் காட்டினார்கள். அதன் வரிசையில் முஹம்மத் ﷺ அவர்கள் அல்குர்ஆனை அற்புதமாகக் கொண்டுவந்தார்கள். இது மக்களுக்கு வழிகாட்டும் நூலாக இருக்கும் அதே சமயம் அல்லாஹ்வின் அற்புதமாகவும் திகழ்கின்றது. இது நபியவர்களின் தூதுத்துவத்தை உண்மைப்படுத்தும் வகையிலும், நபியவர்கள் அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட இறுதித் தூதர் என்பதை அறிவிப்பதிலும் பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கின்றது. இது எல்லாக் காலத்திற்கும் பொருந்தக் கூடியது. இதன் சில அற்புதங்கள் சம்பந்தமாக முன்னர் கூறப்பட்டுள்ளது. நவீன உலகில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்து விடயங்களும் 1400 ஆண்டுகளுக்கு

முன்னர் இறக்கப்பட்ட அல்குர்ஆனுடன் ஒத்துப்போவதால், அறிவியல் ஆய்வாளர்கள் கூட இதை ஓர் அற்புத நூல் என்றே கூறுகின்றனர். மனித படைப்பின் கட்டங்கள் பற்றி, இது சம்பந்தமான அறிவே இல்லாத மக்கள் வாழ்ந்த காலத்தில் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் கூறுகிறான், "*களிமண்ணின் சத்திலிருந்து மனிதனைப் படைத்தோம். பின்னர் அவனைப் பாதுகாப்பான இடத்தில் விந்துத் துளியாக ஆக்கினோம். பின்னர் விந்துத் துளியை கருவுற்ற சினை முட்டையாக்கினோம். பின்னர் கருவுற்ற சினை முட்டையைச் சதைத் துண்டாக ஆக்கினோம். சதைத் துண்டை எலும்பாக ஆக்கி எலும்புக்கு இறைச்சியையும் அணிவித்தோம். பின்னர் அதை வேறு படைப்பாக ஆக்கினோம். அழகிய படைப்பாளனாகிய அல்லாஹ் பாக்கியசாலியாவான்.*" *(அல்குர்ஆன் 23:12-14)*

மேலும், "*உங்கள் அன்னையரின் வயிறுகளில் ஒரு படைப்புக்குப் பின் இன்னொரு படைப்பாக மூன்று இருள்களில் உங்களைப் படைக்கிறான். அவனே அல்லாஹ். உங்கள் இறைவன். அவனுக்கே அதிகாரம் உள்ளது. அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. எங்கே நீங்கள் திசை திருப்பப்படுகின்றீர்கள்?*" *(அல்குர்ஆன் 39:06)*

வைத்தியர்கள் தாங்கள் படித்த புத்தகங்களைப் புரட்டிப் பார்க்கின்ற போது, அல்குர்ஆனின் இக்கூற்று அப்படியே அவற்றில் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகின்றனர்.

உடம்பிலுள்ள உணர்வூட்டும் இடத்தைத் தெளிவுபடுத்தும் போது, அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "*நமது வசனங்களை மறுப்போரை பின்னர் நரகில் கருகச் செய்வோம். அவர்களின் தோல்கள் கருகும் போதெல்லாம் அவர்கள் வேதனையை உணர்வதற்காக வேறு தோல்களை அவர்களுக்கு மாற்றுவோம். 119 அல்லாஹ் மிகைத்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான்.*" *(அல்குர்ஆன் 04:56)*

விண்வெளியின் விசாலம் பற்றி, "*(நமது) வலிமையால் வானத்தைப் படைத்தோம். மேலும் (அதை) நாம் விரிவு படுத்துவோராவோம்*" *(அல்குர்ஆன் 51:47)*

சூரியன் தனது அச்சில் பயணிப்பதைப் பற்றி, "*இரவும் அவர்களுக்கு ஒரு சான்று. அதிலிருந்து பகலை உரித்தெடுக்கிறோம். உடனே*



அவர்கள் இருளில் ஆழ்ந்து விடுகிறார்கள். சூரியன் அதற்குரிய இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இது அறிந்தவனாகிய மிகைத்தவனுடைய ஏற்பாடாகும்." (அல்குர்ஆன் 36:37-38)

இதைப் பற்றி ஹதீஸிலும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. நபி ﷺ அவர்கள் கூறியதாக ஆயிஷா (அவர்கள் அறிவிக்கிறார்கள், "ஒரு விஷயம் (சொல்கிறேன்:) ஆதமின் மக்களில் ஒவ்வொரு மனிதரும் முன்னூற்று அறுபது மூட்டு(1) எலும்புகளுடன் படைக்கப்பட்டுள்ளார்கள். எனவே, யார் அந்த முன்னூற்று அறுபது மூட்டு எலும்புகளின் எண்ணிக்கை அளவிற்கு அல்லாஹ்வைப் பெருமைப்படுத்தி (தக்பீர்), அல்லாஹ்வைப் புகழ்ந்து (தஹ்மீத்), அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை என்று (ஏகத்துவ உறுதி) கூறி, அல்லாஹ்வைத் துதித்து (தஸ்பீஹ்), அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரி (இஸ்திஃக்ஃபார்), மக்களின் நடைபாதையில் (இடையூறாகக்) கிடந்த ஒரு கல்லையோ அல்லது முள்ளையோ அல்லது எலும்பையோ அகற்றி, நல்லதை ஏவி, அல்லது தீமையைத் தடுத்(து நல்லறங்கள் புரிந்)தாரோ அவர் அன்றைய தினத்தில் தம்மை நரக நெருப்பிலிருந்து அப்புறப்படுத்திவிட்ட நிலையிலேயே நடமாடுகிறார்." (ஆதாரம்: முஸ்லிம்).

மனிதனுக்கு இத்தகைய மூட்டுக்கள் இல்லையெனில் அவனால் தனது செயற்பாடுகள் ஒன்றையுமே மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என அறிவியல் உறுதி செய்துள்ளது. இதனால் ஒவ்வொரு மனிதனும் அல்லாஹ் தனக்கு வழங்கிய இவ் அருட்கொடைக்காக ஒவ்வொரு நாளும் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். இங்கு வியக்கத்தக்க அம்சம் யாதெனில்

(1) ஸுலாமா என்ற அறபுச் சொல்லுக்கு மூட்டுக்கள் என்று பொருள். இது பொதுவாக உடம்பிலுள்ள அனைத்து எலும்புகளுக்குப் பயன்படுத்தப்பட்டாலும் அதிகமாக மூட்டுக்களைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகின்றது.

சிசு பற்றிய வர்ணனைகள்

"அல்குர்ஆன் அல்லாஹ்வின் வார்த்தைகள் என்பதை ஏற்றுக்கொள்ள எனக்கு மிகவும் கடினம் ஏற்படவில்லை. ஏனெனில் ஏழாம் நூற்றாண்டில் இருந்த அறிவியலாலே சிசுவின் பரிணாமம் பற்றி கண்டறிய முடியவில்லையென்றால் நிச்சயம் இது அல்லாஹ் முஹம்மதுக்கு வஹியாக அனுப்பிய வார்த்தைகள் தான் என்பதனை இலகுவாய்

பேராசிரியர் ஒஹியோடா கசின்

டோக்கியோ வானிலை அவதான மையத்தின் பணிப்பாளர்

அறிவியல் முன்னேற்றமே தோன்றாத காலத்தில் நபி ﷺ அவர்கள் மனிதனின் உடம்பிலுள்ள மொத்த மூட்டுக்களின் எண்ணிக்கை 360 என துள்ளியமாக கூறியது தான். 11ம் நூற்றாண்டில் தோன்றிய மேதைகள் முதல் சமீபகால வைத்தியத்துறை ஆய்வாளர்கள் வரை எவரும் இதைப் பற்றி அறியாமல் தான் இருந்துள்ளார்கள். தற்போதைய ஆய்வாளர்கள் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே நபி ﷺ அவர்கள் கூறிய மூட்டுக்களின் எண்ணிக்கை 360 தான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். அவற்றில் 147 மூட்டுக்கள் முதுகெலும்பிலும், 24 மூட்டுக்கள் நெஞ்சுப் பகுதியிலும், 86 மூட்டுக்கள் உடலின் மேல் அரைப்பாதியிலும், 88 மூட்டுக்கள் கீழ் அரைப்பாதியிலும், 15 மூட்டுக்கள் இடுப்பிலும் காணப்படுவதாகக் கூறுகின்றனர்.

இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. அறிவியலே 20ம் நூற்றாண்டுக்குப் பின்னர் வளர்ச்சியுற்றிருக்க, அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்தில் இறுதி நபியாக அனுப்பப்பட்ட முஹம்மத் ﷺ அவர்களுக்கு இது பற்றிய அறிவை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரால் வழங்கியிருக்க முடியும்??

முஹம்மத் ﷺ அவர்களுக்கு மறைவான விடயங்கள் பற்றி யாரால் அறிவித்திருக்க முடியும்??. நிச்சயம் அதற்கான பதில் அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் இவ்வாறு அறிவிப்பது முடியாத காரியம் என்பதாகவே இருக்கும். ஓர் காலத்தில் மனிதன் தனது உடம்பின் உண்மையான தோற்ற அமைப்பைப் பற்றி விளக்கமாக அறியும் காலம் வரும்போது, அக்காலத்தில் வாழ்பவர்களும் நபியவர்களை உண்மையான அல்லாஹ்வின் தூதராக ஏற்று நடக்க வேண்டும் என்பதற்காகவும், இறைச் செய்தியை உண்மைப்படுத்துவதற்காகவும், அல்லாஹ் இத்தகைய



மறைவான அம்சங்களை தெளிவற்ற ஒன்றாகவே வைத்திருக்க முடியும்.

அறிவியல் மற்றும் நாகரீகத்திற்கான பாதை சிறந்த குணாதிசயங்களோடு காணப்படாவிட்டால், அந் நாகரீகம் மக்களை அழித்து, அவர்களை துன்பம், துயரம், அழிவு போன்றவற்றால் அலங்கரித்து, படுபாதாளத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிடும். மக்களுக்கு சேவை செய்து, அவர்களின் வாழ்வை மகிழ்வானதாக மாற்றிவிடுவது கனவில் காணும்



எழுத படிக்கத் தெரியாத ஓர் தூதுவர்

"எழுத, வாசிக்கத் தெரியாத ஒருவரால் எவ்வாறு இத்தகைய அற்புதங்கள் நிறைந்த வசனங்களைக் கூற முடியும் என சிந்திக்கும் போது வியப்பாய் இருக்கின்றது. கீழைத்தேயர்கள் இது போன்ற ஓர் வசனத்தையோ, ஓர் சொல்லையோ ஒருவராலும் கொண்டுவர முடியாது என்னும்

ஹென்றி டி க்வாம்

பிரேஞ்சு இராணுவத்தின் முன்னால் கர்னல்

பிரபஞ்சத்தின் அற்புதங்கள்

"அறீவீனர்களுக்கு மத்தியில் பிறந்து, எழுத வாசிக்க முடியாமல் இருந்த முஹம்மதால் எவ்வாறு இப்பிரபஞ்சத்தின் அற்புதங்கள் பற்றிக் கூற முடியும்?!! தற்போதைய நவீன அறிவியல் கூட அவற்றைத் தான் கண்டுபிடிக்க இன்னும் முயற்சிகள் மேற்கேண்டுள்ள வண்ணமுள்ளன.

டெபோரா பாட்டர்

அமெரிக்கப் பத்திரிகையாளர்

الطريق إلى السعادة
The Path to Happiness

நற்குணங்களின் பாதை

நற்குணங்களின் பாதை

சிறந்த பண்புகளுடன் ஈமானும் தொடர்புபடுகின்றது.

வணக்கவழிபாடுகளும், நற்குணங்களும்.

இஸ்லாத்தில் நற்குணங்கள்,

நற்குணங்களின் பாதை

மகிழ்விற்கான பாதையானது நற்குணங்கள் மூலம் அலங்கரிக்கப்பட வேண்டும். இதில் பயணிக்கும் ஒருவர், அன்பு, சகிப்புத் தன்மை, கொடை, மன்னிப்பு, வெட்கம், அமைதி, பணிவு, பிறருக்கு உதவும் இயல்பு, நீதம், உண்மை, தான தர்மம் வழங்கல், ஆலோசனைகள் செய்தல் போன்ற அனைத்துப் பண்புகளையும் தனது ஒவ்வொரு காலெட்டிலும் பெற்றுக்கொள்ள வசதியாய் இருக்க வேண்டும். அப்போது தான் அவர் மேன்மை மிக்கவராகவும், ஒழுக்கமுடையவராகவும் சிறந்து காணப்பட முடியும். நற்குணங்கள் என்பன வாழ்வில் வந்து போகும் ஆடம்பரப் பொருட்களாக எண்ணி, எம்மால் ஒதுக்கி விட முடியாது. ஏனெனில் வாழ்வின் கட்டுமானம் அமையப்பெறுவதற்கான ஓர் அத்திவாரமாக இது இருக்கின்றது. ஒரு மனிதனின் வாழ்வு நற்குணங்களால் அழகு பெற்றால் அவனின் சமூக, பொருளாதார நிலைகள் முதல், அனைத்தும் அழகுபெற்றதாய் மாறிவிடும். அவ்வாறு இல்லாதவர்கள் என்றும் மனச்சோர்வுடனும், மனக்கசப்புடனமே வாழ நேரிடும்.

இதனால் தான் இஸ்லாம் சிறந்த நற்பண்புகளை ஒருவரின் உள்ளத்தில் நட்டிக்கொள்ளுமாறு தூண்டுகிறது. நபி ﷺ அவர்கள் கூட தாம் அனுப்பப்பட்ட நோக்கங்களில் ஒன்றாக நற்பண்புகளைப் பூரணப்படுத்துவதையும் குறிப்பிட்டுள்ளார்கள். காலா காலமும் நீடிக்க இருக்கும் இஸ்லாம் மார்க்கத்தின் தூதுத்துவமானது, உலக மக்கள் அனைவருக்கும் சிறந்ததோர் நாகரீகத்தை வழங்குவதற்குப் பாரிய முயற்சிகளை மேற்கொள்கின்றது. அதைப் பின்பற்றுபவர்களும் ஏனைய மக்களுக்கு இவற்றை எத்தி வைப்பதிலும், இதன் பக்கம் ஆல் சேர்ப்பதிலும் பாரிய கஷ்டங்களை சந்தித்து, தமது பணியைத் தொடர்ந்தவண்ணம் இருக்கிறார்கள். ஆனால் இவற்றின் மகிமையை உணராதவர்கள் இதை என்றும் எதிர்த்த வண்ணமே இருக்கின்றனர்.

இத்தகைய குணங்களைப் பற்றி அறியாத, அதில் கவனக்குறைவாக இருந்த மக்களை, நற்குணங்கள் மூலம் தூய்மைப்படுத்தி, உயரிய பண்புகள் மூலம் அவர்களை கௌரவிக்கும் வகையில் தான் நபி ﷺ அவர்களின் தூதுத்துவம் இருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், "அவனே எழுதப்படிக்காத சமுதாயத்தில் அவர்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பினான். அவர்களுக்கு அவர் அவனது வசனங்களைக் கூறுகிறார். அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறார். அவர்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுக் கொடுக்கிறார். அவர்கள் இதற்கு முன் தெளிவான வழி கேட்டில் இருந்தனர்." *(அல்குர்ஆன் 62:02)*

மேலும், "உங்களுக்கு உங்களிலிருந்து தூதரை அனுப்பியது போல். (கிப்லாவை மாற்றுவதன் மூலமும் அருள் புரிந்தான்). அவர் உங்களுக்கு நமது வசனங்களைக் கூறுவார். உங்களைத் தூய்மைப்படுத்துவார். உங்களுக்கு வேதத்தையும், ஞானத்தையும் கற்றுத் தருவார். நீங்கள் அறியாமல் இருந்தவற்றையும் உங்களுக்கு அவர் கற்றுத் தருவார்." *(அல்குர்ஆன் 02:151)*

நற்குணங்களின் அடிப்படை

“நற்பண்புகளின் அடிப்படை அல்குர்ஆனில் மேலோங்கிக் காணப்படுகின்றது. இதைப் பின்பற்றும் சமுதாயம் காலத்திற்குக் காலம் சிறப்புற்றவர்களாய்த் தான் வரலாறு நெடுகிலும் காணப்படுகின்றனர். ஏனைய சமுதாயத்தவர்கள் கூட அல்குர்ஆனின் நற்பண்புகளைக் கண்டு, அதைத் தமது வாழ்வில் எடுத்து நடந்துள்ளனர். இதிலிருந்து விளங்குவது என்னவெனில் ஏனைய மார்க்கங்கள் போதித்த பண்பாடுகள் சில மக்களால் மாத்திரமே பின்பற்றப்படும் நிலையில் இஸ்லாத்தின் விழுமியங்கள் அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கத்தக்க ஒன்றாகத்

கஸ்டோவ் லி பான்

பிரேஞ்சு வரலாற்றாசிரியர்

சிறந்த பண்புகளுடன் ஈமானும் தொடர்புபடுகின்றது.

ஈமானானது ஒரு முஃமினை, சிறந்த நற்பண்புகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்கும், தவறுகள், கல்நெஞ்சம் போன்றவற்றிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கும் வழிகளை ஏற்படுத்திவிடுகின்றது. எவரின் குணங்களில் வீழ்ச்சி காணப்படுகின்றதோ, அவரின் ஈமானிலும் வீழ்ச்சி காணப்படுகின்றது என்று தான் அர்த்தம். ஒருவனின் உள்ளத்தில் ஈமான் அறவே இல்லாமல் போகும் போது, தான் பயப்படுவதற்கோ, நன்மைகளை எதிர்பார்த்திடவோ இறைவன் கிடையாது என்ற எண்ணத்தில் பாவகாரியங்களில் ஈடுபட ஆரம்பிக்கிறான். நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "ஈமானும், வெட்கமும் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுகின்றன. அதில் ஒன்று இல்லாமல் போய்விட்டால் மற்றொன்றும் இல்லாமல் போய்விடும்" (ஆதாரம்: பைஹகி), தனது அண்டை வீட்டாருடன் தீய முறையில் நடந்து கொள்வது கூட ஈமானைப் பறித்துவிடுமென நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள். "இறைவன் மீது ஆணையாக ஈமான் கொள்ளமாட்டார், இறைவன் மீது ஆணையாக ஈமான் கொள்ளமாட்டார், இறைவன் மீது ஆணையாக ஈமான் கொள்ளமாட்டார்," என்று நபியவர்கள் கூறியபோது, "அவர் யார்?" என ஸஹாபாக்கள் வினவினர். அதற்கு நபியவர்கள், "யாருடைய தீமைகளை விட்டும் அவருடைய அண்டை வீட்டார் பாதுகாப்பாக இலையோ அவர் தான்" எனக்கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

அல்லாஹ் தனது அடியார்களுக்கு நலவு சொல்கின்ற போதும், கெடுதிகளை விட்டும் எச்சரிக்கின்ற போதும், ஈமானை அவர்களின் உள்ளங்களில் பதியவைத்தே அவர்களை அழைக்கிறான், அல்குர்ஆனில் அதிகமான இடங்களில் பின்வரும் வசனம் நிறையவே பயன்படுத்தப்பட்டுள்ளது. "விசுவாசிகளே..."

இதன் பின்னர் அவர்களுக்குப் பணிக்க இருக்கும் கட்டளைகள் பற்றிக் குறிப்பிடுவான், உதாரணமாக பின்வரும் வசனத்தைப் பார்க்கலாம், "விசுவாசம் கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உண்மையாளர்களுடன் ஆகுங்கள்!" (அல்குர்ஆன் 09:119)

இவ்வாறே நபி ﷺ அவர்கள் தனது சமுதாயத்தினரான எங்களுக்கு, சிறந்த பண்புகளை ஈமானுடன் தொடர்புபடுத்தியே கற்றுக்கொடுத்துள்ளார்கள். "யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசம் கொள்கிறாரோ, அவர் தனது விருந்தினரை உபசரிக்கட்டும். யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசம் கொள்கிறாரோ அவர் தனது அண்டை வீட்டாருடன் நல்ல முறையில் நடக்கட்டும். யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசம் கொள்கிறாரோ, அவர் பேசினால் நல்லதையே பேசட்டும், அல்லது மௌனமாக இருக்கட்டும்" எனக் கூறியுள்ளார்கள் (ஆதாரம்: அஹ்மத்). இவ்வாறு தான் இஸ்லாம் ஈமானை ஒவ்வொருவர் உள்ளத்திலும் விதைத்து, சிறந்த குணங்களை அவர்களிடம் நட்டிவிடுகின்றது.

வணக்கவழிபாடுகளும், நற்குணங்களும்.

இஸ்லாத்தில் காணப்படும் வணக்கவழிபாடுகள் வெறும் வார்த்தைகளும், அசைவுகளும் கிடையாது. அவை உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகின்ற, வாழ்வை சீரமைக்கின்ற வார்த்தைகளும், செயற்பாடுகளுமாகும். இஸ்லாமியக் கடமைகள் எக்காலத்திலும் மனிதனுக்கு நற்குணங்களை வழங்குவதையும், அதிலே அவனைத் தொடர்ந்தும் நடைபோட வைப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது. இவ் உயரிய

நோக்கத்தை, அல்குர்ஆனும், ஹதீஸும் தெளிவாகவே கூறுகின்றன. இஸ்லாத்தில் கடமையாக்கப்பட்டுள்ள தொழுகை தீய குணங்களை விட்டும் ஒருவனைத் தடுத்துவிடுகின்றது. அல்லாஹ் கூறுகிறான், *"(முஹம்மதே!) வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்படுவதைக் கூறுவீராக! தொழுகையை நிலை நாட்டுவீராக! தொழுகை வெட்கக்கேடான காரியங்களை விட்டும், தீமையை விட்டும் தடுக்கும். அல்லாஹ்வை நினைப்பதே மிகப் பெரியது. நீங்கள் செய்பவற்றை அல்லாஹ் அறிவான்."* *(அல்குர்ஆன் 29:45)*

ஸகாத் என்பதும், வெறுமனே ஏழைகளுக்கு வழங்குவதற்காக பணக்காரர்களிடமிருந்து அறவிடப்படும் வரியாக இஸ்லாம் கருதவில்லை. இதன் மூலம் பணக்காரர்களின் உள்ளத்தில் இரக்கத்தையும், அன்பையும் ஏற்படுத்துகின்றது. இவ்விரு தரப்பினருக்கு மத்தியில் அறிமுகத்தையும், ஒற்றுமையையும் உண்டுபண்ணுகின்றது. மேலும் உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி, அவற்றின் குறை நிறைகளை சீர்செய்கின்றது. இதுவே ஸகாதின் முதல் நோக்கமாகும். அல்லாஹ் கூறுகிறான். *"(முஹம்மதே!) அவர்களின் செல்வங்களில் தர்மத்தை எடுப்பீராக! அதன் மூலம் அவர்களைத் தூய்மைப்படுத்தி, பரிசுத்தமாக்குவீராக! அவர்களுக்காகப் பிரார்த்தனை செய்வீராக! உமது பிரார்த்தனை அவர்களுக்கு மன அமைதி அளிக்கும். அல்லாஹ் செவியுறுபவன்; அறிந்தவன்."* *(அல்குர்ஆன் 09:103)*

தீய பழக்கவழக்கங்கள்

"முஹம்மத் தனது சமுதாயத்தை ஷைத்தானின் பிடியிலுருந்து காத்திட பெரும் முயற்சிகளை மேற்கொண்டார். அச்சமூகத்தில் ஊரிக்கிடந்த தீய குணங்களை அவர்களை விட்டும் அகற்றுவதற்காய் தினமும் பாடுபட்டார். அவர்களுக்கு முன்னேற்றப்பாதையைக் காண்பித்து, சிறந்ததோர் நாகரீகத்தின் பால் அவர்களை கொண்டுசெல்ல அவர் மேற்கொண்ட முயற்சிகள் வரவேற்கத்தக்கது, போற்றத்தக்கத்து. இவரின் கொள்கைகள் உலகையே

டால்ஸ்டாய்

ரஷ்ய இலக்கியவாதி

இதனால் தான் தானதர்மம் வழங்குவதைக் கூட பணத்தோடு மாத்திரம் இஸ்லாம் சுருக்கிக் கொள்ளவில்லை. மாறாக சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் மகிழ்வடையும் வகையிலான சிறந்த குணாதிசயங்களை செய்வதும் தர்மமாக இஸ்லாம் கருதுகின்றது. தர்மம் என்னும் சொல்லினுள் உள்ளடங்கும் விடயங்களை நபியவர்கள் தெளிவாக விளக்கியுள்ளார்கள், "உங்கள் வாளியில் இருப்பதை, உங்கள் சகோதரரின் வாளிக்கு ஊற்றுவது தர்மமாகும். நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதும் தர்மமாகும்." இன்னொரு அறிவிப்பில், "உன் சக தோழரின் முகத்தைப் பார்த்து புன்முருவல் செய்வதும் தர்மமாகும். கற்கள், முற்கள் போன்றவற்றை மக்கள் சென்றுவரும் பாதையை விட்டும் அகற்றிவிடுவதும் தர்மமாகும்" எனக்கூறினார்கள். (ஆதாரம்: பைஹகீ)

அவ்வாறே நோன்பையும் உண்ணல், பருகல் போன்றவற்றிலிருந்து தன்னைத் தடுத்துக்கொள்ளும் கடமையாக மாத்திரம் இஸ்லாம் கருதவில்லை. அதை ஏழை, எளியோரின் உணர்வுகளை உணர்ந்துகொள்ளவும், இல்லாதவர்களின் நிலைமைகளை அறிந்துகொள்ளவும் ஓர் சந்தர்ப்பமாய் ஆக்கியுள்ள அதே நேரத்தில், தனது உள்ளத்தை ஆசைகள், தீய குணங்கள் போன்றவற்றை விட்டும் கட்டுப்படுத்திக்கொள்ள உதவும் ஆயுதமாகவும் அதை ஆக்கியுள்ளது. அல்லாஹ் கூறுகிறான், "நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் (இறைவனை) அஞ்சுவதற்காக உங்களுக்கு முன் சென்றோர் மீது கடமையாக்கப்பட்டது போல் உங்களுக்கும் குறிப்பிட்ட நாட்களில் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது." (அல்குர்ஆன் 02:183)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் கூறினார்கள், "யார் (நோன்பு காலங்களில்) பொய் பேசுவதையும், அதன் படி நடப்பதையும் விட்டுவிடவில்லையோ, அவர் பசித்திருப்பதிலும், தாகித்திருப்பதிலும் அல்லாஹ்வுக்கு எவ்விதத் தேவையும் கிடையாது" (ஆதாம்: அஹ்மத்). மேலும், "நோன்பமானது உண்பதாலோ, குடிப்பதாலோ மாத்திரம் முறிந்துவிடாது, வீணான செயல்கள், தீயவார்த்தைகள் போன்றவற்றாலும் முறிந்து விடும். உங்களை யாராவது திட்டினாலோ, அல்லது அத்துமீற எத்தனித்தாலோ, நான் நோன்பாளி, நான் நோன்பாளி எனக் கூறுங்கள்" என்றார்கள் (ஆதாரம்: இப்னு ஹுஸைமா).

ஹஜ் என்பதை பெரும் பணசெலவீனத்துடன் நிறைவேற்றப்படும் கடமை எனவும், முக்கியமான சில இடங்களை தரிசிப்பதோடு முடைவடைகிறது எனவும் அதிகமானவர்கள் எண்ணுகின்றனர். இது தவறாகும். ஏனெனில் இக்கிரியையைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான். "ஹஜ்(ஜுக்குரிய காலம்) தெரிந்த மாதங்களாகும். அம்மாதங்களில் ஹஜ்ஜை (தன் மீது) விதியாக்கிக் கொண்டவர் ஹஜ்ஜின் போது உடலுறவு கொள்வதோ, குற்றம் செய்வதோ, விதண்டா வாதம் புரிவதோ கூடாது. நீங்கள் எந்த நன்மையைச் செய்தாலும் அதை அல்லாஹ் அறிகிறான். (ஹஜ்ஜுக்குத்) தேவையானவற்றைத் திரட்டிக் கொள்ளுங்கள்! திரட்டிக் கொள்ள வேண்டியவற்றில் (இறை) அச்சமே மிகச் சிறந்தது. அறிவுடையோரே! என்னை அஞ்சுங்கள்!" (அல்குர்ஆன் 02:197)

மேற்கூறப்பட்ட அனைத்தும் நற்குனத்தை வணக்க வழிபாடோடு இணைத்து விடும் முறைகள் பற்றி விளக்கமாகத் தெளிவுபடுத்தின. இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் உள்ளடங்கும் தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் மற்றும் இதர வணக்கவழிபாடுகள் அனைத்தும் ஒரு மனிதனை பூரண நற்குணத்தின் பக்கமும், மனித நேயத்தை அவனுள் விதைக்கின்ற சிறந்த பண்புகள் பக்கமுமே வழிகாட்டுகின்றன. இவ்வணக்க வழிபாடுகள் அனைத்தும், நபி ﷺ அவர்கள் கூறிய "நான் நற்குணங்களைப் பூரணப்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டேன்" என்னும் கூற்றின் உயரிய நோக்கத்தையே ஒரு மனிதனில் விதைக்கின்றன. எனவே மகிழ்வின் பால் ஒருவனை வழிநடாத்துகின்ற நற்குணங்களுக்கும், இஸ்லாமிய வணக்கவழிபாடுகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதை எம்மால் உணர முடிகின்றது.

மர்சல் போய்சாரட்
பிரேஞ்சு சிந்தனையாளர்

சட்டங்களும் நற்பண்புகளும்

"இஸ்லாத்தின் சட்டக்கோர்வையையும், விழுமியங்களையும் வேறுபிரித்து நோக்க முடியாது. இவை இரண்டும் ஒன்றரக் கலந்தே சக்தி வாய்ந்த ஒழுங்கமைப்பை ஆரம்பத்திலிருந்தே

விரிவான நுட்பம் மிக்க சட்டங்கள்

"அல்குர்ஆனில் அனைத்து விடயங்களும் கூறப்பட்டுள்ளன. இது சட்டவிழுமியங்களையும், பண்பாட்டம்சங்களையும் தன்னகத்தே உள்ளடக்கியிருக்கின்றது. இது தனிமனித, சமுதாய சட்டதிட்டங்களை தெளிவாக விபரிக்கின்றது. மனிதர்களிடம் குடிகொண்டுள்ள கரடுமுரடான அம்சங்களை இல்லாதொழிக்கின்றது. அவர்களுக்குத் தேவையான நாளாந்த செயற்பாடுகள், வாராந்த செயற்பாடுகள், மாதாந்த செயற்பாடுகள் என ஒவ்வொரு அம்சங்களையும் வகுத்துக்கொடுத்துள்ளது. மனைவி மக்கள், பிள்ளை குட்டிகள் போன்றோருடனும், உறவினர்கள், நண்பர்கள் போன்றோருடனும், மனிதனல்லாத ஏனைய ஜீவராசிகளுடன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்ற அம்சங்களையும்

ஜாக் ரேஸ்லர்

பிரேஞ்சு ஆய்வாளர்

இஸ்லாத்தில் நற்குணங்கள்,

மகிழ்வின் பாதையானது, தனது கொள்கைசாந்த, ஒழுங்குவிதிகள் சார்ந்த அனைத்து அம்சங்களையும், நற்குணங்களை அடிப்படையாக வைத்தே அமைத்துக் கொள்கின்றன. அல்லாஹ்வுடன் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்குமுறைகள், தன்னுடனும், தனது தோழர்கள், குடும்பத்தினர்கள், உறவினர்கள், அண்டைவீட்டார்கள் போன்றோருடன் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்கு முறைகள், எதிரியுடன் நடந்துகொள்ளும் முறைகள், மிருகங்கள், பறவைகள், மரங்கள், செடி கொடிகள் போன்ற உயிருள்ள, உயிரற்ற அனைத்துப் பொருட்களோடும் நடந்துகொள்ளும் முறைகள் சம்பந்தமான, பண்புகள் அடிப்படையில் அமைந்த நடைமுறைசார் அம்சங்கள் அனைத்தையும் அது உள்ளடக்கியிருக்கின்றது. இத்தகைய குணாதிசயங்கள் சொல், செயல், எண்ணம் என மூன்றிலும் தென்பட வேண்டும். சொல் சார்ந்த சிறந்த பண்புகளின் அடிப்படை அம்சத்தைப் பற்றி அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான். "மக்களிடம் அழகானதையே பேச வேண்டும்" *(அல்குர்ஆன் 02:83)*

செயல் சார்ந்த நற்குணங்களின் அடிப்படை அம்சம் இவ்வாறு இருக்கின்றது. "நல்லதைக் கொண்டு கெடுதியைத் தடுப்பீராக! அவர்கள் கூறுவதை நாம் நன்கு அறிவோம்." *(அல்குர்ஆன் 23:96)*

அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆனை ஒருவர் படித்தால், அதில் ஏராளமான குணங்கள் சார்ந்த வசனங்கள் நிறைந்து கிடைப்பதை அவரால் காணமுடியும். இந்த வசனத்தை சற்று நோக்குங்கள், "நன்மைக்கு நன்மை தவிர வேறு கூலி உண்டா?" (அல்குர்ஆன் 55:60)

மேலும், "உங்களுக்கிடையே (சிலருக்கு) இருக்கும் உயர்வை மறந்து விடாதீர்கள்!" (அல்குர்ஆன் 02:237)

மேலும், "அழகிய பொறுமையை மேற்கொள்கிறேன். நீங்கள் கூறும் விஷயத்தில் அல்லாஹ்வே உதவி தேடப்படுபவன்' என்று அவர் கூறினார்." (அல்குர்ஆன் 12:18)

மேலும், "அந்த நேரம் வந்தே தீரும். எனவே அழகிய முறையில் அவர்களை அலட்சியப்படுத்துவீராக!" (அல்குர்ஆன் 15:85)

மேலும், "பெருந்தன்மையை மேற் கொள்வீராக! நன்மையை ஏவுவீராக! அறிவீனர்களை அலட்சியம் செய்வீராக!" (அல்குர்ஆன் 07:199)

மேலும், "வீணானவற்றை அவர்கள் செவியுறும் போது அதை அலட்சியம் செய்கின்றனர். 'எங்கள் செயல்கள் எங்களுக்கு. உங்கள் செயல்கள் உங்களுக்கு. உங்கள் மீது ஸலாம் உண்டாகட்டும். அறிவீனர்களை விரும்ப மாட்டோம்' எனவும் கூறுகின்றனர்." (அல்குர்ஆன் 28:55)

மேலும், "நன்மையும், தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும், உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார்." (அல்குர்ஆன் 41:34)

கட்டுக்கதைகள்

"முஹம்மத் பதவி ஆசைக்காகவும், சமூகத்தில் சுய பிரபலத்தையும் நாடினார் என அவரை பலர் நினைக்கின்றனர். அவ்வாறல்ல, சத்தியமாக அம்மனிதரின் மனதில் ஒரு துளியேனும் அவ்வாறு தோன்றியிருக்க வாய்ப்பில்லை. அவரின் உள்ளம் அன்பு, உதவி மனப்பான்மை, சமூக அக்கறை போன்ற பல சிறந்த நற்பண்புகளால் நிரம்பிக் காணப்பட்டது. அவர் எப்போதும் இவ்வுலக பேரின்பகளை அடைந்துகொள்ள முயற்சிகள் மேற்கொண்டதில்லை. இத்தகைய மனிதர் எப்படி பிரபல்யத்தை நாடியிருக்க

தாமஸ் கார்லைல்
ஸ்கொட்லாந்து வரலாற்றாசிரியர், மற்றும் விமர்சகர்

நபி ﷺ அவர்களின் நற்குணம் அல்குர்ஆனாகத் தான் இருந்தது. அவரின் நற்குணங்கள் எவ்வாறு சிறந்து விளங்காமல் இருக்கும்? அல்லாஹ் அவரை இதற்காகப் புகழ்ந்துள்ளான். "நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர்." (அல்குர்ஆன் 68:04)

நபி ﷺ அவர்கள் நற்குணங்கள் பற்றி பின்வருமாறு கூறியுள்ளார்கள், "முஃமின்களில் பூரண ஈமானைப் பெற்றவர்கள், அவர்களில் சிறந்த குணமுடையவர்களே. அவர்களில் சிறந்தவர்கள் தங்கள் மனைவியருக்குச் சிறந்தவர்களே" (ஆதாரம்: பைஹகீ),

"நன்மை என்பது நற்குணமாகும். பாவம் என்பது உனது உள்ளத்தில் ஊசலாடுவதும், பிறர் அதைப் பார்ப்பதை விட்டும் நீ வெறுப்பதுமாகும." (ஆதாரம்: முஸ்லிம்),

"ஒழுக்கக்கேடும், ஒழுக்கக்கேடாய் நடந்துகொள்வதும் இஸ்லாத்தில் இல்லாத அம்சங்களாகும். மனிதர்களில் இஸ்லாத்தில் சிறந்தவர், அவர்களில் சிறந்த குணமுடையவராவார்." (ஆதாரம்: அஹ்மத்),

"மறுமையில் ஒரு முஃமினின் தராசில் பாரம் கூடியதாக இருக்கப்போவது சிறந்த

நீதம்

"முஹம்மத் பல இன்னல்களையும், துன்பங்களையும் சுமக்கக் காரணம், அவரின் உறுதியான கொள்கைகளும், அதீத நற்பண்புகளும், அவரை விசுவாசம் கொண்டு, தலைவராக ஏற்றிருந்த மக்களுமே. இவை அவரின் நீதத்திற்கும், நேர்மைக்கும் ஆதாரங்களாகும். முஹம்மத் சமூகத்தில் பல பிளவுகளை உண்டுபண்ணி, தீர்க்க முடியாத பல பிரச்சினைகளைத் தோற்றுவித்தார் என பலர் வாதிடுகின்றனர். அவர்கள் வரலாறுகளைக் கொஞ்சம் புறட்டிப் பார்க்கட்டும். அங்கு முஹம்மதின் ஆளுமைக்கு நிகரான ஒரு மனிதரையேனும் அவர்களால் கண்டுகொள்ள முடியுமா

மோண்ட்கோமெறி வாட்

பிரித்தானிய கீழைத்தேய வாதி

குணங்களாகும். அல்லாஹ் தீமை செய்வோர் மீது கோபம் கொள்கிறான்" (ஆதாரம்: பைஹகீ)

"உங்களில் எனக்கு மிகவும் விருப்பமானவர், உங்களில் சிறந்த குணமுடையவர். உங்களில் என்னிடம் மறுமையில் கோபத்திற்குள்ளாகுபவர் இதே நற்குணத்தோடு, அதிகம் உளருபவர்களும், வாயாடிகளும், அதிகம் பேசுபவர்களும்" என்றார்கள் (ஆதாரம்: அஹ்மத்)

இஸ்லாத்தில் நற்குணங்கள் பூரணமாகவே கூறப்பட்டுள்ளன.

அவை அல்லாஹ்வுடன் நடந்துகொள்ளும் முறைகளிலிருந்து ஆரம்பிக்கிறது.

அல்லாஹ்வுடன் சிறந்த முறையில் நடந்துகொள்வதானது மூன்று அம்சங்களைக் கொண்டுள்ளது.

முதலாவது: அவனை ஈமான் கொள்வதும் அவன் அறிவித்த செய்திகளை உண்மைப்படுத்துவதும். அல்லாஹ் தன்னைப் பற்றி பின்வருமாறு கூறுகிறான், "அல்லாஹ்வைத் தவிர வணக்கத் திற்குரியவன் வேறு யாருமில்லை. எந்தச் சந்தேகமுமில்லாத கியாமத் நாளில் உங்களை அவன் ஒன்று திரட்டுவான். அல்லாஹ்வை விட அதிக உண்மை பேசுபவன் யார்?" (அல்குர்ஆன் 04:87)

அல்லாஹ்வின் வார்த்தைகளை உண்மைப்படுத்துவதென்பது, மனிதன் அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்பவனாகவும், அவனின் வார்த்தைகளைப் பாதுகாப்பவனாகவும், அவனின் பாதையில் போர் புரிபவனாகவும் இருக்க வேண்டும். அவ்வாறே அவனுக்கு இணைவைக்காமலும், அவனின் வார்த்தைகளிலும், நபி ﷺ அவர்களின் வார்த்தைகளிலும் சந்தேகம் கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

இரண்டாவது: மனிதன் அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை மனப்பூர்வமாக ஏற்று, அவற்றை தனது வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும். அவனுக்கு ஒருக்காலமும் மாறு செய்யவே கூடாது. அவ்வாறு மாறு செய்வது அல்லாஹ்வுடன் தீயமுறையில் நடந்துகொள்வதாகவே கணிக்கப்படும். இதனால் தான் அவனின் வார்த்தைக்கு முன்னால் எமது கருத்துக்களையோ, எமது ஆசைகளையோ நாம் பின்பற்றக்கூடாது என எம்மைத் தடுத்துள்ளான்."நம்பிக்கை கொண்டோரே! அல்லாஹ்வுக்கும், அவனது தூதருக்கும் முந்தாதீர்கள்! அல்லாஹ்வை அஞ்சுங்கள்!



அல்லாஹ் செவியுறுபவன்; அறிந்தவன்." (அல்குர்ஆன் 49:01)

மூன்றாவது: அல்லாஹ்வின் விதிமுறைகளில் பொறுமை கொள்ள வேண்டும். மனிதன் அல்லாஹ்வுடன் சிறந்த முறையில் நடந்துகொள்கிறான் என்றால் நிச்சயம் அவன் அல்லாஹ் விதித்துள்ள அனைத்து சாதக, பாதக அம்சங்களையும் பொருந்திக்கொண்டு, அவற்றில் மனநிம்மதியடைய வேண்டும். இதனால் தான் அல்லாஹ் பொறுமையாளர்களைப் புகழ்கிறான். "பொறுத்துக் கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக! தமக்கு ஏதேனும் துன்பம் ஏற்படும் போது 'நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நாங்கள் அவனிடமே திரும்பிச் செல்பவர்கள்' என்று அவர்கள் கூறுவார்கள்." (அல்குர்ஆன் 02:155-156)

அடுத்து மனிதர்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளல்.

அல்லாஹ் மனிதர்கள் அனைவருக்கும் நல்லது செய்யுமாறு பணிக்கிறான். குறிப்பாக பெற்றோர்கள், உறவினர்கள், அண்டை வீட்டினர் போன்றோருடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுமாறும் ஏவுகிறான். "'அல்லாஹ்வைத் தவிர (யாரையும்) நீங்கள் வணங்கக் கூடாது; பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் நல்லுதவி புரிய வேண்டும்; மக்களிடம் அழகானதையே பேச வேண்டும்; தொழுகையை நிலை நாட்ட வேண்டும்; ஸகாத்தையும் கொடுக்க வேண்டும்' என்று இஸ்ராயீலின் மக்களிடம் நாம் உறுதி மொழி எடுத்த பின்னர் உங்களில் சிலரைத் தவிர (மற்றவர்கள்) புறக்கணித்து அலட்சியப்படுத்தினீர்கள்." (அல்குர்ஆன் 02:83)

நற்குணங்களின் மார்க்கம்

"அல்குர்ஆனில் அல்லாஹ்வின் மீது அன்பு செலுத்த வேண்டும் என்ற பொருளில் அமையாத எவ் வசனத்தையேனும் கண்டுகொள்ள முடியாது. அதில் அல்லாஹ்வின் கட்டளைகளைப் பின்பற்றுவோருக்குக் கிடைக்கும் சிறப்புக்கள், உணர்வுகளைப் பரிமாறிக்கொள்வதற்கான அழைப்பு, நல்லெண்ணங்கள் பக்கம் தூண்டுதல், கோபம், பொறாமை போன்றவற்றை அப்புறப்படுத்தல் போன்ற அனைத்தும் கூறப்பட்டுள்ளன. சிந்தனைகளும், பார்வைகளும் சில வேளைகளில் பாவமாக மாறலாம் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது. அனைவருடனும் எவ்வித வேறுபாடுகளுமின்றி, சமத்துவமாகவும், சந்தோசமாகவும் வாழ வழிகோலியுள்ளது. நற்பண்புகளை அடுக்கடுக்காகக் கூறியுள்ள இப் புனித அல்குர்ஆன்

லூவிஸ் சேகு

பிரேஞ்சு கீழைத்தேய வாதி

மேலும், "உங்கள் முகங்களை கிழக்கு நோக்கியோ, மேற்கு நோக்கியோ திருப்புவது நன்மையன்று. மாறாக அல்லாஹ், இறுதி நாள், வானவர்கள், வேதம், மற்றும் நபிமார்களை நம்புவோரும் உறவினர்கள், அனாதைகள், ஏழைகள், நாடோடிகள், யாசிப்போருக்கும், மற்றும் அடிமைகளை விடுதலை செய்வதற்கு (மன) விருப்பத்துடன் செல்வத்தை வழங்குவோரும், தொழுகையை நிலை நாட்டுவோரும், ஸகாத்தை வழங்குவோரும், வாக்களித்தால் தமது வாக்கை நிறைவேற்றுவோரும், வறுமை, நோய், மற்றும் போர்க்களத்தில் சகித்துக் கொள்வோருமே நன்மை செய்பவர்கள். அவர்களே உண்மை கூறியவர்கள். அவர்களே (இறைவனை) அஞ்சுபவர்கள்." *(அல்குர்ஆன் 02:177)*

மேலும், "தாம் எதைச் செலவிட வேண்டும் என்று உம்மிடம் கேட்கின்றனர். 'நல்லவற்றிலிருந்து நீங்கள் எதைச் செலவிட்டாலும் பெற்றோருக்காகவும், உறவினருக்காகவும், அனாதைகளுக்காகவும், ஏழைகளுக்காகவும், நாடோடிகளுக்காகவும் (செலவிட வேண்டும்.) நீங்கள் எந்த நன்மையைச் செய்தாலும் அல்லாஹ் அதை அறிந்தவன்' எனக் கூறுவீராக! *(அல்குர்ஆன் 02:215)*

மேலும், "நம்பிக்கை கொண்டு, ஹிஜ்ரத் செய்து அல்லாஹ்வின் பாதையில் போரிடுவோரும், அடைக்கலம் தந்து உதவியோருமே உண்மையாக நம்பிக்கை கொண்டவர்கள். அவர்களுக்கு மன்னிப்பும், கண்ணியமான உணவும் உண்டு.

இதன் பின்னர் நம்பிக்கை கொண்டு, ஹிஜ்ரத் செய்து, உங்களுடன் இணைந்து போரிட்டோரே உங்களைச் சேர்ந்தவர்கள். இரத்த பந்தமுடையோர் ஒருவர் மற்றவருக்கு அல்லாஹ்வின் வேதத்தில் உள்ளபடி நெருக்கமானவர்கள். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் அறிந்தவன்" *(அல்குர்ஆன் 08:74-75)*

மேலும், "அல்லாஹ்வை வணங்குங்கள்! அவ னுக்கு எதையும் இணையாகக் கருதாதீர்கள்! பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும், நெருங்கிய அண்டை வீட்டாருக்கும், தூரமான அண்டை வீட்டாருக்கும், பயணத் தோழருக்கும், நாடோடிகளுக்கும், உங்கள் அடிமைகளுக்கும் நன்மை செய்யுங்கள்! பெருமையடித்து, கர்வம் கொள்பவரை அல்லாஹ் நேசிக்க மாட்டான்." *(அல்குர்ஆன் 04:36)*

மேலும், "நீதி, நன்மை, மற்றும் உறவினருக்குக் கொடுப்பதை அல்லாஹ் கட்டளையிடுகிறான். வெட்கக்கேடானவை, தீமை, மற்றும் வரம்பு மீறுவதை உங்களுக்குத் தடுக்கிறான். நீங்கள் நல்லுணர்வு பெறுவதற்காக உங்களுக்கு அறிவுரை கூறுகிறான்." *(அல்குர்ஆன் 16:90)*

மேலும், "'என்னைத் தவிர வேறு யாரையும் வணங்காதீர்கள்! பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்!' என்று உமது இறைவன் கட்டளையிட்டுள்ளான். உம்முடன் இருக்கும் அவ்விருவருமோ, இருவரில் ஒருவரோ முதுமையை அடைந்து விட்டால் அவ்விருவரை நோக்கி சீ' எனக் கூறாதே! அவ்விருவரையும் விரட்டாதே!



மரியாதையான சொல்லையே அவ்விருவரிடமும் கூறுவீராக!

அன்புடன் பணிவு எனும் சிறகை அவ்விருவருக்காகவும் தாழ்த்துவீராக! 'சிறுவனாக இருக்கும் போது என்னை இருவரும் பராமரித்தது போல் இறைவா! இவ்விருவருக்கும் அருள் புரிவாயாக!' என்று கேட்பீராக!

உங்கள் உள்ளங்களில் உள்ளதை உங்கள் இறைவன் நன்கறிபவன். நீங்கள் நல்லோராக இருந்தால் திருந்துவோரை அவன் மன்னிப்பவனாக இருக்கிறான்.

உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவரவரின் உரிமையை வழங்குவீராக! ஒரேயடியாக வீண் விரயம் செய்து விடாதீர்!

விரயம் செய்வோர் ஷைத்தான்களின் உடன்பிறப்புக்களாக உள்ளனர். ஷைத்தான் தனது இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான்.

(உம்மிடம் வசதியில்லாது) உமது இறைவனின் அருளைத் தேடி எதிர்பார்த்திருக்கும் நிலையில் (ஏதும் கொடுக்காமல்) அவர்களைப் புறக்கணிப் பதாக இருந்தால் கடினமில்லாத சொல்லையே அவர்களுக்குக் கூறுவீராக!" *(அல்குர்ஆன் 17:23-28)*

மேலும், *"உறவினருக்கும், ஏழைக்கும், நாடோடிக்கும் அவர்களின் உரிமையை வழங்குவீராக! அல்லாஹ்வின் முகத்தை நாடுவோருக்கு இதுவே சிறந்தது. அவர்களே வெற்றி பெற்றோர்."* *(அல்குர்ஆன் 30:38)*

மேலும், *"மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்."* *(அல்குர்ஆன் 04:01)*

மேலும், *"நீங்கள் புறக்கணித்து பூமியில் குழப்பம் ஏற்படுத்தவும், உங்கள் உறவுகளை முறிக்கவும் முயல்வீர்களா?"* *(அல்குர்ஆன் 47:22)*

மேலும், *"உமது இறைவனிடமிருந்து அருளப்பட்டது உண்மையே என்று அறிந்திருப்பவர், குருடரைப் போல் ஆவாரா? அறிவுடையோர் தாம் படிப்பினை பெறுவார்கள் அவர்கள்*

அல்லாஹ்வின் உடன்படிக்கையை நிறைவேற்றுவார்கள். உடன்படிக்கையை முறிக்க மாட்டார்கள் இணைக்கப்பட வேண்டும் என அல்லாஹ் கட்டளை இட்டவற்றை (உறவினரை) இணைத்துக் கொள்வார்கள்; தமது இறைவனுக்கு அஞ்சுவார்கள்; கடுமையான விசாரணைக்கும் அஞ்சுவார்கள்.

அவர்கள் தமது இறைவனின் திருப்தியை நாடி பொறுமையை மேற்கொள்வார்கள். தொழுகையை நிலை நாட்டுவார்கள். நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து இரகசியமாகவும், வெளிப்படையாகவும் (நல் வழியில்) செலவிடுவார்கள். நன்மை மூலம் தீமையைத் தடுப்பார்கள். அவர்களுக்கே அவ்வுலகின் (நல்ல) முடிவு உண்டு.

அவர்களும், அவர்களின் பெற்றோர், மனைவியர் மற்றும் சந்ததிகளில் நல்லோரும் நிலையான சொர்க்கச் சோலைகளில் நுழைவார்கள். வானவர்கள் ஒவ்வொரு வாசல் வழியாகவும் அவர்களிடம் வருவார்கள். நீங்கள் பொறுமையாக இருந்ததால் உங்களுக்கு ஸலாம் உண்டாகட்டும். இவ்வுலகின் தீர்ப்பு (உங்களுக்கு) நல்லதாக உள்ளது (என்று வானவர்கள் கூறுவார்கள்)..

அல்லாஹ்விடம் உறுதி மொழி எடுத்த பின் அதை முறிப்போருக்கும், இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அல்லாஹ் கட்டளையிட்டதைத் துண்டிப்போருக்கும், மற்றும் பூமியில் குழப்பம் விளைவிப்போருக்கும் சாபம் உள்ளது. அவர்களுக்கு அவ்வுலகில் கேடு உண்டு." (அல்குர்ஆன் 13:19-25)

நல்ல முறையில் நடந்துகொள்வதானது நண்பர்கள், தோழர்கள், உறவினர்கள், அண்டைவீட்டினர் போன்றோரோடு மாத்திரம் தொடர்புபடவில்லை. எதிரிகளுடனும் கூட சிறந்த முறையில் நடந்து கொள்ளுமாறு இஸ்லாம் வலியுருத்தியுள்ளது. "நன்மையும், தீமையும் சமமாகாது. நல்லதைக் கொண்டே (பகைமையை) தடுப்பீராக! எவருக்கும், உமக்கும் பகை இருக்கிறதோ அவர் அப்போதே உற்ற நண்பராகி விடுவார்." (அல்குர்ஆன் 41:34)

போரிடும் சந்தர்ப்பத்தில் கூட ஒருவரை அளவுகடந்து தாக்கக் கூடாதெனவும் கூறியுள்ளது. "உங்களிடம் போருக்கு வருவோருடன் அல்லாஹ்வின் பாதையில் நீங்களும் போர் செய்யுங்கள்! வரம்பு மீறாதீர்கள்! வரம்பு மீறியோரை அல்லாஹ் நேசிக்க மாட்டான்." (அல்குர்ஆன் 02:190)

இஸ்லாம் எதிரிகளுடன் நடந்துகொள்ளும் முறைகளைக் கூட எமக்குக் கற்றுத் தந்துள்ளது. நபி ﷺ அவர்கள், அல்லாஹ்வின் பாதையில் போரிட வெளியாகிய தனது படையைப் பார்த்து பின்வருமாறு கூறினார்கள், "ஏமாற்ற வேண்டாம், மோசடி செய்யவேண்டாம், சித்திரவதை செய்யவேண்டாம். குழந்தைகளையும், வணக்கஸ்தலங்களில் பதுங்கியிருப்பவர்களையும் கொல்ல வேண்டாம்" (ஆதாரம்:

அஹ்மத்). யுத்த களத்தில் எதிரியுடன் நடந்துகொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி இஸ்லாம் இவ்வாறு கூறியிருப்பதானது பிரம்மிப்பூட்டும் விடயமாகவே இருக்கின்றது. இது தவிர, யுத்தம் புரியாத எதிரிகளுடனும் நீதமாக நடந்துகொள்ளுமாறும், நல்லவைகளை அவர்களுக்கு செய்யுமாறும் இஸ்லாம் ஏவுகின்றது.

"மார்க்க விஷயத்தில் உங்களுடன் போரிடாதோருக்கும், உங்கள் வீடுகளிலிருந்து உங்களை வெளியேற்றாதோருக்கும் நன்மை செய்வதையும், அவர்களுக்கு நீதி செலுத்துவதையும் அல்லாஹ் உங்களுக்குத் தடை செய்யவில்லை. நீதி செலுத்துவோரை அல்லாஹ் விரும்புகிறான்." (அல்குர்ஆன் 60:08)

மிருகங்களுடன் நல்ல முறையில் நடந்துகொள்ளல்.

இஸ்லாம் மிருகங்களுடனும் சிறந்த முறையில் நடந்துகொள்ளுமாறு எம்மைப் பணித்துள்ளது. நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "பூனையொன்றை சாகும் வரை கட்டிப்போட்டிருந்த ஒரு பெண் வேதனை செய்யப்பட்டாள். அதை அவள் அடைத்து வைத்து, அதற்கு உணவு கொடுக்கவுமில்லை, நீர் புகட்டவுமில்லை. தானாக சென்று சாப்பிடுவதற்காக அதை அவிழ்த்து விடவுமில்லை." (ஆதாரம்: புஹாரி). அவ்வாறே பிராணிகளை அறுக்கும் போது கூட நல்லமுறையில் அறுக்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான், நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "அல்லாஹ் ஒவ்வொன்றுக்கும் நல்லறம் செய்யுமாறு கடமையாக்கியுள்ளான். நீங்கள் கொன்றால் சிறந்த முறையில் கொல்லுங்கள். நீங்கள் அறுத்தால் சிறந்த முறையில் அறுங்கள். உங்கள் கத்தியை கூர்மையாக்கிக் கொள்ளுங்கள். அறுப்புப் பிராணியை கஷ்டப்படுத்தாதீர்கள்" (ஆதாரம்: முஸ்லிம்)

சூழலுடன், அது சார்ந்த அம்சங்களுடனும் சிறந்த முறையில் நடந்துகொள்ளல்.

இஸ்லாம் சூழல், பொதுவாக வெளிறங்கத்தில் தென்படும் அம்சங்கள் போன்ற அனைத்துடனும் சிறந்தமுறையில் நடந்துகொள்ளுமாறு வலியுருத்துகின்றது. வீண்விரயம் செய்தல், சூழலை மாசுபடுத்தல் போன்ற தீய விடயங்களை விட்டும் தடுக்கின்றது. *"'அல்லாஹ் வழங்கியதை உண்ணுங்கள்! பருகுங்கள்! பூமியில் குழப்பம் விளைவித்துத் திரியாதீர்கள்!' (என்று கூறினோம்)"* *(அல்குர்ஆன் 02:60)*

மேலும், *"வரம்பு மீறியோரின் கட்டளைகளுக்குக் கட்டுப்படாதீர்கள் அவர்கள் பூமியில் குழப்பம் விளைவிப்பார்கள். சீர் செய்ய மாட்டார்கள் (என்றும் கூறினார்).!"* *(அல்குர்ஆன் 26:151-152)*

விசுவாசிகள் அனைவரும் சகோதரர்கள்

"அனைத்து விசுவாசிகளும் சகோதரர்கள் என்னும் கோட்பாடு இஸ்லாம் மார்க்கத்தில் மாத்திரமே உள்ளது. இது உருவாகக் காரணம்

தாமஸ் அர்னால்டு

பிரித்தானிய கீழைத்தேயவாதி



அவ்வாறே இயற்கையின் ஏனைய அம்சங்களையும் நல்ல முறையில் நடந்து, அவற்றைப் பாதுகாக்குமாறு அல்லாஹ் ஏவுகிறான். ஏனெனில் அனைத்தும் அல்லாஹ்வின் படைப்புக்களாகும். *"வானங்களும், பூமியும் இணைந்திருந்தன என்பதையும், அவ்விரண்டையும் நாமே பிரித்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் தண்ணீரி லிருந்து அமைத்தோம் என்பதையும் (நம்மை) மறுப்போர் சிந்திக்க வேண்டாமா? அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டாமா?"* *(அல்குர்ஆன் 21:30)*

மேலும், *"அல்லாஹ்வே வானிலிருந்து தண்ணீரை இறக்கினான். பூமி இறந்த பின் அதன் (தண்ணீர்) மூலம் இதற்கு உயிரூட்டினான். செவியுறும் சமுதா யத்துக்கு இதில் சான்று இருக்கிறது."* *(அல்குர்ஆன் 16:65)*

நபி ﷺ அவர்களும் சூழலையும், அதிலுள்ள ஒவ்வொரு இயற்கைசார்ந்த பொருட்களையும் பாதுகாக்குமாறு ஆர்வமூட்டியுள்ளார்கள். வரட்சி, பாலைவனமயமாதல் போன்றவற்றை விட்டும் சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாத்திட வலியுருத்தியுள்ளார்கள், *"சாபம் பெறப்பட்ட மூன்று பேரின் விடயத்தில் அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள்,அவர்கள் நீர்நிலைகளிலும், பாதையோரங்களிலும், நிழலிலும் மலசலம் கழிப்பவர்களாவர்" (ஆதாரம்: அபூதாவுத்).*

"யார் ஒரு முஸ்லிம் பயிர் பச்சையை, அல்லது ஓர் மரத்தை நட்டு, அதிலிருந்து பறவைகளும், மனிதனர்களும், மிருகங்களும் தங்களுக்கான உணவைப் பெற்றுக்கொண்டால், அது அவருக்கு தர்மமாக அமைந்து விடும்." (ஆதாரம்: முஸ்லிம்).

"உங்கள் கையில் மரக்கன்று நீங்கள் மரக்கன்று வைத்திருக்கும் நிலையில் மறுமை

நாள் ஏற்பட்டாலும், முடிந்தால் அம்மரக்கன்றை நட்டி விட்டே எழுந்திடுங்கள்." (ஆதாரம்: அஹ்மத்).

ஒரு முறை நபி ﷺ அவர்கள் ஸஃத் ௨ அவர்கள் வுழு செய்துகொண்டிருக்க, அவரைக் கடந்து சென்றார்கள். அப்போது, "என்ன வீண்விரயம் இது?" எனக் கேட்டார்கள். அதற்கு அவர், "வுழுவிலும் வீண்விரயம் இருக்கின்றதா?" எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், "ஆம். அது ஓடும் ஆற்றில் செய்தாலும் சரி" எனக் கூறினார்கள்.(ஆதாரம்: இப்னுமாஜா).

இவ்வாறு ஸஹாபாக்கள் சூழலுடனும், அதில் இருக்கும் பொருட்களுடனும் மிகவும் சிறந்த முறையில் நடந்துள்ளார்கள். யுத்த நேரத்தில் கூட இவை பேணப்பட வேண்டும் என்னும் விடயத்தில் அதிக அக்கறையுடன் செயற்பட்டிருக்கின்றார்கள். அபூபக்கர் ௨ அவர்கள் தனது படைத்தளபதிக்கு பின்வருமாறு ஏவினார்கள். "நீங்கள் குழந்தைகளையோ, பெண்களையோ, வயோதிபர்களையோ கொல்லாதீர்கள். கனி தரும் மரங்களை வெட்டாதீர்கள். உணவுக்காகவே தவிர ஆட்டையோ மாட்டையோ அறுக்காதீர்கள். குடியிருப்புப் பகுதிகளை நாசம்பண்ணாதீர்கள். பேரீச்சை மரங்களை வெட்டவோ எரிக்கவோ செய்யாதீர்கள். (ஆதாரம்: மாலிக்)

மேலும் சில நற்குணம் சார்ந்த கட்டளைகள்.

அல்குர்ஆனிலும், நபி ﷺ அவர்களின் போதனைகளிலும் மேலும் பல நற்குணம் சார்ந்த அம்சங்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் சில வருமாறு:

அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளவை:

அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளவை: "அமானிதங்களை அதற்குரியோரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும், மக்கள் மத்தியில் தீர்ப்பளிக்கும் போது நீதியாக நீங்கள் தீர்ப்பளிக்க வேண்டும் எனவும் அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். அல்லாஹ்வின் இந்த அறிவுரை உங்களுக்கு மிகவும் நல்லது. அல்லாஹ் செவியுறுபவனாகவும்,

இஸ்லாமும் சூழலும்

"அல்குர்ஆன் மனிதர்களையும், இயற்கையையும் வேறுபிரித்துப் பார்க்கவில்லை. இஸ்லாமிய உலகு மனித நேயத்திற்கு மதிப்பளிப்பது போல் சுற்றுப் புறச்சூழலுக்கும் மதிப்பளித்து, அதன் மகத்தான பொக்கிசங்களைப் பாதுகாக்க

இளவரசர் சார்லஸ்

பிரிட்டன் முடிக்குரிய இளவரசர்

பார்ப்பவனாகவும் இருக்கிறான்." *(அல்குர்ஆன் 04:58)*



மேலும், "'வாருங்கள்! உங்கள் இறைவன் உங்களுக்குத் தடை செய்ததைக் கூறுகிறேன்' என்று (முஹம்மதே!) கூறுவீராக! அது, 'நீங்கள் அல்லாஹ்வுக்கு எதையும் இணையாக்கக் கூடாது' என்பதே. பெற்றோருக்கு உதவுங்கள்! வறுமையின் காரணமாக உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்! உங்களுக்கும், அவர்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். வெட்கக்கேடான காரியங்களில் வெளிப் படையானதையும், இரகசியமானதையும் நெருங்காதீர்கள்! அல்லாஹ் தடை செய்துள்ளதால் எவரையும் (அதற்கான) உரிமை இருந்தால் தவிர கொல்லாதீர்கள்! நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான்.

அனாதையின் செல்வத்தை அவன் பருவமடையும் வரை அழகிய முறையில் தவிர நெருங்காதீர்கள்! அளவையும், நிறுவையையும் நேர்மையாக நிறைவேற்றுங்கள்! எவரையும் அவரது சக்திக்கு மேல் சிரமப்படுத்த மாட்டோம். உறவினராகவே இருந்தாலும் பேசும் போது நீதியையே பேசுங்கள்! அல்லாஹ்வின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுங்கள்! நீங்கள் படிப்பினை பெறுவதற்காக அவன் இதையே உங்களுக்கு வலியுறுத்துகிறான்.

இதுவே எனது நேரான வழி. எனவே இதனையே பின்பற்றுங்கள்! பல வழிகளைப் பின்பற்றாதீர்கள்! அவை, அவனது (ஒரு) வழியை விட்டும் உங்களைப் பிரித்து விடும். நீங்கள் (இறைவனை) அஞ்சுவதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான்." *(அல்குர்ஆன் 06:151-153)*

மேலும், "பூமியில் சீர்திருத்தம் செய்யப்பட்ட பின் அதைச் சீர் கெடுக்காதீர்கள்! அச்சத்துடனும், நம்பிக்கையுடனும் அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்! அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு அருகில் உள்ளது." *(அல்குர்ஆன் 07:56)*

மேலும், "பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! நன்மை செய்தோரின் கூலியை அல்லாஹ் வீணாக்க மாட்டான்." *(அல்குர்ஆன் 11:115)*

மேலும், "உமது கையைக் கழுத்தில் கட்டப்பட்டதாகவும் ஆக்காதீர்! ஒரேயடியாக அதை விரித்தும் விடாதீர்! (அவ்வாறு விரித்தால்) இழிவடைந்தவராக வறுமைப்பட்டு அமர்ந்து விடுவீர்! தான் நாடியோருக்கு உமது இறைவன் செல்வத்தைத் தாராளமாக வழங்குகிறான். குறைத்தும் வழங்குகிறான். அவன் தனது அடியார்களை நன்கறிந்தவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கிறான். வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள்! அவர்களுக்கும், உங்களுக்கும் நாமே உணவளிக்கிறோம். அவர்களைக் கொல்வது பெரிய குற்றமாகும்.

விபச்சாரத்திற்கு நெருங்காதீர்கள்! அது வெட்கக்கேடானதாகவும், தீய வழியாகவும் இருக்கிறது. அல்லாஹ் தடை செய்துள்ள உயிர்க் கொலையை, தக்க காரணமின்றி செய்யாதீர்கள்! அநியாயமாகக் கொல்லப்பட்டோரின் பொறுப்பாளருக்கு அதிகாரம் அளித்துள்ளோம். அவர் கொல்வதற்காக வரம்பு மீறிட வேண்டாம். அவர் உதவி செய்யப்பட்டவராவார். அனாதையின் சொத்தை அவர் பருவமடைவது வரை அழகிய முறையிலேயே தவிர நெருங்காதீர்கள்! வாக்கை நிறைவேற்றுங்கள்! வாக்கு விசாரிக்கப்படும்.

அளக்கும் போது நிறைவாக அளங்கள்! நேரான தராசு கொண்டு எடை போடுங்கள்! இதுவே சிறந்தது. அழகிய முடிவு. உமக்கு அறிவு இல்லாததை

நீர் பின்பற்றாதீர்! செவி, பார்வை, உள்ளம் ஆகிய அனைத்துமே விசாரிக்கப்படுபவை. பூமியில் கர்வத்துடன் நடக்காதீர்! நீர் பூமியைப் பிளந்து, மலைகளின் உயரத்தின் அளவை அடையவே மாட்டீர்! இவை அனைத்தின் கேடும் உமது இறைவனிடம் வெறுக்கப்பட்டதாகும்.. (முஹம்மதே!) இவை, உமது இறைவன் (தனது) ஞானத்திலிருந்து உமக்கு அறிவிப்பவை. அல்லாஹ்வுடன் வேறு கடவுளைக் கற்பனை செய்யாதீர்! (அவ்வாறு செய்தால்) இழிந்தவராகவும், (இறையருளை விட்டும்) தூரமாக்கப்பட்டவராகவும் நரகத்தில் வீசப்படுவீர்!" *(அல்குர்ஆன் 17:29-39)*

மேலும், *"உங்கள் இறைவனிடமிருந்து கிடைக்கும் மன்னிப்பிற்கும், வானங்கள் மற்றும் பூமியின் பரப்பளவு கொண்ட சொர்க்கத்திற்கும் விரையுங்கள்! (இறைவனை) அஞ்சுவோருக்காக அது தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் செழிப்பிலும், வறுமையிலும் (நல் வழியில்) செலவிடுவார்கள். கோபத்தை மென்று விழுங்குவார்கள். மக்களை மன்னிப்பார்கள். நன்மை செய்வோரை அல்லாஹ் நேசிக்கிறான்."* *(அல்குர்ஆன் 03:133-134)*

மேலும், *"நம்பிக்கை கொண்டோரே! ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக் கூடும். எந்தப் பெண்களும் வேறு பெண்களைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக் கூடும். உங்களுக்குள் நீங்கள் குறை கூற வேண்டாம். பட்டப் பெயர்களால் குத்திக் காட்ட வேண்டாம். நம்பிக்கை கொண்ட பின் பாவமான பெயர் (சூட்டுவது) கெட்டது. திருந்திக் கொள்ளாதவர்கள் அநீதி இழைத்தவர்கள்.*

நம்பிக்கை கொண்டோரே! ஊகங்களில் அதிகமானதை விட்டு விலகிக் கொள்ளுங்கள்! சில ஊகங்கள் பாவமாகும். துருவித் துருவி ஆராயாதீர்கள்! உங்களில் ஒருவர் மற்றவரைப் புறம் பேசாதீர்கள்! உங்களில் எவரேனும் இறந்த தமது சகோத ரனின் மாமிசத்தைச் சாப்பிட விரும்புவாரா? அதை வெறுப்பீர்கள். அல்லாஹ்வை அஞ்சுங்கள்! அல்லாஹ் மன்னிப்பை ஏற்பவன்; நிகரற்ற அன்புடையோன்.

மனிதர்களே! உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்தே நாம் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் (இறைவனை) அதிகம் அஞ்சுவோரே அல்லாஹ்விடம் அதிகம் சிறந்தவர். அல்லாஹ் அறிந்தவன்; நன்கறிபவன்." *(அல்குர்ஆன் 49:11-13)*

மேலும், *"என் அருமை மகனே! தொழுகையை நிலை நாட்டு! நன்மையை ஏவு! தீமையைத் தடு! உனக்கு*

ஏற்படுவதைச் சகித்துக் கொள்! அது உறுதி மிக்க காரியமாகும். மனிதர்களை விட்டும் உனது முகத்தைத் திருப்பிக் கொள்ளாதே! பூமியில் கர்வமாக நடக்காதே! கர்வம் கொண்டு பெருமையடிக்கும் எவரையும் அல்லாஹ் விரும்ப மாட்டான். நீ நடக்கும் போது நடுத்தரத்தைக் கடைப் பிடி! உனது குரலைத் தாழ்த்திக் கொள்! குரல்களில் வெறுக்கத்தக்கது கழுதையின் குரலாகும்' (என்றும் அறிவுரை கூறினார்)." *(அல்குர்ஆன் 31:17-19)*

الطريق إلى السعادة
The Path to Happiness

இரக்க குணம் மற்றும் கண்ணியம் போன்றவற்றால் சூழப்பட்ட பாதை

இரக்க குணம் மற்றும் கண்ணியம் போன்றவற்றால் சூழப்பட்ட பாதை

இரக்கம் மற்றும் அருள் நிறைந்த பாதை

கண்ணியம் நிறைந்த பாதை

இரக்க குணம் மற்றும் கண்ணியம் போன்றவற்றால் சூழப்பட்ட பாதை

இரக்கம் மற்றும் அருள் நிறைந்த பாதை

அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள அனைத்து அத்தியாயங்களும் அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் என்னும் அல்லாஹ்வின் பெயர் கொண்டே ஆரம்பமாகின்றன. அவன் அனைவர் மீதும் தனது அருளை கடமையாக்கியுள்ளான். *"அருள் புரிவதைத் தன் மீது உங்கள் இறைவன் கடமையாக்கிக் கொண்டான்."* (அல்குர்ஆன் 06:54)

மேலும், *"எனது அருள், எல்லாப் பொருட்களையும் சூழ்ந்திருக்கிறது."* (அல்குர்ஆன் 07:156)

தனது அருளில் அனைவரும் ஆசை கொள்ள வேண்டுமெனவும், ஆசைவைப்பவர்களுக்கு நன்மாராயங்களையும், நிராசையடைபவர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கின்றான். *"தமக்கு எதிராக வரம்பு மீறிய எனது அடியார்களே! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கையிழந்து விடாதீர்கள்! பாவங்கள் அனைத்தையும் அல்லாஹ் மன்னிப்பான். அவன் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன் என்று (அல்லாஹ் கூறுவதைத்) தெரிவிப்பீராக!"* (அல்குர்ஆன் 39:53)

அவ்வாறே அல்லாஹ் இரக்கக் குணமுடையவன். அடியார்கள் அனைவரும் தன்னிடம் பாவமன்னிப்புக் கோரவேண்டுமென விரும்புபவன். நபி ﷺ அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அல்லாஹ் பகல் பொழுதில் பாவம் செய்பவர்களை மன்னிப்பதற்காக இரவில் தனது கரங்களை விரிக்கின்றான். இரவுப் பொழுதில் பாவம் செய்பவர்களை மன்னிப்பதற்காக பகல் பொழுதில் தன் கரங்களை விரிக்கின்றான். இது சூரியன் மேற்குத் திசையில் உதிக்கும் வரையில் நிகழும். (ஆதாரம்: முஸ்லிம்)

அல்லாஹ் கூறியதாக நபி ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள், : நிச்சயமாக அல்லாஹ் படைப்பினங்களைப் படைப்பதற்கு முன்னரே தனது அருள் கோபத்தை முந்திவிடும் என எழுதிவிட்டான். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

மேலும் அல்லாஹ்வின் அருளைப் பற்றி நபி ﷺ அவர்கள் கூறும் போது, "அல்லாஹ் இரக்கத்தை நூறு பகுதிகளாகப் பிரித்துள்ளான். அதில் தொண்ணூற்றொன்பது பகுதிகளை தன் வசம் வைத்துக்கொண்டு ஒரு பகுதியை இவ்வுலகிற்கு இரக்கியுள்ளான். அதில் ஒன்று தான் படைப்பினங்கள் தங்களுக்கு மத்தியில் அன்பாக நடந்துகொள்வது. ஒரு குதிரை குட்டி ஈனும் போது, அது தன் காலில் பட்டுவிடக் கூடாது என்பதற்காக தன் காலை உயர்த்திக் கொள்வதும் இத்தகைய அன்பில் உள்ளடங்குகின்றது." எனக் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி),

அவ்வாறே நபி ﷺ அவர்களையும் இவ்வுலகிற்கு அருட்கொடையாகவே அல்லாஹ் அனுப்பி வைத்தான். “(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம்.” (அல்குர்ஆன் 21:107)

அல்லாஹ் அவரை உயர்ந்த குணங்கள் மூலம் அழகுபடுத்தியுள்ளான்.

“நீர் மகத்தான குணத்தில் இருக்கிறீர்.” (அல்குர்ஆன் 68:04)

இதனால் தான் அவரின் சிறந்த குணங்களில் ஒன்றாக இரக்கம் இடம்பெற்றது. அவரிடம் இரக்கம் மாத்திரம் இருந்திருக்காவிட்டால் அவரைச் சூழவுள்ளவர்கள் அவரை விட்டும் பிரிந்து சென்றிருப்பர். அல்லாஹ் கூறுகிறான்,

“(முஹம்மதே!) அல்லாஹ்வின் அருள் காரணமாகவே அவர்களிடம் நளினமாக நீர் நடந்து கொள்கிறீர். முரட்டுத்தனம் உடையவராகவும் கடின உள்ளம் உடையவராகவும் நீர் இருந்திருந்தால் அவர்கள் உம்மை விட்டு ஓடியிருப்பார்கள்.” (அல்குர்ஆன் 03:159)

மேலும் நபி ﷺ அவர்கள் பாசமுடையவர், மக்களுக்கு துன்பம் விளைவதை எப்போதும் விரும்பாதவர். அல்லாஹ் கூறுகிறான், “உங்களிடம் உங்களைச் சேர்ந்த தூதர் (முஹம்மத்) வந்துவிட்டார். நீங்கள் சிரமப்படுவது அவருக்குப் பாரமாக இருக்கும். உங்கள் மீது அதிக அக்கறை உள்ளவர். நம்பிக்கை கொண்டோரிடம் பேரன்பும், இரக்கமும் உடையவர்.” (அல்குர்ஆன் 09:128)

எனவே அல்லாஹ்விடமிருந்து வந்த, அகிலத்தாரின் அருட்கொடையாக அனுப்பப்பட்ட முஹம்மத் ﷺ அவர்கள் போதித்த இவ் இனிய மார்க்கம் உலக மக்களை அநியாயம், அட்டூழியம், வெறுப்பு, மூதேவித்தனம், துன்பம், துயரம், பயம், பீதி, மன உளைச்சல் போன்ற அனைத்தை விட்டும் பாதுகாக்கின்றது. ஏனெனில் இப்போதனை குறிப்பிட்ட சமூகத்தினருக்கு மாத்திரமல்லாமல் உலக மக்கள் அனைவருக்குமான மார்க்கமாக விளங்குகின்றது. அல்லாஹ் கூறுகிறான், “(முஹம்மதே!) அகிலத்தாருக்கு அருளாகவே உம்மை அனுப்பியுள்ளோம்” (அல்குர்ஆன் 21:107)

முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்கள், வழிபடுபவர்கள், நெறிபிறல்பவர்கள், சிறியோர், பெரியோர், ஆண், பெண், குழந்தைகள், ஏழை, பணக்காரன் என எவ்வித வித்தியாசங்களுமின்றி அனைத்து மக்களுக்கும் அருளாகவே நபியவர்கள் அல்லாஹ்வால் அனுப்பட்டார்கள்.

இதனால் தான் இஸ்லாம் இரக்கத் தன்மையைத் தேடுமாறு, அதன் பாக்கம் ஆசையூட்டியிருக்கின்றது. அல்லாஹ் கூறுகிறான், “நம்பிக்கை கொண்டு பொறுமையைப் போதித்து இரக்கத்தையும் போதித்தோரில் இணைதல் (இவைகளே கணவாய்).” (அல்குர்ஆன் 90:17)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "மனிதர்களுக்கு இரக்கம் காட்டாதவர்களுக்கு அல்லாஹ் இரக்கம் காட்ட மாட்டான்." (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

இரக்கம் காட்டுபவர்களுக்கு அருளாளன் "இரக்கம் காட்டுகின்றான். எனவே உலகில் உள்ளவர்களுக்கு இரக்கம் காட்டுங்கள், வானிலிருப்பவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான். இரக்கம் என்பது அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப்பெற்ற இணைப்பாகும். யார் அதனை சேர்த்துக்கொள்கிறாரோ அல்லாஹ் அவரை சேர்த்துக்கொள்கிறான். யார் அதனை துண்டித்துக்கொள்கிறாரோ அல்லாஹ்வும் அவரைத் துண்டித்துவிடுகிறான்." (ஆதாரம்: திர்மிதி)

"முதேவியிடமிருந்து தான் இரக்கம் பறித்துக்கொள்ளப்படும்" (ஆதாரம்: திர்மிதி)

இரக்கமாக நடந்துகொள்ளுமாறு அல்லாஹ் அனைவருக்கும் பொதுப்படையாகத் தான் கூறியிருக்கின்றான். அதை உறுதிசெய்வதற்காக சில வழிவகைகளையும் செய்துள்ளான். அவற்றில் சில பின்வருமாறு:

1- பொதுவாக மனிதர்கள் மீது இரக்கம் காட்டுதல்: நபி ﷺ அவர்கள் தனது சமூகத்தின் மீது இரக்கமாக நடந்துள்ளார்கள். இறைநிராகரிப்பில் இருந்து இஸ்லாத்தின் பக்கமும், தீய குணங்களை விட்டு நற்குணங்களின் பக்கமும் அவர்களை வழிநடாத்தியுள்ளார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் என்று கூடப் பார்க்காமல் இறை நிராகரிப்பாளர்களுடனும் இரக்கமாக நடந்துகொண்டுள்ளார்கள். மக்கா காபிர்களைப் பார்த்து நபியவர்கள், "... உங்கள் வம்சாவழியிலிருந்து அல்லாஹ்வை மாத்திரம் வணங்கி, அவனுக்கு இணை கற்பிக்காதவர்களை அல்லாஹ் வெளியாக்க வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன். " என்று கூறினார்கள் (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

உஹது யுத்தத்தில் நபி ﷺ அவர்களுக்கு காயம் ஏற்பட்ட போது காபிர்களுக்கு எதிராக அல்லாஹ்விடம் பிரார்த்திக்குமாறு ஸஹாபாக்கள் வேண்டிக்கொண்டார்கள். அதற்கு நபியவர்கள், "இறைவா எதையும் அறியாதவர்களாய் இருக்கும் எனது சமூகத்திற்கு நேர்வழிகாட்டுவாயாக" எனக் கூறினார்கள். மற்றொரு அறிவிப்பில், அல்லாஹ்வின் தூதரே இணைவைப்பவர்களுக்கு எதிராக பிரார்த்தியுங்கள் எனக் கூறப்பட்டது. அதற்கு நபியவர்கள், நான் பிறருக்கு சாபம் விடுவதற்கு அனுப்பப்படவில்லை. பிறர் மீது இரக்கமாக நடந்துகொள்ளவே அனுப்பப்பட்டுள்ளேன்" எனக் கூறினார்கள். (ஆதாரம்:முஸ்லிம்)

2- சிறுவர்கள் மீது இரக்கம் காட்டுதல்: நபி ﷺ அவர்களின் தோழர்களில் ஒருவர் குறிப்பிடுகிறார்: "நாங்கள் நபியவர்களுடன் இப்றாஹீமிடத்தில் நுழைந்தோம். அப்போது நபியவர்களின் இரு கண்களும் கலங்கிவிட்டன. அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் ௨ அவர்கள் நபியவர்களைப் பார்த்து, அல்லாஹ்வின் தூதரே நீங்களுமா? எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள், அவ்பின் மகனே இது இரக்கத்தினால் தான். பின்னர் கூறினார்கள், கண்கள் கலங்குகின்றன. உள்ளம் கவலைகொள்கின்றது. அல்லாஹ் பொருந்திக்கொண்டதைப் பற்றி நாம் பேசுவோம். இப்றாஹீமே உம் பிரிவினால் நாம் கவலைகொள்கிறோம்." எனக் கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

நபியவர்கள் உஸாமாவை தனது ஒரு தொடையிலும், ஹஸனை இன்னொரு தொடையிலும் வைத்து, அவர்கள் இருவரையும் சேர்த்த வண்ணம் பின்வருமாறு கூறினார்கள், "இவர்கள் இருவர் மீது நான் இரக்கமாய் இருக்கின்றேன். இறைவா நீயும் இவர்கள் இருவர் மீதும் இரக்கம் காட்டுவாயாக." ஒரு மனிதர்



நபியவர்களிடம் நுழைந்த போது அவர் ஹஸன் மற்றும் ஹுஸைன் ؓ அவர்களை முத்தமிட்டவண்ணம் இருந்தார். அப்போது அம்மனிதர் நபியவர்களைப் பார்த்து, "நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு முத்தம் கொடுக்கின்றீர்களா? என்னிடமோ 10 குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களில் ஒருவரையும் ஒருபோதும் நான் முத்தமிட்டதில்லை" எனக் கூறினார். அதற்கு நபியவர்கள், "யார் இரக்கம் காட்டவில்லையோ அவர் இரக்கம்காட்டப்படமாட்டார்" எனக் கூறினார்கள்.

3- பலவீனமானவர்களுடன் இரக்கமாக நடந்துகொள்ளல்: பள்ளிவாயிலை சுத்தம் செய்து வந்த கறுப்பு நிற பெண்மணியை நபியவர்கள் காணவில்லை. இது பற்றி விசாரித்த போது, அவள் இறந்துவிட்டதாகக் கூறினார்கள். அப்போது நபியவர்கள், "இது பற்றி நீங்கள் எனக்கு அறிவித்திருக்கக் கூடாது? அவளின் கப்ரைக் காட்டுங்கள்" எனக் கூறவே, அவளின் கப்ர் காட்டப்பட்டது. அப்பெண்மணிக்காக அதில் தொழுகை நடத்தினார்கள். (ஆதாரம்: புஹாரி, முஸ்லிம்)

நபியவர்களின் ஊழியன் அனஸ் பின் மாலிக் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள், "நபியவர்களுக்கு நான் 10 வருடங்கள் ஊழியம் செய்துள்ளேன். அதில் ஒரு தடவையேனும் "சீ" என்ற வார்த்தை எனக்குக் கூறியதில்லை. இக்காரியத்தை ஏன் செய்யவில்லை என்று கூடக் கேட்டதில்லை" (ஆதாரம்: புஹாரி)

இப்னு மஸ்ஊத் ؓ அவர்கள் அறிவிக்கிறார்கள், "நான் எனக்குச் சொந்தமான ஓர் சிறுவனை அடித்துக் கொண்டிருந்தேன். அப்போது எனக்குப் பின்னால் இருந்து, "அபூ மஸ்ஊதே அறிந்துகொள். நீ அவனை தண்டிப்பதை விட உன்னை தண்டிக்க அல்லாஹ் தகுதியுடையவன்" என ஒரு சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்த போது நபியவர்கள் இருந்தார்கள். அப்போது நான், "அல்லாஹ்வின் தூதரே, அல்லாஹ்வின் திருமுகத்தை நாடி நான் இவனை விடுதலை செய்கிறேன்" எனக் கூறவே, "நீ இவ்வாறு செய்திராவிட்டால் நரக நெருப்பு நிச்சயம் உன்னைத் தீண்டியிருக்கும்" எனக் கூறினார்கள்." (ஆதாரம்: முஸ்லிம்)

4- கால்நடைகளோடு இரக்கமாக நடந்துகொள்ளல்: ஒரு முறை நபி ﷺ அவர்கள் ஓர் ஒட்டகத்தைக் கடந்து செல்லும் போது, அதன் வயிறு, முதுகுடன் ஒட்டியிருப்பதைக் கண்டார்கள். அப்போது, "வாய்பேச முடியாத இக் கால்நடைகள்

விசயத்தில் அல்லாஹ்வைப் பயந்துகொள்ளுங்கள். அது சுகதேகிகளாக இருக்கும் போது அதன் மீது பயணம் செய்யுங்கள். சுகதேகிகளாக இருக்கும் போது அறுத்துச் சாப்பிடுங்கள்" எனக் கூறினார்கள் (ஆதாரம்: அபூதாவுத்)

அன்ஸாரிகளில் ஒருவருக்குச் சொந்தமான சுவர் அருகில் நபியவர்கள் வந்த போது, ஓர் ஒட்டகத்தைக் கண்டார்கள். அது நபியவர்களைக் கண்டவுடன் கனைத்தது. அதன் இரு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடியது. நபியவர்கள் அதன் அருகில் சென்று, இரு கண்களின் கண்ணீரையும் துடைத்ததும் அமைதியானது. அப்போது நபியவர்கள், இந்த ஒட்டகத்திற்குச் சொந்தக்காரர் யார்? எனக் கேட்கவே அன்ஸாரிகளிலிருந்து ஓர் வாலிபர் வந்து, "அல்லாஹ்வின் தூதரே, அது என்னுடையது" எனக் கூறினார். அப்போது நபியவர்கள், "அல்லாஹ் உனக்கு சொந்தமாக வழங்கிய இக் கால்நடையின் விடயத்தில் நீ அல்லாஹ்வைப் பயந்துகொள்ளக் கூடாதா? நீ அதற்கு உணவு கொடுக்காமல் பட்டினி போடுவதாக அது என்னிடம் முறையிடுகின்றது" எனக் கூறினார்கள். (ஆதாரம்: அபூதாவுத்)

இவை நபியவர்களின் தூதுத்துவத்தில் இருக்கும் மிக சொற்பமான உதாரணங்கள். இஸ்லாத்தன் மகிமையை வெளிப்படுத்தும் உதாரணங்கள் இதை விட இன்னும்

அமைதி, நிம்மதி, பாதுகாப்பு

"முஸ்லிம்களின் தொழுகையில் அவர்கள் மேற்கொள்ளும் ருக்கூ, ஸுஜூத் என்னும் இரு நிலைகள் அவர்களிடம் அமைதி, நிம்மதி, பாதுகாப்பு போன்றவற்றை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் அவர்கள் தொழுகையை 'அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்'

லாரன் பூத்
பிரிட்டிஷ் மனித உரிமை



கண்ணியம் நிறைந்த பாதை

அல்லாஹ் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் படைக்கும் போது, மலக்குமார்களுக்கு அவரை ஸுஜூது செய்யுமாறு ஏவினான். "உங்களைப் படைத்தோம். பின்னர் உங்களை வடிவமைத்தோம். பின்னர் ''ஆதமுக்குப் பணியுங்கள்!'' என்று வானவர்களுக்குக் கூறினோம். இப்லீஸைத் தவிர அனைவரும் பணிந்தனர். அவன் பணிந்தவர்களில் ஒருவனாக இல்லை." (அல்குர்ஆன் 07:11)

அல்லாஹ் மனிதனைப் படைத்து, அவனை தனது ஏனைய படைப்பினங்களை விடவும் கண்ணியப்படுத்தியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான், "ஆதமுடைய மக்களை மேன்மைப்படுத்தினோம். அவர்களைத் தரையிலும், கடலிலும் சுமந்து செல்ல வைத்தோம். தூய்மையானவற்றை அவர்களுக்கு வழங்கினோம். நாம் படைத்த அதிகமான படைப்புகளை விட அவர்களைச் சிறப்பித்தோம்." (அல்குர்ஆன் 17:70)

மனிதன் படைக்கப்பட்டது முதலே அல்லாஹ்வால் கண்ணியப்படுத்தப்பட்டு விட்டான். அல்லாஹ் மனிதர்களை பின்வரும் விதங்களில் கண்ணியப்படுத்தியுள்ளான்:

1- மனிதப் படைப்பே கண்ணியமிக்கது. "மனிதனை அழகிய வடிவில் படைத்தோம்." (அல்குர்ஆன் 95:04)

அவனுக்கு அழகான உடலமைப்பு வழங்கப்பட்டுள்ளது. சிந்தனைத் திறன், பகுத்தறிவு போன்றன வழங்கப்பட்டுள்ளன. பேசும் திறன், சிந்தித்து செயலாற்றும் திறன் போன்ற அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் இதர படைப்பினங்களை விட அழகான அமைப்பையே மனிதன் பெற்றுள்ளான்.

2- மனிதனுக்கு நீர், நிலம் போன்றன வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன: இதனுள் ஆகாயமும் உள்ளடங்கும். இதுவும் மனிதன் கண்ணியப்படுத்தப்பட்ட விதங்களுள் ஒன்றாகும். ஏனெனில் அல்லாஹ் இவையனைத்தையும் மனிதனுக்காகவே சொந்தமாக்கிக் கொடுத்துள்ளான். அவனுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்துப் படைப்பினங்களுக்கும் அவனே தலைவன் போல் கருதப்படுகிறான். அவனைத் தவிர மற்ற அனைத்துமே இவனுக்கு இசைவாக்கமடைந்தே இருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான், "ஆதமுடைய மக்களை மேன்மைப்படுத்தினோம். அவர்களைத் தரையிலும், கடலிலும் சுமந்து செல்ல வைத்தோம்." (அல்குர்ஆன் 17:70)

மாறாக வானம் மற்றும் பூமியிலுள்ள அனைத்தும் இவனுக்கே வசப்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. "வானங்களில் உள்ளவை, பூமியில் உள்ளவை அனைத்தையும் அவன் உங்க ளுக்குப் பயன்படச் செய்தான். சிந்திக்கும் சமுதாயத்திற்கு இதில் பல சான்றுகள் உள்ளன." (அல்குர்ஆன் 45:13)

3- சிறந்த உணவுகள்: அல்லாஹ் மனிதனுக்கு சிறந்த உணவுகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளான். அதில் தனக்குப் பயன் பெறும் உணவுகளையே மனிதன் தேர்ந்தெடுத்து, அவற்றில் விதவிதமான வகைகளை தமது நடைமுறை வாழ்வோடு இணைத்துக்கொண்டுள்ளான். இதுவும் மனிதனை ஏனைய படைப்பினங்களிலிருந்து தனித்துவப்படுத்திக் காட்டுகின்றன. அல்லாஹ் கூறுகிறான், "அவனே பூமியை உங்களுக்கு விரிப்பாகவும், வானத்தை முகடாகவும் அமைத்தான். வானிலிருந்து தண்ணீரையும் இறக்கினான். அதன் மூலம் கனிகளை உங்களுக்கு உணவாக (பூமியிலிருந்து) வெளிப்படுத்தினான். எனவே அறிந்து கொண்டே அல்லாஹ்வுக்கு நிகராக எவரையும் கற்பனை செய்யாதீர்கள்!" (அலாகுர்ஆன் 02:22)

4- அதிகமான படைப்பினங்களை விட தான் சிறந்து விளங்குதல்.

இவ் இஸ்லாமியப் பாதையில் மனிதன் தனது கண்ணியத்தையும், அந்தஸ்த்தையும், இறைவனின் நன்மதிப்பிலிருந்து கிடைக்கப்பெற்ற அளவுகோலையும் உணர முடிகின்றது. மனிதனை உயிர்ப்பிராணிகள் வாழும் இவ்வுலகின் பார்வையில் சிறிய உயிரணுவாகக் கருத முடியாது. அற்பமாக இருக்கும் சிறுசிறு அணுக்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தான் இப் பூமியே உருவாகி இருக்கினறது. அவ்வாறு இருக்கும் இப்பூமியை இல்லாமல் செய்திட ஓர் அணுகுண்டால் முடியும். எனவே இஸ்லாத்தின் பார்வையில் மனிதனின் அளவுகோல் இறைவனின் நன்மதிப்பில் இருந்து தான் பெற முடிகின்றது. ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஆரம்பப் படைப்பைப் பற்றி அல்குர்ஆன் குறிப்பிடும்

போது, அவருக்கு ஸுஜூது செய்யாத இப்லீஸை அல்லாஹ் விரட்டிவிட்டான். எனவே இவ்வாறான நிலைப்பாட்டின் மூலம் மனிதனின் கௌரவமும் இவ்வுலகில் கட்டாயம் நிலை பெற வேண்டுமென நாம் அறிந்துகொள்ள முடியும். ஆனால் தற்போது கௌரவமாக வாழவேண்டிய மனிதன் நெருக்கடி மிக்க வாழ்வையே தேர்ந்தெடுத்து, அதில் தன்னை அரசனாகவும், பிற மனிதர்களை பணியாட்களாகவும் வைத்து ஆட்சி நடாத்த முற்படுகிறான். அவ்வாறல்ல. மனிதனின் கண்ணியமும், கௌரவமும் எச்சந்தர்ப்பத்திலும் பாதுகாக்கப்படல் வேண்டும். அதற்கு இஸ்லாம் மாத்திரமே வழிவகைகளை செய்து தருகின்றது.

இத்தகைய மனித கௌரவத்தைக் காக்கின்ற இஸ்லாமிய பாதை ஒருவர் மற்றவரை இழிவாக நோக்குவதையோ, கேவலமாகப் பார்ப்பதையோ, பிறரை விட தன்னை உயர்ந்தவனாக எண்ணி பெருமைப் படுவதையோ எப்போதும் ஆமோதிப்பதில்லை. அல்லாஹ் கூறுகிறான், "நம்பிக்கை கொண்டோரே! ஒரு சமுதாயம் இன்னொரு சமுதாயத்தைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக் கூடும். எந்தப் பெண்களும் வேறு பெண்களைக் கேலி செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தோராக இருக்கக் கூடும். உங்களுக்குள் நீங்கள் குறை கூற வேண்டாம். பட்டப் பெயர்களால் குத்திக் காட்ட வேண்டாம். நம்பிக்கை கொண்ட பின் பாவமான பெயர் (சூட்டுவது) கெட்டது. திருந்திக் கொள்ளாதவர்கள் அநீதி இழைத்தவர்கள்." (அல்குர்ஆன் 49:11)

இங்கு கறுப்பர்களை விட வெள்ளையர்களுக்கோ, மஞ்சல் நிறத்தோரை விட சென்னிறத்தினர்களுக்கோ, அறபியல்லாதவர்களை விட அறபியர்களுக்கோ, ஓர் இனத்தை விட இன்னோர் இனத்திற்கோ, ஓர் பிரதேசத்தை விட இன்னோர் பிரதேசத்திற்கோ, ஏழையை விட பணக்காரனுக்கோ கண்ணியமும், சிறப்பும் கிடையாது. மாறாக இவர்கள் அனைவரிலும் யார் அல்லாஹ்வை அஞ்சுகின்றனரோ அவர்களுக்கே அல்லாஹ்விடத்தில் மதிப்பும், மரியாதையும் இருக்கின்றது. அல்லாஹ் கூறிகிறான், "மனிதர்களே! உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்தே நாம் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் (இறைவனை) அதிகம் அஞ்சுவோரே அல்லாஹ்விடம் அதிகம் சிறந்தவர். அல்லாஹ் அறிந்தவன்; நன்கறிபவன்." (அல்குர்ஆன் 49:13)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "அல்லாஹ் உங்கள் தோற்றங்களையோ, உங்கள் சொத்து செல்வங்களையோ பார்பதில்லை. உங்கள் உள்ளங்களையும், செயற்பாடுகளையுமே பார்க்கிறான்" (ஆதாரம்: முஸ்லிம்)

இதனால் தான் ஓர் மனிதன் எவ்வளவு அதிகமாக இவ்வழியில் பயணிக்க எத்தணிக்கின்றானோ அந்த அளவிற்கு அவனின் மதிப்பை அவனால் பெறமுடிகின்றது. "யாரேனும் கண்ணியத்தை



நாடினால் கண்ணியம் யாவும் அல்லாஹ்வுக்கே உரியது." (அல்குர்ஆன் 35:10)

அவ்வாறே இப் பாதையை விட்டும் எவ்வளவுக்கெவ்வளவு தூரமாகி விடுகின்றானோ, அந்த அளவுக்கு இழிவையும் பெற்றுக்கொள்கின்றான். அல்லாஹ் கூறுகின்றான், "'வானங்களில் உள்ளோரும், பூமியில் உள்ளோரும், சூரியனும், சந்திரனும், நட்சத் திரங்களும், மலைகளும், மரங்களும், உயிரி னங்களும், மற்றும் மனிதர்களில் அதிகமா னோரும் அல்லாஹ்வுக்குப் பணிகின்றனர்' என்பதை நீர் அறியவில்லையா? இன்னும் அதிகமானோர் மீது வேதனை உறுதியாகி விட்டது. அல்லாஹ் இழிவுபடுத்தி விட்டவ னுக்கு மதிப்பை ஏற்படுத்துபவன் இல்லை. அல்லாஹ் நாடியதைச் செய்வான்" (அல்குர்ஆன் 22:18)

அல்லாஹ் மனிதர்களை கண்ணியப்படுத்தியும் கூட அதிகமானவர்கள் இழிவான பாதையையே தமது பாதையாகத் தேர்வுசெய்து கொள்கின்றனர். "அல்லாஹ் இழிவுபடுத்தி விட்டவ னுக்கு மதிப்பை ஏற்படுத்துபவன் இல்லை" (அல்குர்ஆன் 22:18)

இத்தகையவர்கள் பிறமனிதர்களை மிருகங்கள் போலும், செவிட்டு இயந்திரங்கள் போலுமே நோக்குகின்றனர். அல்லாஹ் அவர்களை கண்ணியப்படுத்தியிருப்பதை கொஞ்சம் கூட சிந்தித்தும் பார்ப்பதில்லை.

மனிதன் மனிதனாக நடந்துகொள்ளும் போது தான் அவனுக்கு மதிப்பு ஏற்படுகின்றது. இஸ்லாம் ஆண், பெண் இருபாலாருக்கும் மத்தியில் கலவரத்தைத் தூண்டுவதில்லை. பெண்ணுக்கெதிராக ஆணை தூண்டுவதோ, ஆணுக்கெதிராக பெண்ணைத் தூண்டுவதோ இஸ்லாத்தில் கிடையாது. இவர்கள் இரு இனத்தாரையும் அல்லாஹ் ஒரே ஆண்மாவிலிருந்தே படைத்துள்ளான், அல்லாஹ் கூறுகிறான், "மனிதர்களே! உங்களை ஒரே ஒருவரிலிருந்து படைத்த உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! அவரிலிருந்து அவரது துணையைப் படைத்தான். அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆண்களையும், பெண்களையும் பல்கிப் பெருகச் செய்தான். எவனை முன்னிறுத்தி ஒருவரிடம் மற்றவர்கள் கோரிக்கை வைப்பீர்களோ அந்த அல்லாஹ்வை அஞ்சுங்கள்! உறவினர்கள் விஷயத்திலும் (அஞ்சுங்கள்!) அல்லாஹ் உங்களைக் கண்காணிப்பவனாக இருக்கிறான்." (அல்குர்ஆன் 04:01)

யார் கண்ணியத்தையும், கௌரவத்தையும் விரும்புகின்றாரோ, அவர் கண்ணியம் பொருந்திய இவ் இஸ்லாமிய பாதையை பற்றிப் பிடித்துக்கொள்ளட்டும். "கண்ணியம்

பசித்தவர்கள் ஒரு போதும் இருக்க மாட்டார்கள்

"ஸக்காத் என்னும் வரியை மார்க்க அடிப்படையில் சேகரிக்கும் மார்க்கமாக இஸ்லாத்தைத் தவிர வேறு எம் மார்க்கத்தையும் நான் பார்த்ததில்லை. ஸக்காத் சரியான முறையில் சேகரிக்கப்பட்டு, விநியோகிக்கப்படும் இஸ்லாமிய சமூகத்தில் பசி, பட்டினி போன்ற எதுவும் ஏற்படுவதில்லை. இதையே முழு உலகும் பின்பற்றுமானால் இன்று உலகில் பஞ்சத்தில்

புரேஷோ பனகமார்ட்டீ

புத்த மதத்திலிருந்து இஸ்லாத்திற்கு மாறிய தாய்லாந்திய அமைப்பு

الطريق إلى السعادة
The Path to Happiness



மகிழ்ச்சிக்கான பாதையின் இறுதி வாயில்.

மகிழ்ச்சிக்கான பாதையின் இறுதி வாயில்.

மகிழ்ச்சியைத் தேடிச் செல்பவரே!!

இது தான் ஏற்ற பாதை...

மகிழ்ச்சிக்கான பாதையின் இறுதி வாயில்.

மகிழ்ச்சியைத் தேடிச் செல்பவரே!!

நீ இவ்வுலகிற்கு வருவதற்கு முன்னர் எந்தப் பொருளாகவும் நீ இருக்கவில்லை. "'முன்னர் எந்தப் பொருளாகவும் இல்லாதிருந்த நிலையில் அவனைப் படைத்தோம்' என்பதை மனிதன் சிந்திக்க வேண்டாமா?" (அல்குர்ஆன் 19:67)

பின்னர் அல்லாஹ் உன்னை மண்ணிலிருந்தும், இந்திரியத்துளியிலிருந்தும் படைத்து, உனக்கு பார்க்கும் திறனையும், கேட்கும் திறனையும் வழங்கினான். "குறிப்பிட்டுச் சொல்லப்படும் ஒரு பொருளாக (கூட) இல்லாத ஒரு காலம் மனிதனுக்கு இருந்ததில்லையா? மனிதனைச் சோதிப்பதற்காக கலப்பு விந்துத் துளியிலிருந்து அவனை நாம் படைத்தோம். அவனைக் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் ஆக்கினோம்." (அல்குர்ஆன் 76:01-02)

பின்னர் படிப்படியாக உன்னை பலவீனத்திலிருந்து, பலசாலியாக மாற்றி, மீண்டும் பலகீனமான நிலைக்கே உன்னை ஆக்கிவிடுகின்றான். "பலவீனமான நிலையில் உங்களை அல்லாஹ் படைத்தான். பின்னர் பலவீனத் திற்குப் பின் பலத்தை ஏற்படுத்தினான். பின்னர் பலத்துக்குப் பின் பலவீனத்தையும், நரையையும் ஏற்படுத்தினான். அவன் நாடியதைப் படைப்பான். அவன் அறிந்தவன்; ஆற்றலுடையவன்." (அல்குர்ஆன் 30:54)

பின்னர் உனக்கு மரணம் என்ற ஓர் முடிவு நிச்சயம் ஏற்படும்.

நீ இறுதிக் கட்டத்தை அடையும் போது, மேலும் மேலும் உனக்கு பலவீனம் ஏற்படும். அச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ்வின் உதவியைத் தவிர வேறு எவரின் உதவியைக்கொண்டும் உனக்கு ஏற்படும் ஓர் தீமையை உன்னால் தடுத்து நிறுத்த முடியாது. உனக்காக ஓர் நன்மையை உன்னால் செய்துகொள்ள முடியாது. நீ ஏதோ ஒன்றின் பக்கம் எப்போதும் தேவையுள்ளவனாகவே இருக்கிறாய். உன் இருப்பை இவ்வுலகில் நிலை நிறுத்துவதற்காய் உன்னிடம் இருக்கும் அம்சங்களை விட எத்தனையோ விடயங்கள் உனக்கு தேவைப்படுகின்றன. அவை அனைத்தும் ஒரு முறை உனக்கு கிடைத்துவிடுகின்றன. மறு தடவை உனக்கு கிடைக்காமலே போகின்றன. உனக்கு செழிப்பைத் தரும் எத்தனையோ விடயங்களை அடைந்து

கொள்ள நீ முயற்சி செய்தும், சில பொழுதுகளில் அவற்றை வெற்றி கொண்டு, பல தடவைகள் அவற்றை அடைவதில் தோல்வி காண்கின்றாய். உனக்கு கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்தும் எத்தனையோ அம்சங்கள் உனக்கு ஏற்பட்ட போதிலும், அதிலிருந்து விடுபடுவதற்காய் பல போராட்டங்களை செய்தும், சில சமயம் தடுத்துக் கொள்கிறாய். பல தடவைகள் தடுத்துக்கொள்ள முடியாமல் திணறுகிறாய். இப்படி உன்னால் செய்துகொள்ள முடியால் பிறரின் உதவியை நாடும் எண்ணிலடங்கா செயற்பாடுகள் உன்னிடம் இருக்கின்றன. இவையனைத்தையும் தேவைகள் நிறைய உள்ள பிறரிடம் கேட்பதை விட ஏன் நீ எவ்விதத் தேவையுமற்ற அல்லாஹ்விடம் ஒப்படைக்கக்கூடாது?! அல்லாஹ் கூறுகிறான். "மனிதர்களே! நீங்கள் அல்லாஹ் விடம் தேவையுடையவர்கள். அல்லாஹ்வே தேவையற்றவன்; புகழுக்குரியவன்." *(அல்குர்ஆன் 35:15)*

உன் உடம்பில் கண்ணுக்குப் புலப்படாத ஓர் நோய்க்கிருமி தொற்றி, உனக்கு நோய் ஏற்பட்டால், உன்னைப் போன்ற பலகீனமான மனிதரிடம் தான் அதற்கான சிகிச்சையைப் பெற செல்கின்றாய். அதுவும் சில சமயங்களில் தான் அவரால் மருந்து மாத்திரைகளைக் கொடுத்து, உன்னைக் காப்பாற்ற முடிகின்றது. ஆனால் பல சமயங்களில் அவரால் கூட உன்னைக் காப்பாற்ற முடிவதில்லை. நீ எவ்வளவு பலகீனமானவன்??!!! சாதாரண ஈ உன்னிடமிருந்து ஏதாவது ஒன்றை பறித்துக்கொண்டு சென்றால் கூட அதைக் கூட அதனிடமிருந்து உன்னால் மீட்டெடுக்க முடியாது. அல்லாஹ் கூறுகிறான், "மனிதர்களே! உங்களுக்கு ஓர் உதாரணம் கூறப்படுகிறது. அதைக் கவனமாகக் கேளுங்கள்! அல்லாஹ்வையன்றி நீங்கள் யாரை அழைக்கிறீர்களோ அவர்கள் அனைவரும் ஒன்று திரண்டாலும் ஓர் ஈயைக் கூட படைக்க முடியாது. ஈ அவர்களிடமிருந்து எதையேனும் பறித்துக் கொண்டால் அதை அந்த ஈயிடமிருந்து அவர்களால் மீட்க முடியாது. தேடுவோனும், தேடப்படு வோனும் பலவீனமாக இருக்கிறார்கள்." *(அல்குர்ஆன் 22:73)*

ஓர் அற்பமான ஈ உன்னிடமிருந்து பறித்துச் செல்லும் பொருளையே உன்னால்

மீட்டெடுக்க முடியவில்லையென்றால் உன் ஏனைய அம்சங்களை உன்னால் எவ்வாறு சொந்தம் கொண்டாட முடியும்? உன் முன்னெற்றி ரோமம் அல்லாஹ்வின் கையில் உள்ளது. உனது உயிரும் அவனின் கைவசமே இருக்கின்றது. உன் உள்ளம் அவனின் இரு விரல்களுக்கு மத்தியில் இருக்கின்றது. அவன் நாடியவாறு அதை திருப்புகிறான். உன் வாழ்வு, மரணம், சந்தோசம், சீரழிவு, உன் அங்க அசைவுகள், பேச்சுக்கள், சிந்தனைகள் போன்ற அனைத்தும் அவன் நாட்டப்படியே நடக்கின்றன. அவனின் அனுமதியின்றி உன்னால் ஒரு சாண் கூட நகர முடியாது. அவனின் நாட்டமின்றி உன்னால் எக்காரியத்தையும் செய்திட முடியாது. உன்னை அவன் உன்னிடமே ஒப்படைத்திருந்தால் நீ பலகீனமானவனாய் மாறி, பாவங்களில் மூழ்கி, அநீதம், அட்டூழியம் போன்றவற்றை உன் இச்சைப்படி செய்திட முனைந்திருப்பாய். உன்னை நீ அல்லாத பிறரிடம் ஒப்படைத்திருந்தால் உனக்கு எவ்வித நன்மையையோ, தீமையையோ ஏற்படுத்துவதற்கு முடியாத ஒருவனிடம் ஒப்படைத்ததாய் எண்ணி கைசேதப்பட்டிருப்பாய். அதனால் தான் உன்னைப் பத்திரமாய் பார்த்துக்கொள்ளும் பொறுப்பை வல்ல நாயன் அல்லாஹ் பொறுப்பேற்றுள்ளான். அவனை விட்டும் உன்னால் கண் இமைக்கும் நேரம் கூட தேவையற்று இருக்க முடியாது. உன் மூச்சுக்காற்று இருக்கும் வரை நீ அவன் பக்கம் தேவை காணும் ஓர் நிர்ப்பந்த வாழ்வையே வாழ்ந்துகொண்டிருக்கின்றாய். உனக்கு அவன் தனது அருட்கொடைகளை விசாலமாக தந்துதவுகின்றான். ஆனால் நீயோ அவனுக்கு நன்றி மறந்து, அவனை கோபமூட்டும் செயற்பாடுகளில் மும்முரமாய் ஈடுபட்டு வருகின்றாய். அவனிடம் தான் நீ போய்ச் சேர இருக்கின்றாய் என்பதை மறந்து, சர்வ சாதாரணமாக இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றாய்.

நீ அவனை எவ்வளவு தான் வெறுத்தொதுக்கினாலும் உன் பலகீனத்தை அவன் அறிந்தே வைத்துள்ளான். அவன் கருணையுள்ளவன். "அல்லாஹ் உங்களுக்கு (சட்டங்களை) எளிதாக்கவே விரும்புகிறான். (ஏனெனில்) மனிதன் பலவீனனாகப் படைக்கப்பட்டுள்ளான்." (அல்குர்ஆன் 04:28)

பல தூதுவர்களை இவ்வுலகிற்கு அனுப்பி, பல வேதங்களை இறக்கி, உன் முன்னால் நேரான பாதையைக் காட்டி, அல்லாஹ்வின் ஏகத்துவத்தையும், பரிபாலணக்

கோட்பாட்டையும், இறைக் கோட்பாட்டையும் நிரூபிக்கும் வகையில் பல அத்தாட்சிகளையும், ஆதாரங்களையும் அல்லாஹ் காண்பித்தான். இவையனைத்தும் இருந்தும் மனிதர்களில் சிலர் பொய்யான அம்சங்கள் மூலம் உண்மையை மறைத்து, ஷைத்தானின் வலையில் விழுந்து, அல்லாஹ் அல்லாதவர்களை கடவுள்களாகவும், நேசர்களாகவும் எடுத்துக்கொள்கின்றனர். பொய்யான விவாதங்களிலும், குதர்க்கங்களிலும் ஈடுபடுகின்றனர். *"மனிதர்களுக்காக இக்குர்ஆனில் ஒவ்வொரு முன்மாதிரியையும் தெளிவுபடுத்தியுள்ளோம். மனிதன் அதிகம் தர்க்கம் செய்பவனாகவுள்ளான்.."* *(அல்குர்ஆன் 18:54)*

அளவுக்கு அதிகமான ஆசாபாசங்களும், சொகுசுகளும் உன் ஆரம்பத்தையும், முடிவையும் மறக்கடிக்கச் செய்துவிட்டனவா? நீ ஓர் இந்திரியத் துளியிலிருந்து ஆரம்பமாக படைக்கப்பட்டாய். முடிவில் மண்ணறையினுள் நுழைய இருக்கின்றாய். அதன் பின்னர் உனது மறுமை வாழ்வுக்காய் எழுப்பப்பட்டு சொர்க்கத்தின் பக்கமோ, நரகத்தின் பக்கமோ செல்ல இருக்கின்றாய் மனிதா! *"மனிதனை விந்துத் துளியிலிருந்து படைத்தோம் என்பதை அவன் பார்க்கவில்லையா? அவனோ பகிரங்கமாக எதிர் வாதம் புரிகிறான். அவன் நமக்கு உதாரணம் கூறுகிறான். அவனை (நாம்) படைத்திருப்பதை மறந்து விட்டான். 'எலும்புகள் மக்கிய நிலையில் அதை உயிர்ப்பிப்பவன் யார்?' என்று கேட்கிறான். முதல் தடவை இதை யார் படைத்தானோ அவன் இதை உயிர்ப்பிப்பான். அவன் ஒவ்வொரு படைப்பையும் அறிந்தவன்' என்று கூறுவீராக!"* *(அல்குர்ஆன் 36:77-79)*

மேலும், *"மனிதனே! மரியாதைக்குரிய உனது இறைவன் விஷயத்தில் உன்னை ஏமாற்றியது எது? அவனே உன்னைப் படைத்து, உன்னைச் சீராக்கி, உன்னைச் செம்மைப்படுத்தினான்."* *(அல்குர்ஆன் 82:06-07)*

அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவதில் இருக்கும் சுகத்தை ஏன் உன் மீதே நீ தடுத்துக்கொள்கிறாய்? உனது ஏழ்மையைப் போக்கவும், நோயைக் குணப்படுத்தவும், உன் கஷ்டங்களைப் போக்கிடவும், உன் பாவங்கள் அனைத்தையும் மன்னித்திடவும், உனக்கு ஏற்படும் தீங்குகளை விட்டும் உன்னைக் காத்திடவும், நீ அநீதமிழைக்கப்படும் போது அதிலிருந்து உன்னை விடுவிப்பதற்கும், நீ வழிதடுமாறும் போது நேர்வழியைக் காட்டுவதற்கும், நீ அறியாதவற்றை உனக்கு கற்றுத்தருவதற்கும், உனது பயத்தை நீக்கி



உனக்கு தைரியத்தைத் தரவும், நீ பலவீனமாக இருக்கும் போது உன் மேல் அன்பு செலுத்துவதற்கும், உன் எதிரிகளிடமிருந்து உன்னைக் காத்திடவும், இனையா புரத்திலிருந்து உனக்கு உணவளிப்பதற்கும் நீ அல்லாஹ்வின் மேல ஆதரவு வைக்க வேண்டும். அவன் முன்னிலையில் இருப்பதன் இனிமையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

இஸ்லாமிய மார்க்கத்தை உனக்கு வழங்கியதற்கு அடுத்த படியாக அல்லாஹ் உனக்கு அளித்திருக்கம் பெரும் அருட்கொடை பகுத்தறிவு. அதன் மூலம் நீ நலவு, கெடுதி போன்றவற்றை பிரித்தறிய முடியும். அல்லாஹ்வின் ஏவல், விலக்கல்களை உன்னால் அறிந்திட முடியும். அல்லாஹ் உன்னைப் படைத்த உயர்ந்த நோக்கமான வணக்க வழிபாடுகளை அவனுக்கு மாத்திரம் நிறைவேற்றல் என்ற அம்சத்தை உன்னால் சரிவர நிறைவேற்றிட முடியும். அல்லாஹ் கூறுகிறான்,

"உங்களிடம் உள்ள ஒவ்வொரு அருட்கொடையும் அல்லாஹ்வுடையது. பின்னர் உங்களுக்கு ஒரு தீங்கு ஏற்பட்டால் அவனிடமே முறையிடுகின்றீர்கள். பின்னர் அத்துன்பத்தை உங்களை விட்டும் அவன் நீக்கியதும் நாம் அவர்களுக்கு வழங்கியதற்கு துரோகம் செய்து, உங்களில் ஒரு பிரிவினர் தமது இறைவனுக்கு இணை கற்பிக்கின்றனர்." (அல்குர்ஆன் 16:53-54)

சீரான சிந்தனையுள்ள ஓர் மனிதன் எப்போதும் உயர்ந்த விடயங்களை விரும்பி, தாழ்ந்த விடயங்களை வெறுப்பான். தன்னை விட உயர்ந்தோரிடமிருந்து சிறந்த குணங்களைக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் கொள்வான். நபிமார்கள், நல்லடியார்கள் போன்றோரை தமக்கு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்வான். அவன் அவர்களைக் காணாவிட்டாலும் அவர்கள் பயணித்த பாதையில் பயணிப்பதற்கு எத்தனிப்பான். இதுவே அல்லாஹ் அவனுக்கு காட்டும் நேர்வழியாகும். *"''நீங்கள் அல்லாஹ்வை விரும்பினால் என்னைப் பின்பற்றுங்கள்! அல்லாஹ் உங்களை விரும்புவான். உங்கள் பாவங்களை மன்னிப்பான். அல்லாஹ் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன்'' என்று கூறுவீராக!"* (அல்குர்ஆன் 03:31)

அவ்வாறு அவன் நடந்துகொண்டால் நபிமார்கள், நல்லடியார்கள், ஷுஹதாக்கள் போன்றோரின் பட்டியலில் இவனையும் அல்லாஹ் சேர்த்துவிடுகின்றான்.

"அல்லாஹ்வுக்கும், இத்தூதருக்கும் (முஹம்மதுக்கும்)



என்னைப் பற்றி நான் அறிந்ததை விட அல்குர்ஆன் என்னைப் பற்றி அறிவித்துத் தந்தது தான் அதிகம்

"அல்குர்ஆன் என்னை பலமாகக் கவர்ந்துள்ளது. என் உள்ளத்தை அது ஆட்கொண்டு, என்னை வல்ல நாயன் அல்லாஹ் ஒருவனுக்கு வழிபட வைத்துள்ளது. அல்குர்ஆனை ஆழமாக வாசித்தால் தான் ஒருவர் தன்னிடம் பல மாற்றங்களைக் காண முடியும். அதை சாதாரணமாக வாசித்தால் எதையுமே அதிலிருந்து பெற்றுக்கொள்ள முடியாது. அல்குரஆனை நீ வாசிக்கும் போது அது உன்னை ஆட்கொள்கின்றது. உன்னுடன் வாதங்கள் புரிகின்றது. உன் சிந்தனையைக் கிளரி விடுகின்றது. நீ யார் என்பதைக் கூட தெளிவாக உனக்கு புரியவைக்கின்றது. நான் கூட என்னைப் பற்றி அறியாத பல விடயங்களை அல்குர்ஆன் வாயிலாக அறிந்து கொண்டேன். ஒவ்வொரு நாள் இரவிலும் என்னுள் பல கேள்விகள் உதயமாகும். அவற்றிற்கான விடைகளை மறுநாள் காலையிலேயே நான் பெற்றுக்கொள்வேன். அல்குர்ஆன் ஒவ்வொரு பக்கத்தையும் நான் நேருக்கு

ஜெப்ரி லேங்

அமெரிக்க கணிதவியலாளர்



கட்டுப்பட்டு நடப்போர், அல்லாஹ்வின் அருள் பெற்ற நபிமார்களுடன், உண்மையாளர்களுடன், உயிர்த் தியாகிகளுடன் மற்றும் நல்லோருடன் இருப்பார்கள். அவர்களே மிகச் சிறந்த நண்பர்கள்." *(அல்குர்ஆன் 04:69)*

நான் உன்னிடம் வேண்டிக்கொள்வது, உன் உள்ளத்தை முதலில் வெறுமைப்படுத்து. பின்பு உன்னிடம் வந்துள்ள உண்மையான பாதையைப் பற்றி ஆழ்ந்து சிந்தி. அது தன்னை நிரூபிப்பதற்காய் கொண்டு வந்திருக்கும் ஆதாரங்களை ஆய்வு செய். அவ்வாறு செய்து விட்டு, அது உண்மை எனத் தெரிந்தால் அதனை பின்பற்று. ஆனால் சூழ்நிலைக் கைதியாக மாத்திரம் நீ இருந்து விடக் கூடாது. உன் உள்ளம் உன் நண்பர்கள், உறவினர்கள், சொத்து செல்வங்கள் போன்ற அனைத்தை விடவும் உனக்கு முக்கியமானது, கண்ணியமானது. நீ செய்யப் போகும் இக்காரயத்தைத் தான் அல்லாஹ் இறை நிராகரிப்பாளர்களுக்கும் கூறுகின்றான். *"'நீங்கள் இருவர் இருவராகவோ, தனித் தனியாகவோ அல்லாஹ்வுக்காக சற்று நேரம் ஒதுக்கி பின்னர் 'உங்கள் தோழருக்கு (எனக்கு) பைத்தியம் எதுவுமில்லை; கடுமையான வேதனைக்கு முன் அவர் உங்களுக்கு எச்சரிக்கை செய்பவரே தவிர வேறில்லை' என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தையே உங்களுக்குப் போதிக்கிறேன்' எனக் கூறுவீராக!"* *(அல்குர்ஆன் 34:46)*

நீ இஸ்லாம் மார்க்கத்தில் நுழைவதால் எவ்விதக் கைசேதமும் உனக்கு ஏற்படப் போவதில்லை. அல்லாஹ் கூறுகிறான், "அல்லாஹ்வையும், இறுதி நாளையும்1 நம்பி தமக்கு அல்லாஹ் வழங்கியதை (நல் வழியில்) செலவிட்டால் அவர்களுக்கு என்ன (கேடு) ஏற்பட்டு விடும்? அல்லாஹ் அவர்களை அறிந்தவனாக இருக்கிறான்." (அல்குர்ஆன் 04:39)

அல்லாஹ்வைக் கொண்டும், அவன் இறக்கியவற்றைக் கொண்டும் விசுவாசம் கொள்வதால் ஒருவனுக்கு என்ன கெடுதி நடந்துவிடப் போகின்றது?! அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு, மறுமையில் அல்லாஹ் தனக்காக தயாரித்து வைத்திருக்கும் உலகை அடைய ஆதரவு வைத்து, அதற்காகவேண்டி இவ்வுலகில் தனது வாழ்வை அமைத்துக்கொள்வதால் ஒருவனுக்கு என்ன தீங்கு ஏற்படப்போகின்றது?! அல்லாஹ் விரும்பிய விதங்களில் தங்கள் சொத்து செல்வங்களை செலவு செய்பவனுக்கு என்ன குறை நேர்ந்திடப்போகின்றது?! அவன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஏற்படும் நல்ல சிந்தனைகள், தீய சிந்தனைகள் போன்ற அனைத்தையும் மிகவும் அறிந்தவன். யார் சிறந்த மனிதர், யார் தீய மனிதர் என்பதையும் துள்ளியமாக அறிந்தவன்.

நிச்சயமாக நீ இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுவதால் அல்லாஹ் உன் மீது ஆகுமாக்கியிருக்கும் எக்காரியத்தையும் உன்னால் செய்யவிடாமல் அது தடுத்து விடாது. நீ அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடி செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் உனக்கு கூலிகளை அவன் ஏற்படுத்தி வைத்துள்ளான். அது இவ்வுலக விடயமாக இருப்பினும் சரி, அல்லது மறுமை சாரந்த அம்சமாக இருப்பினும் சரி, அவை அனைத்திற்கும் அல்லாஹ் அளப்பரிய கூலிகளை ஏற்படுத்தி வைத்திருக்கின்றான்.

இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட அனைத்து நபிமார்களும், ரஸூல்மார்களும் உண்மையான மார்க்கத்தைத் தான் போதித்தார்கள். அல்லாஹ்வின் விருப்பங்களை உலக மக்களுக்குத் தெளிவுபடுத்தினார்கள். அத்தகைய அம்சங்களில் மனிதர்கள் கட்டாயம் தெளிவுபெற வேண்டும். அப்போது தான் அவர்களால் இவ்வுலக வாழ்க்கையில் சீராகப் பயணிக்க முடியும். மறுமையில் வெற்றிபெற்ற கூட்டத்திலும் சேர்ந்துகொள்ள இயலும். அல்லாஹ் கூறுகிறான். "மனிதர்களே! இத்தூதர் (முஹம்மத்) உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு உண்மையைக் கொண்டு வந்துள்ளார். எனவே நம்பிக்கை கொள்ளுங்கள்! (அது) உங்களுக்குச் சிறந்தது. நீங்கள் (ஏக இறைவனை) மறுத்தால் வானங்களிலும், பூமியிலும் உள்ளவை அல்லாஹ்வுக்கே உரியன. அல்லாஹ் அறிந்தவனாகவும், ஞானமிக்கவனாகவும் இருக்கிறான்." (அல்குர்ஆன் 04:170)

மேலும், "மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு உண்மை வந்து விட்டது. நேர் வழி நடப்பவர் தனக்காகவே நேர் வழி நடக்கிறார். வழி கெட்டவர் தனக்கு எதிராகவே வழி கெடுகிறார். நான் உங்கள் மீது பொறுப்பாளன் அல்லன்' என்று (முஹம்மதே!) கூறுவீராக" (அல்குர்ஆன் 10:108)

நீ இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுவது உனக்குத் தான் பயனளிக்கும். நீ அதைப் பின்பற்றாமல் போவது உனக்குத் தான் கெடுதிகளை உண்டுபண்ணும்.



இதில் அல்லாஹ்வுக்கு எவ்வித நன்மையோ, கெடுதிகளோ ஏற்படப் போவதில்லை. ஏனெனில் அவன் தன் அடியார்களை விட்டும் தேவையற்றவன். "'உங்கள் இறைவனிடமிருந்து சான்றுகள் உங்களிடம் வந்து விட்டன. அதைக் கவனிப்போருக்கு அது நன்மையாகும். அதைப் பார்க்காதிருப்போருக்கு அது கேடாகும். நான் உங்களுக்குக் காவலன் அல்லன்' (என்று கூறுவீராக)" (அல்குர்ஆன் 06:104)

அல்லாஹ் கூறியதாக நபி ﷺ அவர்கள் அறிவிக்கிறார்கள், "

என் அடியார்களே!

அநீதியிழைப்பதை எனக்கு நானே தடை செய்துகொண்டேன். அதை உங்களிடையேயும் தடை செய்யப்பட்டதாக ஆக்கிவிட்டேன். ஆகவே, நீங்கள் ஒருவருக்கொருவர் அநீதியிழைக்காதீர்கள்.

என் அடியார்களே!

உங்களில் யாரை நான் நல்வழியில் செலுத்தினேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் வழி தவறியவர்களே. ஆகவே, என்னிடமே நல்வழியில் செலுத்துமாறு கேளுங்கள். உங்களை நான் நல்வழியில் செலுத்துவேன்.

என் அடியார்களே!

உங்களில் யாருக்கு நான் உணவளித்துள்ளேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் பசித்திருப்பவர்களே. ஆகவே, என்னிடமே உணவாதாரத்தைக் கேளுங்கள். நான் உங்களுக்கு உணவளிக்கிறேன்.

என் அடியார்களே!

உங்களில் யாருக்கு நான் ஆடையணிவித்துள்ளேனோ அவர்களைத் தவிர மற்ற அனைவரும் நிர்வாணமானவர்களே. ஆகவே, என்னிடமே ஆடை கேளுங்கள். நான் உங்களுக்கு ஆடையணிவிக்கிறேன்.

என் அடியார்களே!

நீங்கள் இரவிலும் பகலிலும் பாவம் செய்கிறீர்கள். நான் அனைத்துப் பாவங்களையும் மறைத்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே, என்னிடமே பாவமன்னிப்புக் கோருங்கள். நான் உங்கள் பாவங்களை மன்னிக்கிறேன்.

மேற்கத்தேய நாகரீகத்தின் ஆழம்

"மேற்கத்தேய நாகரீக மோகத்தில் மூழ்கி, தன்னையும், தன்னைச் சூழால் உள்ளவற்றையும் மறந்து, வீணாண அழிவை தனக்கு ஏற்படுத்திக் கொள்பவர்கள் அதலிருந்து தப்பித்துக்கொள்வதற்காய் இஸ்லாமிய

நஸீம் சூஸே

ஈராக்கிய யூத விரிவுரையாளர்

என் அடியார்களே!

உங்களால் எனக்கு எவ்விதத் தீங்கும் அளிக்க முடியாது; மேலும், உங்களால் எனக்கு எவ்விதப் பயனும் அளிக்க முடியாது.

என் அடியார்களே!

உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் உங்களில் மிகவும் இறையச்சமுடைய ஒரு மனிதரைப் போன்று மாறிவிட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் அதிகமாக்கி விடுவதில்லை.

என் அடியார்களே!

உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் மிகவும் தீய மனிதர் ஒருவரைப் போன்று மாறிவிட்டாலும் அது எனது ஆட்சியில் எதையும் குறைத்துவிடப்போவதில்லை.

என் அடியார்களே!

உங்களில் முற்காலத்தார், பிற்காலத்தார், மனிதர்கள், ஜின்கள் ஆகிய அனைவரும் சேர்ந்து ஒரே திறந்த வெளியில் நின்று என்னிடத்தில் (தத்தம் தேவைகளைக்) கோரினாலும் ஒவ்வொரு மனிதருக்கும் அவர் கேட்பதை நான் கொடுப்பேன். அது என்னிடத்தில் இருப்பவற்றில் எதையும் குறைத்துவிடுவதில்லை; கடலில் நுழை(த்து எடு)க்கப்பட்ட ஊசி (தண்ணீரைக்) குறைப்பதைப் போன்றே தவிர (குறைக்காது)!

என் அடியார்களே!

நீங்கள் செய்துவரும் நல்லறங்களை நான் உங்களுக்காக எண்ணிக் கணக்கிடுகிறேன். பிறகு அதன் நற்பலனை நான் முழுமையாக வழங்குவேன். நல்லதைக் கண்டவர் அல்லாஹ்வைப் போற்றிப் புகழட்டும். அல்லதைக் கண்டவர் தம்மையே நொந்துகொள்ளட்டும்!" (ஆதாரம்:முஸ்லிம்)

இது தான் மகிழ்வு, சந்தோசம் போன்றவற்றுக்கான பாதையாகும், இது தவிர இவ்வுலகில் சந்தோசத்திற்கான பாதையை நீ கண்டுகொள்ள மாட்டாய். ஏனைய பாதைகள் அனைத்தும் உன்னை கவலை, துன்பம், நெருக்கடி, மூதேவித்தனம் போன்றவற்றின் பக்கமே கொண்டுபோய்ச் சேர்க்கும். அல்லாஹ் கூறுகிறான், "இதுவே எனது நேரான வழி. எனவே இதனையே பின்பற்றுங்கள்! பல வழிகளைப் பின்பற்றாதீர்கள்! அவை, அவனது (ஒரு) வழியை விட்டும் உங்களைப் பிரித்து விடும். நீங்கள் (இறைவனை) அஞ்சுவதற்காக இதையே அவன் உங்களுக்கு வலியுறுத்துகிறான்." (அல்குர்ஆன் 06:153)

யார் இப்பாதையில் பயணிக்கிறாரோ அவர் தமது குறிக்கோலை அடைந்திடுவார். இது அல்லாத வேறு பாதையில் யார் பயணிக்கின்றாரோ அவர் அல்லாஹ்வின் பாதையை விட்டும் பிரிந்து, தூரம் சென்றுவிடுகின்றார். எப்போதுமே அவரால் சந்தோசத்தின் வாடையைக் கூட நுகரமுடியாமல் போய்விடும்.



சந்தோசம், அமைதி போன்றவற்றின் அடித்தளம்



'ஐரோப்பியர்கள் தற்போது தான் முஹம்மதின் மதி நுட்பத்தை உணர்கின்றனர். அவ்வாறே தாம் அவதூறாகக் கூறி வந்தவற்றின் மீது கவலைப்பட்டு, அவற்றை தவறு என்று நிரூபனம் செய்கின்றனர். முஹம்மதின் மார்க்கம் தான் சரியான கட்டமைப்புக்களுடன் நிருவப்பட்டுள்ள மார்க்கமாகும். இது சந்தோசம், அமைதி போன்றவற்றுக்கு அடித்தளமிடம் ஓர் அமைப்பாகும். உள்ளத்திலும், உலகிலும் தோன்றும் அனைத்தைப் பிரச்சினைகளுக்கும்

பெர்னாட் ஷா

ஆங்கில எழுத்தாளர்

இது தான் ஏற்ற பாதை...

நடுநிலையாக சிந்திக்கும் எவருக்கும் இது தான் சீரான பாதை என்பது நிச்சயம் அறிந்துகொள்வர். வெளியில் அவர்கள் எவ்வளவு தான் மறுத்தாலும் உள் மனம் எப்போதும் இதையே உறுத்திக்கொண்டிருக்கும். மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எத்தனை அற்புதங்களை நிகழ்த்தியும் கூட அவரின் நபித்துவத்தை ஏற்றுக்கொள்ளாத பலர் உள்ளத்தால் இவர் செய்யும் காரியம் உண்மை என்பதை ஏற்றிருந்தனர் என்பதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. "அவர்கள் அதை உறுதியாக நம்பி யிருந்தும் அநியாயமாகவும், ஆணவமாகவும் மறுத்தனர். 'குழப்பம் செய்தோரின் முடிவு எவ்வாறு இருந்தது?' என்று கவனிப்பீராக!" *(அல்குர்ஆன் 27:14)*

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத நடுநிலைவாதியால் கூட இது தான் சீரான, சந்தோசத்திற்கான பாதை என்பதனை அறிந்துகொள்ள முடியும்.

இப்பாதையில் பயணிக்க உள்ளத்தாலும், கருத்துக்களைத் தெரிவிப்பதிலும் தைரியமுள்ளவர்கள் முன்வருவார்கள். தன் மீதான, பிற மனிதர்கள் மீதான, தன் சமூகத்தின் மீதான எவ்விதப் பயமும் இப்பாதையில் பயணிப்பதை விட்டும் அவர்களை தடுத்துவிட முடியாது. எத்தனையோ மனிதர்கள் தன் சமூகத்தின் மீதும், பதவிகள் மீதும் கொண்ட பயத்தின் காரணமாக இம் மகிழ்வுக்கான பாதையை அறிந்திருந்தும் அதனை விட்டும் பின்வாங்குகின்றனர். இறுதி வரை சந்தோசதை அடையாமலேயே இவ்வுலக வாழ்வை முடித்துக்கொள்கின்றனர். அல்லாஹ் கூறுகிறான், "எனவே நீங்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் அவர்களுக்கு அஞ்சாதீர்கள்! எனக்கே அஞ்சுங்கள்!" *(அல்குர்ஆன் 03:175)*

இது தான் சந்தோசம், மகிழ்வு, கண்ணியம், கௌரவம், இரக்கம், அன்பு, அறிவு, நாகரீகம், நற்குணங்கள் போன்ற அனைத்திற்குமான ஒரே பாதை. இதில் பயணிப்பவர் இவையனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள ஏதுவாக இம்மார்க்கம் தனது பாதையை அமைத்திருக்கின்றது. இதில் ஏற்படும் தடங்களும், சோதனைகளும் ஒரு மனிதனின் பொய்யான நிலையிலிருந்து உண்மையான நிலையை பிரித்தறிவதற்காக நடாத்தப்படும் ஒன்றே.. அல்லாஹ் கூறுகிறான்,"உங்களில் அழகிய செயலுக்குரியவர் யார் என்பதைச் சோதிப்பதற்காக மரணத் தையும், வாழ்வையும் அவன் படைத்தான். அவன் மிகைத்தவன்; மன்னிப்பவன்." *(அல்குரஆன் 67:02)*

இதுவே எமக்கு முன்னர் வந்த நபிமார்களும், ஸஹாபாக்களும் பயணித்த பாதை. இப்பயணத்தின் போது அவர்கள் அதிக சிரமங்களால் பல ஒட்டை ஒடிசல்களை சரிசெய்துவிட்டனர். இதுவே இன்னும் சில காலங்களில் முழு உலகையும் சென்றடைய இருக்கும் பாதை.. நபி ﷺ அவர்கள் கூறினார்கள், "இரவும் பகலும் அடைந்துகொண்டதை இம் மார்க்கமும் அடைந்துவிடும். அல்லாஹ் அனைத்து வீடுகளிலும் இம்மார்க்கத்தை கண்ணியத்தை உண்டுபண்ணுவதற்கோ, அல்லது இழிவை அகற்றுவதற்கோ நுழைத்துவிடுவான். கண்ணியமென்பது இஸ்லாமிய மார்க்கம், இழிவு என்பது இறைநிராகரிப்பு ஆகும்." (ஆதாரம்: அஹ்மத்) எனவே இப்பாதையில் பயணிப்போருடன் சேர்ந்து நீயும் உன் பயணத்தை ஆரம்பித்து விடு. இதில் தான் உன் வெற்றி, சுபீட்சம், மகிழ்வு போன்ற அனைத்தும் இருக்கின்றன. அல்லாஹ் கூறுகிறான், "ஆணோ, பெண்ணோ நம்பிக்கை கொண்டு, நல்லறம் செய்தால் அவரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழச் செய் வோம். அவர்கள் செய்து கொண்டிருந்த நல்லவற்றின் காரணமாக அவர்களின் கூலியை அவர்களுக்கு வழங்குவோம்." *(அல்குர்ஆன் 16:97)*

எனவே இப்பாதையில் தொடர்ந்து உன் பயணத்தை மேற்கொள். இவ்வுலக வாழ்வை அமைதியாகவும், நிம்மதியாகவும், மனநிறைவோடும் வாழ்ந்து விடு. நீ இவ்வுலகில் செய்யும் நற்காரியங்களுக்கான நிரந்தர கூலி மறுமையில் உனக்குக் கிடைக்க இருக்கின்றது என்பதனை மறந்துவிடாதே. இது

இதயங்களைக் கவரக்கூடியது.

'நான் மதங்களைப் பற்றி ஆய்வை மேற்கொண்ட போது, இஸ்லாம் மார்க்கம் மாத்திரமே மக்கள் மனங்களில் ஈர்ப்பைப் பெற்ற மார்க்கமாக அறிந்துகொண்டேன். அவ்வாறே அம் மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மத்தியிலும் இது பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இஸ்லாத்தின் சிறப்பம்சமே அது பிறரை தன் பக்கம் ஈர்ப்பதில்

மேரி ஆலிவர்
அமெரிக்க கவிஞர்

வாருங்கள் பயணிப்போம்

'இஸ்லாத்தின் மன்னிக்கும் மனப்பான்மையானது வரலாறு நெடுகிலும் அதன் கண்ணியத்தைப் பாதுகாத்திடும் ஓர் அங்கமாக இருக்கின்றது. ஏனெனில் இது

டாக்டர் முராத் ஹொஃப்மன்

ஜேர்மன் தூதுவர்

நிலையான திட்டம்

'இஸ்லாம் என்பது நிலையான மார்க்கமாகும். இது காலத்தால் அழியாதது. யாருக்கும் என்றும் நலவையே நாடக்கூடியது. பழங்காலத்து மக்கள் பார்த்த அதே இஸ்லாம் மார்க்கம் தான் இன்றைய நவீன யுகத்திலும் நிலைபெற்று இருக்கின்றது. இதன் சிந்தனைகள் காலத்துக்காலம் மாறுபடாதவை. கீழைத்தேயம் உலக நாகரீகத்தின் தலைமையை தன் வசப்படுத்தும் காலம் வெகு

டாக்டர் முராத் ஹொஃப்மன்

ஜேர்மன் தூதுவர்

ஆன்மீக வெற்றிடத்தை நிரப்புகின்றது

'எனது வாழ்வின் முக்கிய தருணமாக, அல்லாஹ்வின் கிருபையால் எனக்குக் கிடைத்த நேர்வழியைத் தான் கருதுகிறேன். அப்போது தான் என்னிடத்தில் காணப்பட்ட ஆன்மீக வெற்றிடத்தை நிரப்பும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதற்கு முன்னர் நான் அன்பின் பொருளை ஒரு போதும் உணர்ந்ததில்லை. எப்போது அல்குர்ஆனைப் படிக்க ஆரம்பித்தேனோ அப்போதே அன்பு, பண்பு, பாசம், கருணை போன்றவற்றின் அர்த்தங்கள் எனக்குப் புரிய ஆரம்பித்தன. என்னை இஸ்லாத்தில் ஈர்த்தது

ஜெப்ரி லேங்

அமெரிக்க கணிதவியலாளர்

நேரான ஒற்றை வழிப்பாதை. வேறு பாதைகள் இதில் கிடையாது. அப்படி வேறு பாதைகள் வரும் பட்சத்தில் அவற்றில் உன் பயணத்தைத் தொடராதே. ஏனெனில் அவை நிம்மதியற்ற, சுபீட்சமற்ற இவ்வுலக வாழ்வையும், வேதனை நிறம்பிய மறுமை வாழ்வையும் உனக்கு அளித்துவிடும். அல்லாஹ் கூறுகிறான், "எனது போதனையைப் புறக்கணிப்பவனுக்கு நெருக்கடியான வாழ்க்கை உண்டு. அவனை கியாமத் நாளில் குருடனாக எழுப்புவோம். 'என் இறைவா! நான் பார்வையுடையவனாக இருந்தேனே? ஏன் என்னைக் குருடனாக எழுப்பினாய்?' என்று அவன் கேட்பான்." (அல்குர்ஆன் 20:124-125)

அதற்கு அல்லாஹ் பின்வருமாறு கூறுவான், "'அப்படித் தான். நம்முடைய வசனங்கள் உன்னிடம் வந்தன. அதை நீ மறந்தாய். அவ்வாறே இன்று மறக்கப் படுகிறாய்' என்று (இறைவன்) கூறுவான்." (அல்குர்ஆன் 20:126)

இம் மகிழ்வுக்கான பாதை எப்போதும் மறந்து விடாதே,

இது பயணிப்பதற்கு மிகவும் இலகுவான பாதை. இது, உள்ளத்தால் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, உடல் உறுப்புக்களால் அதை உண்மைப்படுத்தி, அனைத்து நபிமார்கள், ரஸூல்மார்கள் அனைவரையும் விசுவாசம் கொள்வதில் ஆரம்பித்து, மறுமை நாளில் இதற்காக கிடைக்க இருக்கும் நிரந்தர சந்தோசத்தோடு முடிவடைகின்றது. 'அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் கிடையாது, முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள்' என்னும் திருக் கலிமாவில் ஆரம்பித்து, மறுமையில் அல்லாஹ்வை கண்குளிரக் காணும் நிரந்தர சந்தோசத்தோடு முடிவடைகின்றது. சந்தோசமாக வாழு, சந்தோசமாக மரணி, கப்ரிலிருந்து சந்தோசமாக எழு,

உனக்கு கிடைக்க இருக்கும் சுவனத்தில் சந்தோசமாக நுழைந்திடு. அதன் பிறகு உனக்கு அனைத்துமே நிரந்தரம் தான். இப்பாதையில் மாத்திரம் உன் பயணம் அமையாவிடில் வேறு எவராலும் உன்னை வட்புறுத்தி இப்பாதையில் செல்ல வைக்க முடியாது. ஏனெனில் உனக்கு தகவலை எத்திவைப்பது தான் நமது கடமை. வற்புருத்துவது அல்ல. அல்லாஹ் கூறுகிறான், "'உங்களுக்காக எனக்குக் கொடுத்து அனுப்பப்பட்டதை உங்களுக்கு எடுத்துச் சொல்லி விட்டேன். நீங்கள் புறக்கணித்தால் உங்களையன்றி வேறு சமுதாயத்தை அவன் உங்களுக்குப் பகரமாக ஏற்படுத்துவான். அவனுக்கு நீங்கள் எந்தத் தீங்கும் செய்ய முடியாது. என் இறைவன் ஒவ்வொரு பொருளையும் கண்காணிப்பவன்' (எனவும் கூறினார்)" (அல்குர்ஆன் 11:57)

அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார்.

"நீ அல்லாஹ்வை அறிந்து, அவனை விசுவாசம் கொண்டால் அல்லாஹ் உன் பிடரி நரம்பை விட மிகவும் அருகாமையில் இருப்பதாக இஸ்லாம் கூறுகின்றது. அப்படியென்றால் உனக்கும், உன்னைப் படைத்த இறைவனுக்கும் இடையில் எவ்வித இடைத்தரகர்களையும் நீ நாடவேண்டி அவசியம் கிடையாது. உனக்காக வேண்டி பாவமன்னிப்புக் கேட்குமாறு எந்த ஆயர்களையும்

டோனால்ட் ரோகுவ்யல்
அமெரிக்கக் கவிஞர்

الطريق إلى السعادة
The Path to Happiness

பாதை எங்கே இருக்கின்றது ?! 8

ஒவ்வொரு மனிதனும் மகிழ்வைத் தான் தேடுகிறான். அப்படியானால் அதற்கான பாதை எங்கே இருக்கின்றது ?! 8

நாத்திகப் பாதையா அல்லது மார்க்கப் பாதையா?! 9

கேள்விகளுக்கான விடைகள் 12

அப்படியானால் விடைகள் எவ்வாறு இருக்குப் போகின்றன?! 13

அதற்கான ஆதாரம் என்ன? 16

அல்லாஹ்வின் இறைக்கோட்பாட்டிற்கான ஆதாரங்கள் 21

இப்பிரபஞ்சமும், மனிதர்களும் படைக்கப்பட்ட விதமும், அதன் உயரிய நோக்கமும் 32

இப்பிரபஞ்சம் படைக்கப்பட்ட விதத்தைப் பற்றி எப்போதாவது நீங்கள் சிந்திருக்கிறீர்களா? 32

உலகம் படைக்கப்பட்டதன் நோக்கம். 35

மனிதன் கண்ணியம் பொருந்திய படைப்பாவான். 39

ஆண்களுக்குக் கிடைக்கும் சமமான கௌரவம் தான் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும். 46

மனிதனைப் படைத்ததன் நோக்கம் 52

மனிதா, இதற்குப் பிறகும் என்ன தாமதம்.... 55

மனிதனுக்கு மார்க்கம் என்பது தேவைதானா? 60

மார்க்கம் என்பது அவசியம் தானா? 60

சமுதாயமும், அதற்கான மார்க்கத்தின் தேவையும். 67

உண்மையான மார்க்கத்தின் வரையரைகள்: 69

எமக்கு அவசியமான மாரக்கம் எது? 79

நபிமார்களும், ரஸூல்மார்களும் 86

மனிதர்களுக்கு தூதுவர்கள் அவசியம் தானா? 86

தூதுத்துவத்தினதும், தீர்க்கதரிசனத்தினதும் யதார்த்தம் 89

நபித்துவத்தின் அடையாளங்கள் 91

நபிமார்கள், ரஸூல்மார்களின் அழைப்புப் பணியின் போக்கு, 99

உலுல் அஸ்ம் எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் தூதுவர்களின் வாழ்விலிருந்து சில குறிப்புக்கள்... 103

மறுமை நாள் வரை தாக்குப்பிடிக்கும் தூதுத்துவம். 160

முஹம்மத் ﷺ அவர்களின் தூதுத்துவத்திற்கான சான்றுகள் 165

இறுதி நபித்துவம் 173

உலக மக்கள் அனைவருக்குமான அருட்கொடை 177

நபி ﷺ அவர்களின் வருகையால் மனிதகுளத்தின் மகிழ்ச்சி, 180

மறுமை நாள் வரை தொடர்ந்து இருக்கும் அத் தூதுத்துவம் எது? 186

الرسالة الباﷺية سمت الكون كله: 187

இறுதிவரை தொடரும் மார்க்கம் நபிமார்கள், ரஸூல்மார்கள் போதித்த மார்க்கமாகும். 191

இறைதிவரை நிலைத்திருக்கும் தூதுத்துவத்தின் பூரணத்துவம். 195

இம்மார்க்கத்தின் அடிப்படை அம்சங்கள் 199

இஸ்லாத்தின் சிறப்பம்சங்கள். 204

இஸ்லாமிய சட்டக் கோர்வையும், மனிதனால் இயற்றப்பட்ட சட்டதிட்டங்களும். 209

இஸ்லாத்தின் மூலாதாரங்கள், 212

மகிழ்ச்சிக்கான வழி 222

மகிழ்ச்சியின் தெளிவும், அதன் யார்த்த நிலையும். 222

மகிழ்வென்பது இன்பங்களை மாத்திரம் கொண்டதல்ல. 225

இல்லை, மகிழ்வென்பது அமைதியிலும் கிடையாது. 226

மகிழ்வுக்கான வழி... மனிதனுக்கு அவனது உள்ளத்துடனும், வாழ்வுடனும், பிரபஞ்சத்துடனும் சமரச நல்லிணக்கத்தை உண்டுபன்னுகின்றது. 239

மகிழ்ச்சிக்கான வழியின் அடையாளங்கள். 242

இஸ்லாத்தின் அடிப்படையில் இவ்வுலக மகிழ்விற்கான காரணங்கள் 247

துன்பங்களும், துர்ப்பாக்கியங்களும் ஒருவனை மகிழ்வுப்பாதையை விட்டும் திசை திருப்பிவிடும். 259

அறிவியல் மற்றும் நாகரிகத்திற்கான பாதை 266

இஸ்லாமும் அறிவியலும் 266

நாகரீகத்திற்கான வழி 273

நாகரீகத்திற்குத் தேவையான அம்சங்கள். 275

அல்குர்ஆனினதும், ஹதீஸினதும் அற்புதங்கள், 293

நற்குணங்களின் பாதை 300

சிறந்த பண்புகளுடன் ஈமானும் தொடர்புபடுகின்றது. 302

வணக்கவழிபாடுகளும், நற்குணங்களும். 302

இஸ்லாத்தில் நற்குணங்கள், 306

இரக்க குணம் மற்றும் கண்ணியம் போன்றவற்றால் சூழப்பட்ட பாதை *322*

இரக்கம் மற்றும் அருள் நிறைந்த பாதை *322*

கண்ணியம் நிறைந்த பாதை *326*

மகிழ்ச்சிக்கான பாதையின் இறுதி வாயில். *332*

மகிழ்ச்சியைத் தேடிச் செல்பவரே!! *332*

இது தான் ஏற்ற பாதை... *342*

நட ப ன இண யதளங கள

Imam Academy

African Islamic Academy

African Islamic Academy

Ibn Kathir International University of Humanities and Islamic Sciences

[redacted] — [redacted].